www.gfort.in G-Fort Academy www.gfort.in

# கற்கும் குழந்தை

## (Learning Child)

**முதலாம் ஆண்டு**

**வளநூல்**
**ஆசிரியர் கல்விப் பட்டயப் பயிற்சி**

தீண்டாமை ஒரு பாவச் செயல்
தீண்டாமை ஒரு பெருங்குற்றம்
தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

**தமிழ்நாட்டுப்**
**பாடநூல் கழகம்**
**கல்லூரிச் சாலை, சென்னை - 600 006.**

www.gfort.in www.gfort.in

© தமிழ்நாடு அரசு
முதல் பதிப்பு – 2008

குழுத் தலைவர்
முனைவர் P.S. பாலசுப்பிரமணியன்
பேராசிரியர் (ஓய்வு)
6, ஸ்ரீராம் நகர் காலனி, தரமணி
சென்னை– 600 113.

மேலாய்வாளர்கள்
திருமதி ஆமுக்தா மால்யதா மஹோபத்ரா
கல்வியாளர், சென்னை.

Sr. விமலா E. புனிதகுமார்
முதல்வர்
கிறிஸ்டோபர் கல்வியியல் கல்லூரி
சென்னை.

முனைவர். V. சண்முக கணேசன்
ரீடர்
ராமகிருஷ்ணா மிஷன் கல்வியியல் கல்லூரி
பெரிய நாயக்கன்பாளையம், கோயம்புத்தூர்.

நூலாசிரியர் & ஒருங்கிணைப்பாளர்
முனைவர் இரா. ஐயப்பன்
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனம்
சென்னை–5.

நூலாசிரியர்கள்

முனைவர் C. கருப்பையன்
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்விப்
பயிற்சி நிறுவனம், கீழ்ப்பென்னாத்தூர்
திருவண்ணாமலை மாவட்டம்.

முனைவர் ந. ஜமால் நாசர்
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்விப்
பயிற்சி நிறுவனம்
புதுக்கோட்டை.

திரு. து. புகழேந்தி
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்விப்
பயிற்சி நிறுவனம்
தே. கல்லுப்பட்டி, மதுரை மாவட்டம்.

திரு. ச. சேதுபதி
முதுநிலை விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்விப்
பயிற்சி நிறுவனம்
மாயனூர், கரூர் மாவட்டம்.

முனைவர் A. அமலோர்
விரிவுரையாளர்
மாவட்ட ஆசிரியர் கல்விப்
பயிற்சி நிறுவனம், புதுச்சேரி.

விலை: ரூ.

வளநூல் தயாரிப்பு : தமிழ்நாடு அரசுக்காக
ஆசிரியர் கல்வி ஆராய்ச்சிப் பயிற்சி இயக்ககம், சென்னை – 600 006.

இந்நூல் 60 ஜி.எஸ்.எம். தாளில் அச்சிடப்பட்டது

வெப் ஆப்செட் முறையில் அச்சிட்டோர் :

# பாடத்திட்டம் – கற்கும் குழந்தை

| கருத்தியல் | செய்முறை |
|---|---|
| பகுதி (அ) குழந்தை வளர்ச்சி | |
| அலகு 1: தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள் (உடல் மற்றும் அறிதல் திறன் சார்ந்தவை) | |
| உடல் வளர்ச்சி – உடல் வளர்ச்சியில் நாளமில்லாச் சுரப்பிகளின் பங்கு– நரம்பு செல்லின் வளர்ச்சி – குறியீட்டுச் சிந்தனையும், தர்க்க முறை சிந்தனையின் எல்லையும் – அறிதல் திறன் வளர்ச்சி புலன் இயக்க பருவம் – குழந்தைகளின் மொழி வளர்ச்சி– குடும்பப் பின்னணியில் மொழி வளர்ச்சி – குழந்தைகளின் அறிதல் திறன் வளர்ச்சியில் குடும்ப சூழல் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் மனப்பான்மையும் தாக்கமும் – தன் அடையாளமும் மனநலமும் | 1. குழந்தைகளின் உயரம், எடை மற்றும் இயக்கம் ஆகியவற்றை உற்று நோக்குதல்.<br>2. குழந்தைகளின் குடும்பத்தில் மொழியின் பயன்பாட்டினை ஆய்ந்து பதிவு செய்தல். |
| அலகு 2: தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள் (சமூகம் மற்றும் மனவெழுச்சி சார்ந்தவை) | |
| தற்கருத்து சமூக உணர்வு குழந்தைப் பருவ சகோதர உறவுகள் – ஒப்பார் குழு மற்றும் விளையாட்டு – தன்னை அறிதல் – தற்கருத்தினை உருவாக்கும் சமூக காரணிகள் – எரிக்சன் மன சமூக கோட்பாடு – மனவெழுச்சிகள் – அன்பு பரிவு – மகிழ்ச்சி – சினம் – கவலை – பயம் – பெற்றோர் குழந்தை உறவு – மனநலம். | 1. குழந்தைகளின் பல்வேறு செயல்பாடுகள் மற்றும் விளையாட்டுக்களை உற்று நோக்கி பதிவு செய்தல்.<br>2. குழந்தைகளின் மகிழ்ச்சி மற்றும் மகிழ்ச்சியற்ற மனவெழுச்சிகள். |
| அலகு 3: உடல் மற்றும் அறிவு வளர்ச்சி – தொடக்கப் பள்ளி ஆண்டுகள் ( 6 முதல் 10 வயது வரை) | |
| உடல் வளர்ச்சி சுழற்சி – உடற் பண்புகள் – கவனமும் ஒருமுகப்படுத்தலும் – கவன நிகழ்வு – நினைவினை மேம்படுத்தும் உத்திகள் – கற்றலில் சிந்தனையின் பங்கு – அறிதல் திறன் வளர்ச்சி – பியாஜேயின் | 1. கவனச் சிதைவு சோதனை.<br>2. கவனப் பிரிவு சோதனை.<br>3. குழந்தைகளின் ஆக்கத்திறன்.<br>4. மொழிச்சாரா குழு நுண்ணறிவுச் சோதனை. |

| | |
|---|---|
| அறிதல் திறன் வளர்ச்சி – புலன்கள் உணர்வதை வைத்து சிந்தித்து செயல்படும் மனச் செயல்பாட்டு நிலை – நுண்ணறிவும் மனத்திறனும் – நுண்ணறிவின் கோட்பாடுகள் – நுண்ணறிவுச் சோதனைகள் – ஆரம்பப் பள்ளிக் குழந்தைகளின் ஆக்கத்திறன். | 5. பியாஜேயின் சோதனை. |
| அலகு 4: சமூக மற்றும் மனவெழுச்சி வளர்ச்சி – தொடக்கப் பள்ளி ஆண்டு (6 முதல் 10 வயது வரை) | |
| சமூக வளர்ச்சி என்பதன் பொருள் – சமூக எதிர்பார்ப்புகள் – குழந்தைகளின் நட்பு – நட்பு மற்றும் நண்பர்கள் தேர்ந்தெடுக்க உதவும் காரணிகள் – சமூக ஏற்பு – ஒன்றுதல் விருப்பம் – ஒப்பார் குழு – சமூக, மனவெழுச்சி மற்றும் பண்பாட்டுச் சூழல்களில் பள்ளியின் பயன்பாடுகள் – மனவெழுச்சி வளர்ச்சி நிலை – பொதுவான மனவெழுச்சிகள் – மனவெழுச்சி வளர்ச்சியைப் பற்றி கற்றல் – மனவெழுச்சி சமநிலை – மனவெழுச்சி வளர்ச்சியில் தகவல் தொடர்பு ஊடகங்களின் தாக்கம். | 1. சமூகத்தொடர்பு நிலைகள்.<br>2. யார் எவரென அறியும் அணுகுமுறை.<br>3. சினத்தினை அளத்தல்.<br>4. மனவெழுச்சி நிலைப்பாடு<br>5. மனவெழுச்சியின் பின்னடைவு<br>6. சமூக அளவியல் |
| அலகு 5: ஆரம்பக் கல்வி நிலையில் மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சி (6 முதல் 10 வயது வரை) | |
| ஒழுக்க வளர்ச்சி என்பதன் பொருள் – குழந்தைகளின் ஒழுக்கப் பயிற்சியின் காரணிகள் – நேர்மை – தர்ம சிந்தனை – குழந்தைகளுக்கான வீரர்கள் – லட்சியம் – ஒழுக்கம் என்பதன் பொருள் – ஒழுக்கத்தின் முக்கியத்துவம் – ஒழுக்க வளர்ச்சியில் தகவல் ஊடகங்களும் அவற்றின் தாக்கமும். | 1. ஒழுக்க மனப்பான்மையின் அளவீடு<br>2. நேர்மையின் அளவீடு |
| அலகு 6: குமரப்பருவம் (11 முதல் 14 வயது வரை) | |
| குமரப் பருவத்தில் வளர்ச்சி – மனம் மற்றும் சமூக நடத்தை வளர்ச்சி – முந்திப் பருவம் அடைதலும் பிந்திப் பருவம் அடைதலும் – கருத்தியல் நிலை – அறிதலை அறிந்துணர்தல் – சிந்தித்து செயல்படும் முறையை நெறிப்படுத்துதல் | 1. குமரப் பருவத்தில் தோன்றும் பிரச்சனைகள் – ஓர் ஆய்வு. |

| அலகு 8: கற்றல் வகைகள், நிலைகள் மற்றும் அணுகுமுறைகள் | |
|---|---|
| கற்றல் வகைகள் – நிலைகள் – அணுகுமுறைகள் – பின்பற்றி கற்றல் – தூண்டல் துலங்கல் கற்றல் – தொடர் கற்றல் – இணைத்துக் கற்றல் – பிரச்சனையைத் தீர்த்தல் – கற்றல் விதிகள் – கற்றல் நிலைகள் – இயல்பூக்கம் முதல் உள்ளுணர்வு மூலம் கற்றல் வரை – கற்றல் படி நிலைகள் எடுத்துக்காட்டு நடத்தைக் கொள்கை – அறிவு சார் கொள்கை – உருவாக்கக் கொள்கை. | 1. நான்கு அல்லது ஐந்தாம் வகுப்பு குழந்தைகளை வகுப்பறையில் உற்று நோக்கி அவர்களிடம் பல்வேறு வகையான கற்றல் எவ்வாறு நடைபெறுகிறது என்ற விவரங்களை சேகரித்தல். |
| அலகு 9: பொதுமைக் கருத்தும் கருத்து உருவாக்கமும் | |
| பொதுமைக் கருத்தும் கருத்து உருவாக்கமும் – பொதுமைக் கருத்து உருவாதல் – பொதுமைக் கருத்து உருவாவதற்கான காரணிகள் – செயல்களின் தொகுப்பு – படங்கள், பொருட்கள் – வாழ்க்கை அனுபவங்கள் – அவற்றின் பயன்கள் – வெளி உலக உண்மைத்தன்மைகளைப் பற்றிய கருத்துருவாக்கம் – ஒப்பார் குழு, தகவல் தொடர்பு சாதனங்கள், சமூகத் தொடர்புகள் ஆகியவற்றின் தொடர்பால் தன் கருத்தை இணைத்தல் – பொதுமைக் கருத்துப் படங்கள். | 1. வகுப்பறைக்குள் கற்பிப்பதை பள்ளிக்கு வெளியே கற்றுக் கொண்டதுடன் தொடர்புபடுத்துதல்.<br>2. பொதுமைக் கருத்து படத்திற்கும், மன வரைபடத்திற்கும் இடையே உள்ள தொடர்பினை அறிதல். |
| அலகு 10: கற்றலுக்கு உதவும் காரணிகள் | |
| தனிப்பட்ட, உளவியல், சமூக, மனவெழுச்சி, பள்ளி சார்ந்த காரணிகள் – கற்றல் வழிமுறைகள் – தொழில் நுட்பவியல் – கற்பித்தல் கற்றல் செயல்பாடுகள் – ஆசிரியர் பண்பு நலன்கள். | 1. அதிக அடைவுத்திறன், குறைந்த அடைவுத்திறன் கொண்ட இரண்டு மாணவர்களை ஆய்வு செய்தல். குறைந்த அடைவுத் திறனுக்கான காரணங்களைக் கண்டுபிடித்தல். |
| அலகு 11 : அறிவை உருவாக்குவதற்காக கற்பித்தல் | |
| அறிவை உருவாக்குவது என்பதன் பொருளே கற்பதுதான் – கலந்துரையாடலின் மதிப்பு – கற்றுக் கொண்டவற்றின் மெய்ப் பொருள் | 1. மாணவர்களுக்கு ஆர்வமான ஒப்படைவு கொடுத்த பின்பு அவர்களுடைய எண்ணங்களை குழுவில் கலந்து |

| | |
|---|---|
| காண்பது தான் உண்மையான அறிவு – கற்பிக்கப்படும் பாடத்தை விட கற்போர் மீது கவனம் செலுத்துதல் – புதிய அறிவினை உருவாக்குவதற்கான இடம். | வெளிப்படுத்த செய்யவும். இதன் மூலம் குழுவில் செயல்படும் போது புதிய அறிவு எவ்வாறு உருவாகிறது என்பதைக் கண்டறிந்து தொகுக்கவும். |
| அலகு 12: கற்றலும் அறிவும் | |
| செயல்திறன் மிக்க கற்போர் – ஆக்கத்திறன் – கற்போரின் சூழலும் அனுபவமும் – பள்ளி அறிவோடு குழந்தை அனுபவத்தை இணைத்தல் – கற்கும் உரிமை – கற்றலுக்கு ஏற்ற உடல் மற்றும் உளப் பாதுகாப்பு – கற்றலுக்கு ஏற்ற உளப்பாதுகாப்பு சூழல் – பொதுமைக் கருத்து வளர்ச்சி – கருத்துருவாக்கம் தொடர்ந்த செயல்பாடு – எல்லா குழந்தைகளாலும் கல்வி கற்க இயலும் – கற்றலுக்கு உதவும் முக்கிய காரணிகள் – பல்வேறு வழிகளில் கற்றல் – கற்றலுக்கு ஏற்ற அறிவு வளர்ச்சி ஆயத்த நிலை – பள்ளியிலும் வெளியிலும் கற்றல் – அறிதலும் புரிதலும் – அறிவை மறு உருவாக்கம் செய்தல் – கற்றல் பற்றிய பிரகடனம். | 1. குழந்தைகள் ஒரு திறனை முழுமையாக எவ்வாறு அடைகின்றனர் என்பதை உற்றுநோக்கிப் பதிவு செய்க – அனைத்து குழந்தைகளும் ஒரே வேகத்தில் கற்றுக் கொள்கின்றனரா? ஒரு வகுப்பில் ஒரே ஆசிரியர் கற்பிக்கும் போதும் ஒவ்வொரு குழந்தையும் ஒரே வேகத்தில் கற்றுக் கொள்வதில்லை – ஆய்க. |

## செய்முறை பயிற்சிகளுக்கான விளக்கம்

இப்பாடத்தின் உட்பிரிவுகளில் சில செயல்பாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த செயல்பாடுகளுக்கான விவரங்கள் மாணவர்களிடம் இருந்து பெறவேண்டி இருக்கும். இந்த செயல்பாடுகளுக்கான விவரங்களையோ அல்லது இதுபோன்ற பிற செயல்பாடுகளுக்கான விவரங்களையோ மாணவ ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சிகளுக்குச் செல்லும் போதே பள்ளி மாணவர்களிடம் இருந்து திரட்டிக்கொண்டு வரவேண்டும். செயல்பாடுகளுக்கான விவரங்கள் உற்றுநோக்குதல் மூலமாகவோ அல்லது சிறு வினாப்பட்டியல் போன்ற அளவீட்டுக் கருவிகளை பயன்படுத்தியோ பெறவேண்டி இருக்கலாம். இவ்விவரங்களை ஆசிரியர், மாணவ ஆசிரியர்களுக்கு தரவேண்டும். இந்த விவரங்கள் மாணவ ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சிக்குச் செல்வதற்கு முன்னர் கொடுக்கப்பட வேண்டும்.

இவ்வாறு கற்பித்தல் பயிற்சியின்போது மாணவ ஆசிரியர் பள்ளி மாணவர்களிடம் பெற்ற விவரங்களைக் குறிப்பிட்ட செயல்பாடுகளுக்கு உரிய தலைப்புகளில் எழுதி அவற்றைத் தொகுத்து ஒவ்வொரு பாடத்திற்கும் தனித்தனியாகப் பதிவேடுகள் தயாரித்துக் கொண்டுவரவேண்டும். ஒவ்வொரு பாடத்திற்கும் அந்தப் பாடத்தை நடத்தும் ஆசிரியர்கள் இந்த விவரங்களை மாணவ ஆசிரியர்களிடம் தெரிவிக்க வேண்டும்.

| பாடப்பொருள் | செயல்பாடுகள் | தகவல் சேகரிப்பு |
|---|---|---|
| அலகு 1 | | |
| உடல் வளர்ச்சி<br>சிந்தனை<br>அறிவு வளர்ச்சி<br>குழந்தை மொழி | வயது, உயரம், எடை விவரங்கள் சேகரித்தல்.<br>சிந்தனை வெளிப்பாட்டு விவரங்கள் சேகரித்தல்.<br>பியாஜே சோதனை<br>உற்றுநோக்கி, கேட்டு விவரங்கள் சேகரித்தல். | பள்ளி மாணவர்களிடமிருந்து |
| அலகு 2 | | |
| தன்னையறிதல்<br>எரிக்சன் மன சமூக கோட்பாடு<br>மனவெழுச்சி, அன்பு, பரிவு, மகிழ்ச்சி, கோபம், பொறாமை, அச்சம், கவலை<br>மனவெழுச்சிகளும், உடல் நலமும் | பலம் மற்றும் பலவீனங்களைப் பட்டியலிதல். SWOT அறிக்கை தயாரித்தல்.<br>மாணவர்களைப் பற்றிய விபரங்களை சேகரித்தல்.<br>மகிழ்ச்சி தரும் மற்றும் மகிழ்ச்சியற்ற விஷயங்களைப் பட்டியலிடுதல்.<br>எதிர்மறை எண்ணங்களைத் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைப் பட்டியலிடுதல்.<br>சுகாதார அட்டை தயாரித்தல்.<br>செயல்பாடு குறைபாடு உடைய மாணவர்களை அடையாளம் காணுதல். | மாணவ ஆசிரியர் மூலம் |
| அலகு 3 | | |
| கவனம் | கவனச்சிதைவு சோதனை.<br>கவனப்பிரிவு சோதனை.<br>அலெக்சாண்டர் சோதனை. | வகுப்பறை சோதனை |
| நுண்ணறிவு | காரண காரியப் படச் சோதனை பியாஜேயின் சோதனை. | வகுப்பறை சோதனை<br>பள்ளிக் குழந்தைளை உற்றுநோக்கி அவர்களின் செயல்பாடுகளின் தன்மையை அறிதல் |
| ஆக்கத்திறன் | ஒருபொருள் பல பயன்கள்.<br>ஒரு எழுத்து பல படங்கள். | வகுப்பறை சோதனை |

| பாடப்பொருள் | செயல்பாடுகள் | தகவல் சேகரிப்பு |
|---|---|---|
| அலகு 4 | | |
| குழந்தைகளின் நட்பு<br><br>மன எழுச்சிகள்<br><br>விருப்பு, வெறுப்புகள் | நண்பர்கள் தேர்வுமுறை பற்றிய விவரங்களை திரட்டல்.<br><br>குழந்தைகளின் சினம், அச்சம் பற்றிய விவரங்கள் திரட்டல்.<br><br>விரும்பிய வெறுத்த ஆசிரியர் ஒவ்வொருவரின் விரும்பியதற்கான வெறுத்தற்கான பண்புகள். | பள்ளி மாணவர்<br>(கேட்டறிதல்)<br><br>பள்ளி வாழ்வை நினைவு கூர்ந்து பண்புகளைப் பட்டியலிடல் |
| அலகு 5 | | |
| 1. ஒழுக்க மனப்பான்மை<br><br>2. நேர்மை | பள்ளிக்குச் செல்லும்போது காலை இறைவணக்கக் கூட்டத்தில் பள்ளி மாணவர்கல் எத்தனை பேர் காலதாமதமாக வருகின்றனர்.<br><br>பள்ளிக்குச் செல்லும்போது உனது வகுப்பில் மாணவர்களை உற்றுநோக்கி மாணவர்கள் எப்போதும் நேர்மையாக உள்ளனரா? அல்லது சில சமயம் நேர்மையாகவும் சில சமயம் நேர்மையற்றவராகவும் உள்ளனரா? என்பதை ஆராய்ந்து அதற்கான காரணங்களை குறிப்பிடுக. | மாணவ ஆசிரியர் |
| அலகு 6 | | |
| மன வளர்ச்சி<br><br>மனவெழுச்சி வளர்ச்சி<br><br>சமூக நடத்தை வளர்ச்சி<br><br>தொகுப்புரை | நாயக வழிபாடு, மனத்திறன் மாறுதல்கள்.<br><br>தன்னனுபவம்.<br><br>சமூக நடத்தை தன்னனுபவம்.<br><br>குமரப்பருவத்தில் தோன்றும் பிரச்சனைகள் ஓர் ஆய்வு. | நண்பர்களிடமிருந்து<br><br>தானே சிந்தித்தல்<br><br>தானே சிந்தித்தல்<br><br>பயிற்சி மாணவர்கள் |
| அலகு 7 | | |
| கற்றல் பழக்கங்களைப் பெறுதல் | 1 முதல் 5 வகுப்புகளில் உள்ள குழந்தைகளின் கற்றல் பழக்கங்களை உற்றுநோக்கி பதிவு செய்தல். வகுப்பில் பெற்ற அறிவை வாழ்க்கையில் எவ்வாறு பொருத்திப் பார்க்கின்றனர் என்று பதிவு செய்தல். | பள்ளிக்குச் சென்று சேகரித்தல் |

| பாடப்பொருள் | செயல்பாடுகள் | தகவல் சேகரிப்பு |
|---|---|---|
| அலகு 8 | | |
| கற்றல் வகைகள் | நான்கு அல்லது ஐந்தாம் வகுப்பு குழந்தைகளை வகுப்பறையில் உற்றுநோக்கி அவர்களிடம் பல்வேறுவகையான கற்றல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரமாகக் குறித்து வர வேண்டும். | பள்ளிக்குச் சென்று சேகரித்தல் |
| அலகு 9 | | |
| பொதுமைக் கருத்தும், கருத்துருவாக்கமும் | நினைவு கூறுதல். | தானே சிந்தித்தல் |
| பொதுமைக் கருத்துப்படங்கள் | கருத்துப்படங்கள் தயாரித்தலில். | வகுப்பறை |
| அலகு 10 | | |
| கற்றலுக்கு உதவும் காரணிகள் | மாணவ ஆசிரியரிடமிருந்து கற்றலுக்கு உரிய காரணிகள் எவை என்று பட்டியலிடுக.<br>உனது பள்ளி வாழ்க்கையில் உனக்குப் பிடித்த ஒரு நல்ல ஆசிரியர் யார்? அல்லது உனக்குப் பிடிக்காத ஆசிரியர்கள் யாராவது இருக்கிறார்களா? பிடித்த ஆசிரியராக இருந்தால் உனக்கு எந்த காரணங்களினால் அந்த ஆசிரியரை பிடித்தது? பிடிக்காத ஆசிரியராக இருந்தால் எந்த காரணங்களினால் அவர் உனக்கு பிடிக்கவில்லை? ஆராய்க. பள்ளிக்குச் செல்லும் போது உனது வகுப்பில் அதிக அடைவுத்திறன் பெற்ற மாணவன் ஒருவனுக்கும், குறைவான அடைவுத்திறன் பெற்ற மாணவன் ஒருவனுக்கும் தனியாள் அறிக்கையினை தயார் செய்க. குறைவான அடைவுத்திறன் பெற்றதற்கான காரணங்களை ஆராய்க. | மாணவ ஆசிரியர் |

| பாடப்பொருள் | செயல்பாடுகள் | தகவல் சேகரிப்பு |
|---|---|---|
| அலகு 11 | | |
| கலந்துரையாடலின் மதிப்பு | பயிச்சி மாணாக்கர்கள் கலந்துரையாடுதல். | பயிற்சி மாணவர்கள் கருத்து பரிமாற்றம் |
| கற்றல் அனுபவம் | பயிற்சி மாணவர்களுக்கு தொடக்கப்பள்ளி கற்றல் அனுபவத்தை ஒப்படைத்தல். | சொந்த அனுபவத்தை கூறுதல் |
| கற்க கற்றுக் கொடுத்தல் | பயிற்சி மாணவர்கள் வகுப்பறையில் விவாதித்தல். | பயிற்சி மாணாக்கர்கள் கருத்துப் பரிமாற்றம் |
| அலகு 12 | | |
| செயல்திறன்மிக்க கற்போர் | கற்பித்தல் பயிற்சியின்போது தாமாக ஆர்வத்துடன் பங்கேற்று கற்கும் மாணவர்களின் பட்டியலை தயாரித்து விவரித்தல். | பள்ளி மாணவர்களிடமிருந்து |
| ஆக்கத்திறன் வளர்க்கும் செயல்பாடுகள் | மொழியுடைச் சோதனைகள், மொழியில்லாச் சோதனைகள், சிந்தனை வீச்சு முறையினைப் பயன்படுத்துதல். | வகுப்பறை |
| பள்ளி அறிவோடு குழந்தையின் அனுபவத்தை இணைத்தல் | உள்ளூர் கருத்தாளர்கள் மூலம் வாய்மொழி இலக்கியம், கைத்தொழில் கற்பித்தல். | உள்ளூர் கருத்தாளர் |
| கற்கும் குழந்தை | ஐ.நா. சபையின் குழந்தைகள் உரிமைகள் பிரகடனத்தை விவாதித்தல். | வகுப்பாசிரியர்கள் |
| கற்றலுக்கான உடல், உளப் பாதுகாப்பு | கலந்துரையாடல். | வகுப்பறை |
| பல்வேறு வழிகளில் கற்றல் | கற்பித்தல் பயிற்சியின்போது மாணவர்களின் கற்றல் பணியை பதிவு செய்தல். | பள்ளி |

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு– 1 | தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள்: உடல் மற்றும் அறிதல் திறன் சார்ந்தவை | |
| 1. | உடல் வளர்ச்சி | 1 |
| 2. | உடல் வளர்ச்சியில் நாளமில்லாச் சுரப்பிகளின்பங்கு | 3 |
| 3. | நரம்பு செல்லின் வளர்ச்சி | 4 |
| 4. | குறியீட்டுச் சிந்தனையும் தர்க்கமுறை சிந்தனையின் எல்லையும் | 7 |
| 5. | அறிதல் திறன் வளர்ச்சி | 11 |
| 6. | குழந்தையின் மொழி வளர்ச்சி | 15 |
| 7. | குழந்தையின் அறிதல் திறன் வளர்ச்சியில் குடும்பச் சூழல் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் மனப்பான்மையின் தாக்கம் | 18 |
| 8. | குழந்தையின் தன்னடையாளமும் மன நலமும் | 19 |
| அலகு– 2 | தொடக்கக்கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள்: சமூகம் மற்றும் மனவெழுச்சி சார்ந்தவை | |
| 1. | தற்கருத்து, மற்றும் சமூக உணர்வு | 24 |
| 2. | குழந்தைப்பருவ சகோதர உறவு | 28 |
| 3. | ஒப்பார் குழு மற்றும் விளையாட்டு | 30 |
| 4. | தன்னையறிதல் | 31 |
| 5. | தற்கருத்து வளர்ச்சியால் சமூக காரணிகளின் செல்வாக்கு | 33 |
| 6. | எரிக்சன் மன சமூக கோட்பாடு | 34 |
| 7. | மனவெழுச்சி, அன்பு, பரிவு, மகிழ்ச்சி, கோபம், பொறாமை, அச்சம், கவலை | 36 |
| 8. | பெற்றோர், குழந்தை உறவு | 47 |
| 9. | மனநலம் | 50 |
| 10. | மனவெழுச்சிகளும், உடல் நலமும் | 53 |


| | | பக்கம் |
|---|---|---|
| அலகு– 3 | உடல் மற்றும் அறிவு வளர்ச்சி – தொடக்கப்பள்ளி ஆண்டுகள் (6 முதல் 10 வயதுவரை) | |
| 1. | உடல் வளர்ச்சி | 58 |
| 2. | உடற் பண்புகள் | 59 |
| 3. | உடல் தேவைகள் | 60 |
| 4. | கவனம் | 61 |
| 5. | நினைவு | 64 |
| 6. | சிந்தனை | 65 |
| 7. | அறிதல் திறன் வளர்ச்சி | 67 |
| 8. | நுண்ணறிவு | 68 |
| 9. | ஆக்கத்திறன் | 74 |
| அலகு– 4 | தொடக்கப்பள்ளி பருவத்தில் மாணவர்களின் சமூக மற்றும் மனவெழுச்சி வளர்ச்சி நிலைகள் (6 முதல் 10 வயது வரை) | |
| 1. | சமூக வளர்ச்சி | 78 |
| 2. | சமூக எதிர்பாப்புகள் | 78 |
| 3. | குழந்தைகளின் நட்பு | 79 |
| 4. | நட்பு மற்றும் நண்பர்களை தேர்ந்தெடுக்க உதவும் காரணிகள் | 79 |
| 5. | சமூக ஏற்பு | 80 |
| 6. | ஒன்றுதல் விருப்பம் | 80 |
| 7. | ஒப்பார் குழு | 81 |
| 8. | சமூக, மனவெழுச்சி மற்றும் பண்பாட்டுச் சூழல்களில் பள்ளியின் பயன்பாடுகள் | 82 |
| 9. | மனவெழுச்சி வளர்ச்சி | 83 |
| 10. | மனவெழுச்சி வளர்ச்சி நிலை | 83 |
| 11. | பொதுவான மனவெழுச்சிகள் | 83 |
| 12. | மனவெழுச்சி முதிர்ச்சியடைதல் | 86 |
| 13. | மனவெழுச்சி வளர்ச்சியில் கற்றலின்பங்கு பாடங்கள், ஆசிரியர்கள், பள்ளி மற்றும் பிற மாணவர்கள் மீது எவ்வாறு விருப்பு மற்றும் வெறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பதை அறியலாம் | 86 |
| 14. | மன எழுச்சி சமநிலை | 88 |
| 15. | மனவெழுச்சி வளர்ச்சியில் தகவல் தொடர்பு ஊடகங்களின் தாக்கம் | 89 |

| | | பக்கம் |
|---|---|---|
| அலகு– 5 | ஆரம்பக்கல்வி நிலையில் மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சி (6 முதல் 10 வயது வரை) | |
| 1. | ஒழுக்க வளர்ச்சி என்பதன் பொருள் | 92 |
| 2. | குழந்தைகளின் ஒழுக்கப்பயிற்சியின் காரணிகள் | 100 |
| 3. | நேர்மை | 103 |
| 4. | தர்ம சிந்தனை | 104 |
| 5. | குழந்தைகளுக்கான வீரர்கள் | 104 |
| 6. | இலட்சியம் | 105 |
| 7. | ஒழுங்கு என்பதன் பொருள் | 107 |
| 8. | ஒழுங்கின் முக்கியத்துவம் | 107 |
| 9. | ஒழுக்க வளர்ச்சியில் தகவல் ஊடகங்களும் அவற்றின் தாக்கமும் | 108 |
| 10. | தொகுப்புரை | 109 |
| அலகு– 6 | குமரப்பருவம் | |
| 1. | முன்னோக்கு | 112 |
| 2. | குமரப்பருவ வளர்ச்சிகள் | 112 |
| 3. | முந்திப் பருவமடைதலும், பிந்திப் பருவமடைதலும் | 116 |
| 4. | கருத்தியல் நிலை அல்லது முறையாக எண்ணிச் சிந்தித்து எண்ணங்களின் அடிப்படையில் செயல்படும் மனநிலை | 117 |
| 5. | அறிதலை அறிந்துணர்தல் | 118 |
| 6. | தொகுப்புரை | 120 |
| அலகு– 7 | கற்றல் | |
| 1. | கற்றல் ஓர் இயக்கமுள்ள உள்ளார்ந்த செயல் | 125 |
| 2. | முந்தைய அறிவுடன் புதிய செய்தியை இணைத்தல் | 131 |
| 3. | மொழியைக் கற்றல் | 134 |
| 4. | கற்றல் பழக்கங்களைப் பெறுதல் | 136 |
| 5. | வேறுபட்ட சூழ்நிலைகளில் பொறுத்தப்பாட்டைப் பெறக் கற்றல் | 139 |
| 6. | கற்றலின் தன்மைகள் | 140 |
| 7. | இடைவினையாற்றல் மூலம் கற்றல் | 143 |

| | | | |
|---|---|---|---|
| அலகு– 8 | | கற்றல் வகைகள், நிலைகள் மற்றும் அணுகுமுறைகள் | பக்கம் |
| | 1. | கற்றல் வகைகள் | 146 |
| | 2. | கற்றல் விதிகள் | 148 |
| | 3. | ஆக்கநிலையுறுத்தல் | 150 |
| | 4. | கற்றல் அணுகுமுறைகள் | 150 |
| அலகு– 9 | | பொதுமைக் கருத்தும், கருத்துருவாக்கமும் | |
| | 1. | பொதுமைக் கருத்தும், கருத்துருவாக்கமும் | 154 |
| | 2. | பொதுமைக் கருத்து உருவாதல் | 155 |
| | 3. | பொதுமைக் கருத்து உருவாதலுக்கான காரணிகள் | 156 |
| | 4. | பொதுமைக் கருத்து வகைகள் | 156 |
| | 5. | செயல்களின் தொகுப்பு அல்லது ஸ்கீமா | 157 |
| | 6. | வெளியுலக உண்மைத் தன்மைகளைப் பற்றிய மனக் கருத்துருவாக்கம் | 159 |
| | 7. | ஒப்பார் குழு, தகவல் தொடர்புச் சாதனங்கள், சமூகத் தொடர்புகள் ஆகியவற்றின் தொடர்பால் தன் கருத்தை இணைத்தல் | 159 |
| | 8. | பொதுமைக் கருத்துப்படங்கள் | 160 |
| | 9. | பொதுமைக் கருத்துப் படங்களின் கல்விப் பயன்கள் | 160 |
| | 10. | தொகுப்புரை | 160 |
| அலகு –10 | | கற்றலுக்கு உதவும் காரணிகள் | |
| | 1. | தனிப்பட்ட காரணிகள் | 162 |
| | 2. | உளம் சார்ந்த காரணிகள் | 164 |
| | 3. | சமூகக் காரணிகள் | 165 |
| | 4. | மனவெழுச்சிக் காரணிகள் | 166 |
| | 5. | பள்ளிசார்ந்த காரணிகள் | 167 |
| | 6. | கற்றல் வகை | 170 |
| | 7. | கற்பித்தல் வழிமுறைகள் | 171 |
| | 8. | ஊடகம் | 172 |
| | 9. | தொழில்நுட்பவியல் | 173 |
| | 10. | கற்பித்தல் கற்றல் செயல்பாடு | 173 |

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| | 11. ஆசிரியர் பண்பு நலன்கள் | 175 |
| | 12. தொகுப்புரை | 176 |
| அலகு– 11 | அறிவை உருவாக்குவதற்காக கற்பித்தல் | |
| | 1. அறிவை உருவாக்குவது என்பதின் பொருளே கற்பதுதான் | 178 |
| | 2. புதிய அறிவை உருவாக்குவதற்கான இடம் | 179 |
| | 3. கலந்துரையாடலின் மதிப்பு | 179 |
| | 4. கற்றல் ஒரு சமூக செயல்பாடாகும் | 180 |
| | 5. கற்றல் அனுபவத்தை வடிவமைத்தல் | 180 |
| | 6. கற்க கற்றுக் கொள்ளுதல் | 180 |
| | 7. கற்பிக்கப்படும் பாடத்தைவிட கற்போரின் மீது கவனம்செலுத்துதல் | 181 |
| | 8. அறிதலும், புரிதலும் | 183 |
| | 9. புரிதலின் வடிவங்கள் | 186 |
| | 10. அறிவைத் தெரிவு செய்தல் | 188 |
| அலகு– 12 | கற்றலும் அறிவும் | |
| | 1. செயல்திறமுள்ள கற்போர் | 190 |
| | 2. ஆக்கத்திறன் வளர்க்கும் செயல்கள் | 191 |
| | 3. குழந்தையின் குரல், அனுபவம் | 194 |
| | 4. பள்ளி அறிவோடு குழந்தையின் அனுபவத்தை இணைத்தல் | 195 |
| | 5. கற்கும் உரிமை | 195 |
| | 6. கற்றலுக்கான உடல் உளப் பாதுகாப்பு | 197 |
| | 7. பொதுமைக்கருத்து வளர்ச்சி | 199 |
| | 8. அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்க இயலும் | 201 |
| | 9. கற்றலின் முக்கிய காரணிகள் | 201 |
| | 10. பல்வேறு வழிகளில் கற்றல் | 202 |
| | 11. கற்றலுக்கேற்ற அறிவுவளர்ச்சி ஆயத்தநிலை | 203 |
| | 12. பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் கற்றல் | 204 |
| | 13. அறிதல், புரிதல் | 206 |
| | 14. அறிவை, மறு உருவாக்கம் செய்தல் | 207 |
| | 15. தேசிய கலைத்திட்டம் 2005 கல்விப் பிரகடனம் | 208 |

## கற்கும் குழந்தை


ஆரம்பப்பள்ளிக்கு வரும்போது
ஆரம்பப்பள்ளியில் பயிலும்போது
ஆரம்பப்பள்ளிக்கல்வி நிறைவு செய்யும்போது
உடல் வளர்ச்சி
அறிவுத்திறன் வளர்ச்சி
சமூக வளர்ச்சி
மனவெழுச்சி வளர்ச்சி
கற்றல்
வகைகள்
பொதுமைக் கருத்துருவாதல்
காரணிகள்
அறிவின் உருவாக்கம்

# பகுதி - அ

## அலகு – 1

## தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள்: உடல் மற்றும் அறிதல் திறன் சார்ந்தவை

மாணவ ஆசிரியர்கள் கற்பித்தல் பயிற்சிக்கு பள்ளிகளுக்குச் சென்றபோது உற்றுநோக்கல் படிவத்தில் குழந்தைகளின் எடை உயரம் போன்ற விவரங்களைக் கொண்டுவருவர். அந்த விவரங்களின் அடிப்படையில் பின்வரும் வழிகாட்டுதலின்படி அவர்கள் பதிவேடு தயாரிக்க வேண்டும்.

ஐந்து குழுக்களும் கொண்டுவந்த உற்றுநோக்கல் படிவங்களில் உள்ள விவரங்களிலிருந்து வயது வாரியான உயரம் எடை ஆகியவற்றை தொகுத்து ஒரு அட்டவணையில் குறிக்க வேண்டும். அதிலிருந்து 1 முதல் 5 வகுப்புகள் வரையுள்ள குழந்தைகளின் வயது வாரியான உயரம் தொடர்பான வளர்ச்சியின் போக்கு எவ்வாறு இருக்கின்றது. அதில் ஆண்கள் பெண்கள் வேறுபாடு காணப்படுகின்றதா? இவ்வாறே வயது வாரியான குழந்தைகளின் எடை தொடர்பான வளர்ச்சியின் போக்கு எவ்வாறு இருக்கின்றது? அதில் ஆண்கள் பெண்கள் வேறுபாடு காணப்படுகிறதா? என்னும் வினாக்களுக்கு விடை கண்டுபிடித்து தேவையான விளக்கங்கள் எழுதவேண்டும். வயது வாரியான ஆண்கள் பெண்களுக்கான சராசரி உயரங்களை ஒரு வரைபடத் தாளில் குறிக்கவும். வயது வாரியான ஆண்கள் பெண்களுக்கான சராசரி எடைகளை மற்றொரு வரைபடத் தாளில் குறிக்கவும். அதில் கிடைத்த முடிவுகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடல் செய்து அதன் அடிப்படையில் இப்பாடப் பகுதியை தொடங்கவும்.

கற்கும் குழந்தையை ஆசிரியர் நன்கு புரிந்து கொண்டால் வகுப்பறையில் கற்றல் செயலும் கற்பித்தல் செயலும் செம்மையாக நடைபெறும் என்பது திண்ணம். ஆசிரியர்கள் கற்கும் குழந்தையை நன்குபுரிந்து கொள்ளவேண்டுமென்றால் அவர்களின் உடல், உள்ளம், மனவெழுச்சி, சமூக மனப்பான்மை ஆகியவற்றின் வளர்ச்சியைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டும். குழந்தைகளின் வளர்ச்சியைப் பற்றி தெரிந்து கொண்டால் தான் அவர்கள் வளர்ச்சி நிலையில் எந்த இடத்தில் இருக்கின்றார்கள் என்பதற்கு ஏற்றபடி ஆசிரியர் கற்றல் கற்பித்தல் செயல்களைத் திட்டமிட முடியும். முதலில் தொடக்கப் பள்ளியில் கல்வியை தொடங்க வரும் குழந்தைகளின் உடல் மற்றும் அறிதல் திறன் வளர்ச்சியைப் பற்றி இந்த அலகில் காண்போம்.

### உடல் வளர்ச்சி

உடல் வளர்ச்சி என்பது மனித உடலில் உள்ள செல்கள் திசுக்களின் பெருக்கத்தால் ஏற்படும் உயரம் மற்றும் எடை பெருக்கத்தைக் குறிக்கின்றது. மனித உடலின் வளர்ச்சி மற்றும் முதிர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையில் மனிதனின் வளர்ச்சியை பின்வரும் 8 பருவங்களாக பிரிக்கலாம்.

1. சிசுப் பருவம் **(0–1 ஆண்டுகள்)**
2. குறுநடைப் பருவம் **(1–3 ஆண்டுகள்)**
3. பள்ளி முன் பருவம் **(3–6 ஆண்டுகள்)**


| | | |
|---|---|---|
| 4. | பள்ளிப் பருவம் | (6–10 ஆண்டுகள்) |
| 5. | குமரப் பருவம் | (10–20 ஆண்டுகள்) |
| 6. | வாலிபப் பருவம் | (20–40 ஆண்டுகள்) |
| 7. | வாலிபப் பருவத்திற்கும் முதுமைப் பருவத்திற்கும் இடைப்பட்ட பருவம் | (40–60 ஆண்டுகள்) |
| 8. | முதுமைப் பருவம் | (60 ஆண்டுகளுக்கு மேல்) |

இப்பருவங்களில் 3–6 ஆண்டுகளில் குழந்தைகள் முன் மழலையர் பள்ளியிலும் 6–10 ஆண்டுகளில் தொடக்கப் பள்ளியிலும் கல்வி கற்கின்றனர். நடுவண் அரசும் மாநில அரசும் 14 ஆண்டுகள் வரை உள்ள அனைத்துக் (Universalisation of Elementary Education) குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக்கல்வி அளிக்க வேண்டும் என்று செயல்பட்டு வருகின்றன.

## 1. தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் உடல் வளர்ச்சி

பிறந்த குழந்தை சராசரியாக 50 செ.மீ உயரமும் 3 கிகி எடையும் இருக்கிறது. நாளடைவில் குழந்தை உயரத்திலும் எடையிலும் வளர்ச்சியடைகின்றது. குழந்தையின் உடல் வளர்ச்சி ஒரு திட்டமிட்ட போக்கை கொண்டுள்ளது. உடல் வளர்ச்சி முதலில் தலையிலிருந்து தொடங்கி பாதங்களை நோக்கி வருகின்றது. பின்னர் உடலின் மைய அச்சிலிருந்து இரு ஓரங்களையும் நோக்கி வருகின்றது. உடல் வளர்ச்சியில் எலும்புகளின் வளர்ச்சியும் தசை வளர்ச்சியும் முக்கிய காரணிகளாகும். குழந்தைகளின் எலும்புகள் உறுதியற்றதாக காணப்படுகின்றது. எனவே குழந்தைகளின் எலும்பு மண்டலம் நெகிழ்வு தன்மை உடையதாக இருக்கின்றது. தசை வளர்ச்சியைப் பொறுத்தவரை குழந்தைகள் பிறக்கும்போதே எல்லா தசை நாண்களும் இருக்கின்றன. வளர்ச்சியின்போது தசை நாண்கள் நீளத்திலும், பருமனிலும் அதிகரிக்கின்றன.

உடலின் எல்லா பாகங்களும் ஒரே வீதத்தில் வளர்ச்சி அடைவதில்லை. வெவ்வேறு பாகங்கள் வெவ்வேறு வீதத்தில் வளர்ச்சி அடைகின்றன. நரம்பு மண்டலம், உடல் உறுப்புகள், இனப்பெருக்க மண்டலம் ஆகியவற்றின் வளர்ச்சியைக் காட்டும் வரைபடம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.




படத்திலிருந்து குழந்தையின் நரம்பு மண்டலம் மிக வேகமாகவும் உடல் உறுப்புகள் மெதுவாகவும் வளர்ச்சி அடைகின்றன என்று தெரிகின்றது. தொடக்கக் கல்வி பயில பள்ளிக்கு வரும்போது குழந்தையின் நரம்பு மண்டலம் 90 சதம் வளர்ச்சி அடைந்து விடுகின்றது. உடல் உறுப்புகளின் வளர்ச்சியைப் பொருத்தவரை குழந்தை பள்ளிக்கு வரும்வரை உடல் உறுப்புகள் வேகமாக வளர்ச்சி அடைந்து 40% வளர்ச்சி நிறைவு பெற்றிருக்கின்றது. அதன்பின் பள்ளிப் பருவம் முதல் குமரப் பருவம் தொடங்கும் வரை குழந்தையின் உடல்

வளர்ச்சி தேக்க நிலையை அடைகின்றது. அதனைத்தொடர்ந்து குமரப்பருவத்தில் உடல் வளர்ச்சியில் அதிக வேகம் காணப்படுகிறது.

உடல் வளர்ச்சியின்போது குழந்தைகளின் இயக்கங்களும் வளர்ச்சி (Motor Development) அடைகின்றன. பள்ளி முன் பருவத்தில் அதாவது குழந்தை தொடக்கக் கல்வி கற்க பள்ளிக்கு வரும்முன் அடிப்படையான உணவு உண்ணுதல், பேசுதல், பல்துலக்குதல், ஆடை அணிதல், பென்சிலை பிடித்து எழுதுதல், பந்து விளையாடுதல் போன்ற உடலியக்கங்களை அடைந்து விடுகின்றனர். பள்ளிப் பருவத்தில் இவ்வியக்கங்கள் கூர்மையாக்கப்படுகின்றன.

விதை ஒன்று போட்டால் சுரை ஒன்று காய்க்குமா? என்னும் பழமொழிக்கு ஏற்ப பெற்றோர்களின் உடற்பண்புகள் குழந்தைகளின் வளர்ச்சியைப் பாதிக்கின்றது. மேலும் குழந்தைகளின் வளர்ச்சி என்பது அவர்கள் வளரும் சமூக, பொருளாதாரப் பின்னணியைப் பொறுத்து வேறுபடுகின்றது. பொருளாதாரத்தில் உயர்ந்த குடும்பத்தில் வளரும் குழந்தைகள் நல்ல ஊட்டச்சத்தினைப் பெறுவதால் அவர்களின் உடல் வளர்ச்சி பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பத்தில் வளரும் குழந்தைகளின் வளர்ச்சியைவிட சற்று அதிகமாக காணப்படுகிறது. எனவே வளர்ந்து முதிர்ச்சி அடையும் தகுதிகளை எல்லா குழந்தைகளும் பெற்றிருந்தாலும்; வளர்ச்சியானது குழந்தைகள் பெற்றுள்ள மரபுப் பண்பு மற்றும் சூழ்நிலையின் தாக்கம் இவற்றை பொறுத்து மாறுபடுகிறது.

### அ. உடல் வளர்ச்சியை பாதிக்கும் அடிப்படை காரணிகள்

அடிப்படையில் தனி மனித உடலின் கட்டமைப்பும், சுற்றுப்புறச் சூழ்நிலையும் அவனது வளர்ச்சியைப் பாதிக்கும் காரணிகளாகும். உடலின் கட்டமைப்பு என்பதில் மனித உடலின் செயல்பாடுகளை ஒழுங்குப்படுத்தும் மிக முக்கியமான இருபெரும் அமைப்புகளான நாளமில்லாச் சுரப்பிகள் மண்டலமும் நரம்பு மண்டலமும் அடங்கும். இவை இரண்டும் இணைந்து செயல்பட்டு உடலின் வளர்சிதை மாற்றத்திற்கு காரணமாக அமைகின்றன. இதனால் உடலின் உள்ளமைப்புகள் சமநிலையில் இருப்பதோடு உடலில் செல்களும் தொடர்ந்து நல்ல நிலையில் செயல்பட முடிகிறது. இது உடல் வளர்ச்சிக்கும், இயக்கங்களுக்கும் காரணமாகின்றது.

## உ. உடல்வளர்ச்சியில் நாளமில்லாச் சுரப்பிகளின் பங்கு

நாளமில்லா சுரப்பிகள் மனித உடலில் பல்வேறு இடங்களில் அமைந்து ஹார்மோன்கள் என்னும் வேதிப்பொருளைச் சுரந்து உடல் வளர்ச்சிக்கு நரம்பு மண்டலத்துடன் துணை நிற்கின்றது. எடுத்துக்காட்டாக பிட்யூட்ரியின் முன்பகுதியிலிருந்து சுரக்கும் வளர்ச்சி ஹார்மோன் எலும்பு மற்றும் தசை திசுக்களின் வளர்ச்சியை கட்டுப்படுத்துகின்றது. இப்பகுதியில் சுரக்கும் பிற ஹார்மோன்கள் மற்ற நாளமிலாச் சுரப்பிகளின் செயல்பாட்டினைக் கட்டுப்படுத்துகின்றன.

பரிவு நரம்பு மண்டலத்தின் செயல் பாட்டால் அட்ரினல் சுரப்பியின் உட்பகுதி (Medulla) அட்ரினலின் என்னும் ஹார்மோனை சுரந்து உடலானது அவசர காலங்களை சமாளிக்க உதவுகின்றது. அட்ரினலின் இதயத்தின் செயல்பாட்டையும், இரத்த அழுத்தத்தையும் கட்டுப்படுத்துவதுடன் இரத்தக்குழாய்களும், தசைகளும் சுருங்கி விரிவதற்கு உதவுகின்றது. அட்ரினலின் கார்போ ஹைட்ரேட், புரோட்டின் ஆகியவற்றின் வளர்சிதை மாற்றத்தை ஒழுங்குபடுத்துகின்றது.

தைராய்டு சுரப்பியில் சுரக்கும் தைராக்ஸின் ஆக்ஸிஜன் உட்கிரகித்தலை அதிகப்படுத்துவதுடன் வளர்சிதைமாற்றச் செயலைக் கட்டுப்படுத்துகின்றது. மேலும் எலும்புகள் மற்றும் நரம்புமண்டலத்தின் வளர்ச்சியையும் தூண்டுகின்றது. பாரா தைராய்டு சுரப்பிகளில் சுரக்கும் ஹார்மோன்கள் இரத்தத்தில் உள்ள கால்சியம் மற்றும் பாஸ்பரஸ் அளவினைக் கட்டுப்படுத்தி எலும்பு வளர்ச்சியைத் தூண்டுகின்றது.

கணையத்தில் சுரக்கும் இன்சுலின் கார்போ ஹைட்ரேட், புரோட்டீன், கொழுப்பு ஆகியவற்றின் வளர்சிதை மற்றத்திற்கும் குளுக்கோஸ் உட்கிரகிக்கும் அளவைக்கட்டுப்படுத்தி புரோட்டீன் உருவாவதற்கும் கொழுப்பு சேகரிக்கவும் பயன்படுகின்றது.

### அ. உடல் வளர்ச்சியில் காணப்படும் குறைபாடுகள்

நாளமில்லாச் சுரப்பிகளில் சுரக்கும் ஹார்மோன் தேவையான அளவுக்குக் குறைவாகவோ அல்லது அதிகமாகவோ சுரக்கும்போது. குழந்தையின் வளர்ச்சியில் குறைபாடுகள் ஏற்படுகின்றன. உதாரணமாக குழந்தைப் பருவத்தில் பிட்யூட்ரியில் முன்பகுதியில் சுரக்கும் வளர்ச்சி ஹார்மோன் அளவுக்கு அதிகமாகச் சுரக்குமானால் அசாதாரண உடல் பருமன் (Gigantism) உண்டாகும். அசாதாரண உடல் பருமன் உள்ள குழந்தைகள் வயதிற்கு ஏற்ற வளர்ச்சி இல்லாமல் உயரம், பருமன், எடை ஆகியவற்றில் அதிகமான வளர்ச்சியைப் பெற்றிருப்பர். வளர்ச்சி ஹார்மோன் தேவையான அளவுக்குக் குறைவாக சுரக்குமானால் குள்ளத்தன்மை (Dwarfism) ஏற்படுகின்றது. குள்ளத்தன்மை குறைபாடுடைய குழந்தைகள் வளர்ச்சிக் குன்றி எவ்வளவு வயது ஆனாலும் உடல் வளர்ச்சி அடையாமல் இருப்பர். குழந்தைகளிடத்தில் தைராக்ஸின் குறைவாக சுரக்குமானால் கிரிடினிசம் (Cretinism) ஏற்படும். இக்குறைபாடுடைய குழந்தைகளின் மைய நரம்பு மண்டலத்தின் வளர்ச்சியில் குறைபாடு ஏற்பட்டு குழந்தைகள் உடல் மற்றும் உள்ள செயல்பாடுகளில் மந்தமாக காணப்படுவர். தைராக்ஸின் அதிகமாக சுரக்குமானால் முன் கழுத்து கழலை (Goitre) என்னும் நோய் ஏற்படுகிறது. இந்நோய் ஏற்பட்ட குழந்தையின் தைராய்டு சுரப்பி பருத்து முன்கழுத்து பகுதி வீக்கம் அடைந்து காணப்படும். கண் பிதுக்கம், உடல் நடுக்கம், வியர்த்தல், நாடித்துடிப்பு மற்றும் இதயத்துடிப்பு அதிகமாதல், நரம்புகளில் எரிச்சல் போன்ற அறிகுறிகள் தென்படும். இவ்வாறு நாளமிலாச் சுரப்பிகள் குழந்தையின் வளர்ச்சியைக் கட்டுபடுத்துவதில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

## 3. நரம்பு செல்லின் வளர்ச்சி


நரம்பு மண்டலம், மூளை, தண்டுவடம் ஆகியவற்றைக் கொண்ட மையநரம்பு மண்டலம், இவற்றிற்கு வெளியில் உள்ள நரம்பு திசுக்களைக் கொண்ட வெளி நரம்பு மண்டலம் என்னும் இரு பெரும் பிரிவுகளைக் கொண்டு இயங்குகின்றது. குழந்தையின் வளர்ச்சியில் முக்கிய பங்காற்றும் மற்றொரு அடிப்படை அமைப்பு நரம்பு மண்டலம் ஆகும். நரம்பு மண்டலத்தின் அடிப்படை அலகு **நரம்பு செல்** அல்லது **நியூரான்** (Neu-ron) எனப்படும். நியூரான்கள் வெளியுலக தூண்டல்களை மைய நரம்பு மண்டலத்துக்கு எடுத்துச் செல்லவும் மைய நரம்பு மண்டலத்திலிருந்து கட்டளைகளை உடலின் பல உறுப்புகளுக்கு கொண்டு சென்று உடலியக்கங்களை ஏற்படுத்துவதற்கும் காரணமாக அமைகின்றன. இவ்வாறு நியூரான்கள் நரம்பு மண்டலத்தின் தகவல் தொடர்பை ஏற்படுத்தும் இணைப்புகளாக விளங்குகின்றன.

நியூரான்கள் 1 மிமீ க்கு குறைவான நீளம் முதல் சில அடி நீளம் வரை நீண்டு இருக்கின்றன. தண்டுவடத்தையும், குதிக்காலினையும் இணைக்கும் நியூரான்களில் ஆக்ஸான் சில அடி நீளமும் மூளையில் 1 மிமீ.க்கு குறைவாகவும் இருக்கும். நியுரான்களின் செயல்பாட்டினைப் பொறுத்து அவற்றை மூன்று பிரிவுகளாக பிரிக்கலாம்.

1. புலனுணர்ச்சி நியூரான் (Sensory Neuron)
2. இயக்க நியூரான் (Motor Neuron)
3. இணைப்பு நியூரான் (Interneuron)

மெய், வாய், கண், மூக்கு, செவி என்னும் புலன்களில் அமைந்து வெளியுலத்திலிருந்து புலன் உறுப்புகளின் வாயிலாக மைய நரம்புமண்டலத்திற்குச் செய்திகளைக் கொண்டு செல்லும் நியூரான்கள் புலனுணர்ச்சி நியூரான்கள் எனப்படும். மையநரம்பு மண்டலத்திலிருந்து தசைகளுக்குக் கட்டளைகளை

கொண்டு செல்லும் நியூரான்கள் இயக்க நியூரான்கள் எனப்படும். புலன் உணர்ச்சி நியூரான்களையும் இயக்க நியூரான்களையும் இணைப்பது இணைப்பு நியூரான்கள் எனப்படும். சிலவகை மறிவினை செயல்களைத் (Reflex action) தவிர பிறசமயங்களில் புலனுணர்ச்சி நியுரான்கள் நேரடியாக இயக்க நியுரான்களுடன் தொடர்பு கொள்வதில்லை. மாறாக மூளை மற்றும் தண்டு வடத்தில் உள்ள இணைப்பு நியூரான்கள் மூலம் தொடர்பு கொள்கின்றன. மைய நரம்புமண்டலத்திலுள்ள 99.98% நியூரான்கள் இத்தகைய இணைப்பு நியூரான்களே.




**உணவுக் கடத்துதலின் பாதை**

நியூரானின் அமைப்பு படத்தில் காட்டப்பட்டுள்ளது. தூண்டல்களைப் பெறும் நியூரானின் பாகம் டென்டிரைட் (Dendrite) எனப்படும். இவை நியூரானின் உடல் பகுதியிலிருந்து பல நீட்சிகளாக காணப்படுகின்றன. நியூரானின் உடல் பகுதிக்கு சோமா (Soma) என்று பெயர். இதனுள் உட்கருவும் சைட்டோபிளாஸமும் உள்ளன. சோமா டென்டிரைட்களிலிருந்து பெற்ற செய்தியை ஒருங்கிணைத்து அதனை ஒரு தனித்த நீட்சியான இழைக்குக் கடத்துகின்றது. இந்த நீட்சியான இழைக்கு ஆக்ஸான் (Axon) என்று பெயர். இந்த ஆக்ஸான் எந்த நீளத்திற்கு நீண்டுள்ளதோ அந்த நீளத்திற்கு செய்திகளைக் கடத்துகின்றது. ஆக்ஸானின் நுனியில் குமிழ் போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. இதற்கு முனைய குமிழ்கள் (Terminal Button) என்று பெயர். இதன் மூலமே நியூரான் தன் அருகில் உள்ள வேறு நியூரான்களையோ, சுரப்பிகளையோ, தசை நாண்களையோ தூண்டுகின்றது.

இரு நியூரான்கள் எப்பொழுதும் இணைந்திருப்பதில்லை. உண்மையில் இரண்டு நியூரான்களுக்கு இடையில் ஒரு மிகச் சிறிய இடைவெளி (Synaptic gap) காணப்படுகின்றது. நரம்பு செல்லின் வேதி மற்றும் மின் சமிக்கைகளின் மூலம் இந்த இடைவெளி கடக்கப்படுகிறது. ஆக்ஸானைச் சுற்றிலும் மையலின் ஷீத் (Myelin sheath) ஒரு போர்வை போல மூடியுள்ளது. இது புரதம் மற்றும் கொழுப்பால் ஆனது. இது நரம்பு துடிப்புகளின் வேகத்தை அதிகப்படுத்துவதற்கு உதவுகின்றது. ஒரே திசையிலேயே நியூரான்கள் செய்திகளைக் கடத்துகின்றன. டென்டிரைட்களிலிருந்து சோமா மூலம் ஆக்ஸானுக்கும் முனைய குமிழுக்கும் செய்திகள் அனுப்பப்படுகின்றன. இத்தகைய ஒரு வழிப் பாதையில் செய்திகள் செல்வதனால் மூளை அல்லது தண்டுவடத்திற்கு உடலின் பல பாகங்களிலிருந்து செய்திகள் ஒரே சமயத்தில் உட்செல்லவும் அங்கிருந்து வெளிவரவும் முடிகின்றது.

குழந்தை வளர்ச்சி அடையும்போது நியூரான்கள் அளவில் பெருக்கமடைகின்றன. பிறந்த குழந்தையின் நியூரான்களில் மையலின் ஷீத் படலம் இருப்பதில்லை. குழந்தை வளர வளர மையலின் ஷீத் உருவாகின்றது. இந்நிகழ்ச்சிக்கு மையலினேஷன் (Myelination) என்று பெயர். மையலின் ஷீத் வளர்ச்சியடைந்த பின்னரே புலன் உணர்ச்சி நரம்புகளும், இயக்க நரம்புகளும் செயல்பட தொடங்குகின்றன. அப்போது கட்டுப்பாடு இல்லாமல் இருந்த குழந்தையின் உடல் இயக்கம் குழந்தையின் கட்டுப்பாட்டுக்குள் வருகின்றது.

குழந்தை அம்மாவின் வாய் அசைவுகளைப் பார்க்கின்றது. கண்ணிலுள்ள புலன் உணர்ச்சி நியூரான்கள் வழியாக செய்திகள் மூளைக்குச் செல்கின்றன. பின்னர் மூளை தன் விருப்பப்படி அதேபோன்ற அசைவுகளை ஏற்படுத்த வாயிலுள்ள தசைகளுக்கு இயக்க நியூரான்கள் மூலம் கட்டளை பிறப்பிக்கின்றது. அதனால் உதடுகள் அசைந்து அம்மா என்னும் ஒலியை எழுப்புகின்றன. அம்மா என்னும் சொல்லை திரும்பத் திரும்ப சொல்லவைத்து அம்மா பயிற்சி அளிக்கிறார். இப்பயிற்சியினால் நியூரான்களின் இணைப்புகள் அதிகப்படுத்தப்படுகின்றன. மேலும் புலன் உணர்ச்சி நரம்புகளும், இயக்க நரம்புகளும் ஒருங்கிணைந்து செயல்பட ஆரம்பிக்கின்றன. இதன் விளைவாக அம்மா என்னும் சொல்லை குழந்தை திருத்தமாகவும் எளிதாகவும் கூறுகின்றது. இதனை உடலியக்கச் செயல்பாடு என்கிறோம். இதற்கு ஏறக்குறைய ஓர் ஆண்டு காலம் ஆகின்றது.

இவ்வாறே குழந்தைக்கு நடக்க, உட்கார, எழுந்திருக்க, பொருள்களைக் கையாள நாம் பயிற்சி கொடுக்கின்றோம். இதனால் குழந்தையின் உடலியக்கச் செயல்கள் சிறிது சிறிதாக கூர்மை அடைகின்றன.

நியூரான்களில் முதிர்ச்சியும் உடல் உறப்புகளுக்கு போதிய பயிற்சியும் இல்லை என்றால் தூண்டல்களை மூளைக்குச் கொண்டுச் செல்லும் புலன் உணர்ச்சி நியூரான்களுக்கும் மூளையின் கட்டளைகளை செயல்படுத்தும் இயக்க நியூரான்களுக்கும் இடையே சரியான ஒருங்கிணைப்பு இருப்பதில்லை. அப்போது ஆசிரியர் கரும்பலகையில் வரைந்த நேர் கோட்டுத்துண்டை பார்த்து குழந்தை தான் ஒரு நேர் கோடு வரையவேண்டும் என்று விரும்பினாலும் குழந்தை வரையும் கோடு நேராக வருவதில்லை. அம்மா என்ற சொல்லை அம்மா திரும்பத் திரும்ப குழந்தையைச் சொல்லவைத்து பயிற்சி கொடுப்பது போல ஆசிரியர் திரும்பத் திரும்ப எழுதவைத்து பயிற்சி கொடுக்கும்போது நன்றாக குழந்தை எழுதக் கற்றுக் கொள்கிறது.

பள்ளியில் கற்கும் குழந்தையின் செயல்பாடுகள் சிறப்பாக அமையவேண்டுமானால் குழந்தைகள் ஆசிரியர் சொல்வதைக் கேட்டல், பார்த்தல், தொட்டு உணர்தல், நுகர்ந்து பார்த்தல் சுவைத்துப் பார்த்தல் ஆகிய புலன் உணர்வுகளும் பேசுதல், படித்தல், எழுதுதல், விளையாடுதல் போன்ற உடலியக்கச் செயல்களும் சிறப்பாக நடைபெற வேண்டும். இதற்கு பள்ளியில் போதிய பயிற்சி அளிக்க வேண்டும். குழந்தைகளுக்கு புலப் பயிற்சி அளிக்க கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளின்போது ஆசிரியர்கள் பல வண்ணங்கள், வடிவங்கள் கொண்ட பொருட்கள், படங்கள் போன்ற துணைக்கருவிகளைப் பயன்படுத்த வேண்டும். மேலும் விளையாட்டு கருவிகளைப் பயன்படுத்துதல், கை கால்களை மடக்குதல், நீட்டுதல், ஓடுதல், தாண்டுதல், குதித்தல் போன்ற உடற்பயிற்சிகள் நிறைந்த பல விதமான உடல் இயக்கச் செயல்களைக் கொடுத்து அவர்கள் ஏற்கனவே பெற்றுள்ள உடல் இயக்கச் செயல்களைக் கூர்மைப்படுத்த வேண்டும்.

சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையமுடியும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்னும் முதுமொழிகள் உடலைப் பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தைக் கூறுகின்றன. நல்ல உடல் நலம் இருந்தால் தான் குழந்தைகள் நன்கு கல்வி கற்க முடியும். நல்ல ஆரோக்கியமான குழந்தைகள் நாட்டின் நல்ல எதிர்காலத்திற்கு அறிகுறியாகும். எனவே ஆசிரியர்கள் குழந்தைகளின் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு தேவையான உடலைப் பாதுகாக்கும் நல்ல உணவுப் பழக்கங்களையும் உடை தூய்மை, உடல்

தூய்மை, பல் தூய்மை போன்ற அன்றாட பழக்க வழக்கங்களையும் தவறாமல் கற்பித்து குழந்தைகளின் நல்ல உடல் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

நாளமில்லாச் சுரப்பிகளின் செயல்பாடு மற்றும் நரம்பு மண்டலத்தின் வளர்ச்சியோடு இணைந்து நடைபெறும் குழந்தையின் உடல் வளர்ச்சியானது குழந்தையின் உற்று நோக்கல், தொடர்புபடுத்துதல், சிந்தித்தல் போன்ற மனச்செயல்பாடுகளின் வளர்ச்சிக்கும் காரணமாக அமைகின்றது.

உற்றுநோக்கல் படிவத்தில் மாணவ ஆசிரியர்கள் கொண்டு வந்த விவரங்களிலிருந்து குழந்தைகள் தர்க்க முறையில் என்னென்ன பேசுகின்றனர்? எழுதுகின்றனர்? அவை இடைவெளி, காரண காரியம், எண்ணியல் ஆகியவற்றுள் எந்த வகையில் அடங்குகின்றன? இந்த தர்க்க சிந்தனைக்கும், குழந்தைகளின் வயதிற்கும் ஏதேனும் தொடர்பு உண்டா? எந்த வகையான தர்க்க சிந்தனை குழந்தைகளிடம் அதிகம் காணப்படுகிறது? என்பன போன்ற வினாக்களுக்கு விடைகள் கண்டுபிடித்து ஆசிரிய மாணவர்கள் பதிவேடு தயாரிக்க வேண்டும். அப்பதிவேட்டில் கிடைத்த முடிவுகளின் அடிப்படையில் வகுப்பில் கலந்துரையாடல் செய்து இப்பாடப் பகுதியைத் தொடங்க வேண்டும்.

## 4. குறியீட்டுச் சிந்தனையும் தர்க்கமுறை சிந்தனையின் எல்லையும்

### அ. குறியீட்டுச் சிந்தனை

சில சமயங்களில் நமது வீட்டில் குழந்தைகள் சிறிய காகித துண்டைக் கொடுத்து இது தான் பயணச்சீட்டு; வைத்துக் கொள்ளுங்கள், என்றும் வெறும் குவளையைக் கொடுத்து இது தான் தேனீர்; குடியுங்கள், என்றும் விளையாடுவதைப் பார்த்திருப்பீர்கள். இங்கு குழந்தை பயணச்சீட்டிற்கு காகிதத்தையும் தேனீருக்கு வெறும் குவளையையும் பிரதியீடு அதாவது குறியீடு (Symbol) செய்கின்றது. குழந்தையின் இத்தகைய சிந்தனையைக் குறியீட்டுச் சிந்தனை என்கிறோம். குழந்தைகள் தாங்கள் புரிந்துகொண்ட வார்த்தைகள், எண்கள், உருவங்கள் போன்ற குறியீடுகளை உள்ளத்தில் உபயோகப்படுத்தும் திறனே குறியீட்டுச் சிந்தனை எனப்படும்.

### ஆ. குறியீட்டுச் சிந்தனையின் தன்மை

குழந்தைகள் இடைவெளி, காரண காரியம், அடையாளம் காணுதல், வகைபாடு செய்தல் மற்றும் எண்ணுருக்கள் இவற்றை புரிந்துகொள்வதன் மூலம் அவர்களின் குறியீட்டுச் சிந்தனை வளர்ச்சி அடைகிறது. குழந்தைகள் சிலவற்றை சிசு பருவத்திலிருந்தே புரிந்துகொள்ளத் தொடங்கி விடுகின்றனர். மற்றவை முன் குழந்தைப் பருவத்தில் வளர ஆரம்பிக்கின்றன. எனினும் பின் குழந்தை பருவம் வரை இந்த வளர்ச்சி முழுமையடைவதில்லை.

குறியீடுகளை புரிந்துக்கொள்வது என்பது படிப்படியான வளர்ச்சி. சின்னஞ்சிறு குழந்தைகள் தொலைக்காட்சியை பார்த்துக்கொண்டிருந்தாலும் அவர்களுக்கு அவை பிம்பங்கள் என்று புரிவதில்லை. தொலைக்காட்சிப் பெட்டியைக் கவிழ்த்து வைத்தால் அதில் காண்பிக்கப்படும் குவளையில் உள்ள நீர் கீழே கொட்டிவிடுமா என்ற கேள்விற்கு மூன்று வயது குழந்தைகள் ஆம் என்று பதில் அளித்தனர்.

எனக்கு ஐஸ்கிரீம் வேண்டும் என்று வீட்டில் இருக்கும் நான்கு வயது குழந்தை கேட்கின்றது எனக் கொள்வோம். அந்த குழந்தை ஐஸ்கிரீம் ஆர்வத்தைத் தூண்டும் குளிர்சாதனப் பெட்டி திறப்பதையோ தொலைக்காட்சியில் வரும் விளம்பரத்தையோ எதையும் பார்க்கவில்லை. ஒரு பொருளைப்பற்றி நினைப்பதற்கு இவைபோன்ற குறிப்புகள் எதுவும் அந்த குழந்தைக்குத் தேவைப்படுவதில்லை. ஆனால் அக்குழந்தை ஐஸ்கிரீம் அதன் குளிர்ச்சி, சுவை ஆகியவற்றை நினைவுக்குக் கொண்டு வந்து அதனைக் கேட்கின்றது.

இவ்வாறான புலன் உணர்ச்சி அல்லது செயல் குறிப்பு இல்லாமல் மனத்தளவில் நடைபெறுவது குறியீட்டுச் சிந்தனையின் தன்மையாகும். குறியீடுகளைப் பயன்படுத்துதல் உலகில் அனைவருக்கும் உள்ள பொதுவான திறமை. பொருள்களுக்குக் குறியீடு கொடுப்பதன் மூலம் பொருள்கள் கண்முன் இல்லாமலேயே குழந்தைகள் அவற்றைப் பயன்படுத்தி சிந்திக்க முடிகின்றது; நினைவில் கொண்டுவர முடிகின்றது. எடுத்துக்காட்டாக ஆசிரியர் மலர் (குறியீடு) ஒன்றை வரைக என்றதும் குழந்தையின் முன் ஒரு மலர் இல்லாமலேயே குழந்தை ஒரு மலரை வரைகின்றது.

குழந்தைகள் பள்ளிக்கு வரும் முன்னர் பின்பற்றிச் செய்தல், பாவனை விளையாட்டு, மொழியால் கருத்துப்பரிமாற்றம் ஆகிய செயல்களில் ஈடுபடுகின்றனர். இவையெல்லாம் குறியீட்டுச்சிந்தனையின் வெளிப்பாடுகளே ஆகும். பின்பற்றிச் செய்தலில் குழந்தைகள் தாங்கள் உற்றுநோக்கிய பிறரது செயல்களை மனத்தில் படம் பிடித்து வைத்துக்கொண்டு அதனை மீட்டுக்கொணர்ந்து செய்து காட்டுகின்றனர். பாவனை விளையாட்டில் குழந்தைகள் மருத்துவர் போல, பேருந்து ஓட்டுநர் போல தங்களை உருவகப்படுத்தி கொண்டு விளையாடுகின்றனர்.

குழந்தைகளின் குறியீட்டுச்சிந்தனைக்கு எண்ணுருக்களும் எழுத்துகளும் அவசியம். மொழியைப் பயன்படுத்தி குழந்தைகள் வார்த்தைகளைப் பேசுகின்றனர்; கேட்கின்றனர். அந்த வார்த்தைகளுக்கு பொருள் கொடுக்கும்போது அவை கருத்துப் பரிமாற்றத்துக்கு உதவுகின்றன. இவ்வாறு குழந்தைகள் பள்ளிக்கு வருமுன் குறியீட்டுச் சிந்தனையில் தேர்ச்சி பெற்று விடுவதால் முதல் வகுப்பில் செயல் வழிக் கற்றல் (ABL) முறையில் குழந்தைகளுக்குக் குறியீடுகளைப் பயன்படுத்திக் கற்பிக்கமுடிகின்றது.

## இ. தர்க்கமுறை சிந்தனை

குறியீட்டுச்சிந்தனையின் வளர்ச்சி தர்க்கமுறை சிந்தனையாகும். தர்க்கமுறைசிந்தனை என்பது குறியீடுகளில் வரிசைத் தொடரை ஏற்படுத்தி ஒரு முடிவையெடுத்தல் அல்லது மதிப்பீடுசெய்தல் ஆகும். ஒரு குழந்தை 7,8 ஆண்டுகளில் வரிசைத் தொடர்பு கிரமப்படி சிந்திக்கத் தொடங்குகிறது என்று பியாஜே குறிப்பிடுகின்றார். பியாஜே மற்றும் அவரது சகாக்கள் குழந்தைகள் தர்க்கச் சிந்தனை வளர்ச்சியை அனுமானம் செய்வதன் மூலம் ஆரம்பிக்கின்றனர் என்று கருதுகின்றனர். அனுமானம் செய்வது என்பது பின்வரும் தர்க்கச் சிந்தனை முறையாகும்.

A என்பவன் B –யை விட உயரமானவன்....1
மற்றும்
B என்பவன் C –யை விட உயரமானவன்.....2
என்றால்
A என்பவன் C –யை விட உயரமானவன்....3
என்று அனுமானிக்கிறோம்

சிறு குழந்தைகள் 1 மற்றும் 2 கருத்துகளை தனித்தனியே புரிந்துகொள்ள முடிகின்றது. ஆனால் அவற்றை தர்க்க முறையில் சிந்தித்து ஒருங்கிணைக்க முடியவில்லை. எனவே அவர்கள் மூன்றாவது முடிவுக்கு வர முடியவில்லை என பியாஜே கருதுகின்றார்.

### (i) இடைவெளி தர்க்கச் சிந்தனை

குறியீட்டுச் சிந்தனை வளர்ச்சி குழந்தைகள் பொருள்களுக்கு இடையே உள்ள இடைவெளி தொடர்பு பற்றி சரிவர தெரிந்துகொள்ள உதவுகின்றது. 19 மாதங்களில் குழந்தை ஒரு படம் என்பது ஒரு பொருளின் குறியீடு என்று புரிந்து கொள்கின்றது. அதில் இடைவெளி தொடர்புப் பற்றியும் சிந்திக்கிறது. உடலின் பாகங்களைக் காட்டும் படத்தில் காதைக் காட்டி உனக்கு இந்தக் காது எங்கே இருக்கின்றது என்று காட்டு

என்றால் குழந்தை தன் காதுகளை தொட்டுக் காட்டுகிறது. அதுபோலவே உனக்கு பொட்டு எங்கே வைக்க வேண்டும்? பொம்மைக்கு பொட்டு எங்கே வைக்கவேண்டும்? என்று கேட்டால், குழந்தை நெற்றியைக் காட்டுகின்றது. மூன்று வயது அல்லது அதற்குப் பிறகு வரையிலும் குழந்தைகள் படங்கள், மாதிரிகள் ஆகியவற்றில் உள்ள இடைவெளியினை நம்பகமான முறையில் புரிந்துகொள்வதில்லை. சில குழந்தைகள் 10 என்று எழுத கற்பித்தால் அவர்கள் 01 என்று எழுதுவார்கள். இத்தகைய குழந்தைகளுக்கு இன்னும் இடைவெளி தர்க்கச் சிந்தனை முற்றிலும் வளர்ச்சி பெறவில்லை என்று கருதலாம்.

### (ii) காரண காரிய தர்க்கச் சிந்தனை

வினைக்கும் பயனுக்கும் இடையேயுள்ள காரண காரிய தொடர்பை சிறு குழந்தைகள் அறிந்திருந்தாலும் இரண்டு ஆண்டுகள் வரை இந்த தர்க்க முறை சிந்தனை வளர்ச்சி பெறவில்லை. காரண காரிய தொடர்பு இருக்கிறதோ இல்லையோ அவர்கள் ஒரே சமயத்தில் நடக்கும் இரு நிகழ்ச்சிகளைத் தொடர்புபடுத்திவிடுகின்றனர். ஒன்று நிகழ்ந்ததன் அடிப்படையில்தான் மற்றொன்றும் நிகழ்ந்தது என்று எண்ணுகின்றனர். எடுத்துக்காட்டாக, தன்னுடைய தவறான எண்ணத்தினால் தான் வீட்டில் உள்ள மற்றொரு குழந்தைக்கு உடல் நலம் கெட்டது என்று எண்ணுவர். இருப்பினும் குழந்தைகள் பற்பசை ஏன் வெண்மையாக இருக்கிறது? என்பதுபோல ஏன்? எதற்கு எனப் பல வினாக்களைத் தொடுப்பர். இது அவர்களின் காரண காரிய சிந்தனை வளர்சியைக் காட்டுகின்றது.

### (iii) அடையாளம் கண்டுகொள்ளுதலும் வகைபாடு செய்தலுமான தர்க்க சிந்தனை

மனிதர்களும் மற்றும் பொருள்களும் (எ.கா. வாகனங்கள்) வடிவத்திலும் அளவிலும் தோற்றத்திலும் மாறுபட்டாலும் எல்லாம் மனிதர்கள்தான் அல்லது பொருள்கள்தான் என்று பொருள்களையும் மனிதர்களையும் குழந்தைகள் தர்க்க முறையில் சிந்தித்து அடையாளம் கண்டுகொள்ளுகின்றனர். குழந்தைகள் மணல் பரப்பில் காணப்படும் கூழாங்கற்களில் இது குரங்கின் முகம் போன்று இருக்கின்றது அது குரங்கின் முகம் போன்று இல்லை என்று அடையாளம் கண்டுகொள்கின்றனர் அல்லது வகைப்படுத்துகின்றனர். இதற்கு தர்க்கச்சிந்தனை உதவுகின்றது.

ஆய்வாளர்கள் 3,4 வயது குழந்தைகள் அவர்களுக்குப் பழக்கமான பொருளாகிய மனிதர்கள், கல் பொம்மை போன்ற பொருள்களிடத்தில் உள்ள வேறுபாட்டைக் கேட்டனர். அதற்கு குழந்தைகள் மனிதர்கள் உயிருள்ளவர்கள், கல், பொம்மை உயிரற்றவை என்றனர். காரணம் கல்லும் பொம்மையும் இடம் பெயர்வதில்லை சில பொம்மைகள் இடம் பெயர்ந்தாலும் அவை தானாக இடம் பெயர்வதில்லை என்று கூறினர்.

நான்கு வயது குழந்தைகள் பொருள்களை இரண்டு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டு வகைப்படுத்த முடியும். எ.கா. வண்ணங்கள், வடிவங்கள். இத்திறமையைக் கொண்டு குழந்தைகள் தங்கள் சொந்த வாழ்க்கையில் பல சமயங்களில் நல்லது – கெட்டது, உயிருள்ளவை – உயிரற்றவை, உண்ணக்கூடியவை உண்ணக்கூடாதவை போன்ற வகைபாடுகளைச் செய்ய முடியும்.

### (iv) எண்ணியல் தர்க்கச் சிந்தனை

பள்ளிமுன் பருவத்தில் (3–6 ஆண்டுகள்) குழந்தைகள் எண்களைப்பற்றிய 5 விதிகளை ஓரளவு புரிந்துக்கொள்கின்றனர்.

1. ஒரு பொருளுக்கு ஓர் எண்ணைத் தொடர்பு படுத்துவது.
2. நிலையான எண்வரிசை 1,2,3,4,5 ......
3. எந்த பொருளிலிருந்து எண்ணத் தொடங்கினாலும் மொத்த எண்ணிக்கை சமம்.

4. பொருள்களின் மொத்த எண்ணிக்கை கடைசிப் பொருளின் எண்ணாகும்.

5. இந்த நான்கு விதிகளும் எந்தப் பொருளுக்கும் பொருந்தும்.

குழந்தைகள் முதலில் இந்த விதிகளைப் புரிந்துகொண்டு அதன் அடிப்படையில் எண்ணத் தொடங்குகின்றனர் என்று முன்பு ஆராய்ச்சியாளர்களால் நம்பப்பட்டது. ஆனால் தற்போது குழந்தைகள் எண்ணக் கற்றுக்கொண்ட பின்னரே இந்த விதிகளைப் புரிந்துக்கொள்கின்றனர் என்று கண்டுபிடிக்கப் பட்டுள்ளது.

மூன்றரை வயது குழந்தைகளை கொடுக்கப்பட்டப் பொருள்களை (9 எண்ணிக்கைக்குள்) எண்ணி மொத்த எண்ணிக்கையைக் கூறுங்கள் என்று கேட்டுக்கொண்டபோது அவர்களால் எல்லாப் பொருள்களையும் எண்ண முடிந்தது. ஆனால் அங்கு எத்தனை பொருள்கள் இருக்கின்றன என்று மொத்த எண்ணிக்கையை கூற இயலவில்லை. அதாவது குழந்தைகள் எண்ணல் விதியைப் புரிந்துகொள்ளவில்லை அல்லது அதை புரிந்து கொள்வதில் அவர்களுக்கு சிரமம் இருக்கின்றது என்று தெரிகின்றது.

ஐந்து வயதில் குழந்தைகள் இருபது மற்றும் அதற்கு மேலும் எண்ண முடிகின்றது. ஒன்று முதல் பத்து வரை எண்களின் அளவை அதாவது பெரியது, சிறியது எனத் தெரிந்துகொள்ள முடிகின்றது. 4,5 ஆண்டுகளில் ஒரு மிட்டாய் வைத்திருந்த குழந்தைக்கு இன்னொன்று கொடுத்தால் தான் இப்போது அதிகம் வைத்திருக்கிறோம் என்று நினைக்கின்றது. அதில் ஒன்றை மற்றொரு குழந்தைக்குக் கொடுத்து விட்டால் இப்போது குறைந்துவிடுகின்றது என்றும் நினைக்கின்றது. 4,5 வயதுகளில் குழந்தைகள் 9 வரை பொருள்களை ஒப்பீடு செய்து பெரியது, சிறியது என கூறமுடியும். எண்வரிசை அறியும் திறமை எல்லா குழந்தைகளுக்கும் பொதுவானது ஆனால் அது குழந்தையின் குடும்பச் சூழ்நிலை, பெற்றோர் மற்றும் ஆசிரியர் தரும் பயிற்சிகள் (மழலையர் கல்வி), தொலைக்காட்சி ஆகியவற்றின் தாக்கத்தைப் பொறுத்து வெவ்வேறு வீதங்களின் வளர்ச்சி அடைகின்றது.

பள்ளியில் பாடங்களைக் குழந்தைகள் தர்க்கமுறையில் சிந்தித்து கற்றுக்கொள்ளும்போது அவர்கள் தாங்களாகவே செயல்பட்டுக் கற்கின்றனர். அதனால் அவர்கள் எளிதாக கற்கமுடியும். அவ்வாறு கற்றப் பாடம் மனதில் நிலைத்து நிற்கும். எப்போது தேவையோ அப்போது அவர்களுக்கு அது பயன்படும். குழந்தைகளிடம் தர்க்கச் சிந்தனையை வளர்க்க விரும்பும் ஆசிரியர்களும் ''அதுபோல'', ''அதுமாதிரி'' என்னும் சொற்களைத் தங்கள் வகுப்பறை கற்பித்தலில் பயன்படுத்த தேவையான சூழ்நிலைகளை உருவாக்க வேண்டும். பொருள்களை ஒப்பிடுதல், உவமைகள், புதிய பாடங்களை முன்னறிவோடு இணைத்தல் போன்ற சூழ்நிலைகளில் இச்சொற்களைப் பயன்படுத்த அதிக வாய்ப்புகள் உள்ளன. எடுத்துக்காட்டாக பால்விற்பவரைப் பால்காரர் என்கிறோம். அதுபோல மிட்டாய் விற்பவரை மிட்டாய்காரர் என்கிறோம். நேற்று இரண்டு இலக்க எண்களில் கூட்டல் கணக்குகளைச் செய்தீர்கள் அதுபோலவே இன்று மூன்று இலக்க என்களில் கூட்டல் கணக்குகளைச் செய்யுங்கள் என்று கூறலாம்.

ஆகவே குழந்தைகள் தொடக்கப்பள்ளிக்கு வரும்போது அவர்களின் குறியீட்டுச் சிந்தனையும் தர்க்க முறை சிந்தனைவளர்ச்சி தொடங்கப் பெற்று இருந்தாலும் அவை முழுமையாக வளர்ச்சி அடைந்திருக்கவில்லை என்பது தெரிகின்றது. அதாவது குழந்தைகள் வளர்ந்தவர்களைப் போல சிந்திக்கவில்லை. குழந்தைகளில் சிந்தனையில் சில குறைபடுகள் இருக்கின்றன. அதற்கு காரணம் குழந்தைகள் அறிதல் திறன் வளர்ச்சியில் முழுமையடையவில்லை. இனி குழந்தைகளின் அறிதல் திறன் வளர்ச்சியைப் பற்றி காண்போம்.

# 5. அறிதல் திறன் வளர்ச்சி

ஆசிரிய மாணவர்களே நீங்கள் இன்று வளர்ந்தவர்களாக இருக்கின்றீர்கள். வகுப்பில் ஆசிரியர் சொல்வதை உங்களால் புரிந்துகொள்ள முடிகின்றது; அதைப்பற்றிச் சிந்திக்க முடிகின்றது; எது சரி எது தவறு என முடிவு செய்ய முடிகின்றது; அதை மனதில் இருத்தித் தேர்வில் விரிவாக்கி அல்லது சுருக்கி விடைகளை எழுத முடிகின்றது. இத்தகைய மனத்திறன்களெல்லாம் உங்களிடத்தில் எவ்வாறு வளர்ச்சியடைந்தது என்று உங்களுக்குத் தெரியுமா? உங்களிடம் கல்வி பயில வரும் குழந்தைகளிடம் உங்களிடம் உள்ள இத்தகைய மனத்திறன்கள் உள்ளனவா? குழந்தைகளிடத்தில் இத்தகைய மனத்திறன்கள் எவ்வாறு வளர்ச்சியடைகின்றன என்று இப்பாடப் பகுதியில் காண்போம்.

தன்னையும் சுற்றுப்புறச் சூழ்நிலையையும் புரிந்துகொள்ளும் மனத்திறனை அறிதல் திறன் (Cognitive ability) என்கிறோம். அறிதல் திறனில் சிந்தித்தல், நினைவுகூர்தல், மொழியைப் பயன்படுத்துதல், படைப்பாற்றல், நுண்ணறிவு, புரிந்துகொள்ளுதல், பிரச்சனையைத் தீர்த்தல், முடிவு செய்தல் போன்ற பல திறன்கள் அடங்கியுள்ளன. இத்திறன்களின் வளர்ச்சியையே அறிதல் திறன் வளர்ச்சி என்கிறோம். அறிதல் திறன் வளர்ச்சி சிசுப் பருவத்திலிருந்து ஒரு திட்டமிட்ட வரிசைக் கிரமமான படி நிலைகளில் நடைபெறுகின்றது. இந்தப்படி நிலைகள் முன்பின்னாக மாறாமல் அல்லது மறையாமல் எல்லாக் குழந்தைகளுக்கும் ஒரு வரிசைக்கிரமப்படியே நடைபெறுகின்றன. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் அதற்கு முன் உள்ள படி நிலையைவிட தரத்தில் முன்னேற்றமான வளர்ச்சி தோன்றுகிறது. அறிதல் திறன் வளர்ச்சி பின்வரும் நான்கு படி நிலைகளில் நடைபெறுகின்றது என்று பியாஜே என்னும் உளவியலறிஞர் கருதுகின்றார்.

1. புலன் இயக்கப் பருவம் (Sensory motor stage: 0–2 ஆண்டுகள்)
2. மனச் செயல்பாட்டுக்கு முந்தைய பருவம் (Preoperational stage : 2–7 ஆண்டுகள்)
3. கண்கூடாகப் பார்ப்பதைக் கொண்டு சிந்திக்கும் பருவம் (Concrete Operational stage : 7 – 12 ஆண்டுகள்)
4. முறையான மனச்செயல்பாட்டு பருவம் (Formal Operational stage : 12 ஆண்டுகளுக்கு மேல்)

### (i) புலன் இயக்கப் பருவம் (0–2 ஆண்டுகள்)

அறிதல் திறன் வளர்ச்சியில் குழந்தை பிறந்தது முதல் இரண்டு ஆண்டுகள் வரை உள்ள பருவம் புலன் இயக்கப் பருவம் எனப்படும். ஆரம்ப நாட்களில் குழந்தையின் செயல்கள் பார்த்தல், கேட்டல் என்ற புலன் உணர்வுகளுடன் பால் குடித்தல், உறங்குதல், அழுதல், பொருள்களைப் பிடுங்குதல் போன்ற இயக்கங்களுடன் நின்றுவிடுகின்றது. இவையாவும் மறிவினைச் செயல்களாக உள்ளன. நாளடைவில் நரம்பு மண்டலம் வளர வளர குழந்தை புலன் உணர்வுகளையும், உடல் இயக்கங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம் உலகத்தைப் பற்றி புரிந்துகொள்கிறது. அதனால் இப்பருவத்தினை புலன் இயக்கப் பருவம் என்றார் பியாஜே.

இப்பருவத்தின் தொடக்கத்தில் அதாவது பிறந்து நான்கு மாதங்கள் வரை குழந்தைகள் பொருளின் நிலைப்புத்தன்மையை (Object Permanence) உணர்வதில்லை. ஒரு பொருள் கண்முன் இல்லையென்றாலும் அப்பொருள் எங்கோ ஓர் இடத்தில் இருக்கின்றது என்று உணர்ந்து கொள்ளுதல் பொருளின் நிலைப்புத்தன்மையை உணர்தல் ஆகும். ஆனால் நான்கு மாதக் குழந்தைகளிடத்தில் ஒரு பொம்மையைக் காட்டி, பின்னர் அதனை ஒரு தலையணையின் கீழ் மறைத்துவிட்டால் குழந்தை அந்தப் பொம்மையைத் தேட முயற்சிப்பதில்லை காரணம் பொம்மை தலையணையின் கீழ் உள்ளது என்று குழந்தை உணர்ந்து கொள்ள முடிவதில்லை.

நாளடைவில் பாதியளவு மறைக்கப்பட்ட பொம்மையை அல்லது பொருள்களைக் குழந்தை பார்க்கும்போதும் பொருள்கள் ஒரு சமயம் கண் முன் தோன்றி பின்னர் மறைந்து, மீண்டும் தோன்றும் அனுபவத்தைப் பெறும்போதும் அப்பொருள் இப்போது கண்முன் இல்லையென்றாலும் எங்கோ இருக்கின்றது பின்னர் வரும் என்று குழந்தை கருதுகிறது. அப்போது அந்தப் பொருளின் உருவம் குழந்தையின் மனதில் தோன்றுகிறது. இதுவே குழந்தையின் அறிதல் திறனின் முதல் வளர்ச்சி ஆகும். இதற்கான அறிகுறி 4–8 மாதங்களில் முதன்முதல் தோன்றுகிறது. இவ்வளர்ச்சி ஒரே இரவில் நடந்துவிடுவதில்லை. மிகவும் மெதுவாக நாளுக்குநாள் பல பரிசோதனைகளின் அடிப்படையில் நடைபெறுகின்றது. ஏறக்குறைய 18 மாதங்கள் ஆன பின்பு குழந்தை பொருளின் நிலைப்புத் தன்மையை முற்றிலும் உணர்ந்து கொள்கிறது. இவ்வாறு பொருளின் நிலைப்புத் தன்மையை உணர்தலும், பொருளின் உருவம் மனதில் தோன்றுதலும் புலன் இயக்கப் பருவத்தின் முக்கிய வளர்ச்சியாகும்.

உற்றுநோக்கல் படிவத்தில் ஆசிரிய மாணவர்கள் கொண்டு வந்த தகவல்களை வயது வாரியாக எத்தனை குழந்தைகள் மணிச் சோதனைப் பொறுத்தவரையில் முதல் வினாவிற்கு ஆம் என்று பதில் அளித்தார்கள்? எத்தனை பேர் இல்லை என்று பதில் அளித்தார்கள்? எத்தனை பேர் குவியல் அதிகம் என்றனர்? எத்தனை பேர் வரிசை அதிகம் என்றனர்? இதே போல களிமண் சோதனையைப் பொறுத்த வரை முதல் வினாவிற்கு எத்தனை பேர் ஆம் என்று பதில் அளித்தனர்? எத்தனை பேர் உருண்டை அதிகம் என்றனர்? எத்தனை பேர் உருளை அதிகம் என்றனர்? என்பன போன்ற வினாக்களுக்கு விடை கண்டுபிடித்து பதிவேடு தயாரிக்கவேண்டும். அதில் கிடைத்த முடிவுகளை பற்றிய கலந்துரையாடலுக்குப் பின் இப்பாடப்பகுதியைத் தொடங்க வேண்டும்.

### (ii) மனச்செயல்பாட்டுக்கு முந்தைய பருவம் : (2–7 ஆண்டுகள்)

இப்பருவத்தில் குழந்தைகள் மன உருவங்களை பயன்படுத்துவதில் படிப்படியாக முன்னேறுகின்றனர். அதே சமயத்தில் குழந்தையின் மொழியும் வளர்ச்சி அடைகின்றது. இதனால் குழந்தை இந்த உலகை வார்த்தைகள் மூலம் வருணிக்கத் தொடங்குகிறது. இந்த வார்த்தைகளையும் மனஉருவங்களையும் பயன்படுத்தும் திறன் வளர்ச்சி அடைந்த குறியீட்டுச் சிந்தனையை பிரதிபலிப்பதோடு புலன் உணர்ச்சிகளுக்கும், செயல்களுக்கும் அப்பாற்பட்ட தொடர்புகளையும் பிரதிபலிக்கின்றது.

மனஉருவங்களைக் கொண்டு சிந்தனைகளைத் தொடர்ந்தாலும் இப்பருவத்தில் குழந்தையின் அறிதல் திறன் முழுவளர்ச்சி அடைவதில்லை. இப்பருவத்தில் குழந்தைகளின் சிந்தனைகளில் சில குறைபாடுகள் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக குழந்தைகளுக்குப் பொருள்களின் மாறாத்தன்மை (Conservation) புரிவதில்லை. பொருள்களின் மாறாத்தன்மை புரியாத நிலை என்பது பொருள்களின் வடிவமும் தோற்றமும் வேறுபட்டாலும் அளவில் மாறுவதில்லை என்பதை அறிந்துகொள்ள இயலாத நிலை. இதற்கு காரணம் குழந்தைகளின் சிந்தனையில் காணப்படும் ஒரே ஒரு கூறில் மட்டும் கவனம் செலுத்தும் தன்மை (Concentration), நடந்து முடிந்த ஓர் நிகழ்ச்சியை மனத்தளவில் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டுவர இயலாத தன்மை (Irreversibility), தன்னை மையமாக்கி சிந்திக்கும் தன்மை (Egocentrism), உயிரற்ற பொருள்களையும் உயிருள்ளவைகளாக பாவிக்கும் தன்மை (animism) ஆகும்.

ஒரே ஒரு கூறில் மட்டும் கவனம் செலுத்தும் தன்மை (Centration), என்பது குழந்தைகள் ஒரு பிரச்சனையின் ஒரே ஒரு கூறில் மட்டும் கவனம் செலுத்தி மற்ற முக்கிய கூறுகளைப் புறக்கணிக்கும் பண்பாகும். ஒரு பரிசோதனையில் பியாஜே ஒத்த கண்ணாடி குவளைகள் இரண்டினை எடுத்துக்கொண்டு அவற்றில் சம அளவு நீரை நிரப்பினார். குழந்தைகள் அவற்றில் உள்ள நீர் இரண்டும் சம அளவு உடையது என்று ஏற்றுக்கொண்டனர். பின்னர் ஒரு குவளையில் இருந்த நீரை குறுகிய ஆனால் உயரமான குவளையில் ஊற்றினார். இப்போது உள்ள இரண்டு குவளைகளிலும் சமமான நீர் உள்ளனவா என்று கேட்டார். இந்தச்

சூழ்நிலையில் மனச்செயல்பாட்டுக்கு முந்தையபருவத்தில் (Preoperational stage) உள்ள குழந்தைகள் பெரும்பாலானவர்கள் இல்லை என்று பதில் அளித்தனர். குறுகிய–உயரமான குவளையில் உள்ள நீர் அதிகமானது என்றனர். அக்குழந்தைகள் குறுகிய – உயரமான குவளையின் குறுக்குவெட்டுப் பரப்பை புறக்கணித்து உயரத்தில் மட்டும் கவனம் செலுத்தி அக்குவளையில்தான் அதிக நீர் உள்ளது என்று வலியுறுத்தினர். இதிலிருந்து குழந்தைகள் ஒரு சமயத்தில் உயரம், அகலம், எண்ணிக்கை, வண்ணம் போன்ற ஏதேனும் ஒரேஒரு தன்மையை மட்டும் கவனிக்கின்றனர் என்று தெரிகிறது.

பொருளின் எந்தத் தன்மையைக் குழந்தை பிராதானமாகப் பார்க்கின்றதோ அது குழந்தையின் கவன மையமாக மாறிவிடுகின்றது. இப்பரிசோதனையில் குழந்தைகள் குவளையின் உயரத்தில் மட்டும் கவனம் செலுத்தினார்கள். ஆனால் அக்குவளையின் குறுக்குவெட்டுப் பரப்பைப் புறக்கணித்தார்கள். இவ்வாறு இப்பருவத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஒரு பிரச்சனையின் ஒன்றிற்கு மேற்பட்ட கூறுகளில் கருத்தைச் செலுத்தி சிந்திக்க இயலவில்லை.

குழந்தைகள் இப்பருவத்தில் நடந்து முடிந்த ஒரு செயலை மனத்தளவில் மீண்டும் பழைய நிலைக்கு கொண்டு வர இயலாத நிலையில் (Irreversibility) உள்ளனர். குவளைகள் பரிசோதனையில் அகன்ற குவளையிலிருந்து நீரை குறுகிய – நீண்ட குவளைக்கு மாற்றும் செயலை மனத்தளவில் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வந்தால் அதாவது குறுகிய – உயரமான குவளையில் உள்ள நீரை திரும்பவும் அகன்ற குவளையில் ஊற்றினால் என்ன ஆகும் என்பதைச் சிந்திக்க முடியவில்லை.

மேலும் இவர்கள் உலகம் தன்னை மையமாகக் கொண்டே இயங்குகிறது என்று நினைக்கின்றனர். அதனால் இவ்வுலகை தனக்கே உரிய முறையில் பார்க்கின்றனர். எடுத்துக்காட்டாக தன்னுடைய அம்மா மற்ற அனைவருக்குமே அம்மாதான் என நினைக்கின்றனர். இப்பருவத்தில் உள்ள குழந்தைகள் ஒரு நிகழ்ச்சியை வேறு ஒருவரின் பார்வையிலிருந்து காணும் திறமையற்றவர்களாய் தன் பார்வையில் இருந்து மட்டுமே பார்க்கக் கூடியவர்களாய் (Egocentrism) உள்ளனர்.

எடுத்துக்காட்டாக 4 வயதுள்ள ஒரு பெண் குழந்தையை உனக்கு ஒரு சகோதரி உண்டா என்ற கேள்விக்கு ஆம் என்று பதில் அளிப்பதாகக் கொள்வோம். பின்னர் அக்குழந்தையிடம் உன் சகோதரிக்கு ஒரு சகோதரி உண்டா என்றால் இல்லை என்று பதில் அளிக்கும் அக்குழந்தை தன்னுடைய சகோதரியின் பார்வையிலிருந்து தன்னைப் பார்க்க இயலவில்லை என்பதை இது காட்டுகிறது. உண்மையில் குழந்தைகள் ஒரு பிரச்சனையைத் தாங்கள் பார்க்கும் விதத்தைவிட வேறுபல விதங்களும் உண்டு என்பதை கண்டுபிடிக்கத் தவறுகிறார்கள்.

எல்லாப் பொருள்களும் தங்களைப்போலவே உயிருள்ளவை என்று குழந்தைகள் நம்புகின்றனர் (ani-mism) . குழந்தைகள் உயிரற்றப் பொருள் மீது உயிருள்ள பொருளின் குணங்களை ஏற்றி சிந்திக்கிறார்கள். இவர்கள் கடலே பொங்காதே, நில்! நில்! என்றும், அம்மா இந்த மேசை என்னை அடித்துவிட்டது. அதனை அடி என்றும் பேசுவார்கள். அம்மாவும் ஏன் என் குழந்தையை அடித்தாய் என்று மேசையை கோலால் தட்டுவார் அல்லது கையால் அடிப்பார்.

இப்பருவத்தில் அறிதல் திறனில் ஓரளவு மன உருவங்களைப் பயன்படுத்தும் திறன் வளர்ந்திருந்தும் அது முழுமையாக வளர்ச்சி அடையாமல் ஆனால் வளர்ச்சி நோக்கிச் செல்வதால் பியாஜே இதனை மனச்செயல்பாட்டுக்கு முந்தைய பருவம் (Preoperational stage) எனப் பெயரிட்டார். இத்தனை குறைபாடுகள் காணப்பட்டாலும் இப்பருவத்தின் முடிவில் அதாவது 7 ஆண்டுகளில் இக்குறைபாடுகள் மறைந்து விடுகின்றன. கண்கூடாகப் பார்ப்பதைக் கொண்டு சிந்திக்கும் சிந்தனையும் (Concrete Operational Thinking) முறையான மனச்செயல்பாடு (Formal Operational Thinking) உள்ளார்ந்த மாற்றங்கள், மன

உருவங்களைக் கையாளுதல், மன அமைப்புகளை மாற்றியமைத்தல் ஆகிய மேம்பட்ட மனச்செயல்பாடுகளும் அடுத்து வரும் பருவங்களில் தோன்றுகின்றன.

முதல் வகுப்பில் தொடக்கக் கல்வியைத் தொடங்கும் குழந்தை இன்னும் மனசெயல்பாட்டிற்கு முந்திய பருவத்திலேயே இருப்பதால் அவர்களின் அறிதல் திறன் முழுமையாக வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. அதனால் பெரிய சாலையில் பள்ளிகள் இருந்தால் அங்கு வாகன ஓட்டுநருக்கு பள்ளி உள்ள இடம் என்பதைக் காட்ட சாலைக் குறியீடு நிறுத்தப்பட்டிருக்கும். சில வகை பொம்மைகளில் குழந்தைகளுக்கான எச்சரிக்கை எழுதப்பட்டிருக்கும். எனவே அவர்களை வளர்ந்தவர்களைப் போல பாவிக்காமல் சிறுகுழந்தைகளாக அவர்களை மதிக்கவும் வேண்டும். இத்தகைய குழந்தைகள் செய்யும் பல தவறுகளுக்குக் காரணம் அவர்களுடைய அறியாமையே என்று இப்போது உணர்ந்திருப்பீர்கள். எடுத்துக்காட்டாக முதல் அல்லது இரண்டாம் வகுப்பில் சற்று உயரமான மாணவன் முன் இருக்கையில் அமர்ந்துக்கொண்டு பின்னால் உள்ள குழந்தைகளுக்குக் கரும்பலகையை மறைப்பான். மற்ற குழந்தையின் விளையாட்டுப் பொருளை தான் பிடுங்கி வைத்துக் கொள்வான். அத்தகைய குழந்தைகள் இன்னும் ஒரு நிகழ்ச்சியைத் தன் பார்வையிலிருந்து மட்டும் பார்க்கும். ஆனால் வேறு ஒருவரின் பார்வையிலிருந்து காணும் திறமையற்ற நிலையிலேயே இருக்கின்றனர். எனவே அத்தகைய குழந்தைகளுக்கு அவர்களது செயலால் ஏற்படும் விளைவுகளை பொறுமையாக எடுத்துக் கூறி, விளைவுகளை உணரச்செய்து அறிதல் திறன் வளர்ச்சிக்கு உதவுவது ஆசிரியர்களின் கடமையாகும்.

நரம்பு மண்டலத்தின் முதிர்ச்சி மற்றும் குழந்தை சூழ்நிலையோடு கொள்ளும் பொருத்தப்பாடு ஆகிய இரண்டும் இணைந்து செயலாற்றுவதன் மூலம் பொருள்களின் மாறாத்தன்மை (Conservation) போன்ற அறிதல் திறன் வளர்ச்சி பெறுகின்றது. இவ்வாறு அறிதல் திறன் வளர்ச்சி இயற்கையான வளர்ச்சி என்றாலும் தொடக்கப்பள்ளிக்கு வரும்போது குழந்தைகளின் அறிதல் திறனில் ஓரளவு வளர்ச்சி அடைந்திருந்தாலும் தேவையான பயிற்சி அளித்து அந்த வளர்ச்சியை தூண்டுபவரும் செம்மைபடுத்துபவரும் ஆசிரியரே. அதனால் அறிவுக் கண்ணைத் திறப்பவன் ஆசான் என்னும் முதுமொழி எவ்வளவு பொருத்தமுடையதாக இருக்கின்றது என்று பாருங்கள்.

ஆசிரியர்கள் விளையாட்டு, செய்து கற்றல், நடிப்பிசைப்பாட்டு, கதை போன்ற சூழ்நிலைகளை உருவாக்கிக் கற்பித்தால் கற்றலானது குழந்தைகளுக்கு எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். மேலும் அது குழந்தையின் அறிதல் திறன் வளர்ச்சிக்கும் உதவும். கணித பாடத்தில் மிகுதயாக குறியீடுகளும் கருத்தியல்களும் பயன்படுத்தப்படுவதாலும், ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகள் கருத்தியல் சிந்தனையில் வளர்ச்சி அடையாமல் இருப்பதாலும் ஆசிரியர் கணித பாடத்தினை பொருள்களைக் கொண்டு கற்பிக்க வேண்டும். எடுத்துக்காட்டாக 2+3 = 5 என்று குறியீடுகளில் கரும்பலகையில் எழுதுவதைவிட 2 புத்தகங்களுடன் 3 புத்தகங்களைச் சேர்த்தால் மொத்தம் 5 புத்தகங்கள் என்றும் புத்தகங்கள் மற்றும் மாணவர்கள், மணிகள் போன்ற பல பொருள்களை வைத்து 2+3=5 என்று குறியீடுகளால் எழுதினால் குழந்தைகள் சிரமமில்லாமல் புரிந்துகொள்வார்கள். அறிவியல் கற்பிக்கும் ஆசிரியர் பொருத்தமான செய்து கற்கும் துணைக்கருவிகள் கொண்டு செயல்கள் மூலம் கற்பிக்க வேண்டும். சமூக அறிவியல் கற்பிக்கும்போது மாணவர்களைக்கொண்டு மாதிரி சமூதாய செயல்பாட்டிற்கும் நேரடி அனுபவங்களுக்கும் முக்கியத்துவம் அளிக்கவேண்டும். மொழிப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் கருத்துப் பொருள்களான இலக்கண விதிகளைக் கற்பிக்காமல் பயன்பாட்டு மொழியை (Spoken Language) பொருத்தமான வகுப்பறை சூழ்நிலைகளை உருவாக்குவதன் மூலம் கற்பிக்க வேண்டும். மனிதனை நாகரீக வளர்ச்சியின் உச்சிக்கு கொண்டு செல்ல மேம்பட்ட சிந்தனைக்குப் பெரிதும் துணைபுரிவது இப்பருவத்தில் குழந்தைகளிடம் ஏற்படும் மொழிவளர்ச்சி ஆகும்.

உற்று நோக்கல் படிவத்தில் ஆசிரிய மாணவர்கள் கொண்டுவந்து தகவல்களைக் கொண்டு ஆரம்பப்பள்ளியில் கல்வி பயில வரும் குழந்தைகளிடம் காணப்படும் தனித்தன்மை வாய்ந்த சொற்கள், குழந்தைகள் அவற்றைப் பயன்படுத்தும் வாக்கியங்கள், அவற்றோடு தொடர்புடைய குடும்பத்தின் சமூக பொருளாதாரப் பின்னணி ஆகியவற்றை பதிவேட்டில் பதிவு செய்ய வேண்டும். அதிலிருந்து பெறப்பட்ட முடிவுகளையொட்டி வகுப்பில் கலந்துரையாடல் செய்து அதன் அடிப்படையில் குழந்தையின் மொழி வளர்ச்சி என்ற இப்பாடப் பகுதியினைத் தொடங்க வேண்டும்.

## 6. குழந்தைகளின் மொழி வளர்ச்சி

பிறந்த குழந்தை உடல் வளர்ச்சி மற்றும் அறிதல் திறன் வளர்ச்சி அடைந்ததும் தனது முதலாவது பிறந்த நாளில் (10–14 மாதங்களில்) அடையாளம் காணக்கூடிய் தெளிவான உச்சரிப்புடன் கூடிய முதல் சொல்லைப் பேசுகின்றது. அம்மா, தாத்தா, அத்தை போன்ற சொற்கள் குழந்தையின் முதல் சொற்களாக இருக்கின்றன. எந்தச் சொல்லாக இருந்தாலும் அதனை ஒலிக்க அம்மா அல்லது மற்றவர்களைப் பின்பற்றுவதால் கற்றுக்கொள்கிறது. அம்மா என்ற சொல்லை ஒலிக்கக் கற்றுக்கொண்டதும் அதனை குழந்தை தன் மனதில் ஏற்படும் அம்மாவின் உருவத்துடன் தொடர்புப்படுத்திக் கொள்கிறது. அம்மா அல்லது காப்பாளருக்குப் பிறகு குழந்தை குடும்பத்தில் உள்ள மற்றவர்களிடமிருந்தும் பின்பற்றுவதன் மூலம் பல சொற்களைப் பேசக் கற்றுக்கொள்கிறது.

18 மாதங்கள் வரை குழந்தை ஒரு தனியான சொல்லைப் பேசி தம் கருத்தைத் தெரிவிக்கிறது. அம்மா எனக்கு பலூன் வேண்டும்; அம்மா இங்கே வா; அம்மா எங்கே போன்ற எல்லாவற்றிற்கும் குழந்தை அம்மா என்ற ஒரு சொல்லை மட்டும் பேசுகின்றது. நாமும் குறிப்பால் உணர்ந்து கொள்கிறோம். 18–24 மாதங்களில் குழந்தை சிறு வாக்கியங்களை பேசத் தொடங்குகிறது. முதலில் முக்கியமான இரு சொற்களைக் கொண்ட வாக்கியங்களைப் பேசுகிறது. அம்மாவிடம் தண்ணீர் வேண்டும் என்று கேட்பதற்கு அம்மா தண்ணீர் என்று நிறுத்திக்கொள்கிறது. குழந்தைகள் இவ்வாறு மொழி அமைப்பைப் புரிந்துகொண்டு இரண்டுக்கு மேற்பட்ட சொற்களை வாக்கியத்தில் அமைத்து தங்கள் இரண்டாவது பிறந்த நாளில் (20–30 மாதங்களில்) பேசுகின்றனர்.

அவர்கள் முன்மழலைப் பள்ளிக்குச் செல்லும்போது அம்மா, அப்பா, பொம்மை, பந்து போன்ற பெயர்ச் சொற்களையும், வா, போ, நட, உட்கார் போன்ற வினைச்சொற்களையும், உள்ளே, வெளியே, பெரியது, சிறியது, இனிப்பு, கசப்பு போன்று ஒரு பொருளுக்கும் மற்றொரு பொருளுக்கும் இடையே உள்ள தொடர்பைக் குறிக்கும் சொற்களையும் கற்றுக்கொண்டு தங்கள் சொற் களஞ்சியத்தைப் பெருக்கிக் கொள்கின்றனர். அப்போது அவர்கள், நீண்ட சிக்கலான வாக்கியங்களைப் பேச முடிகின்றது. 5,6 ஆண்டுகளில் தொடக்கப்பள்ளிக்குச் செல்லும்போது பல வழிகளிலும் வளர்ந்தவர்களைப்போல மொழி ஆட்சி செய்ய முடிகின்றது. இருந்தபோதிலும் குழந்தைகளின் மொழித் திறன் வளர்ச்சி பள்ளிப் பருவம் முழுவதும் வளர்ந்து முதிர்ச்சி பெறுகின்றது.

குழந்தைப் பருவத்தில் மொழி வளர்ச்சியைவிட வேறு எந்த மாற்றமும் வேகமாக நிகழ்வதில்லை. உடல் இயக்கங்கள் போலவும் புலக்காட்சியைப் போலவும் மொழி வளர்ச்சி உதடுகள், நாக்கு இவற்றின் அசைவுகளுக்கு காரணமான தசைகளின்மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் முதிர்ச்சி மற்றும் அனுபவம் ஆகியவற்றை சார்ந்து அமைகின்றது.

### குடும்பப் பின்னணியில் குழந்தையின் மொழி வளர்ச்சி

குழந்தைகள் பள்ளிக்கு ஓரளவு மொழி வளர்ச்சியைத் தங்கள் குடும்பப் பின்னணியிலிருந்து பெற்று வருகின்றனர். குழந்தையின் மொழியில் குடும்பத்தில் உள்ள மற்ற உறுப்பினர்கள் பேசும் மொழியின் தாக்கம்

இருக்கிறது. குடும்பப் பின்னணியை பொறுத்து குழந்தை பயன்படுத்தும் ஒலிப்பு முறை, வாக்கியத்தில் அழுத்தம் கொடுக்கும் இடம் ஆகியவற்றில் வேறுபடுகிறது. குடும்பப் பின்னணியில் பூவா, ஆம், மம்மு உணவைக் குறிக்கும் சொற்கள் என்னும் சொற்களைக் குழந்தை தன் தாயிடமிருந்து கற்றுக் கொள்கின்றது. இதனை குழந்தையின் தாயார் மொழி (Home Langauge) என்கிறோம். குழந்தைகள் பயன்படுத்தும் சொற்கள் குழந்தைகளின் வட்டார வழக்குகளுக்கு ஏற்றபடி மாறுபடுகிறது. மொழி வளர்ச்சியில் குழந்தைகள் தங்கள் வட்டாரங்களில் வழங்கப்படும் மொழியையே முதலில் கற்றுக் கொள்கின்றனர். அதனால் இந்த மொழியுடன் குழந்தைகள் பள்ளிக்கு வருகின்றனர். பள்ளிப் பருவத்தில் இது சிறிது சிறிதாக மறைந்து விடுகின்றது.

குடும்பத்தின் பொருளாதார நிலையைப் பொறுத்தும் குழந்தையின் மொழி வளர்ச்சி வேறுபடுகின்றது. எடுத்துக்காட்டாக பொருளாதாரத்தில் பின்தங்கிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளுக்கு குறைவான அனுபவங்களே இருப்பதால் அவர்களின் சொல்லாட்சி திறன் பொருளாதாரத்தில் முன்னேறிய குடும்பங்களில் இருந்து வரும் குழந்தைகளின் சொல்லாட்சி திறனைவிட குறைவாகவே இருக்கும்.

அதாவது பொருளாதாரத்தில் உயர்ந்த குடும்பத்தில் உள்ள குழந்தைகளுக்கு வகை வகையான பொம்மைகள், ஆடைகள், உணவு வகைகள், வெளி அனுபவங்கள் கிடைக்கின்றன. மேலும் வீட்டில் பலவகையான வீட்டு உபயோகப் பொருள்கள் உள்ளன. இவற்றைக் காணுவதால் குழந்தையின் சொற்களஞ்சியம் விரைவாக வளர்ச்சி அடைகின்றது.

## குழந்தையின் வட்டார மொழிவழக்கு

சில வட்டாரங்களில் இடது கை பக்கமாகச் செல் என்பதை பீச்சாங் கை பக்கமாகச் செல் என்றும் வேறு சில வட்டாரங்களில் ஒரட்டு கை பக்கமாக செல் என்றும் வழங்கப்படுகின்றது. சில இடங்களில் தவளையை தவக்களை என்றும் கூறுகின்றனர். இவ்வாறே சொற்களின் உச்சரிப்பிலும் வட்டார அளவில் வேறுபாடு காணப்படுகின்றது. பழம் என்பதை சில வட்டாரங்களில் பயம் என்றும் சில வட்டாரங்களில் பளம் என்றும் கூறுகின்றனர். ஆசிரியர்கள் தங்கள் வட்டாரத்தில் குழந்தைகளின் பேச்சுகளை உற்றுநோக்கி அவர்களின் தாயார் மொழியை அறிந்து அவற்றிற்கு இணையான தாய்மொழியினை சரியான தமிழ் சொற்களில் குழந்தைகளுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

## குழந்தையின் மொழி வளர்ச்சியில் தொலைக்காட்சியின் தாக்கம்

தற்காலத்தில் தொலைக்காட்சி பெட்டி ஒரு முதன்மையான தகவல் தொடர்பு சாதனமாக மாறிவிட்டது. சிறியவர் முதல் பெரியவர் வரை தொலைக்காட்சி பெட்டியின் முன் அமர்ந்து மணிக்கணக்கில் நிகழ்சிகளை பார்க்கத் தொடங்கிவிட்டனர். மொழி வளர்ச்சியில் வேகத்தை பெற்றிருக்கும் குழந்தை தொலைக்காட்சியில் பேசப்படும் மொழியை எளிதாக உள்வாங்கி கொள்கின்றது. மேலும் அதில் வரும் வண்ண வண்ண விளம்பரங்கள், வசனங்கள், பாடல்கள் ஆகியவற்றை ஆர்வத்துடன் உள்வாங்கிக் கொண்டு அதனைப் பேசிக்காட்டுகின்றது. இவ்வாறு குழந்தையின் மொழிவளர்ச்சிக்கு தொலைக்காட்சி உதவினாலும் தொலைக்காட்சியில் எந்த வகையான அல்லது எவ்வளவு சரியான மொழி அமைப்புகள் பேசப்படுகின்றன என்பது சிந்தனைக்குரியது.

## குழந்தையின் மொழியில் காணப்படும் குறைபாடுகள்

பேசும் மொழியில் சில சமயங்களில் குழந்தைகள் குறைபட பொதுமைப் படைத்தல், மிகைபட பொதுமைப்படைத்தல் என்னும் சில வகை பிழைகளை செய்கின்றனர்.

## குறைபடப் பொதுமைப் படைத்தல்

விலங்கு என்றால் என்ன? என்று ஆறு வயதுக் குழந்தையைக் கேட்டால் அதற்கு ஒரு தலையிருக்கும் வால் இருக்கும் கால், பாதம், கண் மூக்கு அடர்ந்த முடி கொண்டிருக்கும் என்று பதில் கூறுகிறது. இக்குழந்தை விலங்கு என்னும் பொதுமைக் கருத்தின் எல்லையை குறுகலாக்கி குதிரை, நாய் போன்ற பாலூட்டிகள் மட்டுமே விலங்குகள், மீன், பூச்சி போன்றவை பறவையினங்கள்; விலங்குகள் அல்ல என்று நினைத்து விடுகின்றனர். இவ்வாறு சொற்களுடன் இணையும் பொருளைக் குறுகலாக்கி அச்சொல் பயன்படும் பல சூழ்நிலைகளை விலக்கிவிடுகின்றனர். இதற்கு குறைபடப் பொதுமைப் படைத்தல் என்று பெயர்.

## மிகைபடப் பொதுமைப்படைத்தல்


சொல்லின் பொருளை மிகவும் பெரிதாக்கி அது பொருந்தாத இடங்களிலும் பயன்படுத்துமாறு செய்துவிடுகின்றனர். பூச்சிகளுக்கு சில உதாரணம் கொடு என்றால் கறுப்புச் சிலந்தியையும் பட்டியலில் சேர்த்து விடுகின்றனர். ஆனால் அது எட்டுக்கால்கள் உள்ள உயிரினம் எனவே அது பூச்சியினத்தைச் சேராது. இதற்கு மிகைபட பொதுமைப்படைத்தல் என்று பெயர். இவ்வாறே இலக்கண விதியின் பயன்பாட்டை மிகவும் பெரிதாக்கி அது பொருந்தாத இடத்திலும் பயன்படுத்துவர் எடுத்துக்காட்டாக அம்மாவுக்கு, அப்பாவுக்கு என்பது போலவே குழந்தைகள் எனக்கு என்பதை நானுக்கு என்று மிகைபட பொதுமை படைத்தல் பிழையைச் செய்வார்கள்.

நாளடைவில் குழந்தைகள் பெறும் அனுபவத்தின் வாயிலாகவும் பிறர் பேசுவதைக் கவனிக்கும்போதும், பெற்றோர்கள் சரியான மொழியைக் கற்பிக்கும்போதும் இக்குறைபாடுகள் நீங்கிவிடுகின்றன. இவ்வாறு குழந்தைகள் தொடக்கப் பள்ளிக்கு வரும்போது கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் என்னும் நான்கு மொழித்திறன்களுள் முதல் இரண்டு திறன்களில் ஓரளவு பயிற்சி பெற்று வருகின்றனர்.

இந்த அடித்தளத்தின் மீது நாம் பள்ளியில் மேலும் கேட்டல், பேசுதலில் பயிற்சியைத் தொடரவேண்டும். பின்னர் படித்தலிலும் எழுதுலிலும் பயிற்சியைத் தொடங்க வேண்டும்.

## மொழி வளர்ச்சிக்கும், அறிதல் திறன் வளர்ச்சிக்கும் இடையே உள்ள வேறுபாடு

பின் வரும் படம் குழந்தைகளின் மொழி வளர்ச்சிக்கும் அறிதல் திறன் வளர்ச்சிக்கும் இடையே உள்ள நெருங்கிய தொடர்பை விளக்குகிறது.




படத்திலிருந்து மொழி வளர்ச்சி, அறிதல் திறன் வளர்ச்சி ஆகிய இரண்டுமே உடல் முதிர்ச்சி மற்றும் சூழ்நிலைகள் என்னும் ஒரே அடித்தளத்திலேயே அமைந்துள்ளன. மொழி வளர்ச்சி, அறிதல் திறன் வளர்ச்சிக்குக் குறியீடுகளைத் தந்து உதவுகின்றது. அறிதல் திறன் வளர்ச்சி மொழியை வளர்க்கும் சூழ்நிலைகளை அறிந்துகொள்ள உதவுகின்றது. மொழி வளர்சசியடையும்போது (அதிகமான சொற்களுக்கு பொருள் விளங்கும்போது) அறிதல் திறன் வளர்ச்சிடையகின்றது (சிந்தனை விரிவடைகின்றது). அறிதல்

திறன் வளர்ச்சியடைவதால் இன்னும் எவ்வாறு எளிதாகவும், அதிகமாகவும் சொற்களுக்குப் பொருள் அறிந்து கொள்ளலாம்; புதிய புதிய வாக்கியங்களை உருவாக்கலாம் எனச் சிந்திப்பதால் மொழி வளர்ச்சியடைகின்றது.

## 7. குழந்தைகளின் அறிதல் திறன் வளர்ச்சியில் குடும்பச்சூழல் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் மனப்பான்மையின் தாக்கம்

குடும்பத்தின் பொருளாதாரச் சூழ்நிலை குழந்தைகளின் அறிதல் திறன் வளர்ச்சியில் முக்கிய பங்குவகிக்கின்றது. உயர்ந்த பொருளாதாரப்ஒண பின்னணியில் இருக்கும் பெற்றோர்கள் சிறு குழந்தைகளுக்கு பல வகையான வண்ணங்கள், வடிவங்கள், செயல் பாடுகள் கொண்ட விளையாட்டுப் பொருள்களை வாங்கி கொடுக்க முடிகின்றது. அதனால் குழந்தைகள் பல வகையான விலங்குகள், பொருள்கள், வண்ணங்கள் வடிவங்கள் ஆகியவற்றின் பெயர்களை அறிந்து கொள்ள முடிகின்றது. இதனால் குழந்தைகளின் சொல்லாட்சி (Vocabulary) உயருகின்றது. மேலும் அவர்கள் அவ்விளையாட்டுப் பொருள்களுடன் பாவனை விளையாட்டுகளில் ஈடுபடும்போது குழந்தைகளின் சிந்தனை திறன் வளர்கின்றது. இதைப் போலவே வசதி படைத்த வீட்டில் உள்ள தொலைக்காட்சி, குளிர்சாதனம் போன்ற வசதிகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. மாறாக மிகவும் குறைவான பொருளாதாரப் பின்னணியில் இருக்கும் பெற்றோர்கள் குழந்தைகளுக்கு இவ்வசதிகளை செய்து தர இயலவில்லை. எனவே அக்குழந்தைகள் அறிதல் திறன் வளர்ச்சியில் பின்தங்கி காணப்படுகின்றனர்.

குழந்தையின் பெற்றோர்கள் உயர் கல்வி பெற்று உயர் பணியில் இருக்கும் போது அவர்கள் உரையாடும் சிக்கலான மொழியமைப்பு, வெளிப்படுத்தும் மனவெழுச்சிகள் ஆகியவற்றை குழந்தைகள் கவனித்து கற்றுக் கொள்ளும்போது அவர்களின் அறிதல் திறன் வேகமாக வளர்ச்சி அடைகின்றது.

குழந்தைகள் மீது குடும்ப உறுப்பினர்களின் மனப்பான்மையும் குழந்தைகளின் அறிதல் திறன் வளர்ச்சியை பாதிக்கின்றது. சில வீடுகளில் பெற்றோர்கள் அல்லது மற்றவர்கள் குழந்தைகளை வெளியுலகிற்கு அழைத்துச் சென்று அறிமுகப்படுத்த வேண்டும் என்னும் மனப்பான்மை கொண்டவர்களாக இருப்பார்கள் அவர்கள் குழந்தைகளைப் பூங்காக்கள், விளையாட்டு மைதானம், கடைத்தெரு, திருவிழாக்கள், திருமணங்கள், உறவினர் வீடுகள் போன்ற இடங்களுக்கு குழந்தைகளை அழைத்துச் சென்று அறிமுகப்படுத்துவர். இவ்வாறு வளரும் குழந்தைகள் பல்வேறுபட்ட காட்சிகளை காணும்போது அவர்களுக்குப் பரந்த அனுபவம் கிடைக்கிறது. அதனால் அவர்களின் மொழியும் சிந்தனையும் வளர்ச்சி அடைகின்றது. ஒட்டுமொத்தத்தில் அவர்களின் அறிதல் திறன் வளர்ச்சி அடைகின்றது.

இத்தகைய அனுபவங்கள் எல்லாக் குடும்பங்களில் உள்ள குழந்தைகளுக்கு கிடைப்பதில்லை. எனவே பள்ளிகளிலாவது ஆசிரியர் அத்தகைய அனுபவங்களை ஏற்படுத்திக் கொடுத்தால் குழந்தைகளின் அறிதல் திறன் வளர்ச்சிக்கு அது உதவும். வகுப்பறை கற்பித்தலின் போது பல வண்ணங்கள், வடிவங்கள் செயல் பாடுகள் கொண்ட பொம்மைகளை குழந்தைகளுக்கு அளிக்கவேண்டும். இம்முறையில் கற்றல்–கற்பித்தல் துணைக்கருவிகளும் அமைய வேண்டும். குழந்தைகளுக்கு வெளியுலக அனுபவங்களை ஏற்படுத்த அவர்களைக் கல்விச் சுற்றுலா, களப்பயணம், விலங்கு காட்சி சாலை போன்ற இடங்களுக்கு அழைத்துச் சென்று வரவேண்டும்.

# 8. தன்னடையாளமும், மன நலமும்

அறிதல் திறன் வளர்ச்சியும் மொழி வளர்ச்சியும் குழந்தை இந்த உலகினைப் புரிந்து கொள்ளவும், உலகத்தோடு இணைந்து செயல்படவும் தேவையான அடித்தளத்தை அமைக்கின்றன.

குழந்தை வளர வளர சிறிது சிறிதாக ஒரு அகன்ற உலகில் பிரவேசிக்கத் தொடங்கும்போது அந்த உலகத்தோடு தன்னையும் தொடர்புபடுத்துகின்றது. வெளியுலகிற்கும், தனக்கும் என்ன தொடர்பு இருக்கின்றது என்று உணரும்போது தான் – பிறர் தன்னுடையது – பிறருடையது என்னும் வேறுபாடுகள் தோன்றி இந்த உலகில் தான் யார் என்னும் கருத்து வளர்ச்சி அடைந்து தன்னடையாளம் தோன்றுகிறது. குழந்தை வெளியுலகத்திலிருந்து பிரித்து தன்னை அடையாளம் கண்டுகொள்வதை தன்னடையாளம் என்கிறோம்.

குழந்தை இவ்வுலகத்துடன் இடைவினை ஆற்றுதல் மற்றும் அதன் உள்ளத்து முதிர்ச்சியின் விளைவாக இவ்வுலகத்தை புரிந்து கொள்கின்றது. குழந்தை பலவேறு வளர்ச்சி நிலைகளில் பல்வேறு அனுபவங்களைப் பெறுவதன் மூலம் தன்னை தன்னடையாள உணர்வு குழந்தைப் பருவத்திலிருந்து வாழ்நாள் முழுவதும் பல பருவங்களில் பல மாற்றங்கள் அடைந்துகொண்டே இருக்கின்றது.

குழந்தை உலகத்தோடு இணைந்து செயலாற்றுவதால் ஏற்படும் தனது வளர்ச்சியில் ஒவ்வொரு நிலையிலும் தனக்கு ஏற்படும் சோதனைகளில் கிடைக்கும் வெற்றி, தோல்விகளைப் பொறுத்து தன்னடையாள உணர்வு ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் மாறுபடுகின்றது என்கிறார் எரிக்சன் என்னும் உளவியலார்.

மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் இந்த உலகத்துடன் இணைந்து செயலாற்றுவதால் ஏற்படும் அனைத்து வளர்ச்சியை 8 படி நிலைகளில் விவரிக்கின்றார் எரிக்சன். அவற்றுள் முதல் 3 படிநிலைகளை கடந்து 4ஆம் படி நிலையின்போது குழந்தைகள் தொடக்கப் பள்ளிக்கு வருகின்றனர். ஒவ்வொரு படிநிலையிலும் குழந்தைகளிடத்தில் தன்னடையாள உணர்வு எவ்வாறு உருவாகின்றது என்று காண்போம்.

## நம்பிக்கையும், அவநம்பிக்கையும் (முதல் ஆண்டு)

பிறந்த குழந்தை உணவு, உடை. பாதுகாப்பு போன்ற மிக முக்கியமான தேவைகளுக்கு பெற்றோரைச் சார்ந்து இருக்கின்றது. பெற்றோர்கள் அன்பும், அரவணைப்பும் கொடுத்து இந்தத் தேவைகளை குழந்தை விரும்பும் முறையில் பூர்த்தி செய்வார்களானால் குழந்தை பெற்றோரிடம் பிணைப்பை ஏற்படுத்திக்கொள்கிறது. இதனால் குழந்தை வெளியுலகில் பிறர் மீதும் நம்பிக்கை, நல்லெண்ணம் கொள்கிறது. மாறாகப் பெற்றோர்கள் இத்தேவைகளைக் குழந்தைக்கு சரிவர பூர்த்தி செய்யவில்லை என்றால் குழந்தை இந்த உலகின் மீது அவநம்பிக்கை கொள்கிறது. இந்தப் படிநிலையில் குழந்தை இவ்வுலகில் தான் பெறும் அனுபவத்திலிருந்து தான் ஒரு நம்பத்தகுந்த உலகில் இருக்கின்றேனா அல்லது நம்பத்தகாத உலகில் இருக்கின்றேனா என்பதில் ஏதேனும் ஒரு தன்னடையாள உணர்வினைப் பெறுகின்றது. தான் ஒரு நம்பத்தகுந்த உலகில் இருக்கிறேன் என்னும் தன்னடையள உணர்வினைப் பெறும் குழந்தை மகிழ்ச்சியாகவும் மனநலத்துடனும் இருக்கின்றது.

## சுதந்திரமும் அவமானம் மற்றும் சந்தேகமும் (2,3 ஆண்டுகள்)

குழந்தை சற்று வளர்ந்ததும் பெற்றோர்கள் அதற்கு குளிக்க பல் துலக்க, ஆடை அணிய, காலைக்கடன் கழிக்கப் பயிற்சி அளிக்கின்றனர். நாளடைவில் குழந்தை தானே இவற்றைச் செய்யத் தொடங்குகிறது. பெற்றோர்களும் அம்முயற்சியை ஊக்கப்படுத்துகின்றனர். இம்முயற்சியில் குழந்தை வெற்றி பெறுகின்றது. அப்போது குழந்தைக்குத் தன் வேலையைத் தானே செய்து கொள்ளும் சுதந்திர

உணர்வு கிடைக்கிறது. ஆனால் குழந்தைக்கு இப்பயிற்சியினை மிகவும் முன்னதாகத் தொடங்கிவிட்டால் அல்லது பெற்றோர்களிடம் இருந்து ஊக்கம் கிடைக்காவிட்டால் குழந்தை மனம் முறிந்து தோல்வி அடைகின்றது. அப்போது மற்றவர்களின் ஏளனத்திற்கு ஆளாகிறோம் என்று எண்ணும்போது குழந்தை அவமானமும் தன் சொந்த திறமையில் சந்தேகமும், அடைகிறது.

## தானே தொடங்கும் திறமும், குற்ற உணர்வும் (4 - 6 ஆண்டுகள்)

குழந்தை ஓரளவு வளர்ச்சி அடைந்ததும் ஒரு வேலையைத் தானே குழந்தை தொடங்கி செய்ய முயற்சி செய்கிறது. குழந்தைகளின் இந்த முயற்சிக்கு பெற்றோர்கள் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் – குழந்தையின் சுதந்திர உணர்வுக்கு ஊக்கம் கொடுக்கிறார்களா அல்லது ஏளனம் செய்கிறார்களா என்பதனைப் பொறுத்து குழந்தையின் தன் அடையாளம் உருவாகின்றது. குழந்தையின் சுதந்திர உணர்வை ஊக்கப்படுத்தும் போது அதனுடைய தன்னம்பிக்கை உயருகின்றது. அதனால் ஒரு வேலையைத் தொடங்கவும், தொடர்ந்து செய்யவும் முற்படுகிறது. ஏளனம் செய்யும்போது குழந்தை குற்ற உணர்வுகளால் பாதிக்கப்படுகின்றது.

## செயல் திறனும் தாழ்வுணர்வும் (6ஆண்டுகள் முதல் குமரப்பருவம் தொடங்கும் வரை)

குழந்தையின் உலகம் தன் வீட்டிலிருந்து அண்டை வீடு, தெரு, பள்ளி என்று விரிவடையும் போது உடல், உள்ள, சமூக திறமைகளைக் கொண்டு எந்த குழந்தை திறம்பட செயல்படுகிறதோ அக்குழந்தை பிறருக்கும் தனக்கும் பயனுள்ளதாகவும் (Productive) அதனால் மற்றவர்கள் மதிக்க தக்கதாகவும் வளர்கின்றது. தொடக்க வளர்ச்சி நிலைகளில் சூழ்நிலைகளை திறமையாக சமாளித்து இருந்தால் அக்குழந்தைக்கு தான் ஒரு செயல் திறன் மிக்க திறமைசாலி என்னும் உணர்வு கிடைக்கிறது. திறமையற்ற குழந்தைகள் தங்களால் வெற்றி பெற முடியவில்லையே என்று உணரும்போது அவர்கள் செயல்படுபவர்களாக இல்லாமல் பார்வையாளர்களாக மட்டும் இருந்துவிடுகின்றனர். அல்லது எப்பொழுதும் தோல்வியை தழுவுபவர்களாக இருந்துவிடுகின்றனர். இதனால் அவர்கள் தாழ்வு மனப்பான்மையை அடைந்துவிடுகின்றனர்.

இவற்றுள் ஒவ்வொரு பருவத்திலும் உடன்பாடான தன்னடையாள உணர்வைப் பெறும்போது குழந்தை நல்ல மனநலத்துடன் வளருகின்றது. எதிர்மறையான தன்னடையாள உணர்வைப் பெறும்போது குழந்தைக்கு மனநலக் குறைவு ஏற்படுகின்றது. குழந்தைகளுக்கு பிறர்மீது நம்பிக்கை ஏற்படும் வாய்ப்புகள் அமையும் போது அவர்கள் சுதந்திர உணர்வினைப் பெற்று தனது செயல் பாடுகளை தானே தொடங்கும் திறமையுடன் தொடங்கி தன் செயலில் வெற்றி பெறுகின்றனர் அதனால் குழந்தைகள் மகிழ்ச்சி அடைகின்றனர்; மனநிறைவு அடைகின்றனர். ஆனால் குழந்தைகள் பிறர்மீது அவநம்பிக்கை மற்றும் தன் மீது அவமானம், சந்தேகம், குற்றவுணர்வு ஆகிய அனுபவங்களுடன் வளரும்போது பள்ளியில் அவர்கள் தாழ்வு மன்பாண்மையுடன் ஆசிரியர் தரும் எந்த செயலிலும் ஈடுபடாமல் அமைதியாக தனிமையில் இருந்து விடுவர் இத்தகைய குழந்தைகளின் மனநலம் பாதிக்கப்படுகின்றது. அத்தகைய குழந்தைகளுக்கு தேவையான கவனம் செலுத்தி அக்குழந்தையை வெற்றி பெறும் குழந்தையாக மாற்ற வேண்டியது ஆசிரியரின் கடமையாகும்.

தொடக்கப் பள்ளிக்கு வரும் குழந்தை எந்த தன்னடையாள உணர்வுடனும் வரலாம். உடன்பாட்டு தன்னடையாள உணர்வைப் பெற்று நல்ல மன நலத்துடன் பள்ளிக்கு வரும் குழந்தைகளில் மனநலம் பாதிக்கப்படாமல் அதைப் பேணிக்காக்கவும் எதிர்மறை தன்னடையாளம் பெற்று மனநல குறைவுடன் வரும் குழந்தைகளுக்குப் பள்ளியில் நல்ல அனுபவங்களை ஏற்படுத்தி அவர்களிடம் உடன்பாடான தன்னடையாள உணர்வினை ஏற்படுத்தவும் ஆசிரியர்கள் அறிந்திருக்க வேண்டும். குழந்தைகளை பெயர் சொல்லி அழைத்தல், அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கெடுத்து கொள்ளுதல், அவர்கள் மீது அக்கறைக்

கொண்டு ஊக்கப்படுத்துதல், குழந்தைகளை அப்படியே ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு அன்பும், ஆதரவும், அரவணைப்பும் காட்டுதல் போன்ற செயல்கள் குழந்தைகளின் உடன்பாடான தன்னடையாள உணர்வுக்கும் நல்ல மனநலத்திற்கும் வழி வகுக்கும். இதனால் பள்ளிக்கு வரும் ஒவ்வொரு குழந்தையும் உடன்பாட்டு தன்னடையாள உணர்வைப் பெற்று நல்ல மனநலத்துடன் எதிர்காலத்தில் நல்ல குடிமகனாக வாழ்வர்.

## தொகுப்புரை

தொடக்கக் கல்வியின் ஆரம்பத்தில் குழந்தைகளிடம் காணப்படும் உடல் வளர்ச்சி மற்றும் அறிதல் திறன் வளர்ச்சி ஆகியவற்றைப் பற்றி இந்த அலகினில் கண்டோம்.

நரம்பு மண்டலமும், நாளமில்லாச் சுரப்பிகள் மண்டலமும் நன்கு செயல்படுவதால் குழந்தையின் உடல் உறுப்புகள் திட்டமிட்டபடி வளர்ச்சியடைகின்றன. குழந்தைகளின் உடல் வளர்ச்சியுடன் சிந்தனைத் திறனும் (குறியீட்டுச் சிந்தனை, தர்க்க சிந்தனை) வளர்ச்சியடைகின்றது. சிந்தனைத் திறன் வளர்ச்சியடைவதால் குழந்தைகளின் அறிதல் திறனும் வளர்ச்சியடைகின்றது. அறிதல் திறன், வளர்ச்சியடைவதால் அதன் ஒரு உட்கூறான மொழித் திறனும் வளர்ச்சியடைகின்றது. அறிதல் திறனும் மொழித் திறனும் தங்கள் வளர்ச்சிக்கு ஒன்றுக் கொன்று தத்தமது பங்களிப்பைக் கொடுத்துக் கொள்கின்றன. மொழித்திறன் வளர்ச்சியடைவதால் சமுதாயத்தில் பிறருடன் கூடிவாழ முடிகின்றது. கூடிவாழும் சமுதாயத்தில் தன்னைப் பிறருடன் ஒப்பிடும் போது தன்னைப் பற்றிய தன்னடையாள உணர்வு தோன்றுகின்றது. தன்னடையாளம் எதிர்மறையாக இருக்கும் போது குழந்தையின் மனநலம் பாதிக்கப்படுகின்றது. தன்னடையாள உணர்வு உடன்பாடாக இருக்கும்போது குழந்தைகள் நல்ல மனநலம் பெற்று மகிழ்ச்சியுடன் இருக்கின்றனர்.

உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சிக்கு ஆசிரிய மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லும் போது கற்கும் குழந்தை பாடத்திற்கான பரிசோதனை, செய்முறைப் பயற்சிகளுக்கு பின்வரும் தகவல்களையும் புள்ளி விவரங்களையும் தயாரிக்க வேண்டும்.

## அலகு – 1

## செய்முறைப்பயிற்சி –1

வகுப்பில் உள்ள ஆசிரிய மாணவர்களை 5 குழுக்களாகப் பிரித்துக் கொண்டு ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு வகுப்பு என்ற விதத்தில் 1 முதல் 5 வகுப்புகளிலிருந்து குழந்தைகளின் உயரம், எடை, வயது ஆகியவற்றை குறித்துக் கொண்டு வரவேண்டும். அதற்குப் பின்வரும் படிவத்தைப் பயன்படுத்த வேண்டும்.

## உற்றுநோக்கல் படிவம்

1. உற்றுநோக்கல் நடத்தப்படும் பள்ளியின் பெயர் :
2. உற்றுநோக்கல் நடத்தும் ஆசிரியர்கள் மாணவ குழுவின் தலைவர் பெயர் :
3. உற்றுநோக்கல் நடத்தப்படும் வகுப்பு :
4. உற்றுநோக்கல் நடத்தப்படும் நாள் :

அட்டவணை

| வரிசை எண் | மாணவர் பெயர் | உயரம் (செ.மீ இல்) | எடை (செ.மீ இல்) | வயது (முடிந்து ஆண்டுகளில்) |
|---|---|---|---|---|
| 1. | | | | |
| 2. | | | | |

3.

4.

5.

**செய்முறைப்பயிற்சி – 2**

கற்பித்தல் பயிற்சி வகுப்பில் ஆசிரிய மாணவர்கள் குழந்தைகளுடன் இடைவினை (Interaction) ஆற்றும் போது அவர்களின் எழுத்து மற்றும் பேச்சு வெளிப்பாடுகளில் இருந்து காரணகாரிய தர்க்கச் சிந்தனை முறையில் குழந்தைகள் வெளிப்படுத்தியது என்ன என்பதைக் குறித்துக் கொண்டு வர வேண்டும் குறைந்தது 5 சிந்தனைகளைப் பின்வரும் படிவத்தில் குறித்துக் கொண்டு வர வேண்டும் .

**உற்றுநோக்கல் படிவம்**

1. உற்றுநோக்கல் நடத்தப்படும் பள்ளியின் பெயர் :
2. உற்றுநோக்கல் நடத்தும் ஆசிரிய மாணவர் பெயர் :
3. உற்றுநோக்கல் நடத்தப்படும் நாள் :
4. உற்றுநோக்கப்படும் குழந்தையின் பெயர் :
5. வயது :
6. வகுப்பு :
7. தர்க்க சிந்தனை வெளிப்பட்ட வாக்கியங்கள் :

**எடுத்துக்காட்டுகள்**

1. சிறிய குழந்தைக்குச் சிறிய ஆடை வேண்டும். பெரியவர்களுக்குப் பெரிய ஆடை வேண்டும்.
2. தினமும் பல் துலக்கவில்லை என்றால் பல் வலி வரும்.
3. சிறுவர்களால் நடக்கமுடியும்; கற்களால் நடக்க முடியாது.
4. 11 என்ற எண்ணிற்கு முன் உள்ள எண் 10
5. ஒரு குழந்தைக்கு ஒரு புத்தகம் கொடுக்க வேண்டும் என்றால் 4 குழந்தைகளுக்குக் கொடுக்க 4 புத்தகம் வேண்டும்.

**செய்முறைப்பயிற்சி – 3**

ஒரே வண்ணம் உள்ள இருபது மணிகளை எடுத்துக்கொண்டு அவற்றை பத்து மணிகளைக் கொண்ட இரு சம கூறுகளாக்கி குழந்தைகளிடம் காண்பித்து விடுங்கள். பின்பு ஒரு கூறை ஒரு குவியலாகவும் மற்றொன்றை நேரான வரிசையாகவும் அடுக்கி வைத்து இப்போது இரண்டிலும் சமமான மணிகள் உள்ளனவா என்று கேளுங்கள். இல்லை என்று பதில் அளித்தால் எந்த கூறில் அதிக மணிகள் உள்ளன என்று கேட்டு குழந்தைகள் தரும் பதிலை பதிவு செய்ய வேண்டும். இச்சோதனையை ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்தனியாக செய்ய வேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் கொடுக்கப்படும் விளக்கங்கள் ஒரே மாதிரியாக இருக்க வேண்டும்.

சம கன அளவு கொண்ட இரு களிமண் உருண்டைகளை எடுத்துக் கொண்டு இரண்டும் சம அளவு கொண்டவை என்று குழந்தைகளிடம் காண்பித்து விடுங்கள். பின்னர் ஒரு உருண்டையை உருட்டி உருளை வடிமாக மாற்றி இப்போது இரண்டிலும் சம அளவு களிமண் உள்ளதா என்று கேளுங்கள். இல்லை என்று பதில் அளித்தால் எதில் அதிகமாக களிமண் உள்ளது என்று கேட்டு குழந்தை தரும் பதிலை பதிவு செய்ய வேண்டும். செய்முறைப் பயிற்சி 1 – க்காக பிரிக்கப்பட்ட ஆசிரிய மாணவா குழுக்கள் இச்சோதனைகளை செய்ய வேண்டும். முதல் வகுப்பு மற்றும் இரண்டாம் வகுப்புகளில் மட்டும் செய்தால் போதுமானது. ஒவ்வொரு வகுப்பிலும் 5 மாணவர்களிடம் மட்டும் இச்சோதனைகளை செய்யலாம்.

### உற்றுநோக்கல் படிவம்

1. உற்றுநோக்கல் நடத்தப்படும் பள்ளியின் பெயர் :
2. உற்றுநோக்கல் நடத்தும் ஆசிரிய மாணவர் குழுவின் பெயர் :
3. உற்றுநோக்கல் நடத்தப்படும் வகுப்பு :
4. உற்றுநோக்கல் நடத்தப்படும் நாள் :

### செய்முறைப்பயிற்சி – 4

உங்கள் வகுப்பில் உள்ள எவரேனும் இரண்டு குழந்தைகளின் பேச்சு மற்றும் எழுத்து மொழியை பள்ளி வகுப்பறை விளையாடும் இடம் போன்ற இடங்களில் உற்றுநோக்கி அக்குழந்தைகள் பயன்படுத்தும் தனித்தன்மை வாய்ந்த தமிழ்ச் சொற்களையும் அந்த சொற்கள் பயன்படுத்தப்பட்ட வாக்கியங்களையும் குறித்துக் கொண்டு வர வேண்டும். அதற்குப் பின்வரும் படிவத்தை பின்பற்ற வேண்டும்.

### உற்றுநோக்கல் படிவம்

1. உற்றுநோக்கல் நடத்தப்படும் பள்ளியின் பெயர் :
2. உற்றுநோக்கல் நடத்தும் மாணவ ஆசிரியர் பெயர் :
3. உற்றுநோக்கல் நடத்தப்படும் நாள் :
4. உற்றுநோக்கப்படும் குழந்தையின் பெயர் :
5. வயது :
6. வகுப்பு :
7. தனித்தன்மை வாய்ந்த சொற்கள் :
8. பயன்படுத்தப்பட்ட வாக்கியங்கள் :
9. குடும்பத்தின் சமூக பொருளாதார பின்னணி :

### பதிவேடு

கற்கும் குழந்தை பாடத்திற்கான செய்முறைப் பயிற்சிக்குப் பதிவேடு (Record) எழுதுவதற்கு பின்வரும் படிநிலைகளை பொதுவாகப் பின்பற்ற வேண்டும்.

1. முன்னுரை :
   a. அறிமுகம்
   b. நோக்கம்
2. செய்முறை :
   a. பரிசோதிக்கப் படுபவர்
   b. கருவி
   c. நடத்தும் முறை
3. தகவல்கள் :
4. விளக்கங்கள் :
5. முடிவுகள் :
6. மேற்கோள் நூல்கள் :

# அலகு – 2

# தொடக்கக்கல்வியின் ஆரம்பத்தில் குழந்தையின் பண்புகள்: சமூகம் மற்றும் மனவெழுச்சி சார்ந்தவை

## 1. தற்கருத்து

### செயல்பாடு – 1

ஏதேனும் ஒரு தற்கருத்துப் பட்டியலை (எகா. முத்தாராணி ரஸ்தோகியின் தற்கருத்துப்பட்டியல்) மாணவ ஆசிரியர்களிடம் கொடுத்து, பூர்த்தி செய்து பெறவேண்டும். வகுப்பிலுள்ள அனைத்து மாணவர்களின் தற்கருத்து நிலையினை அறியச் செய்யவேண்டும்.

தொலைநோக்குப் பார்வையும், அர்ப்பணிப்பு உணர்வும் உடைய ஊக்குவிக்கப்பட்ட ஆசிரியர் மாணவர்களிடம் பயனளிக்கக்கூடிய, உறுதியான உடன்பாட்டு தற்கருத்துக்களையும் (Postive self – concept) சரியான மனோபாவங்களையும் (Right Attitude) தோற்றுவித்து, வலுப்படுத்தி (Reinforcement) மாணவர்கள் இசைந்த ஆளுமை வளர்ச்சி பெற உதவுகின்றார். பொருத்தமான ஆலோசனைகள் சிறப்பான வழிகாட்டல்கள் மூலம் மாணவர்களுக்கு

- பள்ளி வாழ்வில் வெற்றிபெற
- சொந்த வாழ்வில் மகிழ்ச்சியுடன் விளங்க.
- சமூக வாழ்வில் மதிப்புடன் திகழ சிறப்பான அடித்தளத்தையும் அமைத்து தருகிறார்.

### *அறிந்து கொள்ளுங்கள்*

*வாழ்க்கைத் தொழிலை தேர்ந்தெடுத்தல்,*
*சிறப்பான கல்வி அடைவினைப் பெறுதல்,*
*உச்சக்கட்ட அளவில் திறமைகளை வளர்த்துக் கொள்ளுதல்,*
*காப்புணர்ச்சியுடன், சுதந்திர உணர்வுடன் செயலாற்றுதல்,*
*ஆரோக்கியமான உறவுகளை மேற்கொள்ளுதல்,*
*மனநலத்துடன் பிறரோடு இணைந்து பணியாற்றுதல்* போன்ற பல்வேறு செயல்பாடுகளை ஒருவரின் தற்கருத்துக்களே தீர்மானிக்கின்றன.

தற்கருத்து ஒருவரின் எண்ணம், உணர்வு, அறிவு, வாழ்க்கை அனுபவம், 'தான்' என்னவாக விரும்புகின்றார் என்ற எதிர்பார்ப்பு மற்றும் உளரீதியாக 'நான் என்கிற உணர்வு போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு அமையும்.

'ஒருவரின் தற்கருத்து, வெற்றி உணர்வு, அன்பு, பாதுகாப்புணர்வு, மரியாதை நம்பிக்கை போன்ற உணர்வுகளின் அடிப்படையில் அமைந்திருப்பது **உடன்பாட்டு தற்கருத்து** எனப்படும்.

"அவநம்பிக்கை, வெறுப்பு, தோல்வி உணர்ச்சி, சந்தேகம், பாதுகாப்பற்ற உணர்வு போன்ற எதிர்மறை எண்ணங்களின் அடிப்படையில் தற்கருத்து அமைவது **எதிர்மறை தற்கருத்து** எனப்படும்."

**உடன்பாட்டு தற்கருத்து கொண்ட மாணவர்கள்** வகுப்பறையில் சுறுசுறுப்பாகவும், வெற்றி உணர்வோடும் தன்னம்பிக்கையுடன் திகழ்வார்கள். பிறரோடு இணைந்து விதிகளுக்கு கட்டுப்பட்டு நடப்பார்கள், ஆற்றல்களை உச்சக்கட்ட அளவிற்கு வளர்த்துக் கொள்ளும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவார்கள். சமூகத்தொடர்புகளில் நாட்டம் கொண்டு குழுவேலைகளில் ஆர்வத்தோடு ஈடுபடுவார்கள்.

**எதிர்மறை தற்கருத்து கொண்ட மாணவர்கள்:** பள்ளி இணக்கம், சமூக இணக்கம், தன்னிணக்கம் போன்ற செயல்பாடுகளில் குறைபாடு உடையவர்களாக இருப்பார்கள்; வீணான சர்ச்சை பிறரோடு சண்டையிடுதல், பொருள்களை சேதப்படுத்துதல், திருடுதல் போன்ற பொருத்தப்பாடற்ற நடத்தைகளை வெளிப்படுத்துவார்கள்; சுயநலம், பொறாமை, அச்சம், மனச்சோர்வு, மனப்பதட்டம் போன்ற உணர்வுகளுடன் காணப்படுவார்கள்.

## உடன்பாட்டு தற்கருத்தை வளர்க்க செயல்பாடுகள்

1. நல்லவிதமான சுய அறிவுறுத்தல்களை (postivie Auto suggestions) மாணவர்கள் கடைப்பிடிக்க உதவுதல்
   (எ.கா) நான் கணிதத்தில் தேர்ந்தவன்
   என்னால் இதைச் செய்ய இயலும்
2. பலவீனங்களை மீறி சாதனை புரிந்தவர்களின் உண்மைக் கதையை கூறி தன்னம்பிக்கை உணர்வினை ஏற்படுத்துதல்
   (எ.கா.) காதுகேட்காத பிதேவன் சிறந்த இசையமைப்பாளராக மாறியது
3. ஏளனமான வார்த்தைகள் (Lablelling and putalowns) மூலம் மாணவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தாதிருத்தல்.
   (எ.கா) வெத்துவேட்டு, முட்டாள், மக்கு, உதவாக்கரை போன்ற வார்த்தைகளைப் பயன்படுத்தாதிருத்தல்.
4. **"வெற்றி வெற்றியையும், தோல்வி தோல்வியையும் வளர்க்கும்"** என்கிறது நவீன உளவியல் கோட்பாடு. எனவே மாணவர்களின் திறமை, ஆர்வம், விருப்பத்திற்கேற்ற செயல்பாடுகளில் ஈடுபடுத்தி திறமைகளை முழுமையாகப் பயன்படுத்தி வெற்றி பெறச் செய்ய வேண்டும்.
5. தேவையற்ற ஒப்புமை (Unfair comparision) செய்து மாணவர்களின் மன உணர்வினை காயப்படுத்தாமலிருத்தல். (எ.கா.) ஒருவரோடு ஒருவரை ஒப்பிட்டுத் தாழ்த்திப்பேசுவது.

## செயல்பாடு – 2

உடன்பாட்டு தற்கருத்தை வளர்த்துக் கொள்ள உதவும் பல்வேறு யுத்திகளை பட்டியலிட்டு பின்பற்ற உதவும் வழிமுறைகளை விவரிக்க வேண்டும்.

## நினைவிற்கொள்க

மாணவர்களிடம் அன்புகாட்டாமல் குறை கூறிக்கொண்டேயிருந்தால், மாணவர்கள் எதிர்மறைத் தற்கருத்தை வளர்த்துக்கொள்வதோடு, குறைந்த சுயமதிப்பு, குறைந்த தன்னம்பிக்கை, தாழ்வு மனப்பான்மை உறவுச்சிக்கல்கள் போன்ற பிரச்சினை நடத்தைகளையும் வளர்த்துக் கொள்வார்கள்.

நாட்டின் தலையாய சொத்தாக வருங்கால சிற்பிகளாக விளங்கும் மாணவர்களிடம் உடன்பாட்டு தற்கருத்தை வளர்ப்பதின் மூலம் வளமையான, வலிமையான இந்தியாவை உருவாக்கிட இயலும்.

### *சிந்திக்க*

*கனவு காணுங்கள், கனவு காணுங்கள்;*
*கனவுகளை எண்ணங்களாக மாற்றுங்கள்;*
*எண்ணங்களுக்கு செயல்வடிவம் எனும்*
*முடிவைத் தாருங்கள்.* — *அப்துல்கலாம்*

## சமூக உணர்வு

"தன் சகமனிதனோடு, கனிவோடும், ஒத்திசைவோடும் பயன்தரும் வகையிலும் வாழ்வதற்குத் தேவையான திறன்களை கொடுக்க இயலாத கல்வி, கல்வியாக இருக்க முடியாது." தேசியக் கலைத்திட்ட வடிவமைப்பு–2005.

'வாழ்க்கை மேம்பாடு' என்பது தனிமனித மேம்பாட்டில் தொடங்கி, சமுதாயத்தின் மூலம் நாட்டின் மேம்பாடாக வெளிப்படுகின்றது. 'தனிமனித மேம்பாடு' என்பது தன்னை வளப்படுத்துவதோடு, தான் சார்ந்திருக்கும் சமுதாயத்தையும், நாட்டையும் வளப்படுத்துவதைக் குறிக்கின்றது. குழந்தைகளின் வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, வளர்ச்சி உரிமை மற்றும் பங்கேற்பு உரிமை தற்போது வலியுறுத்தப்படுகின்றது.

நவீன கோட்பாடுகளின்படி பள்ளியானது "சமுதாயத்தின் சுருங்கிய இலட்சியப்பதிப்பாகவும்" சமுதாயத் தேவைகளை பூர்த்தி செய்யும் சமூக நிலையமாகவும் திகழ்கின்றது.

*"புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட*
*போரிடும் உலகை வேரொடு சாய்ப்போம்."*

நல்ல சமூகப் பண்புகளும், சமூக வளர்ச்சிக்கு பாடுபடும் மனப்பாங்கும் சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் ஆற்றல்களும் கொண்ட திறன்மிகு மாணவச் சமுதாயத்தை உருவாக்குவதன் மூலம் சிறந்த சமுதாயத்தை படைக்க முடியும்.

### அறிந்துகொள்க

சமத்துவம், நீதி, சுதந்திரம், மதச்சார்பின்மை, மனித உரிமைக்கும், நேர்மைக்கும் மதிப்பளித்தல், பிறர் நலன் மீதான அக்கறை போன்ற சமூக மதிப்புக்களை, மனித மாண்புகளை, சமூகத்தால் விரும்பப்படும் பழக்கங்களை ஒருவர் வளர்த்துக் கொள்ள பள்ளியே சிறந்த களமாக அமைகின்றது.

பண்பாடு ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார ரீதியாக பல்வேறு சமூக நிலைமைகளிலிருந்து பள்ளிக்கு வரும் மாணவர்களுக்கு, சமுதாயத்தில் பழகும் விதம், தனிப்பட்ட திறமைகளை வளர்த்துக் கொண்டு சமுதாய முன்னேற்றத்திற்கு உதவுதல், சமுதாய பிரச்சனைகளை, சவால்களை சந்தித்தல், தீர்த்தல் போன்ற விஷயங்களை கற்றுத்தந்து, சமூக உணர்வினையும் சமூக விழிப்புணர்வையும் ஏற்படுத்துவதற்கான வழிமுறைகளை அறிந்துகொள்வோம்.

### சமூக உணர்வு

பிறந்த குழந்தை 'தான்' என்ற தன்னல உணர்வுடன் (I Feeling) தொடக்கத்தில் செயல்படும். குழந்தை, தனது உடல், உள, சமூகத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக குடும்பம், பள்ளி, ஒப்பார் குழு, உறவினர்கள் போன்ற சமூக நிலையங்களில் தொடர்பு கொண்டு உறுப்பினராக செயல்பட்டு 'நாம்' என்ற சமூக உணர்வினை ('we' Feelings) வளர்த்துக் கொள்கிறது. பல்வேறு சமூக

நிலையங்களுடன் தொடர்பு கொண்டு உறுப்பினராக செயல்படும்போது பிறரோடு இணக்கமாக பழகத் தேவைப்படும் திறன்களையும், சமூகப் பண்புகளையும் கற்றுக்கொண்டு அதற்கேற்ப தனது நடத்தைகளையும் உருவாக்கிக் கொள்கின்றது. இச்செயல்பாடு 'சமூக வளர்ச்சி' எனப்படும்.

தாய் – சேய் உறவிலிருந்து தனது சமூகத் தொடர்புகள் விரிவடையும் போது, தனது நலத்தைப் பற்றி மட்டுமே சிந்திக்கும் நிலையிலிருந்து சிறிது சிறிதாக மாறி, பிறரது நலத்தினையும் ஏற்று பொதுநலத்துடன் இணைந்து செயலாற்றும் சமூக மனப்பான்மையை குழந்தைவளர்த்துக் கொள்கின்றது. இச்செயல்பாடு 'சமூகவியல்பு பெறுதல்' எனப்படுகின்றது. 'நாம்' ('we') என்னும் உணர்வைப் பெறுவது சமூகவியல்பின் விளைவாகும்.

## உள்ளூரிலிருந்து உலகளவிற்கு 'நாம்' உணர்வை வளர்த்தல்

சிந்திக்க : *"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலா தார்."*

பன்முகப் பண்பாடுடைய மதச் சார்பற்ற ஜனநாயக நாடாக இந்தியா விளங்குகின்றது. இங்கு மக்களின் மத நம்பிக்கைகள், வாழ்க்கை முறைகள், சமூகத் தொடர்புகள் பற்றிய புரிதல்கள் போன்றவை முற்றிலும் மாறுபட்டு காணப்படுகின்றது. எனவே மாணவர்கள், சமூகத்தைப் பற்றிய புரிதலோடும், அறிவோடும், பிறர்நலன் மீதும், பிறர் உணர்வின் மீதும் அக்கறை கொள்ளும் சமூக உணர்வினை வளர்த்துக் கொள்ளவேண்டும்; மேலும் தேசங்களுக்கு இடையே, சமூகங்களுக்கிடையே, மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையே நிலவும் முரண்பாடுகளை களைவதற்கான விழிப்புணர்வை பெற வேண்டும்.

சகிப்புத்தன்மையின்மை, வெறித்தனம், குறுகிய மனப்பான்மை, சாதி, மத, சார்பெண்ணங்கள் காரணமாக "நான், தனது, சுயலாபம் – சுயசந்தோஷம்" என்ற சுயநல உணர்விலிருந்து விடுபட்டு 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்ற பொதுநல உணர்வினைப் பெறவேண்டும். மேலும் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலக மனப்பான்மையையும் பெறவேண்டும்.

### வகுப்பறைச் செயல்பாடுகள்

- மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு அனைத்து மத விழாக்களையும் கொண்டாடுதல்;
- என்.சி.சி. சாரணர் இயக்கம், குழுவேலைகளில் இணைந்து பணியாற்றச் செய்து, ஒத்துழைப்பு உணர்வை பெறச் செய்தல்;
- ஹெச்ஐவி, எய்ட்ஸ், சாலைப்போக்குவரத்து வாரம் போன்ற பல்வேறு விழிப்புணர்வுச் செயல்பாடுகளில் பங்கு பெறச்செய்து, சமூக அக்கறை உணர்வை ஏற்படுத்துதல்;

  *'உலக தினங்களை கொண்டாடுதல்*
  *ஒரு தாய் மக்கள் நாமென்போம்'*
  *'காக்கை குருவி எங்கள் ஜாதி'*

  போன்ற சமூக விழிப்புணர்வுப் பாடல்களை பாடச் செய்தல்.
- பிறநாட்டு இலக்கியங்களைப் படித்தல், கல்விச்சுற்றுலா செல்லுதல், வட்டார தேசீய விளையாட்டு மற்றும் கலாச்சாரப் போட்டிகளில் பங்கு பெறச் செய்தல்.
- தான் வாழும் உரிமை, பாதுகாப்பு உரிமை, வளர்ச்சி உரிமை மற்றும் பங்கேற்பு உரிமையை அறியச் செய்தல்.
- ஆக்கப்பூர்வமான இத்தகைய செயல்பாடுகளில் மாணவர்களைப் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும்.

குழுக்களிடம், நாடுகளிடம், தனிநபர்களிடம் ஏற்படும் பிரச்சினைகளை வன்முறை இல்லாமல் தீர்த்துக்கொள்ளும் மனப்பக்குவத்தை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும்.

*"எல்லோரும் இன்புற்றிருப்பது அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே"*

என்ற உணர்வினை அடைவதை சார்பெண்ணங்களும், உட்குழு, வெளிக்குழு இடைவெளிகளும் தடுக்கின்றன.

**சார்பெண்ணங்கள்**

ஒருவரைப் பற்றியோ அல்லது ஒரு குழுவைப் பற்றியோ உண்மை நிலையை அறியாமல் அவசரப்பட்டு தவறான முடிவுக்கு வருவது சார்பெண்ணங்கள் எனப்படும்.

**செயல்திட்டம்**

மாணவர்களிடம் சார்பெண்ணங்கள், காரணமாக ஏற்படும் பிரச்சினைகளை தீர்க்கும் வழிமுறைகளை குறித்து குழுவாதம் செய்ய வேண்டும்.

உட்குழு, வெளிக்குழு இடைவெளி காரணமாக பள்ளியில், நாட்டில், உலகத்தில், ஏற்படும் தீமைகளை குறித்து விவாதிக்க வேண்டும்.

மனித மாண்புகளாக சமுதாயம் கருதும் சுதந்திரம், நம்பிக்கை, பரஸ்பர மரியாதை வேற்றுமையில் ஒற்றுமை போன்ற விரும்பத்தக்க சமூகப் பண்புகளை மாணவர்கள் பெறவேண்டும். சமூக அநீதிகளுக்கும், சமூக சீர்கேடுகளுக்கும் பால் சமத்துவமின்மைக்கும் எதிராகப் போராடும் ஆற்றலை வளர்த்துக் கொள்ள, வகுப்பறைச் செயல்பாடுகள் உதவிகரமாக அமைத்துத் தருவது, ஊக்குவிக்கப்படுவது ஆசிரியரின் கடமையாகும்.

## 2. குழந்தைப் பருவ சகோதர உறவுகள்

சிந்திக்க: தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் (Blood is thicker than water)

**செயல்பாடு**

சிறுவயதில் உங்கள் சகோதர சகோதரிகளுடன் சந்தோஷமாக இருந்த சம்பவங்கள், சண்டை ஏற்பட்ட நிகழ்ச்சிகள், சுவராஸ்யமான மற்றும் கசப்பான அனுபவங்களை நினைத்துப் பார்த்து விவரங்களை இருபக்கங்களில் எழுதி வரச் சொல்ல வேண்டும். வகுப்பில் இவ்விவரங்களை பிறரோடு மகிழ்ந்து விவாதிக்க வேண்டும். குழந்தைப் பருவ சகோதர சகோதரி உறவு, அன்பு, பொறாமை, சண்டை, ஒத்துழைப்பு, ஆதரித்தல், எதிர்த்தல், பாதுகாத்தல், தாக்குதல் போன்ற நிலைகளில் இருந்ததை நாம் உணரமுடியும்.

சகோதர உறவு என்பது, ஒருதாய் வயிற்றுப் பிறப்பாளர்களுள் ஒருவரை, "ஒரே மூல மரபினை உடையவர்களுள் ஒருவரை," "ஒரே தாய் தந்தை உடையவர்களுள் ஒருவரைக் குறிக்கும்," சில சமயம் தத்து எடுக்கப்பட்ட குழந்தைகளும் சகோதர உறவில் இடம்பெறுவர். உடன் பிறந்தவர்கள் ஒன்றாகவே வளர்க்கப்படுவதால் அதிகமான நேரத்தை ஒன்றாகவே செலவிடுகின்றார்கள். எனவே அன்பு செலுத்தவும் விளையாடுவதற்கும் தேவைகளை பூர்த்தி செய்யவும், ஒருவரையொருவர் சார்ந்து வாழவும் கற்றுக்கொள்கின்றார்கள்.

குழந்தைப் பருவத்தில் பெற்றோர்களின் மனப்பான்மை காரணமாக பல்வேறு முரண்பாடுகள் ஏற்பட்டாலும், சமூக வளர்ச்சி, முதிர்ச்சி காரணமாக பின்னால் ஆரோக்கியமான உறவுகளை வளர்த்துக்கொள்கின்றார்கள்.

**குழந்தைப்பருவ சகோதர – சகோதரி உறவில் செல்வாக்குள்ள சமூக காரணிகள்**

1. பெற்றோர்களின் மனப்பான்மை.
2. குழந்தைகளை பெற்றோர்கள் கையாளும் விதம்.
3. பிறப்பு வரிசை (Birth Order)
4. பால் வேறுபாடு.
5. குடும்பத்திற்கு வெளியில் ஏற்படும் அனுபவங்கள்.
6. சுற்றுப்புறத்தில் வசிப்பவர்கள்.
7. ஆளுமைப் பண்புகள்.

முதலில் பிறந்த குழந்தைக்கு, இரண்டாவது பிறந்த குழந்தையின் பிறப்பு பல்வேறு மனஅழுத்தங்களை ஏற்படுத்தும். ஏனெனில் பெரிய குழந்தை 'ஒரே குழந்தை' என்ற நிலையிலிருந்து தூக்கி எறியப்படுவதால் தனது தனித்துவநிலை பறிக்கப்படுவதாக உணரும். இரண்டாவது பிறந்த குழந்தை மேல் பெற்றோர்கள் அதிக அக்கறை எடுத்துக்கொள்வதால் பெரிய குழந்தையிடம் 'தான் புறக்கணிக்கப்படுகின்றோம்' என்ற உணர்வு ஏற்பட்டு பொறாமைக்குணம் ஏற்படுகின்றது.

**உங்களுக்குத் தெரியுமா?**

தனது தனித்தன்மையை இழந்ததாக கருதும் பெரிய குழந்தை, முரட்டுத்தனம், பிடிவாதம், தாக்குதல், அழுதல் போன்ற பொருத்தப்பாடற்ற நடத்தைகளை அதிக அளவில் வெளியிட்டு பெற்றோர்களின் கவனத்தை தனது பக்கம் ஈர்க்க முயலும்.

**சுய விமர்சனம் செய்து கொள்க**

'பிறர் தன்னை புறக்கணிக்கின்றார்கள். தன்னை யாரும் மதிப்பதில்லை; தனக்கு முக்கியத்துவம் இல்லை' போன்ற எதிர்மறை உணர்வுகளின் தாக்கம் காரணமாக மற்றவர்கள் கவனத்தை உங்கள் மீது திருப்புவதற்காக பொருத்தப்பாடற்ற நடத்தைகளை வெளிப்படுத்திய சம்பவங்களை நினைத்துப் பாருங்கள்.

பெரிய குழந்தை பெற்றோர்களின் அதிக எதிர்ப்பார்ப்புகளுக்கும் எண்ணங்களுக்கும் ஆளாகி சிரமப்படும் சூழலும் சில சமயங்களில் நேரிடுகின்றது. கடைசி குழந்தை, பெற்றோரின் அன்பை பொதுவாக அதிகமாகப் பெற்றிருப்பார்கள். செல்லக் குழந்தையாக திகழ்வதன் காரணமாக சில சமயம் குறையாளுமை வளர்ச்சியினைப் பெற்று, சீர்கெடும் வாய்ப்புகளும் அதிகமுண்டு என்பதை ஆய்வுகள் உணர்த்துகின்றன.

சகோதார, சகோதரி இல்லாமல் தனியாக ஒரே குழந்தையாக வளரும் குழந்தை அதிகமாக செல்லமாக வளர்க்கப்படுகின்றது. சரியாக வழிகாட்டுதல் கிடைக்காதபோது இத்தகைய குழந்தைகள் ஒரு தன்மயக் குழந்தையாக வளரும்.

இடைநிலையில் பிறந்த குழந்தைள் (முதல் குழந்தைக்கும் கடைசி குழந்தைக்கும் இடையில் பிறந்தவர்கள்) பல்வேறு கலந்தநிலை அனுபவங்களைப் பெற்று தங்கள் ஆளுமையில் பெரிதும் வேறுபட்டு காணப்படுவார்கள். மேலும் தனது நிலையை பிறரோடு ஒப்பிட்டுப் பார்த்து சிலசமயம் தாழ்வுணர்ச்சி ஏற்பட்டு, மனப்பாதிப்புகளுக்கும் ஆளாகின்றார்கள்.

பிறப்பு வரிசை காரணமாக குழந்தைகளின் அறிவாற்றல், பண்புகள் குறித்து வேறுபட்ட கருத்துக்கள் கல்வி உளவியலாளர்களிடம் நிலவுகின்றது.

பல்வேறு குடும்பச் சூழலிருந்து வரும் மாணவர்கள் ஒரே வகுப்பில் சேர்ந்து படிக்கின்றார்கள். எனவே ஒரு குழந்தையிடம் பிரச்சினை நடத்தைகள் காணப்பட்டால் அக்குழந்தையின் இளம் பருவ நடத்தைகளை அக்குழந்தையின் பெற்றோர்களிடம் கேட்டு அறிந்துகொண்டு குழந்தையை நல்வழிப்படுத்துவது ஆசிரியர்களின் கடமையாகும்.

## 3. ஒப்பார் குழு மற்றும் விளையாட்டு

சிந்திக்க: *"ஓடி விளையாடு பாப்பா, நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா*
*ஆடிப்பாடி வேலை செய்தால் அலுப்பிருக்காது பாப்பா"*

விளையாட்டு என்பது அனைத்துக் குழந்தைகளிடமும் காணப்படும் வலுவான பொழுதுபோக்காகும். உங்கள் மனதில் பொக்கிஷமாக மறைந்து கிடக்கும் சிறு வயது விளையாட்டுகளை நினைவிற்கு கொண்டு வாருங்கள். நீங்கள் பிறருடன் பழக, நல்ல பழக்கங்களை கற்றுக் கொள்ள நல்ல நடத்தைகளை பின்பற்ற, பிறருடன் ஒத்துழைக்க, விளையாட்டுக்கள் உதவியதை அறிந்துகொள்ள முடியும்.

விளையாட்டுக்கள் ஒருவரின் உடல் வளர்ச்சிக்கு, அறிவு வளர்ச்சிக்கு, மனவெழுச்சி வளர்ச்சிக்கு, மொழி வளர்ச்சிக்கு, சமூக வளர்ச்சிக்கு உதவுகின்றது; சிறப்பான கற்றல் அடைவுகளுக்கும், மனதின் கவலைகளை வெளியிடவும், பிற்கால வாழ்க்கைக்கு பயன்தரக்கூடிய திறன்களை வளர்த்துக்கொள்ளவும் உதவுகின்றது. மேலும் மனிதர்கள் சிறந்த உடல் நலமும் மனநலமும் பெற்று 'நாம்' என்ற உணர்வுடன் மனித நேயத்துடன் விளங்கவும் உதவுகின்றது. ஒப்பார் குழுவினரோடு குழந்தைகள் விளையாடுவதன் மூலம் பல்வேறு சமூகப் பண்புகளையும், சமூக உறவுகளையும், வளர்த்துக்கொள்கின்றார்கள். ஒப்பார் குழுவில் விளையாட்டுகளின் செல்வாக்கை தற்போது அறிந்துகொள்ளலாம்.

விளையாட்டுமுறை எனப்படுவது குழந்தைகள் மகிழ்ச்சியுடன் ஈடுபடும் வேலையாகும். "படைப்புச் செயல்களின் சிறந்த வெளிப்பாடே" விளையாட்டு எனப்படுகிறது.

மூன்று வயதுவரை குழந்தைகள் புலன் – இயக்க விளையாட்டுக்களை விரும்புகின்றனர். பொதுவாக தனித்தே விளையாட விரும்புவார்கள்.

எ.கா. தவழ்தல், கட்டைகளை அடுக்குதல், ஓடுதல், குதித்தல்

மூன்று முதல் ஆறு வயது வரையிலும் கற்பனை விளையாட்டுகள் முதன்மை பெறும். தமது தாய், தந்தை, ஆசிரியர் போன்று பல்வேறு நடிக்கும் பாவனை விளையாட்டுகளில் ஈடுபடுவார்கள்.

ஆறு வயது முதல் 12 வயது வரையிலும் பரவியுள்ள பருவத்தின் விளையாட்டுகளில் போட்டி மனப்பான்மையைக் காணலாம்.

12 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளிடம் கூட்டு விளையாட்டுக்கள் முக்கியத்துவம் பெறுகின்றது. இப்பருவத்தினர் சிறுசிறு குழுக்களாக ஒன்று சேர்ந்து, தலைவன் அல்லது தலைவிக்கு கட்டுப்பட்டு விளையாடுவார்கள். தனது வெற்றியை விட குழு வெற்றியை பெரிதாக கருதுவார்கள். விதிகளுக்கு கட்டுப்பட்டு விளையாட கற்றுக்கொள்வார்கள்.

மேலே குறிப்பிடப்பட்ட நான்கு பருவங்களையும் திட்டவட்டமான பிரிவுகள் என்று கருதக்கூடாது. மூன்று வயது முதல் நண்பர்களுடன் சேர்ந்து எளிய விளையாட்டுக்களில் ஈடுபடும் குழந்தைகள், குமரப் பருவத்தில 'ஒப்பார் குழு' எனப்படும் நண்பர்கள் குழுக்களுடன் சேர்ந்து விளையாடுவதன் மூலம் பல்வேறு நல்ல பழக்கங்களை, எண்ணங்களை, மதிப்புகளை, நடத்தைகளை,

பண்புகளை, சிறந்த கற்றல் அடைவுகளைப் பெற்று, எதிர்காலத்தில் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியும் பெறுகின்றார்கள்.

ஒப்பார் குழுக்களில் சேர்ந்து விதிகளுக்கு கட்டுப்பட்டு விளையாடி, குழுவின் வெற்றிக்கு பாடுபடுவதன் மூலம் கீழ்க்கண்ட பண்புகளை குழந்தைகள் பெறுகின்றார்கள்.

- ❖ ஒற்றுமையுடன் குழு வேலைகளில் ஈடுபடுதல்
- ❖ பொறுப்பை பகிர்ந்து கொள்ளுதல்
- ❖ தன்னுடைய முறை வரும்வரை காத்திருத்தல்
- ❖ பிறர் தேவைகளுக்கும் உரிமைகளுக்கும் மதிப்பு கொடுத்தல்
- ❖ பிறரை மனந்திறந்து பாராட்டுதல்
- ❖ தன்னம்பிக்கை உணர்வு பெறுதல்
- ❖ பிறரிடம் அன்பாக இருத்தல்
- ❖ பொதுநலம் கருதும் பண்பு, சகிப்புத்தன்மை

**அறிந்து கொள்க**

- பாவனை நடிப்பு என்ற விளையாட்டு முறையில், மாணவரோ, ஆசிரியரோ அல்லது சமுதாயமோ சந்திக்கின்ற பிரச்சனைகளுக்கு எவ்வாறு தீர்வு காணலாம்? என அறியச் செய்யலாம்.
- பங்கேற்பு நாடகம் என்ற விளையாட்டு முறையின் மூலம் பல்வேறு சமூக நடத்தைகள், பண்புகள், ஒத்துழைப்புத் திறன் ஆக்கத்திறன் போன்றவைகளை வளர்க்கலாம்.

  (எ.கா.) ஆசிரியரிடம் கையையும் விரலையும் நீட்டிப் பேசும் மாணவனை ஆசிரியர் திருத்துதல்.
- கல்வி விளையாட்டு மூலம் பயனுள்ள கற்றல் அனுபவங்களை வழங்கலாம்.

  (எ.கா.) சொற்கோபுரம், வார்த்தை விளையாட்டு

மாணவர்களின் ஐம்புலன்களையும் மூளையைக் கூர்மையாக்கும் விதத்தில் உற்சாகப்படுத்தி பல்வேறு விளையாட்டுச் செயல்களில் ஈடுபடுத்துவதால் மாணவர்கள் சுறுசுறுப்பானவர்களாக எதையும் கூர்ந்து நோக்குபவர்களாக எதையும் சிந்திக்கக் கூடியவர்களாக விளங்குவார்கள்.

ஒப்பார்குழு விளையாட்டுச் செயல்களில் குழந்தைகளை விளையாடச் செய்வதன் மூலம் அன்பு, ஒத்துழைப்பு, சகிப்புத்தன்மை, பிறர் நலனுக்காக தன் நலனை விட்டுக்கொடுத்தல், பிறரது முன்னேற்றத்திற்கு உதவுதல், தன்முறை வரும் வரை காத்திருத்தல் போன்ற எண்ணற்ற விரும்பத்தக்க நடத்தை மாற்றங்களை மாணவர்களிடம் உருவாக்கிட இயலும்.

## 4. தன்னையறிதல்

சிந்திக்க: *“மனிதர்கள் எல்லோருமே வேலையைச் செய்து முடிக்கின்றார்கள். ஆனால் தன்னையறிந்தவர் மட்டுமே புகழடையும் விதத்தில் வேலையைச் செய்து முடிக்கின்றார்கள்.”*

*“எல்லோருக்கும் வெற்றிபெற விருப்பம் இருக்கின்றது. ஆனால் வெகுசிலருக்கே, வெற்றிபெறத் தங்களைத் தயார்செய்து கொள்ளும் விருப்பமும் திறமையும் உள்ளது.”*

## சுயவிமர்சனம் செய்க

நீங்கள் பிறர் புகழும் விதத்தில் வேலை செய்து முடிப்பவரா?

வேலையில் வெற்றிபெற, தொடர்ந்து முயற்சி செய்யும் மனப்பான்மை உள்ளவரா?

உங்களைத் தோல்வியாளராக மாற்றும் மனத்தடைகளையும், குறைபாடுகளையும் உணர்ந்தவரா?

எதார்த்தங்களை ஏற்றுக்கொண்டு, சூழ்நிலையில் பொருத்தப்பாட்டுடன் திகழ்பவரா?

பலவீனங்களைப் போக்கும், தடுக்கும், குறைக்கும் முயற்சியில் ஈடுபடுபவரா?

## அறிந்து கொள்ளுங்கள்

ஒருவர் தன்னுடைய நிறை, குறைகளை முழுமை தழுவிய அணுகுமுறையில் உண்மையான நோக்கில் மதிப்பீடு செய்து கொள்வதையே "தன்னையறிதல்" என்று கூறுகிறோம்.

ஒருவர் தன்னுடைய நிறை, குறைகளை அப்படியேஏற்றுக் கொள்ளும் நிலையே (Saying, I am what I am) "தன்னையறிதல்" எனப்படுகின்றது.

தன்னைப் பற்றி பிறரைப் பற்றி வாழ்க்கையைப் பற்றி மற்றும் உலகத்தைப் பற்றி புரிந்து கொண்டு செயல்பட, தன்னையறிதல் திறன் ஒருவருக்குத் தேவைப்படுகிறது.

தன்னை அறிந்தவர்கள் தங்களது ஆற்றல்களை, சிறப்புத்திறன்களை உச்சக்கட்ட அளவிற்கு வளர்த்துக் கொண்டு சூழ்நிலையில் உயர் நிலைப்பட்ட பொருத்தப்பாட்டுடன் (Superior Adjustment) சமூக செயல்பாடுகளில், தன்னம்பிக்கையுடனும், மகிழ்ச்சியுடனும் செயல்படுவார்கள். மேலும் தங்களின் வளர்ச்சியையும், முன்னேற்றத்தினையும் தடை செய்யும் பல்வேறு குறைபாடுகளை (எ.கா: மனத்தடைகள், மனப்போராட்டங்கள், சமூக விரோத செயல்கள், பொருத்தப்பாடற்ற நடத்தைகள் பிற) உணர்ந்து, மனச்சோர்வடையமாட்டார்கள். ஆனால் தன்னம்பிக்கையுடனும் விடாமுயற்சியுடனும் செயல்பட்டு தங்களிடம் காணப்படும் குறைபாடுகளைப் போக்கும், முயற்சியில் தொடர்ந்து ஈடுபடுவார்கள்.

பட்டியலிடுக: *உங்களிடம் காணப்படும் பலம் மற்றும் பலவீனங்கள்*
*பலங்களைப் பலப்படுத்துங்கள்*
பலவீனங்களைப் பலவீனப்படுத்துங்கள்

என்பது பொருள் பொதிந்த கூற்றாகும்.

தன்னையறிந்தவர்களுக்கு வாழ்க்கை முழுமையானதாக அர்த்தமுள்ளதாகவும், ஆரோக்கியமானதாகவும் விளங்கும்.

பொருத்தமான செயல்பாடுகள், சுயவிமர்சனங்கள்மற்றும் சரியான அணுகுமுறை காரணமாகத் தன்னையறிந்தவர்கள் எப்போதும், எல்லாக் காரியங்களிலும், எல்லாச் சூழ்நிலைகளிலும் மனநிறைவோடு செயல்பட்டு வெற்றி பெறுகின்றார்கள். அவர்களின் வெற்றிக்கான இரகசியத்தை அறிந்து கொள்வோம்.

SWOT என்றால் என்ன?

S – Strength – பலங்கள்

W – Weakness – பலவீனங்கள்

O – Opportunity – சந்தர்ப்பங்கள்

T – Threats – பயங்கள்

**செயல்திட்டம்**

உங்களின் அணுகுமுறைகளை, குறிக்கோள்களை செயல்பாடுகளை எவ்வாறு அமைத்துக் கொண்டு செயல்படுகின்றீர்கள் என்பதை சுயவிமர்சனம் செய்து கொள்ள வேண்டும்.

**சிந்திக்க**

*தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை,*
*தன்னை அறியாமற் தானே கெடுகின்றான்* – திருமூலர்

சமுதாயம் ஒத்துக் கொள்ளக்கூடிய நம்பிக்கைகள் (Belief), மதிப்பு (Values), நடத்தைகள் (Behavious) போன்ற சமூகப்பண்புகளையும், திறன்களையும் பிறரோடு இணைந்து செயல்பட்டு தானும், பிறரும் மகிழ்ச்சியடையும் விதத்தில் செயல்பட 'தன்னையறியும் திறன்' ஒருவருக்கு உதவி செய்கின்றது.

தன்னுடைய நிறை குறைகளை தெளிவாகப் புரிந்து கொள்ளாமல், திறனுக்கேற்ற குறிக்கோள் அமைக்காமல் செயல்படுபவர்களிடம், பொருத்தப்பாடற்ற நடத்தைகளும், மனவெழுச்சிப் பிரச்சனைகளும், ஆளுமைக்கோளாறுகளும் ஏற்படும்.

**செயல்பாடு**

மாணவர்களிடம் காணப்படும் குறைகளை (Turnig scars into stars) நிறைகளாக மாற்றுவதற்கான வழிமுறைகள் குறித்து கலந்துரையாட வேண்டும்.

**கலந்துரையாடுக**

"நம்மையே நாம் அறிந்து உலகையும் அறிந்து எல்லோருக்கும் வேண்டியவராக, நல்லவராக, எல்லோரையும் புரிந்து கொண்டவராக, எல்லோராலும் புரிந்து கொள்ளப்பட்டவராக வாழ்வதே சொர்க்கம்."

## 5. தற்கருத்தினை உருவாக்கும் சமூகக் காரணிகள்

ஒரு நாட்டின் முன்னேற்றம், அந்த நாட்டின் குழந்தைகளின் உடல்வளர்ச்சி, மனவளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி மற்றும் சமூக வளர்ச்சியினைப் பொறுத்தே அமைகின்றது. ஒரு மாணவன் தன்னைப் பற்றி கொண்டுள்ள மனஉணர்வுகளே, அம்மாணவனின் உடல், மன, சமூக மற்றும் ஆளுமை வளர்ச்சியினைத் தீர்மானிக்கின்றது.

குழந்தை, தனது உடலியக்கங்கள், உடற்செயல்கள் ஆகியவற்றை போதிய அளவு தனது சுயகட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தபின் தான் (I), பிற (Not-me) என்ற உணர்வு எழுவது குழந்தையின் தற்கருத்து அமைவதற்கு அடிப்படையாக அமைகின்றது என்பதை நாமறிவோம். ஒரு குழந்தையின் தற்கருத்து வளர்ச்சி அக்குழந்தையின் குடும்பத்தில் உருவாகின்றது. சமூகத் தொடர்புகளில் குழந்தையின் உரிமைகள், விருப்பங்கள் மற்றும் தேவைகள் நிறைவேற்றப்படுகின்றதா என்பதைப் பொறுத்து தற்கருத்து அமைகின்றது.

**தற்கருத்து வளர்ச்சியினை தீர்மானிக்கும் சமூக காரணிகள்**

- ❖ மரபுநிலை
- ❖ பெற்றோர்களின் மனப்பான்மை
- ❖ பிறப்பு வரிசை – Birth order
- ❖ கலச்சார பழக்க வழக்கங்கள்

- ❖ சுற்றுப்புறத்தில் வசிப்போர்
- ❖ நண்பர்கள் மற்றும் ஒப்பார் குழு
- ❖ பள்ளிச் சூழல்
- ❖ ஆசிரியர்களின் அணுகுமுறை
- ❖ உடல், உளப் பாதுகாப்பு சூழல்
- ❖ திறமைகளை வளர்த்துக்கொள்ள அளிக்கப்படும் வாய்ப்புக்கள், வசதிகள்
- ❖ தகவல் தொடர்பு சாதனங்கள்
- ❖ பிறரின் கருத்துக்கள்
- ❖ ஒப்பீடுகள்.

## 6. எரிக்சன் மன - சமூக கோட்பாடு

சிந்திக்க: *Man is a bundle of contradictoin*

ஓட்டப்பந்தயத்தின் ஒரு பிரிவான தடைகளைத் தாண்டி ஓடும் ஓட்டப்பந்தயத்தில் (Obstacle Race) செயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ள தடைகளைத் தாண்டிய பின்பே ஒருவர் வெற்றி இலக்கை அடைய முடியும். அதைபோல பிறப்பு முதல் இறப்பு வரை ஒவ்வொரு பருவத்திலும் குறிப்பிட்ட சமூக சிக்கல்களையும், சமூகப் பிரச்சினைகளையும் ஒருவர் சந்திக்க வேண்டியுள்ளது. குறப்பிட்ட செயல்களைச் செய்ய உதவும் சமூகத் திறன்களையும் சமூக இணக்கத்தையும் மற்றும் சமூக முதிர்ச்சியையும் அடைய வேண்டியுள்ளது. மாணவர்கள், ஒவ்வொரு பருவத்திலும் எதிர்நோக்கும் சிக்கல்களை, முரணான மாறுபட்ட உணர்வுகளை, மனக்குழப்பங்களை, மனத்தடைகளை வெற்றிகரமாக சமாளித்து, சமூக எதிர்பார்ப்புகளுக்கேற்ப இணக்கமான நடத்தையை மேற்கொள்ள உதவுவது ஆசிரியரின் முக்கியப் பணியாகும்.

குழந்தை வளர, வளர குழந்தையின் சமூகத் தொடர்பு விரிவும், சிக்கலும் அடைகின்றது. ஒவ்வொரு நிலையிலும் எத்தகைய மன, சமூகப் பிரச்சினைகள் ஏற்படும் என்பதைப் பற்றி எரிக்சனின் கருத்துக்களை தெரிந்து கொள்வோம்.

### நினைவிற் கொள்ளுங்கள்

மனித வளர்ச்சியில் பிறப்பு முதல் இறப்பு வரை ஏற்படும் பல்வேறு மாறுதல்கள், வளர்ச்சிப் பருவம் அல்லது வளர்ச்சி நிலைகள் (Stages of Development) எனப்படும்.

ஒவ்வொரு நிலையிலும் ஒருவர் கட்டாயம் கற்றுத் தேர்ந்திருக்க வேண்டிய நடத்தைக் கோலங்கள் வளர்ச்சிசார் செயல்கள் (Development Task) எனப்படும்.

வளர்ச்சி நிலைகளில் ஏற்படும் சிக்கல்கள் வளர்ச்சி சார் சிக்கல்கள் (Development crisis) எனப்படும்.

### எரிக்சன் கோட்பாட்டின் மையக்கருத்து

எரிக்சன் கோட்பாட்டின்படி ஒருவரின் (ஆளுமை) உளவியல் – சமூக (Psycho – social) வளர்ச்சியில் எட்டு நிலைகள் உள்ளன. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும், குறிப்பிட்ட வளர்ச்சி சார்ந்த சிக்கல்கள் (Developmental crisis) ஏற்படும். இச்சிக்கல்களை வெல்லுபவர்கள் அதனோடு தொடர்புடைய வளர்ச்சி நிலையை எளிதில் பெற்றுவிடுகின்றனர். சிக்கல்களை வெல்ல இயலாதவர்கள் ஒரு குறிப்பிட்ட ஆளுமை வளர்ச்சியை பெறாமல் பின் தங்கிவிடுகின்றார்கள்.

ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் எத்தகைய மன – சமூகப்பிரச்சனைகள் ஏற்படக் கூடும் என்பதைப் பார்ப்போம்.

| நிறையாளுமை பெற்றவரின் பண்புகள் | குறையாளும் பெற்றவரின் பண்புகள் |
|---|---|
| 1. நம்பிக்கை (Trust) | அவநம்பிக்கை (Mistrust) |
| 2. தன்னாட்சி (Autonomy) | வெட்கமும், சந்தேகமும் (Shame Doubt) |
| 3. தான் தொடங்காற்றல் (Initiation) | குற்றஉணர்வு (Guilt) |
| 4. கடின உழைப்பு (Industry) | தாழ்வுணர்வு (Inferiority) |
| 5. தன்னிலையறிதல் (Identity) | தன்னிலைகுழப்பம் (Identity confusion) |
| 6. நெருக்கம் (Intimacy) | தனிமை (Isolatoin) |
| 7. படைப்பூக்கம் (Generativity) | தேக்க நிலை (Stagnation) |
| 8. நல்லிணக்கம் (Integrity) | ஏமாற்றம் (Despair) |

| வ. எண் | நிலை | சமூகச் செல்வாக்குகள் | பிரச்சனைகள் |
|---|---|---|---|
| 1. | பிறப்பு முதல் ஓராண்டு வரை | தாய் / செவிலியர் | நம்பிக்கை வைத்தல் / நம்பிக்கையின்மை |
| 2. | 2–ம் ஆண்டு | பெற்றோர் | சுதந்திரமாக இயங்குதல் / வெட்கப்படுதல் |
| 3. | 3–5 ஆண்டுகள் | ஆதாரக் குடும்பம் | தானே முற்பட்டு செயலாற்றுதல் / குற்ற உணர்வு |
| 4. | 6–ஆம் ஆண்டு முதல் பால் உறுப்புகள் முதிர்ச்சி பெறும் வரை | சுற்றுப்புறம், பள்ளி | உற்சாகமாக உழைத்தல் / தாழ்வுணர்வு |
| 5. | குமரப்பருவம் | ஒப்பார்குழு, பிற குழுக்கள் விரும்பும் தன்மை | தன்னைப் பற்றிய நிலையான கருத்து/ தன்னைப் பற்றிய தெளிவற்ற குழப்பமான கருத்து |
| 6. | முன் முதிர்பருவம் | நண்பர்கள், பால் தொடர்பு உறுப்பினர்கள், ஒத்துழைக்கும் / போட்டியிடும் தன்மைகள் | நெருக்கமான உறவும், ஒருமைப்பாட்டு உணர்வும் / தனிப்பட்ட நிலைமை |
| 7. | நடுமுதிர் பருவம் | பொறுப்புகளையும் குடும்பக் கடமைகளையும் தன்னுடன் பகிர்ந்து கொள்தல் | தாராள மனப்பான்மை / தன்னுள் ஒடுங்கிச் செயற்படுதல் |
| 8. | பின் முதிர் பருவம் | மனித இனம்/ நம் இனம் | நேர்மை / முழுமையான நம்பிக்கை இழப்பு |

தாழ்வு மனப்பான்மையும், மனித உறவில் ஏற்படும் சிக்கல்களுமே, அனைத்துக் குறைபாடுகளுக்கும் அடிப்படையாக அமைந்துள்ளன. பள்ளியில் சேர்ந்து பயிலும் சிறுகுழந்தைகள், தேவையற்ற அச்சம், கூச்சம் போன்ற தயக்க உணர்வுகள் காரணமாக பள்ளிச் செயல்பாடுகளில் பங்கேற்க விருப்பமில்லாமல் இருப்பார்கள். ஏற்கெனவே ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாக, தன்னம்பிக்கை உணர்வின்றி குழப்பத்துடன் காணப்படுவார்கள். எனவே தன்னம்பிக்கை உணர்வின்றி வகுப்பறைச் செயல்பாடுகளில் ஆர்வமின்றி தனித்திருக்கும் குழந்தைகளிடம் கலந்துரையாடி,

மனக்குழப்பங்களைப் போக்க வேண்டும். இனிமையான கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டும். வெற்றி பெறும் வாய்ப்புக்களை அதிகளவில் ஏற்படுத்திக் கொடுத்து, தன்னம்பிக்கை உணர்வை ஏற்படுத்த வேண்டும்.

**நிறையாளுமை உடையவர்களின் பண்புகளை அறிந்து கொள்வோம்**

- ❖ தன்னைப்பற்றிய உண்மையான மதிப்பீடு செய்யும் திறன்.
- ❖ பிரச்சினைகளை உண்மை நோக்கில் அணுகும் திறன்.
- ❖ பிரச்சினைகளைக்கண்டு அஞ்சாமல், நேரடியாக சந்தித்தல்.
- ❖ தானாக முன்வந்து பொறுப்புகளை ஏற்றல்.
- ❖ பிறரைச் சாராமல் சுதந்திரப் போக்கை வெளிப்படுத்துதல்.
- ❖ மனவெழுச்சிகளில் முறையான கட்டுப்பாடு
- ❖ குறிக்கோளுடைய நடத்தை.
- ❖ பிறர் நலனில் அக்கறை காட்டுதல்.
- ❖ சமூகச் செயல்பாடுகளில் அக்கறை.
- ❖ சமூக ஏற்புடன் திகழ்தல்.
- ❖ உன்னதமான இலட்சியம், கொள்கை கொண்டிருத்தல்.
- ❖ தானும், தன்னைச் சுற்றியுள்ளவர்களையும் மகிழ்ச்சியாக வைத்திருத்தல்.

## 7. மனவெழுச்சிகள்

சுற்றுப்புற சூழ்நிலைகளின் ஆதிக்கத்தை எதிர்த்தும், இணைந்தும் ஒருவர் செயல்படும்போது, நவரச உணர்ச்சி மாற்றங்களை சூழ்நிலைக்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமாகவோ, பொருத்தமில்லாமலோ, அதிகமாகவோ அல்லது குறைவாகவோ வெளிப்படுத்துகின்றார். பொருத்தமாகவும், அளவோடும் வெளியிடுபவர்கள், சமூக மதிப்போடும், செல்வாக்குடனும் திகழ்கின்றார்கள். சிலரோ தெளிவற்ற வெறுப்பூட்டும் மனவெழுச்சிகளின் காரணமாக அதிகமான பயம், பரபரப்பு, பதட்டம் போன்ற பொருத்தப்பாடற்ற நடத்தைகளை வெளிப்படுத்துகின்றார்கள். சிலர், உணர்ச்சியற்ற மரக்கட்டை போல், ஆழ்ந்த கவலையும் மனத்தளர்வும் கொண்டு மீளாத துயரத்தில் சோகம், பொறாமை மற்றும் சந்தேக உணர்வுகளுடன் நடைப்பிணமாக வாழ்ந்து கொண்டிருப்பதையும் நாமறிவோம். கசப்பான அனுபவங்கள் காரணமாக, ஒருவரின் எண்ணத்திலும், சொல்லிலும் செயலிலும் மாறுபாடுகள் காரணமாக, சமூக எதிர்பார்ப்புகளுக்கு முரணாக மனவெழுச்சிகளை வெளியிடுபவர் தன்னைப் பற்றிய எதிர்மறை எண்ணங்களையும் (எ.கா.) பிடிவாதக்காரன், சுயநலக்காரன், தொட்டாற்சிணுங்கி, சிடுமூஞ்சி, அழுமூஞ்சி பிற மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தி, முறையாக வெளியிடுபவர் உடன்பாட்டு எண்ணங்களையும் (எ.கா. நல்லவர், அன்பானவர், பொறுப்பானவர்) தோற்றுவிக்கின்றார்கள்.

இளம் வயதில் ஒருவருக்கு ஏற்படும் மனவெழுச்சி அதிர்வுகள் (Emotional shocks) ஒருவரின் ஆளுமைக் கோளாறுகளுக்கு அடிப்படையாக அமைகின்றது. எனவே மாணவர்கள், மனவெழுச்சிகளை கட்டுப்படுத்தி, பண்படுத்தி, சூழ்நிலையில் பொருத்தமாக வெளியிட்டு, மனவெழுச்சி முதிர்ச்சியும் பக்குவமும் (Emotional maturity and balancee) பெற வழி காட்டுவது ஆசிரியரின் கடமையாகும்.

மனவெழுச்சி என்பது "மனஉணர்ச்சிகள் (Simple feelings) மேலொங்கி நிற்கும் நனவு நிலை"யாகும்; உள்ளத்தையும் உடலையும் கிளர்ச்சியடையச் செய்யும்; நெருக்கடி நிலைகளில் சூழலை ஆதரித்தோ, எதிர்த்தோ அல்லது ஓடி ஒளியவோ ஒருவரைத் தூண்டும்;

மனவெழுச்சியில் ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி குறித்த மகிழ்வுணர்வு அல்லது வெறுப்புணர்ச்சி மேலொங்கி காணப்படும். மகிழ்ச்சியின் அடிப்படையிலான மனவெழுச்சிகள், வெறுப்புணர்ச்சியின் அடிப்படையில் அமைந்த மனவெழுச்சிகள் (எ.கா. சினம், அச்சம், கவலை, பொறாமை) எல்லோரிடமும் காணப்படுவது இயல்பானதாகும். ஆனால் அதிக அளவில் காணப்படுவது பல்வேறு உடல், உளநலப் பிரச்சினைகளை தோற்றுவிக்கும்.

## அன்பு அல்லது பாசம்

சிந்திக்க:

*"அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு."*

செயல்பாடு: மாணவர்கள் தங்களை அன்பால் மாற்றிய ஆசிரியரைப் பற்றி விளக்கச் செய்ய வேண்டும்.

உடல் தானம், கண்தானம், இரத்ததானம், செய்பவர்களைப் பற்றியும், தமது கோடிக்கணக்கான சொத்துக்களை பயனுள்ள ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக உயில் எழுதி வைக்கும் உயர்சிந்தனை உள்ளவர்களைப் பற்றியும் நாளிதழ்களில் படிக்கின்றோம்.

## தெரிந்து கொள்ளுங்கள்

உலகில் அனைவரும் அறிந்து கொள்ளக்கூடிய, விரும்பக்கூடிய, ஒரே மொழி 'அன்பு'.

சமூகமும் உலகமும் நலமாக வளமாகத் திகழவேண்டும் என்ற அக்கறை (Caring) உணர்வுடன், சுயநலமில்லாமல் பிறர் முன்னேற்றத்திற்காக நெருக்கமாக (Intimacy), இயல்பாக இணைந்து (Attachment) செயல்படுபவர்களையே அன்பானவர்கள் என்று அழைக்கின்றோம். (எ.கா.) எந்த அரசு உயர்பதவியிலும் இல்லாத காந்தியடிகள், இந்திய கரன்சியில் இடம் பெற்றிருப்பதற்குக் காரணம். அவர் தனக்காக வாழவில்லை; பிறருக்காக வாழ்ந்தார். புத்தர், இயேசு, முகம்மது நபி, அன்னை தெரசா போன்றோர் விண்ணைத் தொடுமளவிற்கு புகழ் பெற்றதற்குக் காரணம், அவர்கள் பிறர் மீது உண்மையான அன்பு கொண்டு செயல்பட்டதுதான் என்பதையும் நினைவிற் கொள்ளுங்கள்.

அன்பும், பரிவும் கொண்ட குடும்பம் மற்றும் பள்ளிச் சூழலில் வளரும் குழந்தைகள் தங்களின் ஆற்றலை உச்சகட்ட அளவிற்கு வளர்த்துக்கொண்டு ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சி பெறுகிறார்கள் என்பதை நாமறிவோம்.

'நான்' 'எனது' தன் சுயலாபம் – சுயசந்தோஷம்' போன்ற சுயநலமனப்பான்மையிலிருந்து, மாணவர்கள் விடுபட்டு,

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற உலக மனப்பான்மையோடு திகழ அடிப்படையாக அமைவது 'அன்பு' என்ற மென்மையான உணர்வாகும்.

மாணவர்கள் சமூகத்தின் மீதும், உலகத்தின் மீதும் அன்புடன் இருக்கப் போதுமான கற்றல் அனுபவங்களை ஏற்படுத்தித் தரவேண்டும்.

அன்பை எவ்வாறு உணர்ந்து கொள்ளலாம்?

ஒருவர் மீது பிறர் காட்டும் அக்கறை (Caring), நெருக்கம் (Intimacy), இணைந்திருத்தல் (Attachment) மூலம் அன்பை வெளிப்படுத்துகின்றோம். புரிந்துகொள்கிறோம்; பகிர்ந்து கொள்கின்றோம். இதனால் பாதுகாப்பு உணர்வினையும் (Feeling of security), நம்முடையவர் என்ற நம்பிக்கை உணர்வும் (Sense of belonging) ஏற்படும். வார்த்தைகள் மற்றும் செயல்கள் மூலமும் அன்பினை வெளிப்படுத்த வேண்டும்.

**சிந்திக்க**

பிறர் மீது, சமூகத்தின் மீது, உலகின் மீது அன்பு கொண்டு செயல்படுவதால், அனைவருமே நலமாக வளமாக வாழலாம். அன்போடும், பரிவோடும் மாணவர்களை கையாள்வதால், மாணவர்கள் உடன்பாட்டு தற்கருத்து, தன்னம்பிக்கை, காப்புணர்ச்சி போன்ற நல்ல மனப்பாங்கினை வளர்த்துக்கொண்டு சூழ்நிலையில் பொருத்தப்பாட்டுடனும், மனநலத்துடன் விளங்குவார்கள்.

### செயல்பாடு

பாராட்டுதல், புன்னகை புரிதல், திறமைகளை வளர்த்துக் கொள்ள உதவுதல், பரிசுகள் போன்ற செயல்களின் மூலம் மாணவர்களின் மீது கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்தலாம்.

திருக்குறளில் அன்புடைமை என்ற அதிகாரத்தில் உள்ள குறட்பாக்களின் கருத்துக்களைப் பள்ளிச் செயல்பாடுகளில் எவ்வளவிற்கு எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என விவாதிக்க.

(எ.கா) அன்பும் பரிவும் கொண்ட வகுப்பறைச் சூழல் கற்றல் அடைவுகளை ஊக்குவிக்கும் பாதிக்கும் என்ற தலைப்பில் பட்டிமன்றம் ஏற்பாடு செய்யலாம்.

## பரிவு

**சிந்திக்க**

*"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"*

"உங்களைக் கையாள்வதற்கு மூளையையும் பிறரைக் கையாள்வதற்கு இதயத்தையும் பயன்படுத்துங்கள்."

"பிறரது உணர்வுகளையும் மனவெழுச்சிகளையும் நம்முடையதாகக் கொள்ளும் மென்மையான மன உணர்வுகள் பரிவு அல்லது ஒத்துணர்வு" எனப்படும்.

உலகைப் பற்றிய புரிதலோடும், அறிவோடும், பிறர் நலன் மீதும், அவர்களின் உணர்வுகள் மீது அக்கறையோடும் செயல்படுவதற்கு 'பரிவு' உறுதுணையாக அமைந்துள்ளது. பரிவு உணர்வு கொண்ட சமூக சிந்தனையாளர்களின் முயற்சியாலேதான், இன்று நாம் பல்வேறு சலுகைகளையும், வசதிகளையும் பெற்று அனுபவித்து வருகிறோம்.

அன்பும் பரிவும் கொண்ட குடும்பத்தில் வாழும் குழந்தை சிறந்த உடல்நலத்தையும், உளநலத்தையும், பெற்று வளருகின்றது என்பதையும்,

அன்பும் பரிவும் கொண்ட வகுப்பறைச் சூழலில் பயிலும் குழந்தை, தனது ஆற்றல்களை உச்சக்கட்ட அளவிற்கு வளர்த்துக் கொள்கின்றது என்பதையும் ஏற்கனவே நாம் அறிந்துள்ளோம். பரிவு எவ்வாறு ஒரு மனிதனின் மேம்பாட்டிற்கு உதவுகின்றது என்பதைத் தெரிந்துகொள்வோம்.

- பிறரது இன்ப துன்பங்களில் பங்கெடுத்தல்; சமூக நலச்செயல்களை மேற்கொள்ளுதல்;
- வாழ்க்கை இலட்சியங்கள் மேல் வலுவான மதிப்பை உருவாக்குதல்;
- பயனுள்ள சமூகமனப்பான்மைகளையும், மதிப்புகளையும் பழக்கவழக்கங்களையும் பின்பற்றுதல்;
- ஒற்றுமை உணர்ச்சியோடு செயல்படுதல்;
- ஆசிரியர் மாணவர் நல்லுறவு பேணுதல்;
- சிறப்பான கற்றல் அடைவுகள் பெறுதல்;

கலை இலக்கியத்தை இரசித்தல் போன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளை ஒருவர் மேற்கொண்டு சமூகத்தில் பக்குவமாக பேசவும், பழகவும், வாழவும் பரிவு அடிப்படையாக அமைந்துள்ளது.

(எ.கா.)

எங்கோ நிகழும் ஆழிப்பேரலை (சுனாமி), விமான அணுஉலை விபத்துக்களைப் பற்றிக் கேள்விப்படும்போது, பாதிக்கப்படும் மக்களைக் குறித்துமனம் பதைபதைப்பது பரிவு உணர்வின் காரணமாகத்தான் என்பதை அறிந்துகொள்க.

## திட்டமிடுங்கள் செயல்படுத்துங்கள்

சமூக நலவாழ்வு, கூட்டுவாழ்க்கை, சிறந்த ஆசிரியர் – மாணவர் நல்லுறவு, சிறப்பான கல்வி அடைவுகள் மற்றும்பிற சமூக நலச் செயல்களுக்கும் அடிப்படையாக 'பரிவு' அமைந்துள்ளது. எனினும் தவறான முறையில் திட்டமிடப்பட்டு ஏற்படுத்தப்படும் பரிவு உணர்வினால் நாட்டில் குழப்பமும், வன்முறைகளும் சாதி, மத பூசல்களும் ஏற்பட்டு, சமூக அமைதிக்குப் பாதகம் ஏற்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

ஆகவே ஆசிரியர்கள், மாணவர்கள் பரிவு உணர்வினை நல்ல சமூக பண்புகள், சமூக மனப்பான்மைகள், சமூக மதிப்புகள், சீரிய குறிக்கோள்கள் மீது ஆழ்ந்த நம்பிக்கை கொள்ளும் வண்ணம் கற்றல்அனுபவங்களை அமைத்துத் தரவேண்டும்.

## செயல்திட்டம்

மாணவர்களிடம், தவறான பரிவு உணர்வின் காரணமாக காணப்படும் பல்வேறு பிரச்சனைகளை களைவதற்கான செயல்பாடுகள் குறித்து குழுவிவாதம் செய்ய வேண்டும்.

## மகிழ்ச்சி அல்லது இன்பம்

### சிந்திக்க

"உற்சாகமில்லாமல்பெரிதாக எதுவுமே, எப்போதுமே சாதிக்கப்படவில்லை."

ஒருவர் அன்புடனும், தன்னம்பிக்கையுடனும், பொறுமையுடனும் புன்னகையுடனும் கனிவாகவும், செயல்பட்டு,பிறரால் விரும்பத்தக்கவராக, மதிக்கப்படுபவராகத் திகழ, 'மகிழ்ச்சி' என்ற நல்ல மனப்பாங்கு (Positive Attitude) அடிப்படையாகத் திகழ்கின்றது. போட்டிகளில் வெற்றி பெறுதல், கல்விச் சுற்றுலாவில் கலந்து கொள்ளுதல். நாடகத்தில் நடித்தல் போன்ற செயல்பாடுகள் மாணவனுக்கு மகிழ்ச்சியைத் தருகின்றது என்பதை நாமறிவோம். மகிழ்ச்சி என்பது, 'ஒரு இலக்கை அடைய முயன்று, வெற்றி பெறுவதால்' ஏற்படும் மன உணர்வாகும். சிறு குழந்தைக்கு தனது உடல் தேவைகள் நிறைவடைவது (எ.கா.) உடலை பிறர் கனிவுடன் வருடிக்கொடுத்தல், கை கால்களை விருப்பப்படி சுதந்திரமாக ஆட்டுதல்) மகிழ்ச்சியைத் தருகின்றது; சிறிது வளர்ந்தபின், தாய், தந்தை, நண்பர்களுடன் பழகுதல், விளையாட்டு, வெற்றிகள், சாதனைகள் போன்றவை மகிழ்ச்சியை அளிக்கின்றது; குமரப்பருவத்தில், பணியிலும் சமூகத் தொடர்புகளிலும் மனநிறைவு, திறமையை வெளிக்காட்டும் சந்தர்ப்பங்கள், நகைச்சுவை நிலைமைகள் போன்றவை மகிழ்ச்சியைத் தருகின்றது.

மகிழ்ச்சியான கற்றல் சூழல் கற்றலை ஊக்குவிக்கும்; மகிழ்ச்சியான குடும்ப சூழல், சிறந்த பண்புகளை வளர்க்கும் என்பதை நாமறிவோம். குழந்தையின் இரண்டாவது இல்லமாக விளங்கும். பள்ளி, கலை உணர்வுடனும் வகுப்பறைகள் சுத்தமாகவும், பாதுகாப்புடனும், அழகுடனும் திகழ்வது மாணவர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். புன்னகை, கனிவுடன் விளங்கும் ஆசிரியர்களும், வெற்றிபெறும் கற்றல் அனுபவங்களும் மாணவர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கின்றது.

### செயல்பாடு

மாணவர்களுக்கு மகிழ்ச்சியை தரும் விஷயங்களை பட்டியலிடுதல் (எ.கா)

- பள்ளி விழாக்கள், பரிசு, பாராட்டுக்கள்
- கலை நிகழ்ச்சிகள்
- உல்லாசப் பயணம்
- விருப்பமான ஓய்வு நேரச் செயல்கள்.
- தன்னுணர்வுத் தேவைகள் மதிக்கப்பட்டு, நிறைவடைதல்.
- நகைச்சுவை நிலைமைகள்
- பிறரால் ஏற்றுக்கொள்ளப்படுதல்

இதுபோன்ற பல்வேறு விஷயங்களைப் பட்டியலிடுங்கள்: வகுப்பறைச் செயல்பாடுகளில் நிறைவேற்றுங்கள்.

மகிழ்ச்சியில் நகைச்சுவை உணர்வு மிக முக்கிய பங்கு வகிக்கின்றது. மாணவர்களின் மன இறுக்கத்தைத் தவிர்க்க, களைப்பைப் போக்க, புத்துணர்வுடன் செயல்பட நகைச்சுவை அவசியம்.

*"சிரித்து வாழ வேண்டும்; பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே"*

பிறருடன் சேர்த்து சிரிக்கின்ற, பயனுள்ள நகைச்சுவை உணர்வினை மாணவர்களிடம் வளர்க்க வேண்டும். பிறரைப் பார்த்து பரிகாசமாகச் சிரிக்கும் வக்ர உணர்வுள்ள நகைச்சுவை அபாயகரமானதாகும். பெண்களையும், ஊனமுற்றவர்களையும், இயலாதவர்களையும் இழிவுபடுத்தும் கருத்துக்கள் மற்றும் புண்படுத்தும் சொற்களும் கொண்ட நகைச்சுவை உணர்வை மாணவர்களிடம் அப்புறப்படுத்த வேண்டும்.

## சினம்

சிந்திக்க

*"ஆத்திரக்காரனுக்கு புத்திமட்டு*
*சினம் எனும் சேர்ந்தாரைக் கொல்லி"*

சினம், உடல்ரீதியாகவும் நடத்தை ரீதியாகவும், அறிவு ரீதியாகவும், பல தீயவிளைவுகளை ஏற்படுத்தும். தன்னையும், பிறரையும் கெடுத்து எப்போதும் துன்பத்தை நீடிக்கச் செய்யும் மனஉணர்ச்சியாகும்.

- நம்மால் தாங்கிக்கொள்ளவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாத நிகழ்ச்சிகள் நடக்கும் போதும்;
- பிறர் நமக்கு தீங்கிழைக்கும் போதும், ஏமாற்றும் போதும், நம்பிக்கையை தகர்க்கும் செயல்களை செய்யும் போதும்;
- நமது அதிகப்படியான எதிர்ப்பார்ப்புகளாலும், யதார்த்தமற்ற ஆசைகளாலும்,
- கடந்த கால நிகழ்வுகள், கவலைகள் பற்றிய தேவையற்ற எண்ணங்களாலும் சினம் ஏற்படுகின்றது.

**சிந்திக்க**

“ஒரு நாள் கோபம் பலநூற்றாண்டு சிறப்புகளை அழித்துவிடும்.”

ஒருவர் வன்முறைச் செயல்கள், தீய சொற்களால் பிறரைக் காயப்படுத்துவதன் மூலமும் சினத்தை வெளிப்படுத்துகின்றார்.

**செயல்பாடு**

1. செய்தித்தாள்களில், கோபத்தினால், ஆத்திரத்தினால் நடந்த நிகழ்ச்சிகளை கோடிட்டு படிக்கச் செய்ய வேண்டும். பின்பு கோபத்தினால் ஏற்பட்ட தீயவிளைவுகளை ஆதாரப்பூர்வமாக புரியச் செய்து கோபத்தை தவிர்க்க ஆலோசனை கூற வேண்டும்.
2. கோபத்தினால் விளையும் தீய கடுஞ்சொற்களை மாணவர்களிடம் கேட்டறிந்து, கரும்பலகையில் எழுதி கடுஞ்சொற்களால் பிறரின் தற்கருத்துஉணர்வுகள் எவ்வாறு பாதிக்கப்படும் என்பதை எடுத்துரைத்து தீயசொற்களைப் பயன்படுத்துவதை தவிர்க்க ஆலோசனை கூற வேண்டும்.
3. ‘கோபத்தினால் விளைவது நன்மையே/தீமையே’ என்ற தலைப்பில் பட்டிமன்றம் நடத்தி, ஆக்கப்பூர்வமான சிறு கோபங்களினால் விளையும் நன்மைகளையும், பெரும் கோபம் தீமையை விளைவிப்பதையும் எடுத்துரைக்க வேண்டும்.
4. அடிக்கடி சினமடைவதால் ஏற்படும் உடல், உளப் பிரச்சனைகளை[(எ.கா.) குடற்புண் சிந்தனையில் குழப்பம் (Thought Distrubance) உணர்ச்சி மாற்றங்கள் (distrubance in mood)] எடுத்துரைக்க வேண்டும்.

வகுப்பறைச் செயல்பாடுகளில் ஆசிரியர் தவிர்க்க வேண்டிய விஷயங்கள்

❖ முன்னுக்குப் பின் முரணான கட்டளைகள்.

❖ ஓய்வில்லாது, அதிக நேரம் வேலை செய்யப் பணித்தல்.

❖ பிற மாணவர்கள் முன்பாக குறை கூறுதல்.

❖ ஏளனமான, கடுமையான வார்த்தைகளால் திட்டுதல்.

❖ வெறுப்பைத் தரும் உடல் தண்டனைகள்.

❖ பாரபட்சமான நடத்தைகள்.

**சிந்திக்க**

*தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்*
*தன்னையே கொல்லுஞ் சினம்.*

சினஉணர்வு நம்மிடம் அடிக்கடி ஏற்பட்டால்,

❖ பிறர் நம்மை விட்டு மனதளவில் விலகியே நிற்பார்கள்.

❖ நமது உடல் நலமும் மனநலமும் வெகுவாகப் பாதிக்கப்படும்.

❖ அன்றாட வாழ்வுநிலையில் தடுமாற்றமும் குழப்பமும் அதிகரிக்கும்.

மாணவர்களிடம் சுயகட்டுப்பாடு உணர்வினை வளர்த்தல், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையை வளர்த்தல், கலைநிகழ்ச்சிகளில் ஈடுபடுத்துதல், ஆர்வமுள்ள செயல்களில் பங்குபெறச் செய்தல், ஆலோசனைகள் கூறுதல் போன்ற செயல்பாடுகளை மேற்கொள்வதன் மூலம், மாணவர்களின் சின உணர்வினை குறைக்கலாம்; களையலாம்; தடுக்கலாம்.

## பொறாமை

பொறாமை என்பது “ஓரளவு அச்சமும், சினமும் கலந்த சிக்கலான வீணான” மனவெழுச்சியாகும்; “யாரையோ, எதையோ எதிர்த்து உருவாகும் தீவிர உணர்வாகும்” விரும்பத்தகாதவிளைவுகளுக்கு வரவேற்பு வளையம் வைக்கும், நஷ்டம் தரும் உணர்வாகும்; “சந்தேகம், பயம், பிறர் குறித்த கணிப்பின் காரணமாக” ஏற்படும் உணர்வாகும்.

‘நெருப்பு விறகினை சுட்டெரித்து விடுவதைப்’ போல பொறாமை மனிதனின் அனைத்து நல்லியல்புகளையும் அழித்து, சிந்தனைத்திறனையும், செயல்திறனையும் பாதிக்கும்; பிறரைத் திட்டுதல், புறங்கூறுதல், பிறர் வளர்ச்சியை தடை செய்ய முற்படுதல். சண்டையிடுதல், எதிர்ப்பு மனப்பான்மை, அனுசரித்து போகாமலிருத்தல் போன்ற பொருத்தப்பாடற்ற நடத்தைகள் மூலம் ஒருவர் பொறாமையை வெளிப்படுத்துகிறார்.

**சிந்திக்க**

தனது அன்புக்குரியவர்களின் ஆதரவை இழந்து விடுவோம் என்ற பய உணர்வு.

தான் புறக்கணிக்கப்படுகிறோம் (Feeling of Rejection) என்ற பயம்.

பிறரோடு ஒப்பிட்டுப் பார்ப்பதால் ஏற்படும் தாழ்வு மனப்பான்மை.

அளவு கடந்த எதிர்பார்ப்புகள், பேராசைகள்

தயக்கம், போட்டி மனப்பான்மை, சார்பெண்ணங்கள்.

இத்தகைய எதிர்மறை மனவெழுச்சிகளை மடைமாற்றம் செய்ய வேண்டும்.

### பொறாமைக் குணத்தை களைவதற்கான வழிமுறைகள்

- பிறரது வெற்றிக்கு உறுதுணையாக இருத்தல்.
- பிறரது திறன்களை மனதாரப் பாராட்டுதல்.
- தன்னம்பிக்கையினை வளர்த்துக் கொள்ளல்.
- திறமைக்கேற்ற குறிக்கோள்களையும் எதிர்பார்ப்புகளையும் வளர்த்துக் கொள்ளல்.
- மற்றவர்களின் வெற்றிகளை, சாதனைகளை, தன்னை உற்சாகப்படுத்தும் காரணிகளாக கருதும் மனோபாவத்தை வளர்த்தல்.
- ஒப்பிட்டுப்பார்த்து நொந்து போகுதல் அல்லது கர்வம் அடையும் மனப்பான்மையை விட்டொழித்தல்.

**சிந்திக்க**

*“அழுக்காறு எனஒருபாவி திருச்செற்றுத்*
*தீயுழி உய்த்து விடும்”*

### அறிந்து கொள்க

பொறாமையின் காரணமாக பழிவாங்குதல், திட்டமிட்டு அழித்தல், ஆத்திரமாக செயல்படுதல், அவதூறு பேசுதல் போன்ற எதிர்மறை எண்ணங்கள் மற்றும் பொருத்தப்பாடற்ற நடத்தைகள் ஒருவரிடம் தோன்றுவதால் பல்வேறு உடல்நலச் சீர்கேடுகளும், (எ.கா) உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா, குடற்புண், மனநலப் பிரச்சினைகளும் உருவாகும்.

### செயல்பாடு

பொறாமைக்குணம் 'அருவெருப்பான குணம்' என்பதை மாணவர்கள் புரிந்து கொள்ள உதவும் உண்மைச் சம்பவங்கள், கதைகள், பழமொழிகளை அடிக்கடி வகுப்பறையில் கூறுதல்.

### நீதிநெறி விளக்கம் அளிக்க

*"தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை*
*அம்மா பெரிதென் றகமகிழ்க – தம்மின்*
*கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றவெலாம்*
*எற்றே இவர்க்குநாம் என்று"*

## அச்சம் அல்லது பயம்

**சிந்திக்க:**

*"அஞ்சி அஞ்சி சாவார் இவர் அஞ்சாத பொருளில்லை – அவனியிலே"*

அச்சம் என்பது மனிதர்களிடம் காணப்படும் வெறுப்பூட்டும், எதிர்மறை மனவெழுச்சியாகும். பாதுகாப்பற்ற உணர்வு, தன்னம்பிக்கையின்மை, எதையும் ஒத்திப் போடுதல் போன்ற எதிர்மறை உணர்வுகளை ஏற்படுத்தி ஒருவரின் படைப்பாற்றலை, நினைவாற்றலை, புதிய சிந்தனைகளை தடைசெய்யும்; மனவெழுச்சி கலக்கத்திலான நடத்தைகளையும் தவறான அணுகுமுறைகளையும் பின்பற்றச் செய்யும்; மனப்பதட்டம், வெட்கம் (shyness) தாழ்வு மனப்பான்மை (Inferiority Complex) யை ஏற்படுத்தும்.

### மாணவர்களிடம் அச்ச உணர்வை ஏற்படுத்தும் காரணிகள்

எதையும் சரியாக புரிந்து கொள்ளாமை.

கூச்சம், அவமானம் தரும் நிலைமைகள்.

தன்மதிப்பை தாக்கும் சூழல்கள் (Hurting pride)

உடல்தோற்றம், புலன் குறைபாடுகள்

அரைகுறை உண்மைகள் (Half truth) திரிக்கப்பட்ட கருத்துக்கள் (misrepresentatation truth)

தான் சொல்வதும், செய்வதும் சரியா / தவறா என்ற தயக்கஉணர்வு

எதிர்மறை தற்கருத்துக்கள்

பெற்றோர் / ஆசிரியர்களின் அணுகுமுறைகள்

கற்றல் குறைபாடுகள்

அன்றாட வாழ்க்கைச் சூழலுக்கு மாறான எதிர்பாராத நிகழ்ச்சிகள்

பள்ளியில் சேரும்போதே பல்வேறு அச்சங்களுடன் (எ.கா. பெரியவர்களின் அணுகுமுறை, நடத்தை சுய அனுபம்) நுழையும் மாணவர்கள், பள்ளியிலும் பல்வேறு புதிய அச்சங்களை (எ.கா.: புதிய மனிதர்கள், புதிய அனுபவங்கள், புதிய சூழல்) சந்திக்க நேரிடுகின்றது. தனக்கு எதிரே நிகழும் ஆபத்தான தூண்டல்களுக்கு அச்சப்படும் மாணவன் பின்னர் எதிர்காலத்தில் நிகழக்கூடிய ஆபத்துக்களுக்கும், கற்பனையில் தோன்றும் ஆபத்துக்களுக்கும் (எ.கா. விளையாட்டு போட்டியில் தோற்றுவிடுவோம்; ஆண்டு இறுதித் தேர்வில் தவறி விடுவோம்) அச்சப்படுகின்றார்கள்.

அச்சம், மாணவர்களை சக்தியற்றவர்களாக எதற்கும் தகுதியற்றவர்களாக மாற்றும்; உடல் நலத்தையும், மன நலத்தையும், கல்வி அடைவுகளையும் பாதிக்கும்.

பலநேரங்களில் கற்பனையான அச்சங்கள், சாதாரண பிரச்சினையைப் பூதாகரமாக்குகின்றது. தோல்வி குறித்த அச்சங்கள், தோல்வியை விட மோசமாக இருப்பதை நாமறிவோம். திரிக்கப்பட்ட கருத்துக்களாலும், அரைகுறை உண்மைகளாலும், கற்பனை உணர்வுகளாலும் அச்சம் மிகைப்படுத்தப்படுகின்றது.

மாணவர்களிடம் காணப்படும்

தோல்வி குறித்த அச்சங்கள்
அறியாதவை குறித்த அச்சங்கள்
தயாராக இல்லாமை குறித்த அச்சங்கள்
தவறான முடிவெடுத்து விடுவோம் என்கிற அச்சங்கள்
புறக்கணிக்கப்படுவோம் என்ற அச்சங்கள்

உண்மையான நிலையை எடுத்துக்கூறி, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

'அஞ்சுவது அஞ்சாமை பேதமை' சிறிதளவு அச்சம் தீங்குகளிலிருந்து பாதுகாத்து, மதிப்புடன் திகழ உதவும். ஆனால் காரணமற்ற தீவிரமான அச்சம் உடல், உள நலத்தை கெடுக்கும்.

## செயல்திட்டம் –1

மாணவர்களிடம் சமூகத்தில் அச்சப்பட வேண்டிய விஷயங்கள் குறித்த விழிப்புணர்வை எவ்வாறு ஏற்படுத்தலாம், என்பது குறித்து கலந்துரையாடுதல்.

பயம் என்பது உண்மைபோல் தோன்றக்கூடிய பொய் (Fear mean False Evidence Appear Real) என்பதை விளக்க வேண்டும்.

தன்னம்பிக்கை உணர்வுடன் செயல்பட ஆரம்பிக்கும்போது அச்சங்களை மறந்து, தடைகளைத் தாண்டி வெற்றி பெற இயலும். எனவே மாணவர்களிடம் உண்மைச் சம்பவங்கள், நம்பிக்கையூட்டும் கதைகள் பழமொழிகள் கூறுவதன் மூலம் அச்ச உணர்வைப் போக்கலாம்.

எ.கா. இருட்டைக்கண்டு பயந்த தாமஸ் ஆல்வா எடிசன், வெளிச்சம் தரும் மின்விளக்கை கண்டு பிடித்தது.

ஆபத்தான நிலைமைகளோடு சிறிது சிறிதாக தொடர்பு கொள்ளும் பயிற்சி (Gradual Initiation) அளித்தல்.

சரியாகத் திட்டமிட்டு, தன்னை தயார் செய்து கொண்டு செயலில் இறங்குவதால் மட்டுமே ஒருவர் வெற்றியடைய முடியும். எனவே மாணவர்கள் தாங்கள் அச்சப்படும் விஷயங்களிலிருந்து விடுபடுவதற்காக, அவ்விஷயங்களில் சிறிது சிறிதாக தொடர்பு கொண்டு, தன்னம்பிக்கையுடன் செயல்பட்டு பிரச்சினையை தீர்த்துகொள்ளும் பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

(எ.கா.) பிரச்சினை

ஒரு மாணவனுக்கு மேடையில் பேசுவதற்கு ஆசை ஆனால் பயம்.

## தீர்வு

வகுப்பறையில் விருப்பமான விஷயங்களைப் பேசச் செய்தல்; பின்பு பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசச் செய்தல்; பின்பு மேடையில் அறிக்கை வாசிக்கும் வாய்ப்பு அளித்தல், பின்பு மேடையில் பேசச் செய்தல்.

**செயல்திட்டம் – 2**

“ஆங்கிலத்தில் பேச முடியாது” “எதிர்பாலாருடன் இயல்பாக பேச இயலவில்லை” “கணக்குப் பாடத்தில் தோல்வி அடைந்து விடுவேன்” பேச்சுப் போட்டியில் கலந்து கொள்ள பயமாக உள்ளது” போன்ற பல்வேறு அச்சங்கள் மாணவர்களிடம் காணப்படுகின்றது.

- உங்கள் வகுப்பறையில் மாணவர்களிடம் காணப்படும் அச்சங்களிலிருந்து விடுபட மனநலமருத்துவரின் ஆலோசனை பெறுதல்.
- தோல்விகளை ஏற்றுக்கொண்டு விடாமுயற்சியுடன் செயல்படுவதால் அச்சங்களிலிருந்துவிடுபட முடியும் என்பதை மாணவர்கள் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு ஆலோசனை வழங்குதல்.

**கவலை**

**சிந்திக்க**

*“சென்றதினி மீளாது மூடரே நீர் எப்போதும்*
*சென்றதையே சிந்தை செய்து*
*கொன்றழிக்கும் கவலையெனும் குழியில்*
*வீழ்ந்து குமையாதீர்”*

கவலைகள், மனிதர்களிடம் அர்த்தமற்ற வாழ்க்கை, ஏக்கம், ஏமாற்றம், தனிமை, வெறுப்பு, சோர்வு, மனக்கசப்பு, உடல் நலச்சீர்கேடுகள், மனஅழுத்தம் போன்ற வெறுப்பூட்டும் உணர்வுகளை தோற்றுவிக்கின்றது. மேலும் கவலை, ஒருவரை சக்தியற்றவராக எதற்கும் தகுதி அற்றவராக மாற்றிவிடும்.

‘இது இப்படியிருந்திருக்கலாம்’ ‘நான் இதைச் செய்திருக்க வேண்டும்’, ‘நான் இதைச் செய்திருக்க முடியும்’ ‘இதை நான் மட்டும் செய்திருந்தால்’ ‘நான் இன்னும் கொஞ்சம் அதிக முயற்சி எடுத்திருந்தால்’ போன்ற வாக்கியங்களை அடிக்கடி பயன்படுத்துபவர்களிடம் கவலையும், மன அழுத்தமும், ஏக்கமும் இருப்பதை காணமுடிகிறது.

**நினைப்பதற்கும் நடப்பதற்கும் இடையே காணப்படும் முரண்பாடுகள் கவலைக்கு அடிப்படை** காரணமாக அமைகின்றது. திறமையின்மை, அச்சம், பிரச்சினை குறித்த விழிப்புணர்வு, பேராசை காரணமாக தனது இயலாமையை உணர்ந்து, நினைத்து வருந்தி அமைதி இழந்து காணப்படும் மனோநிலை ‘கவலை’ எனப்படும்.

**அதிக அளவில் கவலைப்படுவதின் விளைவுகள்**

- தெளிவற்ற மனநிலை
- எரிச்சல்
- மன அழுத்தம், மனப்போராட்டம்
- சுவாசநோய், இரத்த அழுத்தம் போன்ற பல்வேறு உடல்நலச் சீர்கேடுகள்
- சமூகவிரோதச் செயல்களில் ஈடுபடுதல்
- மாயத்தோற்றம் (Visual Hallucination)
- மாயஒலி (Auditory Hallucination) போன்ற மனநலப்பிரச்சினைகள்.

**மாணவர்களிடம் கவலை ஏற்படுத்தும் காரணிகள்**

- பெற்றோர் / ஆசிரியர்களின் அளவு கடந்த எதிர்ப்பார்ப்புகள்
- தொடர் தோல்வி, அவமானங்கள்
- குற்ற உணர்வுகள்
- சுயமரியாதை இழப்பு; பிறரின் புறக்கணிப்பு
- ஏளனமான வார்த்தைகள்
- உடல் தோற்ற குறைபாடுகள்
- அன்பும் பரிவுமற்ற ஆசிரியர்கள், நண்பர்கள், பெற்றோர்கள்.
- கற்றல் குறைபாடுகள்
- ஞாபகசக்தி குறைபாடுகள்
- வீட்டிலும், பள்ளியிலும் அதிக கண்டிப்பு.
- ஆரோக்கியமற்ற வகுப்பறை உறவுகள்.

**செயல்பாடு:** தன்னம்பிக்கையை வளர்த்தல்

கவலைகளை இருவழிகளில் சந்திக்கலாம். ஒன்று (Fight) எதிர்த்து போராடுதல், இன்னொன்று (Flight) தப்பித்து ஓடுதல்.

மாணவர்களிடம் கவலை தரும் பிரச்சினைகளின் தன்மை குறித்து கலந்துரையாடி, விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பலவீனங்களை வெளிப்படையாக ஒத்துக்கொண்டு, பலவீனங்களை களையும் முயற்சியில் தொடர்ந்து மாணவர்கள் ஈடுபடும் விதத்தில் தன்னம்பிக்கையை வளர்த்து உதவவேண்டும்.

(எ.கா)

தாமஸ் ஆல்வா எடிசனின் ஆய்வுக்கூடமும், தொழிலகமும் தீப்பிடித்து எரிந்ததில், அவரது 20 வருட ஆராய்ச்சிக்குறிப்புகளும் எரிந்து போயிற்று. அவரது மனைவி இச்சம்பவம் குறித்து கவலைப்பட்டு அழுதார். அவருக்கு ஆறுதல் கூறும்போது, தாமஸ் ஆல்வா எடிசன் 'கவலைப்படாதே திரும்பவும் முதலில் இருந்தே எல்லாவற்றையும் தொடங்கிடலாம்' என்று கூறினார். தொடர்ந்து முயற்சி செய்து பல்வேறு அரிய கண்டுபிடிப்புகளைக் கண்டுபிடித்து புகழ்பெற்றார்.

இதுபோல் பல்வேறு உண்மைச் சம்பவங்களை எடுத்துக்கூறி தன்னம்பிக்கையை வளர்க்க வேண்டும்.

## சிந்திக்க

பலவீனர்கள் பாதையில் தடைக்கற்கள். ஆனால் பலசாலிகளின் பாதையில் படிக்கற்கள்.

- தம்மிடம் இல்லாத திறமைகளை குறித்து கவலைப்படுவதற்குப் பதிலாக தன்னிடமுள்ள திறமைகளின் அளவை வளர்த்துக் கொள்ளப் பயிற்சி அளிக்க வேண்டும்.
- அறிவுக்கும், திறமைக்கும், ஆர்வத்துக்கும் ஏற்ற எதிர்பார்ப்புக்களை, லட்சியங்களை உருவாக்கிக் கொள்ள உதவ வேண்டும்.
- துணிவு + தெளிவு + திட்டமிட்ட உழைப்பு என்ற சரியான வாழ்க்கை முறையைப் பின்பற்றுவதன் மூலம் கவலைகளின் பாதிப்பிலிருந்து விடுபடலாம்.

கவலைகள் வாழ்வில் ஏற்படுவது இயல்பு. ஆனால் உயர்வுதரும் எண்ணங்களை வளர்த்துக் கொண்டு, தொடர்ந்து முயற்சி செய்வதன்மூலம் கவலைகளின் பிடியிலிருந்து உடனடியாகவும் முழுமையாகவும் விடுபட்டு சிறப்புடன் வாழலாம்.

*எண்ணும் எண்ணங்கள் யாவினும் வெற்றி*
*எங்கும் வெற்றி எதிலும் வெற்றி*

## 8. பெற்றோர் - குழந்தை உறவு

"பாராட்டுதலோடு வளரும் குழந்தை பிறரைப் பாராட்டவும்
பகைமையோடு வளரும் குழந்தை சண்டையிடவும்
ஊக்கத்தோடு வளரும் குழந்தை தன்னம்பிக்கையுடனும்
அவமானத்தோடு வளரும் குழந்தை குற்றஉணர்வினையும்
அங்கீகாரத்தோட வளரும் குழந்தை தன்னைத் தானேவிரும்பலும்
விமர்சனத்தோடு வளரும் குழந்தை குறை கூறவும்
பாதுகாப்போடு வளரும் குழந்தை நம்பிக்கையோடு செயல்படவும்
கற்றுக் கொள்கின்றார்கள்.

பெற்றோர்களால் ஏற்றுக் கொள்ளப்படுதல், பாதுகாப்புணர்வு பெறுதல் மற்றும் அன்பு செலுத்தப்படுதல் போன்ற மகிழ்ச்சி தரும் உணர்வுகளின் அடிப்படையில் உறவுகள் அமைந்திருந்தால் குழந்தை ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியைப் பெறுகின்றது.

**தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவையத்து முந்தி யிருப்பச் செயல்.**

அதிகார மனப்பான்மை, சுயநலம், பேராசை, நிராகரிக்கும் தன்மை, சீற்றம் எதற்கும் தலையாட்டும் குணமுடைய பெற்றோர்களிடம் வளரும் குழந்தை உடல் ரீதியாக, உணர்வு ரீதியாக பல்வேறு சிக்கல்களை, அவமானங்களை சந்திக்கின்றது.

*"அன்பான அமைதியான மகிழ்ச்சியான*
*குழந்தைப் பருவத்தை குழந்தைக்குத் தருவதுதான்*
*பெற்றோர், தங்களின் குழந்தைகளுக்குத் தரும்*
*பெரும் சொத்து"*

*என்கிறார் ஒரு உளவியலறிஞர்.*

ஆரோக்கியமற்ற உறவுகளும் (Poor Interpersonal Relationship), தாழ்வு – மனப்பான்மையும் (Inferiority Complex) அனைத்துப் பிரச்சினைகளுக்கும் ஆணிவேராக அமைந்துள்ளன. எனவே, குழந்தை பெற்றோர் உறவு, நம்பிக்கை, அன்பு, பாதுகாப்பு, மனநிறைவு, சுதந்திரம், வேற்றுமையில் ஒற்றுமை போன்ற உணர்வுகளின் அடிப்படையில் அமைந்திருக்க வேண்டும். மேலும் வேதனைகளும், சோதனைகளும் நிறைந்த உலகில் குழந்தை சிறந்த பொருத்தப்பாட்டுடன் வாழ்வதற்கு வழிகாட்டும் வகையிலும் அமைந்திருக்க வேண்டும்.

குழந்தையிடம் பிரியமாகவும், அக்கறையோடும், பரிவாகவும், பயனாகவும், உண்மையாகவும் இருக்க வேண்டும். மேலும் குழந்தைக்கு உலகை ரசிக்க, மனித மாண்புகளை மதிக்க, உணர, பிறரோடு பழக, சாதிக்க கற்றுத்தரவும் வேண்டிய பொறுப்பு பெற்றோரைச் சார்ந்ததாகும். இதற்கு பெற்றோர்கள் 'மூன்று A' க்களை அறிந்து கடைப்பிடிக்க வேண்டும்.

பெற்றோர்கள் கடைப்பிடிக்க வேண்டிய மூன்று 'A'க்கள்

Accept – ஏற்றுக் கொள்ளுதல் – (நிறை குறைகளுடன்)

Adjust – அனுசரித்தல் (உணர்வுகளை மதித்தல்)

Appreciate – பாராட்டுதல் (வெற்றிகளையும், முயற்சிகளையும்)

குழந்தைகளை நிறை குறைகளோடு ஏற்றுக் கொண்டு பதட்டங்களைத் தனித்து, பக்குவமாக திருத்த வேண்டும். சொந்த விருப்புவெறுப்புக்களை குழந்தையின் மேல் திணிக்காமல், விமர்சனம் செய்யாமல், குறை கூறாமல் கலந்து பேசி நல்வழிப்படுத்த வேண்டும். குழந்தைகளின் வெற்றிகளை மட்டுமல்ல, வெற்றிபெறுவதறகு எடுக்கும் முயற்சிகளையும் மனதாரப் பாராட்டி நம்பிக்கை ஆற்றலை வளர்க்க வேண்டும். உண்மையான அன்போடும், சுயமரியாதை உணர்வோடும், பாதுகாப்பு உணர்வோடும் அமைந்த பெற்றோர் – குழந்தை உறவே இன்றைய தேவையாக அமைந்துள்ளது.

**நல்ல முன்மாதிரியாகத் திகழ்தல்**

வீட்டில் பார்ப்பதை, கேட்பதை குழந்தைகள் வெளியில் செயல்படுத்த முயலும். எனவே பெற்றோர்கள் தங்களுக்குள் சண்டையிடுதல், குறைகூறுதல், அலட்சியப்படுத்துதல், அவதூறாகப் பேசுதல் போன்ற மோசமான பழக்கங்களை குழந்தையின் எதிரிலாவது தவிர்க்க வேண்டும்.

குழந்தை சமூகப் பண்புகள், சமூக மாண்புகளின் மீதுபற்று ஏற்படுவதற்காக, பெற்றோர்கள் நாணயமாகவும், நேர்மையாகவும், உண்மையாகவும் வாழ வேண்டும். எண்ணம், சொல், சிந்தனை ஆகிய மூன்றும் சீராக இருக்கும்படி நடந்து கொண்டு, சிறந்த முன்மாதிரியாகத் திகழ வேண்டும் ‘‘முன் ஏர் செல்லும் வழியிலேயே பின்ஏரும் செல்லும்’’.

**கருத்துப் பரிமாற்றம்**

குழந்தைகளை **‘காதுகளால் அல்ல மனதினால்’** கேட்க வேண்டும். குழந்தைகள் தங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளும் போது, விமர்சிக்கவோ அல்லது குறைகூறவோ கூடாது. இதமாக கலந்துரையாடி, பெற்றோர்கள் தங்கள் கனவை குழந்தைகளிடம் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

**நன்கு காது கொடுத்து கேளுங்கள்; கலந்து பேசுங்கள்; ஆனால் விவாதம் புரிய வேண்டாம்.**

**உணர்வுகளுக்கு மதிப்பளித்தல்**

குழந்தையின் தனித்தன்மையை அங்கீகரித்து, திறமைகளையும், உடன்பாடு தற்கருத்தையும் வளர்த்துக் கொள்ள உதவவேண்டும். குழந்தையை பிறரோடு ஒப்பிட்டு மட்டம் தட்டுவது, ஏளானமான வார்த்தைகளால் கூப்பிடுவது, (எ.கா. நீ மக்கு, எதற்கும் லாயக்கில்லாதலன்) போன்ற செயல்களால் குழந்தையின் மன உணர்வுகளை காயப்படுத்தக்கூடாது. செய்யும் தவறுகளை மறந்து மன்னித்து, அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

**நேர்மையான உண்மையான பாராட்டு வழங்குதல்**

**“மனித இனத்தின் ஆழ்ந்த விருப்பங்களில் ஒன்று பாராட்டப்பட விரும்புவது”** என்கிறார் ஒரு உளவியலறிஞர்.

குழந்தைகளின் சிறுசிறு வெற்றிகளையும் சிறிய அளவிலான முன்னேற்றத்தினையும் (எ.கா. கையெழுத்து நன்று) வெற்றி பெற எடுக்கும் முயற்சிகளையும், நல்ல பண்புகளையும் பாராட்ட வேண்டும். ஆனால் பாராட்டு உண்மையானதாக, நேர்மையானதாக, சரியானதாக இருக்க வேண்டும்.

**விளையாடுதல்**

ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் குழந்தையுடன் வீட்டிலும், வெளியிலும் விளையாடுவதால் ஆரோக்கியமான உறவுகள் வளரும்.

**தனித்தன்மையை உணருதல்**

குழந்தையை சுதந்திர உணர்வுடன் துணிந்து செயல்பட அனுமதிக்க வேண்டும். குழந்தையின் தனித்தன்மையை, திறமைகளைக் கண்டறிந்து ஊக்கப்படுத்த வேண்டும்.

**நண்பர்களை அங்கீகரித்தல்**

குழந்தையின் நண்பர்களை விமர்சனம் செய்யவோ, கேவலமாகப் பேசுவதோ கூடாது. ஆனால் நல்ல நண்பர்களைத் தேர்ந்தடுத்துக் கொடுத்து பழக வழி காட்ட வேண்டும். குழந்தையின் நண்பர்களின் நலத்திலும் அக்கறை காண்பிக்க வேண்டும்.

**நேரம் ஒதுக்குதல்**

தினந்தோறும் குழந்தைகளின் அனுபவங்கள், நண்பர்கள், பொழுதுபோக்கு விஷயங்களைக் குறித்துப் பேச நேரம் ஒதுக்க வேண்டும்.

**பிரச்சினைகளுக்குத் தீர்வு காண உதவுதல் (Problem solving ability)**

குழந்தைகள் சந்திக்கும் பிரச்சினைகள், எதிர்மறை உணர்வுகள், சங்கடங்களிலிருந்து விடுபட குழந்தையுடன் இணைந்து வழிகாட்ட வேண்டும். பிரச்சனைகளுக்கு தீர்வு காணும் திறனை குழந்தைகளுக்குக் கற்றுத்தர வேண்டும்.

**அறிந்து கொள்ளுங்கள்**

ஆரோக்கியமான பெற்றோர் – குழந்தை உறவின் மூலம் கீழ்க்கண்ட பிரச்சினைகள் களைய முடியும்.

- எதிர்மறை தற்கருத்து.
- புறக்கணிக்கப்படுகிறோம் என்ற அச்ச உணர்வு.
- அடிக்கடி கோபம், பொறாமை, தாழ்வு மனப்பான்மை.
- தொடர்ந்து கவனம் செலுத்த இயலாமை.
- தன்னைத்தானே காயப்படுத்திக் கொள்ளுதல்.
- தூங்குவதில், சாப்பிடுவதில், ஒழுங்கின்மை.
- நண்பர்களுடன், ஆசிரியர்களுடன் வீணான சர்ச்சை.
- பிடித்த வேலைகளை கூட செய்யாதிருத்தல்.
- சோகமாக இருத்தல்.
- அடிக்கடி களைப்படைதல்.
- தற்கொலை எண்ணம்.
- போதைப்பொருள், தீய நண்பர்கள் பழக்கம்.
- எதிலும் நம்பிக்கையின்மை
- மன அழுத்தம்.

ஆரோக்கியமான பெற்றோர் – குழந்தை உறவின் மூலம், மேலே கண்ட பிரச்சனைகளிலிருந்து குழந்தை விடுபட்டு உணர்வுச் சமநிலையுடனும், பொருத்தப்பாட்டுடனும் சிந்திக்க மனநலத்துடனும் திகழ முடியும்.

**சிந்திக்க**

"வயதில் சிறியவர்களிடம் கனிவாகவும், முதியவர்களிடம் பரிவாகவும், துன்பப்படுபவர்களிடம் அனுதாபமாகவும், தவறு செய்தவர்களிடம் சகிப்புத் தன்மையுடனும் இருக்க முடிவெடுங்கள்."

## 9. மனநலம்

**சிந்திக்க**

*மனநலம் மன்னுயிர்க்கு ஆக்கம்*

*மனது, சொர்க்கத்தை நரகமாக்கவும் நரகத்தை சொர்க்கமாகவும் மாற்றும்*

வாழ்வில் ஏற்படும் எதிர்பாராத மாற்றங்கள், சம்பவங்கள், திருப்பங்கள் காரணமாக ஏற்படும் நெருக்கடிகளிலிருந்தும், பிரச்சினைகளிலிருந்தும் உணர்ச்சி உந்துதல்களிலிருந்தும் (emotioal impulse) உடனடியாகவும் முழுமையாகவும் விடுபட்டு, சூழ்நிலையில் பொருத்தப்பாடோடு மனவெழுச்சிகளை வெளிப்படுத்துபவர்கள் வெற்றியும், புகழும் பெறுவது இயல்பான செயலாகும். "வெற்றியைக் கண்டு துள்ளாதே! தோல்வியைக் கண்டு கலங்காதே! என்பது ஆன்றோர் மொழியாகும்.

ஒருவர் தன்னுடைய சூழலில்

எவ்வாறு அனுபவங்களை எதிர்கொள்கிறார்?

எவ்வாறு செயல்படுகின்றார்?

எங்கே, எவ்வாறு, எப்படி மனவெழுச்சிகளை வெளிப்படுத்துகின்றார்?

என்பதைப் பொறுத்தே ஒருவரின் ஆளுமைப் பண்புகள் அமைகின்றது.

**"மிகினும் குறையினும் நோய் செய்யும்"**

தீவிரமான மனவெழுச்சிகளை நசுக்குவதாலும் பண்படாத மனவெழுச்சிகளை தூய்மை செய்யாமல் வெளிப்படுத்துவதாலும் வெளியிடாமலிருப்பதாலும், மனதிற்குள்ளேயே மறைத்துக் கொண்டு பகிர்ந்து கொள்ளாமலிருப்பதாலும், ஒருவரின் உணர்வுச் சமநிலை பாதிக்கப்படும்; சூழ்நியைில் பொருத்தப்பாடுடன் செயல்படும் தன்மை சீர்குலையும்; ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சி தடைப்படும். எனவே மனவெழுச்சிகளை பொருத்தமாக வெளியிடும் திறனை வளர்த்துக் கொள்வதால் பிறரோடு இணைந்து செயல்பட்டு, மனநலத்துடன் திகழமுடியும்.

உளவியறிஞர்கள் பார்வையில் மனநலம் என்பது **'மனவெழுச்சி முதிர்ச்சி' 'பொருத்தப்பாடு' மற்றும் 'மனநிறைவு'** எனப்படுகின்றது.

உற்றுநோக்குங்கள்!

உங்கள் மாணவர்களில் பலர் பள்ளி இணக்கம் (School Adjustments) சமூக இணக்கம் (Social Adjustments) தன்னம்பிக்கை (Personal Adjustments) பெற்று மனநிறைவோடும், மனமுதிர்ச்சியுடனும் செயல்படுவார்கள். சிலர் நடத்தைப் பிரச்சினைகளோடு (Behaviour disorder) மனச்சோர்வோடும், விரக்தி மனப்பான்மையாடும் திகழ்வார்கள். முதல் பிரிவினரை 'மனநலம்' உடையவர்கள் என்று அழைக்கின்றோம்.

"நடத்தைப் பிறழ்ச்சிகள் (Behaviour disorder) இன்றி பிறரோடு இணைந்து போகும் தன்னிணக்கமே" மனநலம் எனப்படுகிறது. மனநலம் பெற்றவர்கள் எல்லா சூழல்களிலும்

சந்தர்ப்பங்களிலும் பக்குவமாக பேசவும், பழகவும் நடக்கவும் அறிந்திருப்பார்கள். மனநலம் என்பது வாழ்க்கை நிலையைக் குறிக்கும். ஒருவரின் **"ஆளுமையின் நிறைவான இசைவான செயற்பாட்டைக்"** குறிக்கும்.

மனவெழுச்சி முதிர்ச்சி, சமநிலையுடன் (Emotional Maturity and balance) சூழ்நிலையில் பொருத்தப்பாட்டுடன் பிறரோடு மனநிறைவுடன் இணைந்து தானும் பிறரும் மகிழ்ச்சியடையும் விதத்தில் ஒருவர் செயல்படும் நிலையே மனநலம் எனப்படுகின்றது.

1. உற்சாகமான மனநிலை 2. நல்ல உறக்கம் 3. உணவில் திருப்தி ஆகிய மூன்றும் மனநலத்தின் வெளிப்படையான அறிகுறிகளாகும்.

மாணவர்கள், தங்களது மன அழுத்தம், ஏக்கம், ஏமாற்றம், பயம், மனக்குழப்பம், குற்ற உணர்வு, கவலைகள், மனச்சோர்வு போன்ற எதிர்மறை எண்ணங்களிலிருந்து (Negative Feeling) முழுமையாக விடுபட்டு, மனநிறைவோடும் தன்னம்பிக்கையோடும் சமூகப் பண்புகள் மற்றும் சமூக முதிர்ச்சியுடன் திகழ வழிகாட்டுவது நமது முக்கிய கடமையாகும்.

மாணவர்களிடம் உணர்வுச் சமநிலைத் தோற்றுவிக்கும் காரணிகள்

- அன்பும் பரிவும் கொண்ட ஆசிரியர்
- மகிழ்ச்சியான கற்றல் சூழல்
- பாதுகாப்பான, அழகான பள்ளி
- ஆரோக்கியமான வகுப்பறை உறவுகள்
- எண்ணங்களை பகிர்ந்து கொள்ள நண்பர்கள்
- கருத்து சுதந்திரம்
- துணிந்து செயல்படும் வாய்ப்புக்கள்
- பொழுதுபோக்கு, விளையாட்டுச் செயல்கள்
- ஓய்வு
- நல்ல சாப்பாடு
- பிறர் ஆலோசனை பெறுதல்
- உணர்வு ரீதியாக மனநிறைவடைதல்
- போதைப் பொருள் பழக்கமின்மை
- அனுசரித்துப் போகும் பெற்றோர்
- பிறரால் துன்புறுத்தப்படாமலிருத்தல்
- பிறரின் கொடுமைக்கும், வன்முறைக்கும் ஆளாகமாலிருத்தல்
- திறமைகளை உச்சகட்ட அளவிற்கு வளர்த்துக் கொள்ள உதவும் சூழல்கள்.

**செயல்பாடு**

- மாணவர்கள் மனமுதிர்ச்சி பெற எவ்வாறு உதவலாம் என குழுவிவாதம் நடத்துதல்.
- மாணவர்கள் மன அழுத்தங்களை எதிர்கொள்வதற்காக நீங்கள் அளிக்க உத்தேசித்துள்ள பயிற்சிகளைப் பட்டியலிடுக.

**இணக்கம்** (Adjustment) புதிய சூழலுடன் ஒத்துப்போகும் உறவே இணக்கம் எனப்படும். புதிய சூழலில் காணப்படும் எதிர்பார்ப்புகளை ஏற்றுக் கொள்ளுதல், அவற்றை நிறைவேற்றுதல், தொடர்ந்து கடைபிடித்தல் போன்றவை இணக்கமான நடத்தைக்கு அடிப்படைகளாகும்.

பல்வேறு சமூக, பொருளாதார, கலாச்சார சூழல்களிலிருந்து பள்ளிக்கு வரும் மாணவன் புதியசூழலுக்கேற்ப தன்னை மாற்றிக் கொண்டால்தான் மனநலமுள்ள மாணவராகத் திகழ முடியும்.

**பள்ளி இணக்கம்**

பள்ளிச் செயல்களில் முழுவதுமாக ஈடுபட்டு பள்ளிகுறிக்கோள்களை அடைவதற்குரிய செயல்களை (எ.கா.) தவறாமல் பள்ளிக்கு வருதல், பிறரோடு ஒத்துப் போதல், திறமைகளுக்கேற்ற வெற்றி பெறுதல்) மாணவன் வெளிப்படுத்துவது பள்ளி இணக்கம் எனப்படும்.

**தன்னிணக்கம்** (Personal Adjustment)

ஒருவர் தனது சொந்த குணநலன்களோடு ஆர்வம், ஆற்றல், மனவெழுச்சி, மனப்பான்மை போன்றவைகளோடு ஒத்துப்போவது தன்னிணக்கம் எனப்படும்.

தன்னை, நிறைகுறைகளை அறிந்து ஏற்றுக் கொள்ளுதல், குறைவான திறமைகளையும் முழுமையாக பயன்படுத்துதல், குறைகளை நிவர்த்தி செய்ய தொடர்ந்து முயற்சி செய்தல் போன்றவை தன்னிணக்கத்தின் அடிப்படைகளாகும்.

## செயல்பாடு

**சமூக இணக்கம்** (Social Adjustment)

ஒருவர் தனது குணநலன்களையும், நடத்தைகளையும் ஏற்றுக் கொண்டது போலவே, மற்றவர்களும் ஏற்றுக் கொள்ளுதல் (acceptance of others) சமூக இணக்கம் எனப்படும்.

1. மற்றவர்களின் உணர்வை மதித்தல், பிறரின் அன்பற்ற தவறான செயல்களைப் பொறுத்துக் கொள்ளுதல் பரிவோடும் அன்போடும் நடத்தல், பிறருக்கு உதவிடுதல் போன்றவை சமூக இணக்க நடத்தைகளாகும்.

## விவாதிக்க

- சுமூகமான சமூகத் தொடர்புகளுக்கும், சமூக ஏற்புக்கும் சமூக செல்வாக்கிற்கும் எவ்வாறு சமூக இணக்க நடத்தைகள் உதவுகின்றன.
- ஆரோக்கியமான மனித உறவுகளை வளர்க்கும் வழிமுறைகள் குறித்த நாடகம் ஏற்பாடு செய்தல்.

மனநலம் உடையவர்களிடம் காணப்படும் பண்புகள்

1. தன்னையறிதல்
2. தனக்கேற்ற லட்சியம்
3. பொறுப்பேற்றல்
4. சுமூகமான சமூக உறவு
5. தாங்கும் ஆற்றல்
6. உணர்வுச் சமநிலை
7. தன்னாட்சி
8. பிரச்சனை தீர்க்கும் ஆற்றல்
9. சுயகட்டுப்பாடு
10. விடாமுயற்சி
11. ஒழுக்கம்
12. உயர்குறிக்கோள்

# 10. மனவெழுச்சிகளும் உடல்நலமும்

**சிந்திக்க**

*“நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்”*
*“உடம்பார் அழியின் உயிரார் அழிவர்,*
*திறம்பட மெய்ஞானம் சேரவும் மாட்டார்”*

மனநலமும் (Sound mind) உடல் நலமும் (Sound health) ஒன்றோடொன்று இணைந்தவையாகும். உடல்நலப் பிரச்சினைகள் ஒருவரிடம் மனச்சோர்வு, மகிழ்ச்சியின்மை எரிச்சல், கோபம் போன்ற மனக்குறைபாடுகளை ஏற்படுத்துகின்றது. மனதின் அதிர்ச்சி, உடம்பில் வியர்வையாக, இதயத்துடிப்பினை அதிகரிப்பதாக பசியின்மையாக, வயிற்றுவலியாக வெளிப்படுகின்றது.

‘சுவரிருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்; உடல் நலத்தைப் பாதுகாக்காவிட்டால், மனநலத்தைப் பாதுகாக்க முடியாது. 21ம் நூற்றாண்டில் ‘அனைவருக்கும் நலம்’ (Health for all) என்ற உயரிய கோட்பாடு அனைத்து நாடுகளிலும் பின்பற்றப்படுகின்றது.

வளரும் பருவத்தில் உடல் நலமும், மனநலமும் பெற்றிருந்தால் தான், குழந்தையின் எதிர்கால வாழ்க்கை மகிழ்ச்சியும் பயனுடையதாக இருக்கும். உடல்நலத்தைப் பேண, பாதுகாக்க, பராமரிக்க உதவும் வழிகாட்டுதல்கள், சுகாதாரக் கல்வி மூலம் வழங்கப்பட்டு வருகின்றது. உளநலப்பிரச்சினைகள் காரணமாக ஏற்படும். உடல்நலப் பிரச்சினைகளை தற்போது அறிந்து கொள்வோம்.

## அறிந்து கொள்ளுங்கள்

வாழ்வில் ஏற்படும் பல்வேறு நெருக்கடிகள், எதிர்பாராத தோல்விகள், ஆபத்துக்கள், நிறைவேறாத ஆசைகள், பகிர்ந்து கொள்ள முடியாத ஏக்கங்கள், அவமானங்கள் போன்ற எதிர்மறை எண்ணங்களின் காரணமாக அதிக பயம், பதற்றம், கோபம், கவலை, படபடப்பு மனச்சோர்வு, மனமுறிவு, மனப்போராட்டம், ஆவேசம், அகங்காரம், குற்ற உணர்வுகள், தாழ்வு மனப்பான்மை போன்ற தீவிர மன உணர்ச்சிகள் ஒருவரிடம் ஏற்படுகின்றது. தீவிர மனஎழுச்சிகளை மனதிற்குள்ளேயே மறைத்து வைத்துக் கொள்வதால், மனித உடலில் உள்ள இராசயனப் பொருள்களின் சமநிலை பாதிக்கப்படுகின்றது. தீவிர உணர்ச்சிகள் நரம்பு மண்டலத்தை அதிகமாக முடுக்குவதால் பல நாளமில்லா சுரப்பிகள் அதிக அளவில் ஹார்மோன்களைச் சுரக்கின்றது. எடுத்துக்காட்டாக இச்செயல்பாட்டால், சர்க்கரைச்சத்தின் அளவு அதிகரித்து நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.

மனநலப்பிரச்சினைகள் காரணமாக பல்வேறு உடல் நலப்பிரச்சினைகள் தோன்றுகின்றது. அதிகமான மன அதிர்ச்சி மீண்டும் மீண்டும் எழுவதால் குடற்புண், உயர் இரத்த அழுத்தம், ஆஸ்துமா போன்ற நோய்கள் ஏற்படுகின்றது.

*நோய் நாடி நோய் முதல் நாடி அது தணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்.*

தீவிர மனவெழுச்சிகளை மறைப்பதால் ஏற்படும் உடல் நலச்சீர்கேடுகளையும், சீர்கேடுகளைக் களையும் வழிகளையும் அறிந்து கொள்வோம்.

## சுவாச மண்டல நோய்

(எ.கா.) பயம், பதற்றம், தாழ்வு மனப்பான்மை, அளவு கடந்த துக்கம் காரணமாக ஏற்படும் மனமாறுபாடுகள் ஆஸ்துமாவை ஏற்படுத்துவதில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

**ஜீரணை மண்டல நோய்**

ஆழ்ந்த உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் மனதினுள் அடக்கி வைக்கப்படுவதால், இரைப்பையின் இயக்கத்தில் பாதிப்பு ஏற்பட்டு குடற்புண் ஏற்படும்.

**தோல் நோய்கள்**

பல்வகை தோல் அழற்சி, அரிப்பு, வீக்கம் போன்றவை தீவர உணர்ச்சிகளின் காரணமாகவே தோன்றுகின்றது.

**தசை, மூட்டு நோய்கள்**

மன அழுத்தம், மனஉளைச்சல், பயம் அதிகளவில் தோன்றும்போது, உடம்பில் திடீரென பொறுக்க முடியாத வலி ஏற்படும் (எ.கா.) மூட்டுவலி, வீக்கம், தலைவலி.

**நாளமில்லா சுரப்பி நோய்**

பல்வேறு நாளமில்லா சுரப்பிகள் தூண்டப்படுவதால் சுரக்கும் அதிகமான ஹார்மோன்களால் நீரிழிவு நோய் ஏற்படுகின்றது.

**இதய இரத்தநாள நோய்**

மனதில் ஏற்படும் அழுத்தங்களும், பகைமை உணர்வும், குற்றஉணர்வுகளும், அதிக உயர் இரத்த அழுத்தத்தை ஏற்படுத்துகின்றது.

**மாதவிடாய் சார்ந்த நோய்கள்**

மனதில் மறைத்து வைக்கப்பட்டு தீவிரமான மனஉணர்வுகளின் காரணமாக வலி மிகுந்த மாதவிடாய் ஏற்படும் அல்லது சரிவர வராமல் நீண்டகாலம் தள்ளிப்போகும்.

**அடையாளம் காணுங்கள்**

உங்கள் மாணவர்களிடம் கீழ்க்காணும் அறிகுறிகள் காணப்பட்டால் அவர்களின் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

**அன்றாடச் செயல்பாட்டுக் குறைகள்**

- ❖ உண்பதில் தொல்லை (அதிகமாக சாப்பிடுதல் அல்லது சாப்பிட மறுத்தல்).
- ❖ உறங்குவதில் தொல்லை.
- ❖ சிறுநீர் கழிப்பதில் கட்டுப்பாடின்மை
- ❖ பேச்சுக் குறைபாடு (தொடர்ச்சியாக பேசாமலிருத்தல், சொன்னதையே திரும்ப திரும்ப கூறுதல்).
- ❖ கற்றல் குறைபாடு

**நடத்தை குறைபாடுகள்**

- ❖ ஒதுங்கியிருத்தல்
- ❖ வரம்புக்கு மீறிய இயக்கநிலை
- ❖ மிகுந்த பயம், பதற்ற நிலை

**இசைவின்மைப் பழக்கங்கள்**

- ❖ நகம் கடித்தல்.
- ❖ விரல் சூப்புதல்.
- ❖ பொருள்களை உடைத்தல்.
- ❖ அழுது ஆர்ப்பாட்டம் செய்தல்.

**செயல்பாடு**

மனநலப்பிரச்சினைகள் காரணமாக உடல் நலமும் பாதிக்கப்பட்ட குழந்தைகளிடம் அன்போடும் பரிவோடும் நட்புணர்வோடும் கலந்துரையாட வேண்டும். தன்னம்பிக்கையை வளர்த்துக் கொள்ள உதவ வேண்டும். மனவெழுச்சி சிக்கல்களிலிருநது விடுபட ஆலோசனைகனையும், பொருத்தமான சூழல்களையும் அமைத்துத் தர வேண்டும்.

முறையான உடற்பயிற்சிகள், சத்தான உணவு, ஆரோக்கியமான நலப்பழக்கங்கள் மூலம் ஆரோக்கியமான உடல்நலத்தைப் பெறலாம்; நல்ல எண்ணங்கள், அன்பு, ஒழுக்கம் போன்ற உடன்பாடு உணர்வுகளால் மனதினை ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்தி மனநலத்தைப் பெறலாம்.

**செயல்பாடு**

மனநல மருத்துவரை அழைத்து 'மாணவர்களின் மனநலமும் உடல்நலமும்' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றச் செய்தல்.

**தொகுப்புரை**

ஒரு குழந்தை தனது உரிமைகளும் சொந்த விருப்பங்களும் நிறைவேற்றப்படுகின்றதா அல்லது புறக்கணிக்கப்படுகின்றதா என்று சுயமதிப்பீடு செய்யும்போது ஏற்படும் உணர்வுகளே, அக்குழந்தையின் நடத்தையைத் தீர்மானிக்கிறது. இந்த சுயமதிப்பீடே அக்குழந்தையின் தற்கருத்தாகும். தற்கருத்துகள் உடன்பாட்டு முறையிலும், எதிர்மறை முறையிலும் அமையலாம். தன்னைப் பற்றிய உயர்வான அல்லது தாழ்வான எண்ணங்களுடன் பள்ளிக்கு வரும் அனைத்து குழந்தைகளும் பள்ளி வாழ்வில் வெற்றி பெற, சொந்த வாழ்வில் மகிழ்ச்சியுடன் திகழ, சமூக வாழ்வில் மதிப்புடன் விளங்க, தேவைப்படும் உடன்பாட்டு தற்கருதை வளர்த்துக் கொள்ள உதவ வேண்டும்.

பண்பாடு ரீதியாக, சமூக ரீதியாக, பொருளாதார கலாச்சார ரீதியாக வேறுபட்ட சமூக நிலைமைகளிலிருந்து பள்ளிக்கு வரும் மாணவர்களிடம் உள்ளிலிருந்து உலகளவிற்கு 'நாம்' உணர்வு ஏற்பட, சமூக செயல்களில் பொறுப்புடன் பங்கேற்க உதவும் கற்றல் அனுபவங்களை அளிக்க வேண்டும்.

மனித மாண்புகள், உரிமைகள், நீதி, சமத்துவம், சுதந்திரம், மனித நேயம் போன்ற பண்புகளை மதித்து நடக்கவும், தேசமும், மனித குலமும் சந்திக்கும் சவால்களை எதிர்கொள்ளும் திறமையையும், சுற்றுச்சூழல் விழிப்புணர்வையும் மாணவர்களிடம் ஏற்படுத்தி, மாணவர்களை சமூக வளர்ச்சியும், சமூக முதிர்ச்சியும் பெற வழிகாட்ட வேண்டும்.

சகோதர உறவு என்பது 'ஒரு தாய் வயிற்றுப் பிறப்பாளர்களுள் ஒருவரை', 'ஒரே மூல மரபினை உடையவர்களுள் ஒருவரை' 'ஒரே தாய் தந்தை உடையவர்களுள்' ஒருவரைக் குறிக்கும். குழந்தைப

பருவ சகோதர / சகோதரி உறவுகள் அன்பு / பொறாமை, ஒத்துழைப்பு / சண்டை, ஆதரித்தல் / எதிர்த்தல், பாதுகாத்தல் / தாக்குதல் போன்ற நிலைகளில் அமையும்.

ஒப்பார்க்குழுவில் இணைந்து விளையாடுவதன் மூலம், குழந்தையிடம் உடல், மன, அறிவு, மனவெழுச்சி மற்றும் சமூக வளர்ச்சி ஏற்படுகின்றது. பல்வேறு சிறந்த சமூக பண்புகளையும், சமூக உறவுகளையும் குழந்தை வளர்த்துக்கொண்டு சிறந்த உடல் நலமும், மன நலமும் பெற்று மன நிறைவுடன் திகழ ஒப்பார்குழுவும் விளையாட்டு குழுவும் பெரிதும் உதவுகின்றன.

தன்னுடைய நிறை குறைகளை முழுமை தழுவிய அணுகுமுறையில் உண்மையான நோக்கில் மதிப்பீடு செய்து கொள்வதையே 'தன்னையறிதல்' என்று அழைக்கப்படுகின்றது. தன்னை முழுமையாக அறிந்த மாணவர்கள் வீட்டிலும், பள்ளியிலும், சமுதாயத்திலும் ஓரளவு இணைக்க நடத்தையுடன் செயல்பட்டு தானும் பிறரும் மகிழ்ச்சியடையும் விதத்தில் செயல்படுகின்றார்கள்.

குடும்பம், ஒப்பார்குழு, ஆசிரியர், நண்பர்கள், சமூகம், ஊடகங்கள், பிறரின் கருத்துகள் போன்ற பல்வேறு சமூகக் காரணிகள் ஒருவரின் தற்கருத்தை நிர்ணயம் செய்கின்றன.

எரிக்சன் என்ற உளவியலறிஞரின் கருத்துப்படி, ஒருவரின் ஆளுமை வளர்ச்சியில் எட்டுநிலைகள் உள்ளன. ஒவ்வொரு வளர்ச்சி நிலையிலும் குறிப்பிட்ட வளர்ச்சிசார் சிக்கல்கள் எழுகின்றன. சிக்கலை வெல்லுபவர்கள், அதனோடு தொடர்புடைய வளர்ச்சி நிலையை எளிதில் பெறுகின்றனர். சிக்கலை வெல்ல இயலாதவர்கள் குறிப்பிட்ட ஆளுமை வளர்ச்சியை அடையாமல் பின்தங்கிவிடுகின்றனர். மாணவர்களிடம் காணப்படும் ஆளுமைச் சிக்கல்களை பெற்றோர்களின் உதவியோடு ஆசிரியர் களைந்திட இயலும்.

மனவெழுச்சி என்பது, 'மன உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலை'யாகும். மனவெழுச்சி, உள்ளத்தையும், உடலையும் கிளர்ச்சியடையச் செய்யும்; நெருக்கடி நிலைமைகளில் சூழலை ஆதரித்தோ, எதிர்த்தோ அல்லது ஓடி ஒளியவோ ஒருவரைத் தூண்டும் மாணவர்கள் சமூகத் தொடர்புகளின்போது மனவெழுச்சிகளைப் பண்படுத்தி சூழலுக்குப் பொருத்தமாக வெளியிடும் மனவெழுச்சி முதிர்ச்சியும் பக்குவமும் பெற வேண்டும்.

மனவெழுச்சியில் ஒரு பொருள் அல்லது நிகழ்ச்சி குறித்த மகிழ்வுணர்வு அல்லது வெறுப்புணர்ச்சி மேலோங்கி காணப்படும். மகிழ்ச்சியின் அடிப்படையில் எழும் மனவெழுச்சிகள் (எ.கா) அன்பு, பரிவு, சிரிப்பு போன்றவை. மனநிறைவு, பாதுகாப்புணர்வு, ஒத்துழைப்புணர்வு, தன்னம்பிக்கை, சமூக நலனில் அக்கறை, பிறரைப் புரிந்துகொண்டு உதவுதல் சுமூகமான சமூக உறவுகள் போன்ற உடன்பாட்டு எண்ணங்களை ஒருவரிடம் தோற்றுவிக்கும். மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலும், அன்பும் பரிவும் கொண்ட நண்பர்களும், ஆசிரியர்களும், மாணவர்கள் சிறப்பான கற்றல் அடைவு பெற உதவுகின்றார்கள்.

வெறுப்புணர்வின் அடிப்படையில் அமைந்த மனவெழுச்சிகள் (எ.கா. கவலை, பொறாமை, கோபம், அச்சம் போன்றவை) ஒருவரிடம் உடல் ரீதியாக, நடத்தை ரீதியாக, தீய விளைவுகளை ஏற்படுத்துகின்றன. தன்னம்பிக்கையின்மை, பழிவாங்குதல், திட்டமிட்டு பிறரை அழித்தல், ஏக்கம், ஏமாற்றம் தனிமை உணர்வு, மனச்சோர்வு, மன அழுத்தம் போன்ற எதிர்மறைப் பண்புகளைத்

தோற்றுவிக்கின்றன. அளவுக்கதிகமாக இத்தகைய மனவெழுச்சிகள் தோன்றினால் மாணவர்களின் உணர்வுச்சமநிலையும், உடல்நலமும், கல்வி அடைவுகளும் பெரிதும் பாதிக்கப்படும்.

பெற்றோர் – குழந்தை உறவு, நம்பிக்கை, அன்பு, பாதுகாப்பு, மனநிறைவு, சுதந்திரம், வேற்றுமையில் ஒற்றுமை போன்ற உணர்வுகளின் அடிப்படையில் அமைய வேண்டும்.

மனநலம் எனப்படுவது "மனக்கோளாறுகள் இல்லாமை மட்டுமன்று; தனக்கும் பிறருக்கும் மகிழ்ச்சியும் பயனும் விளைகின்ற வகையில் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பொருத்தப்பாட்டுடன் செயல்படுவதை குறிக்கின்றது. மனநலப் பிரச்சினைகளில் உடல்நலம் வெகுவாகப் பாதிக்கப்படும். மகிழ்ச்சியான வகுப்பளைச் சூழலும் பாதுகாப்பான பள்ளிச் சூழலும் மாணவர்கள் உடல்நலமும், மனநலமும் பெற உதவுகின்றன.

# அலகு - 3

# உடல் மற்றும் அறிவு வளர்ச்சி - தொடக்கப்பள்ளி ஆண்டுகள்

## (6 முதல் 10 வயது வரை)

**முன்னுரை**

தொடக்கப்பள்ளி வரும் குழந்தைகள் அனைவரது உடலும் ஒரே சீராக இருப்பதில்லை. அவர்களில் சிலரது உடல் பருத்தும், மெலிந்தும், வலுவானதும், வலுவற்றதும், உயரமானதும், குள்ளமானதும், ஆரோக்கியமானதும், ஆரோக்கியமற்றதாகவும், சுறுசுறுப்பாகவும், சுறு சுறுப்பற்றதாகவும் இருப்பதைக் காணலாம். உடல் வளர்ச்சிக்கும் அறிவு வளர்ச்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்புள்ளது. மேலும் உடல் வளர்ச்சி, சமூக, மனவெழுச்சி மற்றும் ஒழுக்க வளர்ச்சிகளுக்கும் காரணமாகவுள்ளது. உடல் வளர்ச்சி மரபுநிலை, சூழ்நிலை, உணவு, ஆரோக்கியம் போன்ற காரணிகளைப் பொருத்துள்ளது. சுறுசுறுப்பாக உள்ள குழந்தைகள் விளையாட்டு, பாடச்செயல்கள் மற்றும் இதர செயல்பாடுகளில் சிறந்து விளங்குகின்றனர். சுறு சுறுப்பற்றவர்கள் எந்த செயலிலும் ஆர்வமற்றவர்களாக உள்ளனர்.

*சுறு சுறுப்புக்கு எல்லாமே சுலபம்*
*சோம்பேறிக்கு எல்லாமே கடினம்*

இந்த பருவத்தை விளையாட்டுப் பருவம், கூட்டாளிப் பருவம் மற்றும் ஆர்வமிக்கப் பருவம் என்றும் சிறப்பாகக் கூறலாம். குழந்தைகளின் ஆர்வமுழுவதும் விளையாட்டில்தான் இருக்கும். இதனை உணராத பெற்றோர்களும் மற்றும் ஆசிரியர்களும் குழந்தைகளை விளையாட விடாமல் படி படி என்று துன்புறுத்துவது அர்த்தமற்றச் செயலாகும். இது ஒரு பயனையும் தராது.

சத்தான உணவு, நல்ல காற்றோட்டம், சூரிய வெளிச்சம், குடிநீர், உடல் பயிற்சி, நல்லுறக்கம், ஓய்வு, நல்ல பழக்க வழக்கங்கள் போன்றவை சீரான உடல் வளர்ச்சிக்கு அத்தியாவசியமாகிறது. இந்த உடல் வளர்ச்சிப் பற்றிய அடிப்படை அறிவு இருந்தால்தான் கற்றல் கற்பித்தல் பணியைச் சிறப்பாகச் செய்ய முடியும். இதனையறியாத பெற்றோர்கள் குழந்தைகளைச் சரியாக வளர்க்கத் தெரியாதவர்களாக உள்ளனர். ஆசிரியர்கள் சரியாகக் கற்பிக்க இயலாதவர்களாக உள்ளனர். உடல் வளர்ச்சிப் பற்றியறியாது மற்றும் அதனை வளர்க்க முயலாது கற்பிப்பது விழலுக்கு இறைத்த நீர் போன்றதாகும்.

## 1. உடல் வளர்ச்சி சுழற்சி

உடல் வளர்ச்சி சீரானதும் முறையானதும் ஆகும். குழந்தைகள் இவ்வளவு உயரம் வளர்வார்கள், இவ்வளவு எடையைப் பெற்றிருப்பார்கள் என்று எவராலும் அறுதியிட்டுக் கூற இயலாது. உடல் வளர்ச்சி என்பது பல காலக்கட்டங்களை உள்ளடக்கியது. மேலும் உடல் வளர்ச்சி என்பது உயிரியல் நியதிக்கு உட்பட்டதாகும், பிறப்பு முதல் இரண்டு வயது வரை உடல் வளர்ச்சி விரைவாக நடைபெறுகிறது. அதன் பின்னர் உடல் வளர்ச்சி குமரப் பருவத்தை நோக்கி மெதுவாக நடைபெறுகிறது.

நரம்பு மண்டல வளர்ச்சி பிறப்பிற்கு முன்னரும் பிறந்த பின்னர் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு மிக விரைவாக நடைபெறுகிறது. இதன் பின்னர் நரம்பு மண்டல வளர்ச்சி மெதுவாக நடைபெறுகிறது.

மூளை வளர்ச்சி பிறப்பு முதல் நான்கு வயது வரை விரைவாகவும் அதன் பின்னர் எட்டு வயது வரை மிதமாகவும், பின்னர் பதினாறு வயதுவரை மெதுவாக முன்னேற்றமடைந்து முழுமையடைகிறது.

பிறக்கும் பொழுது குழந்தையின் மூளையின் நிறை சுமார் 350 கிராமாகவுள்ளது. பருவமடைந்த பின்னர் மூளையின் அளவு 1,260 கிராம் முதல் 1,400 கிராம் வரையுள்ளது. பிறக்கும் பொழுது கால் மடங்காகவும், ஒன்பதாவது மாதம் அரை மடங்காகவும், இரண்டாவது வயதின் முடிவில் முக்கால் மடங்காகவும், நான்காவது வயதில் ஐந்தில் நான்கு மடங்காகவும், ஆறாவது வயதில் அது 90 விழுக்காடாகவும் மூளையின் வளர்ச்சியுள்ளது.

மூளையின் வளர்ச்சி உடலின் எடையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது, பிறக்கும் பொழுது அது 1/8 ஆகவும், பத்தாவது வயதில் அது 1/18 ஆகவும், பதினைந்தாவது வயதில் அது 1/30 ஆகவும், பருவடையும் பொழுது அது 1/40 ஆகவும் உள்ளது.

குழந்தையின் உயரம் பிறக்கும்பொழுது ஏறத்தாழ 52 சென்டி மீட்டராகவும், ஐந்தாவது வயதில் 106 செ.மீ. ஆகவும், ஒன்பதாவது வயதில் 131 செ.மீ. ஆகவும், பதிமூன்றாவது வயதில் 151 செ.மீ. ஆகவும் உள்ளது. ஆரம்பநிலையில் உயரவளர்ச்சி விரைவாகவும் பின்னர் மெதுவாகவும் உள்ளது. பெண் குழந்தைகளின் உயர வளர்ச்சி ஆண் குழந்தைகளைவிட சற்றுக் குறைவாகவுள்ளது. குழந்தைகளின் உயர வளர்ச்சியில் தனியாள் வேறுபாடு அதிகமாகவுள்ளது. சில குழந்தைகள் உயரமாகவும் சில குழந்தைகள் குள்ளமாகவும் உள்ளனர். ஆறு அல்லது ஏழு வயதில் உயரமாக உள்ள குழந்தை 15 அல்லது 16 வயதிலும் உயரமாக உள்ளனர்.

பிள்ளைப் பருவத்தினரை வாலிபப் பருவத்தை நோக்கி நல்ல வளர்ச்சியடையச் செய்வதில் பள்ளியின் பங்கு மகத்தானது. பிள்ளைப்பருவம் கற்றலுக்கு ஏற்றப்பருவம். இந்த இளம் பருவத்தில் கற்றலில் ஆர்வமுள்ளக் குழந்தைகள் எதிர்காலத்தில் சிறந்த அறிவாளிகளாகத் திகழ்கின்றனர்.

உடல் வளர்ச்சியென்பது உடலின் பெருக்கத்தை மட்டும் குறிப்பதல்ல. அதன் செயல்திறனையும் குறிக்கிறது.

## உ. உடற் பண்புகள்

### 5 முதல் 8 வயது வரை

- ஏறத்தாழ 100 சென்டி மீட்டர் உயரம் (வருட சராசரி உயர வளர்ச்சி 5. செ.மீ. முதல் 7.5 செ.மீ. வரை).
- செயல்பாடுகள் அனைத்தும் உடல் சார்ந்ததாக இருக்கும்.
- தசைகளின் இயக்கம் விரைவாகவும் ஆற்றல் மிக்கதாகவும் இருக்கும்.
- ஆண்களைவிடப் பெண்கள் விரைவில் பருவமடைகின்றனர்.
- கால்கள் விரைவாக வளர்ச்சியடைகின்றன.
- வயிறுபுடைக்க உணவருந்த விரும்புகின்றனர்.
- மூக்கு மற்றும் தொண்டைக் கோளாறுகள் அடிக்கடி ஏற்படுவதுண்டு.
- உயரம் மற்றும் எடை வளர்ச்சி வீதம் 5 முதல் 11 வயது வரை மெதுவாகவும் நிதானமாகவும் நடைபெறுகிறது.

- கருத்துக்கள் தெளிவற்றதாகவும் ஒழுங்கற்றதாகவும் இருக்கும்.
- குளிப்பதற்கு மறுப்பர்.
- செயல் வேகத்தில் படிப்படியான முன்னேற்றம் காணப்படும். இது நிதானத்தையும் துல்லியத்தையும் நோக்கி வளரும்.
- உடல் நலம் முன்னேற்றமடையும்.

**9 முதல் 11 வயது வரை**

- இது முழுக்க முழுக்க செயல்திறன்மிக்க வயதாகும்.
- பொதுவாகத் திடமாகவும் ஆரோக்கியமாகவுமுள்ள வயதாகும்.
- தின்பண்டங்கள் மீது அதிக விருப்பம் காட்டுவர்.
- ஆண்கள் வாலிப வயதின் பாதி எடையினைப் பெற்றவர்களாக இருப்பர்.
- பெண்களின் உடல் திறன்கள் 11 வயது வரைமெதுகாவும் திடமாகவும் முன்னேற்றமடையும் அதன் பின்னர் திறமைகள் நிலைப்படும்.
- ஆண்களைப் போல் பெண்கள் உடல் வலிமையையும் ஆரோக்கியத்தையும் அடையமுடிவதில்லை.
- உடல் வலிமை 11 வயது முதல் 13 வயது வரை பெண்களுக்கு தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.
- போட்டி விளையாட்டுகளில் அதிக ஆர்வம் காட்டுகின்றனர்.
- உடற் செயல்பாடுகளுக்குப் பின்னர் எளிதில் சோர்வடைகின்றனர்.
- கைகளின் சிறு தசைகள் நல்ல வளர்ச்சியினைப் பெறுகிறது.
- வயது அதிகரிக்க அதிகரிக்க நிதானத்தின் வேகம் அதிகரிக்கிறது. அது துல்லியமாக முன்னேற்றமடைகிறது.
- 11 வயது வரை பெண்களின் உயரம் மற்றும் எடையின் வளர்ச்சி நேர்த்தியாக உள்ளது. ஆண்களின் வளர்ச்சி பெண்களை விட நன்றாகவும் வலுவாகவும் உள்ளது.

## 3. உடல் தேவைகள்

**5 முதல் 8 வயது வரை**

10 முதல் 12 மணி வரை நல்லுறக்கம் பற்களின் பாதுகாப்பிற்குத் தேவை. அடிக்கடி ஓய்வுகள், பொழுதுபோக்கு அம்சங்கள், ஓடி ஆடி விளையாடுவது அவசியமாகிறது. இதனைக் கருத்தில் கொண்டு குழந்தைகளுக்கு அதிக வீட்டுப் பாடச் செயல்கள் கொடுக்கக்கூடாது.

உணவருந்தப் பழக்குவது, பொருள்களைக் கையாளக் கற்றுக்கொடுப்பது, விளையாட போதுமான இடம், கைகுட்டையை, துண்டுகளைப் பயன்படுத்த ஊக்குவிப்பது, கண்ட பொருள்களை வாயருகே கொண்டுச் செல்லாமல் இருப்பது, ஆடைகளை தூய்மையாக வைத்து கொள்ளுவது, நன்றாக உடுத்துவது போன்றவற்றைக் கற்றுத்தருவது மிகவும் அவசியமாகிறது. தட்டம்மை, பொன்னுங்கு வீங்கி, கக்குவான், இளம்பிள்ளை வாதம், மூச்சுக் கோளாறுகள் போன்ற நோய்களிலிருந்து குழந்தைகளைக் காப்பாற்ற உதவுதல் அவசியமாகிறது.

**9 வயது முதல் 11 வயது வரை**

குழந்தைகளின் உடல் இயக்கங்களைச் செம்மைப்படுத்த ஆடல், பாடல், உடற் பயிற்சி, யோகா போன்றவற்றில் ஈடுபடச்செய்தல். ஆண், பெண் குழந்தைகளுக்கு ஏற்ற பொருத்தமான விருப்ப

விளையாட்டுகளைத் தேர்ந்தெடுத்து அவர்களை விளையாடச் செய்தல். செயல் பாடுகளை அடிக்கடி மாற்றி அவர்களின் சோர்வுகளைப் போக்குவது மிக நல்லது. சுயமாக உடல் சுத்தம் மற்றும் சுகாதார பராமரிப்புகளை மேற்கொள்ள உதவுதல். குழந்தைகள் தங்கள் உடல் இயக்கங்களை வளர்த்துக் கொள்ளவும், கட்டுப்படுத்திச் செம்மைப் படுத்தவும் மற்றும் சிறப்பாக வெளியிடவும் அதிக வாய்ப்புகளையும் வசதிகளையும் அளிக்க வேண்டும். குழந்தைகளின் உடல் செயல்பாடுகள், ஊட்டச்சத்துணவுகள், ஓய்வுகள் போன்றவற்றில் ஆசிரியர்கள் அதிக அக்கறை காட்ட வேண்டும்.

## 4. கவனம்

கவனம் என்ற சொல்லை நாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகின்றோம் அல்லவா? பேருந்து நிலையம், தொடர்வண்டி நிலையம் போன்ற இடங்களின் 'உங்கள் கவனத்திற்கு' என்ற அறிவிப்புகள் செய்கின்றனர். பெற்றோர்கள் குழந்தைகளை கவனித்துப் படி என்கின்றனர். நண்பர்கள் கவனித்து விளையாடு என்கின்றனர். ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களை கவனி கவனி என்று கூறுகின்றனர். எனவே நாம் கவனித்தல் என்ற சொல்லின் பொருள் யாது என்று அறிந்து கொள்கிறோம்.

### செயல்

கவனச்சிதைவு மற்றும் கவனப்பிரிவு சோதனைகளை மாணவர்கள் செய்து அதன் முடிவுகளை வகுப்பில் விவாதித்து கவனம் எவ்வாறு எல்லாம் சூழ்நிலையைப் பொறுத்து மாறுபடுகிறது என்பதை அறியவும்.

### கவனத்தின் பொருள்

கவனம் என்பது ஒரு தனிப்பட்ட மன வன்மை ஆகும். இது மேலும் கவனிப்போரின் உள்ளத்தின் செயல், ஒரு வகை அனுபவம் என்றும் கூறலாம். கவனம் எப்படி நிகழ்கிறது? நாம் விழித்துக் கொண்டிருக்கும் ஏதாவது ஒரு தூண்டலின் மேல் கவனம் செலுத்திக் கொண்டிருக்கின்றோம். நமது நேரடி கவனத்திற்கு வராத பல தூண்டல்கள் நம் நனவுப் பரப்பில் எப்பொழுதும் இருக்கக்கூடும். நனவுப்பரப்பில் உள்ள பல தூண்டல்களில் சிலவற்றை நாம் தேர்ந்தெடுத்து ஊன்றிக் கவனிக்கின்றோம். இவ்வாறு தேர்ந்தெடுத்து அறிய மேற்கொள்ளப்படும் முயற்சியைத்தான் கவனித்தல் என்கிறோம்.

### கவனம் நிகழ்வு

ஒரு பொருளையோ செயலையோ தெளிவாக அறியச் செய்யப்படும் முயற்சியே கவனித்தல் எனலாம். (மக்டூகல்). இது ஒரு அறிவு சார்ந்த செயல் மட்டுமல்ல, மனவெழுச்சி, முயற்சி போன்ற பல கூறுகளை உள்ளடக்கியுள்ளது. ஒரு பொருளைக் கவனிக்கும்பொழுது ஒரு தூண்டலை தெரிவு செய்கிறோம். இந்த உளச்செயலோடு நமது புலன்களையும் ஒருமுகப்படுத்துகிறோம். தலையைத்திருப்புதல், பார்வையைக் குவித்தல், செவிமடுத்தல் போன்ற உடல் இயக்கங்களும் கவனித்தலில் இடம்பெறுகின்றன. புலன்காட்சி, உற்று நோக்கல் போன்ற செயல்களுக்கும் கவனமே அடிப்படையாக அமைகிறது.

### ஒழுங்கான அமைப்பு கொண்ட தூண்டல்

தொடர்பற்ற ஒலிகளை விட தொடர்புள்ள ஒலிகளைக் கொண்ட ஓர் இசை நம் கவனத்தை எளிதில் கவருகிறது. முழுமையான ஓவியங்கள், வண்ணம் தீட்டப்பட்ட ஓவியங்கள் மாணவர்கள்

கவனத்தைக் கவரும். எனவே, வகுப்பறையில் உபயோகப்படுத்தும் காட்சி, கேள்வி துணைக்கருவிகள் ஒழுங்கான அமைப்பினைக் கொண்டிருப்பின் மாணவர்கள் நன்கு கவனிப்பர்.

**கற்றல் கற்பித்தலில் குழந்தைகளின் கவனத்தைக் கவர்வதற்கான வழிகள்**

கற்றல் கற்பித்தல் ஒரு தனிப்பட்டச் செயல்மட்டுமல்ல அது ஒரு சமூகச் செயல்பாடும் ஆகும். ஆசிரியர் மற்றும் அவர் கையாளும் பொருள்கள், உத்திகள் போன்றவை மாணவர்களின் கவனத்தை கவர்வதாகும்.

**கற்பதற்கு ஏற்ற சூழ்நிலை**

பெருங்கூச்சல், இரைச்சல், காற்றோட்டமின்மை, வெளிச்சமின்மை, அதிகப்புழுக்கம், பிற குழந்தைகளுடன் நெருக்கமாக அமரவேண்டிய நிலை, திறந்தவெளி போன்றவை குழந்தைகளின் கவனத்தை உருக்குலைக்கும். கற்றலுக்கு ஏற்ற சூழ்நிலையை ஏற்படுத்தினால்தான் குழந்தைகளின் கவனத்தைக் கவரமுடியும்.

**மிதமான வேகத்தில் பேசுதல்**

குழந்தைகளின் கேட்கும் திறன் குறைவாக இருக்கும். வேகமாகப் பேசுவது, எழுதுவது துணைக்கருவிகளைக் கையாள்வது, குழந்தைகளின் கவனத் தொடர்பினை முறித்துவிடும். ஆசிரியர் குறைந்த வேகத்தில் பேசுவது, பாடங்கள் நடத்துவது குழந்தைகளின் கவனத்தைத் தொடர்ந்து ஈர்த்துக் கொண்டிருக்கும்.

**தொடர்ச்சியான ஊக்குவித்தல்**

தற்போது பாடம் தொடங்கும் பொழுது ஊக்குவித்தால் போதுமானது என்ற நிலை உள்ளது. இது போதாது. இவ்வாறு செய்வதால் குழந்தைகள் ஊக்குவிக்கும் நேரமட்டும் ஊக்கமாக இருந்து பிறகு ஊக்கமின்றிக் காணப்படுவார்கள். எனவே ஆசிரியர் பாடம் நடத்தும் முழுநேரமும் அன்பான வார்த்தைகளால் மற்றும் ஆர்வமூட்டும் விருப்பச் செயல்பாடுகளால் குழந்தைகளை ஊக்குவித்துக் கொண்டே இருப்பதால் அவர்கள் சோர்வின்றி முழுநேரமும் பாடச்செயல்பாடுகளில் கவனத்தைச் செலுத்துகின்றனர்.

**பரிவுடன் செயல்படுதல்**

ஆசிரியர் கற்றல் – கற்பித்தலில் ஈடுபடும்பொழுது பரிவுடனும் பாசத்துடனும் குழந்தைகளுடன் பழகுவாரேயானால் அவர் கூறுவதைக் குழந்தைகள் ஆர்வத்துடனும் கவனத்துடனும் கேட்பர்.

**குழந்தைகளின் மனநிலை**

குழந்தைகளின் மனநிலை கவனத்திற்கு ஒருமுக்கிய காரணமாகும். வகுப்பில் பயிலும் ஒவ்வொரு குழந்தை பற்றிய விவரங்களையும் ஆசிரியர் தெரிந்து வைத்திருப்பதால் அவர் மீது தனிக்கவனம் செலுத்த இயலும். இது பள்ளிக் குழந்தைகளின் மனநிலையை மேம்படுத்த ஆசிரியருக்கு உதவும். மனநிலை மேம்பட்டால் குழந்தைகளின் கவனம் செம்மையடையும். கற்றல் கற்பித்தல் செயல் சிறப்படையும்.

**விளையாட்டு வழிக் கல்வி**

குழந்தைகள் இயல்பாகவே விளையாட்டில் ஆர்வமிக்கவர்கள். கற்றல் – கற்பித்தல் முறை விளையாட்டு முறையில் அமைந்தால் குழந்தைகள் ஆசிரியர் கற்பிக்கும் பாடத்தை ஆர்வமுடன் கவனிப்பர்.

**புரிதிறனை வளர்க்கும் தெளிவான மொழியைக் கையாளுதல்**

குழந்தைகள் எளிதில் புரிந்துகொள்ளும் விதத்தில் அவர்களுக்குத் தெரிந்த வார்த்தைகளைப் பயன்படுத்தியும், புதிய வார்த்தைகளுக்கு உடனுக்குடன் விளக்கம் அளித்தும் கற்பித்தல் குழந்தைகளின் கவனத்தை எளிதில் ஈர்க்கும்.

**பொழுது போக்கு நிகழ்ச்சிகள்**

குழந்தைகள் தொடர்ந்து நாள் முழுக்க கற்றல் செயலில் ஈடுபடும் பொழுது களைப்படைவர். விளையாட்டு, பாடல், கலை, நாடகம், ஓவியம் வரைதல், நடனம், களப்பயணம் போன்றவை குழந்தைகளின் களைப்பைப் போக்கி கற்றலில் கவனத்தைச் செலுத்த உதவும்.

**செயல்வழி கற்றல்**

குழந்தைகள் இயல்பாகவே ஒரு பொருளை அல்லது ஒரு செயலைத் தாங்களாகவே செய்ய விரும்புவார்கள். குழுவாக ஒருசெயலை செய்யும் பொழுது களைப்பின்றி அச்செயலில் அதிக கவனத்துடன் ஈடுபடுவர்.

**பாட நேரமாறுதல்கள்**

தொடர்ந்து ஒரே பாடத்தை வெகுநேரம் கற்கும் பொழுது வெறுப்பு ஏற்படும். எனவே ஆசிரியர் கால அட்டவணைத் தயாரிக்கும் போது பாடம், விளையாட்டு, கலைக்கல்வி, பாடம் சார்ந்த செயல்பாடுகள் போன்றவற்றிற்குத் தகுந்த நேரப் பங்கீடு செய்து கற்பிப்பதால் அனைத்துக் குழந்தைகளும் ஆர்வமுடனும் கற்கும் செயல்களில் கவனத்தைச் செலுத்துவர்.

**கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்துதல்**

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் எல்லோரையும் ஈர்ப்பது விளம்பரங்கள் என்றால் அது மிகையாகாது. ஆசிரியர் வகுப்பறைச் செயல்பாடுகளை கவர்ச்சிகரமாக அமைத்தால் குழந்தைகள் கவனத்துடன் ஈடுபடுவர். அறிவியல் கண்காட்சிகள் அமைத்தல் குழந்தைகளின் அறிவியல் பங்கேற்கும் ஆர்வத்தைத்தூண்டும், மொழிப்பாடங்களில் வரும் செய்யுள்கள், பாடல்களை இசையுடன் பாடுதல், நாடகங்களை நடித்துக் காட்டுதல் போன்றவை குழந்தைகளின் கவனத்தை வெகுவாக ஈர்க்கும். கணிதப்பாடம் கற்பிக்கும்போது துணைக்கருவிகளைப் பயன்படுத்துவது குழந்தைகளின் கவனத்தை ஈர்த்து கணிதக் கருத்துகளை உறுதிப்படுத்தும். சமூகவியல் பாடம் கற்பிக்கும்போது குழந்தைகளைக் கொண்டு நடிக்கச்செய்தல் அவர்களின் ஆர்வத்தைத்தூண்டிக் கவனத்தை ஈர்க்கும்.

வாழ்க்கையை ஒட்டிய நிகழ்ச்சிகளிலிருந்து உதாரணங்களை கொடுத்துப் பாடங்களை கற்பிக்கும்போது குழந்தைகளின் கவனம் பாடத்தில் பதிகிறது. வாழ்க்கை நிகழ்ச்சிகள் குழந்தைகளின் பழைய அனுபவங்களாகும். பாடக்கருத்துகள் என்ற புதிய அனுபவம் பழைய அனுபவத்துடன் தொடர்பு கொள்ளும்போது எளிதாகிறது. எளிதில் புரியும் கருத்துக்கள் குழந்தைகளின் கவனத்தை வெகுவாக ஈர்க்கும் தன்மை கொண்டது.

**திட்டமிடப்பட்ட பாட அமைப்பு**

ஆசிரியர் கற்பிக்க வகுப்பிற்குச் செல்லுமுன்னர் பாடச்செயல்களை குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வண்ணம்திட்டமிட்டு அமைத்துக்கொண்டு செல்வாரேயானால் குழந்தைகளின் கவனத்தை எளிதில் கவரலாம். உதாரணமாக அறிவியல் பாடம் கற்பிக்கச் செல்லும்போது பரிசோதனைக்குக் காட்டத்தேவைப்படும் பொருள்களைத் திட்டமிட்டு சேகரித்துக் கொண்டு ஆசிரியர்

செல்வாரேயானால் அவர் கற்பிக்கும் பாடம் குழந்தைகளின் ஆர்வத்தையும் கவனத்தையும் தூண்டும். இவ்வாறு செய்யாமல் அறிவியல் கருத்துகளை வாய்மொழியாகச் சொல்லிச்சென்றால் குழந்தைகள் கற்றலில் கவனமின்றி காணப்படுவர்.

## 5. நினைவு

நம் புலன்கள் கற்று அனுபவித்த விவரங்களை மனதில் இருத்திக்கொண்டு நமக்கு தேவைப்படும்போது எடுத்துத் தருகிறது. மனதில் சேமித்து வைத்துள்ள விவரங்களை நினைவு என்று கூறுகின்றோம். குழந்தையிடம் உனக்குத் தெரிந்த காய்கறிகளின் பெயரைக் கூறு என்று சொல்லும்போது அது நினைவு படுத்தி ஒவ்வொரு காய்கறியின் பெயரைக் கூறுவதைப் பார்த்திருக்கின்றோம். ஆசிரியர் சில கேள்விகளை குழந்தைகளிடம் கேட்கும்போது அவர்கள் பதிலளிக்க முடியாமல் திகைக்கின்றனர். இதற்குக் காரணம் என்ன**?** அவர்கள் கற்றது நினைவில் இல்லையென்றுதான் கூற வேண்டும். எனவே குழந்தைகளின் நினைவினை மேம்படுத்த சில உத்திகள் தேவைப்படுகின்றன.

### நினைவினை மேம்படுத்தும் உத்திகள்

சிறந்த நினைவுத்திறன் உள்ளவர்களே வாழ்க்கையில் எளிதில் வெற்றியடைகின்றனர். குழந்தைகள் தாம் கற்றதை நீண்ட நாட்கள் நினைவில் வைத்துக்கொண்டால் அவர்கள் வாழ்க்கை பயனுள்ளதாக அமையும். நினைவினை மேம்படுத்தும் உத்திகள் யாவை என அறிந்து கொள்வோம்.

குழந்தைகளுக்குக் கற்பதில் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். குழந்தைகள் தாமாகவே விரும்பி கற்றலில் ஈடுபடும்போது கற்றல் நிலைப்பட்டு நினைவில் நிற்கும்.

பொருளுணர்ந்து கற்றல் நீண்ட நினைவில் நிற்கும். மாணவர்கள் ஒரு வாக்கியத்திலுள்ள சில வார்த்தைகளைத் திரும்பத் திரும்பக் கூறி குருட்டு மனப்பாடம் செய்வதை ஆசிரியர்கள் தவிர்க்கவேண்டும். ஒரு வாக்கியத்தை முழுமையாகக் கற்கும் போதுதான் அதன் பொருள் புரியும். எனவே ஒவ்வொரு வாக்கியத்தையும் முழுமையாக கற்பது நினைவினை மேம்படுத்தும்.

மெதுவாக நிதானமாக அவசரமின்றி கற்பது நினைவாற்றாலைப் பெருக்கும் மற்றும் நேரத்தைச் சிக்கனப்படுத்தும்.

கற்கும் பொருளை பல முறை இடைவிட்டு பயிலுதல் வேண்டும். ஒரே மூச்சில் படிப்பதை விட இடைவெளிவிட்டு பயிலுதல் சோர்வினைப் போக்கி நினைவினைப் பெருக்கும்.

பலபுலன் வழிக்கற்றல் மூலமாக கற்பவை மனதில் வெகு நாட்கள் வரை நிலைத்து நிற்கும். வகுப்பறைக் கற்பித்தலில் பல ஊடகங்களைப் பயன்படுத்தினால் நினைவு கொள்ளுதல் வலுப்படும்.

கற்கும் பொருளைப் பற்றிய சில சுருக்கக் குறிப்புகள் நினைவு கூர்தலுக்கு பெரிதும் பயன்படும். வானவில்லின் ஏழு நிறங்களை வரிசையாக நினைவு கூற (VIBGYOR) என்ற பொருளற்ற சொல்லைப் பயன்படுத்துகிறோம்.

கற்றல் நிகழும் போதே சோதித்தறிவது, ஒரு வாக்கியத்தைப் படித்து விட்டு, கண்களை மூடிக்கொண்டு சொல்லிப்பார்த்தல். பின்னர் அதனைப் பார்க்காமல் எழுதுதல், இவ்வாறு செய்வதால் ஒவ்வொரு வாக்கியமும் கற்ற பின்னர் நினைவிலிருக்கிறதா என்று சோதித்தறியப்படுகிறது. இவ்வாறு அறிவியல் கருத்துகள், சூத்திரங்கள், சமன்பாடுகள், ஆங்கிலப் பாடக்கருத்துகள் போன்றவற்றை எளிதில் நினைவு கொள்ள முடியும்.

கற்றலை விரும்பும் மனப்பான்மை நினைவினை மேம்படுத்தும்.

கவனித்துக் கற்றல் நினைவினை அதிகரிக்கும்.

ஆர்வமுடன் கற்றல் நினைவில் நீண்ட நாட்கள் நிலைத்திருக்கும்.

சுதந்திரமாகத் தானே கற்றல், கற்றவற்றை நினைவில் இருத்திக்கொள்ள சிறந்த வழியாகும். பெற்றோர், ஆசிரியர் மற்றும் பிறரால் கற்க வற்புறுத்தப்படும் போது கற்றல் ஒரு வெறுப்புச் செயலாகத் தோன்றும்.

குழந்தைகளை அடித்து அச்சுறுத்தி படிக்கச்செய்தல் மிகவும் தவறானது. அவர்கள் படிக்கும்போது கவலையுடன் அச்சப்பட்டு, படிக்கின்றனர். படித்தவை ஒருபோதும் அவர்கள் நினைவில் தங்காது. குழந்தைகளைப் புகழ்ந்து அரவணைத்து மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்திப் படிக்கச்செய்வது அவர்களின் கற்றல் ஆர்வத்தைத் தூண்டி, கவனமாகப் படித்து நினைவில் இருத்திக்கொள்ள உதவும்.

**குறுங்கால நினைவு மற்றும் நெடுங்கால நினைவு**

பொதுவாக நம் புலன்களில் ஏற்படும் தூண்டல்கள் அனைத்தும் முதலில் குறுங்கால நினைவுப் பகுதிக்குச் செல்கிறது. இவற்றின் நிலைப்புத்தன்மை சில நாட்களோ அல்லது சில வாரங்களேயாகும். குறுங்கால நினைவுப்பகுதிக்குச் சென்ற விவரங்களை மீண்டும் மீண்டும் சிந்தித்து அல்லது கற்று உணரும் பொழுது அல்லது மீட்டுக் கொணரும்பொழுது அவை நெடுங்கால நினைவுப் பகுதிக்கு எளிதில் சென்றடைகிறது. இவை நெடுங்கால நினைவுப்பகுதியில் நிலைத்து நின்று நீண்ட நாட்கள் பயன்படும். அதிக ஆர்வம் மற்றும் தேவையின் காரணமாக விரும்பிக் கற்றவை எளிதில் நெடுங்கால நினைவுப் பகுதியில் இடம்பெற்று உதவுகிறது. அவசர அவசரமாக மனப்பாடம் செய்தவை அரைகுறையாக குறுங்கால நினைவு பகுதிக்குச் செல்கின்றன. அவற்றில் சில மறக்கப்பட்டு எஞ்சியது நினைவிற்கு வருகிறது. மகிழ்ச்சியான சூழ்நிலையில் சுதந்திரமாக விரும்பிக் கற்றவை நெடுங்கால நினைவிற்கு செல்கிறது. அச்சுறுத்தும் சூழலில் விருப்பமின்றி அவசர அவசரமாக கவனமின்றி கற்றவையின் பெரும் பகுதி மறக்கப்பட்டு ஒரு சில பகுதிகள் மட்டும் குறுங்கால நினைவுப்பகுதியில் ஊசலாடிக் கொண்டிருக்கும். எனவே வகுப்பறையில் குழந்தைகளை அடைத்துப்போட்டுக் கட்டாயப்படுத்தி துன்புறுத்தி கற்பிப்பதை விட்டு மகிழ்ச்சியான சூழலை ஏற்படுத்தி விளையாட்டு முறையில் தொடக்கப்பள்ளிக் குழந்தைகளுக்குப் பாடம் கற்பிப்பது ஆசிரியர்களுக்கு ஒரு பயனுள்ள செயலாகும்.

## 6. சிந்தனை

சிந்தித்தல் என்பது ஒரு அறிவார்ந்த செயலாகும். உளவியல் நோக்கில் சிந்தனை என்பது புறத்தூண்டல்களால் நம் உள்ளத்தில் ஏற்படும் அல்லது தொடர்ந்து நிகழ்கின்ற ஒரு மனச்செயலாகும். ஒரு குறிக்கோளை அல்லது நோக்கத்தை அல்லது முடிவை அடைவதற்கான வழிதேடும் மனத்தளவிலான முயற்சியே சிந்தனை என்றும் கூறலாம். மேலும் சிந்தனை என்பது அறிதல் திறனின் கூறாகும். சிந்தனை காரணமாக கவிதை பிறக்கிறது. கணினி, கைபேசி, இயந்திர மனிதன் போன்ற கண்டுபிடிப்புகள் ஆச்சரியப்படத்தக்கதாகும். ஒவ்வொரு பொருளும், கருத்தும், செயலும் படைப்பாளிகளின் சிந்தனையில் உருவானது தானே. இப்பகுதியில் சிந்தனையைப் பற்றி அறிவோம்.

## கற்றலில் சிந்தனையின் பங்கு

படித்தவற்றை அப்படியே திருப்பி ஒப்புவித்தல் அல்லது எழுதுதல் என்பதுதான் கற்றல் என்ற கருத்து நிலவிவருகிறது. இது ஒரு குருட்டு மனப்பாடச் செயலாகும். சில மாணவர்கள் இதற்கு மனதைப் பழக்கி வைத்துக்கொள்வார்கள். இவர்களால் தேர்வுகளில் அதிக மதிப்பெண்களைப் பெறமட்டும்தான் முடியும். ஆனால் அவர்கள் மனப்பாடம் செய்து கற்றது வாழக்கையில் ஒருபோதும் பயன்படாது. ஏட்டு சுரைக்காய் கறி சமைக்க உதவுமா? படித்தவற்றை வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் பயன்படுத்தி வெற்றி காணும் திறமையைக் கற்றல் என்று கூறுவது ஒன்றும் மிகையாகாது. கற்றவற்றை வாழ்க்கையில் பயன்படுத்த உதவுவது சிந்தனையாகும். ஒரு கருத்தைக் கற்கும் போதே அதுசரியா? தவறா? இதை அப்படியே வைத்துக்கொள்ளலாமா? அல்லது மாற்றி அமைக்கலாமா? எளிமைப்படுத்தலாமா? விரிவு படுத்தலாமா? என்று பல வகையில் சிந்திப்பது ஆக்கப்பூர்வமானக் கற்றல் என்று கூறலாம். இதனைப் புரிதல் என்றும் கூறலாம்.

பழைய அனுபவங்களைச் சிந்தித்து அவற்றுடன் புதிய அனுபவத்தைப் பொருத்திப் பார்த்து ஒரு முடிவுக்கு வருவது குவிசிந்தனை என்று கூறுகின்றோம். பழைய அனுபவத்துடன் புதிய அனுபவத்தை பொருத்திப்பார்த்து மேலும் ஒரு புதிய அனுபவத்தை பெற முயற்சிப்பதை விரி சிந்தனை என்று கூறுகின்றோம்.

புலன்காட்சி நினைவு போன்ற பலவும் ஆய்ந்தறிதலில் பயன்படுத்தப்படுவதால் ஆய்ந்தறிதலை சிந்தனையின் முழுச் செயல் எனலாம். ஒருவனது ஆய்வுத்திறன் அவன் பெற்றுள்ள அனுபவத்தையும் சிந்திக்கும் திறனையும் பொறுத்தே அமைகிறது. குழந்தைகளுக்கு இளமையிலே சிந்திக்கும் திறனைப் பெற வாய்ப்புக்கள் அளித்தும், பயிற்சியளித்தும் ஊக்குவிக்கவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட இலக்கை அடைய முயலும் ஒருவனுக்குத் தடைகள் ஏற்படும்போது அவனுக்குப் பிரச்சனை ஏற்படுகிறது. பிரச்சனைகள் இல்லையெனில் ஆய்தல் தேவைப்படாது. ஆய்வில் காணப்படும் பல்வேறு படிகளைப் பற்றி ஜான்டூயி கூறுபவன.

1. பிரச்சனையை உணர்தல்.
2. பிரச்சனைத் தீர்க்கவல்ல விவரங்களைத் திரட்டுதல்.
3. கருதுகோள்கள் அமைத்தல்.
4. கருதுகோளைச் செயல்படுத்தித் தீர்வுகாண முயலுதல்.
5. முடிவினை எட்டுதல்.
6. முடிவினைச் சோதித்து அறிதல்.

பல செய்திகளை ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்து அவற்றினின்றும் சில பொது விதிகளை வருவித்தல் தொகுத்தறி அனுமானமாகும். எடுத்துக்காட்டாக திடப்பொருள் வெப்பத்தால் விரிவடைகிறது. நீர் வெப்பத்தால் விரிவடைகிறது. வாயு வெப்பத்தால் விரிவடைகிறது. எனவே பொருள் வெப்பத்தால் விரிவடைகின்றன என்ற ஒரு முடிவுக்கு வருகிறோம். இதனைத் தொகுத்தறி முறை எனலாம்.

ஒரு பொது விதியை பல தனிப்பட்ட நிகழ்ச்சிகளுக்கும், நிலைமைகளுக்கும் பயன்படுத்திப் பார்த்தல் பகுத்தறி அனுமானமாகும். எடுத்துக்காட்டாக பொருள்கள் வெப்பத்தால் விரிவடைகின்றன என்ற பொது விதியிலிருந்து இரும்பு, தங்கம், வெள்ளி, பாதரசம் போன்றவை வெப்பத்தால் விரிவடைகின்றன என்பதை அறிந்து கொள்ளலாம். இதனைப் பகுத்தறி முறை எனலாம்.

இவ்விரு அனுமானங்களைப் பயன்படுத்துவதில் தகுந்த பயிற்சி குழந்தைகளுக்கு அளிக்கப்பட வேண்டும். இதனால் புதுக்கருத்துக்களும், புதிய விதிகளும் தோன்ற முடியும். குழந்தைகளின் சிந்தனைத் திறன் வளரும்.

### சிந்தனையும் மொழியும்

தன் எண்ணங்களைப் பிறருக்கு எடுத்து இயம்பவும், பிறர் கருத்துக்களை அறியவும் மொழித்திறன் தேவைப்படுகிறது. சிந்திப்பதற்கு மொழி பயன்படுகிறது. மொழியின் வளர்ச்சிக்கும் சிந்தனை உதவுகிறது. குழந்தைகளின் அறிவு வளர வளர தம் சிந்தனையில் மொழியை அதிகம் பயன்படுத்துகின்றனர். இதனால் புதிய பொருள்களையும், கருத்தையும், செயல்களையும் கற்பனை செய்யமுடியும். மொழி குழந்தைகளது சிந்தனையின் தன்மை, தரத்தை உயர்த்தும் ஒரு கருவியாக செயல்படுகிறது.

## 7. அறிதல் திறன் வளர்ச்சி

ஒருவர் தனது சுற்றுப்புறச் சூழலைப் புரிந்து கொள்ளக் கூடியத் திறன் வளர்ச்சியை அறிதல் திறன் வளர்ச்சி என்று கூறுகின்றோம். இதற்கு நம் புலன்களாகிய மெய், வாய், கண், மூக்கு மற்றும் செவி பயன்படுகின்றன. புலன்களினால் பெறப்படும் தூண்டல்கள் அனுபவிக்கப்பட்டு நினைவாக வடிவம் பெறுகின்றன. இவற்றை வரிசைப்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், பொதுமைப்படுத்துதல், சிந்தித்தல், காரண காரியம் அறிதல், எண்ணங்கள், பிரச்சனைக்குத் தீர்வு காணல் போன்ற மனத்திறன்களின் உதவியோடு அறிதல் திறன் வளர்ச்சியடைகிறது. இவ்வளர்ச்சி நிலைகள் வயது மற்றும் சூழ்நிலைகளைப் பொறுத்து குழந்தைக்குக் குழந்தை வேறுபடலாம்.

### பியாஜேயின் அறிதல் திறன் வளர்ச்சி

பியாஜே என்ற அறிவியல் மேதை தன் வாழ்நாள் முழுவதும் குழந்தைகளின் வளர்ச்சியைப் புரிந்து கொள்வதில் செலவிட்டார். அவருடைய கண்டுபிடிப்புகள் சுவையானது. குழந்தைகள் பிறப்பிலிருந்து எவ்வாறு அறிதல் திறன் வளர்ச்சி அடைகிறது என்பதை நான்கு படிநிலைகளாகப் பகுத்துள்ளார்.

| | | |
|---|---|---|
| முதல் நிலை | தொட்டு உணரும் பருவம் | பிறப்பிலிருந்து 18 மாதம் வரை |
| இரண்டாம் நிலை | மனச்செயல்பாடுகளுக்கு முந்தைய நிலை | 18 மாதம் முதல்7 வயது வரை |
| மூன்றாம் நிலை | புலன்களை உணர்வதை வைத்து சிந்தித்துச் செயல்படும் மனச் செயல்பாட்டு நிலை | 7 முதல் 12 வயது வரை |
| நான்காம் நிலை | முறையாகச் சிந்தித்து எண்ணங்களின் அடிப்படையில் செயல்படும் மனநிலை | 12 வயதிற்கு மேல் |

### புலன்களால் உணர்வதை பார்ப்பதை வைத்துச் சிந்தித்துச் செயல்படும் மனச்செயல்பாட்டு நிலை

இப்பருவத்தில் உள்ள குழந்தைகள் பொருள்களின் தொடர்புகளை அறிந்து அவைகளின் அமைப்புகளை யோசித்துத் தங்கள் மனத்திலேயே பொருள்களின் நிலைகளை மாற்றி வைத்துப் பார்க்கத் தொடங்குகிறார்கள். சந்தேகங்கள் ஏற்படும்போது பொருள்களை அல்லது அவற்றின் அமைப்புகளை மாற்றி வைத்துக் கண்கூடாகப் பார்த்து சந்தேகங்களைப் போக்கிக் கொள்கின்றனர். பொருள்களின் மாறாத் தன்மையைப் புரிந்து கொள்கின்றனர். 6 + 3 = 9 என்றால் 3 + 6 = 9 ஆகத்தான்

இருக்க வேண்டும் என்று கற்கத் தொடங்குகிறார்கள். இப்பருவத்தினர் தாமும் புரிந்து கொண்டு மற்றவர்களுக்கும் விளக்க முற்படுகின்றனர்.

நேரடிக் கற்பித்தல், முறைப்படுத்தப்படாத அனுபவங்கள், மற்றும் முதிர்ச்சியின் காரணமாகத் தங்களுடைய கருத்துக்களில் மாற்றங்களைக் கொண்டுவர முயல்கின்றனர். கற்பிக்கப்படும் கருத்துக்களில் உள்ள உண்மைகளைப் புரிந்து கொள்ள அதற்கான காரணகாரியங்களை ஒப்பிட்டுப் பார்க்கத் தொடங்குகின்றனர்.

**பியாஜேயின் கருத்துக்களை அறிதல் திறன் வளர்ச்சியில் பயன்படுத்துதல்**

தொடக்கப்பள்ளிக் குழந்தைகள் பியாஜே கூறுவதைவிட அதிகப்படியான அறிவுத்திறன்களை வெளிப்படுத்துவதாகவே ஆராய்ச்சியாளர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர். தற்போதுள்ள கல்வித் திட்டத்தில் பியாஜேயின் கருத்துகளை எவ்விதத்தில் பயன்படுத்தலாம் என்பதைக் காண்போம்.

1. மூன்று முதல் ஏழு வயது வரையுள்ள குழந்தைகள் புலனியக்கத்திறன், மொழித்திறன் பெற்றவர்களாக உள்ளனர். இவர்களுக்கு ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், களிமண்ணால் பொம்மைகள் செய்தல் போன்ற கைவேலைகள், நடனம், நாடகம், இசைப்பயிற்சி, பேச்சு போன்ற செயல்களில் பயிற்சியளிக்க வேண்டும். பொருட்களின் தன்மை, வகைப்படுத்துதல், வரிசைப்படுத்துதல், காலம், இடைவெளி, தொலைவு, எண்கள், கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் போன்ற கணிதச் செயல்கள் முதலியனவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்து பயிற்சிகள் பல அளிக்கவேண்டும். எட்டு முதல் பனிரெண்டு வயது வரையுள்ள குழந்தைகளுக்குத் தத்துவ ரீதியாகப் புரிந்து கொள்ள முடியாத கருத்துக்களை அவர்களுடைய இளமனதில் திணிப்பதைத் தவிர்க்க வேண்டும்.

2. கற்றல்– கற்பித்தல் உபகரணங்களும், கருவிகளும் குழந்தைகளின் அறிவுத்திறன் வளர்ச்சிக்கேற்ப அறிந்து வழங்க வேண்டும். புதிய கருத்துக்களை அறிமுகப்படுத்தும் போது குழந்தைகளின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் கற்பிக்கும் பாடங்களும் கருவிகளும் தெரிவு செய்தல் வேண்டும். அப்போதுதான் கற்பிக்கப்படும் கருத்துக்கள் மனதில் உறுதிபடும். செய்திகளை நேரடியாக வாய்மொழி வழியாக மட்டும் கூறாமல் செயல்வழிக் கற்பிப்பது நன்மை பயக்கும். மனரீதியான மாற்றங்களையும் ஏற்படுத்தும்.

3. புதிய கருத்துக்களை அறிமுகப்படுத்தும் போது பழைய அனுபங்களுடன் ஒப்பிட்டுக் கூறி அவை இரண்டுக்குமுள்ள தொடர்பினை எடுத்துக்காட்டி குழந்தைகளுக்குப் புரிய வைக்க வேண்டும். செய்திகளை அப்படியே மனப்பாடம் செய்ய ஊக்குவிக்கக் கூடாது.

## 8.நுண்ணறிவு

பொதுவாகத் தங்களுடைய பிரச்சனைகளை எளிதாக தீர்க்க முடியாத சூழ்நிலையில் சிலர் பிறர் உதவியை நாடிச்செல்வதும் அல்லது செய்வதறியாது சோம்பித்திரிவதையும் பார்க்கின்றோம். உயர்ந்த நிலைக்குச் செல்ல வேண்டும் என்ற ஆவலிலிருந்தும் அதனை நிறைவேற்ற முடியாத நிலையில் சிலர் உள்ளனர். சிலர் தங்கள் நோக்கங்களை எளிதில் நிறைவேற்றிக் கொள்கின்றனர். வகுப்பறையில் ஆசிரியர் அனைத்து மாணவர்களுக்கும் பொதுவாக கற்றல் – கற்பித்தல் செயல்பாடுளை மேற்கொள்கிறார். முடிவில் சில மாணவர்கள் வேகமாகக் கற்கின்றனர். சிலர் மெதுவாகக் கற்கின்றனர். வேகமாகக் கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் எளிதில் பல வெற்றிகளையடைந்து

உயர்ந்த நிலைக்குச் செல்கின்றனர். இவர்களின் வெற்றிக்குப்பின் நுணுக்கமான அறிவு ஒன்று செயல்படுகிறது என்பதுஉண்மை. அதைப் பற்றி நாமும் தெரிந்துகொள்வோம்.

**செயல்கள்**

நுண்ணறிவுச் சோதனைகளான அலெக்சாண்டர் சோதனை, காரண காரியப் படச் சோதனை ஆகிய சோதனைகளை செய்து பார்த்து சோதனைகளின் முடிவிற்கும் நுண்ணறிவிற்கும் உள்ள தொடர்புகளை அறியவும்.

**பியாஜே சோதனை**

பள்ளிக்குச் சென்று பல்வேறு வயதுக் குழந்தைகளை உற்றுநோக்கி அவர்களின் புலச் செயல்கள் வயதிற்கேற்ப எவ்வாறு மாறுபடுகிறது என்பதை கண்டறிந்து தொகுத்தல்.

**நுண்ணறிவின் வரையறை**

நுண்ணறிவுச் சோதனைகளின் தந்தை எனக் கூறப்படும் ஆல்பிரட் பினே என்பவர் "புரிந்து கொள்ளல், புதுமை புனைதல், தொடங்கியச் செயலைத் தொடர்ந்து முடித்தல், தனது நடத்தையிலுள்ள குறைபாடுகளைத் தானே உணர்தல் போன்ற கூறுகள் நுண்ணறிவினுள் அடங்கியுள்ளன என்றார்.

"நோக்கத்தோடு செயல்படுதல், பகுத்தறிவோடு சிந்தித்தல், திறமையாகச் சூழ்நிலையைச் சமாளித்தல் போன்றவை அடங்கிய ஒரு கூட்டச் செயலாற்றலே நுண்ணறிவு" எனறு வெக்ஸ்லர் கூறுகிறார்.

தார்ன்டைக் என்பவர் கூற்றின் படி நுண்ணறிவு மூன்று வகைப்படுகிறது.

1. **சமூக நுண்ணறிவு:** பிறரை தன்பால் ஈர்க்கும் திறன் கொண்டு சமூகத்துடன் இணைந்து வாழ்தல் சமூக நுண்ணறிவு எனப்படுகிறது.

2. **கருத்தியல் நுண்ணறிவு:** பல்வேறு குறியீடுகள், சொற்கள் , வரைபடம், எண்கள் ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பினை அறிந்து பிரச்சனைக்குத் தீர்வு காணுதல் கருத்தியல் நுண்ணறிவு எனப்படுகிறது.

3. **பொறியியல் சார்ந்த நுண்ணறிவு:** பல்வேறு இயந்திரங்களை வடிவமைத்துத் திறமையாகக் கையாளும் திறனைப் பெற்றுத் திகழ்வதே பொறியியல் சார்ந்த நுண்ணறிவு எனப்படுகிறது.

எனவே நுண்ணறிவு என்பது புரிந்துகொள்ளும் ஆற்றல், சிக்கலைத் தீர்க்கும் ஆற்றல், தொடர்பு காணும் ஆற்றல், சூழ்நிலைப் பொருத்தப்பாடு, கருத்தியல் சிந்தனைத்திறன் போன்ற ஆற்றல்கள் அல்லது திறன்களின் தொகுப்பாகும்.

**நுண்ணறிவின் கோட்பாடுகள்**

நுண்ணறிவு தனித்த ஒரு திறனை மட்டும் கொண்டதன்று. அது ஒன்றுக்கு மேற்பட்ட திறன்களை உள்ளடக்கியுள்ளது. இந்தக் கருத்தை விளக்க மூன்று வகை நுண்ணறிவுக் கோட்பாடுகள் கூறப்பட்டுள்ளன. அவை ஒற்றைக் காரணி, இரட்டைக் காரணி, குழுக்காரணி என மூவகைப்படும்.

1. நுண்ணறிவு ஒரு பொதுத்திறனாகும். இந்த ஒற்றைத்திறன் பலதரப்பட்ட செயல்களுக்குப் பின்னணியாக அமைகிறது. ஒருவரின் பலவகையான திறன்களை இயக்கக்கூடிய வல்லமை வாய்ந்த

ஒருதிறன் உண்டு என்றும் அதுவே அவரது நுண்ணறிவாகும் என ஒற்றைக்காரணி கோட்பாடு கூறுகிறது. இதன்படி ஒருவர் மிகுந்த நுண்ணறிவைப் பெற்றிருப்பாரேயானால், வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் அதைப் பயன்படுத்தி வெற்றிபெறுவார். ஆனால் நடைமுறை வாழ்க்கையில் தேர்ச்சி பெற்ற இயற்பியல் பேராசிரியருக்கு தன் வீட்டிலுள்ள வானொலி அல்லது தொலைகாட்சி பெட்டி பழுதானால் அதை சரிசெய்யத் தெரிவதில்லை. இந்தக் குறைப்பாட்டைப் போக்க ஸ்பியர்மென் இரட்டைக் காரணிக் கோட்பாட்டைக் கொண்டு வந்துள்ளார்.

2. ஸ்பியர்மென் கருத்தின்படி நுண்ணறிவு இரு காரணிகளால் ஆனது.

நுண்ணிறவு = பொதுக்காரணி (G) + சிறப்புக்காரணி (S)

உதாரணமாக மின்சக்தி ஒரு பொதுக்காரணியாகும். மின்னடுப்பு, மின்விளக்கு, மின்விசிறி, குளிர்சாதனப்பெட்டி போன்றவை சிறப்புக் காரணியாகும். பல்வேறு செயல்களில் திறமையாகச் செயல்படும் மாணவர்களிடம் பொதுக்காரணி (ஜி) அதிகம் காணப்படும். ஆனால் அவனது கணிதத்திறன், இசை, கலை, பேச்சாற்றல், விளையாட்டு போன்றவைகளில் ஒன்றில் மிகுந்தும் மற்றவற்றில் குறைந்தும் செயல்படும் மாணவனிடம் சிறப்புக்காரணிகளில் (எஸ்) ஏற்றத்தாழ்வுகள் காணப்படும். மாணாக்கர்களிடையே இடைவினை ஏற்படுத்தி கற்பிப்பது ஒரு பொதுக்காரணியாகும். குழுச்செயல்பாடுகள், வேகமாகக் கற்போரைக் கொண்டு மெதுவாகக் கற்போருக்கு கணக்கு அல்லது பிறபாடங்கள் சொல்லித்தருதல், குழுவாகப் பிரிந்து தங்களுக்குள் மதிப்பீடு செய்துகொள்ளுதல், குழுவிவாதம், குழுபோட்டிகள் போன்றவை சிறப்புக்காரணியாகும். நுண்ணறிவு மிக்க ஆசிரியர் இதனை நன்கு அறிந்து சிறப்பாக கற்பிப்பார்.

3. தர்ஸ்டனின் கருத்தப்படி நுண்ணறிவு ஏழு வகையான அடிப்படை மனத்திறன்களால் ஆனதாகும். இவை ஏழும் தனித்தன்மை கொண்டது. ஒவ்வொன்றும் நுண்ணறிவின் வெவ்வேறு திறன்களை அளப்பவை.

1. **சொல்லாற்றல்:** சொற்களால் குறிக்கப்படும் பொதுக்கருத்துக்களின் பொருள்களை உணர்ந்து அவற்றை சிந்தனையில் பயன்படுத்தும் திறன்.
2. **சொல்வேகத்திறன்:** வேகமாக சொற்களைப் புரிந்துகொள்ளவும் வெளிப்படுத்தவும், நினைக்கவும் அவற்றைப் பயன்படுத்தவும் கூடிய ஆற்றல்.
3. **எண்ணாற்றல்:** அடிப்படை கணிதச் செயல்களை வேகமாகவும் சரியாகவும் செய்யும் ஆற்றல்.
4. **இட ஆற்றல்:** புறவெளியில் உள்ள பொருட்களையும் அவற்றுக்கிடையேயுள்ள தொடர்புகளையும் அறியும் ஆற்றல்.
5. **நினைவாற்றல்:** கருத்துக்கள், நிகழ்வுகளை விரைவில் மனதில் பதிய வைத்து தேவைப்படும்போது மீட்டுக்கொணரும் ஆற்றல்.
6. **புலன்காட்சி வேகம்:** வேகமாகவும், சரியாகவும் தூண்டல்கள், பொருள்களை கண்டறியும் திறன்.
7. **காரணகாரிய தொடர்பு அறிதல்:** “இதனால் இது விளையும், இந்த விளைவிற்கு இதுதான் காரணம்” என்பன போன்ற தொடர்பை அறியும் ஆற்றல்.

அண்மையில் கார்டனர் நுண்ணறிவின் பல வகைப்பாடுகளை விளக்கி பன்மை நுண்ணறிவு என்ற கருத்தை வெளியிட்டுள்ளார். நுண்ணறிவுமிக்கோரின் செயல்பாடுகளை ஆராய்ந்து பத்து வகை நுண்ணறிவுகள் உள்ளன எனக் கண்டார்.

மொழித்திறன், கணிதத் திறன், இசைத்திறன், தொடு உணர் திறன், பிறரோடு தொடர்புகொள்ளும் திறன், தன்னை அறிதல், இயற்கையை அறிதல், ஆன்மீக அறிவு ஆகிய பத்து திறன்களில் ஒன்றிலோ அல்லது சிலவற்றிலோ ஒருவருடைய நுண்ணறிவு அதிக அளவு இருக்கலாம். எடுத்துக்காட்டாக எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு இசை நுண்ணறிவும், ராமானுஜத்திற்கு கணித நுண்ணறிவும், ஹெலன் கெல்லருக்கு தொடு உணர் நுண்ணறிவும் பிற நுண்ணறிவு காட்டிலும் அதிக அளவில் இருந்தது எனக் குறிப்பிடலாம்.

## நுண்ணறிவுச் சோதனைகள்

நுண்ணறிவு என்பது தொடர்ந்து வளர்ச்சியடையும் ஓர் ஆற்றல் என பினே கருதினார். வயதிற்கேற்ப நுண்ணறிவு வளரும் தன்மையுடையதால் ஒவ்வொரு வயதுக்கும் ஏற்ற வகையில் சோதனைகளை அமைத்துள்ளார். பினேயின் சோதனைகள் மூலம் கீழ்க்காணும் நுண்ணறிவுத் திறன்கள் அளவிடப்படுகின்றன.

பொது உண்மைகள் பற்றிய அறிவு

சொற்களுக்குரிய விளக்கங்கள்

படங்கள், சொற்கள் இவற்றிலுள்ள ஒற்றுமை – வேற்றுமைகள் அறியும் திறன்

நினைவுத்திறன், எளிய கணக்கறிவு ஆகியன அளவிடப்படுகின்றன.

எளிய, படங்கள் வடிவங்கள் வைத்துச் செய்யும் செயல் திறன்

பினே சோதனையில் ஒவ்வொரு வயதிலும் எத்தகைய கேள்விகள் இடம் பெற்றுள்ளன என்பதை விளக்கும் சில மாதிரிக் கேள்விகள்

| வயது | மாதிரி | செயல் |
|---|---|---|
| 2 | மூன்று துளையிட்ட பலகை | வட்டமான, முக்கோண, சதுரமான வடிவப் பொருள்களைச் சரியான துளையில் சரியாக வைத்தல். |
| 4 | நினைவு கூர்தல் | மூன்று பொருள்களில் ஒன்றைக் காட்டி மறைத்தவுடன் அதன் பெயரைக் கூறுச்செய்தல். |
| 7 | ஒப்பிடுதல் | மரக்கரிக்கும் நிலக்கரிக்கும் உள்ள வேறுபாடு |
| 20 | பழமொழிக்குப் பொருள் கூறல் | "பதறிய காரியம் சிதறிப் போகும்" "சித்திரமும் கைப்பழக்கம்" |

## வெக்ஸலர் சோதனை

வெக்ஸலர் சோதனையை ஏழு வயது முதல் பதினாறு வயது வரையிலுள்ள மாணவர்களுக்குப் பயன்படுத்தி அவர்களின் நுண்ணறிவை அளவிட முடியும். இவரது நுண்ணறிவுச் சோதனைகளில் இரண்டு வகைச் சோதனைத் தொகுதிகள் அடங்கியுள்ளன. ஒன்று சொற்சோதனை மற்றொன்று செயற்சோதனையாகும்.

## சொற்சோதனை

சொல்வழிச் சோதனைகளில் கிடைக்கும் மதிப்பெண் மற்றும் செயற்சோதனைகளில் கிடைக்கும் மதிப்பெண் ஆகியவற்றை கூட்டிக்கிடைக்கும் மதிப்பெண் ஒருவரின் நுண்ணறிவாக கருதப்படுகிறது.

இது ஒரு தனியாள் சோதனையாகும். ஒவ்வொரு மாணவராக இச்சோதனையைச் செய்திடுவர். இச்சோதனை ஒன்றன்பின் ஒன்றாக தரப்படுகிறது. இச்சோதனையை செய்து முடிக்க 1 மணி நேரம் தேவைப்படுகிறது.

**நுண்ணறிவை அளவிடுதல்**

குழந்தைகளின் நுண்ணறிவை நேரடியாக அளவிடுவது மிகவும் கடினமான செயலாகும். ஒரு குழந்தையின் நுண்ணறிவு அது செய்யக்கூடிய செயலைத் தேர்ந்தெடுக்கும் போக்கு மற்றும் செய்து முடிக்கும் வேகம் ஆகியவற்றைப் பொருத்து அமையும். ஆகவே, நுண்ணறிவின் அளவை உளவியல் வல்லுனர்கள் நுண்ணறிவு ஈவு எனும் ஓர் அளவையினால் குறிப்பிடுகின்றார்.

**நுண்ணறிவு ஈவு**

டெர்மன் என்பவர்தான் முதல் முதலில் நுண்ணறிவு ஈவு என்னும் சொல்லை அறிமுகப்படுத்தினார். ஒருவனுடைய மனவயதுடன் அவனது கால வயதினை ஒப்பு நோக்க நுண்ணறிவுத் திறன் அளவைக் குறிப்பிடுவர். மனவயதை காலவயதால் வகுத்து 100 ஆல் பெருக்கினால் கிடைக்கும் எண்ணே நுண்ணறிவு ஈவு எனப்படும்.

$$\text{நுண்ணறிவு ஈவு (IQ)} = \frac{\text{மனவயது (மாதங்களில்) (MA)}}{\text{காலவயது மாதங்களில் (CA)}} \times 100$$

100 ஆல் பெருக்குவது நுண்ணறிவு ஈவு பின்னமாக வராமல் முழு எண்ணாக இருப்பதற்காகத்தான். சோதிக்கப்படுபவர் பிறந்தது முதல் சோதனை நாள்வரை கணக்கிடப்படுவது காலவயதாகும். மனவயது என்பது சோதிக்கப்படுவரின் நுண்ணறிவு முதிர்ச்சியைக் குறிக்கும் அளவாகும். ஒரு குறிப்பிட்ட வயதுடையோர் பொதுவாகச் செய்யக்கூடிய செயல்களை வெற்றிகரமாக ஒரு குழந்தை செய்து முடித்தால் அதுவே அக்குழந்தையின் மனவயதாகும். நுண்ணறிவுச் சோதனையின் மூலம் இதனைக் கணக்கிடலம்.

**உங்கள் வகுப்பறை மாணாக்கரின் நுண்ணறிவு ஈவை கணக்கிடும் முறை**

மாணவர்களின் திறனை அளவிட நுண்ணறிவுச் சோதனையைப் பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும். நம் பண்பாட்டுச் சூழ்நிலைக்கேற்றவாறு சோதனை உருப்படிகளை தேர்ந்தெடுக்க வேண்டும். நல்ல இயல்பான கற்றல் சூழலை உருவாக்குதல் வேண்டும்.

மாணவர்களின் உண்மை வயதிற்கு இரண்டு ஆண்டுகள் குறைந்த வயதிற்குரிய சோதனை உருப்படிகளிலிருந்து சோதனையைத் தொடங்குதல் வேண்டும். படிப்படியாக ஒவ்வொரு உயர் வயதிற்குரிய சோதனையைத் தரவேண்டும். எந்த ஒரு வயதிற்கான எல்லா சோதனை உருப்படிகளையும் குழந்தை சரியாகச் செய்கிறதோ அதுவே அதன் அடிப்படை மனவயதாகும். சோதனைக்கு உட்படுவோர் மேற்கொண்டு பதில் அளிக்காத கட்டத்தில் சோதனையை நிறுத்துதல் வேண்டும்.

எடுத்துக்காட்டாக 8 வருடங்கள் 4 மாதக் குழந்தையின் நுண்ணறிவை அளந்தறிய வேண்டுமெனில் முதலில் அக்குழந்தைக்கு 6 வயது சோதனை உருப்படிகள் தரப்படுகிறது. அவற்றை வெற்றிகரமாக முடித்துவிட்டால், அதனை அடிப்படை மன வயதாக அதை எடுத்துக்கொள்ள வேண்டும். பிறகு 7 வயதுக்குரியச் சோதனைகள் தரப்படுகிறது. அதில் 6 கேள்விகளுக்கு 5 கேள்விகளுக்கு மட்டும் விடையளித்தால் ஒவ்வொரு சோதனை உருப்படிக்கும் 2 மாதங்கள் என்ற அளவில் கணக்கிட்டு 7 வயதிற்குரிய சோதனையில் மனவயது 10 மாதங்கள் எனக் குறிப்பிடுதல் வேண்டும். அதேபோன்று

தொடர்ந்து அடுத்து வரும் வயதுகளுக்கான சோதனைகளை நிகழ்த்த வேண்டும். 13 வயதிற்கான சோதனையில் எதனையும் சரியாகச் செய்யவில்லை என்றால் சோதனையை அதனுடன் நிறுத்திக்கொள்ள வேண்டும். எனவே 6 வயது முதல் 12 வயது வரை சோதனைகளில் மாணவனின் மன வயது பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ளவாறு இருந்தது என்றால் அந்த மாணவனின் மொத்த மன வயது 110 மாதங்கள் ஆகும்.

| வயதுநிலை | சோதனையில் வெற்றிபெற்ற உருப்படிகள் | வெற்றி பெற்றால் கூடும் மாதங்கள் ஒவ்வொரு உருப்படிக்கும் | அடிப்படை வயது | மொத்த மாதங்கள் கூடுதல் |
|---|---|---|---|---|
| 6 | அனைத்திலும் வெற்றி | – | 6 | – |
| 7 | 6ல் 5 மட்டும் | 2 | | 10 |
| 8 | 6ல் 5 மட்டும் | 2 | | 10 |
| 9 | 6ல் 4 மட்டும் | 2 | | 8 |
| 10 | 6ல் 3 மட்டும் | 2 | | 6 |
| 11 | 6ல் 1 மட்டும் | 2 | | 2 |
| 12 | 6ல் 1 மட்டும் | 2 | | 2 |
| 13 | அனைத்திலும் தோல்வி | 0 | | 0 |
| | | | 6 வருடம் | 38 மாதங்கள் |

மனவயது = அடிப்படை வயது + கூடுதல் மாதங்கள் 72 மாதங்கள் + 38 மாதங்கள் = 110 மாதங்கள்

காலவயது = 8 வருடம் 4 மாதங்கள் = 100 மாதங்கள்

$$\text{நுண்ணறிவு ஈவு} = \frac{110}{100} \times 100$$

உளவியல் வல்லுனர்களின் கூற்றுப்படி நுண்ணறிவு வளர்ச்சி 16 வயது வரை நீடிக்கும். எனவே நுண்ணறிவு ஈவு கணக்கிடும்போது சோதிக்கப்படுவோர் 16 வயதிற்கு குறைவாக இருத்தல் வேண்டும். நுண்ணறிவு அதிகமாக பெற்றுள்ள குழந்தைகள் பள்ளிப்படிப்பிலும் முன்னணியில் இருப்பர்.

### செயல்கள்

**ஒரு பொருள் பல பயன்கள்:** ஒரு பொருளைக் காட்டி அதை எவ்வாறு எல்லாம் உருவகப்படுத்திப் பயன்படுத்த இயலும் எனக் குழுவிளையாட்டு மூலம் கண்டறிதல்.

**ஒரு எழுத்து பல படங்கள்:** ஆசிரியர் கரும்பலகையில் ஓரிலக்க எண்ணை எழுதி அதை மையமாகக் கொண்டு படங்களை வரையவேண்டும் எனக் கூறவும். ஒவ்வொரு பயிற்சி மாணவரும் அப்படத்தினை வரைந்தபின் அவர்களின் படங்கள் எவ்வாறு உள்ளன அப்படத்திற்கும் அவர்களின் ஆக்க சிந்தனை எவ்வாறு வேறுபடுகிறது என விவாதிக்கவும்.

## 9. ஆக்கத்திறன்

மனிதர்களுக்கு பல திறன்கள் உள்ளன. இவற்றில் சில அவன் உயர்விற்கும் சமுதாய முன்னேற்றத்திற்கும் பயன்படுகிறது. சிலத்திறன்கள் அவனுக்கும் சமுதாயத்திற்கும் கெடுதல் செய்கிறது. சிலத்திறன்கள் எந்த ஒரு பயனும் செய்யாமல் பயனற்றுப்போகிறது.

புதுமையான மற்றும் தனித்தன்மையுள்ளவற்றை படைக்கும் அல்லது உருவாக்கும் திறனை ஆக்கத்திறன் என்று கூறலாம். அறிவியல் மேதைகள், கலைத்திறன் மிக்கவர்கள், படைப்பாளிகள் தாங்கள் அறிந்த செய்திகள், அனுபவங்கள், உள்ளுணர்வுகளைப் பயன்படுத்தி புதுமையான பலவற்றைக் கண்டுபிடித்துள்ளனர். எடுத்துக்காட்டாக பாரதியார் பல புதுமையான கவிதைகள் பாடல்களை இயற்றியுள்ளார். சர்.சி.வி.ராமன் அறிவியல் கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளார். ஐன்ஸ்டீன் போன்ற பல மேதைகள் அறிவியல் கண்டுபிடிப்புகளை தந்துள்ளனர்.

ஆக்கத்திறன் எனப்படுவது ஆக்கச் சிந்தனையுடன் தொடர்புடையது. டாரன்ஸ் ஆக்கத்திறனின் ஐந்து பண்புகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றார்.

1. தன்னியல்பு
2. நெகிழ்ச்சி
3. மாற்றுத்தன்மை
4. கருத்து வேகம்
5. முற்றிலும் புதுமை

ஆக்கச் சிந்தனைக்கு குவிசிந்தனையும் விரிசிந்தனையும் தேவைப்படுகின்றன.

**ஆக்கச் சிந்தனையின் படிநிலைகள்**

புதியனவற்றைக் கண்டுப்பிடித்தலுக்கான ஆக்கச் சிந்தனையில் நான்கு படிகள் இருப்பதாக கிரகாம் வாலஸ் என்ற உளவியல் வல்லுனர் தெரிவித்துள்ளார். அவைகளாவன:

1. ஆயத்த நிலை
2. உள்வளர்ச்சி
3. விளக்கம் தோன்றல்
4. சரிபார்த்தல்

**ஆயத்த நிலை**

முதலில் பிரச்சனையைத் தெரிந்து கொள்ளவேண்டும். அவற்றிற்கு தேவையான விவரங்களை சேகரிக்க வேண்டும். பிரச்சனையை அலசி ஆராய வேண்டும்.

**உள் வளர்ச்சி**

பிரச்சனைக்கு சில நேரங்களில் உடனடியாக தீர்வு தோன்றிவிடும் அல்லது தோன்றாவிடினும் நனவிலி நிலையில் இந்தப் பிரச்சனைக்கான அலசல் நடந்து கொண்டிருக்கும். பல தீர்வுகள் தோன்றி மறையும். சில தீர்வுகள் மின்னிக் கொண்டிருக்கும்.. அனால் பிரச்சனைக்குரிய தீர்வு வளர்ந்து கொண்டிருக்கும். இதனையே உள் வளர்ச்சி என்று கூறுகின்றோம்.

**விளக்கம் தோன்றல்**

பிரச்சனைக்கான விளக்கம் சில நேரங்களில் மனதில் திடீரென உள்ளொளி போலத்தென்படும். எடுத்துக்காட்டாக, கணிதமேதை இராமானுஜம் தன் கனவில் பல கணித உண்மைகள் பளிச்சிட்டதைக் குறிப்பிடுகின்றார். சர்.சி.வி. ராமனின் ஒளிபற்றிய கோட்பாட்டில் ஒரு கப்பலில் மேல் தளத்தில் கடலைப்பர்த்து உலவிக் கொண்டிருக்கும்போது தோன்றியதாக கூறப்படுகிறது.

**சரிபார்த்தல்**

சிந்தித்து அறிந்த தீர்வின் தன்மை சரிபார்க்கப்படுகிறது. உள் வளர்ச்சி, விளக்கம் பளிச்சிடல் இவ்விரண்டு நிலைகளும் அறிவியல் ஆக்கச்சிந்தனைக்கும், கலையழகு ஆக்கச்சிந்தனைக்கும் பொதுவாகக் காணப்படுகின்றன.

ஆக்கச் சிந்தனையாளர்கள் பெரும்பாலோர் அவர்களுடைய கருத்துக்கள் திடீரெனத் தோன்றுவதாகவும் அது ஒரு உள்ளுணர்வாகப் பெறப்பட்டதாகவும் கூறியுள்ளனர்.

**ஆக்கத்திறனை வளர்க்கும் முறைகள்**

1. வகுப்பறையில் பாடச்செயல்கள் செய்யும்போது மாணவர்களைச் சுதந்திரமாக செயல்பட அனுமதித்தல்.
2. களிமண்ணினால் பல்வேறு உருவங்களைச் செய்ய உதவுதல்.
3. எழுத்துக்களை அவரவர் விருப்பதிற்கு ஏற்றவாறு உருவங்களாக மாற்றச் செய்தல்.
4. அறிவியல் கண்காட்சிகள் அமைத்து மாணவர்களின் அறிவியல் மனப்பன்மைகளை வளர்த்தல். இது பிற்காலத்தில் ஆக்கக் கண்டுபிடிப்புகளுக்கு உதவும்.
5. காகித வேலைபாடுகள், ஓவியம் வரைதல், வண்ணம் தீட்டுதல், பொருத்து அட்டைகளைக் கொண்டு உருவங்கள் உருவாக்குதல் போன்றவை அழகுணர்ச்சியைத் தூண்டி ஆக்கத்திறனை வளர்க்கும்.
6. கணினி விளையாட்டுகள், மின்னனு விளையாட்டுகள், சதுரங்க விளையாட்டு போன்றவை நிதானத்தையும் சிந்திக்கும் திறனையும் மேம்படுத்தி ஆக்கத்திறனுக்கு அடிப்படையாக அமையும்.
7. குழந்தைகளை அடிக்கடி சுதந்திரமாக வினா எழுப்பச் செய்து உடனுக்குடன் சரியான விடை பகர்வதால் கற்றலிலும் சிந்திப்பதிலும் ஊக்கம் பிறக்கிறது. ஊக்கம் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு உரமாக அமையும்.
8. விளையாட்டில் ஆர்வமுள்ள மாணவர்களின் புலனுறுப்புகள் சுறுசுறுப்புடன் செயல்படும் தன்மையைப் பெருகிறது. சுறுசுறுப்பு ஆக்கத்திறனுக்கு அத்தியாவசியமாகிறது.
9. களப்பயணங்கள், கல்விச் சுற்றுலா போன்றவை வகுப்பறைச் சோர்விலிருந்து விடுபட்டு சுதந்திர உணர்வைத் தருகிறது. சுதந்திர உணர்வு ஆக்கத்திறனைப் பெற உதவும்.
10. நூலகத்தில் தனிமையில் அமர்ந்து புத்தகத் துணையுடன் சிந்திக்கும் பழக்கம் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.
11. நியூட்டன், ஐன்ஸ்டீன், பாரடே, சர்.சி.வி. ராமன் போன்ற அறிவியல் மேதைகள் தங்களது ஆசிரியர்களுக்கு தெரியாததை ஆக்கச் சிந்தனையின் துணைகொண்டு கண்டுபிடித்துள்ளனர் என்றால் அது மிகையாகாது.
12. ஆசிரியரின் அச்சுறுத்தலும், அதட்டலும் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு ஒரு போதும் உதவாது. மாறாக ஆசிரியரின் அன்பு, அரவணைப்பு மற்றும் பாராட்டுதல் குழந்தைகளின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு பெரிதும் உதவும்.
13. ஆசிரியர்கள் வகுப்பில் சர்வாதிகாரியாகச் செயல்படுவதை தவிர்த்து ஏதுவாளராக செயல்படுவது அவருக்கும் மாணவர்களுக்கும் இடையே நல்லுறவை ஏற்படுத்தி மாணவர்களை சுதந்திரமாக சிந்திக்க வழிவகுக்கும். இதனால் ஆக்கதிறன் துளிர்விடத் துவங்கும் என்பது திண்ணம்.

14. அறிவியல் சோதனைகளை மாணவர்களே செய்து கற்க உதவ வேண்டும். உதாரணமாக காந்தவிசைக் கோடுகளை கரும்பலகையில் வரைந்து காட்டாமல் மாணவர்களிடம் காந்தங்கள், இரும்புத்தூள், காகிதம் ஆகியவற்றைக் கொடுத்து அவர்களைச் சோதனை செய்யச் சொல்லுங்கள். மாணவர்கள் தாங்களாகவே காந்தத்தின் மீது காகிதத்தை வைத்து அதன் மீது இரும்புத்தூள்களைத் தூவும் பொழுது காந்த விசைக்கோடுகள் வடிவத்தை இரும்புத்தூள்கள் ஏற்படுத்துவதைப் பார்த்து உண்மைநிலையை உணர்வார்கள். உண்மைநிலை உணர்வு ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு உதவும்.

15. குழு விவாதம், கருத்தரங்குகள், மன்றச் செயல்பாடுகள், படைப்பாளிகளின் சொற்பொழிவுகள் மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு வழிவகுக்கும்.

16. கட்டுரை, கவிதை, பாட்டு, ஓவியம் வரைதல், விளையாட்டு போன்றவற்றில் போட்டிகள் வைத்து பரிசுகள் அளிப்பது மாணவர்களின் ஆக்கச் சிந்தனையைத் தூண்டி ஆக்கத்திறனை வளர்க்க உதவும்.

### செயல்கள்

**ஒரு பொருள் பல பயன்கள்:** ஒரு பொருளை காட்டி அதை எவ்வாறு எல்லாம் உருவகப்படுத்தி பயன்படுத்தலாம் எனக் குழு விளையாட்டு மூலம் கண்டறிதல்.

**ஒரு எழுத்து பல படங்கள்:** ஆசிரியர் கரும் பலகையில் ஒரு எழுத்தினை எழுதி அதன் அடிப்படையில் பல படங்களை ஒவ்வொருவரையும் வரையச் சொல்லுதல். அப்படங்கள் மூலம் ஒவ்வொருவரின் ஆக்கத்திறன் எவ்வாறு உள்ளது என குழு விவாதம் செய்து கண்டறிதல்.

### கற்கும் குழந்தை

ஒவ்வொரு குழந்தையும் பிறப்பிலேயே கற்பதில் மிகவும் ஆர்வம் கொண்டிருக்கிறது. ஒருவிதத்தில் கூறினால் அவர்கள் கற்பதற்காகவே பிறந்தவர்கள் என்று கூடக் கூறலாம். சுவாசத்தைப்போல் கற்பதும் இயற்கையானதுதான். அவர்களை அதற்கு ஊக்குவிப்பதே ஆசிரியர்களாகிய நமது கடமை.

பிறந்த குழந்தை சிலமணி நேரத்திலேயே தன்னை சுற்றியுள்ளவர்களின் முகங்களையும் தாயினுடைய குரலையும் அறிந்து கொள்கிறது. ஓரிரு வாரத்திலேயே நிறங்கள், வடிவங்கள், குரல் வேறுபாடுகளை அறிந்து கொள்கின்றனர் என தற்போதுள்ள ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். குழந்தைகள் தானாகவே கை, கால்களை நீட்டி, மடக்க பொருட்களைதட்டி, அசைத்து, பிடித்து பல்வேறு செயல்களைச் செய்வதன் மூலம் கற்றுக் கொள்கின்றனர். ஒருவிதத்தில் கூறினால் அறிவுசார் இயக்கத்தையும் சார் எழுச்சிகளையும் பிரிக்க முடியாது. ஆறுமாதத்திலிருந்து பிதினெட்டுமாதத்தில் குழந்தைகள் தங்களை சுற்றி நடப்பவைகளை அறிந்து அது தொடர்பாக நடக்க முயற்சிக்கின்றனர். அதனால் குழந்தைகளைச் சுற்றி நல்லவைகள் நடக்க வழி கோல வேண்டும்.

இயற்கையாகவே குழந்தைகள் கை, கால்களை அசைத்து விளையாடுவதில் நாட்டம் கொண்டதாக உள்ளது. இரண்டு அல்லது மூன்று வயதில் தன்னுடைய கற்பனை சக்திகளை வளர்த்து அதன்மூலம் விளையாட ஆரம்பிக்கிறது. ஆக்கபூர்வமான விளையாட்டுகள் மூலம் தன்னை சுற்றியுள்ள இயற்கை மற்றும் சமூகம் பற்றிய தனது கருத்துக்களை வெளிப்படுத்துகிறது.

குழந்தைக்கு கற்றல் என்பது வீடு அல்லது பள்ளி என்று ஓரிடத்தில் மற்றும் நடப்பது அல்ல. கற்றல் என்பது அது செல்லும் எல்லா இடத்திலும் அதற்கு கிடைக்கும் அனுபவங்கள :முலம் ஏற்படுகிறது. அதனால்லதான் குழந்தைகள் அருங்காட்சியகம், பூங்கா, கடற்கரை, தோட்டம் போன்ற அனைத்து இடங்களுக்கும் அழைத்துச் செல்லவேண்டும்.

எனவேதான் குழந்தைகள் ஆக்கபூர்வமான வழியில் சிந்திப்பதற்கும், கற்பதற்கும், விளையாடுவதற்கும், நல்லதொரு சூழ்நிலையினை ஆசிரியர் ஏற்படுத்தித்தர வேண்டும். குழந்தைகளை வாழ்நாள் முழுவதும் நல்ல செய்திகளை கற்பதற்கும் நல்ல குழந்தைகளாக உருவாக்குவதற்கும் ஆரம்பக்கல்வியில் ஆசிரியர் அடிகோல வேண்டும்.

# அலகு – 4

# ஆரம்பக்கல்வி நிலையின் தொடக்கத்தில் மாணவர்களின் சமூக மற்றும் மனவெழுச்சி வளர்ச்சி நிலைகள்

**முன்னுரை**

தொடக்கப்பள்ளிக்கு வரும் குழந்தைகளில் சிலர் யாருடனும் பழகுவதில்லை. வகுப்பறையில் தனித்தே அமர்ந்திருப்பர். சிலர் கற்றல் செயல்பாடுகளில் விருப்பமின்றிக் காணப்படுவர். சிலர் விளையாட்டில் ஆர்வமின்றித் தனித்திருப்பர். இவர்களில் பெரும்பாலோர் மனவெழுச்சி வளர்ச்சியின்றி காணப்படுவர். இதற்கான காரணத்தைப் புரிந்துகொண்டால்தான் அவர்களை கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் ஈடுபடுத்த முடியும். பெற்றோர்களின் அன்பு மற்றும் அரவணைப்பால் நன்கு வளர்க்கப்பட்டக் குழந்தைகள் மற்றக் குழந்தைகளுடன் எளிதில் நட்புக் கொள்கின்றனர். பெற்றோர்களின் அரவணைப்பின்றியும், மனவெழுச்சியால் பாதிப்படைந்தும், வறுமையால் சமூக வளர்ச்சியும் மனவெழுச்சி வளர்ச்சியும் பாதிப்படைந்தும், வறுமையால் வாடியும் வரும் குழந்தைகள் சமூக வளர்ச்சி குன்றியவர்களாக உள்ளனர். சமூக வளர்ச்சியும் மனவெழுச்சி வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று நெருங்கியத் தொடர்புடையது. சமூகத் தொடர்பு மனவெழுச்சி வளர்ச்சிபெற உதவுகிறது. மனவெழுச்சி வளர்ச்சி சமூக தொடர்பை மேம்படுத்திக்கொள்ள உதவுகிறது. இந்த இரு வளர்ச்சிகளும் குழந்தைகளைச் சமூக ஏற்புடைய நல்ல குடிமகனாக சமூகத்தில் வளர வழிவகுக்கிறது. இதனை உணர்ந்து ஆசிரியர்கள் எவ்வாறு குழந்தைகளின் சமூக மற்றும் மனவெழுச்சி வளர்ச்சிக்கு உதவலாம் என்பதை இப்பாடப் பகுதியில் பார்க்கலாம்.

## 1. சமூக வளர்ச்சி

பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் அங்குள்ள பிற குழந்தைகளுடன் பழகத் துவங்குகிறது. பிறகு வகுப்பு நண்பர்களுடன் சேர்ந்து குழு அமைத்துக் கொள்கிறது. குழுவின் செயல்பாடுகளைக் கற்றுக் கொள்கிறது. குழு உறுப்பினர்களின் எதிர்பார்ப்புகளைப் புரிந்துகொண்டு அவர்களுடன் இணக்கமாக வாழக் கற்றுக்கொள்கிறது. பின்னர் தன் குழு உணர்வை விரிவுபடுத்திக் கொண்டு பெரிய குழுக்களில் அங்கம் வகிக்கும் ஆற்றல்களைப் பெறுகிறது. எதிர்காலத்தில் உலகின் எந்தப் பகுதிக்குச் சென்றாலும் மற்றவர்களுடன் இணக்கமாக வாழக் கற்றுக் கொள்கிறது.

சமூக வளர்ச்சி என்பது சமூக ஏற்புடைய நடத்தைகளை மேற்கொள்ளவும் மற்றும் பிறருடன் இணக்கமாக வாழ உதவும் திறன்களை பெறுதலும் ஆகும்.

சமூக விழிப்புணர்வு, வாழ்வியல் திறன்கள், மொழியறிவு, நற்பண்புகள் போன்றவற்றைப் பெற்று சமூகத்துடன் நல்ல பொறுத்தப்பாட்டை அடைவதை சமூக வளர்ச்சி என்றும் கூறலாம்.

## 2. சமூக எதிர்பார்ப்புகள்

குழந்தைகள் பள்ளிக்கு ஒழுங்காகச் செல்ல வேண்டும். ஆசிரியர்களுக்குப் பணிந்து அவர்கள் சொற்படி நடக்க வேண்டும். நல்ல கேள்வி அறிவைப் பெறவேண்டும். சுறுசுறுப்புடன் செயல்பட வேண்டும். விளையாட்டில் ஆர்வம் காட்டவேண்டும். தலைவனுக்குக் கீழ்படிதல் வேண்டும். தன்

கருத்தை மற்றவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி கூற வேண்டும். வகுப்பு மாணவர்கள் மற்றும் பிற மாணவர்களுடன் முரண்பாடுகள் ஏற்பட்டால் ஆசிரியரின் அறிவுரையை நாடவேண்டும். ஆசிரியருக்கும் தனக்கும் முரண்பாடு ஏற்பட்டால் தன் தவற்றை உணர்ந்து அவர் நன்மதிப்பைப் பெற முயற்சிக்க வேண்டும். பிற மாணவர்கள் சொல்கேட்டு ஆசிரியரை எதிர்த்துப் பேசக்கூடாது. ஆசிரியர்கள் தனக்கும் பிற மாணவர்களின் முன்னேற்றத்திற்கும் பாடுபடுபவர் என்ற உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டும்.

## 3. குழந்தைகளின் நட்பு

பொதுவாகக் குழந்தைகள் பாதுகாப்புக் கருதியும், மற்ற குழந்தைகள் தங்களை உயர்வாகக் கருதவேண்டும் என்ற எண்ணத்திலும் பிற குழந்தைகளுடன் நட்பு கொள்கின்றனர். குழந்தைகளின் நட்பு தற்செயலாகவும் சுதந்திரமாகவும் ஏற்படக்கூடியது. வகுப்பறையில் சிலருடனும். விளையாடுமிடத்தில் சிலருடனும், கலை மற்றும் கைத்தொழில் வேலைகளில் ஈடுபடும்போது வேறு சிலருடனும் நட்புக் கொள்கிறது. குழந்தைகளின் நட்பு சாதி, மதம், பொருளாதார வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. இந்த நட்புக்கு ஆண், பெண் என்ற இனப் பாகுபாடுகள் பார்ப்பதுமில்லை.

முதலில் நான்கு அல்லது ஐந்து குழந்தைகளைக் கொண்டு உருவான குழு நாளடைவில் இன்னும் சிலரைக் கொண்டு விரிவடைகிறது. குழுவினுள் தங்களுக்கிடையே போட்டி ஏற்பட்டாலும் சண்டைகள் நடந்தாலும் முடிவில் சமாதானம் அடைகின்றனர். சந்திப்புகள் அதிகரிக்கும் பொழுது நட்பு வலுவடைகிறது.

## 4. நட்பு மற்றும் நண்பர்களை தேர்ந்தெடுக்க உதவும் காரணிகள்

குழந்தைகளின் நட்பு எதிர்பாராமலும் மற்றும் தன்னிச்சையாக ஏற்படுகிறது. சம வயது, உயரம், எடை, ஆர்வம் மற்றும் திறன்களின் அடிப்படையில் நட்பு ஏற்படுகிறது. பல குழுக்களில் பங்கேற்றல் நண்பர்களைத் தேர்ந்தெடுக்க உதவுகிறது. நட்பை உருவாக்கும் காரணிகளில் பின்பற்றல் முக்கிய பங்கு வகிக்கிறது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், சக நண்பர்கள் போன்றவர்களைப் பின்பற்றிக் குழந்தைகள் மற்றவர்களிடம் நட்பு கொள்கிறது. தங்களுக்குப் பிடித்தவர்களின் நண்பர்களுடன் குழந்தைகள் எளிதில் நட்பு கொள்கின்றனர். பெற்றோர்களால் அறிமுகம் செய்யப்பட்ட அண்டை அயலாரின் குழந்தைகளிடம் எளிதில் நட்பு கொள்கிறது. தன்னிடம் அன்பு, பரிவு மற்றும் ஆதரவு காட்டும் குழந்தைகளிடம் நட்பு கொள்கிறது. விளையாடத் துணை வேண்டிப் பிறரிடம் நட்பு கொள்கிறது. சற்று வளர்ந்தவுடன், ஆண் பிள்ளைகள் ஆண் பிள்ளைகளிடத்திலும், பெண் பிள்ளைகள் பெண் பிள்ளைகளிடத்திலும் அதிக நட்பு கொள்கின்றனர். தன் திறமைகளை வளர்த்துக்கொள்ளவும் மற்றவர்களின் பாராட்டுதல்களைப் பெறவும் பிறரிடம் குழந்தைகள் நட்புகொள்கிறது.

## 5. சமூக ஏற்பு

வயதிற்கேற்ற நல்ல பழக்க வழக்கங்கள் உடைய குழந்தைகள் அனைவராலும் விரும்பப்படுகிறது. தங்கள் கடமைகளை உணர்ந்து பொறுப்புடன் செயலாற்றும் குழந்தைகள் அனைவராலும் பாராட்டப்படுகிறது.

ஒற்றுமையாகப் பிற குழந்தைகளுடன் விளையாடும் குழந்தைகளைப் பெற்றோர்களும், ஆசிரியர்கள் மற்றும் சமுதாயமும் ஏற்றுக்கொள்கிறது. தலைவனிடம் பணிவாக நடந்துகொள்ளும் குழந்தைகளை மற்ற குழந்தைகள் ஏற்றுக்கொள்கின்றனர். மூத்தோரை மதிக்கும் இளையவர்களுக்கு உதவும் பண்புகளையுடையக் குழந்தைகளை சமூகம் ஏற்றுக்கொள்கிறது.

போட்டிகளில் தன் திறமைகளை வெளிப்படுத்தி வெற்றி பெறும் குழந்தைகள் அனைவரின் பாராட்டுதல்களைப் பெறுகின்றனர். வகுப்பில் நன்றாகப் படிக்கும் குழந்தைகளை அனைவரும் விரும்புகின்றனர்.

தன்னையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைத்துக்கொள்ளும் குழந்தைகளை அனைவரும் விரும்பி ஏற்றுக்கொள்கின்றனர்.

## 6. ஒன்றுதல் விருப்பம்

பொதுவாக குழந்தைகள் உடலாலும் உள்ளத்தாலும் அதிக நெகிழ்வுத் தன்மையுடையவர்கள். இவர்கள் புதிய மனிதர்கள், புதிய இடங்கள், விலங்குகள் போன்றவற்றைக் கண்டு அச்சமடைகின்றனர். தனிமை அவர்களை மேலும் அச்சமடையச் செய்கிறது. எனவே தன் பாதுகாப்பு கருதி மற்றவர்களுடன் குழந்தைகள் சேர்ந்து இருப்பதை விரும்புகின்றனர். விளையாட்டில் ஆர்வங்கொண்ட குழந்தை விளையாட்டு நண்பர்களுடன் எளிதில் ஒன்றிவிடுகிறது. தன்னிடம் அன்பு செலுத்துபவர்களிடம் குழந்தைகள் எளிதில் நட்புகொண்டு ஒன்றிவிடுகின்றனர். தன் விருப்பங்களை நிறைவேற்றுபவர்களை நாடிச் செல்கின்றனர். தங்களையும், தங்கள் செயல்களையும் பாராட்டுபவர்களை விட்டு விலக குழந்தைகள் விரும்புவதில்லை.

## 7. ஒப்பார் குழு

சம வயது மற்றும் சம நிலைகளில் உள்ள குழந்தைகள் ஒன்றுபட்டு உருவாக்கும் குழுவினை ஒப்பார் குழு என்று கூறுகின்றோம். சம வயதுள்ள குழந்தைகள் பழகி நட்புகொள்ள பள்ளிக்கூடம் அதிக வாய்ப்புக்களை அளிக்கின்றது. இங்கு சம வயதுள்ள குழந்தைகளை, வகுப்பு வாரியாகப் பிரித்து அவர்களுக்கெனப் பாடச் செயல்பாடுகள், விளையாட்டுகள் மற்றும் பாட இணைச்செயல்கள் வடிவமைக்கப்பட்டுள்ளது.

ஒப்பார் குழுக்கள் எதிர்பாராத விதமாகவும், சுதந்திரமாகவும் ஏற்படுகிறது. இக்குழுக்கள் பெரும்பாலும் விளையாட்டை மையமாக வைத்து உருவாகிறது. இக்குழுக்களுக்குள் போட்டிகள், சண்டை சச்சரவுகள் வருவது இயல்பு. ஆனால் முடிவில் நட்பு பாராட்டி ஒற்றுமையாகி விடுகின்றனர். குழுத் தலைவன் சொல்லுக்கு கட்டுப்படுகின்றனர்.

ஒப்பார் குழுவினர் தங்களுக்கென கொள்கை மற்றும் நடத்தை விதிகளை வகுத்துக் கொள்கின்றனர். இக்குழுவிலுள்ள குழந்தைகளின் நோக்கமும் செயல்பாடுகளும் தங்களைவிட மூத்தவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்ளப் பயன்படுகிறது. இங்கு குழந்தைகள் தங்களின் சுக துக்கங்களை பரிமாறிக் கொள்கின்றனர். பெற்றோர்களின் அழைப்பைவிட ஒப்பார்குழுவின் அழைப்பு பெரிதாகத் தெரிகிறது. ஒப்பார்குழுவில் இருப்பதை ஆனந்தமாகக் கருதுகின்றனர். குழு உறுப்பினர்பால் இரக்கம் கட்ட விரும்புகின்றனர். நண்பர்களைப் பிறரிடம் காட்டிக்கொடுப்பதில்லை. சந்திப்புகள் அதிகரிக்கும் பொழுது ஒப்பார் குழு வலுவடைகிறது.

ஆசிரியர்கள் ஒப்பார் குழுவின் தன்மையை உணர்ந்து இதனை கற்றல் கற்பித்தல் செயல்பாடுகளில் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். உதாரணமாக ஆசிரியர் பாடம் நடத்திய பின்னர் மதிப்பீட்டுக்குரிய கேள்விகளை கரும்பலகையில் எழுதுகிறார். மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து அமரச் செய்கின்றனர். குழுத்தலைவர்களை நியமிக்கின்றார். குழுத்தலைவர்கள் கரும்பலகையில் உள்ளக் கேள்விகளை ஒன்றன்பின் ஒன்றாக அனைத்துக் குழு உறுப்பினர்களையும் வரிசையாகக் கேட்கப் பணிக்கப்படுகின்றார்.

குழுத்தலைவன் முதல் கேள்விக்கான விடையை முதல் உறுப்பினரிடம் கேட்கிறான். அவன் பதிலளிக்கவில்லை என்றால் அடுத்தவனைக் கேட்கிறான். அவன் சரியாக பதிலளித்தப்பின்னர்

மற்றவர்களிடம் அதேக்கேள்வியைக் கேட்கிறான். இறுதியாக முதல் உறுப்பினரிடம் கேட்கிறான். இப்பொழுது அவன் எளிதாகப் பதில் அளிக்கிறான். இவ்வாறு செய்வதால் குழுவிலுள்ள ஒவ்வொருவரும் ஒரு கேள்விக்கான விடையைக் குறைந்தது நான்கு தடவைகள் கேட்டுப் புரிந்து கொள்கின்றனர். இவ்வாறு ஒரு ஆசிரியரால் கற்றலை வலுவூட்ட முடியுமா என்று சிந்தித்துப் பாருங்கள்.

ஆசிரியர்கள் கணிதப் பாடங்கள் நடத்தும்போது குழந்தைகள் தவறாகச் செய்யும் கணக்குகளுக்குத் தப்புக்குறி (X) போட்டுச் செல்வது அன்று தொட்டு இன்று வரை நடைபெறும் ஒரு பொழுதுபோக்காக உள்ளது. தவறாகக் கணக்குச் செய்யும் குழந்தைகளுக்குத் தப்புக்குறி போட்டுச் சென்றால் அவர்களுக்கு யார் சரியாகச் சொல்லித்தருவது? “சரியாகச் சொல்லிக்கொடுத்தால் புரியாதது என்று ஒன்றுமில்லை.” தவறாகக் கணக்கு போடும் பல குழந்தைகளுக்கு ஆசிரியர் ஒருவரால் சரியாகச் சொல்லித்தர நேரம் போதாது. இந்தச் சிக்கலைத் தீர்க்க வல்லது ஒப்பார்குழு இடைவினை செயல்பாடாகும். ஆசிரியர், பயிற்சிக் கணக்கைக் கொடுத்துவிட்டு சிறிது நேரம் கழித்து அதற்குரிய சரியான விடையைக் கரும்பலகையில் எழுதவேண்டும். சரியாக கணக்குப் போட்டவர்களைக் கொண்டு தவறாகக் கணக்குப் போட்டவர்களுக்குச் சொல்லித்தரச் செய்யலாம். இதனால் கற்றல் கற்பித்தல் சேதாரமும் தேக்கநிலையும் வெகுவாகக் குறையும்.

## 8. சமூக, மனவெழுச்சி மற்றும் பண்பாட்டுச் சூழல்களில் பள்ளியின் பயன்பாடுகள்

குடும்பச் சூழலிலிருந்து பள்ளிக்குள் நுழையும் குழந்தையின் அச்சம் அங்குள்ள தன் வயது குழந்தைகளைப் பார்க்கும்பொழுது சற்றுக் குறைகிறது. பள்ளிகளில் குழுச் செயல்பாடுகள், குழுவிளையாட்டுகள் போன்றவை அச்சத்தைக் குறைத்து மகிழ்ச்சியைப் பெருக்குகிறது. ஆசிரியரின் அறிவுரைகள் குழந்தைகளின் சிறந்த வளர்ச்சிக்கு உதவுகிறது. சக மாணவர்களின் நட்பு சமூகப் பொறுத்தப்பாட்டை பெற உதவுகிறது. பள்ளிப் பாடங்கள் மற்றும் இதர செயல்பாடுகள் நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுத்தருகிறது. ஆசிரியர்கள் மற்றும் சக நண்பர்களைப் பின்பற்றிக் குழந்தைகளின் பண்பாடு வளர்கிறது. இவற்றைச் சற்று விரிவாக இங்கு பார்ப்போம்.

### அ. சமூகச் சூழல்

பள்ளிக்குள் நுழையும் குழந்தைகளை முதலில் தன் அன்பையும் ஆதரவையும் காட்டி ஏற்றுக்கொள்ளும் குழு ஒப்பார்க்குழுவாகும். இது குழந்தைகளுக்கு பாதுகாப்பு மற்றும் சுதந்திர உணர்வுகளை அளிக்கிறது. குழு விளையாட்டுகள் சுயநல உணர்வைக் களைந்து கூட்டுறவு மனப்பான்மையை வளர்க்கிறது. குழுவினர்களுக்கிடையே போட்டி போடடுக்கொண்டாலும் தலைவன் சொல்லுக்குக் கட்டுப்பட வேண்டும் என்றக் கடமை உணர்வு ஏற்படுகிறது. தங்களுக்குள் சண்டையிட்டுக் கொண்டாலும் முடிவில் ஒன்றுபட்டு குழுநெறிக் காக்கின்றனர். குழு விளையாட்டுகள் மற்றும் போட்டி விளையாட்டுகள் மூலம் சட்ட திட்டங்களை மதிக்கக் கற்றுக்கொள்கின்றனர். ஆசிரியரின் நடத்தைகளைப் பின்பற்றிக் குழந்தைகள் தங்கள் நடத்தைகளை மேம்படுத்திக் கொள்கின்றனர்.

குழுச்செயல்பாடுகள் மொழி வளர்ச்சிக்கு பெரிதும் துணைபுரிகிறது. மொழி வளர்ச்சிப் பெற்றுக் குழந்தைகள் தங்கள் சமூகத் தொடர்புகளைப் பெருக்கிக் கொள்கின்றனர். இதனால் குழந்தைகளின் சமூக விழிப்புணர்வு மேம்படுகிறது.

கல்விச் சுற்றுலா, களப் பயணங்கள், மன்றச் செயல்பாடுகள், கலை நிகழ்ச்சிகள் முதலியன சமூக உணர்வினை மேலும் தூண்டுகிறது.

### ஆ. மனவெழுச்சிச் சூழல்

குழந்தைகளின் மனவெழுச்சிகளை வளர்ப்பதில் பள்ளியின் செயல்பாடு மகத்தானது. அச்சத்தோடு பள்ளிக்குள் காலடி எடுத்து வைக்கும் குழந்தை தன்னைப்போல் அங்குள்ள குழந்தைகளைப் பார்த்து ஆனந்தமடைகின்றனர். நண்பர்கள் குழு அச்சத்தைப் போக்கிக்கொள்ள உதவுகிறது. குழு விளையாட்டுகள் குழந்தைகளுக்குத் துணிவையும் தன்னம்பிக்கையையும் அளிக்கிறது. குழுவினர்களிடையேச் சண்டைகள் போட்டுக்கொண்டாலும் நட்பு பாராட்டும்பொழுது சினத்தின் தீமையை உணர்கின்றனர். குழு நண்பர்களுடன் தங்கள் சுக துக்கங்களைப் பகிர்ந்து கொள்வதன் மூலம் மனவெழுச்சி சமநிலையடைகின்றனர். குழு நண்பர்களின் அன்பும் அரவணைப்பும் பிறர்மீதுள்ள பொறாமையைக் குறைத்துக்கொள்ள உதவுகிறது. போட்டிகள், கலைநிகழ்ச்சிகள் போன்றவற்றில் பங்கேற்பதால் துணிவும் தன்னம்பிக்கையும் வளர்கிறது.

ஆசிரியர்களின் அறிவுரைகள், வழிகாட்டுதல்கள், நன்னெறிக் கல்வி மற்றும் சக நண்பர்களின் பழக்க வழக்கங்கள் போன்றவை குழந்தைகளுக்கு, தீவிரமாக தோன்றி வெளிப்படும் மனவெழுச்சிகளைச் சமநிலைபடுத்த உதவுகின்றது. வெவ்வேறு சூழ்நிலைகளின் தாக்கத்தால் பாதிக்கப்பட்டு பள்ளிக்கு வரும் குழந்தைகளின் மனவெழுச்சிகளை பள்ளிச் சூழ்நிலை கட்டுப்படுத்தி நல்ல சமூக பொறுத்தப்பாட்டை அடைய உதவுகிறது.

### இ. பண்பாட்டுச் சூழல்

பள்ளிக்கூடம் குழந்தைகளுக்கு சமூக மரபுரிமைகளை எடுத்துச் சொல்கிறது. புதியத் தலைமுறைக்குத் தேவைப்படும் சமூக பண்புகளை பாடங்கள் மூலம் கற்றுத் தருகிறது. பண்பாட்டு நிகழ்ச்சிகள் மூலம் குழந்தைகளின் மனதில் சமூகக் கலாச்சாரம், பழக்க வழக்கங்கள், உறவு முறைகள், சட்டத் திட்டங்கள் மற்றும் நாட்டுப்பற்று போன்றவற்றை வளர்க்கிறது. மூத்தோரை மதித்தல், இளையவருக்கு உதவுதல், பெற்றோரைப் போற்றுதல், சான்றோர் சொற்படி நடத்தல், சமூகச் சேவை செய்தல் போன்ற சமூகப் பண்புகளை குழந்தைகளுக்கு பள்ளி கற்றுத்தருகிறது.

சமூகத்தில் ஆண் பெண் பழக்க வழக்க முறைகள் எப்படி இருக்க வேண்டும் என்று குழந்தைகளுக்குப் பள்ளி கற்றுத்தருகிறது.

## 9. மனவெழுச்சி வளர்ச்சி

நம் அன்றாட வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்வுகளைச் சற்று சிந்தித்துப் பாருங்கள். உணவில் உப்பு அதிகமாக அல்லது குறைவாக இருந்தால் அது நமக்குப் பிடிப்பதில்லை. இனிப்புப் பண்டங்களில் அளவிற்கு அதிகமாக சர்க்கரை இருந்தால் திகட்டி விடுகின்றது. குறைந்தால் சுவையில்லை. தின்பண்டங்களில் சர்க்கரையோ அல்லது உப்போ சரியாகச் சேர்க்காவிட்டால் நல்ல சுவையைத் தருவதில்லை. அதுபோல் அன்பு, அரவணைப்பு, மகிழ்ச்சி போன்ற மனதிற்கு இன்பம் தரும் மனவெழுச்சிகளும், சினம், அச்சம், பொறாமை போன்ற மனதிற்குத் துன்பம் தரும் மனவெழுச்சிகளும் அளவோடு இருந்தால் மனவெழுச்சி சமநிலையடையும். வானவேடிக்கை நடைபெறும் பொழுது பூச்சட்டி, தரைச்சக்கரம் போன்றவற்றின் செயல்பாடுகளைப் பாருங்கள். இவற்றில் வெடிமருந்து எளிதில் வெளியேற ஒரு துளை உள்ளது. தீ வைத்தவுடன் கண்களைக் கவரும் வண்ணம் ஒளிப் பூக்கள் வெளிப்படுகின்றன. ஆனால் வெடியைப் பாருங்கள். இதில் வெடிமருந்துகள் வெளியேற முடியாத அளவிற்கு அதன் வாய் இறுக்கமாக அடைக்கப்பட்டிருக்கும். தீ வைத்தவுடன் அதிக ஒலியுடன் வெடிக்கும். இது எதை உணர்த்துகிறது? மனவெழுச்சிகளை வெளியிடாமல் மனதிற்குள்ளேயே போட்டு அடக்கி வைத்திருந்தால் அது வாய்ப்பு வரும்பொழுது வெளிப்பட்டு பெறும் பாதிப்பினை ஏற்படுத்தும். பள்ளிச் சிறுவர்களின் மனவெழுச்சிகளைப் பற்றி இப்பகுதியில் பார்ப்போம்.

# 10. மனவெழுச்சி வளர்ச்சி நிலை

பள்ளிச் சிறுவர்களின் மனவெழுச்சிகள் குமரப் பருவத்தினர் மற்றும் பெரியவர்களின் மனவெழுச்சிகளிலிருந்து பெரிதும் வேறுபடுகின்றன. குழந்தைகளிடையேத் தோன்றும் மனவெழுச்சி வளர்ச்சிகளின் வேறுபாடுகள் அவர்களின் வயது, அனுபவங்கள், கற்கும் வாய்ப்புகள், மற்றும் முதிர்ச்சி நிலைகளைப் பொறுத்து அமைகிறது. குழந்தைகளின் மனவெழுச்சி வளர்ச்சி பெரியவர்களின் மனவெழுச்சி வளர்ச்சியிலிருந்து வேறுபடும் விதத்தை இங்கு காண்போம்.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் சுருக்கமானது. குழந்தைகள் மனவெழுச்சிகளை உடனே வெளிப்படுத்தும் இயல்புடையது. இவர்களின் மனவெழுச்சிகள் விரைவாக வெளிப்படுவதால் சில வினாடிகளில் மறைந்துபோகிறது.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் தீவிரமானது. அச்சம் வந்தால் வீரிட்டு அலருகிறது. சினம் வந்தால் உருண்டு, பிரண்டு, அழுது அடம்பிடிக்கிறது. மகிழ்ச்சி வந்தால் கைதட்டி வாய்விட்டு சிரிக்கிறது.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் கன நேரத்தில் மாற்றமடைவது. குழந்தைகளின் கவனம் ஒன்றின் மீது அதிக நேரம் நீடிப்பதில்லை. பாடச் செயல்பாடுகளில் களைப்படைந்த குழந்தை விளையாட்டு மணி அடித்தவுடன் களைப்பை மறந்து உற்சாகமாக விளையாட்டு மைதானத்திற்கு ஓடுவதைப் பார்க்கிறோம்.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் அடிக்கடி நிகழ்வது. சினம் கொண்ட குழந்தை அடிக்கடி உரத்த குரலில் கத்தி அடம்பிடிக்கிறது.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் வேறுபாடுடையது. வயது, கற்றல் மற்றும் சூழ்நிலை அனுபவங்களின் வேறுபாட்டால் மனவெழுச்சி வெளிப்பாடுகள் குழந்தைக்குக் குழந்தை மாறுபடுகிறது.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகளை நடத்தையில் ஏற்படும் மாற்றத்தைக் கொண்டு அறியலாம். அச்சப் பட்டக் குழந்தை நடுங்குகிறது. சினமடைந்த குழந்தை சாப்பிட மறுக்கிறது.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகளின் வலிமை மாறும் தன்மையுடையது. சிறுவயதில் சினங்கொண்டு அடம்பிடிக்கும் குழந்தை வளர வளர அடம்பிடிக்கும் குணத்தைக் குறைத்துக்கொள்கிறது.

குழந்தைகளின் மனவெழுச்சி வெளிப்பாடுகள் மாற்றமடைகின்றன. சிறுவயதில் குழந்தைகள் எதைக் கேட்கின்றதோ அதை அந்த இடத்திலேயே வாங்கித்தர வேண்டும் என்று அடம்பிடிக்கும். இச்செயல் அருகில் உள்ளவர்களைப் பாதிக்கும் என்று உணர்வதில்லை. வளர வளர அருகில் உள்ளவர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தன் சினத்தை வெளியிடக் கற்றுக்கொள்கிறது.

# 11. பொதுவான மனவெழுச்சிகள்

**1. அச்சம்**

குழந்தைகள் வளர வளர அவர்களின் அச்சம் சில மனிதர்கள், மிருகங்கள், பொருள்கள் மற்றும் நிகழ்வுகள் மீது திரும்புகின்றது. தொடக்கப்பள்ளிக்குச் செல்லும் குழந்தைகளின் அச்சம், பெரும்பாலும் சிறு வயதில் ஏற்பட்ட அனுபவத்தால் சில மிருகங்களைக் கண்டால் ஏற்படுகிறது. முன்னர் நீரில் மூழ்கிய அனுபவத்தால் நீர்நிலைகளைக் கண்டால் அச்சப்படுகிறது. பேய் பிசாசு பற்றியக் கதைகளைக் கேட்டும் மற்றும் திரைப்படங்களில் பார்த்தும் அச்சப்படுகிறது. இதனால் தனியாக இருட்டில் விடப்பட்டக் குழந்தை நடுங்கி ஒடுங்குகின்றது. சிறுவயதில் வெடிச் சத்தத்திற்கு அச்சமுற்றக்

குழந்தை சற்று வளர்ந்தவுடன் தீபாவளிக்கு வெடிவாங்கித் தரச்சொல்லி அடம்பிடிக்கிறது. எனவே தொடக்கப் பள்ளியில் பயிலும் குழந்தைகளின் அச்சத்தின் பெரும் பகுதி சக நண்பர்களின் பழக்கத்தால் குறைக்கப்படுகிறது.

### 2. பதற்றம்

பதற்றம் என்பது தீங்கு வரும் என்று அஞ்சி நடுங்கும் ஒருவித மனவெழுச்சியாகும். பிறரால் ஏமாற்றப்படும்பொழுதும், அச்சமூட்டப்படும்பொழுதும் அல்லது இடையூறு செய்யும்பொழுதும் பதற்றமடைகின்றனர். பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஏற்கமறுக்கும் செயல்களில் ஈடுபடும் சிறுவர்கள் பெரிதும் பதற்றமடைகின்றனர். பள்ளித் தேர்வுகள், பரிசுப் போட்டிகள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நெருங்கும்பொழுது தோன்றும் சிறுவர்களின் பதற்றம் இயல்பானது. பதற்றமான சூழ்நிலையில் தன் அருகிலுள்ள பெற்றோர், ஆசிரியர் அல்லது சக நண்பர்கள் பதற்றமடைவதைப் பார்க்கும் சிறுவர்கள் மேலும் பதற்றமடைந்து செயலிழந்து போகின்றனர். ஆசிரியரின் அன்பு, அரவணைப்பு மற்றும் ஆறுதல் வார்த்தைகள் சிறுவர்களின் பதற்றத்தை வெகுவாக குறைக்கும்.

### 3. சினம்

சிறுவர்கள் கொள்ளும் சினம் இயல்பானது. இதனை **குட்இனஃப்** என்ற பெருமகனார் வகைப்படுத்தியுள்ளார்.

#### அ. திக்கற்றச் சினம்

இச்சினம் கொண்ட சிறுவர்கள் தங்கள் சினத்தை யாரிடம் அல்லது எதன் மீது செலுத்துவது என்று தெரியாமல் கால்களை தரையில் உதைத்தும், மூச்சை அடக்கிக்கொண்டும் அல்லது வீரிட்டு அலறியும் வெளிப்படுத்துகின்றனர்.

#### ஆ. இயங்க அல்லது பேச மறுக்கும் சினம்

கொடுத்த வேலையை செய்யமாட்டேன் என்று எதிர்த்துப் பேசுவது இயங்க மறுக்கும் சினமாகும். நண்பனுடன் சினம் கொண்டக் குழந்தை, இனிமேல் உன்னுடன் பேச மாட்டேன் என்று சொல்லிச் செல்வது பேச மறுக்கும் சினமாகும்.

#### இ. பழிவாங்கும் சினம்

சிறுவர்கள் சில நேரங்களில் தங்களுடையச் சினத்திற்கு காரணமானவர்களை அடித்துத் துன்புறுத்தியும், கடித்தும் அல்லது வாய்க்கு வந்தபடி கடும் சொற்களைப் பேசி பழிவாங்குகின்றனர். பழிவாங்கும் சினம் சில நேரங்களில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலும், குட்இனஃப் என்பவர் சினம் வருவதற்கான மூன்று உடனடிக் காரணங்களை கூறுகிறார். அவைகளாவன;

அ. அன்றாட உடல் சார்ந்தத் தேவைகளாகிய கழிப்பிடம் செல்வது, உணவருந்தச் செல்வது அல்லது உறங்கச் செல்வதற்கு தடைகள் ஏற்பட்டால் சிறுவர்கள் பொறுமையிழந்து அதிகச் சினங்கொள்கின்றனர்.

ஆ. ஒழுங்காக வீட்டுப்பாடம் எழுதி வரவில்லை என்றால் பள்ளிக்கு இனிமேல் வரவேண்டாம் அல்லது ஒழுங்காகப் படிக்கவில்லை என்றால் நீ மாடு மேய்க்கத்தான் போவாய் என்று திட்டும் ஆசிரியர்கள் மீது குழந்தைகளுக்கு உடனேச் சினம் வருகிறது.

இ. விளையாட்டில் சேர்த்துக்கொள்ள மறுப்பது, திண்பண்டங்கள் தர மறுப்பது அல்லது தன் ஐயப்பாடுகளை ஆசிரியர் கண்டுகொள்ளாமல் செய்வது போன்றவை சிறுவர்களின் சமூக உறவை பாதித்து உடனே சினத்தைத் தூண்டும்.

அனைத்து வயதினரும் தங்கள் மொத்த சினங்களில்

உடல் பாதுகாப்பிற்காக 20 சதவீதம்

அதிகாரம் செலுத்துபவர்கள் மீது 20 சதவீதம்

சமூக உறவில் ஏற்படும் பிரச்சனைகள் மீது 30 சதவீதம்

மொத்தம்70 சதவீதம்

ஏறத்தாழ 70 சதவீதம் சினத்தைப் பிறர் மீது உடனடியாகச் செலுத்துகின்றனர் என்று தாய்மார்கள் பலர் குறை கூறுகின்றனர். **(குட்இனஃப்)**

### 4. மகிழ்ச்சி

சிறுவர்கள் பாடல், நடனம், விளையாட்டு போன்றவற்றில் அதிக மகிழ்ச்சிக் கொள்கின்றனர். பாடச் செயல்பாடுகளில் இவை நிகழும்போது பேரானந்தம் அடைகின்றனர். களைப்பு அடைவதில்லை. மகிழ்ச்சி நேரத்தையும் பசியையும் மறக்கச் செய்கிறது. மகிழ்ச்சி குழந்தைகளின் செயல்பாட்டை மேலும் மேலும் ஊக்குவிக்கும் ஒரு நல்ல மனவெழுச்சியாகும்.

### 5. நகைச்சுவை

நகைச்சுவை உணர்வு வாழ்க்கையின் மிகப்பெரியச் சொத்தாகும். கேளிக்கை நிகழ்ச்சிகள் சிறுவர்களை வாய்விட்டுச் சிரிக்க வைக்கின்றன. கேலிச் சித்திரங்கள், நகைச்சுவை நாடகங்கள், மாறுவேடப் போட்டிகள் மற்றும் இதர கேளிக்கை நிகழ்ச்சிகளை மேற்கொண்டு சிறுவர்களின் பள்ளி வாழ்க்கையை வளப்படுத்துவது ஆசிரியர்களின் தலையாயக் கடமைகளில் ஒன்றாகும். இதனால் மாணவர்கள் பள்ளிக்கு வர விருப்பப்படுகின்றனர். மேலும் தங்கள் பள்ளியைப் பற்றி பெருமையாகப் பேசுகின்றனர். பள்ளியை விட்டு இடையில் நிற்போரின் எண்ணிக்கை குறைகிறது.

### 6. இரக்கம்

இரக்கம் சமூக உறவை வளப்படுத்தும் ஒரு அரிய மனவெழுச்சியாகும். இரக்கம் கொள்ளும் ஆசிரியர்கள் அல்லது பெற்றோர்கள் குழந்தைகளைத் தண்டிப்பதில்லை. மாறாக குழந்தைகளின் தவற்றை மன்னித்து அவர்களை நல்வழிபடுத்துகின்றனர். நீதி நெறிக் கதைகள், நாடகங்கள் மற்றும் இதர நிகழ்ச்சிகளின் மூலம் சிறுவர்களின் மனங்களில் ஆசிரியர்கள் இரக்க உணர்வை வளர்க்க வேண்டும். குழுச் செயல்பாடுகள், குழு விளையாட்டுகள், குழுவிவாதம் போன்றவை இதற்கு பயன்படும். பள்ளிக் குழந்தைகளிடையே இரக்கத்தை வளர்ப்பதற்கு முதலில் ஆசிரியர்கள் மற்றும் பள்ளி ஒரு முன் உதாரணமாகத் திகழவேண்டும்.

### 7. பாசம்

இன்று பள்ளிக் குழந்தைகள் ஆசிரியர்களிடம் பெரிதும் எதிர்பார்ப்பது அன்பும் அரவணைப்பும் என்றால் அது மிகையாகாது. அறிவியல் மேதை ஐசக் நியூட்டனின் கூற்றின்படி “ஒவ்வொரு வினைக்கும் சமமான எதிர் வினையுண்டு” இது நாம் எல்லோரும் அறிந்த ஒரு உண்மையாகும். நாம் அடுத்தவரிடம் அன்பு காட்டினால் அவர் நம்மிடம் அன்பு காட்டுவார். ஆசிரியர்களே! குழந்தைகளிடம் அன்பு காட்டுங்கள். அவர்கள் உங்களை நெருங்கி வருவார்கள். நீங்கள் சொல்வதைக் கேட்பார்கள்.

உங்களிடம் அன்பு காட்டுவார்கள். இதனால் வகுப்பு மற்றும் பள்ளிச் செயல்பாடுகள் நல்ல முன்னேற்றத்தைக் காணும்.

## 12. மனவெழுச்சி முதிர்ச்சியடைதல்

மனவெழுச்சி முதிர்ச்சிப் பெற்றவரின் மனவெழுச்சி வெளிபாடுகள் அனைத்தும் தனக்கும் மற்றவர்களுக்கும் மனநிறைவை ஏற்படுத்தும் வகையில் இருக்கும். ஓரளவிற்கு மன அழுத்தத்தை எதிர்கொள்ளும் திறனைப் பெற்றிருப்பான். தன் மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தி கவனமாக வெளியிடும் திறனைப் பெற்றிருப்பான். தன்னுடைய மனவெழுச்சி அனுபவங்கள் மூலம் தன்னிறைவைப் பெற்றிருப்பான். இன்பம் தரும் அன்பு, பரிவு, பாசம், மற்றும் மகிழ்ச்சி போன்ற மனவெழுச்சிகளை வளர்த்துக் கொண்டும், துன்பம் தரும் அச்சம், சினம், பதட்டம், பொறாமை போன்ற மனவெழுச்சிகளை குறைத்துக் கொண்டும் மற்றவர்களுடன் இணக்கமாக வாழும் இயல்புடையவனை மனவெழுச்சி முதிர்ச்சிப் பெற்றவன் என்று கூறுகின்றோம்.

மகிழ்ச்சியற்றும், சினமுற்றும், அச்சமுற்றும், அமைதியற்றும், வெறுப்படைந்தும் அல்லது பழிவாங்கும் உணர்வுடன் மற்றவர்களால் வெறுத்து ஒதுக்கத்தக்க விதத்தில நடந்து கொள்பவனை மனவெழுச்சி முதிர்ச்சியற்றவன் என்று கூறுகின்றோம்.

## 13. மனவெழுச்சி வளர்ச்சியில் கற்றலின்பங்கு பாடங்கள், ஆசிரியர்கள், பள்ளி மற்றும் பிற மாணவர்கள் மீது எவ்வாறு விருப்பு மற்றும் வெறுப்புகளை ஏற்படுத்திக் கொள்ளுதல் என்பதை அறியலாம்

தொடக்கப் பள்ளியில் பயிலும் குழந்தையின் மனவெழுச்சி வளர்ச்சி முழுக்க முழுக்க அது பயிலும் பாடங்கள், ஆசிரியர்கள், பள்ளி மற்றும் பிற மாணவர்கள் மீதுள்ள விருப்பு வெறுப்புகளைப் பொறுத்து அமைகிறது. இவற்றில் ஏதேனும் ஒன்றின் மீது வெறுப்பு வந்தாலும் அவனுடைய மனவெழுச்சி வளர்ச்சியில் பின்னடைவு ஏற்படுகிறது. இதனால் அவனுடைய மனவெழுச்சி வளர்ச்சி முழுமையடையாமல் போகிறது.

### 1. படங்கள் மீது விருப்பம் ஏற்படக் காரணங்கள்

1. பாடப் பொருள்களை புரிந்துகொள்ளும் திறன்
2. மகிழ்ச்சியூட்டும் பாடச் செயல்பாடுகள்
3. நல்ல உடல் நலம்
4. நல்ல மொழியறிவு
5. புதிய பாடப்பகுதிகளை குழப்பமின்றி படிக்க போதுமான முன்னறிவு
6. படிக்க ஊக்குவிக்கும் அன்பான பெற்றோர்கள்
7. பாடச் செயல்பாடுகளில் தோன்றும் ஐயங்கள் உடனே தீர்க்கப்பட்ட நிலை
8. நன்கு ஊக்குவித்து நடத்தப்பட்ட பாடங்கள்
9. தேர்வுகளில் நல்ல மதிப்பெண்கள் பெறுவதால் ஏற்படும் பெருமிதம்
10. பாடச் செயல்பாடுகள் பாராட்டப்படுவதால் தோன்றும் களிப்பு

### 2. ஆசிரியர்கள் மீது விருப்பங்கள் ஏற்படக் காரணங்கள்

1. அன்பாக பழகும் ஆசிரியர்
2. ஐயப்பாடுகளை தவிர்த்துக்கொள்ள உதவும் ஆசிரியர்

3. சிறு முயற்சிகளையும் பாராட்டும் ஆசிரியர்
4. நகைச்சுவை உணர்வுடன் பாடம் நடத்தும் ஆசிரியர்
5. பொருள்பட பாடங்கள் நடத்தும் ஆசிரியர்
6. நல்ல பழக்கவழக்கமுள்ள ஆசிரியர்
7. ஆடி, பாடி, விளையாடி மற்றும் நடித்து பாடங்களை நடத்தும் ஆசிரியர்
8. ஆர்வத்தைத் தூண்டும் துணைக் கருவிகளைக் கொண்டு பாடங்கள் நடத்தும் ஆசிரியர்
9. மன்னிக்கும் மனப்பான்மையுள்ள ஆசிரியர்
10. தவறுகளைத் திருத்திக்கொள்ள உதவும் ஆசிரியர்
11. இன்பம் தரும் மனவெழுச்சிகளை வளர்த்துக்கொள்ள உதவும் ஆசிரியர்

**3. பள்ளி மீது விருப்பங்கள் ஏற்படக் காரணங்கள்**

1. கட்டிடம், குடிநீர், கழிப்பிட வசதிகள் உள்ளப் பள்ளி
2. நல்ல வெளிச்சம், காற்றோட்டம் மற்றும் இருக்கைகள் வசதியுள்ள வகுப்பறை
3. நல்ல விளையாட்டு மைதானம் மற்றும் போதுமான விளையாட்டுப் பொருள்கள் உள்ள பள்ளி
4. நல்ல பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்தும் பள்ளி
5. சுவையானச் சத்துணவு
6. ஆர்வத்தைத் தூண்டும் கலைக் கல்வியைக் கற்றுத் தரும் பள்ளி
7. விழாக்கள், போட்டிகள் மற்றும் கலைநிகழ்ச்சிகளை நடத்தும் பள்ளி
8. சுற்றுலா, களப்பயணங்களுக்கு அழைத்துச் செல்லும் பள்ளி
9. இன்பம் தரும் இயற்கை சூழல்கள் நிறைந்தப் பள்ளி
10. போக்குவரத்து வசதியுள்ள பள்ளி

**4. பிற மாணவர்கள் மீது விருப்பங்கள் ஏற்படக் காரணங்கள்**

1. அன்பாக பழகும் மாணவர்கள்
2. நட்பு பாராட்டும் மாணவர்கள்
3. ஆபத்திலிருந்து விடுபட உதவும் மாணவர்கள்
4. பாடசெயல்பாடுகளுக்கு உதவும் மாணவர்கள்
5. விளையாட சேர்த்துக்கொள்ளும் மாணவர்கள்
6. தன்னுடைய பாதுகாப்பிற்கு உதவும் மாணவர்கள்
7. நல்ல பழக்கவழக்கமுடைய மாணவர்கள்
8. போட்டிகளில் வெற்றி பெரும் திறமை மிக்க மாணவர்கள்

**5. குழந்தைகள் பாடங்கள், ஆசிரியர்கள், பள்ளி மற்றும் பிற மாணவர்களை வெறுப்பதற்கான காரணங்கள்**

1. குழப்பத்தை விளைவிக்கும் பாடப்பகுதிகள்
2. களைப்பைத் தரும் பாடச்செயல்பாடுகள்

3. அளவிற்கு அதிகமான கட்டுப்பாடு
4. தாங்கிக் கொள்ளமுடியாத தண்டனை
5. அச்சம் தரும் ஆசிரியர்கள்
6. தங்களுடைய உணர்வுகளையும் மற்றும் உபாதைகளையும் அலட்சியப்படுத்தும் ஆசிரியர்கள்
7. அச்சுறுத்தும் வீட்டுப்பாடச் செயல்பாடுகள்
8. விளையாட்டு வசதிகளற்ற பள்ளி
9. மகிழ்ச்சி தரும் கலைக் கல்வி மற்றும் கலை நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்காதப் பள்ளி
10. அடிப்படை வசதிகளற்ற பள்ளி
11. சுவையற்ற மதிய உணவு
12. நூலக வசதியற்ற பள்ளி
13. சுகாதாரமற்றப் பள்ளிச் சூழ்நிலைகள்
14. போக்குவரத்து வசதியற்றப் பள்ளி
15. சண்டை போடும் குணமுள்ள பிற மாணவர்கள்

எளிதில் புரிந்துகொள்ள முடியாதப் பாடங்கள், படிக்க உதவாத பெற்றோர்கள், அச்சுறுத்தும் ஆசிரியர்கள், மகிழ்ச்சியற்றப் பள்ளி மற்றும் துன்புறுத்தும் பிற மாணவர்களால் பள்ளிக்கு வர குழந்தைகள் அச்சப்படுகின்றனர். வந்தாலும் சோகமாக உள்ளனர். எதிர்காலத்தில் இவர்கள் இன்பத்தை வெளியில் தேடிச்சென்று ஏன் தீய பழக்க வழக்கங்களுக்கு அடிமையாகமாட்டார்கள் என்பதை சிந்தித்துப் பாருங்கள்.

## 14. மன எழுச்சி சமநிலை

மனவெழுச்சிகளின் வகைகளையும் அவற்றின் நன்மை தீமைகளையும் நன்கு அறிந்து தேவையான மனவெழுச்சிகளை அளவோடு தேவைப்படும் இடத்தில் பயன்படுத்தி பலனடைவதை மனவெழுச்சி சமநிலையடைதல் என்று கூறுகின்றோம். தொடக்க நிலையில் கட்டுப்பாடற்று வெளியிடப்பட்ட மனவெழுச்சிகள் குழந்தைகள் வளர வளர அதன் கட்டுப்பாட்டிற்குள் வரத் தொடங்குகின்றன. இதற்கு அதன் அனுபவமும், பெற்றோர், ஆசிரியர், பிற மாணவர்களின் ஆலோசனைகளும் உதவுகிறது. பாடநூல்கள், நன்னெறி கதைகள் மற்றும் பிற ஊடகங்களும் குழந்தைகளுக்கு தங்கள் மனவெழுச்சிகளை கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்டு தேவைப்படும்போது வெளியிட்டு பயனடைய உதவுகிறது.

மேலும் மனவெழுச்சி சமநிலை பெற்ற ஆசிரியர் தங்கள் மனவெழுச்சிகளை பயனுள்ளதாக்குவதில் சிறந்து விளங்குகின்றனர். மனச் சமநிலையற்ற ஆசிரியர் தங்கள் மனவெழுச்சியை கட்டுப்படுத்த முடியாமல் பல தொல்லைகளை அனுபவிக்கின்றனர்.

மனவெழுச்சி சமநிலை பெற்றக் குழந்தை தேவையான சூழ்நிலைகளில் தங்கள் மனவெழுச்சிகளை வெளியிட்டு அதனால் நல்ல குழந்தை என்று பெற்றோர் ஆசிரியர் மற்றும் பிறரால் பாராட்டுதலை பெற்றுவிடுகின்றது.

## 15. மனவெழுச்சி வளர்ச்சியில் தகவல்தொடர்பு ஊடகங்களின் தாக்கம்

இன்றைய அறிவியல் வளர்ச்சியின் காரணமாக பல தகவல் தொடர்பு ஊடகங்கள் பெருகியுள்ளன என்பதை நாம் அறிவோம். இவை சிறுவர்களின் மனவெழுச்சி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுகிறது. அவைகளாவன;

1. தொலைக்காட்சி பெட்டி
2. திரைப்படங்கள்
3. கணினி
4. செய்தித்தாள் மற்றும் வார இதழ்கள்
5. மின்னனு விளையாட்டுச் சாதனங்கள்
6. மிருகக் காட்சிசாலை மற்றும் சர்க்கஸ்
7. கண்காட்சி மற்றும் விளையாட்டு அரங்கங்கள்
8. நாட்டுப்புறக் கலைகள்
9. ஊர்த்திருவிழாக்கள் மற்றும் கேளிக்கை நிகழ்ச்சிகள்

செய்தித்தாள்களில் வரும் செய்திகள், வாரமலர்களில் வரும் சிறுவர்களுக்கான பாடல்கள், போட்டிகள், நீதிக்கதைகள், படக்கதைகள், நகைச்சுவை நாடகங்கள் மற்றும் துணுக்குகளைச் சிறுவர்கள் விரும்பிப் படிக்கின்றனர். உதாரணமாக கதைகளில் வரும் அரக்கன் அச்சத்தை தருகிறான். அடுத்துவரும் கோமாளி மகிழ்ச்சியை தருகிறான். கதாநாயகனை அரக்கன் துன்புறுத்தும்போது வருத்தம் ஏற்படுகிறது. அரக்கனை கதாநாயகன் வீழ்த்தும்பொழுது மகிழ்ச்சி ஏற்படுகிறது.

இவ்வாறு மாறி மாறி வரும் மனவெழுச்சிகள் படித்து முடித்தவுடன் சமநிலையை அடைந்துவிடுகிறது.

மிருகக்காட்சி சாலை மற்றும் சர்க்கஸ் கூடாரங்களில் மிருகங்களின் வேடிக்கைகளைப் பார்க்கும்பொழுது அவைகளின் மீதுள்ள அச்சம் குறைகிறது.

நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகளைக் குழந்தைகள் பெரிதும் விரும்பிப் பார்க்கின்றனர். உதாரணமாக பொம்மலாட்டத்தில் சொல்லப்படும் கருத்துகள், சமூக சூழல்களில் தங்கள் மனவெழுச்சிகளை யாரிடம், எப்பொழுது, எங்கு, எப்படி வெளியிட வேண்டும் என்பதை சிறுவர்களுக்குக் கற்றுத் தருகிறது.

சிறுவர்களுக்கான வானொலி நிகழ்ச்சிகளை கேட்டவுடன் அவர்களின் சிந்தனைகள் அச்சத்திற்கும் ஆனந்தத்திற்குமிடையே சிறகடித்துப் பறந்து பின்னர் சமநிலையடைகிறது.

சிறுவர்களைக் கவரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அனைத்தும் அவர்களின் மனவெழுச்சிகளைச் சமநிலைப்படுத்த உதவுகிறது. சண்டைக் காட்சிகள் தைரியத்தை ஏற்படுத்துகிறது. மிருகங்கள் மனிதர்களுக்கு உதவும் காட்சிகளைப் பார்க்கும்பொழுது அவைகளின் மீதுள்ள அச்சம் குறைகிறது.

திரைப்படங்களை பார்க்கும் சிறுவனின் உடல்தான் திரைக்கு வெளியில் இருக்கிறது. உள்ளமோ திரைக்குள் சென்று கதாநாயகனின் உடலுக்கு கூடு விட்டு கூடு பாய்ந்துவிடுகிறது. அவன் தன் பெற்றோரை மதிக்கும்போது தானும் தன் பெற்றேரை மதிக்க வேண்டும், அவர்களிடம் சினம் கொள்ளக் கூடாது என்பதை உணர்கிறான். அவன் திரைப்படத்தில் தன் பெற்றோர் மற்றும்

மனைவி மக்களை இறுதிவரை காப்பாற்றுவதைப் பாத்ததும் தானும் தன் பெற்றோர், சகோதர சகோதரிகளை இறுதிவரை காப்பாற்ற வேண்டும் என்ற பாச உணர்வு ஏற்படுகிறது. அவர்களின் மீது இதுவரை கொண்டுள்ள சினம் குறையத் தொடங்குகிறது. இவ்வாறு திரைப்படங்களில் வரும் நிகழ்ச்சிகள் அவனது பல்வேறு மனவெழுச்சிகளைக் கிளர்ச்சி அடையச் செய்து சமநிலை படுத்துகிறது.

மின்னனு மற்றும் கணினி விளையாட்டுகள் அவனை வெற்றியை நோக்கி வேகமாக முன்னேற வைக்கின்றது. சோம்பல் கொண்டச் சிறுவர்களை சுறுசுறுப்படையச் செய்கிறது.

சிறுவர்களின் மனவெழுச்சிகளை சமநிலை அடைய உதவும் இவ்வூடகங்களைப் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பள்ளிகள் பயன்படுத்தினால் சிறுவர்கள் நல்ல மனவெழுச்சிகளைப் பெற்று தனக்கும், பெற்றோருக்கும், நாட்டிற்கும் உதவவல்ல நல்ல குடிமக்களாக உயர்வார்கள்.

# அலகு – 5

# ஆரம்பக்கல்வி நிலையில் மாணவர்களின் ஒழுக்கவளர்ச்சி (6 முதல் 10 வயது வரை)

**முன்னோக்கு**

எட்டுவயது சிறுவன் அவனது வீட்டில் ஒரு அறையின் கதவைத் திறக்கிறான். அறைக்கதவின் பின்னால் மேசையின்மீது வைக்கப்பட்டு இருந்த ஒரு டஜன் கண்ணாடி கோப்பைகளும் அப்படியே கீழே விழுந்து உடைந்துவிடுகின்றன. கதவின் பின்னால் அவனது தாய் ஒரு டஜன் கண்ணாடி கோப்பைகளை வைத்து இருந்தது அவனுக்குத் தெரியாது. அவனது தாய் வீட்டிற்கு வந்து பார்த்தபோது ஒரு டஜன் கண்ணாடி கோப்பைகளும் உடைந்து கிடந்தன. இந்த செயலை தனது மகன் செய்திருந்ததை அறிந்திருந்தும் அவள் அவனை தண்டிக்கவில்லை.

ஏறத்தாழ அதே வயதினை உடைய இன்னொரு சிறுவனிடம் அவனதுதாய் “அலமாரியில் இரண்டு கண்ணாடி கோப்பைகள் வைத்திருக்கேன். உனக்கு ஏதேனும் தேவைப்பட்டால் நான் வந்ததும் எடுத்து தருகிறேன்” எனக்கூறி சென்று விட்டாள். தாய் வெளியே சென்றதும் அச்சிறுவன் திண்பண்டத்தை எடுப்பதற்காக அலமாரியில் இருந்த ஒரு டப்பாவை எடுக்க முயலுகிறான். அச்சமயம் அவனது கைபட்டு எதிர்பாராதவிதமாக ஒரு கண்ணாடி கோப்பை கீழே விழுந்து உடைந்துவிடுகிறது. சிறிது நேரத்தில் வீட்டிற்கு வந்த அவனது தாய் அச்சிறுவனிடம், “நான் உன்னிடம் திரும்ப திரும்ப கூறிவிட்டு சென்றும் நீ கண்ணாடி கோப்பையை உடைத்து இருக்கிறாய்” எனக்கூறி அவனை அடித்துவிட்டாள்.

இந்த இரு நிகழ்ச்சிகளையும் பார்க்கும்போது முதல் சிறுவன் 12 கோப்பைகளை உடைத்தும் அவனுக்கு தண்டனை கிடைக்கவில்லை. ஆனால் இரண்டாவது சிறுவன் ஒரு கோப்பையை மட்டும் உடைத்ததற்காக தண்டனை பெற்றான். இவ்விருவர் செய்த செயல்களில் எவர் செய்தது கண்டிக்கத்தக்கது என சிறு குழந்தைகளை வினவினால் முதல் சிறுவனது நடத்தையே மிகவும் கண்டிக்கத்தக்கது என்பர். ஏனெனில் நடத்தையின் பின் அமையும் நோக்கம் (Intention) சிறுகுழந்தைகளால் கருத்தில் கொள்ளப்படாது. சுமார் 11–12 வயத அடையும் போதுதான் ஒழுக்கம் பற்றிய சார்பு நோக்கத்தை இவர்கள் அடைகின்றனர். ஒழுக்கம் பற்றித் தீர்மானிக்கும்போது சந்தர்ப்பங்கள், நோக்கங்கள் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

உயிரினங்களில் மனிதனிடம் மட்டுமே ஒழுக்கப் பண்புகளெனப்படுவன காணப்படுகின்றன. கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணாக்கர்களிடையே நல்லொழுக்க வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அளித்தலாகும். மற்ற நிலைகளைவிட ஆரம்பக்கல்வி நிலையில்தான் மாணவர்களிடம் நல்லொழுக்கத்திற்கான விதைகளை ஊன்றமுடியும். ஆசிரியர் கருத்துக்களைக் கூறினால் ஏதும் மறுப்பின்றி ஏற்றுக்கொள்ளும் தன்மை உடைய பருவம் ஆரம்பக் கல்வி நிலையாகும். ‘இளமையில் கல்’ என்கிற பழமொழிக்கு இணங்க ஆசிரியர்கள் கூறும் நல்லொழுக்க அறிவுரைகள் ஆரம்பக்கல்வி பயிலும் மாணவர்கள் மனதில் நல்ல மாற்றங்களை ஏற்படுத்தும். மேற்கூறிய கருத்துக்களை ஆரம்பப்பள்ளிகளில் ஆய்வு செய்து தெரிந்து கொள்ளலாம்.

# 1. ஒழுக்க வளர்ச்சி என்பதன் பொருள் (Meaning of Moral Development)

## செயல்பாடு

1. பள்ளிகளில் நடைபெறும் காலை இறைவணக்கக் கூட்டம் மாணவர்களிடம் ஒழுக்க வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அளிக்கும் இடமாக அமைந்துள்ளது. காலை இறைவணக்கக் கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு செயல்பாடும் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது.

## குறிப்பு

இவ்வாறு கிடைத்த அனுபவத்தை பள்ளிகளில் மாணவர்கள் எந்த அளவுக்கு பின்பற்றுகிறார்கள் என்பதை கற்பித்தல் பயிற்சியின்போது மாணவ ஆசிரியராகிய நீங்கள் விவரங்களை சேகரிக்கவேண்டும் அவ்வாறு சேகரித்த விவரங்களின் அடிப்படையில் ஒரு அறிக்கையினை இரண்டுபக்க அளவில் தயாரிக்கவேண்டும். இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

நுண்ணறிவினைக் காட்டிலும் நல்லொழுக்கமே இன்றைய முக்கிய தேவை என்பதில் பெருமளவு உண்மை உள்ளது. நுண்ணறிவுத் திறன்மிக்க ஆனால் ஒழுக்கம் குறைந்த தலைவர்களால் சமூகத்துக்குத் தீமையே எழும். ஏனெனில் சமூக நலனுக்கு மாறாகத் தமது குறுகிய நலன்களை அடைவதற்கே இத்தகையோர் தமது உயர் ஆற்றல்களைப் பயன்படுத்திக்கொள்வர்.

குடும்பத்தின் செல்வாக்குகள், குடும்பத்திலுள்ள பல்வேறு உறுப்பினர்களது நடத்தை ஆகியன குழந்தைகளின் ஒழுக்கவளர்ச்சியில் முக்கியமான பங்கைப் பெறுவனவாகும். ஏனெனில் இவற்றை எல்லாம் குழந்தை தினமும் உற்றுநோக்குகிறது. இவற்றுக்கு அடுத்து குழந்தை நல்லொழுக்கப் பண்புகளைப் பெற அதற்கு உதவுவதில் பள்ளியின் செல்வாக்கு முக்கியமானது. மேற்குறிப்பிட்டவாறு பள்ளிகளில் நடைபெறும் காலை இறைவணக்கக்கூட்டத்தில் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கான செயல்பாடுகளை அளிக்கலாம். காலை இறைவணக்கக்கூட்டம் மட்டுமின்றி பள்ளியின் இதர செயல்பாடுகளிலும் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அளிக்கலாம். பள்ளியில் ஆசிரியர்கள் மற்றும் சகமாணவர்கள் (Peer Groups) ஆகியோரின் நடத்தையினை குழந்தை கவனிக்கிறது.

குடும்பத்தின் செல்வாக்குகள், குடும்ப உறுப்பினர்களது நல்லொழுக்கப் பண்புகள் மற்றும் பள்ளியின் செல்வாக்குகள் ஆகியவற்றின் விளைவாக உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள்களையும், அறக்கருத்துக்களையும் தமது உள்ளத்தே அமைத்து இவற்றிற்கேற்ற முறையில் நடந்துகொள்ளும் பழக்கத்தைக் குழந்தை அடைதல் **ஒழுக்க வளர்ச்சி** எனலாம்.

பள்ளிக்கல்வியின் வழியே நல்லொழுக்கப் பழக்கங்களைக் குழந்தைகள் அடைய வேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்க்கிறது. ஏனெனில் ஆசிரியர்கள் கூறுவதை குழந்தைகள் அப்படியே ஏற்றுக்கொள்கின்றனர். பள்ளிகளில் குழந்தைகளுக்கு நல்லொழுக்கப் பண்புகளது வளர்ச்சிக்கான பயிற்சியளிக்கையில் அவர்களது குடும்பச் சூழ்நிலை, சுற்றுப்புறச் சூழ்நிலை ஆகியவற்றின் முழுத்தன்மையினையும் ஆராய்ந்து அவற்றில் காணப்படக்கூடிய குறுக்கீடுகள், குறைபாடுகள் ஆகியவற்றை கடந்து நல்வளர்ச்சியினை குழந்தைகள் பெறுவதற்கான வாய்ப்புக்களை ஆசிரியர்கள் உருவாக்கித்தர வேண்டும்.

குழந்தைகளது ஒழுக்க வளர்ச்சி தனிப்பட்டு நிகழ்வதில்லை. குழந்தைகளின் ஒழுக்கம் பல நிலைகளில் வளர்ச்சியுறுகிறது. அதன் அறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகளது வளர்ச்சி, சமூகப்பண்புகளது வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்தே நிகழ்வதாகும். நல்லொழுக்கம் பற்றிய போதனையினைக் காட்டிலும் மகிழ்ச்சி பரவிய சிறப்பான குடும்பச் சூழ்நிலையும், பள்ளிச் சூழ்நிலையும் மாணாக்கர்களது நல்லொழுக்க வளர்ச்சிக்கு அதிக அளவு பயனுள்ளவையாகும்.

### குறிப்பு

செயல்பாட்டில் மேற்குறிப்பிட்ட விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளை கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியவும்.

## 1. (அ) ஒழுக்க வளர்ச்சி பற்றிய உளவியல் கருத்துக்கள்

### செயல்பாடு –1

வீட்டிலிருந்து பள்ளிக்கு வரும் வழியில் மாணவன் ஒருவன் இலைநுனியை கிள்ளி எறிகிறான். இதுபோன்ற செயல்களுக்கெல்லாம் காரணம் வீட்டு சூழ்நிலையில் ஏற்பட்டதாக்கம் அவனது மனதில் மனஅழுத்தத்தை (Stress) ஏற்படுத்தியது. இவ்வாறு பள்ளி மாணவர்களிடம் ஏற்பட்ட ஒழுங்கின்மையை எவ்வாறு போக்கலாம்? என்பது குறித்து மாணவ ஆசிரியராகிய நீங்கள் இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பினை தயார் செய்க. இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

### விளக்கம்

பிற உயிரினங்களுக்குத் தீங்கு செய்யக்கூடாது என்கிற எண்ணத்தை மாணவர்களிடம் ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். மாணவனது மனஅழுத்தத்தைக் குறைப்பதற்கும் அவனது தவறான நடத்தையைப் போக்குவதற்கும் பள்ளியில் ஆசிரியர் மாணவர்களிடம் அன்பு செலுத்தி அரவணைத்து அவர்களிடம் சில செயல்பாடுகளை அளிக்கலாம். “Family is a shock absorber” என்கிற கூற்றுக்கு இணங்க குடும்பமானது ஒருவனது மனஅதிர்வுகளை அல்லது பிரச்சனைகளை ஏற்றுக்கொள்ளும் அமைப்பாக இருக்கவேண்டும். ஒருவருக்கொருவர் அன்பு செலுத்தி மகிழ்ச்சியாக இருக்க வேண்டும். வீட்டில் குழந்தைகளுக்கு ஏற்பட்ட பிரச்சனைகளை குழந்தைகள் பள்ளிக்கு வந்தவுடன் ஆசிரியர்கள் கேட்டறிந்து சுமூகத் தீர்வு காணவேண்டும். இதேபோன்று பள்ளிகளில் ஏற்பட்ட பிரச்சனைகளை குழந்தைகள் வீட்டிற்கு வந்ததும் அவர்களிடம் பெற்றோர்கள் கேட்டறிந்து சுமூகத்தீர்வு காணவேண்டும். பெற்றோர்களில் பெரும்பாலோர் பள்ளியில் இருந்து குழந்தைகள் வீட்டிற்கு வந்ததும் அவர்களது பிரச்சனைகளை கேட்பதற்கு தனியாக நேரம் ஒதுக்குவதே இல்லை. பள்ளியில் ஆசிரியர்கள் வகுப்பு நேரங்களிலும் அல்லது அதற்கென நேரம் ஒதுக்கி மாணவர்களுக்கு அறிவுரை வழங்கலாம். அவர்களது பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.

பள்ளியில் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பின்வரும் செயல்பாடுகளை அளிக்கலாம்.

### செயல்பாடு – 2

வகுப்பறையையும், பள்ளிச்சுற்றுப்புறத்தையும் மாணவர்களிடம் தூய்மையாக வைத்திருக்கக் கூறவேண்டும். மாலை நேரங்களில் பள்ளியில் தோட்ட வேலையில் மாணவர்களை ஈடுபடுத்த

வேண்டும். தோட்ட வேலையில் தாவரங்களுடன் 1/2 மணி நேரம் செலவிடுவது என்பது அவர்கள் 1/2 மணி நேரம் தியானத்தில் ஈடுபடும்போது கிடைக்கும் மனநிறைவோடு ஒப்பிடலாம். இதுபோன்று மாலை நேரங்களில் மாணவர்களை விளையாட்டிலும் ஈடுபடுத்தலாம்.

இச்செயல்பாட்டின் மூலம் தகுந்த பயன் கிடைத்துள்ளதா? என்பது குறித்து இரண்டு பக்க அளவில் ஒரு குறிப்பு எழுதுக. இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

**விளக்கம்**

மாணவனுக்கு ஒய்வு நேரங்களில் நல்ல செயல்பாடுகளில் ஈடுபடுத்தப்படவில்லையானால் அல்லது அவனுக்கு எந்த செயல்பாடுகளும் அளிக்காமல் தனித்துவிடப்பட்டால் அவன் தவறான செயல்களில் ஈடுபடக்கூடும். மாணவனைத் தனித்துவிடாமல் அவனுடைய சகமாணவர்களுடன் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை அளிக்க வேண்டும். ஏனெனில் நல்லொழுக்க வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் அளித்தல் ஒன்றே கல்வியின் நோக்கமாகும். இதுவே 'மதிப்புசார் கல்வி' (Value Education) என்றும் கூறலாம்.

வீட்டில் பெற்றோர்கள் குழந்தைகளைத் தனித்து விடாமல் அவர்களைக் கண்காணித்து அவர்களுடைய பிரச்சனைகளைக் கேட்டறிந்து அவர்கள் தவறு செய்யும் நேரங்களில் பக்குவமாகக் கண்டித்து அந்த தவற்றினை அவர்கள் மேற்கொண்டு செய்யாமலிருக்க அறிவுரை வழங்கவேண்டும். இதுபோன்ற குழந்தைகளின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு ஏற்ற முடிவுகளை மேற்கொள்ளலாம்.

மிகச் சிறிய வயதில் குழந்தைகளிடத்தில் ஒழுக்கநடத்தை என குறிப்பிடத்தக்கது காணப்படாது. இயல்பூக்கங்கள் அவற்றுடன் இணைந்த மனவெழுச்சிகளை வெளிப்படுத்தும். அவற்றினால் உந்தப்பட்ட நடத்தை இந்நிலையில் காணப்படும்.

**செயல்பாடு – 3**

ஒரு மாணவன் பள்ளியில் சகமாணவர்களின் பென்சில், ரப்பர், பேனா போன்றவற்றைத் திருடிகொண்டு வருகிறான். வீட்டிற்கு வந்த அம்மாணவனின் செயலை அவனது பெற்றோர் அறிந்திருந்தும் அவனை கண்டிக்காமல் அமைதியாக இருந்து விடுகின்றனர். மாறாக அவனிடம் அவனது பெற்றோர் இப்பொருட்களை பள்ளிக்கு கொண்டு செல்லவேண்டாம். வீட்டிலேயே வைத்துக்கொள் எனக்கூறி அம்மாணவனைத் தவறான வழியில் ஊக்கப்படுத்துகின்றனர். இம்மாணவனின் பெற்றோர் போக்கு சரியா? தவறா? ஆராய்க.

**விளக்கம்**

எந்த நடத்தைப் பாராட்டைப் பெறும் எந்த நடத்தைப் தண்டிக்கப்படும் என்று குழந்தை உணர்ந்தவுடன் ஒரு நடத்தையினை மேற்கொள்ள அதன் விளைவு எவ்வாறு காணப்படும் என்பது குழந்தைகக்குப் போதுமானதாகும் மற்றும் குழந்தையை அதுன் நடத்தைக்காகப் பாராட்டும் போதும் அதன் பெற்றோர்கள் என்ன செய்கிறார்கள் என்பதும் முக்கியமாகும். எனவே குழந்தைகளின் நல்லொழுக்க வளர்ச்சியில் பெற்றோர்களின் பங்கு இன்றியமையாதது. இம்மாதிரியே பின்பற்றுதல் ஒழுக்க வளர்ச்சியில் முக்கிய பங்கினைப் பெறுவதாகும். எனவே ஒழுக்க வளர்ச்சியில் சிறந்த முன்மாதிரிகள் சிறப்பிடம் பெறுகின்றன. இத்தகைய முன்மாதிரிகளாக விளங்குவது சமூக முதியவர்களது பொறுப்பாகின்றது.

**செயல்பாடு – 4**

ஒரு மாணவன் பள்ளியில் ஆசிரியருக்கு தெரியாமல் காப்பி அடித்து தேர்வு எழுதுகிறான். தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்றதும் அம்மாணவன் வீட்டில் பெற்றோர்களிடம் "நான் தேர்வில் காப்பி அடித்துதான் அதிக மதிப்பெண்களை பெற்றேன் என்கிறான்" உடனே பெற்றோர்கள் நீ காப்பி அடித்தது தவறு என திட்டுகின்றனர். மேலும் "நீ நன்றாக படித்து நேர்மையான முறையில் தேர்வு எழுதி அதிக மதிப்பெண்கள் பெறவேண்டும்" என்பதில்தான் நாங்கள் மகிழ்ச்சி அடைவோம், என அறிவுரை கூறுகின்றனர். அம்மாணவனும் அடுத்த முறை நான்றாகப் படித்து நேர்மையான முறையில் தேர்வு எழுதி அதிக மதிப்பெண்களை பெற்று வகுப்பில் முதல் இடத்தை பிடித்து ஆசிரியர்களிடமும் வீட்டில் பெற்றோர்களிடமும் பாராட்டுகளைப் பெறுகிறான்.

இந்த பெற்றோரது நடத்தைப் போக்கை முன்பு நாம் ஆராய்ந்த பெற்றோரின் நடத்தைப் போக்குடன் **(செயல்–3)** ஒப்பிடுக.

**விளக்கம்**

எந்தச் செயல் பாராட்டுகளைப் பெறுகிறது. எந்த செயல் தண்டனையைக் கொடுக்கிறது என அறிந்து, குழந்தைகள் அதற்கேற்ப செயல்படுகின்றனர். எனவே ஆசிரியர்களும் பெற்றோர்களும் சிறந்த முன்மாதிரிகளாக (Model) திகழ வேண்டும்.

குழந்தையின் அனுபவங்கள் பெருகப்பெருக பல்வேறு பொருள்கள், கருத்துக்கள், நிலைமைகள் போன்றவற்றுடன் அதன் தொடர்புகள் அதிகரிக்கும்போது அதன் இயல்பான ஊக்கங்களும், மனவெழுச்சிகளும் இப்பல்வேறு பொருட்கள், கருத்துக்கள், நிலைமைகள் போன்றவற்றைச் சுற்றித் திட்டவட்டமான முறையில் ஒருங்கிணைக்கப்பட்டு பற்றுகளாக (Sentiments) உருவாகின்றன. பற்றுகளை மனப்பான்மைகள் (Attitudes) என்றும் குறிப்பிடலாம். பற்றுகள் பிறப்பிலேயே காணப்படுவனவல்ல.

**செயல்பாடு – 5**

தந்தையின் மேசை மீது இருந்த இரண்டு அழகான பேனாக்கள் மீது பள்ளிக்குச் செல்லும் மகனுக்கு அதில் ஒன்றை எடுத்துக்கொள்ளலாம் என்கிற மனப்பான்மை ஏற்பட்டது. அதன் காரணமாக அதில் ஒரு பேனாவை தந்தைக்கு தெரியாமல் தனது பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்கிறான். தந்தை வீட்டிற்கு வந்ததும் தனது அறையில் தனது மேசையின் மீது வைத்திருந்த ஒரு பேனா காணாமல் போனது பற்றி தனது மகனிடம் கேட்கிறார். ஏனெனில் வெளியாட்கள் அவரது அறைக்கு வர வாய்ப்பில்லை. தந்தை கேட்டதும் மகன் "உங்களுக்கு எழுதுவதற்கு ஒரு பேனா போதுமே. இரண்டு பேனா எதற்கு**?** என்னிடம் எழுதுவதற்கு பேனா இல்லை. அதனால்தான் ஒரு பேனாவை எடுத்தேன்" என கூறுகிறான். இதற்கு தந்தை "இரண்டு பேனாக்கள் இருந்தாலும் நீயாக என்னிடம் கேட்காமல் ஒரு பேனாவை எடுத்தது தவறு. என்னிடம் அனுமதி வாங்கிக் கொண்டுதான் அந்த பேனாவை எடுத்திருக்க வேண்டும். என்னிடம் கேட்டால் நானே அந்த பேனாவை உனக்கு தந்து இருப்பேன் அல்லது உனக்கு ஒரு பேனாவை வாங்கி தந்து இருப்பேன்" என கூறுகிறார்.

**விளக்கம்**

சிறுவனுக்கு அந்த பேனாவின் மீது ஏற்பட்ட பற்றின் காரணமாகவும், அது அவனுக்கு தேவை என்பதாலும் அவன் அந்த ஒரு பேனாவை எடுத்துவிடுகிறான். இதில் அவனிடம் தானாக முடிவு எடுக்கும் திறன் காணப்படுகிறது. இது போன்ற பிறரிடம் இருந்து பொருளை எடுக்கும்போது அவரிடம்

அனுமதி பெற்றுதான் பொருளைப் பெறவேண்டும். மேற்குறிப்பிட்ட செயலில், ஒவ்வொரு முறையும் குழந்தை தன்னிடம் கேட்டு முடிவு எடுக்க வேண்டும் எனத் தந்தை எதிர்பார்க்கிறார். அதன் காரணமாகத் தந்தை தன் கருத்தைக் குழந்தையிடம் கூறிவிட்டு அந்த பேனாவைக் கொடுத்து விடுகிறார்.

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் சிறுவன் தானாக முடிவு எடுத்தது சரியா? அல்லது ஒவ்வொரு முறையும் தனது தந்தையிடம் கேட்டு முடிவு எடுக்க வேண்டும் என்பது சரியா? ஆராய்க.

**பற்றுகள்** என்பவை அனுபவங்கள், கற்றல் போன்றவற்றின் விளைவுகளாகும். ஒருவனது விருப்பங்கள் (Likes or Love), வெறுப்புகள் (Dislikes or Hates) ஆகியன இப்பற்றுகளாகும். பற்றுகள் மனவெழுச்சி கலந்த மனநிலைகளாகும். (Emotional Dispositions)

ஒழுக்கம் அதனின்றும் தோன்றும் நடத்தையும் பற்றுகளைப் பொறுத்தனவாகும். இதையே பின்வருமாறு குறிப்பிடலாம்.

"**ஒழுக்கக் கல்வி** எனப்படுவது பல்வேறு அறப்பற்றுகளை வளர்த்துக்கொள்ள குழந்தைகளுக்கு உதவுவதலும் இவற்றை வலுமிக்க ஆக்கநிலையில் அமைந்த தற்கருத்தின் அடிப்படையில் பயிற்சியளித்தலும் ஆகும்" எனலாம்.

குழந்தை ஒழுக்கப்பண்புகளுடன் பிறப்பதில்லை. அவை வளர்ச்சியின் விளைவுகளாகும்.

### செயல்பாடு – 6

அரிச்சந்திரன் கதையில் அரிச்சந்திரன் எந்த காலகட்டத்திலும், எந்த நிலையிலும் பொய்யைப் பேசமாட்டான். உண்மையையே பேசுவான். அரிச்சந்திரனுக்கு நிறைய சோதனைகள் ஏற்பட்டன; பல்வேறு பிரச்சனைகளை எதிர்கொண்டான்; உண்மையை பேசுவதின் காரணமாக தன் மனைவி, குழந்தை, குடும்பம் அனைத்தையும் இழந்தான். இறுதியில் மயானத்தில் வேலை பார்த்தபோது பொய் பேச வேண்டிய சூழல் ஏற்பட்டது. அப்போதும் அவன் வாய்மையையே கடைப்பிடித்தான்.

நடைமுறை வாழ்க்கையில் எல்லா நேரங்களிலும் வாய்மையைக் கடைபிடிக்க வேண்டுமா? ஏன்? ஆராய்க.

### விளக்கம்

சமூகப்பழக்க வழக்கங்களால் ஒருவனது நடத்தை பாதிக்கப்படுகிறது. சமூக ஏற்புள்ள நடத்தையே குழந்தைகள் மேற்கொள்ளும். சிலவகை நடத்தைகளைத் தவிர்ப்பதற்குக் காரணம் அவற்றைச் சமூகம் ஆதரிப்பதில்லை எனவும் அத்தகைய நடத்தைகளில் ஈடுபட்டால் தன்னைச் சமூகத்திலுள்ள பெரும் பான்மையோர் இகழ்ந்து ஒதுக்கித் தள்ளுவதில் முடியும் என்பதுமேயாகும். நம்மில் பலருடைய ஒழுக்கவளர்ச்சி இந்நிலையிலேயே தேங்கி நிற்பதாகும். இதைவிட உயரிய நிலையொன்றும் உண்டு. இதைத் 'தனித்தன்மைநிலை' (Personal Stage) எனலாம். அரிச்சந்திரனிடம் தனித்தன்மை நிலை காணப்பட்டது. எவ்வளவு துயரங்கள் வந்தாலும் அவன் உண்மையே பேசினான். இந்நிலையுள்ளவனின் நடத்தை அவன் கொண்டுள்ள உயர் ஒழுக்கம் பற்றிய குறிக்கோள்களால் உந்தப்படுவதாகும். இந்நிலையில் உள்ளவன் சமூகமே திரண்டு வந்து எதிர்த்த போதிலும் தான் உறுதியாக நம்பும் அறநெறிகளினின்றும் பிறழமாட்டான்.

மகாத்மாகாந்தி தனது இளமைப்பருவத்தில் அவர் பார்த்த அரிச்சந்திரன் நாடகம் அவர் மனதில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் விளைவு அவர் வாய்மையைக் கடைப்பிடித்தார்.

**செயல்பாடு – 7**

ஒரு சிறுவன் உணவருந்தும்போது மேசையின் மீது உள்ள பாத்திரத்தில் இருந்து அதிக அளவு குழம்பினைத் தவறுதலாக மேசை மீது கொட்டி பெரிய பரப்பளவிற்குக் கறை ஏற்படுத்துகிறான். மற்றொரு சிறுவன் உணவருந்தும்போது பாத்திரத்தில் உள்ள குழம்பில் கரண்டியுடன் விளையாடும்போது சிறிதளவு குழம்பினை மேசைமீது கொட்டி சிறிய பரப்பளவிற்குக் கறை ஏற்படுத்துகிறான். இதில் எவரது நடத்தை மிகவும் கண்டிக்கத்தக்கது? ஏன்? சிந்தித்து பாருங்கள்.

**விளக்கம்**

மேற்கூறிய நிகழ்ச்சியில் இரண்டாவது சிறுவனைவிட அதிகஅளவு குழம்பு கொட்டின கறையை ஏற்படுத்திய முதல் சிறுவனது நடத்தை மிகவும் கண்டிக்கத்தக்கது எனத் தோன்றலாம். ஆனால், இந்நிலையில் ஒரு நடத்தையின் பல்வேறு கூறுகளை தனிமைப்படுத்தி உணரும் திறனும் (Decentering), தங்களது தன்மைய (Egocentre) நிலையினின்றும் விடுபட்டுப் பிரச்சனைகளைப் பிறரது நோக்கினின்றும் ஆராயும் திறனைப் பெறும்போது இரண்டாவது சிறுவனது நடத்தை தவறு என்பதை அறிய முடிகிறது.

**செயல்பாடு – 8**

தனது மகனின் வியாதியைக் குணப்படுத்த ஒரு மருந்து ஒருவனுக்கு அவசரமாக தேவைப்படுகிறது. கடைக்காரன் 100 ரூபாய்களுக்குத் தான் வாங்கிய அம்மருந்திற்கு 200 ரூபாய் கேட்கிறான். ஆனால் இம்மனிதனால் எவ்வளவு முயன்றும் ரூ.100க்கு மேல் திரட்ட முடியவில்லை. எனவே அம்மருந்தைக் கடையிலிருந்து திருடிவிடுகிறான். இவ்வாறு அவன் செய்தது சரியா? தவறா? ஏன்?

**விளக்கம்**

மேற்கூறிய நிகழ்ச்சியினைப் பார்க்கும்போது எக்காலத்திலும் அறிவு வளர்ச்சி ஒரே வகையில் எழுவதுடன் ஒரே வகையில் எக்காலத்திலும் மக்கள் தாங்கள் வாழும் சமுதாயத்துடன் தொடர்புகொண்டு செயல்படுகின்றனர். வயதிற்கேற்ப அவர்களது ஒழுக்கம் பற்றிய நிலை இருத்தலைக் காணமுடிகிறது.

**1. (ஆ) ஒழுக்கவளர்ச்சியின் நிலைகள்**

**செயல்பாடு (1)**

ஒரு குழந்தை தான் விளையாடும் பொருட்களை உடைக்காமல், விளையாடி முடிந்ததும் பொருட்களைப் பாதுகாப்பாக ஒரு இடத்தில் வைத்தது. இது எதனால் ஏற்படுகிறது? ஏன்?

**விளக்கம்**

மேற்கூறிய செயலை ஒழுக்க வளர்ச்சியின் முதல் நிலையான 'நடைமுறை வழக்குக்கு முற்பட்ட நிலை' (Preconventional stage) எனக் கூறலாம். மகிழ்ச்சி பெறுதலும், தண்டனைகளைத் தவிர்த்தலும் ஒழுக்க விதிகளைப் பின்பற்றுவதற்கான நோக்கங்களாக இந்நிலையில் அமைகின்றன. குழந்தை விளையாட்டுப் பொருட்களை உடைக்காமல் விளையாடி முடிந்ததும் பாதுகாப்பாக ஒரு இடத்தில் வைத்தது அக்குழந்தைக்கு மகிழ்ச்சியினையும் பெற்றோர்களின் தண்டனையில் இருந்து தன்னை விடுவித்தும் கொள்கிறது.

**செயல்பாடு (2)**

A என்கிற நிறுவனத்தில் இருந்து ஒரு மாணவனும் B என்கிற நிறுவனத்தில் இருந்து ஒரு மாணவனும் மாவட்ட அளவிலான கேரம் போர்டு விளையாட்டுப் போட்டியில் நேருக்கு நேர் பங்கு பெறுகின்றனர். A என்கிற நிறுவனத்தைச் சார்ந்த மாணவன் விளையாட்டு விதிமுறைகளை முழுவதும் பின்பற்றி நேர்மையுடன் விளையாடுகிறான். B என்கிற நிறுவனத்தைச் சார்ந்த மாணவன் விளையாட்டு விதிமுறைகளை முழுவதும் பின்பற்றாமலும் ஒழுக்கநெறி தவறியும் விளையாடுகிறான். விளையாட்டுப் போட்டி நிறைவடைந்ததும் B என்கிற நிறுவனத்தைச் சார்ந்த மாணவன் வெற்றி பெறுகிறான். பரிசினையும் பெறுகிறான்.

**விளக்கம்**

மேற்கூறிய செயலை ஒழுக்க வளர்ச்சியின் அடுத்த நிலையான "நடைமுறை வழக்கு நிலை" (Conventional stage) எனலாம். இந்நிலையில் பரிசுகள் பெறவும். பிறரது பாராட்டுகளைப் பெறவும், பிறரிடமிருந்து ஏதாகிலும் எதிர்பார்த்துப் பெறவும் விருப்பமிகுதியால் குழந்தைகள் செயல்படுவர். மேற்கூறிய நிகழ்ச்சியில் 'A' என்கிற நிறுவனத்தைச் சார்ந்த மாணவன் விளையாட்டு விதிமுறைகளை முழுமையாக பின்பற்றியும், நேர்மையுடன் செயல்பட்டும் பரிசினையும் பாராட்டுகளையும் பெறமுடியவில்லை. 'B' என்கிற நிறுவனத்தை சார்ந்த மாணவன் விதிமுறைகளை பின்பற்றாமலும் நேர்மையாகச் செயல்படாமலும் இருந்து போட்டியின் இறுதியில் பரிசினையும், பாராட்டுகளையும் பெறுகிறான்.

இந்நிலையில் 'A' என்கிற நிறுவனத்தைச் சார்ந்த மாணவனின் நடத்தையையும், 'B' என்கிற நிறுவனத்தைச் சார்ந்த மாணவனின் நடத்தையையும் ஆராய்க.

**செயல்பாடு (3)**

ராமுவும் கோபுவும் நண்பர்கள். அவர்கள் இருவருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையில் ராமு, கோபுவை அடிப்பதற்காக கோபுவை தேடுகிறான். இதை அறிந்த கோபு தனது நண்பன் பாபுவின் வீட்டிற்கு சென்று பாபுவிடம் பிரச்சனை தொடர்பான அனைத்து விவரங்களையும் கூறி பாபுவின் வீட்டில் தங்கிக் கொள்கிறான்.

ராமு என்பவன் கோபு அவனுடைய நண்பனான பாபுவின் வீட்டில்தான் தங்கியிருக்கக் கூடும் என நினைத்து பாபுவின் வீட்டிற்கு வந்து பாபுவிடம் கோபு இங்கு இருக்கிறானா? என கேட்கிறான். உடனே பாபு, ராமுவிடம் கோபு இங்கு வரவில்லை. அவன் எங்கு இருக்கிறான் என்பது தெரியாது என கூறுகிறான். ராமுவிடம் நீ எதற்காக அவனை தேடுகிறாய்? என கேட்கிறான். விவரங்களை கேட்டறிந்த பின்பு ராமுவிடம் பாபு அறிவுரைகளை கூறி அனுப்புகிறான்.

**விளக்கம்**

மேற்கூறிய நிகழ்ச்சியில் பாபு தனது நண்பன் கோபுவை காப்பாற்றுவதற்காக பொய் கூறுகிறான். மேலும் ராமுவுக்கு அறிவுரை கூறி அனுப்புகிறான். இச்செயலை ஒழுக்க வளர்ச்சியின் மூன்றாவது நிலையான "நடைமுறைவழக்குக் பிந்திய நிலை" (Post conventional stage) எனலாம். அறிவின் அடிப்படையில் தன்னால் ஏற்கப்பட்ட ஒழுக்க நெறிகளுக்கேற்பச் சுதந்தரமாக நடத்தல் இந்நிலையில் காணப்படும்.

ஒழுக்க வளர்ச்சியின் மூன்று நிலைகளான;

1. நடைமுறை வழக்குக்கு முற்பட்டநிலை (Pre conventional stage)
2. நடைமுறை வழக்கு நிலை (Conventional stage)

3. நடைமுறை வழக்குக்கு பிந்திய நிலை (Post conventional stage)
ஆகியவற்றை மேற்கூறிய மூன்று செயல்களின் மூலமாக விளக்கலாம்.

**குறிப்பு**

மேற்குறிப்பிட்ட செயல்பாடுகளின் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளை கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் இடையே ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியவும்.

### 1.(இ) ஒழுக்க வளர்ச்சியும் சமூக வளர்ச்சியும்

**செயல்பாடு**

ஒரு மனிதன் சமூகத்தில் நன்றாக பழகுகிறான். எல்லோரிடமும் நன்றாக பேசி தன்னால் முடிந்தவரை உதவிகள் செய்கிறான். ஆனால் மறைமுகமாக ஒருவனைப்பற்றி இன்னொருவனிடம் குறைகளைக் கூறுகிறான். இது எதனால்? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

மேற்கூறிய செயலில் அந்த மனிதனிடம் சமூகப் பண்புகள் நிறைந்திருந்தும் அவனிடம் ஒழுக்க வளர்ச்சி காணப்படவில்லை. ஒழுக்கவளர்ச்சியும், சமூக வளர்ச்சியும் இணைந்தவை. சிலர் நேரில் ஒருவனை நன்றாகப் பாராட்டிவிட்டு மறைமுகமாக அவனைப் பற்றி அடுத்தவரிடம் குறைகள் கூறுவர். எனவே, சமூக நடத்தை அறநெறிகளின் அடிப்படையில் அமைந்திருத்தல் அதன் பயனை அதிகரிக்கவல்லது. பல சமூகப் பண்புகள் சிறப்பான ஒழுக்கப்பண்புகளாகவும் உள்ளன. முழுமையான சமூகவியல்பு பெற்றவன் நல்ல ஒழுக்கமுடையவனாகவும் இருத்தல் வேண்டும் என்பதனை மறுக்க முடியாது. அறப்பண்புகளையும் ஒழுக்க மதிப்புகளையும் கல்வி வலியுறுத்தல் வேண்டும். ஒழுக்கக் கல்வி பொதுக்கல்வியின் ஒரு முக்கிய பகுதியாக இன்று கருதப்படுகிறது. இது முற்காலத்திலும் முதலிடம் பெற்று காணப்பட்டது என்பதனை குறிப்பிடவேண்டும். எனினும் இன்று உலகில் பரவிக் காணப்படும் பதட்டமும், போராட்டங்களும் கட்டுப்பாடுகளற்ற நிலையும் கொண்ட சமூகச் சூழ்நிலையில் எக்காலத்தையும் விட ஒழுக்கக் கல்வியும் நல்லொழுக்கப் பயிற்சியும் மேலும் முக்கியத்துவம் பெற்றுக் காணப்படுகின்றன.

**செய்முறைப்பயிற்சி– 1**

கற்பித்தல் பயிற்சியின்போது மாணவர்கள் அனைவரும் பள்ளிக்கு காலை இறைவணக்கக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பே வந்து விடுகிறார்களா? எத்தனை மாணவர்கள் காலதாமதமாக வருகின்றனர்? அவ்வாறு இருப்பின் என்ன காரணங்களினால் அவர்கள் பள்ளிக்கு கால தாமதமாக வருகின்றனர். இது குறித்து இரண்டு பக்க அளவில் ஒரு குறிப்பு எழுதுக.

**செய்முறைப்பயிற்சி– 2**

கற்பித்தல் பயிற்சியின்போது காலை இறைவணக்கக் கூட்டம் முடிவடைந்து மாணவன் வகுப்பறைக்கு செல்லும்போது பிறமாணவர்களுடன் வரிசையில் ஒழுங்காகச் செல்கிறானா? வரிசையில் ஒழுங்காக செல்லவேண்டும் என்கிற விதிமுறையினை எத்தனை மாணவர்கள் பின்பற்றுகிறார்கள்? எத்தனை மாணவர்கள் அதனை பின்பற்றுவதில்லை. இதற்கான காரணங்களை இரண்டு பக்க அளவில் ஒரு குறிப்பு எழுதுக.

**செய்முறைப்பயிற்சி – 3**

மாணவன் ஆசிரியர்களிடம் பணிவுடன் நடந்து கொள்கிறானா? என்பதை மறைமுகமாக உற்றுநோக்கி ஆராய்க. எத்தனை மாணவர்கள் மிக அதிக அளவில் பணிவுடன் நடந்து கொள்கின்றனர்? பணிவுடன் நடந்து கொள்ளாத மாணவர்கள் யாரேனும் உள்ளனரா? இதற்கான காரணங்களைக் கண்டறிந்து இரண்டு பக்க அளவில் ஒரு குறிப்பு எழுதுக.

## உ. குழந்தைகளின் ஒழுக்கப் பயிற்சியின் காரணிகள்

**(Factors in moral training of children)**

**செயல்பாடு**

நீங்கள் வெற்றி பெற்றவர்களோடு சேர்ந்தால் நீங்களும் ஒரு வெற்றி வீரர் ஆவீர்கள். சிந்தனையாளர்களோடு சேர்ந்தால் நீங்களும் ஒரு சிந்தனையாளர் ஆவீர்கள். குற்றம் குறை சொல்பவர்களோடு சேர்ந்தீர்கள் என்றால், நீங்களும் குற்றம் குறை சொல்லிக்கொண்டு உட்கார்ந்து விடுவீர்கள்.

குழந்தை எவ்வகை நடத்தை கொண்டவர்களிடம் பழகுகிறது? ஆராய்க. இது குறித்து இரண்டு பக்க அளவில் ஒரு அறிக்கையினை தயாரிக்கவும் இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

**விளக்கம்**

ஒரு மனிதனின் ஒழுக்கத்தை அவன் பிறருடன் சேர்ந்திருக்கிறான் என்பதை வைத்து மட்டுமில்லாமல், அவன் யார் யாருடன் சேர்வதை தவிர்க்கிறான் என்பதையும் வைத்தே முடிவெடுக்க முடியும்.

ஒழுக்கம் (Character) நல்லொழுக்கமாக அமைவதோ, தீய ஒழுக்கமாக அமைவதோ ஒருவன் பெற்றிருக்கும் அறப்பற்றுகளின் தன்மையைப் பொறுத்தது. எதேச்சாதிகாரிகள், கொடுங்கோலர்கள் போன்றோரெல்லாம் தீய பண்புகளைக் கொண்டிருப்பினும் மனஉறுதியுடன் செயல்படுவதை நாம் காண்கிறோம். பள்ளி மாணவர்களிடம் அமைய வேண்டியது வலுவான மனஉறுதி மட்டுமின்றி அதன் அடிப்படையாக நற்பண்புகளையும், நல்ல அறப்பற்றுகளையும் கொண்ட நல்லொழுக்கம் ஆகும்.

**ஒழுக்கம்** என்பது பல அறப்பற்றுகளையும் நற்பண்களையும் உள்ளடக்கிய தானுணர்ச்சியுடன் இணைந்து செயற்படுதலேயாகும்.

ஒழுக்க நடத்தையில் மனச்சாட்சி (conscience) என்னும் உள்ளுணர்வு இன்றியமையாப் பங்கினைப் பெற்றுள்ளதாகும்.

### 2. (அ) குழந்தைகளிடம் ஒழுக்கப் பயிற்சியினை நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள்

**ஆய்வு**

ஒரு ஆசிரியர் மூன்று மாணவர்களை ஆய்வுக்கு எடுத்துக்கொள்கிறார். மூன்று மாணவர்களுக்கும் கல்வியுடன் ஒழுக்கத்தையும் சேர்த்து கற்பித்து வருகிறார். பயிற்சிக்காலம் முடிவடைந்ததும் மூன்று மாணவர்களையும் பின்வருமாறு சோதனை செய்கிறார்.

ஒரு தெருவில் குறிப்பிட்ட தூரத்திற்கு (100 அடி தூரம்) ஒரு பகுதியிலிருந்து மறுபகுதி வரை யாரும் நடந்து செல்ல முடியாதவாறு முட்களால் நிரப்பி விடுகிறார். மூன்று மாணவர்களில் முதலாவது

மாணவனை அதன் மீது நடந்து தெருவின் அடுத்த பகுதிக்கு செல்ல கூறுகிறார். அம்மாணவனும் தான் மட்டும் நடந்து செல்வதற்கு முட்களை ஒதுக்கி சிறிய வழி ஏற்படுத்தி தெருவின் அடுத்த பகுதியை சென்றடைகிறான். ஆசிரியர் தெருவில் மீண்டும் முட்களை நிரப்பி இரண்டாவது மாணவனை சோதனை செய்கிறார். இரண்டாவது மாணவன் காலில் தடித்த காலணி அணிந்து கொண்டும் இரண்டு சிறிய மரப்பலகைகளை கையில் எடுத்துக்கொண்டு மாறி மாறி முட்களின் மீது போட்டுக்கொண்டு அதன் மீது நடந்து தெருவின் அடுத்த பகுதியை சென்றடைகிறான். மீண்டும் முட்களை சரியாக நிரப்பி ஆசிரியர் மூன்றாவது மாணவனை சோதனைக்கு உட்படுத்துகிறார். மூன்றாவது மாணவன் எல்லா முட்களையும் கூட்டி ஒரு இடத்தில் ஒதுக்கிவைத்து நெருப்பு வைத்து முட்களை சாம்பலாக்கி விடுகிறான். பின்பு தான் அவ்வழியே நடந்து தெருவின் மறுபகுதிக்கு வந்துவிடுகிறான்.

### ஆய்வின் முடிவு

சோதனை முடிந்ததும் ஆசிரியர், மூன்றாவது மாணவனுக்கு பயிற்சி மேற்கொண்டு தேவையில்லை. அவனுக்கு நான் அளித்த பயிற்சி முழுமை பெற்றுவிட்டது என கூறினார். மேலும் முதல் இரண்டு மாணவர்களும் மேற்கொண்டு என்னிடம் பயிற்சி பெறவேண்டும். அவர்கள் இருவரும் தங்களுடைய சுயநலத்தையே விரும்புகின்றனர். மூன்றாவது மாணவன் தான் மட்டும் பயன்பெற்றால் போதாது; சமுதாயமும் பயன்பெறவேண்டும் என்கிற நோக்கில் முட்கள் அனைத்தையும் எரித்து சாம்பலாக்கி மக்கள் அனைவரும் நடப்பதற்கு வழி ஏற்படுத்தி தருகிறான். மூன்றாவது மாணவனிடம் நல்லொழுக்கம் காணப்படுகிறது எனக் கூறுகிறார்.

### செயல்பாடு (1)

வகுப்பறை சூழலில் குழந்தைக்கு எவ்வாறு ஒழுக்கப் பயிற்சியினை ஆசிரியர் அளிக்கலாம்? ஆராய்க.

### விளக்கம்

சமூக வளர்ச்சிக்கு ஒழுக்கம் துணை செய்கிறது. கல்வியின் முக்கிய இலக்குகளை அடைய ஒழுக்கம் இன்றியமையாத சாதனம் ஆகும். ஒழுக்கப் பயிற்சி பள்ளி வாழ்க்கை முழுவதிலுமே தொடர்ந்து நடைபெற வேண்டும். மாணவர்களிடம் ஒழுங்கான நடத்தை இன்றி ஆசிரியரால் திறம்படக் கற்பிக்க இயலாது. ஒவ்வொரு மனிதனும் உலகில் தனித்து வாழத் தகுதி பெற்றிருந்தால் மட்டும் போதாது. சமூகத்திலுள்ள பிறருடன் கூடிவாழத் தகுந்த இயல்புகளையும் பெற்றிருத்தல் அவசியம். பிறருடன் கூடி இசைந்து வாழத் தெரியாதவன் பல கற்றும் கல்லாதவனேயாவான். சமூகத்தோடு இசைந்து பொருந்தக்கூடிய நடத்தை முறையை ஒருவனுக்கு ஒழுக்கம் அளிக்கிறது.

### செயல்பாடு (2)

பெற்றோர்களும், ஆசிரியர்களும் காலந்தவறாமையை கடைபிடிப்பதின் மூலம் மாணாக்கர்களும் அதை பின்பற்றி பார்த்து செய்தலுக்கு வழிவகை ஏற்படும்.

### விளக்கம்

குழந்தைகளிடம் நல்லொழுக்க வளர்ச்சி தனிப்பட்ட முயற்சியால் தோன்றுவதன்று. பெற்றோர்கள், ஆசிரியர்கள், சமுதாய மூத்தோர்கள் ஆகியோரது கூட்டு முயற்சியின் பலனாக ஏற்படுவது. ஒழுக்கப் பயிற்சியில் பார்த்து செய்தல் (Imitation) பெரும் பங்கு கொள்கிறது. மாணாக்கரிடம் அறப்பற்றுகள் வளர ஆசிரியர்கள் உதவ வேண்டும். ஆதலின் ஆசிரியர்

இப்பற்றுகள் உள்ளடங்கிய நற்பண்புகளைத் தாமே பெற்றிருப்பது மட்டுமின்றி அப்பண்புகளைப் பெறுதலை ஒரு குறிக்கோளாக மாணாக்கர் ஏற்கும் படியும் செய்ய வேண்டும்.

**செயல்பாடு (3)**

நற்பண்புகள் நிறைந்த பெரியோர்களுடைய தொடர்பை மாணாக்கர்களுக்கு ஏற்படுத்தி கொடுப்பதில் ஆசிரியர்களும் பெற்றோர்களும் முக்கிய கவனம் செலுத்த வேண்டும். இலக்கியங்களில் காணப்படும் உயரிய கருத்துக்களை அவர்கள் எடுத்துக்கூறலாம். பள்ளிகளில் நடைபெறும் இலக்கிய மன்ற விழாக்களில் பெரியோர்களை அழைத்து சிறப்புரை நிகழ்த்த ஏற்பாடு செய்யலாம். தேசிய விழாக்களான சுதந்திர தினவிழா, குடியரசு தினவிழா போன்ற விழாக்களில் நாட்டு சுதந்திரத்திற்காக போராடிய தியாகிகளை அழைத்து அவர்களை பங்கேற்க செய்யலாம்.

**விளக்கம்**

மேற்கூறிய ஒழுக்கப் பயிற்சிக்கான வாய்ப்புக்களை மாணாக்கர்களுக்கு அளிப்பதின்மூலம் அவர்கள் நல்லொழுக்கம் பெறமுடியும். மாணாக்கர் தாங்கள் கற்கும் நற்பண்புகள் குறிப்பிட்ட ஒரு நிலைமைக்கே பொருந்தும் என்று அவர்கள் தவறாக எண்ணிவிடாமல், வாழ்க்கையில் தோன்றும் எந்த சந்தர்ப்பத்துக்கும் அவை பொருந்தும் என எண்ணும்படி ஆசிரியர் செய்ய வேண்டும். எடுத்துக்காட்டாக, உண்மை பேசுதல் என்பது சில நிலைகளில் மட்டும் மேற்கொள்ள வேண்டியதன்று எனவும், வாழ்க்கை முழுவதும் எப்பொழுதும் மேற்கொள்ள வேண்டிய ஒரு பண்பாகும் என்பதும் மாணாக்கர் மனதில் பதிய வேண்டும்.

**செயல்பாடு (4)**

காலை இறைவணக்கக்கூட்டத்தில் எல்லா சமயங்களிலும் உள்ள பொதுவான கருத்துக்களை கூறலாம்.

**விளக்கம்**

நல்லொழுக்கமுள்ளவனால்தான் கடவுளின் அருளைப் பெறமுடியும் என்னும் கருத்தை எல்லா உலகச் சமயங்களும் வலியுறுத்துகின்றன. எல்லா சமயங்களில் உள்ள நற்கருத்துக்களை காலை இறைவணக்கக் கூட்டத்தில் மாணவர்களின் மூலமாக கூறச் சொல்வதின் வழியாக ஒழுக்கப் பயிற்சியினை மேம்படுத்தலாம். காலை இறைவணக்கக்கூட்டம் ஒழுக்கப் பயிற்சியினை மாணவர்களுக்கு அளிப்பதில் முக்கியப் பங்கு வகிக்கிறது. இறைவணக்கக் கூட்டத்தின் ஒவ்வொரு நிகழ்வும் மாணாக்கர்களுக்கு ஒழுக்கப் பயிற்சியினை அளிக்கின்றன. வரிசையாக நின்று அமைதி காத்தல், மரியாதை செலுத்துதல், பணிவாக இருத்தல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

**செயல்பாடு (5)**

வகுப்பறைச் செயல்பாடுகளின்போது அமைதிகாத்தல், ஆசிரியர்களிடம் பணிவுடன் நடந்துகொள்ளுதல், சக மாணவர்களிடம் அன்பாக பழகுதல், விளையாட்டின்போது நேர்மையை கடைப்பிடித்தல் போன்றவற்றில் பயிற்சியினை அளிக்கலாம்.

**விளக்கம்**

வகுப்பறையில் ஒழுக்கப் போதனையின் (Moral Instruction) மூலமாக மாணாக்கரிடம் அறப்பற்றுகள் செயற்பட வாய்ப்பளிக்க வேண்டும். பள்ளியிலுள்ள கூட்டு வாழ்க்கை ஒழுக்க வளர்ச்சிக்கு பெரிதும் உதவுகின்றன.

மாணாக்கர்களுக்கு ஒழுக்கப் பயிற்சியினை அளிப்பதில் பள்ளி ஆசிரியர்களுடன் அவர்களுடைய பெற்றோர்களும் ஒத்துழைக்க வேண்டுவது அவசியம். மாணாக்கரின் குடும்பச் சூழ்நிலை அவர்களது ஒழுக்க வளர்ச்சியை பெரிதும் பாதிக்கிறது. நல்ல பண்புள்ள குடும்பங்களில் இருந்து வரும் மாணாக்கர் சிரமமின்றி நல்ல ஒழுக்கத்தைப் பெறுகின்றனர். ஆனால் சீரழிந்த, குடும்பச் சூழ்நிலையில் வளரும் குழந்தைகள் ஒழுக்கம் சிதைந்து வளருகிறார்கள். ஒழுக்கப் பயிற்சியில் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களது சிறந்த முன்மாதிரி நடத்தை மாணாக்கர்களது நல்லொழுக்கத்திற்கு இன்றியமையாதது. இதில் தங்களுக்குள்ள பொறுப்பைப் பெற்றோர்களும் ஆசிரியர்களும் உணர்ந்து செயல்படவேண்டும்.

### குறிப்பு

செயல்பாடுகளின் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளை கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வேறுபாடு உள்ளதா? விவாதித்து அறியவும்.

## 3. நேர்மை (Honesty)

### செயல்பாடு (1)

கீழே ஏதேனும் பொருட்கள் கிடந்தால் அதை மாணவன் உரியவரிடம் சேர்க்கிறானா?

நேர்மையாக இருப்பதின் முக்கியத்துவம் குறித்து இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக. இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

### விளக்கம்

ஒவ்வொரு தனிமனித வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் நாம் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள், மதிப்புணர்வுகள் உள்ளன. அவை ஒருவரின் ஆளுமை, சமுதாயத்தில் அவரது நிலை ஆகியவற்றை நிர்ணயம் செய்கின்றன. அத்தகைய நெறிமுறைகளில் நேர்மையும் அடங்கும். மேற்கூறிய செயல்பாட்டில் ஒரு மாணவன் தான் கண்டெடுத்த பொருளை உரியவரிடம் சேர்க்க வேண்டும் என்கிற பண்பை அவனிடம் வளர்க்க வேண்டும். ஒரு மனிதன் நேர்மையாக இருந்தால் சமுதாயம் அம்மனிதனை ஏற்றுக்கொள்கிறது. மற்றவர்களை சமுதாயம் ஒதுக்கிவிடுகிறது.

### செயல்பாடு (2)

ஒரு மாணவன் தேர்வின் போது அருகில் இருக்கும் மாணவர்களைப் பார்த்து எழுதுகிறானா?

### விளக்கம்

தேர்வின்போது தனக்கு என்ன தெரியுமோ அதை எழுத வேண்டும். தனக்கு தெரியவில்லை என்பதற்காக பிறரை பார்த்து எழுதக்கூடாது. நேர்மையாகதான் இருக்கவேண்டும் என்பதற்கான காரணங்களை பள்ளியில் ஆசிரியர்களும் வீட்டில் பெற்றோர்களும் தங்கள் குழந்தைகளுக்கு எடுத்துக்கூறினால் அது நல்ல பலனை அளிக்கும். ஆசிரியர்களும் பெற்றோர்களும் முன்மாதிரியாக செயல்பட்டால் மாணவர்கள் நேர்மையை பின்பற்ற வாய்ப்புக்கள் ஏற்படும்.

### செயல்பாடு (3)

மாணவர்கள் எப்போதும் நேர்மையாக உள்ளார்களா? அல்லது சில சமயங்களில் நேர்மையாகவும் மற்றும் சில சமயங்களில் நேர்மையில்லாமலும் இருக்கிறார்களா? என்பதனை ஆசிரியர், மாணவர்களை உற்று நோக்கி அறிந்துகொள்ளலாம்.

### விளக்கம்

மாணவர்கள் எப்போதும் எந்த சூழ்நிலையிலும் நேர்மையாகவே செயல்பட வேண்டும் என்கிற கருத்தை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு வலியுறுத்த வேண்டும். நேர்மையாக இருப்பதின் முக்கியத்துவத்தை எடுத்துக்கூற வேண்டும். ஆசிரியர்கள் அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் நிகழ்ச்சிகளில் இருந்தும், இலக்கியங்களில் இருந்தும் சில எடுத்துக்காட்டுக்களை, மாணவர்களுக்கு எடுத்துக் கூறலாம். நேர்மையாக செயல்படுவது ஒருவனை அவனது வாழ்க்கையில் முன்னேற்ற பாதையில் அழைத்து செல்லும். சமுதாயத்தில் சிறந்த இடத்தினை பெறமுடியும் என்பது போன்ற கருத்துக்களை ஆசிரியர் மாணவர்களுக்குக் கூறலாம்.

### குறிப்பு

செயல்பாடுகளின் மேற்குறிப்பிட்ட விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளை கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியவும்.

## 4. தர்மசிந்தனை (Generosity)

### செயல்பாடு

பழங்காலத்தில் பல்வேறு மதத்தினரின் வணக்கவழிபாட்டு தலங்களுக்கு மன்னர்கள் நிலங்களையும், கட்டிடங்களையும் தானமாகக் கொடுத்துள்ளனர். மக்கள் பண்டிகைகளையும், விழாக்கள் கொண்டாடுதலையும் மன்னர்கள் ஆதரித்தனர். தேரோட்டம் போன்றவற்றை முன்னின்று நடத்தி காண்பித்தனர். இதன் காரணமாக தர்ம சிந்தனை மக்களிடம் மேலோங்க வழிவகை செய்தனர். மன்னனை நாடி வரும் கவிஞர்களுக்கும், ஏழை எளியவர்களுக்கும் மன்னர்கள் பொன்னையும், பொருளையும், தர்மமாகக் கொடுத்துள்ளனர்.

### விளக்கம்

ஏழை எளிய மாணவர்களுக்கு பணம், பொருள் ஆகியவற்றை கொடுத்து உதவும் பண்பு தர்மம் எனலாம். பிறருக்கு உதவி செய்யும் மனப்பாங்கினை **தர்மசிந்தனை** என்றும் குறிப்பிடலாம். மன்னர்களிடம் தர்மசிந்தனை அதிகமாக காணப்பட்டதை மேற்கூறிய நிகழ்ச்சிகளின் மூலமாக அறிய முடிகிறது. இப்பண்பினை சமூகப்பணி போன்ற பள்ளி செயல்பாடுகளில் மாணவர்களுக்கு வாய்ப்புக்கள் அளித்தல் மூலம் வளர்ச்சி அடையச் செய்யலாம்.

### செய்முறை

மாணவர்களிடம் எந்த அளவுக்கு தர்மசிந்தனை காணப்படுகிறது என்பதனை ஒவ்வொரு மாணவரிடம் இருந்தும் தனியாள் அறிக்கை (Case Report) மூலமாக விவரங்களைக் கேட்டுப் பெறலாம்.

## 5. குழந்தைகளுக்கான வீரர்கள் (Children's Heroes)

### செயல்பாடு (1)

தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் வருகிற 'சிலந்தி மனிதன்' செய்யும் வீரசாகசங்களை ஒரு சிறுவன் பார்த்து, உண்மை என்று நம்பி தானும் அவ்வாறே செய்ய முற்பட்டு தனது வீட்டு மாடியில் இருந்து கீழே குதித்து இறந்து விட்டான்.

**விளக்கம்**

மேற்கூறிய நிகழ்ச்சியில் எது உண்மை என்பது அச்சிறுவனுக்கு தெரியவில்லை. அந்நிகழ்ச்சிக்கு அச்சிறுவனின் அறியாமைதான் முழுக்காரணமாக இருக்கிறது. சிறுவர்கள் தொலைக்காட்சியில் வரும் இதுபோன்றவர்களின் செயல்களை பின்பற்றாமல் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டுதலுடன் செயல்பட வேண்டும்.

**செயல்பாடு (2)**

தாய் தனது ஐந்து வயது சிறுவனுடன் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தாள். குளத்தின் படிகாட்டில் நின்று குளித்துக் கொண்டிருந்த குழந்தை தவறி குளத்தில் விழுந்துவிட்டது. அருகில் நின்றிருந்தவர்கள் குளத்தில் குதிப்பதற்கு தயங்க உடனேயே அங்கு நின்றிருந்த பத்துவயது சிறுவன் குளத்தில் குதித்து அந்த ஐந்து வயது சிறுவனைக் காப்பாற்றி தாயிடம் ஒப்படைக்கிறான்.

**விளக்கம்**

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் குளத்தின் கரையோரமாக நின்று குளித்துக்கொண்டிருந்த தாய் தனது குழந்தை தவறி நீரில் விழுந்ததும் தனக்கு நன்றாக நீச்சல் தெரியாத காரணத்தினால் என்ன செய்வதென்று தெரியாமல் சப்தமிடுகிறாள். அருகில் நின்றிருந்தவர்களுக்கும் நீரில் குதிப்பதற்கு துணிச்சல் ஏற்படவில்லை. ஆனால் பத்து வயது சிறுவன் எதைப் பற்றியும் சிந்திக்காமல் மனஉறுதியுடன் நீரில் குதித்து ஐந்து வயது குழந்தையைக் காப்பாற்றுகிறான். பத்து வயது சிறுவனுக்கு நீச்சல் நன்றாக தெரியும். அதோடு மட்டுமில்லாமல் அவனிடம் அந்த குழந்தையைக் காப்பாற்றியாக வேண்டும் என்கிற உணர்வு மேலோங்கிக் காணப்பட்டது.

சூழ்நிலைக் கேற்றவாறு பய உணர்வு சற்றும் இல்லாமல் மனஉறுதியுடன் சில செயல்களை வீரத்துடன் மேற்கொள்வது தைரியம் என்று கூறலாம். அவ்வாறு மேற்கொள்ளப்படும் செயல்பாடுகளை வீரசாகசங்கள் என்றும் கூறலாம்.

வீரசாகசங்கள் புரிபவரிடம் துணிச்சல் மிகுந்து காணப்படும். மனவலிமை மிகுந்து காணப்படுவர். அவர்கள் தங்கள் உயிரைப் பொருட்படுத்தாது செயல்களில் ஈடுபடுவர். மேற்குறிப்பிட்ட செயல்பாட்டில் பத்துவயது சிறுவன் குழந்தைகளுக்கான வீரனாக (Children's Heroes) திகழ்கிறான்.

**செய்முறை**

உங்களுக்கு தெரிந்த வீரச்செயல் ஏதேனும் ஒன்றை குறிப்பிடுக.

## 6. இலட்சியம் (Ideals)

**செயல்பாடு**

ஒரு கால்பந்தாட்ட அணிகளத்தில் முழு உற்சாகத்துடன் விளையாட இருக்கும்போது கோல்கம்பங்களை யாரோ அங்கிருந்து பெயர்த்துச் சென்று விடுகின்றனர் என்று வைத்துக்கொள்ளுங்கள். அந்த ஆட்டம் என்னவாகும்? அங்கேதான் ஒன்றுமே இல்லையே, நாம் எப்படி கோல் அடிப்பது? நாம் லட்சியத்தை அடைய நெருங்கி விட்டோம் என்பதை நாம் எப்படி அறிவது? திசையே இல்லாத உற்சாகம் காட்டுத் தீ போன்றது. அது விரக்தியில் கொண்டுபோய் விட்டுவிடும். லட்சியங்களே நாம் ஒரு திசையில் போய்க்கொண்டிருக்கிறோம் என்ற உணர்வைத் தரும்.

ஒரு இரயிலிலோ அல்லது பேருந்திலோ, அது எங்கே போகிறது என்பதைத் தெரிந்து கொள்ளாமல் ஏறி அமர்வீர்களா? இல்லை என்பதே இதற்கான நிச்சயமான பதிலாகும். அப்படி என்றால் மக்கள் ஏன் லட்சியமே இல்லாமல் வாழ்க்கையை நடத்துகிறார்கள்?

**விளக்கம்**

லட்சியங்களைக் குறிக்கோள்கள் என்றும் குறிப்பிடலாம். லட்சியம் என்பது ஒரு செயல்திட்டத்தோடு கூடிய கனவாகும். அந்த கனவினை நனவாக்க நிச்சயமான, தெளிவாக எழுதப்பட்ட லட்சியத்தை வைத்திருங்கள். அதை நிறைவேற்ற ஒரு திட்டத்தை வைத்திருங்கள். அதை செயல்படுத்துங்கள். ஒருவருடைய லட்சியம் நல்லொழுக்கத்தின் அடிப்படையில் அமைதல் வேண்டும். அதனால் தனக்கும், மற்றவர்களுக்கும் நன்மை பயக்க வேண்டும்.

மகாத்மா காந்தி தனது லட்சியமாக அஹிம்சையை வைத்திருந்தார். அதற்கு அடுத்த படியாக உண்மையைக் கடைப்பிடித்தார். தனது லட்சியத்தை நிறைவேற்றுவதற்குப் பல தலைவர்களை ஒருங்கிணைத்து மக்களுடன் ஒன்று சேர்ந்துச் சுதந்திரத்துக்காகப் போராடினார். அதில் வெற்றியும் பெற்றார்.

ஏன் பலர் லட்சியங்களை அமைத்துக் கொள்வதில்லை?

இதற்குப் பல காரணங்கள் உள்ளன. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

1. ஒரு நம்பிக்கையற்ற மனப்பாங்கு – எப்போதுமே வாய்ப்புக்களைவிட பிரச்சனைகளையே பார்ப்பது.
2. தோல்வி பற்றிய பயம்
3. பேராவல் இன்மை
4. புறக்கணிக்கப்படுவோம் என்கிற பயம்.
5. தள்ளிப்போடுதல்
6. தாழ்ந்த சுயமதிப்பு
7. லட்சியங்களின் முக்கியத்துவம் பற்றி அறியாமை
8. லட்சியங்கள் அமைத்தல் பற்றிய அறிவின்மை.

லட்சியம் அமைத்தல் என்பது பல்வேறு படி நிலைகள் கொண்டது. நீங்கள் ஒரு இரயில் டிக்கட்டை வாங்கும்போது அதில் என்ன பார்க்கிறீர்கள்?

1. பயணம் தொடங்கும் இடம்
2. சேருமிடம்
3. பயண வகுப்பு
4. கட்டணம்
5. பயணம் தொடங்கும் நாள்

**லட்சியம் பின்வருமாறு இருக்கலாம்**

1. குறுகிய கால லட்சியம் – ஓர் ஆண்டு வரைக்கும்.
2. இடைக்கால லட்சியம் – மூன்று ஆண்டுகள் வரைக்கும்.
3. நீண்டகால லட்சியம் – ஐந்து ஆண்டுகள் வரைக்கும்.

லட்சியம் ஐந்து ஆண்டுகளுக்கு மேலானதாகவும் இருக்கலாம். அப்போது அவை வாழ்வின் லட்சியமாகிவிடும். லட்சியத்தைச் சிறுசிறு பகுதிகளாகப் பிரித்துக்கொண்டால், அவற்றை மிக எளிதில் அடைந்துவிடலாம்.

### செயல் திட்டம்

1. தெளிவான லட்சியத்தை வகுத்துக்கொள்ளுங்கள்.
2. அவற்றை எழுதிவைத்துக்கொள்ளுங்கள்.
3. தினமும் அவற்றைக் காலையிலும் இரவிலும் படியுங்கள்.
4. உங்கள் லட்சியம் சற்று கைக்கு எட்டாத தூரத்தில் இருக்கட்டும். பார்வைக்கு எட்டாத தூரத்தில் அல்ல.
5. உங்கள் முன்னேற்றத்தைத் தொடர்ந்து கண்காணித்து மதிப்பீடு செய்யுங்கள்.

## 7. ஒழுங்கு என்பதன் பொருள் (Meaning of Discipline)

### செயல்பாடு

ஒரு சமயம், ப்ளெய்ஸ் பாஸ்கல் என்கிற பிரபல பிரெஞ்சு நாட்டுத் தத்துவ மேதையை ஒருவர் அணுகி, ''எனக்கு மட்டும் உங்களுடைய மூளை இருந்திருந்தால், நான் ஒரு சிறந்த மனிதனாக இருந்திருப்பேன்'' என கூறினார். அதற்கு பாஸ்கல், ''முதலில் நீங்கள் சிறந்த மனிதராக இருங்கள். உங்களுக்கு எனது மூளை வந்துவிடும் என பதிலளித்தார்.''

### விளக்கம்

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியையே ஒழுங்கான நடத்தைக்கு உதாரணமாகக் கூறலாம். ஒருவனிடம் ஒழுங்கான நடத்தை இருந்தால் சமூகம் அவனை அங்கீகரிக்கிறது. ஒருவனிடம் ஒழுங்கான நடத்தை இல்லை என்றால் சமூகம் அவனைப் புறக்கணித்து விடுகிறது. இதையே இன்னொரு விதமாகக் கூறுவதனால், ஒழுங்கான நடத்தை தனிமனித நலத்துடன் சமூக நலத்தையும் பேணுகிறது.

ஒழுங்கு என்பதன் பொருளைப் பின்வருமாறு வரையறுத்து கூறலாம்.

ஒழுங்கு எனப்படுவது தன்னைத் தானே கட்டுப்படுத்தி கொள்வதின் (Self Control) விளைவாக எழும் நன்னடத்தையாகும்.

உலகில் தனித்து வாழ்வதற்குத் தேவையான திறன்களை மட்டும் ஒவ்வொருவரும் பெற்றிருந்தால் போதுமானது அன்று. சமூகத்தில் பிறருடன் கூடிவாழத்தகுந்த இயல்புகளையும் பெற்றிருத்தல் அவசியம். சமூகத்தோடு இசைந்து பொருந்தக்கூடிய நடத்தையைப் பெற ஒழுங்கானது உதவுகிறது. ஒழுக்கவளர்ச்சியும் (Moral Development), ஒழுங்கு நிலையும் (Level of Discipline) ஒன்றுடன் ஒன்று இணைந்தவை.

## 8. ஒழுங்கின் முக்கியத்துவம் (Essentials of Discipline)

### செயல்பாடு

ஜானியும் ஜிம்மியும் உடன் பிறந்த சகோதரர்கள். ஜானி தனது அம்மாவிடம் ''ஜிம்மி ஜன்னலை உடைத்துவிட்டான்'' என்று சொன்னான். அதற்கு அம்மா, ''அவன் எப்படி உடைத்தான்'' என்று கேட்டாள். அதற்கு ஜானி, ''நான் அவன் மேல் ஒரு கல்லை விட்டெறிந்தேன். அவன் குனிந்து கொண்டான்'' என பதிலளித்தான்.

**விளக்கம்**

மேற்குறிப்பிட்ட செயலில் ஜானி தான் செய்த தவறுக்குப் பொறுப்பேற்கவில்லை. மாறாகப் பழியை தனது உடன் பிறந்த சகோதரன் ஜிம்மி மீது போடுகிறான். இன்றைய சமுதாயத்தில் காப்புணர்வின்மை, குடும்ப ஒற்றுமைச் சிதைவு, சமயப் பற்றின்மை, சமூகத்தில் முதியவர்களது கட்டுப்பாடற்ற நடத்தை போன்றவை மாணவர்களின் ஒழுங்கீன நடத்தைக்குக் காரணமாக அமைகின்றன.

அக்காலத்தில் ஒழுங்கு என்பது வகுப்பில் சந்தடியின்றி அமைதியாக இருத்தலே என்று எண்ணினர். மாணவர்கள் வெளித்தோற்றத்தில் அமைதியாக இருப்பின் அதுவே போதுமானது என்று கருதினர் மற்றும் ஆசிரியர் சொல்லுக்கு எதிர் சொல்லின்றி உடனடியாகக் கீழ்படிதலே ஒழுங்கு பயிற்சி பெற்ற மாணவனின் அடையாளம் என்றும் கருதினர். இத்தகைய நிலையை நடைமுறையில் கொண்டுவர கட்டாயப்படுத்துதல், தண்டனை போன்ற புறக்கட்டுப்பாடுகளையே அக்கால ஆசிரியர் பெரிதும் நம்பினர்.

ஆனால் ஒழுங்கு பற்றிய தற்காலக்கருத்து இதனின்றும் மாறுபட்டதாகும். தற்காலத்தில் ஒழுங்கு முறையின் நோக்கம் நற்பழக்கங்கள், சரியான மனப்பாங்குகள், சீரிய ஒழுக்கம் ஆகியவை அடங்கிய முழுமையான ஆளுமையை மாணவர்கள் பெற உதவுதல் ஆகும். இத்தகைய ஒழுங்குநிலை தோன்ற இப்போது ஆசிரியர்கள் தண்டனைகள் போன்ற புறக்கட்டுப்பாடுகளைப் பயன்படுத்த முற்படுவதில்லை. இத்தகைய ஒழுங்குநிலை மனதிலிருந்து எழுவதாகும் என்னும் உண்மையை நாம் உணர்ந்துள்ளோம்.

மாணவர்களிடையே நிலவும் ஒழுங்கின்மையைக் களைய பின்வரும் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தலாம்.

1. பள்ளிக்கு ஒழுங்காக வருதல், பள்ளிச் செயல்களில் ஆர்வத்துடன் பங்குபெறுதல், நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்துதல், விளையாட்டில் பங்கு பெறுதல் போன்ற செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதின் மூலம் அவர்களிடம் காணப்படும் ஒழுங்கின்மையைத் தடுக்க இச்செயல்பாடுகள் உதவும்.
2. ஆசிரியர் மாணவர் உறவு மேலும் நெருக்கமானதாக அமைதல் அவசியமாகும்.
3. ஓய்வு நேரங்களைப் பயன்தரத்தக்க வழிகளில் செலவிட மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல் அவர்களிடம் ஒழுங்கினை வளர்க்கும்.
4. சமய அறநெறிக்கல்வியும் ஒழுங்கின்மையை களைவதற்கு உதவும்.
5. பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கையை ஓரளவாவது கட்டுப்படுத்த வேண்டும். அப்போதுதான் ஆசிரியர்களால் மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டுதலை வழங்கி அவர்களுக்கு ஒழுங்கின் முக்கியத்துவத்தை உணர்த்த முடியும்.

## 9. ஒழுக்க வளர்ச்சியில் தகவல் ஊடகங்களும் அவற்றின் தாக்கமும்

**(Media and their influences on moral development)**

புத்தாண்டு தினத்தன்று மும்பை நட்சத்திர ஓட்டல் ஒன்றில் இரண்டு பெண்கள் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டனர். இளைஞர்கள் புத்தாண்டு தினத்தைக் கொண்டாடுகிறோம் என கூறிக்கொண்டு சாலையில் செல்லும் பெண்களைக் கேலியும் கிண்டலுக்கும் உள்ளாக்குகின்றனர். பெண்களின் மனநிலையை பாதிப்படையச் செய்கின்றனர்.

**விளக்கம்**

பெண்கள் கொடுமைப்படுத்துவதற்கு யார் காரணமாக இருக்கிறார்களோ அவர்கள் தண்டிக்கப்படவேண்டும். மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியினைப் பத்திரிகைகளிலும், தொலைக்காட்சியிலும் வெளியிடப்படும்போது ஒழுக்க வளர்ச்சிக்கு பாதிப்பு ஏற்படாதவாறு மிகவும் கவனமுடன் செயல்படவேண்டும். மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில், நிகழ்ச்சியின் கொடூரத்தை, பாதிக்கப்பட்டதின் தன்மையை விரிவாக எடுத்துரைக்க வேண்டும். வார்த்தைகளைக் கையாளும்போது ஆபாசமின்றி நாகரீகமாக கையாள வேண்டும்.

ஒழுக்க வளர்ச்சியில் செய்தித்தாள்கள், வானொலி, கணினி, தொலைக்காட்சி ஆகியவை முக்கிய பங்கு பெறுகின்றன. ஒழுக்கத்தை சிதைக்கும் கருத்துக்கள் அடங்கிய நாடகங்கள், பாடல்கள் ஆகியவற்றைத் தகவல் ஊடகங்கள் ஒலிபரப்பாதவாறு அரசு விதிமுறைகளை வகுத்து நடைமுறைப் படுத்தவேண்டும். ஏனெனில் மாணவனின் கற்றல் பள்ளிக்கு வெளியேயும் நடைபெறுகிறது. நகரங்களில் மட்டுமின்றி பெரும்பாலான கிராமங்களில் குழந்தைகள் பள்ளியை விட்டு வீட்டிற்கு வந்ததும் தொலைக்காட்சி பெட்டியின் முன்பு அமர்ந்து விடுகின்றனர். வீட்டில் குழந்தைகளைப் பெற்றோர் நெறிமுறைப்படுத்த வேண்டும். அவ்வப்போது பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலமாக பள்ளியில் கூட்டங்களைக் கூட்டி மாணவர்களின் தேர்ச்சி விகிதம், நடத்தை ஆகியவற்றை குறித்து கலந்துரையாடலாம்.

**செயல்பாடு**

பள்ளிகளில் நடைபெறும் இலக்கியமன்ற நிகழ்ச்சிகள், கதைகள், பாடல்கள், உரையாடல்கள், பட்டிமன்றங்கள், கிராம நலப்பணிகள், விளையாட்டு போட்டிகள், சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபடுதல், கண்காட்சி அமைத்தல், விழாக்கள் கொண்டாடுதல் போன்றவற்றைப் பத்திரிகை செய்திகளின் வாயிலாகவும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் மூலமாகவும் ஒளிபரப்புவதின் வழியாக மாணவர்களிடம் ஒழுக்க வளர்ச்சியை மேம்படுத்தலாம்.

**விளக்கம்**

மேற்குறிப்பிட்டவாறு இளம் வயதில் நன்னெறிகள், மதிப்புணர்வுகள், பண்பாடுகள் வளர்வதற்கான வாய்ப்புக்களை பள்ளியில் மட்டுமில்லாது வீட்டிலும், சமுதாயத்திலும் ஏற்படுத்தித் தந்தால் அது நிரந்தரமாக மாணவர்கள் மனதில் பசுமரத்தாணி போன்று பதியும். தங்களது நன்னடத்தைக்கும், சிறந்த பண்பாட்டுக்கும் மற்றவர்கள் மரியாதை தருகிறார்கள், போற்றுகிறார்கள் என்கிற உணர்வு அந்த நற்செயல்களை மீண்டும், மீண்டும் செய்வதற்கு வழிவகுக்கும். அதற்கான வாய்ப்புக்களை தகவல் ஊடகங்கள் ஏற்படுத்தித் தரவேண்டும்.

## 10. தொகுப்புரை

உயிரினங்களுள் மனிதனிடம் மட்டுமே ஒழுக்கப்பண்புகளெனப்படுவன காணப்படுகின்றன. கல்வியின் முக்கிய நோக்கங்களுள் ஒன்று மாணாக்கர்களிடையே நல்லொழுக்க வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அளித்தலாகும். மற்ற நிலைகளைவிட ஆரம்பக்கல்வி நிலையில்தான் மாணவர்களிடம் நல்லொழுக்கத்திற்கான விதைகளை ஊன்ற முடியும்.

பள்ளிகளில் நடைபெறும் காலை இறைவணக்கம் கூட்டம் மாணவர்களிடம் ஒழுக்க வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை அளிக்கும் இடமாக அமைந்துள்ளது. காலை இறைவணக்கக்

கூட்டத்தில் உள்ள ஒவ்வொரு செயல்பாடும் மாணவர்களின் நல்லொழுக்க வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கிறது.

குடும்பத்தின் செல்வாக்குகள், குடும்ப உறுப்பினர்களது நல்லொழுக்கப் பண்புகள் மற்றும் பள்ளியின் செல்வாக்குகள் ஆகியவற்றின் விளைவாக உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள்களையும், அறக்கருத்துக்களையும் தமது உள்ளத்தே அமைத்து இவற்றிற்கேற்ற முறையில் நடந்துகொள்ளும் பழக்கத்தைக் குழந்தை அடைதல் ஒழுக்கவளர்ச்சி எனலாம்.

ஒழுக்க வளர்ச்சியில் பற்றுகள் முக்கிய பங்கு வகிக்கிறது. பற்றுகளை மனப்பான்மைகள் என்றும் குறிப்பிடலாம். பற்றுகள் என்பவை அனுபவங்கள், கற்றல் போன்றவற்றின் விளைவுகளாகும். ஒருவனது விருப்பங்கள் (Likes or Love), வெறுப்புகள் (Dislikes or hates) ஆகியன இப்பற்றுகளாகும். பற்றுகள் மனவெழுச்சி கலந்த மனநிலைகளாகும். (Emotional Dispositions)

ஒழுக்கம் அதனின்றும் தோன்றும் நடத்தையும் பற்றுகளைப் பொறுத்தனலாகும். "ஒழுக்கக்கல்வி எனப்படுவது பல்வேறு அறப்பற்றுகளை வளர்த்துகொள்ள குழந்தைகளுக்கு உதவுவதலும் இவற்றை வலுமிக்க ஆக்கநிலையில் அமைந்த தற்கருத்தின் அடிப்படையில் பயிற்சியளித்தலும் ஆகும்" எனலாம். குழந்தை ஒழுக்கப் பண்புகளுடன் பிறப்பதில்லை. அவை வளர்ச்சியின் விளைவுகளாகும். ஒழுக்க வளர்ச்சியின் மூன்று நிலைகள் பின்வருவன.

1. நடைமுறை வழக்குக்கு முற்பட்டநிலை (Preconventional stage)
2. நடைமுறை வழக்கு நிலை (Conventional Stage)
3. நடைமுறை வழக்குக்கு பிந்திய நிலை (Post conventional stage)

ஒழுக்க நடத்தையில் மனச்சாட்சி (conscience) என்னும் உள்ளுணர்வு இன்றியமையாப் பங்கினைப் பெற்றுள்ளதாகும். சமூக வளர்ச்சிக்கு ஒழுக்கம் துணை செய்கிறது. ஒழுக்க வளர்ச்சியும், சமூக வளர்ச்சியும் இணைந்தவை, ஒரு மனிதனின் ஒழுக்கத்தை அவன் யாருடன் சேர்ந்திருக்கிறான் என்பதை வைத்து மட்டுமில்லாமல், அவன் யார் யாருடன் சேர்வதை தவிர்கிறான் என்பதையும் வைத்தே முடிவெடுக்க முடியும்.

காலை இறைவணக்கக் கூட்டத்தின் ஒவ்வொரு நிகழ்வும் மாணாக்கர்களுக்கு ஒழுக்கப் பயிற்சியினை அளிக்கின்றன. வரிசையாக நின்று அமைதி காத்தல், மரியாதை செலுத்துதல், பணிவாக இருத்தல் போன்றவற்றை குறிப்பிடலாம். வகுப்பறையில் ஒழுக்கப்போதனை மூலமாகவும், சகமாணவர்களுடன் அன்பாக பழகுதல், விளையாட்டின்போது நேர்மையை கடைப்பிடித்தல் போன்றவை மூலமாகவும் மாணவர்களுக்கு ஒழுக்கப் பயிற்சியினை அளிக்கலாம்.

ஒழுக்கப் போதனையில் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு நேர்மை, தர்ம சிந்தனை, தைரியம், லட்சியம் போன்றவற்றில் நிகழ்ச்சிகளையோ, கதைகளையோ கூறி பயிற்சி அளிக்கலாம். ஒழுக்கமும், ஒழுங்கும் ஒன்றோடொன்று இணைந்தவை. குழந்தைகளின் ஒழுக்கம் தனிப்பட்டு நிகழ்வதில்லை. ஒழுக்கம் என்பது அம்மாணவனுடைய அறிவு வளர்ச்சி, மனவெழுச்சிகளது வளர்ச்சி, சமூகப் பண்புகளது வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்தே நிகழ்வதாகும். ஒழுங்கு எனப்படுவது தன்னைத்தானே கட்டுப்படுத்திக் கொள்வதின் விளைவாக எழும் நன்னடத்தையாகும். அக்காலத்தில் மாணவர்கள் வெளித்தோற்றத்தில் அமைதியாக இருப்பின் அதுவே போதுமானது என்று கருதினர். தற்போது ஒழுங்கு என்பது மனதிலிருந்து எழுவதாகும் என்னும் உண்மை உணரப்பட்டுள்ளது.

ஒழுக்க வளர்ச்சியில் செய்தித்தாள்கள், வானொலி, கணினி, தொலைக்காட்சி ஆகியவை முக்கிய பங்கு வகிக்கின்றன. ஏனெனில் மாணவனின் கற்றல் பள்ளிக்கு வெளியேயும் நடைபெறுகிறது. பள்ளிகளில் நடைபெறும் இலக்கியமன்ற நிகழ்ச்சிகள், விழாக்கள், கண்காட்சிகள், விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றை தகவல் ஊடகங்கள் வெளியிட வேண்டும். இதுபோன்று, இளம் வயதில் நன்னெறிகள், மதிப்புணர்வுகள், பண்பாடுகள் வளர்வதற்கான வாய்ப்புக்களை பள்ளியில் மட்டுமின்றி வீட்டிலும், சமுதாயத்திலும் ஏற்படுத்தித் தந்தால் அது மாணவர்களின் ஒழுக்க வளர்ச்சியினை மேம்படுத்தும்.

## செய்முறை

1. பள்ளிகளில் நடைபெறும் காலை இறைவணக்கக் கூட்டத்தின்போது கிடைக்கும் ஒழுக்க வளர்ச்சிக்கான அனுபவங்களை நீங்கள் எந்த அளவிற்கு பின்பற்றுகிறீர்கள் என்பது குறித்து இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக.
2. வீட்டில் ஏற்படும் பிரச்சனைகளின் தாக்கத்தை பள்ளிக்கு வந்த உடன் எவ்வாறு வெளிப்படுத்துவீர்கள். அப்பிரச்சனைகள் உங்களிடம் ஏதேனும் ஒழுங்கின்மையை தோற்றுவிக்கிறதா? இது குறித்து இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு வரைக.
3. ஒரு மனிதன் நேர்மையாக இருந்தால் சமுதாயம் ஏற்றுக்கொள்கிறது. மற்றவர்களை சமுதாயம் ஒதுக்கிவிடுகிறது. ஏன்? இது குறித்து இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக.
4. வகுப்பில் எவரேனும் இரண்டு குழந்தைகளை எடுத்துக்கொண்டு அக்குழந்தைகள் எவ்வகை நடத்தை கொண்டவர்களிடம் பழகுகிறது? என்பது பற்றி ஆராய்ந்து இரண்டு பக்க அளவிலான குறிப்பு எழுதுக.

# அலகு – 6
# குமரப் பருவம்
## 1. முன்னோக்கு

மனித வளர்ச்சியில் ஒவ்வொரு பருவத்திலும் ஒருவருடைய உடல், மனவளர்ச்சி, நடத்தை மற்றும் செயல்பாடுகளில் மாறுதல் ஏற்படுகின்றது. அவற்றில் பின் இளம்பருவம் என்னும் முன் குமரப்பருவம் நிறைய பிரச்சினைகள் நிறைந்ததாகவும், அவற்றிற்குத் தீர்வு காணக்கூடிய முக்கியமான பருவமாகவும் உள்ளது.

உடலில் ஏற்படக்கூடிய பாலினத்தன்மை, வளர்ச்சி மாற்றங்கள், மனவெழுச்சி மற்றும் சமூக நடத்தை மாற்றங்கள் ஆகியன முன் வளர் இளம்பருவத்தில் உள்ள ஒரு ஆண் அல்லது பெண்ணை நிறையாளுமை உள்ளவராகவோ அல்லது குறையாளுமை உள்ளவராகவோ மாற்றக்கூடும். கல்வி கற்பதில் இதன் தாக்கம் அதிகமாக இருக்கும். இப்பருவத்தில் உடல், உள்ளம் மற்றும் சமூகத்தின் வாயிலாக எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் துன்பங்களை எவ்வாறு வெற்றிகரமாகக் கையாண்டு மனவெழுச்சியில் சமநிலையையும், முதிர்ச்சியையும் பெறலாம் என்பதை இனி அறியலாம்.

## 2. குமரப்பருவ வளர்ச்சிகள்

பிள்ளைப் பருவத்திற்கு அடுத்த வளர்ச்சிப் பருவமே குமரப்பருவம் அல்லது வளரிளம் பருவம் என்றழைக்கப்படுகின்றது. பிள்ளைப் பருவத்திலிருந்த ஒருவன் இனப்பெருக்கச் சக்தியைப் பெறும் பொழுது குமரப் பருவத்தை அடைகின்றான். பிற பருவத்தினரிடம் காணப்படாத வகையில் தனிப்பட்ட உடல், மனவெழுச்சி மற்றும் அறப்பண்புகள் இப்பருவத்தில் காணப்படும். இந்தப் பருவத்தில் இவனை ஒரு குழந்தையாகக் கருத முடியாது. பிற பருவத்தினரிடமிருந்து இவனைப் பிரித்துக் காட்டக் கூடிய சில பண்புகள் பற்றி இனி காண்போம்.

### அ. உடல் வளர்ச்சி

ஆண்களும், பெண்களும் தங்கள் உடல் வளர்ச்சியின் உச்சத்தை அடையக் கூடிய பருவம் இக் குமரப்பருவம் ஆகும். இருபாலருக்கும் உயரம் மற்றும் எடை அதிகரிக்கும். கை, கால்கள் நீளமாகவும், வலுவடைந்தும் காணப்படும். ஆண்களின் குரல் உடைந்து கரகரப்பாகும். இதை 'மகரக்கட்டு' என்றும் கூறுவர். ஆண்களின் பாலுறுப்பு உருவத்தில் பெரியதாகி விந்துவை வெளித்தள்ளத் தொடங்குகிறது. மீசை அரும்பத் தொடங்கும். பெண்களின் இடுப்பு விரிவடைகிறது. மார்பகங்கள் புடைத்து பெருக்கத் துவங்குகின்றன. கக்கத்திலும், பிறப்புறுப்பைச் சுற்றிலும் உரோமங்கள் தோன்றத் தொடங்குகின்றன. பெண்ணின் இனப்பெருக்க மண்டலம் வளர்ச்சியுற்று பருவமடைகிறாள். ஒரு குழந்தையை உருவாக்கிப் பிறப்பிக்கும் வளர்ச்சி நிலையினை அடையத் துவங்குகிறாள்.

குமரப் பருவத்தில் உடல் வளர்ச்சி விரைவாகவும் மிகுந்தும் இருக்கும். இந்நிலையில் குமரப் பருவத்தினர் தங்கள் உடல் பொலிவைப் பற்றிச் சிந்தித்தவாறே இருப்பர். எனவே இப்பருவ ஆண்கள்

சீப்பும், கையுமாகவும், பெண்கள் தங்கள் கைப்பையில் கண்ணாடியும் முகப்பூச்சுடன் காணப்படுவர். உடல் தோற்றம் பற்றிய கவலைக்கு ஆட்படுவதே இவர்களின் கவனமின்மைக்கும், பதற்றத்திற்கும் காரணமாகும். ஆசிரியர்கள் இவர்களின் நிலை மற்றும் தன்மையையுணர்ந்து அவர்களிடம் அன்பும், பரிவும் காட்டி அவர்களை ஈர்க்கக்கூடிய செயல்கள் மற்றும் கற்பித்தல் முறைகளைக் கையாள்வதே இந்நிலைக்கேற்ற மாற்றாக அமையக்கூடும்.

உடல் வளர்ச்சியின் வேகம் அதிகரிப்பதால் இப்பருவத்தினர் மிகுதியாக உணவு உண்ணுவார்கள். கிடைத்த உணவை அளவுக்கு மீறி உண்ணுவதால் சருமத் தொல்லைகள், செரிமாணக் கோளாறு போன்றவைகளுக்கு ஆட்படலாம். பாலினச் சுரப்பிகளால் உடலில் ஏற்படும் மாற்றத்தால் அச்சமும், கவலையும் அதிகரிக்கும். குமரப் பருவத்தில் பாலுணர்வு தலைதூக்கிக் காணப்பட்டு, இவர்கள் அலைக் கழிக்கப்படுவதாலும், முதிர்ச்சியுற்ற பாலுறுப்புகளின் இயக்கத்தால் பீதி கொள்வதாலும் இவர்களுக்கு முறையான பாலின அறிவு அளிக்கப்படுதல் அவசியமாகிறது. இல்லையேல் தவறான வழிமுறைகளில் அரைவேக்காட்டுச் செய்திகளை அளித்து, மஞ்சள் பத்திரிக்கைகளும், போலி மருத்துவர்களும், விளம்பர நிறுவனங்களும், இன்டர்நெட்டில் பாலியல் தொடர்பான செய்திகளும் பல ஊடகங்கள் வாயிலாகக் குமரப் பருவத்தினரை ஈர்த்து ஏமாற்றுவர். உடற்கூறியல், இனப்பெருக்க மண்டலம் மற்றும் ஹெச்.ஐ.வி, எய்ட்ஸ் போன்றவை பற்றி ஆசிரியர் உரிய முறையில் தேவையான அளவில் விவாதித்து அவர்களைத் தெளிவுபடுத்தலாம். இவர்களின் ஆளுமை வளர்ச்சி பாதிக்கப்படாமல் உதவலாம்.

**குறிப்பு:** செயல்பாடு **1**–ன் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளைக் கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியவும்.

### ஆ. மன வளர்ச்சி

### செயல்பாடு : 1

உன்னுடைய நெருங்கிய குமரப் பருவ நண்பர்களில் சிலர் புகழ் பெற்ற திரைப்பட நடிகர்கள், நடிகைகள், அரசியல்வாதிகள் அல்லது ஆன்மீக குரு எவரையாவது கண்மூடித்தனமாகப் பின்பற்றக்கூடும். அவர்களை அடையாளம் கண்டு அவர்களின் நாயக வழிபாட்டிற்கான (Hero worship) காரணங்கள், செயல்பாடுகள், காலம் மற்றும் பணம் எவ்வளவு செலவு செய்கிறார்கள் என்பதை ஆய்ந்து பார்க்கவும். அதனால் அவர்கள் அடைவது என்ன என்பதை அறியவும். மேலும் அவர்களுடைய மனத்திறன்களில் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கும். அத்தகைய மாறுதல்கள் என்னென்ன ஏற்பட்டிருக்கிறது என்பதைக் கண்டறிந்து அறிக்கையாகத் தொகுக்கவும். இவ்வறிக்கையினை ஆசிரியர் வகுப்பில் விவாதித்த பின்னர் இப்பாடத்தைத் தொடரலாம்.

குழந்தைத் தன்மை அடியோடு மாறி பெருத்த மாற்றங்களுடன் முதிர்ச்சி ஏற்படத் தொடங்குவதால் இப்பருவத்தை **'குழந்தைகளின் இரண்டாம் பிறப்பு'** என்று கூறுவோரும் உண்டு. அறிவு வளர்ச்சியும் இப்பருவத்தில் வேகமாக வளர்ந்து உச்ச நிலையை அடைகின்றது. மனத்திறன்களான விவாதித்துச் சிந்தித்தல், கருத்தியல் சிந்தனை, கவனக்குவிப்பு, ஆராய்ந்து அறியும் நோக்கு ஆகியவை மேம்பாட்டு நிலையை அடைகின்றன. 'ஏன்**?**' 'எதற்கு**?**' 'எப்படி**?**' என்று அறிவியல் பூர்வமாக ஆராயத் தலைப்படுவர். எதையும் கண்மூடித்தனமாகச் செய்யவும், பின்பற்றவும் தயங்குவர். மொழித்திறன் கூர்மையடையும். இக்கால கட்டத்தில் தான் கவிஞர்கள். கலைஞர்கள், தத்துவவாதிகள், அறிவியல் ஆய்வாளர்கள் என தத்தம் இயல்புக்கு ஏற்ப உருப்பெறுகிறார்கள். கற்பனைத்திறன் மிகுந்து காணப்படக்கூடிய பருவம் இது. இவர்களுக்குச்

சரியான வழிகாட்டல்களும், ஆக்கபூர்வமான வடிகால்களும் கிடைக்காவிட்டால் பகற்கனவு காண்பவர்களாகவும், நெறிபிறழ் நடத்தை உள்ளவர்களாகவும் மாறுகின்றனர். தமது எண்ண ஓட்டத்தையும் சிந்தனையையும் குற்றங்கள் நிகழ்த்தவும் இவர்கள் பயன்படுத்தக் கூடும். இளங்குற்றவாளிகள் உருவாவது இவ்வாறுதான் என்பதை உணர்க.

நாயக வழிபாடு (Hero Worship) இப்பருவத்தினரிடையே தோன்றக்கூடியது. புத்தகங்கள் படிப்பதிலும், பயணம் செய்வதிலும், சாகசம் புரிவதிலும் ஆர்வம் கொண்டிருப்பர். இன்டர்நெட், கம்ப்யூட்டர், தொலைக்காட்சி போன்றவற்றில் காமிக்ஸ், விளையாட்டு போன்றவற்றை மட்டுமே பார்த்து ரசித்தவர்கள் சாகசக் காட்சிகள், பயணக் காட்சிகள், தத்துவம், ஆன்மீகம், சண்டைக் காட்சிகள், மயிர்க் கூச்செரியும் சம்பவங்கள் மற்றும் கொலைவெறித் தாக்குதல்கள் போன்றவற்றைப் பார்த்து ரசிப்பதில் தம் நேரத்தை அதிகம் செலவிடுவர். மனிதர்கள், சம்பவங்கள், பிரச்சினைகள் பற்றிய தம் ஆழமான விருப்பு வெறுப்புக் கருத்துக்களை வெளியிடுவர். இப்பருவத்தில் தான் தன்னுடைய மனப்பான்மைகளை உருவாக்கிக் கொள்வர்.

**குறிப்பு :** செயல்பாடு 2–ன் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் கற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளைக் கற்றுணர்ந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியலாம்.

## இ. மனவெழுச்சி வளர்ச்சி

### செயல்பாடு : 2

விளையாட்டு, கலைநிகழ்ச்சி போன்ற ஏதேனும் ஒன்றில் நீ உன் ஆசிரியர் எதிர்பார்த்த அளவுக்கு செயல்படவில்லை என்று கொள்வோம். அதன் காரணமாகவோ அல்லது ஏதேனும் ஒரு தேர்வில் நீ பெற்ற குறைந்த மதிப்பெண் காரணமாகவோ, வகுப்பில் அனைவர் முன்னிலையிலும் உன்னுடைய ஆசிரியர் கடினமான சொற்களைப் பயன்படுத்தி உன்னைத் திட்டினார் என்று கொள்வோம். அப்பொழுது உனக்குள் என்னென்ன மாற்றங்கள் நிகழ்ந்தன. அதன்பின் அன்று உன்னுடைய செயல்பாடுகள் எவ்வாறு இருந்தன என்பதை உனக்கு நேர்ந்த இது போன்றதொரு அனுபவத்தை நினைவுபடுத்திப் பட்டியலிட்டுக் கூறுக. இப்பட்டியலை அறிக்கையாகத் தயாரிக்கவும். இதனை வகுப்பில் விவாதித்துப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

மனவெழுச்சி என்பது உணர்ச்சிகள் மேலோங்கி நிற்கும் நனவு நிலையாகும். நம்மை வெகுவாகப் பாதிக்கும் நிகழ்ச்சியிலோ அல்லது நாம் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ள சூழ்நிலையிலோ மனவெழுச்சிகள் நம்மிடம் இயல்பாகத் தோன்றுகின்றன. மனவெழுச்சிகளில் மகிழ்ச்சி, மகிழ்ச்சியின்மை போன்ற மன உணர்ச்சிகளுடன் மனிதனது உள்ளுறுப்புகளான இதயம், வயிறு, குடல் போன்றவற்றினின்றும் எழும் புலன் உணர்ச்சிகளும் கலந்து பங்கு கொள்கின்றன. மனவெழுச்சிகள், அவற்றைத் தோற்றுவித்த நிலைகளை வரவேற்று எதிர்கொண்டு செல்லவோ, எதிர்த்துப் போராடவோ அல்லது ஓடி ஒளியவோ ஒருவனைத் தூண்டுகின்றன.

குமரப் பருவத்தில்தான் மனவெழுச்சி நிலை அதிகரித்துக் காணப்படும். அன்பு செலுத்துதல், அச்சம் கொள்ளல், கோபப்படுதல், பதற்றப்படுதல் போன்ற எல்லா மனவெழுச்சிகளும் அதிகரித்தும், குறைந்தும் மாறி மாறி வெளிப்படக்கூடிய பருவம் இப்பருவம். ஒரே நாளில் மிகுந்த உற்சாகம் மிகுந்தவராகவும், சிறிது நேரத்தில் மன உளைச்சலுக்கு ஆட்பட்டு ஆர்வமின்றியும் காணப்படுவர். உடல் வலுப்படுவதால் உடலியக்கச் செயல்களும் அதிகரிக்கின்றன. மனக்கிளர்ச்சியாலும், சிந்தனையாலும் அடிக்கடி தாக்கப்படுவதால் அமைதியற்றுக் காணப்படுவர். நுண்ணுணர்வு மிகுந்திருக்கும். தற்பெருமை, சுயமரியாதை, தன்னுணர்வு ஆகியன நிறைந்து காணப்படும். இவைகளுக்கு உடன்பட்ட

செயல்களில் நேரம், காலம், பசி கருதாது ஈடுபடுவர். ஆனால் இவைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டாலோ வெகுண்டு எழுவர். தன்னைச் சார்ந்த ஒப்பார் குழுவிடம் (Peer Group) ஈடுபாடு அதிகரிக்கும். நன்மை தீமை ஆராயாது ஆழந்த நட்புக் கொள்வர். குழந்தைப் பருவத்தில் அடங்கி நடந்த இவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களை எதிர்த்துப் பேசவும் செயல்படவும் முற்படுவர். இப்பருவத்தில் தன்னை ஒரு குழந்தையாகக் கருதுவதை இவர்கள் விரும்புவதில்லை. தன் வளர்ச்சியைப் புரிந்து கொண்டு தன்னை முதிர்ந்தோர்க்குச் சமமாக மதித்து நடத்தப்பட வேண்டும் என்று இவர்கள் எதிர்பார்க்கின்றனர்.

சிலர் பெற்றோர் கட்டுப்பாட்டை முறித்துக் கொள்ளவும் கூடும். பொதுவாக குமரப்பருவத்தினர் அதிகாரம் செலுத்துபவர்களை முழுவீச்சுடன் எதிர்ப்பர். இம்மன எழுச்சியின் காரணமாக பல சமயங்களில் சமூகத்தில் அவப்பெயர் பெறுகின்றனர். ஒழுக்கம், அதிகாரத்தை முறையாகப் பயன்படுத்துதல் போன்றவற்றில் சொல்லுக்கும், செயலுக்கும் வேறுபாடு காணப்படும் இடங்களிலும் கையூட்டு பெறுதல் போன்ற தவறான செயல்களிலும் இவர்கள் தம் எதிர்ப்பையும், வன்முறையையும் வெளிப்படுத்துகின்றனர். எதிர்கால வாழ்வைப் பற்றி சிந்தித்து அச்சம் கொள்கின்றனர். இதனால் இவர்களுக்கு இப்பருவத்தில் கவலையும், சுயபச்சாதாபமும் ஏற்படுகின்றது.

**குறிப்பு:** செயல்பாடு 3–ன் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளைக் கற்றுணர்ந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியவும்.

### ஈ. சமூக நடத்தை வளர்ச்சி

**செயல்பாடு: 3**

நீ தற்போது உன்னுடைய சுற்றத்தார், நண்பர்களின் இல்லங்களில் நடைபெறும் திருமணம், புதுமனை புகுவிழா, பூப்படைதல் போன்ற நல்விழாக்கள், இறப்பு போன்ற சடங்குகள் ஆகியவற்றில் தவறாது கலந்து கொள்வது உண்டா? உன் பெற்றோரின் வார்த்தைகளுக்கக் கட்டுப்பட்டு நடந்து கொள்கிறாயா? அல்லது நீ தன்னிச்சையாகச் செயல்படுகிறாயா? நினைவு கூர்க. உன் வயதொத்த நண்பர்களுடன் நீ பழகும் முறை, கொண்டுள்ள ஆர்வம், நடத்தை ஆகியவற்றை ஆய்ந்து அறிக்கையாகத் தொகுக்கவும். வகுப்பில் ஆசிரியர் இவ்வறிக்கையினை விவாதித்த பின்னர் இப்பாடத்தைத் தொடரலாம்.

எண்ணம் மற்றும் சிந்தனைகளால் வளர்ச்சியுற்ற நிலையில் குமரப் பருவத்தினர் சமூக முதிர்ச்சியை அடைந்து, சமூகத்திற்குப் பொருந்தியவனாகவும் ஆகின்றனர். இதன் விளைவாக சமூகவியல்பினன் ஆகின்றான். பிள்ளைப் பருவத்தில் தன் நோக்கிலேயே சிந்தித்துப் பழக்கப்பட்டும், சுயநலம் மிகுந்தும் காணப்பட்டவன், குமரப் பருவத்தில் சமூகத் தொடர்புகளையும், உறவுகளையும் வளர்த்துக் கொண்டு சமூக நெறிமுறைகளுக்கு உட்பட்டு வாழத் தலைப்படுகின்றான். எதிர்பாலினத்தவரிடம் பற்றும், கவர்ச்சியும் கொண்டவராக இருப்பர். தான் சார்ந்த குழுவிடம் ஈடுபாடு அதிகமாக இருக்கும். சுருங்கக்கூறின் குமரப்பருவத்தினரது சமூக நடத்தையை அவர் சார்ந்திருக்கும் ஒப்பார் குழு (Peer Group) பெருமளவு நிர்ணயிக்கிறது. தம் குழுவிற்குத் துன்பம் ஏற்படாமல் தன் குழுவிலுள்ளோர் மதிப்பை எந்த அளவிலும் முயன்று நிலைநிறுத்திக் கொள்வர்.

தற்சார்புக்குப் பெரிதும் ஏங்கும் இவர்கள் தம் பெற்றோர் மற்றும் குடும்பத்திலுள்ள பிறருடன் கொண்டிருக்கும் சமூக உறவும் பெருத்த மாறுதலுக்கு உட்படுகின்றது. தன்னை யாவரும் வயது வந்தவராக, முதிர்ந்தவராக மதித்துச் செயல்பட வேண்டும் என்று விரும்புகின்றனர்.

பெற்றோரின் அறிவுரைகளை விடத் தன் ஒப்பார் குழுவின் நம்பிக்கைகளுக்கும், மதிப்புகளுக்கும் அதிக முக்கியத்துவம் அளிப்பர். பெற்றோர் தம் மீது அபிப்பிராயங்களையும், மதிப்புகளையும் திணிக்க முயன்றால் அதை மறைமுகமாகவோ அல்லது நேரிடையாகவோ எதிர்க்கத் துணிவர். பெரும்பாலும் குமரப் பருவத்தினர் தம்மைப்பற்றி நினைப்பதற்கும், பெற்றோர்களின் எதிர்பார்ப்புக்கும் இடையே தலைமுறை இடைவெளி (Generation Gap) காணப்படும். தனக்கென்று சமூகத்தில் ஒரு அங்கீகாரம் பெறவும், சுயமாகச் செயல்படவும் முயல்வர். அழுத்தங்களும், துடிப்புகளும் மிக்க இப்பருவத்தில் இவர்கள் தாங்கள் கொண்ட இலட்சியத்தில் விடாப்பிடியாக இருப்பர். அறிவியல் முன்னேற்றத்தின் அடிப்படையில் மதக்கோட்பாடுகள், கடவுள் போன்றவற்றைப் பற்றி ஆழமாகச் சிந்திக்கத் தொடங்குவதால் அவைகள் மீது குமரப் பருவத்தினருக்கு அனேக ஐயங்கள் எழத் தொடங்குகின்றன. தனக்கென்று ஒழுக்கநெறி, அறநெறி போன்றவைகளை ஏற்படுத்திக் கொள்வர்.

சமூகத்தில் குமரப் பருவத்தினருக்கு வேண்டிய சலுகைகள், வசதிகள், ஏற்ற சூழ்நிலை ஆகியவை உருவாக்கித் தரப்படுமேயானால் அதில் இவர்கள் நெகிழ்வுத் தன்மையுடன் எவ்விதப் பிரச்சினைகளுமின்றி விளங்குவர். எனவே இப்பருவம் மரபுநிலை வழி வந்த உயிரியல் தன்மைகளும், வாழ்க்கையின் சமூக, பண்பாடு அமைப்புகளின் தன்மைகளும் ஒன்றோடொன்று இணைந்து செயல்படுவதன் விளைவாக அமைகின்றது.

**குறிப்பு:** செயல்பாடு 4–ன் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளைக் கற்றுணர்ந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியவும்.

## 3. முந்திப் பருவமடைதலும், பிந்திப் பருவமடைதலும்

உடலியல் வளர்ச்சி எல்லோருக்கும் ஒரே சமயத்தில் ஏற்பட்டு விடுவதில்லை. இவை வேறுபட்ட வயதினில் ஏற்படுவதால், சிலர் பெரும்பான்மையினரிடம் காணப்படும் வளர்ச்சி நிலையிலிருந்து முற்பட்டோ அல்லது பின்தங்கியோ இருப்பர். இந்த மாறுபாடு அவர்களுக்குப் பிரச்சினைகளை உண்டாக்குகின்றது. குமரப்பருவத்தினர் தங்களை ஒத்த வயதினரைக் காட்டிலும் துரித உடல் மற்றும் உடலியல் வளர்ச்சி பெறும் பொழுது குழுவில் அவர்களுக்கு இடர்ப்பாடான நிலை ஏற்படுகின்றது. மாறாக இவர்களில் தாமதித்த வளர்ச்சியைப் பெறுவோர் தாங்கள் பிறரைவிட வளர்ச்சியில் பின்தங்கியிருப்பதை உணர்வதால், அவர்களிடம் தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டு மனமுறிவு உண்டாகலாம். உடலியல் வளர்ச்சியில் தனியாள் வேற்றுமைகள் காரணமாகவும் இவர்களிடத்தில் இடர்ப்பாடுகள் எழுகின்றன.

இளையோர் பருவத்தில் சிலர் வேகமாகப் பருவமடைவதால், அவர்களுடன் பழகுவதற்கு மற்ற மாணவர்கள் பயப்படுகின்றனர். ஏனென்றால் இந்த மாணவர்கள் அடிக்கடி ஆசிரியர்களிடம் எதிர்ப்பைத் தெரிவிக்கின்றனர். முந்திப் பருவமடைவதால் இவர்கள் கவலையும், குழப்பமும் அடைந்து சில சிக்கல்களைச் சந்திக்கின்றனர். இத்தகையோர் பயம் நீங்கித் தெளிவு பெறுதல் அவசியம். இத்தருணத்தில் மாணவிகள் உள்ளாடை அணிவது, மாதவிலக்கு நாட்களில் உள்ளாடைத் தூய்மைக்கு முக்கியத்துவம் தருதல் போன்றவை பற்றி அவர்களுக்கு அறிவுரைகள் தேவைப்படுகின்றன.

பிந்திப் பருவமடையும் இளையோர் சில உளநிலைச் சிக்கல்களைச் சந்திக்கின்றனர். இந்நிலையில் சில சமயங்களில் கூடிப்படித்தல், கூடி விளையாடுதல் போன்ற செயல்பாடுகளில் இவர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். இதனால் இவர்கள் மன இறுக்கத்திற்கு ஆட்படுகிறார்கள். முந்திப் பருவமடையும் இளையோரிடத்தில் மிகுந்து இருக்கும் தன்னம்பிக்கையும், தன்மதிப்பும் பிந்திப் பருவமடையும் இளையோரிடத்தில் குறைந்து காணப்படும். இவ்வாறான உடலியக்கம் சார்ந்த வளர்ச்சிகளின்பால் எழும் பிரச்சினைகளைச் சமாளிக்கவும், பொருத்தப்பாட்டு கோளாறுகளினின்று நல்லதொரு ஆளுமையைப் பெறவும் குமரப் பருவத்தினர் அறிந்து கொள்வது அவசியமாகும்.

## 4. கருத்தியல் நிலை அல்லது முறையாக எண்ணிச் சிந்தித்து எண்ணங்களின் அடிப்படையில் செயல்படும் மனநிலை

சரியாகச் சிந்தித்து எழும் எண்ணங்களின் அடிப்படையில் செயல்படக் கூடிய நிலையாகிய இக்கருத்தியல் நிலை உலகைப் புரிந்து கொள்ளக்கூடிய முதிர்ச்சியடைந்த பருவமாகும். பருவங்களின் வளர்ச்சி நிலையைக் கீழ்க்கண்டவாறு எடுத்துக்காட்டலாம்.

முதல் நிலை
இரண்டாம் நிலை
மூன்றாம் நிலை
நான்காம் நிலை

குழந்தையின் 12 வயதிற்கு மேல் தொடங்கும் கருத்தியல் நிலையில் ஒருவனுடைய மனதில் முறையாகச் சிந்திக்கும் திறமை வளரும். கண்ணெதிரில் பொருள்கள் இல்லாத போதும் அவை குறித்துச் சிந்திக்க முடியும். உலகைப் பெருமளவில் புரிந்து கொள்ள இது உதவும்.

எடுத்துக்காட்டாக வெவ்வேறு அளவுகள் கொண்ட இரு பாத்திரங்களில் ஒவ்வொன்றிலும் சம அளவு நீர் உள்ளதாகக் கொள்வோம். கண்கூடாகப் பார்ப்பதை வைத்துச் சிந்தித்துச் செயல்படும் மனச் செயல்பாட்டு நிலையில் உள்ள மூன்றாம் நிலை மாணவர்கள் முதலில் பெரிய பாத்திரத்தில் உள்ள நீர்தான் அதிகம் என்கின்றனர். பின்பு பலமுறை இரண்டு பாத்திரங்களில் உள்ள நீரையும் அளந்து ஒப்பிட்டு இரண்டு பாத்திரங்களில் உள்ள நீரும் சமஅளவு கொண்டது என்ற முடிவுக்கு வருவதற்கு நீண்ட நேரம் எடுத்துக் கொள்கின்றனர். ஆனால் சிந்தித்துச் செயல்படும் நான்காம் நிலையில் உள்ள மாணவர்கள் விரைவாக அந்த முடிவுக்கு வருகின்றனர்.

இந்தப் பருவத்தில் பொருள்களையும், மனிதர்களையும், அவற்றின் பலதரப்பட்ட தொடர்புகளையும் அனுமானித்து, சிந்தித்துத் தெளிவாகச் சீர்தூக்கிப் பார்த்து எடுத்துச் சொல்ல அவர்களால் இயலும். அனுமானங்களின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கும் இப்பருவத்தினரில் உண்மை நிலையைப் (Reality) புரிந்து கொண்டு முடிவு எடுப்பவர்கள் குறைவு. எனவேதான், தற்போதுள்ள இளம்பருவத்தினரில் பெரும்பான்மையோர் எம்மாதிரியான வேலைவாய்ப்பைத் தேர்ந்தெடுப்பது, அதற்கேற்றவாறு எக்கல்வியைக் கற்பது போன்றவற்றில் குழப்ப நிலையில் காணப்படுகின்றனர்.

இப்பருவத்தில் உள்ளவர் நேரே எதிரில் இல்லாதவை பற்றியும், புலன் தொடர்பற்றவை பற்றியும் (Abstractness) சிந்திக்கும் திறனைப் பெறுகிறார். எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய நிலைமைகள் (Possibilities) கற்பனை நிலைமைகள் போன்றவை பற்றியும் சிந்திக்க இயலும்.

எடுத்துக்காட்டாக உணவு உண்பதற்குப் பதில் உடலுக்குத் தேவையான சத்துக்களை மாத்திரைகளாக உட்கொண்டு மனிதன் வெகுநாள் வாழ முடியுமா? என்று கேட்டால் கருத்தியல்

நிலையில் உள்ளோர் காரண, காரியத்தோடு சிந்தித்துத் தெளிவாகப் பதில் சொல்வர். ஆராய்ச்சியாளர்கள் போலவே செய்ய வேண்டியவை பற்றியும், செய்து முடித்தவை பற்றியும் பதிவு செய்து பரிசோதனையில் ஈடுபடுவர், ஆய்வுக்கான கருதுகோள்களை (Hyothesis) அமைத்துச் சோதிக்கும் திறனைக் கூடப் பெற்றிருப்பர்.

எந்தவொரு விளையாட்டு அல்லது சமூக அமைப்பின் விதிமுறைகளும் பலர் கூடி ஒப்புக் கொள்வதால் ஏற்படுகின்றன என்பதைப் புரிந்து கொள்வதால் தேவைக்குத் தகுந்தவாறு விதிமுறைகளை மாற்றியமைக்க முயல்வர். குற்றங்களை அவற்றின் அளவின் அடிப்படையில் மதிப்பிடாமல் அக்குற்றங்களின் பின்னணி நோக்கத்தைக் கொண்டே மதிப்பிடுவர். எந்தக் கருத்தையும் பிறர் நோக்கிலிருந்தும் சிந்திக்க இவர்களால் இயலும்.

## 5. அறிதலை அறிந்துணர்தல்

புலன் உறுப்புகள் மூலம் பெறப்படும் செய்திகளைத் தொகுத்தல், சுருக்கியமைத்தல், விரிவுபடுத்தல், நினைவுகூர்தல் போன்ற உளச்செயல்களின் அடிப்படையில் ஆராய்ந்து அவை பற்றி அறிந்து கொள்ளுதலுக்கு அறிதிறன் (Cognitive Process) என்று கூறலாம். வெளி உலகைப் பற்றி தெரிந்துகொள்ள உதவும் உளச் செயல்களே 'அறிதிறன் செயல்கள்' (Cognitive Process) எனப்படும். இத்தகைய அறிதிறன் செயல்கள் அனைத்தும் நமது புலன்காட்சி, கவனம், நினைவு ஆகிய செயல்களுக்கு அடிப்படையாக அமையும்.

கற்றல் என்பது எதைக் கற்றுக் கொள்கின்றோமோ அதைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளுதல் எனலாம். மனிதர், கருத்து, பொருள், செய்முறை போன்ற ஏதோ ஒன்றைப் பற்றி நாம் பார்த்தல், கேட்டல், படித்தல், செய்து பார்த்தல் ஆகிய ஏதேனும் ஒன்றின் வாயிலாக அதன் விவரங்களை அறிந்து கொள்கின்றோம். இவ்வாறு அறிந்து கொள்வதற்கான வழிமுறைகளை நாம் பலவாறாக அமைத்துக் கொள்கிறோம். இவை அறிதலுக்கான வழிமுறைகள் (Cognitive Strategies) எனப்படும்.

அறிதல் எவ்வாறு அமைகின்றது, நாம் மேற்கொள்ளும் அறிவதற்கான வழிமுறைகள் அறிதல் சரியாக அமைய எவ்வாறு உதவுகின்றன, அவை உதவுகின்றவாறு அவற்றை எவ்வாறு செயல்படுத்துவது என்பதைப் போன்ற அறிதலைப் பற்றிய விவரங்களை அறிந்து கொள்வது 'அறிதலைப்பற்றி' அறிதல் அல்லது 'அறிதலை அறிந்துணர்தல்' (Metacognition) என்று கூறுகிறோம்.

அறிதல் (Cognition) என்பது எதைப்பற்றி அறிந்து கொள்கின்றோமோ அந்தப் பொருளை செயல் மூலமாகவோ அல்லது சிந்தனை மூலமாகவோக் கையாண்டு அது பற்றிய விவரங்களை அறிந்து கொள்ளுதல் ஆகும். 'அறிதலை அறிதல்' என்பது அறிதலை சிந்தனை மூலம் கையாண்டு அது பற்றிய விவரங்களை அறிந்துணர்தல் எனலாம். அதாவது சிந்தித்து அறிதல் பற்றிய சிந்தனை (Thinking of Thinking) என்பதாகும்.

அறிதல் (Cognition) என்பது பொருள் பற்றிய விவரங்களைத் தேடித் தெரிந்து கொள்ளுதல்; தேடித் தெரிந்த அறிவு எதிர்பார்த்த அளவிற்குச் சரியாகவும் முழுமையாகவும் அமைய வழிமுறைகளைக் காண்பது அறிதலை அறிந்துணர்தல் (Metacognition) ஆகும். இதனைக் 'கற்க கற்றல்' (Learning to Learn) என்றும் குறிப்பிடலாம்.

ஒன்றைக் கற்க முயலும் போது, அப்பணியில் மேற்கொள்ள வேண்டிய அணுகுமுறையைத் திட்டமிடுதல், பொருளுணர்ந்து கற்றலைத் தொடர்ந்து கண்காணித்தல், கற்றல் பணியை நிறைவு

செய்தபின், எந்த அளவு இலக்கினை எட்டியுள்ளோம் என்பதை மதிப்பிடுதல் ஆகிய செயல்கள் அனைத்தும் 'அறிதலை அறிந்துணர்தல்' என்பதில் உள்ளடங்கும். கற்றலில் முழுமையாக வெற்றி பெற்றிட 'அறிதலை அறிந்துணர்தல்' பெரிதும் தேவைப்படுவதால் இதனைப் பற்றி அறிவது மாணவர்களுக்கும். ஆசிரியர்களுக்கும் இன்றியமையாததாகிறது. 'அறிதலை அறிந்துணர்தல்' பொதுவாக ஒருவரது நுண்ணறிவுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது. அறிதலை அறிந்துணரும் ஆற்றலைப் பெருமளவில் பெற்றிருப்போர், நுண்ணறிவு மிக்கவர்களாகவும், ஆழ்ந்த சிந்தனைத்திறன் படைத்தவர்களாகவும் இருப்பது ஆய்வுகளின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

### அ. அறிதலை அறிந்துணர்தல் பற்றிய அறிவு: (Metacognitive Knowledge)

ஒன்றைக் கற்கும் போது அறிதிறன் செயல்களான சிந்தித்தல், நினைவுகூர்தல், காரணம் அறிதல் ஆகியவை எவ்வாறு நிகழ்கிறது என்பதை அறிந்திருத்தலே 'அறிதலை அறிந்துணர்தல்' பற்றிய அறிவு ஆகும். ஒருவர் ஒன்றைக் கற்க முனையும் போது கற்க வேண்டியதைப் பற்றி அறிந்திருப்பதுடன், தன்னுடைய கற்கும் வழிமுறைகள் பற்றிய அறிவும் பெற்றிருக்க வேண்டும். இவையிரண்டும் அறிந்துணர்தல் பற்றிய அறிவில் உள்ளடங்கும். உதாரணமாக இளம் வயதினர் தங்கள் செயல்பாடுகளைத் தாங்களே சிந்தித்துப் பின்பு தனது அனுபவங்களை நினைவுகூர்ந்து தாங்கள் அறிந்து கொள்ளும் அறிவைப் பெறுகின்றனர்.

### ஆ. சிந்தித்துச் செயல்படும் முறையைக் (கற்கும் முறையை) கண்காணித்து நெறிப்படுத்துதல்:

அநேகமாக உள்மனச் செயல்பாடான சிந்தித்துச் செயல்படும் முறையைக் கண்காணித்து நெறிப்படுத்துதல் என்பது இளம் வயதினரிடையே தங்களின் அறிதிறன் செயல்களை மதிப்பிட்டுத் தேவையானால் மாற்றிக் கொள்வதற்கு ஏதுவாக அமைகிறது. உதாரணமாக, முன்பள்ளிப் பருவத்தில் இருக்கும் ஒரு குழந்தை தான் மற்றவருடன் பேசும் பொழுது பேச்சைத் திருத்திக் கொள்கிறது. தான் பேசும் மொழியைத் தானாகவே கண்காணித்து, மற்றவர் பேசும் பொழுது அதை ஒப்பிட்டு, ஏதேனும் தவறு இருப்பின் அறிந்துணர்ந்து திருத்திக் கொண்டு நெறிப்படுத்துகிறது.

அ) ஏதேனும் உரிய திட்டத்தைச் சிந்தித்து நினைவுகூர்தல்

ஆ) திட்டத்தைச் செயல்படுத்துதல்

இ) அதைத் தொடர்ந்து கண்காணித்து நெறிப்படுத்துதல்; தேவையானால் மாற்றங்களைச் செய்தல்.

ஆகியவை, அறிதலுக்கான வழிமுறைகளைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் நெறிப்படுத்தும் கூறாக, இளம் வயதினரிடையே காணப்படுகிறது.

### இ. அறிதலை அறிந்துணர்தலின் முக்கியத்துவம்

'அறிதலை அறிந்துணர்தல்' என்பது மாணவர்கள் தமது கற்றலை செம்மைப்படுத்திக் கொள்ளவும், கற்கும் போது சிறப்பான உத்திகளைப் பயன்படுத்தவும் உதவுகின்றது. 'கற்க கற்றலில்' பல்வேறு அணுகுமுறைகள் இருந்தாலும் அவற்றுள் மிகவும் திறன் வாய்ந்த அணுகுமுறை, எவ்வாறு கற்க வேண்டும் என்பதை மாணவர்கள் அறிந்துணரச் செய்வதோடு அதைச் செயற்படுத்திடவும் போதுமான பயிற்சி அளித்திடல் ஆகும். எத்தகைய கற்றல் உத்தி தனக்கு மிகவும் ஏற்றது என்பதை ஒவ்வொரு மாணவனும் சுய அனுபவத்தின் அடிப்படையில் தெரிவு செய்வதுடன் அதைச் செம்மையாக நடைமுறைப்படுத்துவதற்கான பயிற்சியையும் பெற்றிருத்தல் வேண்டும்.

எத்தகைய கற்றல் முறை சிறந்தது என்ற அறிவு மட்டும் இருந்தால் போதுமானது அல்ல; அதனை செயல்படுத்தி வெற்றியடையும் வழிமுறையில் நேரடியான அனுபவம் பெறுதலும் அவசியமாகும். இவ்விரு கூறுகளில் ஒன்று இன்றி பிறிதொன்று பயன் தராது. குறிப்பாக குமரப் பருவத்தில் உள்ள மாணவர்களுக்கு இதனை வலியுறுத்தி செயல்பாட்டிற்குக் கொண்டுவருதல் அவசியமாகும். அப்பொழுதுதான் அவர்கள் பிற ஈர்ப்புச் செயற்பாட்டில் இருந்து விலகி கற்றல் செயல்பாட்டின் பயனைப் பெற இது உதவும்.

## 6. தொகுப்புரை

உடல், உடற்கூறுபாட்டு வளர்ச்சியும், மாற்றங்களும் இளையோர் பருவத்தில் மிக விரைவாக நடைபெறுகின்றன. முழு உடல் வளர்ச்சி பெற்றிருப்பவர்களில் ஆண்களை விடப் பெண்களின் உடல் வளர்ச்சி நிலை மிகுந்து காணப்படும். உடல் வளர்ச்சியைப் பெறும் பொழுதே அதன் மூலம் கிட்டும் சக்தியும், திறனும் அளவில் மிகுந்து காணப்படும். எனவே இவர்கள் அதிகமான இயக்கச் சக்தியைப் பெற்றிருப்பார்கள். எனவே இயக்கச் சக்தியை அதிகரிக்கும் விதத்திலும், ஊக்குவிக்கும் விதத்திலும் உடற்பயிற்சிப் பாடங்கள் அமைய வேண்டும்.

இளையோரின் மனவெழுச்சி வளர்ச்சி பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாததாகும். ஏனெனில் மனிதனைப் பிற விலங்குகளினின்றும் வேறுபடுத்திக் காட்டுவது இவ்வளர்ச்சியே ஆகும். ஒருவனுக்குச் சக்தியளிப்பதும், ஊக்கமளிப்பதும் இம்மனவெழுச்சிகளே ஆகும். மனவெழுச்சிகளுக்குப் பல்வகையிலும் ஆளாகின்ற இளையோருக்கு ஆசிரியர்களும், பெற்றோர்களும் உதவ வேண்டும். இப்பருவத்துக்குரிய மாற்றங்களைக் கொண்ட நடத்தை இயல்பினையும், ஊக்கிகளையும் அவர்களைச் சரிவரப் புரிந்து கொள்ள உதவுவதன் மூலம் வன்மையான மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்த வழிவகுக்கலாம். எனவே பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் இளையோருக்கு ஆலோசனை கூறி வழிகாட்டுவோரை நியமித்து, இவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அறிவுரைகளை வழங்கச் செய்தல் நலம் பயக்கும்.

குமரப் பருவத்தில் உள்ள ஒருவன் சமூகத் தன்மை பெறுவதில் இல்லம் பெரும் பங்கு வகிக்கின்றது. சமூகப் பொருத்தப்பாட்டில் ஏற்படும் சிக்கல்களுக்கு பெற்றோர்களின் புறக்கணிப்பு, அளவுக்கு மீறிய செல்லம், உடன்பிறந்தோரின் போட்டி மனப்பான்மைகள், சமநிலையற்ற தன்மை, குடும்பத்தின் பொருளாதார நிலை, பெற்றோரிடையே உள்ள உறவு முறை, உடல்நிலை ஆகியவை காரணங்களாகும். ஒருவன் தன் இளம் வயதில் எத்தகைய நண்பர்களாலும், குழுக்களாலும் தூண்டப்பட்டு, அறிவு வளர்ச்சியைப் பெறுகின்றானோ, அதைப் பொறுத்தே அவனுடைய பிற்கால சமூக உணர்வும் அமையும். நட்பு அமைவதில் பாதுகாப்புணர்வும், சார்புணர்வும் முக்கிய காரணிகளாக அமைகின்றன. குமரப் பருவத்தில் ஏற்படும் சமூக வளர்ச்சியில் மிக முக்கியமானது எதிர்பாலினரின் மீது தோன்றும் ஆர்வங்கள் ஆகும். இப்பருவத்தில் தோன்றும் உடலியக்க மாற்றங்கள் பாலின ஆர்வங்களையும், உந்துதல்களையும் தோற்றுவிக்கின்றன. பாலின உணர்வு இவனிடம் ஓர் உடல் சார்ந்த பசியாகத் தோன்றுகிறது. பாலின நடத்தையைச் சார்ந்த குற்ற உணர்வுகள் இருபாலினரிடமும் காணப்படுகின்றன. இவர்களுக்குப் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் வழிகாட்டுதல்கள் தேவை. அது இவர்களிடத்தில் முழு ஆளுமை வளர்ச்சி பெற வழிவகுக்கும். இதன் மூலம் அவர்களிடம் போதிய காப்புணர்ச்சியையும் ஏற்படுத்த முடியும்.

## குமரப் பருவத்தில் தோன்றும் பிரச்சினைகள் - ஓர் ஆய்வு

குமரப் பருவத்தினரிடையே தோன்றும் சிக்கல்கள், எதிர்கொள்ளும் பிரச்சினைகள் பற்றி மாணவ ஆசிரியர்களுக்கு ஒரு பட்டியல் கொடுக்கவும்.

இந்தப் பட்டியலில் கண்ட பிரச்சினைகளை எவரேனும் ஒன்று அல்லது இரண்டு குமரப் பருவத்தினரைச் சந்தித்து, அவர்கள் எவ்வாறு சரியாகவோ அல்லது தவறாகவோ எதிர்கொண்டார்கள் என அவர்களைக் கேட்டறிந்து மாணவ ஆசிரியர்கள் விவரங்களைத் தயாரித்தல் வேண்டும். இப்பிரச்சினைகள் அல்லாது எவையேனும் பிற பிரச்சினைகளை அக்குமரப் பருவத்தினர் எதிர்கொண்டிருந்தாலும், கேட்டறிந்து விவரம் சேகரிக்க வேண்டும். இவ்வறிக்கையை உளவியல் பரிசோதனைப் பதிவேட்டில் பதிதல் வேண்டும்.

### நோக்கத்தைத் தேடி ஒரு பயணம் - குமரப் பருவம்

குழந்தைகள் நமது வாழ்க்கையைப் பூர்த்தி செய்யப் பிறப்பதில்லை; அவர்களது வாழ்க்கையைப் பூர்த்தி செய்யவே பிறந்திருக்கிறார்கள்.

–வில்லியம் மார்ட்டின்

### அ. நிகழ்வு

தன்னுடைய வரலாற்று ஆசிரியர் கூறியவாறு இந்தியாவின் வடமாநிலங்களைச் சுற்றிப் பார்க்க சுற்றுலா செல்ல விரும்புவதாக தேவ் கூறுகின்றான். இதன் மூலம் இந்தியக் கலாச்சாரம், பண்பாடு ஆகியவற்றைத் தெரிந்து கொள்ளலாம் என்று கருதுகின்றான். இந்த அனுபவமே அவனது வரலாற்று அறிவில் மேம்பாடு அடையச் செய்தது.

அவனது தந்தையின் கருத்து மாறாக இருந்தது. 'உன் வரலாற்று ஆசிரியரின் வயது 30. ஆனால் உன் வயதோ 15 தான். நாங்கள் உன்னைத் தனியாக இச்சுற்றுலாவுக்கு அனுப்ப முடியாது' என்று கூறுகிறார்.

தேவ் தான் தனியாகச் செல்லவில்லை எனவும், தனது ஒன்றுவிட்ட சகோதரன் இராமுவுடன் செல்வதாகவும் கூறினான். இராமுவுக்கும் போதிய அனுபவம் இல்லை என்று அவரது தந்தை கூறுகின்றார். ஆனால் அவருக்குத் தெரியும். தேவ் தன்னம்பிக்கை மிகுந்து உள்ளவன் என்று. அவனுக்கு அவனது தாயும், சித்தி திலகாவும் ஒத்துழைப்பு கொடுத்தனர்.

இச்சுற்றுலாத் திட்டம் அதிக செலவு பிடிக்கும் என்பதாலும், அவனது தந்தை அனுமதிக்கவில்லை. இருப்பினும் அவர்களது குடும்பச் சூழ்நிலை கருதி தேவ் தானே அத்திட்டத்திற்குரிய பணத்தைத் திரட்டிக் கொள்ளும்படி அறிவுறுத்தினார்.

தேவுக்கு என்ன செய்வதென்று தெரியாமல் குழம்பினான். இன்னும் நான்கு மாதங்கள் தான் இருந்தது சுற்றுலா புறப்பட, அவன் மனதில் ஒரு திட்டம் உதயமானது. அவன் தனது உறவினர் மற்றும் தனது தாய், தந்தை பணியாற்றும் அலுவலகத்தில் உள்ள சில குடும்ப நண்பர்கள் மற்றும் தன் வசிப்பிடத்திற்கருகில் உள்ள பெரியவர்கள் சிலருக்கும் தனது சூழலைப் பற்றி கடிதம் எழுதினான். அவனது ஆர்வத்தையும், தேவையையும் அறிந்த அவர்களில் பலர் அவனுக்கு உதவினர். தேவையான பணம் கிடைத்தது. அவனது ஆர்வமும், கடின உழைப்பும் அந்த சுற்றுலா செல்லும் திட்டத்திற்கு

அடிக்கோலிட்டது. அவனது தாய், தந்தை மற்றும் குடும்ப நண்பர்களின் உதவியால் தேவின் சுற்றுலா செல்லும் எண்ணம் நிறைவேறியது. தேவும், இராமுவும் வடஇந்திய சுற்றுலா சென்று வந்த இன்பத்தில் ஆனந்தக் கண்ணீர் வடித்தனர். தேவ் தனது வரலாற்று அறிவுத் திறனை மேம்படுத்திக் கொள்ள இத்தகைய முயற்சி செய்து வெற்றி பெற்றான்.

### ஆ. சுதந்திரம் மற்றும் பொறுப்பு

தேவ் மற்றும் இராமுவின் வளர்ச்சிக்கு அவர்களின் பெற்றோர்களின் ஒத்துழைப்பு முக்கியப் பங்காற்றியது. குமரப் பருவத்தினரின் ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் ஊக்கப்படுத்த வேண்டும்.

இராமுவின் பள்ளிப்படிப்பு மிகவும் சிறப்பாக அமையவில்லை. அவன் எல்லாவற்றிலும் தாமதமாகவே செயல்படுவான். அவன் எப்பொழுதாவதுதான் படிப்பான். மற்ற நேரங்களில் தொலைக்காட்சி பார்ப்பதிலும் மற்றும் கம்ப்யூட்டரில் விளையாடுவதிலும்தான் பொழுது போக்கினான். ஆனால் அவனது ஆர்வம் விளையாட்டுத் துறையில் ஏற்பட, அவனது செயல்பாடுகள் மாறுபட்டன. விளையாட்டு தொடர்பான புத்தகங்களைத் தேடிப் பிடித்து பயின்றான். கிரிக்கெட் விளையாடுவதில் ஆர்வம் கொண்டான். தனது தந்தையின் ஊக்கத்தாலும், இவனுக்கு இருந்த ஆர்வம் மற்றும் ஈடுபாட்டாலும் மாநிலத்தில் உள்ள முதன்மை அணியில் விளையாடும் அளவிற்கு முன்னேறினான்.

ஆனால் தேவ் இவனுக்கு நேர்மாறாக இருந்தான். அவன் பயணம் செய்வதன் மூலம் தன் வரலாற்று அறிவை மேம்படுத்தலாம் என எண்ணினான். அவனது எண்ணம் நிறவேற ஊக்கத்தையும், சுயமுன்னேற்றம் அடைய சுதந்திரத்தையும் அவனது தந்தை கொடுத்தார். இவ்விருவரின் உதாரணத்தின் வாயிலாக, குமரப் பருவத்தில் தங்களுடைய கற்றல்களைத் தாங்களே தேர்ந்தெடுப்பதும், சுதந்திரமாக பொறுப்புணர்வுடன் செயல்படுவதுவும் சாத்தியம் எனத் தெரிந்து கொள்கிறோம்.

### திறன்களில் தேர்ச்சி மற்றும் தன்னைச் சார்ந்திருத்தல்

குமரப் பருவத்தில் தனித்தன்மை என்பதே முக்கியத்துவம் பெறுகிறது. எந்தவொரு துறையில் பயிற்சி பெற்றாலும் அது வீணாவதில்லை. அவர்கள் தங்களைச் சார்ந்திருந்து முனைப்புடன் பயிற்சி செய்து தங்களது திறன்களில் தேர்ந்து அதை வெளிப்படுத்துகின்றனர். அவர்களது வாழ்க்கைப் பாதையை நிர்ணயிக்க இது பயன்படுகிறது.

### சிறந்த அறிவுரை பகர்பவர்

குமரப் பருவத்தில் தேவைப்படுவது ஆலோசனை, தேவையான வாய்ப்புகள் மற்றும் நம்பகமான ஆலோசகர்.

குமரப் பருவத்தில் ஆலோசகர் என்பவர் அவரது சக நண்பர்களாகவோ அல்லது அவரது வாழ்க்கையை நெறிப்படுத்துபவராக இருப்பவரோ முக்கியமான செயலாற்றுகிறார். இந்தப் பருவத்தில் தன்னம்பிக்கை மற்றும் தலைமைப் பண்பை மேம்படுத்த உதவ வேண்டும். முன்பு பார்த்த உதாரணங்களில் தேவுக்கு அவனது தந்தை. தாய் மற்றும் வரலாற்று ஆசிரியர் ஆகியோர் ஆலோசகராக இருந்தனர். அவனது சுற்றுப் பயணத்தின் மூலம் அவனது வரலாற்று அறிவு கூடியது.

குமரப் பருவத்தில் தானே சுதந்திரமாகத் தேர்ந்தெடுத்துக் கற்றல் அவர்களது கற்றலில் முக்கியப் பங்காற்றுகிறது. தானே தேர்ந்தெடுத்து, வடிவமைத்துக் கற்றுக் கொள்ளும் திறன்களைக்

கற்றலில் இவர்கள் செயல்படுத்துவதன் வாயிலாக மென்மேலும் திறன்களைப் பெறுவதுடன் தன் உண்மையான உலகாதாய வாழ்விலும் அவற்றைப் பயன்படுத்துகின்றனர். எனினும் குமரப் பருவம் என்பது கற்றல் செயல்நிலையில், முடிந்த முடிவல்ல. எஞ்சியிருக்கும் வாழ்க்கை முழுமையிலும் கற்று தங்களது அன்றாட வாழ்வில் கற்றல் திறன்களைப் பயன்படுத்த ஆரம்பிக்கின்றனர் என்பது தான் காணக் கிடைக்கும் உண்மையாகும்.

மேற்காண் நிகழ்விலிருந்து குமரப் பருவத்தினர் தனது எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ளத் தீவிர ஈடுபாடு கொள்ளுதல், அறிவுத்திறன் மேம்பாடு பெறுதல், தன் வயதொத்த நண்பர்களிடம் நெருங்கிய உறவு கொள்ளுதல், சமுதாயம் மற்றும் குழுச் செயல்களில் ஈடுபாடு, அதிகத் தன்னம்பிக்கை கொள்ளுதல், பெற்றோரிடமிருந்து தனித்துச் செயல்படுதல், தானே சிந்தித்து முடிவெடுத்து ஈடுபாட்டுடன் செயல்படுதல் ஆகியவை குறித்து விவாதித்து அறிந்து கொள்ளவும் முடியும்.

# பகுதி- ஆ

## அலகு – 7

## கற்றல்

தற்போது ஆரம்பப் பள்ளிகளில் செயல்வழிக் கற்றல் முறையில் கல்வி கற்பிக்கப்படுகிறது. இம்முறையில் குழந்தைகள் எவ்வாறு பாடங்களைக் கற்கிறார்கள் என்பதை உற்றுநோக்கி ஆசிரிய மாணவர்கள் பதிவேடு தயாரிக்க வேண்டும். குழந்தை தான் கற்கும் முய்றிசியில் எந்த அளவுக்குத் தன்னையே சார்ந்து இருக்கின்றது? எந்த அளவுக்கு சக மாணவர்களின் உதவியைச் சார்ந்து இருக்கின்றது? எந்த அளவுக்கு ஆசிரியரின் உதவியை நாடுகின்றது என்ற விதத்தில் வகுப்பில் ஏதேனும் 3 குழந்தைகளை உற்றுநோக்கி தகவல் திரட்டி அதன் அடிப்படையில் பதிவேடுகள் தயாரிக்க வேண்டும். அதில் கிடைத்த முடிவுகள் பற்றி வகுப்பில் கலந்துரையாடல் செய்து பின்வரும் பாடப்பகுதியை தொடங்கவும்.

உற்றுநோக்கல் மற்றும் கற்பித்தல் பயிற்சிக்கு ஆசிரிய மாணவர்கள் பள்ளிகளுக்குச் செல்லும்போது கற்கும் குழந்தை பாடத்திற்கான பரிசோதனை / செய்முறை பயிற்சிகளுக்கு பின்வரும் தகவல்களையும் புள்ளி விவரங்களையும் தயாரிக்க வேண்டும்.

### உற்றுநோக்கல் படிவம்

1. உற்றுநோக்கல் நடத்தப்படும் பள்ளியின் பெயர் :
2. உற்றுநோக்கல் நடத்தும் ஆசிரிய மாணவர் பெயர் :
3. உற்றுநோக்கல் நடத்தப்படும் நாள் :
4. உற்றுநோக்கப்படும் குழந்தையின் பெயர் : 5. வயது : 6. வகுப்பு :
7. உற்றுநோக்கலுக்கான மாதிரி வினாக்கள் :

அ. படித்த பாடத்தில் உள்ள ஏதேனும் வார்த்தைகளைத் திரும்பத் திரும்ப சொல்லிப் பார்க்கிறாரா?

ஆ. மண்ணில் அல்லது தாளில் எழுதிப்பார்க்கிறாரா?

இ. அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்துகிறாரா?

ஈ. வீட்டு வேலைகளைத் தவறாமல்செய்து வருகிறாரா?

உ. காலையிலும் மாலையிலும் வீட்டில் பாடங்களைப் படிக்கிறாரா?

ஊ. சக மாணவர்களிடம் பாடம் தொடர்பான வினாக்களைக் கேட்கிறாரா?

எ. ஆசிரியரிடம் பாடம் தொடர்பான வினாக்களைக் கேட்கிறாரா?

ஏ. பெற்றோர்களிடம் பாடம் தொடர்பான வினாக்களை கேட்கிறாரா?

ஐ. பாடத்தில் வரும் செய்தியை வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளோடு தொடர்பு படுத்துகிறாரா?

ஒ. வகுப்பில் ஆசிரியர் சொல்லும் பாடத்தை கவனித்துக் கேட்கிறாரா?

ஓ. எழுத்துகளைக் கற்றுக்கொண்ட மாணவன் அதனைப் பயன்படுத்தி நடைமுறை வாழ்க்கையில் செய்தித்தாள், பள்ளி மற்றும் ஊர், பெயர் பலகைகள், பேருந்தில் எழுதப்பட்ட ஊர்கள் ஆகியவற்றை படிக்கிறானா?

ஔ. ஒரு பாடத்தில் கற்ற செய்தியை மற்ற பாடத்து அறிவோடு இணைத்துப் பேசுகிறாரா?

இன்னும் இதுபோன்ற சில வினாக்களை இத்துடன் இணைத்து ஒரு குறிப்பிட்ட மாணவனைப் பல சமயங்களில் உற்றுநோக்கி இவ்வினாக்களுக்கு விடையைப் பதிவு செய்வதன்மூலம் அம்மாணவனின் கற்கும் பழக்கத்தை ஆராயவேண்டும்.

**முன்னுரை**

ஆசிரிய மாணவர்கள் கற்பித்தல் பயிற்சிக்குப் பள்ளிகளுக்குச் சென்றபோது உற்றுநோக்கல் படிவத்தில் குழந்தைகளின் கற்கும் பழக்கம் தொடர்பான தகவல்களைத் திரட்டி வந்தனர். அந்த தகவல்களை ஆசிரிய மாணவர்கள் ஆராய்ந்து பதிவேடு தயாரிக்க வேண்டும். அதில் கிடைக்கும் முடிவுகளின் அடிப்படையில் மாணவர்களின் கற்கும் பழக்கம் பற்றி வகுப்பில் கலந்துரையாடல் நிகழ்த்தி அதன் அடிப்படையில் பின்வரும் பாடப் பகுதியைத் தொடங்க வேண்டும்.

மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை கற்றுக்கொண்டே இருக்கிறான். குழந்தைகள் உண்ணுதல், ஓடுதல், எழுதுதல் போன்ற பலவிதமான உடலியக்கச் செயல்களைக் கற்கின்றனர். அம்மா என்ற சொல்லில் உள்ள எழுத்துகள், இமயமலையின் இருப்பிடம் போன்ற எண்ணிலடங்காச் செய்திகளைக் கற்கின்றனர். கற்க – நிற்க என்றும் சொற்களின் அமைப்பையும், உயிருள்ளவற்றிற்கும் உயிரற்றவற்றிற்கும் இடையே உள்ள வேறுபாட்டையும், இமயமலை நம் நாட்டிற்கு அரணாக விளங்கும் விதத்தையும் கற்கின்றனர். ஆசிரியர் கேள்வியைக் கேட்டால் கையை உயர்த்தவும், யாருடைய மனதையாவது புண்படுத்திவிட்டால் மன்னிப்பு கேட்கவும் பள்ளியில் ஒப்படைப்புகளை உரிய நாளில் சமர்ப்பிக்கவும் கற்கின்றனர். எந்தெந்தச் சூழ்நிலையில் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் கற்கின்றனர்.

## 1. கற்றல் ஓர் இயக்கமுள்ள உள்ளார்ந்த செயல்

குழந்தைகள் சூழ்நிலையில் உள்ள தூண்டல்களைப் பெறுபவர்கள் மட்டும் அல்லர். மாறாக அவர்கள் இயற்கையாக தங்கள் சூழ்நிலையைப் பற்றி தெரிந்துகொள்ள ஆர்வம் கொண்டவர்களாய், இந்த உலகை மேலும் புரிந்துகொள்ள உதவியாக மனத்தளவில் சுறுசுறுப்புடன் செய்திகளைத் தேடுபவர்களாக இருக்கின்றனர். காணும் பொருள்களை ஆராய்ந்து அவர்கள் செய்யும் செயல்களின் விளைவுகளை உற்றுநோக்கித் தொடர்ந்து மனத்தளவில் பரிசோதனை செய்கின்றனர்.

என்ன கற்றுக் கொள்ளப்படுகிறது என்பதனை அறிவுசார் கூறுகளும் முறைகளும் நிர்ணயிக்கின்றன. மனிதன் தன் அனுபவங்களிலிருந்து என்ன கற்றுக் கொள்கிறான் என்பது அவன் தன் அனுபவங்களைப் பற்றி என்ன நினைக்கிறான். அதனை எவ்வாறு எடுத்துக் கொள்கிறான் என்பதைப் பொருத்து அமையும்.

மனிதர்கள் தாங்கள் முன்பே அறிந்த அனுபவங்களுடன் தற்போது பெறும் செய்திகளைத் தொடர்புபடுத்தும்போது புதிய செய்தியை மிகவும் எளிமையாகக் கற்றுக்கொள்ள முடிகிறது. இவ்வாறே மனிதன் தான் பெற்ற ஒட்டுமொத்த அனுபவங்களுடன் புதிய செய்தியைத் தொடர்புபடுத்தும்போது அதிக எண்ணிக்கையில் செய்திகளைக் கற்றுக்கொள்ள முடிகிறது.

### கற்றல்: தெரிவு செய்து செய்யும் செயல்

மனிதன் தான் கற்பனவற்றைத் தெரிவுசெய்து கற்கிறான். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அவனைச் சுற்றி எண்ணற்ற தூண்டல்கள் சூழ்ந்திருக்கின்றன. ஆனால் அவன் அவற்றுள் சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவற்றில் மட்டும் கவனம் செலுத்துகின்றான். மற்றவைகளைப் புறத்தே தள்ளிவிடுகின்றான். உதாரணமாக நீங்கள் இந்த வரிகளைப் படிக்கும்போது உங்களுக்குப் பின் பல தூண்டல்கள் சூழ்ந்திருந்தாலும் நீங்கள் அவற்றையெல்லாம் புறத்தே தள்ளி உங்கள் கவனத்தை இந்த செய்திகளின் மீது வைத்திருந்தீர்கள். உங்களைச் சுற்றியிருந்த பொருள்கள், உங்களை சுற்றி நடந்த நிகழ்ச்சிகள், காதுகளுக்குள் வந்து விழுந்த ஒலிகள், கையில் இருந்த பொருள், கால் இருந்த இடம், முதுகில் தொட்டிருந்த பொருள் போன்ற அனைத்தையும் தள்ளிவிடுகிறீர்கள்.

இதுபோலவே நம்மிடம் பயிலவரும் குழந்தைகளும் ஒவ்வொரு நாளும் எண்ணில்லாத தூண்டல்களால் தூண்டப்படுகின்றனர். ஆசிரியர் கொடுக்கும் கட்டளைகள், பாடநூல்கள், சுவடிகள், பள்ளித்தகவல் பலகை, சக மாணவர்களின் நடத்தைகள் இன்னும் பல. குழந்தைகள் அவற்றுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றிற்கு மறிவினை செய்கின்றார்கள். எனவே ஆசிரியர்கள் என்ற முறையில் மாணவர்கள் எதைத் தெரிந்தெடுத்து கவனித்து செயல்புரிந்து மனதில் நிறுத்தவேண்டும் என்பதற்குச் சரியான முடிவுகளை எடுக்க நாம் உதவி புரிய வேண்டும்.

### கற்றல்: பொருளை உருவாக்கும் செயல்

கற்கும் குழந்தைகளால் சூழ்நிலையைப் பற்றி பொருள் உருவாக்கப்படுகிறதேயன்றி சூழ்நிலையில் உள்ளவற்றை உள்ளவாறே நேரடியாகப் பொருள் கொள்வதில்லை. சூழ்நிலைக்குப் பொருள் கொடுப்பது என்பது கற்றல் கொள்கைகளின் முக்கிய பகுதியாகும். பல செய்தித் துணுக்குகளை ஒன்று சேர்த்து உலகைப் பற்றிய புதிய பொருளைப் பெறுகின்றனர்.

உண்மையில் மாணவர்கள் வகுப்பறைக் கற்பித்தலை அவர்களுக்கே உரித்தான முறையில் அவர்களது அறிவு திறமை மனப்பான்மை ஆகியவற்றிற்கு ஏற்றபடி பொருள் கொண்டு கற்றுக்கொள்கிறார்கள். எனவே வகுப்பறைக் கற்பித்தலில் நாம் அவ்வவ்போதே வினாக்களைக் கேட்டு உரையாடல்களை ஊக்குவித்து மாணவர்களின் கருத்துகளுக்கும், விளக்கங்களுக்கும் காது கொடுத்து அவர்களுடைய கற்றலை முறைப்படுத்த வேண்டும்.

### கற்றல்: அறிவுக் கட்டமைப்பை உருவாக்கும் செயல்

மாணவர்களின் முன் அனுபவமும் நம்பிக்கைகளும் பொருள் கொள்வதில் முக்கிய பங்கு ஆற்றுகின்றன. வகுப்பில் ஆசிரியர் எல்லா மாணவர்களுக்கும் ஒரே மாதிரியான செயல்களைக் கொடுத்தாலும் வெவ்வேறு மாணவர்கள் அவற்றை வெவ்வேறு விதமாகப் புரிந்து கொள்கின்றனர். காரணம் அவர்கள் வேறுபட்ட அனுபவங்களையும் நம்பிக்கைகளையும் கொண்டு அவர்கள் பொருள் கொள்வதேயாகும். மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு வரலாறு உண்டு. அவர்கள் ஒவ்வொருவரும்

ஒவ்வொருவிதமான சூழ்நிலைகளில் இருந்து வருகிறார்கள். பெரும்பான்மையான உளவியல் அறிஞர்கள் மனிதர்கள் தங்கள் அனுபவத்திலிருந்து என்ன கற்கிறார்கள் எவ்வளவு சிறப்பாகக் கற்கிறார்கள் என்பதில் உலகைப் பற்றி அவர்கள் கொண்டுள்ள முன்னறிவு முக்கியபங்கு வகிக்கின்றன என்று நம்புகிறார்கள்.

கட்டமைப்புக் கொள்கையாளர்கள் நோக்கில் கற்றல் என்பது கற்றல் சூழ்நிலைகளில் தங்களுக்கு அளிக்கப்படும் பொருள்கள் செயல்கள் ஆகியவற்றிலிருந்து குழந்தைகள் பெறும் புதிய செய்தியைத் தாங்கள் ஏற்கனவே பெற்றிருக்கும் அறிவுத் தொகுதியுடன் இணைத்துக் கட்டமைத்துக் கொள்வதாகும். எடுத்துக்காட்டாகப் பல்வேறு போக்குவரத்துச் சாதனங்களின் படங்களைக் குழந்தைகளிடம் கொடுத்து அத்துடன் அவர்களுக்கு ஒரு கலந்துரையாடலையும் இணைத்தால் குழந்தைகள் ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்து போக்குவரத்துபற்றிய தங்களுடைய அறிவைக் கட்டமைத்துக் கொள்வார்கள்.

முதலில் குழந்தைகளின் கட்டமைப்பு சாலைப் போக்குவரத்து பற்றி இருக்கலாம். தூரத்து கிராமங்களிலிருந்து வரும் குழந்தை, தங்கள் ஊரில் பார்த்த மாட்டு வண்டியை மையமாக வைத்து போக்குவரத்து பற்றி தனது அறிவைக் கட்டமைத்துக் கொள்கிறது. இங்கே குழந்தைகள் திட்டமிட்ட செயல்மூலம் வெளியுலகப் பொருட்களினுடைய மனஉருவங்களைக் கட்டமைத்துக் கொள்கின்றனர். கருத்துகளைக் கட்டமைத்துக் கொள்வதும் பின்னர் அதனை மாற்றியமைத்துக் கொள்வதும் குழந்தை கற்றலில் முன்னேற்றம் அடையும்போது ஏற்படும் முக்கிய நிகழ்ச்சிகளாகும்.

முதலில் சாலைப் போக்குவரத்துச் சாதனங்களை மையமாக வைத்துக் கட்டமைக்கப்பட்ட போக்குவரத்து பற்றிய அறிவு பொருத்தமான செயல்பாடுகள் மூலம் நீர்வழிப் போக்குவரத்து, ஆகாய வழிப் போக்குவரத்து ஆகியவற்றினையும் தன்னுடன் இணைத்துக் கொண்டு மாற்றி கட்டமைக்கப்படுகின்றன. மேலும் பொருத்தமான செயல்பாடுகள் மூலம் போக்குவரத்திற்கும் மனித வாழ்க்கைக்கும் (பொருளாதாரம் இடப்பெயர்ச்சி) இடையே உள்ள காரணகாரிய தொடர்புகளைப் பற்றிய மன உருவங்களைக் குழந்தைகள் கட்டமைத்துக் கொள்ள உதவமுடியும்.

இருப்பினும் கட்டமைப்பு முறையில் ஒரு சமூக நோக்கும் இருக்கின்றது. அதாவது ஒரு சிக்கலான வேலையைச் செய்யத் தேவையான அறிவு குழுவாக ஒன்று சேர்ந்து முயற்சி செய்வதால் எளிதாகக் கிடைக்கும். இச்சூழ்நிலையில் சமூகத்தில் பிறருடன் இணைந்து கற்பது என்பது சமரச போக்குடன் கலந்துரையாடி பல கருத்துகளைப் பகிர்ந்து கொள்ளவும் வெளியுலகப் பொருட்கள் பற்றிய மனவுருவங்களை மாற்றி கொள்ளவும் இடமளிக்கிறது. அறிவினைக் கட்டமைத்துக் கொள்வது என்பது ஒவ்வொரு குழந்தையும் தன்னைத் தானும் பிறருடனும் இணைந்து பொருளைக் கட்டமைத்துக் கொள்வதைக் குறிக்கின்றது. இவ்வாறு பொருளை உருவாக்கிக் கொள்வதே கற்றல் ஆகும். குழந்தைகள் ஈடுபட்டுள்ள கட்டமைப்புச் செயல்களில் ஆசிரியரும் சுறுசுறுப்புடன் பங்கேற்பாரானால் குழந்தைகளின் அறிவு வளர்ச்சியில் ஆசிரியரின் பங்கு அதிகரிக்கும்.

கற்றல் செயல்பாட்டில் ஈடுபடும் ஒரு குழந்தை தன்னுடைய அறிவினைத் தானே கட்டமைத்துக் கொள்வதால் வகுப்பறையில் பாடத்தையும் வெளியுலக நிகழ்ச்சிகளையும் தொடர்புபடுத்திக் கொள்ள குழந்தைகள் வினாக்கள் கேட்க அனுமதிப்பதும், ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கு மனப்பாடம் செய்து ஒரே ஒரு பதிலை திரும்பத்திரும்பக் கூறாமல் பலவிதமான விடைகளைக் குழந்தைகள் தங்கள் சொந்த நடையில் பதில் அளிக்க ஊக்கப்படுத்துவதும், எளிமையான செயல்கள் என்றாலும் குழந்தைகள் தங்கள் அறிவைக் கட்டமைத்துக் கொள்ள உதவும் முக்கியப் படிகளாகும்.

பொதுவாக அனுபவத்தின் வாயிலாகவும் அல்லது தகவல் தொடர்பு சாதனங்கள் மூலமாகவும் குழந்தைகள் அறிவைப் பெற்றிருந்தாலும் அதனை ஆசிரியர்கள் பாராட்டும் விதத்தில் அவர்களால் கூறமுடிவதில்லை. இச்சமயத்தில் குழந்தைகளுக்கு என்ன தெரியும். ஓரளவுக்கு என்ன தெரியும் என்னும் இரு எல்லைக்குள் அறிவு கட்டமைக்கப்படுகின்றது. இத்தகைய அறிவு பள்ளிக்கு வெளியே வீட்டில் அல்லது சமுதாயத்தில் வளர்க்கப்படும் திறமையாக இருக்கலாம். இத்தகைய அறிவும் திறனும் மதிக்கப்பட வேண்டியன. இதை உணர்ந்து பொறுப்புள்ள ஆசிரியர்கள் குழந்தைகள் தங்கள் வளர்ச்சியை தாங்களே அறிந்துகொள்ளும் அளவுக்கு அவர்களை நன்கு திட்டமிட்ட செயல்களில் ஈடுபடுத்த வேண்டும்.

இயக்கமுள்ள செயல்பாடு என்பது ஒரு புதிய கொள்கைகளை கட்டமைக்கவும் புதியன படைக்கவும் உதவும் விசாரணை, ஆராய்தல், வினவுதல், வாதிடுதல், பயன்படுத்துதல் மற்றும் பிரதிபலித்தல் ஆகியவற்றைக் கொண்டது. இவற்றிற்கெல்லாம் ஆசிரியர் வகுப்பில் உள்ள குழந்தைகளுக்கு வாய்ப்பு கொடுக்கத் தேவையான கற்றல் சூழ்நிலைகளை ஏற்படுத்தித் தரவேண்டும்.

**கற்றலின் பயன்**

கற்றலின் மூலம் குழந்தைகளின் நடத்தையையும், சிந்தனையையும் சமுதாயத்திற்கு ஏற்றவாறு முறைப்படுத்தி அவர்களை நாட்டின் நல்ல குடிமக்களாக உருவாக்குவதே நாம் பள்ளியில் அளிக்கும் கல்வியின் நோக்கம். பள்ளியில் கல்வி என்பது நான்கு விதமான கற்றல் திறன்களை வளர்க்க வழிவகை செய்ய வேண்டுமென யுனெஸ்கோவின் டெலார்ஸ் **(1996)** அறிக்கை வலியுறுத்துகின்றது.

**அறிவுபெற கற்றல்**

குறைந்தபட்சம் பெருமிதத்துடன் வாழவும் ஒரு தொழிலைச் செய்யவும் சமுதாயத்தில் பிறருடன் தனது கருத்தைப் பகிர்ந்து கொள்ளவும் மனிதன் அறிவைப் பெறவேண்டும். அறிவு அற்றம் காக்கும் கருவி என்றார் வள்ளுவர். எனவே மனிதன் அறிவை பெற கற்கிறான். அறிவு விசாலமாகும் போது மனிதன் இந்த உலகைப் பற்றி தனது சூழ்நிலையைப் பற்றி நன்கு புரிந்துகொள்ள முடியும்.

அறிவைப் பெற கற்றல் என்பது தன் சொந்த உற்றுநோக்கல், கவனிக்கும் திறன், நினைவாற்றல் ஆகிய திறன்களை வளர்த்துக் கொள்வதாகும். மனிதன் சிறுகுழந்தை முதல் பார்த்தல், கேட்டல், நுகர்தல், சுவைத்தல், தொடுதல் ஆகிய புலன்கள் வழியாக, திறன்களை வளர்த்து கொள்கிறான். மனிதன் வாழ்க்கையில் பல்வேறு நிலைகளில் பல்வேறு கற்றல் சூழ்நிலைகளில் மனிதன் கவனிக்கும் திறன் முன்னேற்றம் அடைகின்றது. சிறுகுழந்தை முதலில் வெளியுலகப் பொருள்கள் மீது எவ்வாறு கவனம் செலுத்துவது என்று அறிந்து கொள்கின்றனர். பள்ளியில் விளையாட்டு வேலை பயணம் அறிவியல் செய்முறைகள் போன்ற கற்றல் செயல்முறைகளில் குழந்தைகள் கவனிக்கும் திறனை வளர்த்துக் கொள்கின்றது.

**செயல்களைச் செய்யக் கற்றல்**

வாழ்க்கையில் ஒரு தொழிலுக்கான பயிற்சியை இது குறிக்கின்றது. மனிதர்கள் எதிர்காலத்திற்குத் தேவையான ஒரு தொழிலைச் செய்ய உதவி புரியம் வகையில் கல்வியை அளிக்க வேண்டும். இது உற்பத்தித் துறையில் ஒரு மனிதனை ஒரு குறிப்பிட்ட வேலையை மட்டும் செய்ய பயிற்சி அளிப்பதை குறிப்பது இல்லை. ஏறக்குறைய வழக்கமாகச் செய்யும் வேலைக்கு மேலாக பலவிதமான வேலைகளை செய்ய அளிக்கப்படும் பயிற்சியைத் தொழில் பயிற்சி குறிக்கிறது.

இன்றைய தொழில்நுட்ப வளர்ச்சி உற்பத்தித் துறையில் ஒரு தொழிலைச் செய்யத் தேவையான திறமைகளில் மாற்றத்தைக் கொண்டு வந்து இருக்கின்றது. உடல் திறன் மாற்றம் அடைந்து இப்போது செயல்பாடுகள், பராமரித்தல், கண்காணித்தல், இயந்திரங்கள் அமைப்பு, குழு வேலைகள் போன்ற அறிவுத்திறன்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. இயந்திரங்களே நுண்ணறிவு மிக்கதாக மாறிவிட்டதால் பணியாளர்களைத் திரும்பத் திரும்ப ஒரே விதமான பணியினைச் செய்யும் பணியாளர்கள் என்ற முறையில் வகைப்படுத்தாமல் தற்போது ஜப்பானிய முறைப்படி உற்பத்தியாளர்கள் வேலை செய்யும் குழு, செயல்திட்டக் குழு எனப் பிரிக்கப்படுகின்றனர். ஒரே பணியை ஒருவரே செய்து வருவதால் பணியாளர்களை பரிமாற்றம் செய்ய முடிவதில்லை. எனவே நிறுவனங்கள் பணியாளர்களை அவர்கள் எடுத்துக்கொண்ட தொழில்துறையைப் பொருத்து மதிப்பிடாமல் அவர்களின் தனி நபர் திறமையின் அடிப்படையில் மதிப்பீட்டுச் செய்கின்றனர். இந்த தனிநபர் திறன் பல தொழில் திறமைகள் மற்றும் எடுத்துக்கொண்ட தொழில் பயிற்சியுடன் சமூக நடத்தை, தானே தொடங்குதல், துணிச்சலில் விருப்பம் போன்ற கூறுகளின் மூலம் அளவிடப்படுகிறது.

தற்காலத்தில் மக்கள் செய்யும் தொழில்கள் உடல் உழைப்பிலிருந்து சேவைத் தொழிலுக்கு சிறிது சிறிதாக மாறிவருகின்றது. பொருளாதாரத்தில் வளர்ந்த நாடுகளில் உழைக்கும் மக்கள் தொகையில் **60–80** சதம் வரை மக்கள் சேவைத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். சேவைத் தொழிலுக்கு அறிவுத் தொகுதியும் தகவல் பரிமாற்றத் திறமையும் அவசியம். இத்திறமைகளை ஏர் உழுவது போலவோ இரும்புத் தகட்டை உருவாக்குவது போலவோ பெற்றுவிட முடியாது. மாறாக சமூக உறவு, தொழிலாளர் உறவு ஆகியவற்றின் மூலமே கற்றுக்கொள்ள முடியும். இன்றைய உலகில் ஒரு தொழிலைச் செய்வதற்கு சமூகத் திறன் முக்கியமான தகுதியாக உள்ளது. சுறுசுறுப்பு, பிரச்சனைகளைத் தீர்க்கும் திறன், முடிவு எடுக்கும் திறன், புதியன படைக்கும் திறன், குழு மனப்பான்மை ஆகியவற்றுடன் கூடிய நூல் அறிவு மற்றும் அனுப அறிவு தனியாள் திறமையின் புதிய வடிவமாகக் கருதப்படுகின்றது.

**வாழக் கற்றல்**

குழந்தைகள் வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். மனிதன் ஒரு சமூக விலங்கு என்றார் அரிஸ்டாட்டில். மனிதன் தனியே வாழ முடியாது. பிறரைச் சார்ந்தே வாழ வேண்டியுள்ளது. ஆனால் இன்றைய உலகில் மனிதர்கள் தங்கள் திறமைகளை அளவுக்கு அதிகமாக எடைபோட்டு பிறர் மீது தப்பெண்ணம் கொண்டிருக்கின்றனர். மேலும் இன்றைய உலகச் சூழ்நிலையில் வீட்டளவிலும் நாட்டளவிலும் போட்டி மனப்பான்மை என்பது ஒரு நவீன கால விழுமியமாக மாறிவிட்டது.

இச்சூழ்நிலையை இன்றைய குழந்தைகள் எதிர்கொள்ள ஒரே வழி அவர்களுக்குக் கூடிவாழ கற்பிப்பது ஆகும். இதையே உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும் கல்லார் அறிவிலார் என்று திருவள்ளுவரும், ஔவையார் ஊருடன் கூடிவாழ் என்றும், பாரதியார் கூடி விளையாடு பாப்பா என்றும் கூறிச் சென்றுள்ளனர். இதனைப் பின்பற்றி எதிரிடையான கருத்துக்கள் கொண்ட இருவரை சமதர்ம சமுதாயத்தில் ஒரு பொது நோக்கிற்காகச் செயல்பட வைக்கவேண்டும். இதனால் அவர்களின் தப்பெண்ணம் மறைந்து ஒற்றுமைக்கும் நட்புக்கும் வழிவகுக்கும். மேலும் பள்ளிகளில் நாம் பின்வரும் இரண்டு முறைகளைப் பின்பற்றிக் குழந்தைகள் கூடி வாழக் கற்பிக்கலாம்.

**சமுதாயத்தில் பிறரைப் புரிந்து கொள்ளுதல்**

சிசு பருவம் முதல் பிறரது திறன்களுக்கும் கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கக் கற்பிக்க வேண்டும். பள்ளியில் குழந்தைகளுக்கு மனிதர்களிடையே காணப்படும் வேறுபாடுகளை அறியச் செய்வதும் அதே சமயத்தில் மனிதர்களிடையே காணப்படும் ஒற்றுமை சகிப்புத்தன்மை

ஆகியவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் அவசியம். ஆரம்பப் பள்ளிகளில் கற்பிக்கப்படும் பாடங்களினூடே பல்வேறு மனிதர்களைப் பற்றியும் பல மொழிகள், இலக்கியங்கள் பற்றியும் கற்பித்தல் மூலம் இத்தகைய விழிப்புணர்வை ஏற்படுத்தலாம்.

மனிதர்களிடையே காணப்படும் வேறுபாடுகளைக் குழந்தைகள் அறியச்செய்து அதே சமயத்தில் ஒற்றுமை, சார்புத்தன்மை ஆகியவற்றில் விழிப்புணர்வை அவர்களுக்கு ஏற்படுத்துவது ஆகும். இந்த இருவழி அணுகுமுறைக்குப் பள்ளியில் முதல் வாய்ப்பினை ஏற்படுத்தித் தரவேண்டும். ஆதாரக்கல்வி, அண்டைமொழி இலக்கியம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும்போது மேற்சொன்ன பண்புகளை வளர்க்கும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன. கல்வியானது வீட்டிலோ சமுதாயத்திலோ பள்ளியிலோ அளிக்கப்பட்டாலும் பிறரைப் புரிந்துகொள்ளவும் பிறருடைய பார்வையிலிருந்து நின்று பார்த்து அவருடைய சுபாவங்களைப் புரிந்துகொள்ளவும் கற்பிக்க வேண்டும். அதாவது துன்பப்படும் ஒருவரின் இடத்தில் தன்னை வைத்துப் பார்க்கக் கற்பிக்க வேண்டும். இத்தகைய பரிவு பள்ளிகளில் கற்பிக்கப்படுமானால் அது குழந்தைகளிடம் எஞ்சியுள்ள எதிர்கால வாழ்க்கையில் ஒரு நல்ல தாக்கத்தை ஏற்படுத்தும்.

சிறுகுழந்தைக்குப் பிற மத இன மக்களின் நோக்கில் உலகினைப் பார்க்கக் கற்பித்தால் அது வளர்த்தவர்களிடையே தவறான புரிந்துகொள்ளுதல் மற்றும் வன்முறை ஆகியவற்றையும் தீர்க்கும் ஒரு வழியாக அமையும். எனவே பலதரப்பட்ட சமயங்களின் அல்லது நாகரீகங்களின் வரலாற்றை கற்பிப்பதன் மூலம் குழந்தைகளிடத்தில் எதிர்கால நன்னடத்தையை உருவாக்கும் பயனுள்ள புறவரிச் சட்டத்தை அளிக்கலாம். மேலும் பிறருடைய உரிமைகளைப் புரிந்துகொண்டு மதிக்கும் விதத்தில் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் கல்வி அமைய வேண்டும்.

### பொதுநோக்கங்களுக்காக உழைத்தல்

இடைநிலைக் கல்வி முதல் கொண்டு மாணவர்களைப் பொது நோக்கங்களுக்கான செயல் திட்டங்களில் ஈடுபடுத்தி அதில் சிறப்பாகச் செயல்பட ஊக்கப்படுத்த வேண்டும். இது கருத்து வேறுபாடுகளைக் களையும் சிறந்த வழியாகும். மனிதர்கள் ஒரு புதுவிதமான செயல் திட்டங்களில் தங்களை ஆர்வத்துடன் இணைத்துக்கொண்டு செயல்படும்போது வேறுபாடுகளும் முரண்பாடுகளும் குறையத் தொடங்கிவிடும் அல்லது மறைந்துவிடும்.

பொதுக் காரணங்களுக்காக தங்களை ஈடுபடுத்திக் கொள்வதன் மூலம் வகுப்புகள் மற்றும் நாடுகளுக்கு இடையேயான மன இறுக்க உணர்வு ஒரு ஒருமைப்பாட்டு உணர்வாக மாறுகின்றது. பணிபுரியும் இடங்களில் மனிதர்கள் நிர்வாக அமைப்புகளில் ஏற்படும் முரண்பாடுகளை வெற்றிகரமாகத் தாண்டி நமது பணியில் ஈடுபாட்டுடன் செயல்படாவிட்டால் பல சாதனைகளையும் நாம் செய்திருக்க முடியாது.

விளையாட்டுகளிலும், கலைத்திட்ட இணைச் செயல்களிலும் இணைந்து செய்யும் செயல் திட்டங்களிலும் குழந்தைகளைச் சிறுவர் முதல் ஈடுபடுத்த முறை சார்ந்த கல்வியில் போதிய அளவு காலமும் வாய்ப்புகளும் வழங்கப்பட வேண்டும். இந்த அணுகுமுறையில் அவர்களை குடிசைப்புற வாழிடங்களைப் புதுப்பித்தல், தூய்மை செய்தல், ஒடுக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல், மனிதாபிமானச் செயல்கள் மூத்த குடிமக்களுக்கு உதவும் திட்டங்கள் போன்ற சமூகச் செயல்பாடுகளில் ஈடுபடுத்த வேண்டும். அன்றாட பள்ளி வேலைகளில் ஆசிரியரும் மாணவரும் பொது செயல் திட்டங்களில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வது முரண்பாடுகளைத் தீர்க்கும் ஒரு வழிமுறையை குழந்தைகளுக்குக் கற்பிக்க உதவும். மேலும் அது குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கைக்கு ஒரு முன்மாதிரியையும் அளிக்கும்.

**நல்ல மனிதனாக இருக்கக் கற்றல்**

கல்வியானது ஒரு மனிதன் உடல், உள்ளம், நுண்ணறிவு, புலன், உணர்ச்சி, அழகு உணர்ச்சி, ஆன்மீகம் ஆகியவற்றின் முழுவளர்ச்சிக்கு உதவவேண்டும். ஒவ்வொருவரும் தங்கள் சொந்த வாழ்க்கையில் பல்வேறு சூழ்நிலைகளில் சிறந்த முடிவுகளை எடுக்கத் தங்கள் குழந்தை தற்சார்பு சிந்தனைத்திறன் முடிவு எடுக்கும் திறன் ஆகிய திறமைகளை கொடுக்கும் கல்வியை பெற வேண்டும். மனிதர்கள் ஒவ்வொருவரும் ஒரு தனி மனிதனாகவும் குடும்ப உறுப்பினராகவும், சமுதாய உறுப்பினராகவும் நாட்டின் குடிமகனாகவும் தன்னை அர்ப்பணித்துக்கொள்ளவும், ஆளுமைத் திறமையில் தன்னை வெளிக்காட்டும் விதம் ஆகியவற்றில் சிறந்த விளங்கவும், மனிதன் நிறைவடையச் செய்வதே வளர்ச்சியின் நோக்கமாகும்.

பிறந்தது முதல் இறக்கும் வரை நிகழும் மனிதனின் வளர்ச்சியனாது தன்னை பற்றி அறியவும் மற்றும் சமுதாயத்தில் பிறருடைய உறவு என்னும் இரு வேறுபட்ட முறையை அடிப்படையாகக் கொண்டது. ஆளுமைப்பயிற்சியை பொருத்தமட்டில் கல்வியானது தனியாளை அடிப்படையாகக் கொண்டு இருக்க வேண்டிய அதே சமயத்தில ஒரு இடைவினை மற்றும் சமூக அனுபவம் நிறைந்ததாகவும் இருக்க வேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் வாழக் குழந்தைகளுக்குக் கல்வி அளிப்பதைவிட உலகைப் புரிந்துகொள்ளவும் நல்ல மனம் உள்ளவராகவும் பொறுப்புள்ள மனிதராகவும் நடந்துகொள்ள மனத் திறமைகளையும் மனித வளத்தையும் எப்போதும் பெற செய்வதே கல்வியின் நோக்கமாக இருக்கிறது. ஆளுமைவேறுபாடு, தற்சார்பு, தானே தொடங்குதல், மேலும் வழக்கத்தை மாற்றி அமைத்தல் போன்றவை ஆக்கத்திறனையும் புது முயற்சிகளையும் வளர்க்க உதவுகின்றது.

சமூக, பொருளாதாரத்தை முக்கிய காரணியாகக் கொண்டு வேகமாக மாறி வரும் இன்றைய உலகில் ஆக்கத்திறனுக்கும், கற்பனைத் திறனுக்கும் முக்கிய இடம் கொடுக்கப்படுகிறது. 21ஆம் நூற்றாண்டில் மனிதன் வாழ அவனுக்கு அசாதாரண கொடைகளைக் காட்டிலும் அதிகமான பல வகைப்பட்ட திறமைகள் தேவைப்படுகின்றன. தற்காலத்தில் பல துறைகளிலும் நிகழும் சாதனைகளையும், முன்னர் நிகழ்ந்த சாதனைகளையும் நிறைவு செய்வதற்கு குழந்தைகளுக்குக் கலை பண்பாடு, அழகுணர்ச்சி, அறிவியல் ஆகியவற்றில் பரிசோதனை செய்யவும், கண்டுபிடிப்புகள் நிகழ்த்தவும் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். அப்போது கல்வி பண்பாடு உடையதாகவும் பயன்பாடு மிக்கதாகவும் இருக்கும்.

## உ. முந்தைய அறிவுடன் புதிய செய்தியை இணைத்தல்

ஒரு மாணவனின் கற்றல் பிரச்சனையை ஓர் ஆசிரியர் அணுகுவது போல ஒரு மருத்துவரோ அல்லது ஒரு பொறியாளரோ அணுகமுடியாது. அவ்வாறே ஒரு பொறியியல் பிரச்சனையை ஒரு பொறியியலாளர் அணுகுவதுபோல ஓர் ஆசிரியரோ அல்லது ஒரு மருத்துவரோ அணுகமுடியாது. காரணம் இந்த உலகில் உள்ள ஒவ்வொருவரும் தங்கள் அனுபவம், பயிற்சி, திறமை ஆகியவற்றிற்கு ஏற்ப இந்த உலகில் உள்ள பொருள்களை வேறுபட்ட கோணங்களில் பார்க்கின்றனர். இவ்வாறு வேறுபடுதவற்குக் காரணம் தங்கள் அறிவு, திறமைகளுக்கு ஏற்ப அவர்கள் பெற்றிருக்கும் மன அமைப்பே ஆகும். இந்த மன அமைப்பை ஸ்கீமா என்று பியாஜே கூறுகின்றார்.

குழந்தை தன் சூழ்நிலையுடன் பொருத்தப்பாட்டைப் பெற உதவுவதற்கான தனித்தன்மை வாய்ந்த செயல்பாடுகளை செய்ய உதவும் ஓரளவு நிலையான ஒத்த தன்மைகள் கொண்ட திறமைகள் மற்றும் குணங்களுமே ஸ்கீமா ஆகும். தன் எதிர்கால அனுபவங்களைப் புரிந்து கொள்வதற்காக கடந்த

கால அனுபவங்களிலிருந்து மனத்தில் அமைத்துக்கொள்ளும் இந்த உலகத்தைப் பற்றிய புறவரிச் சட்டமே ஸ்கீமா ஆகும். இவையே அறிதலின் அடிப்படை அலகாக இருக்கின்றன. அறிவுசார்ந்த வளர்ச்சிக்கு அச்சுக்கட்டைகளாக செயல்படுகின்றன.

### ஸ்கீமாவின் வளர்ச்சி

தொடக்கத்தில் புலன் இயக்க ஸ்கீமா பொருள்கள் முன்னால் இருப்பதைச் சார்ந்து இருக்கின்றது. எடுத்துக்காட்டாக பால் குடித்தல், பார்த்தல், பிடுங்குதல் போன்றவை. அதற்குப் பிறகு அனுபவத்தின் வாயிலாக வெளியுலகிற்கான குறியீடுகள் சிறிது சிறிதாக மன அமைப்புக்குள் நுழைய ஆரம்பிக்கின்றன. அப்போது குழந்தை இன்னும் சிக்கலான செயல்களைச் செய்ய முடியும். அப்போது முடிச்சுகளைப் போடுதல், படுக்கை அமைத்தல் போன்ற சிக்கலான ஸ்கீமாக்களை குழந்தை உருவாக்கி கொள்கின்றது.

ஸ்கீமாக்கள் என்பவை நடத்தையாகவோ (உண்ணுதல், ஆடையணிதல்) குறியீடுகளாகவோ (சொற்கள், எண்கள், உருவங்கள்) அல்லது மனச் செயல்பாடுகளாகவோ (கணக்குகள் செய்தல் கற்பனை செய்தல்) இருக்கலாம். காலப்போக்கில் குழந்தைகள் பெறும் அனுபவங்களின் மூலம் ஸ்கீமா ஒன்றிணைக்கப்படுதல் மற்றும் பகுக்கப்படுதல் என்னும் செயல்கள் மூலம் பல்வேறுபட்ட சிக்கலான செயல்பாடுகளாக மாறுகின்றன. அப்போது மிகவும் பொருத்தமாகக் கட்டமைக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக சில ஸ்கீமாக்களுக்கு இடையே உள்ள வரிசைக் கிரமமான தொடர்புகளை குழந்தைகள் புரிந்து கொள்ள ஆரம்பிக்கின்றன. அதாவது பூனையும் நாயும் விலங்கினத்தைச் சேர்ந்தவை என்று புரிந்து கொள்கின்றனர்.

### உடன் இணைத்துக் கொள்ளுதலும், தன்மயமாக்கிக்கொள்ளுதலும்

புதிதாக உள்வாங்கும் செய்திகள் முன்னதாக உருவாகி இருக்கும் ஒரு ஸ்கீமாவுடன் பொருந்துகின்றவரைக்கும் அந்த ஸ்கீமாவில் மாற்றம் ஏற்படுவதில்லை. இந்த விதத்தில் எத்தனை புதிய செய்திகள் வந்தாலும் முன்னர் உள்ள அறிவோடு அதாவது ஸ்கீமாவோடு இணைத்துக் கொள்ளப்படுகின்றன. இதனை உடன் இணைத்துக் கொள்ளுதல் என்கிறோம். அதாவது ஒரு புதிதான பறவையை முதன் முதலில் காணும் குழந்தை அதைத் தான் பெற்றுள்ள பறவையின் ஸ்கீமாவுடன் இணைத்துக் கொள்கின்றது. அதாவது முந்தைய அறிவுடன் புதிய செய்தி இணைக்கப்படுகின்றது.

ஆனால் புதிதாக வரும் செய்திகள் முன்னதாக உருவாகியிருக்கும் ஸ்கீமாவுடன் பொருந்தாத சூழ்நிலையில் முந்தைய புதிய செய்தியை இணைத்துக் கொள்வதில் பிரச்சனை உருவாகின்றது. சிறிய காலணி ஒன்றில் பெரிய காலை நுழைப்பது போன்றதொரு பிரச்சனை உருவாகிறது. அப்போது குழந்தைகள் முன்னதாக உருவாக்கி இருக்கும் ஸ்கீமாவை மாற்றிக்கொண்டு அல்லது புதியதாக ஒரு ஸ்கீமாவை உருவாக்கிக்கொண்டு புதிய செய்தியை உள்வாங்கிக் கொள்கின்றனர். இவ்வாறு குழந்தை தான் கட்டமைத்து இருக்கும் முந்தைய ஸ்கீமாவை மாற்றிக்கொண்டு புதிய செய்தியை இணைத்துக்கொள்ளும் செயலுக்குத் தன்மையமாதல் என்று பெயர்.

எடுத்துக்காட்டாக பால் குடிக்கும் குழந்தை பால் குடிக்கும் ஸ்கீமாவுடன் தனக்குக் கிடைத்த பொருள்களை எல்லாம் வாயில் வைத்துக்கொள்கிறது. ஒரு குழந்தை வண்ணத்துப்பூச்சி பறப்பதை முதன் முதலில் பார்க்கும்போது அது தான் முன்னதாகப் பெற்றிருக்கும் பறவைகள் ஸ்கீமாவோடு இணைக்க முடியவில்லை. காரணம் வண்ணத்துப் பூச்சிக்கு இறகுகளும் அலகும் இல்லை. அப்போது குழந்தை தன் பறவையின் ஸ்கீமாவை இரண்டாகப் பகுத்து, பறவைகள் விலங்கினங்கள் இரண்டுவகை (பறவைகள் – வண்ணத்துப் பூச்சிகள்) எனத் தன் ஸ்கீமாவை மாற்றிக்கொண்டு

வண்ணத்துப் பூச்சியை தன் முன்னறிவோடு இணைத்துக்கொள்கின்றது. இப்பொழுது வண்ணத்துப் பூச்சிகள் பறவையினம் அல்ல என்ற கற்றல் நிகழ்ந்துள்ளது. குழந்தைகள் உடன் இணைத்துக் கொள்ளுதல் மற்றும் தன்மயமாக்கிக் கொள்ளுதல் என்னும் இரு வேறுபட்ட மனச்செயல்பாடுகள் மூலம் குழந்தை தான் பெறும் புதிய செய்தியை தன் முந்தைய அறிவுடன் கட்டமைத்துக் கொள்கின்றது. இதனையே கற்றல் என்கிறோம்.

குழந்தையின் அறிவு தனித்தனியான ஒரு தொகுப்பு அல்ல. மாறாகக் குழந்தைகள் தாங்கள் பெறும் செய்திகளை ஒருங்கிணைத்து இந்த உலகம் எவ்வாறு இருக்கிறது என்று புரிந்துகொண்டு உருவாக்கிய கோட்பாடுகளின் கட்டமைப்பு ஆகும். எடுத்துக்காட்டாகப் பள்ளியில் தோட்டத்தில் உள்ள ஒரு செடியை உற்றுநோக்கி அதைப்பற்றி அறிந்துகொண்ட தனித்தனியான செய்திகளை எல்லாம் ஒன்றிணைத்து சூழ்நிலையின் பல கூறுகளான மண் நீர் காற்று சூரிய ஒளி இவை எல்லாம் ஒன்று சேர்ந்து எவ்வாறு தாவரத்தின் வாழ்க்கைக்கு உதவுகின்றது என்று குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர்.

கட்டிடப் பணியாளர் வேலை செய்வதைப் பார்த்திருப்பீர்கள். அவர்முன்தினம் கட்டிய சுவரில் சிறிது சிமெண்ட் கலவையைப் போட்டு அதன்மீது பொருத்தமான அளவு உள்ள செங்கல்லைச் சுவரில் வைத்து இணைத்துவிடுவர். இவர் எவ்வாறு செயல்படுகின்றாரோ அதேபோல கற்கும் சூழ்நிலையில் ணகற்கும் குழந்தையும் செயல்பட்டு தற்போது கற்கும் பாடப்பொருளை தனது முன்னறிவுடன் இணைத்துக் கொள்கிறது. கட்டிடம் எப்படி வலிமையானதாக இருக்கின்றதோ அதேபோல குழந்தையின் அறிவுத்தொகுதியும் வலிமையானதாக இருக்கின்றது. நீண்டகாலம் நினைவில் நிற்கின்றது. கட்டிடம் எவ்வாறு வாழ உதவுகின்றதோ அதுபோல அறிவுத் தொகுதியும் குழந்தைகள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளைத் தீர்த்து வாழ உதவுகின்றது. பல சுவர்கள் இணைந்து ஒரு வீடு உருவாவதுபோல, பல பாடங்கள் தொடர்பான கருத்துக்களின் கட்டமைப்பு ஒன்றிணைந்து அறிவுத்தொகுதியாக உருவெடுக்கின்றன.

இப்பொழுது உண்மையில் நீங்களும் மனத்தளவில் அதையே செய்து கொண்டிருக்கின்றீர்கள். கட்டிடப் பணி என்ற உங்களின் முன்னறிவோடு கற்றல் என்ற புதிய அறிவை இணைத்துக் கற்றல் என்றால் என்ன என்பது பற்றி உங்கள் கருத்தை கட்டமைத்துக் (கற்றுக்) கொண்டிருக்கின்றீர்கள். இப்பொழுது உங்கள் மனத்தில் நடக்கும் செயல்களிலிருந்து கற்றல் என்பது அசைவற்ற செயல்பாடு அல்ல மாறாக அது ஒரு மனத்தளவில் இயங்கி முந்தைய அறிவுடன் புதிய செய்தியை இணைக்கும் சுறுசுறுப்பான ஒரு செயல்பாடு என்று அறிந்துகொள்கிறீர்கள்.

## குழந்தைகளின் கற்கும் திறனை எவ்வாறு மேம்படுத்தலாம்?

குழந்தைகள் முன்னரே கற்று மனத்தில் நிறுத்தியிருக்கும் முந்தைய அறிவுடன் புதிய செய்தியைத் தொடர்புபடுத்தும்போது அதனை நெடுங்காலம் நினைவில் வைத்திருக்கவும் பின்னர் மீட்டுப் பெறவும் சுலபமாகின்றது. ஆனால் பெரும்பாலும் குழந்தைகள் இத்தகைய இணைப்பை ஏற்படுத்த முடியவில்லை.

குழந்தைகள் ஏற்கனவே பெற்றிருக்கும் நினைவுபடுத்தும் ‘முந்தைய அறிவைத் தூண்டுதல்’ என்னும் நுணுக்கம் நாம் ஒரு புதிய பாடத்தைத் தொடங்கும்போது குழந்தைகள் தீவிரமாக சிந்திக்கவும் அர்த்தமுள்ள பொருளை ஏற்படுத்திக் கொள்ளவும் உதவுகிறது.

எடுத்துக்காட்டாக குழந்தைகள் ஒரு புதிய பாடத்தைக் கற்கும் முன்பாக அந்தப் பாடத்தைப் பற்றி சுருக்கமாக வகுப்பில் உரையாடுகின்றோம். ஒப்புவமை செய்தல், புதிய கருத்துக்களையும்

கொள்கைளையும் ஏற்கனவே அறிந்தவற்றுடன் தொடர்புபடுத்த ஒரு கூடுதல் சாதனமாக உதவுகின்றது. எடுத்துக்காட்டாக ரேடார் என்பது எதிரொலியைப் போன்றது. இரண்டிலும் அலைகள் ஒரு மூலத்திலிருந்து புறப்பட்டு தொலைவில் உள்ள ஒரு பொருளில் தடைப்பட்டு மீண்டும் அந்த மூலத்திற்கே வந்து அடைகின்றது. மேலும் உணவுப்பாதையில் தசைகள் சுருங்கி விரிவதால் உணவு இரைப்பைக்குள் செல்கிறது என்பது பற்பசை குழாயிலிருந்து பற்பசையை அழுத்தி எடுப்பதைப் போன்றது என்று ஒப்புவமை செய்யலாம்.

இவ்வாறே ஒரு ஒப்புவமை பயன்படுத்தி ஒரு புதிய செய்தியை முந்தைய அறிவுடன் ஒப்பிடும்போது குழந்தைகள் அந்த புதிய செய்தியை உள்வாங்கி மனத்தில் நிறுத்தி எளிதில் மீட்டுப்பெற உதவுகின்றோம். அதே நேரத்தில் ஆசிரியர்கள் அவற்றிற்கு இடையே உள்ள வேறுபாடுகளையும் விளக்க வேண்டும். ஏனெனில் குழந்தைகள் ஒப்புவமையை தவறாகப் புரிந்துக்கொண்டு தவறான முடிவுக்கு வந்துவிடக்கூடும்.

குழந்தைகள் தங்களுடைய தற்போதைய அறிவை மேலும் பெருக்கமடையச் செய்ய விளக்கமான அறிவுரைகளைப் பயன்படுத்தப்படும்போது அவர்கள் எப்பொழுதும் சரியாகப் புரிந்து கொள்வதில்லை என்பதை நினைவில் கொள்ள வேண்டும். குழந்தைகள் பல செய்திகளைத் தவறாகப் புரிந்து கொள்ளக்கூடும். இதன் விளைவாகக் கற்கும் பொருள் மீது தவறான நம்பிக்கையை ஏற்படுத்திக் கொள்வதுடன் அவர்கள் புதிய செய்தியினைத் திரித்துவிடும். எனவே புதிய தலைப்பை தொடங்கும்போது இத்தகைய தவறான புரிந்து கொள்ளுதலைக் கண்டிப்பாக விலக்க வேண்டும்.

## 3. மொழியைக் கற்றல்

கற்றல் பரப்புகளில் மிகவும் இன்றியமையாதது மொழியைக் கற்றல் ஆகும். மொழியைக் கற்பதால் நம்முடைய கருத்தைப் பிறருக்கு உணர்த்தவும் பிறருடைய கருத்தை நாம் புரிந்துகொள்ளவும் முடியும். மொழியை கற்பது என்பது ஒலி வடிவ, வரி வடிவக் குறியீடுகளைக் கற்பதாகும். குறியீடுகளைக் கற்பதால் நமது சிந்தனைத் திறன் வளர்ச்சி அடைகின்றது. ஒரு குழந்தை எவ்வாறு மொழியைக் கற்றுக்கொள்கின்றது என்பதில் உளவியல் அறிஞர்களிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன.

### நடத்தைக் கொள்கை

மொழி கற்றல் பற்றிய நடத்தைக் கொள்கையை வெளியிட்டவர் ஸ்கின்னர். குழந்தைகள் பின்பற்றிச் செய்தல், பலப்படுத்துதல் மேலும் ஆக்க நிலையுறுத்தல் போன்ற கற்றல் கொள்கையின்படி மொழியைக் கற்றுக்கொள்கின்றனர் என்று ஸ்கின்னர் கூறுகிறார். குழந்தைகளின் பலப்படுத்தப்படாத பேச்சுகள் மறைந்துவிடுகின்றன. ஆனால் பலப்படுத்தல் மூலம் சரியான உச்சரிப்பு உருவாகும்வரை வடிவமைக்கப்படுகின்றன. பெற்றோர்கள் குழந்தைகளின் பேச்சுகளைப் பலப்படுத்துதல் மூலம் சரியான பொருளையும் உச்சரிப்பையும் கற்றுக்கொள்ள ஊக்கப்படுத்துகின்றனர். குழந்தைகள் வளர வளர சரியான பொருளைப் பெற பெற்றோர்கள் வலியுறுத்துகின்றனர். எடுத்துக்காட்டாக தண்ணீர் கொடுக்கும் முன்னர் தண்ணீர் என்ற வார்த்தையைச் சரியாக உச்சரிக்கும்படி வலியுறுத்துகின்றனர்.

நடத்தைக் கொள்கையினர் குழந்தைகள் வாக்கிய அமைப்பையும் பின்பற்றிச் செய்தல் பலப்படுத்துதல் மூலம் கற்கின்றனர் என்பதையும் விளக்குகின்றனர். இக்கொள்கைப்படி குழந்தைகள் பெரியவர்கள் மற்றும் வளர்ந்த குழந்தைகளின் வாக்கிய அமைப்பைப் பின்பற்றி பேசுவதன் மூலம் வாக்கியமைப்பைக் கற்றுக்கொள்கின்றனர். குழந்தையின் புரிந்து கொள்ளக்கூடிய ஆனால்

இலக்கணப்பிழையுள்ள வாக்கியங்களில் உள்ள பிழைகளை எடுத்துக் கூறுவதன் மூலம் அவர்களின் வாக்கியமைப்பு திறனை உருவாக்குகின்றனர்.

## இயல்புத் திறன் கொள்கை

இக்கொள்கை மொழியைக் கற்றுக்கொள்ளும் திறன் மனிதர்களுக்குள் இயல்பாகவே அமைந்திருக்கின்றது என்று கூறுகிறது. மொழியைக் கற்க உதவிபுரியும் இயற்கையான வழியாகிய மொழியைக் கற்கும் சாதனத்தை மனிதர்கள் பெற்றிருக்கின்றனர் என்று கோம்ஸ்கி என்பவர் கூறுகின்றார். இயல்புத்திறன் கொள்கையினர் பறவைகள் எந்தக் காரணத்திற்காகப் பறக்கக் கற்றுக் கொள்கின்றனவோ அதேபோன்ற காரணத்திற்காக மனிதன் மொழியைக் கற்கிறான். ஏனெனில் இருவரும் உடல் ரீதியாக தகுதியாக்கப்பட்டிருக்கின்றனர் என்று வாதிடுகின்றனர். LAD என்பது மனிதன் சொல்லின் உச்சரிப்புகள் வாக்கிய அமைப்புகள் இவற்றில் உள்ள வேறுபாடுகளைக் காண உதவும் மூளையின் அமைப்பு மற்றும் நரம்பின் இணைப்புகளைக் கொண்டது என்று அவர்கள் நம்புகிறார்கள்.

குழந்தைகளிடத்தில் இயற்கையாகவே மொழியைக் கற்கும் திறன் உள்ளது என்று கோம்ஸ்கி நம்புவதற்கு ஒரு காரணம் குழந்தைகள் விரைவாகவும் சிரமமின்றியும் மொழியைக் கற்றுக் கொள்கின்றனர். அவர்களிடம் இத்தகைய திறமை இயற்கையாகவே இருப்பதால்தான் அவர்களால் மொழியை விரைவாகவும் சிரமமின்றியும் கற்க முடிகின்றது. மற்றொரு காரணம் குழந்தைகள் வெவ்வேறு குடும்பச் சூழ்நிலைகளில் வளர்க்கப்பட்ட போதிலும் பெரும்பாலான குழந்தைகளுக்கு ஏறக்குறைய ஒரே காலக்கட்டத்தில் மொழித்திறன் வளர்ச்சி ஏற்படுகிறது. இதன்மூலம் மொழித்திறன் வளர்ச்சி உடல் அளவிலான முதிர்ச்சியினால் அன்றி ஒருவரின் சொந்த அனுபவத்தால் ஏற்படுவதில்லை என புலனாகின்றது.

குழந்தைகள் பல்வேறு கலாச்சாரப் பின்னணியில் வளர்ந்தாலும் அவர்கள் அனைவருக்கும் ஆரம்ப கால மொழித்திறன் வளர்ச்சி ஒரே மாதிரியாகத்தான் இருக்கின்றது என்றும் குறிப்பிடுகின்றார்கள். இவற்றால் மொழித் திறன் வளர்ச்சியைப் பொறுத்த வரையில் உலகம் முழுவதும உள்ள குழந்தைகள் ஒரே இயல்பான திறமையால் வழிநடத்தப்படுகின்றனர் என்னும் முடிவுக்கு வருகின்றனர்.

## இடைவினையாற்றல் கொள்கை

வேறு சில உளவியலார் மொழித்திறன் வளர்ச்சிக்கு உயிரியல் கூறுகள் மற்றும் அனுபவம் ஆகிய இரண்டுமே இன்றியமையாதன என வாதிடுகின்றனர். இவர்கள் இயல்புத்திறன் கொள்கையினரைப் போல மொழியைக் கற்க மனிதன் உயிரியல் ரீதியாக தகுதியாக்கப்பட்டிருக்கிறான் என்று நம்புகின்றனர். ஆனால் மொழி வளர்ச்சி தானாக நடக்கின்றது என்றோ சூழ்நிலை அவசியமற்றது என்று தள்ளிவிடமுடியாது என்கின்றனர். நடத்தைக் கொள்கையினரைப் போன்றே இவர்கள் பெற்றோர்கள் மற்றும் பிறருடன் பழகுதல் மொழிவளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்கின்றது என்று நம்புகின்றனர். இக்கொள்கையின் உடன் பிறந்த மொழித்திறமைகளும் சாதகமான சூழ்நிலையும் இரண்டுமே மொழி வளர்ச்சிக்கு உதவுகின்றன என்று கூறுகின்றனர். உடலியல் வளர்ச்சியும் சாதகமான சூழ்நிலையும் மொழித்திறன் வளர்ச்சியில் முக்கியப் பங்கு ஆற்றுகின்றன என்று இவர்கள் நம்புகின்றனர். உடல் முதிர்ச்சி மொழித்திறன் வளர்ச்சிக்கு நேரடியாகவும் அறிதல் திறன் வளர்ச்சிக்கு மறைமுகமாகவும் உதவுகின்றது என எண்ணுகின்றனர். அதே சமயத்தில் பெற்றோர்கள் மற்றும் பிறருடன் ஏற்படும் மொழிப்பரிமாற்றங்களும் மொழித்திறன் வளர்ச்சிக்கு உதவுகின்றன என்று கூறுகின்றனர்.

மொழி வளர்ச்சியைப் பற்றி விளக்கும் இம்மூன்று கொள்கைகளுள் எந்தக் கொள்கையும் முக்கியமல்ல என்று ஒதுக்கிவிட முடியாது. ஒவ்வொரு கொள்கையும் மொழி வளர்ச்சிக்குத் தேவையான முக்கியமான கூறுகளைப் பற்றி கூறுகின்றது. இருப்பினும் நடத்தைக் கொள்கையாளர்கள் கூறுவதுபோல பின்பற்றிச் செய்தல், மொழியைக் கற்க ஒரு இன்றியமையாத தேவையில்லை. ஏனெனில் மொழியைக் காதால் கேட்க முடிந்து ஆனால் பேசமுடியாத குழந்தைகள் மற்றவர்களைப் போல மொழியை நன்கு கற்றுக்கொள்கிறது. ஆனால் மொழியைக் கற்க குழந்தைகள் மொழியைக் காதால் கேட்க வேண்டும் என்ற கருத்தில் எல்லாக் கொள்கையாளர்களும் ஒத்துப் போகின்றனர். இதனைக் குழந்தை காதால் கேட்கும் மொழியின் அளவும் தரமும் குழந்தையின் அறிதல்திறன் செயல்பாடுகளுக்கு நேர் விகிதத்தில் இருக்கின்றது என்ற ஹெஸ் மற்றும் ஷிப்மேன் என்பவர்களின் கண்டு பிடிப்புகள் உறுதி செய்கின்றன. இதனால் தான் திருவள்ளுவரும் செல்வத்துள் செல்வம் செவிச் செல்வம் என்றும்; கற்றிலன் ஆயினும் கேட்க என்று நமக்குக் கூறியுள்ளார் போலும்.

## 4. கற்றல் பழக்கங்களைப் பெறுதல்

ஒருவருக்கு ஒருநாள் மீன் உணவைக் கொடுத்தால் அவருக்கு அன்றைய தினம் மட்டும் பசிநீங்கும். ஆனால் அவருக்கு மீனையே பிடிக்கக் கற்றுக் கொடுத்துவிட்டால் அவர் வாழ்நாள் முழுவதும் பசிநீங்கி மகிழ்ச்சியுடன் வாழ்வார். இவ்வாறே குழந்தைகளுக்குப் பாடங்களைக் கற்பித்தலுடன் அவர்கள் எவ்வாறு கற்க வேண்டும் என்று கற்கும் முறையைக் கற்றுக் கொள்ளக் கற்பித்தால் குழந்தைகள் மீதியுள்ள பாடங்களையும், பட்டங்களையும் ஆசிரியர் துணையின்றி அவர்களே படித்துவிடுவார்கள். குழந்தைகள் கற்க கற்பிக்க மாணவ ஆசிரியர்களுக்குச் சில யுத்திகள் இங்கே கொடுக்கப்பட்டுள்ளன. இவை அவர்களுக்கு குழந்தைகளிடையே கற்றல் பழக்கங்களை ஏற்படுத்த உதவும்.

**மீண்டும் மீண்டும் கற்றல்**

குழந்தைகள் தாங்கள் கற்ற பாடத்தை நாள்தோறும் மீண்டும் மீண்டும் வீட்டில் படிக்கும்போது அல்லது பிறரிடம் சொல்லிப் பார்க்கும்போது அல்லது மணல், தாள் போன்றவற்றில் எழுதிப்பார்க்கும்போது கற்ற பாடம் மனதில் நிலைநிறுத்தப்படுகின்றது. இவ்வாறு செய்யும்போது குழந்தைகள் பொருள் புரியாமல் நெட்டுரு செய்வதைத் தவிர்க்க வேண்டும். மாறாக கற்ற பாடத்தை தனித்தனி செய்திகளாக வைத்திருக்காமல் பொருள் புரிந்து அவற்றிற்கு இடையே உள்ள தொடர்புகளை அறிந்து தனது முந்தைய அறிவுடன் இணைத்துக்கொள்ள வேண்டும்.

குழந்தைகள் தாங்கள் கற்ற பாடத்தை ஓய்வு நேரங்களில் மனத்தளவில் நினைத்துப் பார்ப்பதும், வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் அன்றாட வாழ்க்கையில் பயன்படுத்திப் பார்ப்பதும் மீண்டும் மீண்டும் கற்றலுக்குச் சமமானதாகும். இதுவும் கற்ற பாடத்தை மனத்தில் இருத்தி வைக்க உதவும். எடுத்துக்காட்டாக குழந்தைகள் கற்ற பாடத்தைப் பற்றிச் சக மாணவர்களிடமோ, ஆசிரியரிடமோ அல்லது பெற்றோர்களிடமோ உரையாடுவதும்; குழந்தைகள் பள்ளியில் பெற்ற எழுத்தறிவைக் கொண்டு பள்ளியின் பெயர்ப்பலகை, ஊரின் பெயர்ப்பலகை, பேருந்தில் எழுதப்பட்ட ஊர்கள், செய்தித்தாள், கடையில் வாங்கும் பொருள்களை மூடியுள்ள உரையின்மீது உள்ள வாசகங்கள் இவற்றைப் படித்துப் பழகுவதும் கற்ற பாடத்தை மனத்தில் நிலைநிறுத்த உதவும்.

ஆகவே குழந்தைகள் இத்தகைய பழக்கங்களை மேற்கொள்ள அவர்களுக்கு ஆசிரியர் வழிகாட்ட வேண்டும். மேலும் பள்ளியில் கற்ற பாடங்களில் தொடர்பணியாக அன்றாடம் காலையிலும்

மாலையிலும் வீட்டில் படிக்கும் பழக்கத்தை உருவாக்க வேண்டும். அத்துடன் பள்ளியில் வாராந்திர, மாதாந்திர சோதனைகள் நடத்துவது குழந்தைகள் மீண்டும் மீண்டும் கற்கும் வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்கும்.

**பொருள் உணர்ந்து கற்றல்**


முன்னதாகப் பெற்றிருக்கும் அறிவுக்கும் தற்போது கற்கும் புதிய செய்திக்கும் இடையேயுள்ள தொடர்பை அறிந்து கற்றலே பொருள் உணர்ந்து கற்றல் ஆகும். எடுத்துக்காட்டாக 4–2 = 2 என்று கற்கும் குழந்தை தான் ஏற்கனவே கற்ற முந்தைய அறிவான 2+ 2 = 4 என்பதன் பின்னோக்கிய அல்லது தலைகீழான செயலே என்று அறிந்துகொள்கிறது. பொருள் புரியாமல் மனனம் செய்வதைக் காட்டிலும் பொருள் புரிந்து கற்றல் சிறந்த பயனைத் தரும்.

எனவே குழந்தைகளுக்குப் புதிய செய்திகளைக் கற்பிக்கும்போது முந்தைய அறிவுடன் அதனை இணைத்துக் கற்பிக்க வேண்டும். அல்லது குழந்தைகள் கற்கும் புதிய செய்தியை அவரவரது முந்தைய அறிவுடன் இணைத்துப் புரிந்துகொள்ள ஊக்கப்படுத்த வேண்டும். சில குழந்தைகள் முந்தைய அறிவுடன் தொடர்புபடுத்துவற்கும் காரணம் சில குழந்தைகள் கற்கும் போதெல்லாம் பொருள் உணர்ந்து கற்க வேண்டும் என்னும் கற்றல் முறையைப் பின்பற்றுவர்.

புதிய செய்திகளை முன்னதாகப் பெற்றிருக்கும் அறிவுடன் தொடர்பு கொண்டது என்ற விழிப்புணர்வு குழந்தைகளுக்கு இருக்க வேண்டும். போதுமான அளவிற்கு முன்னறிவு இருந்தும் அதனைப் புதிய செய்தியுடன் இணைக்க வேண்டும் என்று தெரியவில்லை என்றால் குழந்தைகள் பொருள் உணராது மனனம் செய்யும் முயற்சிக்குச் சென்றுவிடுவர். குழந்தைகள் முன்னதாக பெற்றிருக்கும் அறிவுக்கும், தற்போது கற்கும் செய்திகளுக்கும் நேரடித் தொடர்பு இருக்கின்றது என்று அவர்களுக்கு நினைவூட்ட வேண்டும். அறிவியல் கருத்துகளுக்கும், அன்றாட வாழ்க்கைக்கும் தொடர்பு உண்டு என்றும் கணிதத்திற்கும், விளையாட்டு, கைவினை, சமைத்தல், வணிகம், விவசாயம் போன்ற அன்றாட நிகழ்ச்சிகளுக்கும் தொடர்பு உண்டு என்று நினைவுபடுத்தவேண்டும்.

**அமைப்பினை ஏற்படுத்துததல்**

கற்கும் புதிய பொருளைப் பொருள் புரிந்து பொருள்களுக்கும் அல்லது கருத்துகளுக்கும் இடையே உள்ள தொடர்பை அறிந்து நெருங்கிய தொடர்புடைய கருத்துக்களை இணைத்து ஒரு அமைப்பினை உருவாக்கி முன்னறிவோடு இணைத்துக் கட்டமைக்கப்படும்போது அச்செய்தியை நீண்ட நாள் நினைவில் இருத்திவைத்து தேவைப்படும்போது பயன்படுத்த முடியும். எனவே குழந்தைகள் புதிதாக கற்கும் பாடப்பொருளைக் கொண்டு ஒரு அமைப்பினை ஏற்படுத்திக் கொண்டால் அது அவர்களின் நினைவில் நிற்கும். அவ்வாறு அமைப்பினை ஏற்படுத்தும்போது துண்டுத் துண்டான செய்தியினை இணைத்துவிடுகின்றனர். அந்த அமைப்பினை குழந்தைகள் முன்னறிவோடு இணைத்துக் கொள்கின்றனர்.



படத்தில் 6 வட்டங்கள் இருக்கின்றன என்பதைவிட வட்டங்களின் நெருங்கிய தன்மையைக் கருத்தில் கொண்டு மூன்று சோடி வட்டங்கள் உள்ளன என்ற அமைப்பினை ஏற்படுத்திக்

கொள்ளலாம். குழந்தைகளுக்குக் கற்பிக்கும்போது அவர்களுக்கு கொடுக்கப்படும் செய்தியானது ஒரு அமைப்பினை ஏற்படுத்திக்கொள்ளும் அளவிற்கு வசதியாகக் கொடுக்கப்பட வேண்டும். எடுத்துக்காட்டாக கொடுக்கப்படும் செய்திகள் தனித்தனி வகையானதாகவோ அல்லது வரிசைக் கிரம முறையிலோ இருக்கலாம். எடுத்துக்காட்டாக கடல், சூரியன், நீர், மேகம், மழை என்ற சொற்களை சூரியன், கடல், மேகம், மழை நீர் என்ற ஒரு வரிசை தொடரை ஏற்படுத்தினால் குழந்தைகள் எளிதாக கற்றுக்கொள்வர். சூரிய வெப்பத்தினால் கடலில் உள்ள நீர் ஆவியாகி மேலே சென்று மேகமாக மாறுகின்றது. பின்னர் அது மழையாகப் பொழிந்து நமக்கு நீர் கிடைக்கின்றது என்னும் வரிசை தொடர் அதில் உள்ளது.

கண்ணாடி, பட்டம், கடிகாரம், பாய், படம், கதவு, கட்டில், பாப்பா, பந்து என்ற சொற்களை கட்டிடம் கண்ணாடி–கதவு– கடிகாரம், பட்டம் – படம் – பந்து, பானை – பாப்பா – பாய் என்று க, ப, ப – எழுத்துகளில் தொடங்கும் வார்த்தைகள் என்று அமைப்புகளை ஏற்படுத்தலாம். மேலும் சுலபமாக கற்றுக்கொள்ள ஒவ்வொரு அமைப்புக்குள்ளும் ஒரு வரிசைத் தொடரை அமைக்கலாம். எடுத்துக்காட்டாக இதில் பானை அருகில் பாப்பா பாயில் அமர்ந்துள்ளது என்று பொருள்படும்படி பானை – பாப்பா – பாய் என்னும் வரிசைத் தொடர் அமைந்திருப்பதைக் கவனிக்கலாம். கருத்துகளை மட்டும் கற்பித்துவிட்டு நீண்ட இடைவெளிக்குப் பின் அவற்றிற்கிடையே உள்ள தொடர்புகளை கூறாமல் கருத்துகளையும் தொடர்புகளையும் அவ்வப்போது கற்பித்துவிட வேண்டும். அது மாணவர் கருத்துகளையும் தொடர்புகளையும் இணைத்து புரிந்துகொள்ள உதவும். இவ்வாறு வரிசைச் தொடர்களையும் அமைப்புகளையும் ஏற்படுத்தும் திறன்களை குழந்தைகளுக்கு கற்பித்தால் குழந்தைகள் கற்கும் முறைகளை கற்றுக் கொள்வர்.

**விரிவாக்கம் செய்தல்**

குழந்தைகள் கற்கும்போது என்ன செய்தி சொல்லப்படுகின்றதோ அத்துடன் தங்களது முந்தைய அறிவிலிருந்து மேலும் பல செய்திகளை எடுத்து கொடுக்கப்பட்ட செய்திகளுக்கும் மேலாக கற்பது விரிவாக்கம் ஆகும். குழந்தைகள் எவ்வளவு விரிவாக்கம் செய்கிறார்களோ அந்த அளவிற்கு அவர்கள கற்கும் செய்தியை நீண்ட காலம் நினைவில் வைத்துக்கொள்ள முடியும். வகுப்பில் கற்கும் பாடங்களை விரிவாக்கம் செய்கின்ற மாணவர்கள் கற்கும் பாடத்தை அப்படியே எடுத்துக்கொள்ளும் மாணவர்களைவிட கற்றலில் சிறந்து விளங்குவர்.

விரிவாக்கம் செய்ய குழந்தைகளுக்கு பல வழிகளில் கற்பிக்கலாம். குழந்தைகள் ஒரு பாடக் கருத்தை கற்கும்போது அந்த பாடத்தை பொருத்த வரை

1. ஏன் இது நிகழ்கிறது?
2. இந்த கருத்துக்கு வேறு சில எடுத்துக்காட்டுகள் கொடுக்க முடியுமா?
3. இந்த கருத்து எங்கு பயன்படுகிறது? அன்றாட வாழ்க்கையில் இதனை எவ்வாறு பயன்படுத்தலாம்?
4. இந்த செய்தியிலிருந்து என்ன முடிவுக்கு வரலாம்?

என்பன போன்ற வினாக்களை எழுப்பி குழந்தைகள் கற்கும் பாடக் கருத்தை விரிவாக்கம் செய்ய கற்பிக்கலாம். அல்லது ஒரு தலைப்பை கொடுத்துவிட்டு அதனை ஒட்டி குழந்தைகளுக்குள் பேசச் செய்யலாம் அல்லது எழுதச் சொல்லலாம் அல்லது அதைப்பற்றி சிந்திக்க சிறிது கால அவகாசம்

கொடுக்கலாம். இவற்றிற்கெல்லாம் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் செயல்வழி கற்றல் முறைக் கல்வியில் அதிக வாய்ப்புகள் உள்ளன.

**உருவங்களைக் கொண்டு கற்றல்**

உருவங்கள் மூலம் கற்பது செய்தியை நினைவில் வைத்துக்கொள்ள உதவும் ஒரு வழியாகும். பொருள்கள் அல்லது கருத்துகளை உருவங்கள் மூலம் கற்றால் அது நினைவில் நிற்கிறது என்று ஆய்வுகள் கூறுகின்றன. ஆகவே சிறு குழந்தைகளுக்கு கற்பிக்கும் ஆசிரியர் இயங்கும் படங்கள், மாதிரிகள், படங்கள் ஆகியவற்றின் மூலம் பாடப்பொருளைக் கற்பிக்கலாம். மிக எளிதாக ஓரளவு ஓவியம் வரையத் தெரிநத ஆசிரியர் கற்பிக்கும் பாடம் தொடர்பான படங்களை கரும்பலகையில் வரைந்து கற்பிக்கலாம். மேலும் ஆசிரியர் தன் சொல்வன்மையால் கருத்துகளை சொல்லும் விதத்தில் சொல்லி கற்பிக்கும் பாடப்பகுதி குழந்தைகளின் மனக்கண்முன் நிகழ்வது போன்ற உணர்வை ஏற்படுத்த முடியும். பொருளை மட்டும் அன்று கருத்துகளையும் படங்கள் மூலம் கற்க முடியும். மலர்தல் கூம்பல் என்னும் கருத்துகளை படங்கள் மூலம் எளிதில் கற்பிக்கலாம். குழந்தைகள் படங்களை பார்த்து மன உருவங்களை ஏற்படுத்தி எளிதில் கற்க முடியும் என்பதற்காகவே ஆரம்பபப்பள்ளி பாடநூல்களில் உள்ள பாடங்கள் அதிக படங்கள் கொண்டுள்ளன.

கற்கும் பழக்கங்களைப் பெறும் முறைகளில் இறுதியாக சொல்லப்பட்ட அமைப்பினை ஏற்படுத்துதல், விரிவாக்கம் செய்தல், உருவங்களைக் கொண்டு கற்றல் ஆகியவை கட்டமைப்பு தன்மை கொண்டவை அதாவது குழந்தைகள் அவரவர் தங்கள் சொந்த அனுபவத்தின் வாயிலாக அவர்களுக்கே உரிய முறையில் இவற்றை கட்டமைத்து கொள்கின்றனர். இவையாவும் துண்டுத் துண்டாக இருக்கும் செய்தியினை ஒரு பொருள் உள்ள அமைப்பாக ஒருங்கிணைக்கும் முறைகள் ஆகும். அமைப்பினை ஏற்படுத்தும்போது கற்கும் தனித்தனி செய்திகள் எவ்வாறு தாம் அறிந்த முன்னறிவோடு பொருந்துகின்றன என்று அறிந்து அதற்கேற்ப பொருத்தி தம்மை பொருத்தவரை தனித்தன்மை வாய்ந்த ஒரு முழுமையடைந்த அமைப்பை ஏற்படுத்துகின்றனர். விரிவாக்கம் செய்யுபோது மேலும் சிறப்பான பொருளை உருவாக்க தாம் முன்னரே பெற்றுள்ள அறிவினை பயன்படுத்துகிறார்கள். உருவங்களை அமைக்கும்போது மனத்தில் ஒவ்வொரு பொருளுக்கும் கருத்துக்கும் தங்கள் முன்னறிவிற்கும் ஏற்ப அந்த பொருள்களில் அல்லது கருத்தின் உருவங்களை ஏற்படுத்தி கற்கிறார்கள்.

## 5. வேறுபட்ட சூழ்நிலைகளில் பொறுத்தப்பாட்டைப் பெற கற்றல்

குழந்தைகள் தங்கள் வளர்ச்சி நிலைகளில் உயர உயர அவர்கள் இடைவினையாற்றும் வட்டமும் வீடு, பள்ளி, சமூகம் என விரிந்துகொண்டே செல்கின்றது. அத்துடன் வேகமாக மாறிவரும் இன்றைய உலகில் சமுதாயச் சூழல் அடிக்கடி மாறிவருகின்றது. இத்தகைய சூழ்நிலையில் குழந்தைகள் பொருத்தப்பாட்டைப் பெற கற்றல் உதவுகின்றது.

குழந்தைகள் தொடக்கப்பள்ளியில் சேரும்போது அரவணைப்புள்ள குடும்ப சூழ்நிலை மாறி ஒருநாள் திடீரென்று புதிய பெயர்கள், விதி முறைகள், நிகழ்ச்சிகள் என்று எல்லாம் புதிதாக மாறிப்போன வேளையில் திகைத்துப்போய் பயந்தும் காணப்படுகிறார்கள். சில குழந்தைகள் பள்ளிக்கு செல்ல மறுக்கின்றனர். பின்னர் பள்ளிக்குச் செல்லக் கற்றுக்கொள்கின்றனர். அப்போது மற்ற குழந்தைகளைப் போலவே பள்ளி சூழ்நிலைக்கு பொருந்தி செயல்படத் தொடங்குகிறார்கள்.

பள்ளிச் சூழ்நிலையில் பொறுத்தப்பாட்டைப் பெறுதல் என்பது குழந்தைகள் அச் சூழ்நிலையில் எது சரி எது தவறு என தீர்மானிக்கும் அறிவுத் திறனைப் பெறுவதாகும். வீட்டில்

குழந்தைகள் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தினாலும், வகுப்பில் அக்குழந்தை பேசுவதற்கு கையை உயர்த்த வேண்டும். அதுபோலவே வீட்டில் வரையும் கிறுக்கல் ஓவியங்களுக்கு பெற்றோர்களின் கோபத்திற்கு ஆளானாலும், பள்ளியில் ஓவிய வகுப்பில் அது குழந்தைக்குப் புகழைத் தேடித் தருகிறது.

வகுப்பில் கவனம் செலுத்துதல், பள்ளிக்குக் காலத்தோடு செல்லுதல், தண்டனைகளைத் தவிர்த்தல், பரிசுகளை வெல்லுதல் போன்ற செயல்களில் குழந்தைகள் ஈடுபடுகின்றனர். இறுதியாக உலக உண்மைகளைத் தெரிந்துகொள்ளுதல், பந்தினை உதைத்தல் முதல் திறமைகளைப் பெறுதல், எழுதுதல், படித்தல் மற்றும் வாதிடுதல் ஆகிய பள்ளிச் செயல்பாடுகளின் மூலம் பள்ளி சூழ்நிலைகளுடன் பொறுத்தப்பாட்டைப் பெறுகின்றனர்.

அனுபவங்கள் வாயிலாக பெற்ற அறிவைக் கொண்டு சிறிது சிறிதாக சிக்கல் அடைந்து எப்பொழுதும் மாறிக்கொண்டே வரும் இன்றைய சூழ்நிலையில் பொருத்தப்பாட்டை கொள்வதிலேயே மனிதனின் வளர்ச்சி அடங்கியுள்ளது. கற்றல் கொள்கைகளின் அடிப்படையில் மனிதனின் பொருத்தப்பாட்டு நடைபெறுகிறது. முன்னர் பெற்றுள்ள நடத்தைக் கோலங்களும் புரிந்து கொள்ளுதலும் குழந்தை பிறந்தது முதல் இருந்து வருவதாகவோ அல்லது கற்றுக் கொண்டதாகவோ அல்லது முதிர்ச்சியின் காரணமாகப் பெற்றதாகவோ இருக்கலாம். குழந்தைகள் நடக்கத் தேவையான உடலியக்கத் திறமைகளும் கருத்துப் பரிமாாற்றம் செய்யத் தேவையான மொழித்திறமையும் அவர்களது உணர்ச்சிகளை ஒருங்கமைக்கவும், உலகை காரண காரியத் தொடர்புடன் அறிந்து கொள்ளவும் கற்றல் முக்கியபங்கு வகிக்கின்றது.

மனிதன் தான் யார் என்று தன்னைப்பற்றி அறிந்துகொள்ளவும், எப்படி தான் இன்று காணப்படுவதுப்போல எவ்வாறு பெரிய மனிதனாக மாறினான் என்று அறிந்துகொள்ள தான் என்ன கற்றுக்கொண்டான் எப்படிக் கற்றுக்கொண்டான் என்று நினைத்துப் பார்த்தாலே போதும். தன்னைச் சுற்றி நிகழும் நிகழ்ச்சிகளைக் காண்பது மூலம் அந்த நிகழ்ச்சிகளுக்கு இடையே உள்ள தொடர்பினை உற்று நோக்குவதன் மூலமுமே மனிதன் பெரும்பாலும் கற்றுக் கொள்கிறான்.

## 6. கற்றலின் தன்மைகள்

மனிதன் என்ன கற்கிறான் என்பது அவனுடைய உடல் மற்றும் உள்ளத்தின் அமைப்பையும் சூழ்நிலை அவன் மீது திணிக்கும் தேவைகளையும் பொறுத்து அமைகிறது. எனவே கற்றலுக்கு முதிர்ச்சியும் மனிதனுடைய தேவையும் இன்றியமையாத காரணிகள் ஆகும். முதிர்ச்சி என்பது செல் பிரிதல், திசு மற்றும் உடல் உறுப்புகளின் வளர்ச்சியடைவதைக் குறிக்கின்றது. கற்றல் என்பது புதிய செய்திகளையும் நடத்தைகளையும் பெறும் முறையைக் குறிக்கிறது. இவ்வாறு ஒரு உயிரின் வளர்ச்சி என்பது முதிர்ச்சி மற்றும் கற்றல் ஆகிய இரண்டும் சேர்ந்து சூழ்நிலையுடன் இடைவினை ஆற்றுவதால் ஏற்படுவதாகும்.

### முதிர்ச்சியும் கற்றலும்

பிறந்த குழந்தையின் செயல்பாடுகள் உடலின் கட்டுப்பாடற்ற இயக்கங்கள் மறிவினைகள் இயல்பூக்கங்கள் ஆகியவற்றைக் கொண்டது. பிறந்த முதல் ஆண்டில் கண், கை ஒருங்கிணைப்பு ஏற்படுகின்றது. வெளியுலகின் தூண்டுதலினாலோ (பயிற்சி மற்றும் அனுபவம்) அல்லது இயற்கையான வளர்ச்சியினாலோ ஓர் உயிரியின் நடத்தையில் மாற்றம் ஏற்படுகிறது. முன்னயது கற்றல் என்றும் பின்னயது முதிர்ச்சி என்றும் அழைக்கப்படுகின்றது. ஆனால் கொடுக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் நடத்தையில் ஏற்படும் மாற்றம் முதிர்ச்சியினால் வந்ததா அல்லது கற்றலினால் வந்ததா

என்று பிரித்தறிவது எளிதன்று. எடுத்துக்காட்டாக ஓர் ஆண்டில் குழந்தை சில வார்த்தைகளைப் பேசுகின்றது. இது முதிர்ச்சியினால் வந்ததா? அல்லது கற்றலினால் வந்ததா? குழந்தையால் பேச முடிகிறது என்றால் அதற்குக் காரணம் முதிர்ச்சி. ஆனால் அது பேசுகின்ற விதம் ஏற்றயிரக்கம் எல்லாம் கற்றலின் விளைவு.

கற்றலினால் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான சூழ்நிலைகளை உருவாக்கி தருவதற்கும், பிறவற்றினால் தானாகவே உருவாகும் நடத்தை மாற்றத்தை விட்டுவிடுதற்கும் ஆசிரியருக்குக் கற்றலினால் ஏற்படும் மாற்றங்களையும் முதிர்ச்சியினால் ஏற்படும் மாற்றங்களையும் பிரித்து அறிந்துகொள்ளும் திறமை இன்றியமையாதது. இதனால் குழந்தைகள் சரியான அளவு முதிர்ச்சி பெற்ற பிறகு ஆசிரியர் பொருத்தமான கற்றல் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுக்க முடியும். ஒரு மாதக் குழந்தையை நடக்க வைக்க முயற்சி செய்யும் பெற்றோரை எண்ணிப்பாருங்கள். குழந்தையின் உடல் தசைகள் போதுமான அளவு முதிர்ச்சியை பெற்றிருந்தால் தான் குழந்தையினால் நடக்க கற்றுக்கொள்ள முடியும்.

### கற்றலும் ஊக்குவித்தலும்

கற்றலுக்குத் துணைபுரியும் மற்றொருகாரணி மனிதனின் தேவைகள். மனிதன் தன் தேவைகளைப் பூர்த்தி செய்து மனநிறைவு பெற கற்க வேண்டியுள்ளது. பள்ளியில் குழந்தைகளின் தங்கள் தேவைகளை நிறைவு செய்து கொள்ள ஊக்குவித்தல் உதவுகின்றது. ஊக்குவித்தல் என்பது ஒருவர் ஒரு செயலைத் தொடங்கவும், வழிநடத்தவும், தீவிரப்படுத்தவும், அதிலே நிலைத்திருக்கவும் காரணமாக இருப்பது ஊக்கம் ஆகும். இதனைத் தூண்டச் செய்யும் முயற்சியே ஊக்குவித்தல் எனப்படும்.

### வகுப்பறை சூழ்நிலையில் கற்றல் சிறப்பாக நடைபெற மாணவர்களை ஊக்கப்படுத்த சில வழிமுறைகள்

மாணவர்களுக்குக் கற்றல் செயல்கள் கொடுக்கும்போது அச்செயல் அவர்களால் செய்ய முடிந்ததாக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். அதாவது குழந்தைகளுக்குக் கொடுக்கப்படும் கற்றல் செயல்களானது மிகவும் எளிமையானதாகவோ அல்லது மிகக் கடினமானதாகவோ இல்லாமல் இரண்டிற்கும் இடைப்பட்ட கடினநிலை கொண்டதாக இருந்தால் குழந்தைகள் அச்செயல்களைச் செய்ய முன்வருவர். பின்னர் குழந்தைகள் கற்றலினால் அவர்கள் அடைந்த அடைவின் அளவை அவர்களுக்குக் காண்பிக்கும்போது அவர்கள் மேலும் கற்க வேண்டும் என்று ஊக்கம் கொள்வர். எனவே வகுப்பறையில் சிறு சோதனைகள் நடத்தும்போது அதில் மாணவர்கள் பெறும் மதிப்பெண்கள் உடனுக்குடன் அவர்களுக்கு அறிவிப்பது கற்றலை மேம்படுத்தும்.

குழந்தைகளுக்குப் புதிய கருத்துகளை அளிக்கும்போது எளிய கருத்துகளை முதலில் விளக்கி பின்னர் கடினமான கருத்துகளைக் கற்பிக்க வேண்டும். எடுத்துக்காட்டாகக் குழந்தைகளுக்கு வாசிக்கக் கற்பிக்கும்போது முதலில் இரண்டு மூன்று எழுத்துகளைக் கொண்ட எளிய சொற்களில் வாசிப்புப் பயிற்சி அளித்து படிப்படியாகக் கடினமான சொற்களை வாசிப்பதில் பயிற்சி அளிக்கலாம். அவ்வாறே எழுதுவதற்குப் பயிற்சி அளிக்கும்போது முதலில் எளிய நேர்க்கோடுகளைக் கொண்ட எழுத்துகளை எழுதுவதில் பயிற்சி அளித்துப் பின்னர் வளை கோடுகளையுடைய எழுத்துகளை எழுதுவதில் பயிற்சி அளிக்கலாம். வெவ்வேறு பகுதி வேறுபட்ட பகுதிகளைக் கொண்ட பின்னங்களைக் கூட்ட அல்லது கழிக்கக் கற்பிப்பதற்கு முன்பு ஒரே பகுதியைக் கொண்ட பின்னங்களில் கூட்டல், கழித்தல் கணக்குகளில் போதிய பயிற்சி அளித்திருக்க வேண்டும்.

பாடநூல்களில் பாடங்களின் வரிசை அமைப்பும், கணிதநூலில் பயிற்சிகளில் உள்ள வினாக்கள் இவ்வாறே எளிமையிலிருந்து சிறிது சிறிதாக கடினமானதாக மாறுவதைக் காணலாம்.

குழந்தைகள் ஏற்கனவே அறிந்து இருக்கும் கருத்துகளோடு புதிய கருத்தை இணைத்துக் கற்பித்தால் கற்றல் சிறப்பாக நடைபெறும். எடுத்துக்காட்டாக, நமது தேசியச் சின்னங்கள் பற்றி கற்பிக்க விரும்பும் ஒரு ஆசிரியர் அதற்கு முன்னர் மாணவர்கள் ஏற்கனவே அறிந்திருக்கும் அவர்களது அடையாள அட்டையைப் பற்றி கூறிவிட்டு ஒரு மாணவனின் அடையாளத்திற்கு அடையாள அட்டை இருப்பதுபோல ஒரு நாட்டிற்கு உள்ள அடையாளங்களே தேசியச் சின்னங்கள் என்று புதிய கருத்தை மாணவர்கள் அறிந்துகொள்ள முந்தைய கருத்துடன் இணைத்துக் கட்டமைப்பு செய்யலாம். அல்லது ஒவ்வொரு வகுப்பிலும் பாடத்தைத் தொடங்குமுன் இதற்கு முந்தைய வகுப்பில் கற்பித்த செய்திகளை முன்னாயத்த வினாக்களாகக் கேட்டு, பின்னர் அதன் அடிப்படையில் புதிய பாடத்தைக் கற்பிக்க வேண்டும்.

ஒரு கருத்தைக் கற்பிக்க பல்வேறுபட்ட வழிமுறைகளைக் கையாளலாம். இதனால் அனைவரும் உகந்த வழியின் மூலம் அறிவைக் கட்டமைத்துக்கொள்ள முடியும். உதாரணமாக மலையைப் பற்றி கற்பிக்கும் ஆசிரியர் மலையின் படத்தைக் காண்பிக்கலாம். மலைக்குக் குழந்தைகளை அழைத்துச் செல்லலாம். மலையைப் பற்றி சொற்களால் வருணிக்கலாம். இவ்வாறு பல்வேறுபட்ட கற்றல் அனுபவங்கள் மூலம் குழந்தைகளை பருப்பொருளில் இருந்து கருத்தியல் சிந்தனைக்குக் கொண்டு செல்லலாம்.

கற்றல் சிறப்பாக நடைபெற குழந்தைகளுக்குப் பல்வேறுபட்ட அனுபவங்களை ஏற்படுத்தித் தரவேண்டும். அதில் குழந்தைகள் தாங்களாகவே செயலில் ஈடுபட்டு சுறுசுறுப்புடன் கற்கவேண்டும். அப்போது குறைந்தபட்சம் ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் பரஸ்பர கருத்துப் பரிமாற்றம் இருக்க வேண்டும்.

**கற்றலும் களைப்பும்**

களைப்புடன் இருக்கும் குழந்தைகள் கற்றல் செயல்களில் ஈடுபட முடியாது. எனவே வகுப்பறைக் கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியர் குழந்தைகள் உற்சாகத்துடன் இருக்கின்றனரா அல்லது களைப்புடன் இருக்கின்றனரா என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும். வகுப்பிற்கான கால அட்டவணைத் திட்டமிடும்போது மாணவர் காலையில் சுறுசுறுப்புடன் இருக்கும் நேரங்களில் சற்றுக் கடினமான பாடங்களையும், நண்பகல் வேளைகளில் சற்று எளிமையான பாடங்களையோ அல்லது களைப்பை நீக்கும் பாடங்களையோ அமைப்பது நல்லது.

**கற்றலும் கவனமும்**

விவரங்களை அறிதல், மன அனுபவங்கள் மற்றும் செயல்திறன்கள் ஆகியவை மேம்பாடு அடைய மனத்திறன்களை குவியச் செய்து வழிநடத்தும் செயலே கவனம் எனப்படும். குழந்தைகளின் மன அனுபவங்கள் மேம்பாடு அடைய வேண்டுமானால் அவர்களின் கவனத்தைப் பெறவேண்டியது ஆசிரியரின் பங்கு குழந்தைகளுக்குப் பிடித்தமான கதைகள், பாடல்கள், நாடகம் ஆகியவற்றின் மூலம் செய்திகளைச் சொன்னால் மாணவர்களின் கவனத்தைப் பெறமுடியும் அல்லது புதுமையான கற்பித்தல் துணைக்கருவிகள் மாணவர்களின் வாழ்க்கையோடு பாடத்தை இணைத்துச் செல்லும்போது மாணவர்களின் கவனத்தைப் பெறலாம்.

**கற்றலும் பயிற்சி மாற்றமும்**

ஒரு செயலைச் செய்யும்போது கற்றுக்கொண்ட திறமை மற்றொரு செயலைச் செய்வதில் தாக்கத்தை ஏற்படுத்துமானால் அதனைப் பயிற்சி மாற்றம் என்கிறோம். எடுத்துக்காட்டாக கூட்டல்

கணக்குகளைக் கற்றுக்கொண்ட மாணவர்களுக்கு அதில் உள்ள நுணுக்கங்கள் பெருக்கல் கணக்குகளைச் செய்வதற்கு உதவி செய்கிறது. இதனை நேர்மறை பயிற்சிமாற்றம் என்கிறோம். எடுத்துக்காட்டாக கூட்டல் கணக்குகளைக் கற்றுக்கொண்ட மாணவர்களுக்கு அதில் உள்ள நுணுக்கங்கள் பெருக்கல் கணக்குகளைச் செய்வதற்கு உதவி செய்கிறது. இதனை நேர்மறை பயிற்சிமாற்றம் என்கிறோம். ஒரு மொழியைக் கற்றுக்கொண்டது மற்றொரு மொழியைக் கற்றுக்கொள்ளத் தடையாக இருந்தால் அதனை எதிர்மறை பயிற்சி மாற்றம் என்கிறோம். கூட்டல் கணக்குகளைக் கற்றுக்கொண்டது ஒரு மொழியைக் கற்றுக்கொள்ள உதவியும் செய்வதில்லை. தடையாகவும் இருப்பதில்லை. இதனை நடுநிலைப் பயிற்சிமாற்றம் என்கிறோம். குழந்தைகள் தங்கள் எதிர்கால வாழ்க்கையில் சந்திக்கும் அத்தனை பிரச்சினைகளையும் தீர்க்கத் தேவையான எல்லா அனுபவங்களையும் பள்ளியிலே கொடுத்துவிட முடியாது. குழந்தைகள் பள்ளியில் பெறும் அனுபவங்களிலிருந்து பயிற்சி மாற்றம் மூலமே தங்கள் எதிர்காலப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்ள வேண்டும்.

## 7. இடைவினையாற்றல் மூலம் கற்றல்

குழந்தை தன் சூழ்நிலையில் உள்ள மனிதர்கள், பொருள்கள் ஆகியவற்றுடன் மொழி மற்றும் செயல்பாடுகள் மூலம் இடைவினையாற்றும் போது கற்றல் நிகழ்கிறது. தன்னைத்தனானே அல்லது சக குழந்தைகளுடன் அல்லது வளர்ந்தவர்களுடன் ஆராய்தல், செயல்களைச் செய்தல், கேட்டல், பேசுதல், படித்தல், இடைவினையாற்றுதல் ஆகிய முக்கியமான வழிகள் மூலம் கற்றல் நிகழ்கிறது. எனவே எந்தச் சூழ்நிலையில் கற்றல் நிகழ்கிறது என்பது நேரடியாக முக்கியத்துவம் வாய்ந்தது.

நமது பள்ளிகளில் பெரும்பான்மையான கற்றல் செயல்பாடுகள் தனிப்பட்ட மாணவர்களை அடிப்படையாகக் கொண்டு இருக்கின்றன. அதாவது மாணவர்கள் குழுவாகச் சேர்ந்து கற்பதற்கான கற்றல் அனுபவங்களை நாம் அதிகமாகக் கொடுப்பதில்லை. வழக்கமாக ஆசிரியர் குழந்தைகளிடத்தில் செய்திகளை எடுத்துச் சொல்பவராகவும், அவர்களுக்கு கற்றல் அனுபவங்களை ஏற்படுத்தி தருபவராகவும் இருக்கின்றார். ஆனால் குழந்தைகள் ஆசிரியருடனோ அல்லது மற்ற குழந்தைகளுடனோ அல்லது கற்றலுக்கு உதவும் பிறரிடமோ இடைவினையாற்றுவதே கற்றல் சிறப்பாக நடைபெற சிறந்த வாய்ப்பை ஏற்படுத்தித் தருகிறது.

பிறருடன் குழுவாக இணைந்து கற்பது என்பது இடைவினையாற்றல் மூலமும் செயல்களைச் செய்வதன் மூலமும் கற்பதாகும். பல்வேறுபட்ட சமூக, பொருளாதார பின்னணியில் இருந்து வந்து பயிலும் குழந்தைகள் உள்ள பள்ளியில் இத்தகைய இடைவினையாற்றுதல் மூலம் கற்பது மிகுந்த பயனை தரும்.

தொடக்கக் கல்வி ஆரம்பத்தில் குழு வேலைகளுடன் ஒரு தொடக்கம் உருவாக்கப்பட்டது. குழுவாக இணைந்து செயல்படும் செயல் திட்டங்கள் செயல்பாடுகள் நடுநிலை உயர்நிலைப் பள்ளிகளில் முக்கிய அம்சமாக ஏற்படுத்தப்பட வேண்டும். சில சமயங்களில் ஓரளவு வயது வேறுபாடு உள்ள குழந்தைகளை கொண்டு செயல் திட்டங்களை செய்ய குழுக்கள் அமைக்கப்படலாம். இத்தகைய குழுக்களில் குழு வேலை சமூக மனப்பான்மை ஆகியவற்றை ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக்கொள்ள முடியும். மேலும் குழுவாக இணைந்து செயல்படும்போது தனி ஒருவரால் சாதிக்க முடிவதற்கும் மேலான சாதனைகளைச் செய்ய முடியும்.

ஜப்பான் நாட்டைப் போல பன்மைப் போக்குடைய கலாச்சாரத்தைக் கொண்ட நம் நாட்டில் குழந்தைகளுக்கு தொடக்கத்திலிருந்து பன்மை போக்குடைய கலாச்சாரத்திற்கானப் பயிற்சியை அளிக்க வேண்டும். அதற்கு இடைவினையாற்றல் மூலம் கற்றும், கற்றல் அனுபவங்களை

குழந்தைகளுக்குப் பள்ளியில் ஏற்படுத்தித் தரவேண்டும். குழுவாக கற்றல் பொறுப்பை ஏற்றுக்கொள்ளுதல், தம்முடைய பங்களிப்பை கொடுத்தல் ஆகிய இவை அறிவு பெறுவதற்கு மட்டும் அல்லாமல் கலைகள், கைவினைகள் கற்றுக் கொள்வதற்கும் உதவுகின்றன. பல்வகுப்புக் கற்பித்தலில் சூழ்நிலையில் ஓரளவு வயது வேறுபாடு கொண்ட அத்தனை குழந்தைகளுக்கும் ஒரே வகையான கற்றல் செயல்களைக் கொடுக்கும் போது அது கற்பித்தல் முறைப்படி சாத்தியமானதாகவும், கலைத்திட்டத்தின்படி சரியான செயலுமாகவும் இருக்கும்.

குழந்தைகள் வளர வளர அவர்கள் தங்கள் சூழ்நிலை குடும்பம் சகமாணவர்கள், ஆசிரியர், பெரியவர்கள் மற்றும் சமுதாயம் என அவர்கள் இடைவினையாற்றும் வட்டம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அதனால் குழந்தைகளின் கற்றல் வீதமும் உயர்ந்துகொண்டே வருகின்றது.

குழந்தைகள் தங்கள் சூழ்நிலையுடன் இடைவினையாற்றும்போது சூழ்நிலையில் உள்ள உயிருள்ள, உயிரற்ற பொருள்கள், தாவரங்கள், விலங்குகள் ஆகியவற்றைப் பற்றிய விவரங்களைத் தெரிந்துகொள்கின்றனர். தன்மீதும், இந்த சமுதாயத்தின்மீதும், இவற்றின் தாக்கங்களையும் புரிந்து கொள்கின்றனர். எடுத்துக்காட்டாக சுற்றுப்புறச் சூழ்நிலை மாசுபடுதலைப்பற்றி புரிந்துகொண்ட குழந்தைகள் அதனால் வரும் கேடுகளையும் தெரிந்துகொள்கின்றனர். அப்போது இயற்கையை நேசிக்கவும், சூழ்நிலையைப் பாதுகாக்கவும் கற்றுக்கொள்கின்றனர்.

குழந்தைகள் தங்கள் சூழ்நிலையுடன் இடைவினையாற்றுபோது மணல் தண்ணீர் ஆகியவற்றுடன் விளையாடுதல் பொருள்களை எண்ணுதல், கால்பந்து விளையாடுதல் ஆகிய செயல்கள் மூலம் உலகத்தில் உள்ள பொருள்களுக்கு இடையே உள்ள காரண காரிய தொடர்பினையும் பொருள்களின் தன்மையான வண்ணம், உயரம், எடை, கன அளவு ஆகியவற்றையும் அறிந்துகொள்கின்றனர்.

பள்ளியில் சகமாணவர்களுடன் இடைவினையாற்றம்போது குழந்தைகள் மொழித்தினைப் பெறுகின்றனர். கூட்டுறவு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகிய சமூகத் திறன்களையும் கற்றுக் கொள்கின்றனர். தற்போது நடைமுறையில் உள்ள செயல்வழிக் கல்வி முறையில் குழந்தைகள் சகமாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் இடைவினையாற்றும் வாய்ப்புகள் அதிகம். ஆசிரியர்கள் மற்றும் பெரியர்களுடன் இடைவினையாற்றும்போது குழந்தைகள் பல புதிய புதிய செய்திகளைத் தெரிந்துகொள்கின்றனர். பெரியவர்களை மதித்தல் போன்ற பண்பாடுகளைக் கற்றுக் கொள்கின்றனர்.

பள்ளியை அடுத்து குழந்தை சமுதாயத்துடன் இடைவினையாற்றுகின்றது. தான் வசிக்கும் தெரு ஊர் ஆகிய இடங்களில் உள்ள பெரியவர்கள், சமூகப் பணியாளர்கள் ஆகியோருடன் இடைவினையாற்றி சமூகத்தைப் பற்றிய அறிவைப் பெறுகின்றனர். சூழ்நிலைகளான கடைத்தெரு, ஆலயங்கள் போன்ற இடங்களில் குழந்தைகள் அனுபவங்களைப் பெறும்போது மக்களின் வாழ்க்கை முறைகளையும் பயன்பாட்டையும் அறிந்து கொள்கின்றது.

சமுதாயத்தில் மற்றவர்களுடன் இடைவினையாற்றுபோது வேறுபட்ட மனிதர்கள் பொருளை வெவ்வேறு கோணங்களில் பார்க்கின்றனர் என்றும் தன் பார்க்கும் கோணம் முழுமையானது அல்ல என்றும் அது பல்வேறு நோக்குகளுள் ஒன்று என்றும் அறிந்து கொள்கின்றது. எடுத்துக்காட்டாக பள்ளி முன்பருவத்தில் உள்ள குழந்தை இந்த உலகை தனக்கே உரிய முறையில் பார்க்கின்றது. பிறரது பார்வையிலிருந்து பார்க்க முடியவில்லை. பிறருடன் இடைவினையாற்றும்போது தன்னுடைய நோக்கு தனித்தன்மை வாய்ந்தது என்றும் பிறருடைய பார்வையிலிருந்து வேறுபட்டதென்றும்

புரிந்துகொள்கின்றது. ஒரு குழந்தை தான் செய்வதும் அல்லது சொல்வதும் சரியா தவறா என்று பிறர் சுட்டிக்காட்டும்போதுதான் தெரிந்து கொள்கிறது.

சமுதாயத்தில பல்வேறு நிலைகளில் இடைவினையாற்றும் வாய்ப்புகள் பெறாத குழந்தைகள் சமுதாயத்தைப் பற்றி குறைவாக அறிந்திருக்கின்றனர். அதனால் அவர்கள் சமூகத்திறன்கள் அற்றவர்களாகவும் தனிமையை விரும்பும் ஆளுமைப் பண்புடையவராகவும் ஊக்கம் செயல்திறம் அற்றவராகவும் இருப்பர்.

**அலகுச் சுருக்கம்**

கற்றல் என்பது ஓர் இயக்கமுள்ள உள்ளார்ந்த செயல். கற்றலின்போது ஒருவர் தாம் பெற்றுள்ள முன்னறிவோடு புதிய செய்தியை இணைக்கும் உள்ளார்ந்த செயலைச் செய்கின்றனர். எவ்வாறு எனில் இப்போது நாம் பெற்றுள்ள முன்னறிவு,

**கற்க கசடறக் கற்பவை கற்றபின்**
**நிற்க அதற்குத் தக**

இந்த முன்னறிவோடு ஒரு புதிய செய்தியை இணைத்துக் கொள்வோமா?

| | | |
|---|---|---|
| கற்க கற்க | – | நாம் அறிவு பெறுவதற்காக கற்கிறோம் |
| கசடறக் கற்க | – | கற்கும்போது கற்கும் செய்தியிலிருந்து நமக்கென்று ஒரு பொருளை உருவாக்கிக் கற்கின்றோம் |
| கற்பவை கற்க | – | எவை கற்கத் தகுந்தவை, எவை கற்கத் தகாதவை என ஆராய்ந்து கற்கத் தகுந்தவற்றைத் தெரிவு செய்து கற்கின்றோம் |
| கற்றபின் கற்க | – | மீண்டும் மீண்டும் கற்றுக்கொண்டே இருக்கிறோம். பிறந்தது முதல் இறக்கும் வரை கற்கிறோம். |
| நிற்க கற்க | – | நல்ல மனிதனாக இருக்க கற்கிறோம் |
| அதற்குத் தக கற்க | – | பொருத்ததப்பாட்டினைப் பெற்று சூழ்நிலைக்குத் தகுந்தபடி |

ஒரு திருக்குறளின் முன்னறிவோடு கற்றலின் தன்மைகள் பற்றிய சில புதிய செய்திகளை இணைத்துக் கொண்டோம். இப்போது கற்றல் நிகழ்ந்துள்ளது.

# அலகு – 8

## கற்றல் வகைகள், நிலைகள் மற்றும் அணுகுமுறைகள்

உலகத்தில் உள்ள உயிர்கள் அனைத்தும் புலன்கள் மூலமாக உணரும் பண்பைப் பெற்றுள்ளன. மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றின் மூலமாக உணரும் பண்பை மனிதன் பெற்றுள்ளான். சூழலில் உள்ள ஆற்றல் புலன்கள் மீது மோதுவதை தூண்டல் என்கின்றோம். இத்தூண்டலுக்கு உயிருள்ளவை வெளிப்படுத்தும் எதிர்விளைவைத் துலங்கல் என்று கூறுகின்றோம். உயிருள்ளவற்றின் சிறப்புப் பண்பு கற்றலாகும். மனிதனது கற்றல் திறன் உயர்நிலைப்பட்டதாகும். அவை பல வகைகளில் மற்றும் பல நிலைகளில் நடைபெறுகிறது. இக்கற்றல் சிறப்பாக நடைபெறுவதற்கு பல அணுகுமுறைகள் கையாளப்படுகிறது. அவற்றைப் பற்றி விரிவாக இப்பகுதியில் காண்போம்.

நான்கு அல்லது ஐந்தாம் வகுப்புக் குழந்தைகளை வகுப்பறையில் உற்றுநோக்கி அவர்களிடம் பல்வேறு வகையான கற்றல் எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விவரமாகக் குறித்து வந்தபின் பாடத்தை தொடரவும்.

## 1. கற்றல் வகைகள்

கற்றல் பல வகைகளில் நடைபெறுகிறது. பிறந்தவுடன் குழந்தைக்கு அழுதால் பால் கிடைக்கும் என்று யார் சொல்லிக்கொடுத்தார்கள்? அது அப்போதே தன் முதல் செயல் ஆராய்ச்சியைத் தொடங்கிவிட்டது. பசியெடுத்தவுடன் முதலில் கால்களை அசைத்துப் பார்த்தது அம்மா வரவில்லை, பின்னர் உடல் கைகளை அசைத்தும் அம்மா வரவில்லை. பின்னர் உரத்தக்குரலில் குழந்தை அழுதது. அம்மா வந்து பால் கொடுத்தாள். பின்னர் பசி வந்தவுடன் குழந்தை அழுது பால் கேட்க வேண்டும் என்பதைக் கற்றுக்கொண்டது. இதனை உட்காட்சி வழிக்கற்றல் என்றும் கூறலாம். மனிதனின் முதல் செயல் ஆராய்ச்சி என்றும் கூறலாம். குழந்தை வளர வளர தாயிடமிருந்தும் சூழ்நிலைகளிடமிருந்தும் பலவற்றை பார்த்தும், பின்பற்றியும், செய்தும், உணர்ந்தும், சிந்தித்தும், முயன்றும் கற்றுக்கொள்கிறது. அவற்றில் சில வகைகளை இங்கு காண்போம்.

### வாய்மொழிக் கற்றல்

நாம் பேசும் மொழி, செய்தித் தொடர்புகள் போன்றவை வாய்மொழிவழிக் கற்றலுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும். பள்ளிக் குழந்தைகள் வாய்விட்டு படிப்பதையும் மனப்பாடம் செய்வதையும் இவ்வகை கற்றலில் சேர்க்கலாம். இதில் சைகைகள், படங்கள், குறியீடுகள், உருவங்கள், ஒலிகள், பேச்சுகள் போன்றவை வாய்மொழிக் கற்றலுக்கு ஏதுவாய் அமையும்.

### இயக்கக் கற்றல்

அனைத்துவகை இயக்கத் திறன்களைக் கற்றுக்கொள்ளுதல் இவ்வகைக் கற்றலைச்சாரும். நீந்துதல், குதிரை சவாரி, வாகனங்களை இயக்குவது, இசைக்கருவிகளை மீட்டுவது, பலவித

கருவிகளை இயக்குவது, அறிவியல் சோதனைகள் செய்வது, கணித வரைபடங்களை வரைதல், கூட்டல் பெருக்கல் போன்றவை இவ்வகை கற்றலில் அடங்கும். இவ்வகை இயக்கத்திறன்களைக் கற்பதினால் ஒருவரின் இயக்கத்திறன் அவர் மேற்கொள்ளும் செயலில் வேகத்தையும் துல்லியத்தையும் பெற உதவும். மேலும் இயக்கத்திறன்களைக் கற்றல் தன்னம்பிக்கையைத் தந்து அவர் மேற்கொள்ளும் செயலை எளிமையாக்குவதுடன் மனத்திருப்தியையும் அளிக்கும். இக்கலைத்திறன்களைப் பெறுவதற்கு திட்டமிட்டு ஒழுங்காக செயல்படுவதும், ஈடுபாட்டுடன் செயல்பாடுகளை பின்பற்றி முன்னேறுவதும் அவசியமாகிறது. குழந்தைகள் விளையாட்டில் ஆர்வமிக்கவர்கள். விளையாட்டுகள் குழந்தைகளின் இயக்கத்திறன்களை மேம்படுத்தும். விளையாட்டு முறையில் கற்றல், செயல்வழிக் கற்றல் போன்றவை குழந்தைகளின் இயக்கத்திறன்களை மேம்படுத்துவதுடன் மனச்சோர்வைப் போக்கி கற்றலில் ஆர்வத்தை ஏற்படுத்தும்.

**பொதுமைக் கருத்துச்சார்ந்த கற்றல்**

மனிதர்கள், பொருள்கள் மற்றும் நிகழ்வுகளைப் பற்றிய பொதுவான எண்ணங்களை மனதில் உருவகித்துக்கொள்வதை பொதுமைக் கருத்துச்சார்ந்த கற்றல் என்று கூறுகின்றோம். மரங்களில் பல வகைகள் இருந்தாலும் மரம் என்ற பொதுமைக் கருத்தினில் அவை அனைத்தும் அடங்கிவிடுகிறது. இக்கற்றல் ஒரு அறிவு சார்ந்த கற்றலாகும். ஒரு பொருளை இனங்கண்டு கொள்வதற்கும், அதன் பெயரை அறிவதற்கும், அதைப் பற்றி புரிந்து கொள்வதற்கும் கருத்துச்சார்ந்த கற்றல் பெரிதும் உதவும். ஒருவருடைய நடத்தைகள், வாய்மொழி, குறியீடுகள், இயக்கங்கள் மற்றும் அறிவு சார்ந்த செயல்பாடுகள் அனைத்திற்கும் அவரது பொதுமைக்கருத்து காரணமாகிறது. நமது செயல், பேச்சு, புரிதல், காரணமறிதல், முடிவெடுத்தல் முதலியன பொதுமை கருத்துச்சார்ந்த கற்றலின் தன்மையைப் பொறுத்தே அமைகிறது. பொதுமைக் கருத்துச்சார்ந்த கற்றல் குழந்தைகளின் மனத்திறனை மேம்படுத்தி அவர்களின் எதிர்காலத்தைப் பயனுள்ளதாக அமைத்துக்கொள்ள உதவும்.

**பிரச்சனையைத் தீர்த்தல்**

பிரச்சனைனையைத் தீர்த்தல் ஓர் உயர்வகைக் கற்றலாகும். இது ஒரு அறிவு சார்ந்த கற்றலாகும். இவ்வகைக் கற்றலில் காரணம் அறிதல், சிந்தித்தல், உற்றுநோக்குதல், பிரித்தறிதல், பொதுமைப் படுத்துதல், கற்பனைசெய்தல், முடிவை எட்டுதல், புதிய வழியில் முயற்சித்தல், பரிசோதனை செய்து சரிபார்த்தல் போன்ற திறன்கள் அடங்கும். பழைய அனுபவங்கள், பயிற்சிகள், முறைசார்ந்த மற்றும் முறைசார கற்றல், பெற்றிருக்கும் கல்வியறிவு, பழக்கங்கள், மனப்பான்மைகள், ஆர்வங்கள், கற்ற தொகுப்புகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு ஒருவனை தெரியாத புதிய இலக்கை எட்டுவதற்கு ஊக்கிவிப்பதன் மூலம் அவனை பிரச்சனைகளைத் தீர்ப்பதில் வல்லவனாக்க முடியும். இச்செயலில் எந்த அளவிற்கு அவனுக்கு பயிற்சியளிக்கின்றோமோ அதைப்பொருத்து அவன் பிரச்சனைகளைத் தீர்க்கும் திறனைப் பெறுகிறான். இவ்வகைக் கற்றல் ஒருவன் தான் வாழும் சமுதாயத்தின் உயர்விற்கும் முன்னேற்றத்திற்கும் தன்னை அர்ப்பணித்துக்கொள்ள அவசியமாகும்.

**தொடர் கற்றல்**

கற்போருக்கு திட்டமிடப்பட்ட படிநிலைகளை அமைத்து வயதிற்கும் மனத்திறனுக்கும் ஏற்ற வகையில் கற்றல் பொருள்கள், கருவிகளை வரிசைப்படுத்திக் கொடுத்து கற்க உதவுதல் தொடர் கற்றலை உருவாக்கும். தற்பொழுது நடைமுறையிலுள்ள செயல்வழிக் கற்றல் ஒரு தொடர்கற்றலாகும். ஒரு செயலை முழுமையாகக் கற்று முடித்தப் பின்னர் அடுத்த செயலைக் கற்க முன்னேறிச்செல்வது கற்றல் சேதாரத்தையும் தேக்கநிலையையும் வெகுவாக குறைக்கும்.

செயல்வழிக்கற்றலில் ஒரு குழந்தை தொடர்ந்து கற்று முன்னேற்றமடைய ஆசிரியரும் பிற குழந்தைகளும் ஏதுவாளர்களாக செயல்படுவதை நீங்கள் தொடக்கப்பள்ளிக்கு உற்றுநோக்கல் பயிற்சிக்கு செல்லும் போது கண்டறியலாம்.

### இணைத்துக் கற்றல்

இணைத்துக் கற்றல் அன்றாட கற்றலில் முக்கியத்துவம் பெறுகிறது. தாய்மொழிச்சொற்களுடன் பிறமொழிச்சொற்களை இணைத்துக் கற்பதால் பிறமொழிகளை எளிதாகக் கற்க முடிகிறது. இவ்வகை கற்றலின் மூலம் மொழியறிவு வளர்ச்சிக்குத் தேவைப்படும் சொல்லாட்சித் திறன், இலக்கணம், பேச்சுத்திறன், எழுத்துத்திறன் போன்றவற்றை எளிதில் பெறலாம்.

### பின்பற்றிக் கற்றல்

நம் அன்றாட வாழ்வில் பின்பற்றிக் கற்றல் முறைசார்ந்த முறையிலும், முறைசார முறையிலும் நடைபெற்ற வண்ணமுள்ளது. சமூக வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, பண்பாட்டு வளர்ச்சி, மொழி வளர்ச்சி, இயக்கத் திறன் வளர்ச்சி போன்றவை பெரிதும் பின்பற்றிக் கற்றல் மூலம் நடைபெற்று வருகிறது என்பது உண்மை. குழந்தைகளின் அறிவு வளர்ச்சியின் துவக்கமே பின்பற்றிக் கற்றலை அடிப்படைப்படையாக கொண்டுள்ளது. எனவே பெற்றோர் ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு முன் உதாரணமாகத் திகழ வேண்டும்.

## 2. கற்றல் விதிகள்

நடத்தைக் கோள்கையினர் கற்றல் தூண்டல் – துலங்கலை அடிப்படையாகக் கொண்டு நடைபெறுகிறது என்று கூறுகின்றனர். முயன்று தவறி கற்றல், ஆக்கநிலையுறுத்தல் போன்றவை இவ்வகைக் கற்றலில் அடங்கும்.

### அறிவு சார்ந்த கற்றல் விதிகள்

தூண்டல் – துலங்கல் கற்றல் விதிகள் குருட்டு மனப்பாடம் செய்வதற்கே துணைபோகிறது. எனவே அறிதல், புரிதல், பகுத்தல், தொகுத்தல், கண்டுணர்தல் போன்ற அறிவு சார்ந்த செயல்களுக்கும் கற்றலுக்கும் உள்ள தொடர்பினை பின்வந்த ஆராய்ச்சியாளர்கள் ஆர்வங்காட்டினர். அதன் விளைவாக அறிவு சார்ந்த கற்றல் கொள்கை உருவானது. இதற்கு உட்காட்சி வழிக் கற்றல் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

### தார்ண்டைக்கின் கற்றல் விதிகள்

#### 1. ஆயத்த விதி :

ஆயத்தமற்ற எந்த செயலும் முழுமையடையாது. குழந்தைகளின் கற்றலுக்கு ஏற்ற மனநிலை, சூழ்நிலை, வசதிகள் போன்றவற்றை ஆயத்தம் செய்து கொண்டு கற்றல் கற்பித்தல் செயல்களில் குழந்தைகளை ஈடுபடச் செய்வது கற்றலை பயனுள்ளதாக்கும்.

#### 2. பயிற்சி விதி :

கற்றலில் மீண்டும் மீண்டும் பயிற்சியளித்தல் கற்றலை வலுவூட்டும். எடுத்த எடுப்பில் எந்தத் திறமையும் தோன்றிவிடாது. திறமைகள் திருப்பித் திருப்பி செய்வதால் தோன்றுவது. ஆசிரியர் குழந்தைகளுக்கு பாடங்களை பல வழிகளில் மீண்டும் மீண்டும் கற்பித்தல் நன்மைபயக்கும்.

### 3. விளைவு விதி :

குழந்தைகள் விளையாடும் போது வெற்றி என்ற விளைவை நோக்கி முன்னேறிச் செல்வதில் ஆர்வங்காட்டுவர். போட்டிகளுக்குப் பரிசு என்ற விளைவு இருப்பதினால் குழந்தைகள் ஆர்வத்துடன் போட்டிகளில் பங்கேற்கின்றனர். எனவே ஆசிரியரின் அன்பு, அரவணைப்பு, பாராட்டு, பரிசு போன்ற விளைவுகளை பெற குழந்தைகள் கற்றலில் ஆர்வங்காட்டுகின்றனர். இத்தகைய விளைவுகள் ஏதுமில்லை எனில் கற்றல் ஒருபோதும் ஒழுங்காக நிகழாது என்பதை ஆசிரியர்கள் உணர்ந்து செயல்பட வேண்டும்.

### ஆக்கநிலையுறுத்தல் : பாவ்லவ்

தூண்டல் – துலங்கல் தொடர்பு கற்றலுக்கு அடிப்படை என்று பாவ்லவ், ஸ்கின்னர் போன்றோர் கூறுகின்றனர். தொடர்பில்லாத ஒரு தூண்டல், இயற்கைத் தூண்டலுடன் இணைத்து வழங்கப்படும்போது இயற்கை துலங்கல் ஏற்படுகிறது. பின்பு இயற்கைத் தூண்டல் இல்லாத நிலையிலும், தொடர்பில்லாத தூண்டல் துலங்கலை ஏற்படுத்துகிறது. இத்தொடர்பில்லாத தூண்டல் இயற்கைத் துலங்கலோடு நிலைப்படுத்தப்படுவதை ஆக்கநிலையுற்றக் கற்றல் என்று உருஷ்ய நாட்டு உளவியல் மேதை பாவ்லவ் கூறுகின்றார். இவர் ஆக்கநிலையுறுத்திக் கற்றலை சோதனையின் மூலம் நிரூபித்துள்ளார்.

இவர் சோதனையில் ஒரு நாயை அறையில் பூட்டி வைத்திருந்தார். அதற்கு எலும்புத்தூள் உணவு அளிக்கப்பட்டது. எலும்புத்தூள் உணவை நாயின் வாயில் போட்டால் உமிழ்நீர் சுரப்பது இயற்கையான ஒரு நிகழ்வாகும். இதனை இயற்கை துலங்கல் என்று கூறுகின்றோம். பாவ்லவ் ஒரு மின்சார மணி ஓசையை எழுப்பி, அந்த ஓசையுடன் நாய்க்கு எலும்புத்தூள் உணவளித்தார். இவ்வாறு சில நாட்கள் நாய்க்கு உணவளிக்கப்பட்டது. பின்னர் மணி ஒலித்தவுடன் உணவு கொடுக்கப்படாத நிலையிலும் நாயின் வாயிலிருந்து உமிழ்நீர் சுரந்தது. மணி ஓசை ஒரு தொடர்பற்ற தூண்டல் ஆகும். இந்த தொடர்பற்ற தூண்டல் நாயின் வாயில் உமிழ்நீரைச் சுரக்கவைத்தது. மணி ஓசையைத் தொடர்ந்து உணவு வரும் என்பதை நாய் கற்றதனால் அதன் வாயில் உமிழ்நீர் சுரந்தது. இவ்வகைக் கற்றலுக்கு ஆக்கநிலையுற்ற கற்றல் என்று பெயர். மேலும் இச்சோதனையில் மணி ஓசைக்குப் பதிலாக வண்ண ஒளிகள், பல்வேறு வாசனைப் பொருள்கள், நாயின் முகத்தில் காற்று வீசும்படி செய்தல் போன்ற தொடர்பற்ற தூண்டல்கள் ஏற்படுத்தப்பட்டு துலங்கல் நிகழ்வது உறுதி செய்யப்பட்டது.

சர்க்கஸ்களில் யானை, சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய மிருகங்கள் ரிங் மாஸ்டர்களின் சொல்படி வேடிக்கைகள் செய்வதைப் பார்த்திருப்பீர்கள். ஏன் என்று தெரியுமா? 5000 கிலோ கிராமுக்கு மேல் எடையுள்ள யானை 100 கிலோ கிராமிற்கு கீழ் எடையுள்ள மனிதனின் சொற்படி கேட்பது ஆக்கநிலையுற்றுக் கற்றதால் ஏற்பட்ட விளைவாகும். யானையை வேடிக்கைச் செய்யப் பழக்கும்போது அது செய்து முடிக்கும் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு துண்டு வெல்லம் அளிக்கப்பட்டது. இந்த வேடிக்கைகளைச் செய்தால் வெல்லத்துண்டுகள் கிடைக்கும் என்பதை யானை ஆக்க நிலையுறுத்தல் மூலம் கற்றுக்கொண்டது. சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகள் அவை செய்யும் ஒவ்வொரு வேடிக்கைச் செயல்களுக்கும் அவற்றிற்கு மிகவும் பிடித்த சுவையானத் தின்பண்டம் கிடைக்கும் என்பதை வேடிக்கைக்கு பழக்கும்போது ஆக்கநிலையுறுத்தல் மூலம் கற்றுக்கொண்டது. ஆசிரியர் குழந்தைகளைப் பாராட்டுவது, அன்புகாட்டி அரவணைப்பது போன்ற செயல்கள் அவர்களை ஆக்கநிலையுறுத்திக் கற்கத் தூண்டும்.

## 3. தன்னிச்சையாக எழும் துலங்களைச் சார்ந்த ஆக்கநிலையுறுத்தல்

### பி.எப்.ஸ்கின்னர்

ஒரு கூட்டில் உணவு தரப்படாத வெள்ளை எலி விடப்பட்டது. இக்கூண்டின் ஒரு மூலையில் உணவு வைக்கப்பட்டது. கூண்டிலுள்ள ஒரு நெம்புகோலை அழுத்தும்போது எலிக்கு உணவு கிடைக்குமாறு செய்யப்பட்டிருந்தது. எலி பசியுடன் கூண்டினுள் சுற்றிச் சுற்றி திரிந்தது. இது தன்னிச்சையாக நெம்புகோலை அழுத்தும்போது அதற்கு உணவுகிடைத்தது. இவ்வாறு எதேச்சையாக நெம்புகோலை அழுத்துவதால் உணவு கிடைப்பதைக் கற்றுக் கொண்டது எலி. பின்னர் எலி நெம்பு கோலை அழுத்தும்போது அதனுடன் சேர்த்து ஒரு வட்டமான ஒளி தோன்றும்போது மட்டுமே உணவு கிடைக்குமாறு செய்தார். நெம்புகோலை அழுத்தினாலும் ஒளி தோன்றாதபோது உணவு கிடைக்காதவாறு செய்யப்பட்டது. சில நாட்கள் பயிற்சி அளிக்கப்பட்டது. பின்னர் எலி ஒளி வந்தபோது மட்டும் நெம்புகோலை அழுத்தி உணவை பெற முற்பட்டது. எலி தன்னிச்சையாக சுற்றிச் சுற்றி வந்து காரணமின்றி நெம்புகோலை அழுத்தி வெளிப்படுத்தப்படும் துலங்கல்கள், உணவால் வலுவூட்டப்பட்டது. பின்பு இந்த தன்னிச்சையான துலங்கலானது ஆக்கநிலையுறுத்தப்படுகிறது என்பதை மேற்கூறிய சோதனை மூலமாக ஸ்கின்னர் உறுதிபடுத்தினார். குழந்தைகளை பாராட்டுதல், பரிசுப் பொருள்கள் தருதல், விளையாட அனுமதித்தல் போன்றவை வலுவூட்டும் தூண்டலை ஏற்படுத்தும்.

### உட்காட்சி மூலம் கற்றல்

உட்காட்சி மூலம் கற்றல் நிகழ்வதை கோலர் என்னும் மனவியல் வல்லுனர் சோதனையின் மூலம் நிரூபித்துள்ளார். இவர் சோதனையில் சிம்பன்சி குரங்கு ஒன்று கூண்டினுள் விடப்பட்டது. கூண்டிற்கு வெளியே அதன் கைகளுக்கு எட்டாத தொலைவில் வாழைப்பழக்குலை ஒன்று தொங்கவிடப்பட்டது. நீண்டதொரு கோல் ஒன்று கூண்டிற்கு வெளியே போடப்பட்டது. தொடக்கத்தில் குரங்கு கைகளை நீட்டி பழங்களை எடுக்க முயன்று தோல்வியுற்றது. இதனால் ஆர்வம் குன்றிய குரங்கு அங்குமிங்குமாக அலையத் தொடங்கியது. தற்செயலாக வெளியேக் கிடந்த கோல் அதன் கவனத்தை ஈர்த்தது. உடனே அதன் அறிவுக்களத்தில் கோலும் அடையவிரும்பும் வாழைப்பழத்திற்குமான தொடர்பு பளிச்சிட்டது. இதன் பிறகு கோலைப் பயன்படுத்தி வாழைப்பழத்தை எடுத்தது. இதே போன்ற மற்றொரு சோதனையில் ஒரு கோலிற்கு பதிலாக ஒன்றுடன் ஒன்று பொருந்தக்கூடிய இரண்டு சிறிய கோல்கள் கூண்டினுள் போடப்பட்டது. இம்முறை ஒவ்வொரு கோலையும் பயன்படுத்தி வாழைப்பழத்தை எடுக்க முயற்சி செய்து தோல்வியுற்றது. பின்னர் சிந்தித்து இரண்டு கோல்களையும் ஒன்றுடன் ஒன்றை இணைத்துப் பயன்படுத்தி வாழைப்பழத்தை எடுக்க முயற்சி செய்து வெற்றிபெற்றது. இச்சோதனையில் கற்றல் உடனடியாக நிகழ்ந்தது. இதற்கு காரணம் உட்காட்சி வழிக்கற்றலே ஆகும். நியூட்டன், ஐன்ஸ்டீன், எடிசன், இராமனுஜம் போன்ற மேதைகள் உட்காட்சி வழிக்கற்றல் மூலம் அறிய கண்டுபிடிப்புகளை நிகழ்த்தியுள்ளனர். ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு உட்காட்சி வழிக்கற்றலுக்கு வாய்ப்புகள் அளித்து பழக்குவதன் மூலம் எதிர்காலத்தில் பல மேதைகளை உருவாக்கலாம்.

## 4. கற்றல் அணுகுமுறைகள்

குழந்தைகளின் கற்றலை மேம்படுத்த பல அணுகுமுறைகள் கையாளப் பட்டுவருகிறது. தொடக்கத்தில் ஆசிரியர் மையக்கல்வி முறை கடைப்பிடிக்கப்பட்டது. இம்முறையில் ஆசிரியர்

அனைத்து அதிகாரம் படைத்தவராகவும் ஆசிரியர் எதை சொல்கிறாரோ அதை மாணவர்கள் அப்படியே பின்பற்றி செய்யவதே கற்றலாக கருதப்பட்டது. குறை கூறுவதும் தண்டிப்பதும் மாணவர்களின் கற்றலை செம்மைப்படுத்தும் என்ற எண்ணம் கொண்டு ஆசிரியர்கள் செயல்பட்டுவந்தனர். பின்னர் குழந்தை மையக்கல்வி முறை பின்பற்றப் பட்டது. இம்முறையில் ஆசிரியர் குழந்தைகளின் ஆர்வங்கள், உடல்வளர்ச்சி, மனவளர்ச்சி, தேவைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு தானேக்கற்றல் கருவிகள், விளையாட்டுமுறைகள், செயல்பாட்டுவழிக்கற்றல், குழுச் செயல்பாடுகள், கற்றலில் இனிமை உத்திகளாகிய ஆட்டம், பாட்டம், கொண்டாட்டம் முதலிவற்றை பயன்படுத்தி கற்றலை மேம்படுத்தியுள்ளனர். தற்போது படைப்போரின் பார்வையில் கற்றல் என்பது அறிவைக் கட்டி உருவாக்கும் ஒருசெயலாக கருதப்படுகிறது. கற்போர் ஏற்கனவே தெரிந்து வைத்துள்ள கருத்துக்களோடு புதிய கருதுக்களை இணைத்து தங்கள் சொந்த அறிவைக் கூட்டுகிறார்கள். இந்த அனுபவத்தைப் பெற ஆசிரியர் பொருள்கள் மற்றும் செயல்பாடுகளை தந்து உதவ வேண்டும். இவ்வாறு கற்றலை மையப்படுத்தி கற்பிக்கும் அணுகுமுறை குழந்தைகளின் கற்றலை மேலும் பயனுள்ளதாக்கும் என்பது அறிவு உருவாக்கக் கொள்கையின் (constructivist) கருத்தாகும். இதுவே இறுதி முடிவாகிவிடாது. கரும்பலகை ஒன்றையே கற்றல் – கற்பிக்கும் கருவியாக பயன்படுத்திய காலம்மாறி கணினி, படவீழ்த்தி, தொலைக்காட்சிப் பெட்டிகள், குறுந்தகடுகள் போன்றவை கற்றல் கற்பிக்கும் கருவிகளாகப் பயன்படுத்தப்படுகிறது. எனவே கற்றல் அணுகுமுறை அறிவியல் வளர்ச்சியை ஈடுசெய்யும் விதத்தில் அமையவேண்டும். அறிவியல் கருவிகளும் கருத்துக்களும் வளர்ந்து வரும்போது அதனை ஈடுசெய்யும் வகையில் கற்றல் அணுகுமுறைகளை மேம்படுத்த வேண்டியுள்ளது.

## நடத்தைக் கொள்கையாளர் அணுகுமுறை

கற்றல் என்பது தேவையான நடத்தை மாற்றத்தை ஏற்படுத்தும் ஒரு செயல் என்கின்றனர் நடத்தைக் கொள்கையாளர்கள். ஜே.பி.வாட்சன், ஸ்கின்னர், பாவ்லவ் போன்ற இக்கொள்கையாளர்கள் கற்றல் என்பது தூண்டல் துலங்கலால் இணைக்கப்பட்டு நினைவில் நிலைக்கொள்வதாலும் இதனால் மனித நடத்தையில் மாற்றம் ஏற்படுவதாகவும் கூறுகின்றனர். திரும்பத் திரும்பத் துண்டல் துலங்கல் இணைப்பு நிகழ்வதால் கற்றல் வலுவூட்டப்படுவதாக இவர்கள் கூறுகின்றனர். ஒரு கருத்தை வலியுறுத்த அது சார்ந்த பலவகைத் தூண்டல்களை ஏற்படுத்தினால் கற்றல் வலுவடைவதாக கூறுகின்றனர். இக்கொள்கை குருட்டு மனப்பாடம் செய்வதற்கு உதவுகிறது. இந்த அணுகுமுறையில் புரிதலுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படவில்லை. இந்த அணுகுமுறை குழந்தைகளைத் தேர்வுக்கு தயார் செய்யமட்டும் உதவுமேயன்றி வாழ்க்கைக்கு பயன்படாது. இங்கு புரிதல், சிந்தித்தல், சோதித்தறிதல் போன்ற அறிவுச் சார்ந்த செயல்களுக்கு முக்கியத்துவமளிக்கப்படவில்லை.

## அறிவுசார் கற்றல் அணுகுமுறை

அறிவுசார் கற்றல் கொள்கையாளர்கள் கற்றல் என்பது கவனித்தல், சிந்தித்தல், புரிதல், காரணகாரியமறிதல், முடிவெடுத்தல், சரிபார்த்தல், சோதித்தல் போன்ற மனச் செயல் பாடுகளால் நிகழ்கின்றது என்கின்றனர். பரிசோதனை முறைகள், செயல்வழிக்கற்றல், பிரச்சனைத் தீர்த்தல், செய்து கற்றல், செயல் திட்ட முறை, தானே கற்றல், பொதுமைக்கருத்தினை உருவாக்குதல், பகுத்தறிதல், தொகுத்தறிதல் போன்றவை இத்தகைய அணுகுமுறையில் அடங்கும். அறிவுசார் கற்றல் நெடுங்கால நினைவிற்கு உதவுவது மட்டுமன்றி எதிர்கால வாழ்க்கைக்கு பெரிதும் பயன்படும்.

குழந்தைப் பருவத்திலிருந்து வாலிபப் பருவத்திற்குச் செல்லும் பருவம் வேகமான வளர்ச்சியும், மாற்றங்களும் உள்ள காலமாகும். இப்பருவத்தினர் உடல், மனவளர்ச்சிக்கேற்பவும், தனிநபர் முன்னேற்றத்திற்கேற்பவும் கலைத்திட்டம் ஒருங்கிணைந்த அணுகுமுறையைக் கொண்டிருக்க வேண்டும்.

அறிவுத்திறன் என்பது, செயல்பாடுகளின் மூலமும், மொழியின் மூலமும் தன்னையும், உலகையும் புரிந்துகொள்ளும் ஆற்றலை உள்ளடக்கியதாகும்.

**அறிவின் உருவாக்க அணுகுமுறை**

முன்பு கற்ற அறிவோடு, பின்னர் கற்கும் அறிவை தொடர்புபடுத்திக் கற்றுக்கொள்வது அறிவின் உருவாக்கம் ஆகும். முன்னால் கற்ற, தெரிந்த செய்திகளிலிருந்து பின்னர் கற்கும் புதிய செய்திகளை தொடர்புபடுத்துவதன் மூலம் முழுமையாக ஒன்றைக் கற்றுக்கொள்ள இயலும். இவ்வகை கற்றலை ஊக்குவிக்கும்போது ஆசிரியர்களின் பணி இன்றியமையாதது ஆகும். குழந்தைகளுக்கு முன்னர் தெரிந்தவை என்னனென்ன என்பது பற்றி ஆசிரியர் தெரிந்து புதியனவற்றை பின்னர் கற்றுக்கொடுக்க வேண்டும். குழந்தைகள் புதியன பற்றி அறிந்துகொள்ளத் துடிக்கும் இயல்புடையது. அப்போது அவை பல வகையான வினாக்களை எழுப்பும், அவற்றுக்கெல்லாம் முறையான சரியான விடைகளை ஆசிரியர் கூறவேண்டும். அறிவுபூர்வமான ஊடகங்களை ஆசிரியர்கள் பயன்படுத்தி ஊக்குவிக்கலாம். தன்னை சுற்றியுள்ளவை மூலமோ அல்லது பல்வேறு தற்கால ஊடகங்கள் மூலமோ பல்வேறு கருத்துக்களைப் பெறுகின்றனர். மாணவர்கள் கேள்வி கேட்பதற்கும், பயன்படுத்திப்பார்ப்பதற்கும், ஒருவரோடு ஒருவர் பேசி முடிவெடுக்கவும், சிந்தித்துப்பார்ப்பதற்கும், புதிய கருத்துக்களை உருவாக்குவதற்குமான சூழ்நிலையை வகுப்பறை மற்றும் பள்ளியில் ஆசிரியார்கள் உருவாக்கித் தரவேண்டும்.

**கற்றல் நிலைகள்**

**இயல் பூக்கம்**

உயிர்கள் பிறந்தபின் இயல்பாகவே கற்றுக்கொள்ளும் வாய்ப்புகளும் உள்ளன. மீன் குஞ்சு பிறந்த உடனேயே நீந்துவது எப்படி?

**போலச் செய்தல்**

குழந்தைகள் பெரும்பாலும் அருகில் உள்ளவர்களை கண்டு அவர்களைப் போலவே பேசவும், நடக்கவும், செயல்படவும் முயற்சிக்கின்றது. எனவே குழந்தைகளுக்கு அருகில் உள்ளவர்கள் நல்லவர்களாகவும், நல்ல செயல்களைச் செய்பவர்களாகவும் அமைத்தால் அக்குழந்தை அவர்களின் நற்குணங்களைப் பெற்று வளர்கின்றது.

**முயன்று தவறிக்கற்றல்**

குழந்தை தானாக எழுந்து நிற்க முயற்சிக்கிறது. அப்போது சிலமுறை அது தன் முயற்சியிலிருந்து தவறி விழுவது தவறு இல்லை. அவ்வாறு விழுவதால் அடுத்த முறை அத்தவற்றினை செய்யாமல் தன் முயற்சியில் வெற்றி அடைகின்றது. மிதி வண்டி ஓட்டக் கற்றுக் கொள்வதையும் இதற்கு எடுத்துக்காட்டாகக் கூறலாம்.

### அறிவுசார் நிலைக் கற்றல்

ஒரு செயலை பல வழிகளில் சிந்தித்தும் அப்போது அதனை செய்ய இயலாமல் போக வாய்ப்பு உள்ளது. ஆனால் திடீரென மனதில் ஒரு பொறி தோன்றி அதனால் அச்செயல் சட்டென ஒரு முடிவுக்கு வரும். இவ்வாறு கற்பது நமது முந்தய அறிவு நிலைகளுக்கு உட்பட்டதாகும்.

### அறிவின் உருவாக்கம்

கற்றல் என்பது அறிவின் உருவாக்கமே ஆகும். எடுத்துக்காட்டாக 'வாகனங்கள்' என்றால் என்ன? என்று கற்பிக்கும்போது ஒவ்வொரு குழந்தையும் தான் அதற்குமுன் கண்ட வாகனத்தின் படத்தினை தனது மனதில் ஓடவிடுகிறது. பின்பு ஆசிரியர் காட்டும் மற்ற வாகனங்களின் படத்தோடு ஒப்பிட்டு பல்வேறு 'வாகனங்கள்' பற்றிய ஒரு புதிய அறிவினை உருவாக்கிக் கொள்கிறது.

### உள்ளுணர்வு மூலம் கற்றல்

இது ஒரு உயர்நிலைக் கற்றல் ஆகும். உள்ளுணர்வு என்பது ஒருவரை அப்படியே வெளிப்படுத்தும் கண்ணாடி ஆகும். நம்மைச் சுற்றி என்னென்ன இருக்கவேண்டும் என்பதை நமது உள்ளுணர்வே தீர்மானிக்கிறது. நாம் இன்று செய்யவேண்டிய பணிகள் அனைத்தும் நமது உள்ளுணர்வினால் தீர்மானம் செய்யப்பட்டு ஒரு நிழல்படமாக நமது நினைவில் ஓடும். நல்லதொரு சிந்தனையின் உயர் நிலையாக உள்ளுணர்வு விளங்குகிறது.

### செயல்

கற்றல் நிலைகளின் இயல்பூக்கம் முதல் உள்ளுணர்வு மூலம் கற்றல் வரை உள்ள அனைத்து நிலைக் கற்றலையும் எடுத்துக்காட்டுன் விளக்குக.

### கற்றல் படி நிலைகள்

கற்றலில் ஏழு படிநிலைகள் உள்ளதாக கேக்னே கூறுகிறார்.

சைகை வழிக்கற்றல், தூண்டல், துலங்கல், இயக்கக்கற்றல், பல்வகை வேறுபடுத்திக் கற்றல், பொதுமை கருத்துசார் கற்றல், விதிகள் மூலம் கற்றல், பிரச்சினையை தீர்க்க கற்றல் ஆகிய ஏழுபடிநிலைகளை கூறுகிறார்.

**கற்றல் படி நிலைகள்**

| | |
|---|---|
| 1. பிரச்சினையை தீர்த்தல் | எ.கா. ஒன்றுக்குள் ஒன்று இறுகிய அடுக்குப் பாத்திரங்களைப் பிரித்தெடுத்தல் |
| 2. விதிகள் மூலம் கற்றல் | வெப்பத்தால் பொருள்கள் விரிவடையும் |
| 3. பல்வகை வேறுபடுத்திக் கற்றல் | விலங்குகளிலிருந்து பறவைகளை வேறுபடுத்தி அறிதல் |
| 4. சங்கிலிக் கற்றல் | பேச, எழுத கற்றல் |
| 5. உடல் இயக்கம் | நீந்துதல், நடத்துதல், ஓடுதல் |
| 6. தூண்டல், துங்கல் மூலம் அறிதல் | விலங்கினங்கள் பறவைகள் கற்றல் |
| 7. சைகை வழிக் கற்றல் | பழைய ஆக்க நிலையுறுத்தல் |

# அலகு – 9

## பொதுமைக் கருத்தும், கருத்துருவாக்கமும்

### முன்னோக்கு

ஒரு குழந்தை வசிக்கும் உலகம் அவனுடைய தொட்டிலுக்கு அப்பால் வெகுவாக விரிவடைகிறது. முக்கியமாக அவனுடைய எண்ணங்கள், திட்டங்கள், அக்கறைகள் ஆகியவை அவன் வளர, வளர பெரிய விரிவை அளிக்கின்றன. குழந்தையின் அறிவு வாழ்க்கை, அவனை அடுத்துள்ள நேரடியான அன்றாட வாழ்க்கைக்கு அப்பாலுள்ள உலக நிகழ்ச்சிகளில், அதாவது அண்மையிலிருந்து சேய்மைக்கு மிகுந்த அக்கறைகளாலும் பெருகுகிறது. அதனைத் தொடர்ந்தே அவனுடைய கருத்தும் உருவாகி வளர்ச்சியுறுகின்றது. அதனைப் பற்றி இனி காண்போம்.

## 1. பொதுமைக் கருத்தும், கருத்துருவாக்கமும்

### செயல்பாடு : 1

'பயணம்' என்று கூறினால் உன் மனதில் என்னென்ன தோன்றுகின்றன? உதாரணமாக பேருந்துப் பயணம், நடைப் பயணம், கப்பல் மூலம் கடல் வழிப்பயணம், விமானம் மூலம் வான் பயணம், சந்திரன், செவ்வாய் போன்ற பிற கிரகங்களுக்கு விண்வெளிப் பயணம், மலைப் பயணம், ஒட்டகம் மூலம் பாலைவனப் பயணம், வட, தென் துருவங்களுக்குத் துருவப்பணயம், களப்பயணம், ஆய்வுப் பயணம், பருவ மாற்றத்தால் கண்டம் விட்டு கண்டம், (வேடந்தாங்கல் போன்ற இடங்களுக்கு) வரும் பறவைகளின் பயணம், சாகசப் பயணம் போன்றவை நினைவுக்கு வருகின்றதா?

இவை போன்ற பிற பயணங்களையும் உன் நினைவுக்குக் கொண்டு வந்து விவாதித்துப் பட்டியலிடவும். இவை அனைத்துக்கும் 'பயணம்' என்ற பொதுமைக் கருத்து உருவாகியிருப்பதை நினைவில் கொள்க. (இந்த விவாதத்திற்குப் பின்னர் ஆசிரியர் மேற் கொண்டு இப்பாடத்தைத் தொடர வேண்டும்)

நம் மனதில் பதிவு செய்யப்பட்டு நாம் நினைவு கூறும் சாயல்கள் ஒரு பொருளை மட்டும் குறிப்பனவாகவோ அல்லது பொதுப் பண்புகளுள்ள பல பொருட்களைக் குறிப்பனவாகவோ இருக்கும் பொதுமைச் சாயல்களை 'பொதுமைக் கருத்துக்கள்' (Concepts) என்கிறோம். மொழியிலுள்ள பொதுப் பெயர்களுக்கு, உதாரணமாக ஆறு, கடல், மலை, இரயில், பென்சில், புத்தகம், பள்ளிக்கூடம் போன்றவைகளுக்கு ஈடாக நம் மனதிலுள்ள கருத்துக்கள் பொதுமைக் கருத்துக்கள் ஆகும். உதாரணமாக புத்தகம் என்ற சொல்லை ஆராய்ந்தால் உருவ அளவு, வண்ண மேலட்டை, அச்சு போன்றவை மாறுபட்டிருந்தாலும் கூட எழுதப்பட்ட அல்லது அச்சிடப்பட்ட ஏடுகளின் தொகுப்பு என்ற பொதுவான இயல்பு எல்லாப் புத்தகங்களுக்கும் (ஓலைச்சுவடி முதல் இன்றைய கணிப்பொறி மூலம் அச்சிடப்பட்ட புத்தகம் வரை) பொருந்தும். ஆகவே புத்தகம் என்பதை ஒரு 'பொதுமைக் கருத்து' என்கிறோம்.

தொடக்கப் பள்ளி நிலையை அடையும் ஒரு சிறுவனுக்கு, தன் கடந்த காலத்தை நினைவுபடுத்திக் கொள்ளவும், வருங்காலத்தைத் திட்டமிடவும் அவனால் இயலும். அவனுடைய அனுபவம், அவனுக்குக் கிடைத்துள்ள தகவல்கள் இவற்றின் வரம்புகளுக்குள் அவன் தொகுத்தறி ஆய்வு (Inductive reasoning), பகுத்தறி ஆய்வு (Deductive reasoning) இரண்டையும் கையாளுகிறான். கற்பனை செய்யவும், கணக்கற்ற குறியீடுகளை, அவை குறிக்கும் இயற்பியல் பொருட்களை உண்மை நிலையில் கையாள வேண்டிய அவசியமின்றி, மனத்தின்கண் கையாள அவனால் இயலும். இதன் அடிப்படையில் பொதுமைக் கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளப் பழகுகிறான்.

குறிப்பு : செயல்பாடு 1 – ன் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளைக் கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வேறுபாடு உள்ளதா? விவாதித்து அறியவும்.

## உ. பொதுமைக் கருத்து உருவாதல்

### செயல்பாடு : 2

அண்ணல் காந்தியடிகள் இடுப்பில் ஒரு சாதாரண கதர் வேட்டியும், மேலுடலுக்குப் போர்த்திக் கொள்ள ஒரு பெரிய கதர்த்துண்டும், கையால் தைக்கப்பட்ட சாதாரண தோல் செருப்பும் அணிந்து, உடலுக்குத் தேவையான சத்துள்ள உணவு அருந்தி, ஓடுகள் வேய்ந்த சாதாரண கட்டிடங்கள் அமைந்த சபர்மதி ஆசிரமத்தில் எளிய வாழ்க்கை வாழ்ந்து, பொய் பேசாது, உண்மையை மட்டும் பேசி, எவ்வுயிர்க்கும் மனதாலும், சொல்லாலும், செயலாலும் தீங்கு நேராத விதத்தில் நேர்மையாக வாழ்ந்து காட்டினார். எளிய வாழ்க்கை வாழ்ந்து வந்த வீரமுத்து என்ற சைக்கிள் ரிக்ஷா தொழிலாளி யாரோ ஒரு பயணி தன்னுடைய சைக்கிள் ரிக்ஷாவில் தவறவிட்டுச் சென்ற நகைகளும், பணமும் அடங்கிய கைப்பையை நேர்மையுடன் அருகில் உள்ள காவல் நிலையத்தில் ஒப்படைத்து அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

எளிமை, நேர்மை போன்ற பண்புப் பொதுக் கருத்துக்கள் இதில் உருவாகியுள்ளது. இது போன்று வேறு ஒரு உதாரணத்துடன் வேறு ஏதேனும் பொதுக் கருத்துக்களை விவாதித்து அறிக்கையாகத் தயாரிக்கவும். (இவ்விவாதத்திற்குப்பின் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.)

பொதுமைக் கருத்துக்கள், தொடர்புடைய பல அனுபவங்களினின்றும் எழுகின்றன. தொடர்புடைய பல அனுபவங்களில் காணப்படும் பொதுப்பண்புகள் தனிப்படுத்தப்பட்டு இப்பொதுப் பண்புகளைச் சேர்த்து ஒரு பெயர் தரப்படும் பொழுது அது பொதுமைக் கருத்தாக உருவாகின்றது.

பள்ளிகளில் மாணவர்கள் சேரும் பொழுது பல பொதுமைக் கருத்துக்களைப் பெற்று வருகின்றனர். ஆனால் அவை துல்லியமாக இருக்காது. எனவே ஆசிரியர் பல உதாரணங்களைக் கையாண்டு இப்பொதுமைக் கருத்துக்களை மேலும் மேலும் துல்லியமாக்குதல் வேண்டும்.

வகுப்பறையில் கற்றல் – கற்பித்தல் நிகழ்வு முடிந்த பின்னர் முக்கியமான பொதுமைக் கருத்துக்களை ஆசிரியர் தொகுத்தளித்துக் கூறுதல் நல்லது. பொதுமைக் கருத்துக்களைக் கற்பிக்கையில் உதாரணங்கள் மட்டுமின்றி எதிர்நிலை உதாரணங்களையும் ஆசிரியர் கூறுவது அவசியம். 'நல்ல செயல்கள்' என்பது பற்றிக் கற்பிக்கையில் 'நல்லது அல்லாத செயல்களையும்' சில எடுத்துக்காட்டுகளுடன் கூறுவது இன்றியமையாததாகும். வரையறைகள் எளியனவாக, மாணாக்கருக்கு எளிதில் புரியக் கூடியனவாக இருப்பது நல்லது; இவ்வழிகளை ஆசிரியர் கையாள்வதால் மாணாக்கரது பொதுக்கருத்துக்களை உருவாக்கும் திறன் பெருகும். அவர்களின்

சிந்தனைத் திறனும் வளர்ச்சி பெறும். பொதுமைக்கருத்து உருவாக்கும் திறன் ஒரு மாணவனுக்கு வந்து விட்டால், பிரச்சினை தீர்க்கும் திறனும், கருத்தியல் நிலையில் சிந்திக்கும் திறனும் அவனுடைய வயது முதிர்ந்த நிலையில் வளர்ச்சிசார் செயல்களாக வெளிப்படும்.

## 3. பொதுமைக் கருத்து உருவாதலுக்கான காரணிகள்

### மாற்றம்

மாணவர்கள் ஏற்கனவே கற்ற ஒரு பாடத்தின் கருத்தின் அடிப்படையில், தற்போது படிக்கும் பாடத்தினை மிக விரைவாக, சிறப்பாகக் கற்றுக் கொள்கிறார்கள். இது நேர் மாற்றம் (Positive transfer) எனப்படும்.

### தெளிவு நிலை

இது கருத்து உருவாகக் காரணமாக அமையும் மற்றொரு காரணியாகும். இது பொதுவான குணங்களைத் தனிமைப்படுத்தி, அவற்றினை ஒரு குழுவாகப் பிரித்தலைக் குறிப்பிடும்.

### கையாளும் திறன்

பொதுமைக் கருத்துக்கள் உருவாவதற்கு மிக இன்றியமையாததாக ஒழுங்குபடுத்துதல், மீண்டும் சீர்படுத்துதல், திரும்பக் கொணர்தல் போன்ற பல நிகழ்ச்சிகளின் அல்லது செயல்களின் அடிப்படையில் கருத்து உருவாதல் அமைகிறது.

### செயல்முறைக்கான தயார்நிலை

உதாரணமாக, 'பொருட்களிடையே உள்ள பொதுவான குணங்களை ஆராய்க' என்ற செயல் முறையில் தயார்நிலையை உருவாக்கினால் ஒருவன் மிகச் சிறப்பாகச் செயல்படுவான். இத்தகைய செயல் முறைக்கான தயார்நிலை இல்லையெனில், சிறப்பான கருத்துக்களை உருவாக்க முடியாது.

### விவரங்கள் கிடைத்தல்

கருத்து உருவாவதற்குத் தேவையான, தொடர்புள்ள பல விவரங்கள் கிடைக்குமேயானால் ஒருவனால் மிக விரைவாகப் பொதுமைக் கருத்துக்களை உருவாக்க இயலும்.

குறிப்பு : செயல்பாடு 2 – ன் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளைக் கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வேறுபாடு உள்ளதா? விவாதித்து அறியவும்.

## 4. பொதுமைக் கருத்து வகைகள்

**பொதுமைக் கருத்துக்கள்**

- எளியவை
- சிக்கலானவை
- கற்பனைப் பொருட்கள் பற்றியவை
  - பொருள்கள் பற்றியவை
  - பொருள்களின் கூறுகள் பற்றியவை
    - பண்புகள் பற்றியவை (Qualities)
    - தொடர்புகள் பற்றியவை (Relations)

### i) எளிமையான பொதுமைக் கருத்து

ஒரே ஒரு பொதுப்பண்பை மட்டும் கொண்டவை எளிமையான பொதுமைக் கருத்தாகும். உ–ம் : சதுரம், முக்கோணம், பச்சை நிறம் போன்றவை.

### ii) சிக்கலான பொதுமைக் கருத்து

இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட பண்புகளைக் கொண்டவை சிக்கலான பொதுமைக் கருத்தாகும். உ–ம் : சிறிய நீல நிற சதுரக்கட்டை, குடியரசு நாடு.

### iii) பொருட்கள் பற்றியவை

உ–ம் : வண்டி, வீடு, விளையாட்டு மைதானம் போன்றவை.

### iv) பொருட்களின் கூறுகள் பற்றியவை

a) பொருட்களின் கூறான பண்புகள் பற்றியவை உ–ம் : நேர்மை, எளிமை, மினுமினுப்பு போன்றவை.

b) பொருட்களின் கூறான தொடர்புகள் பற்றியவை :

'இதை விடப்பெரிய' (bigger than), அதைவிட உயரமான (taller than) போன்ற பொருட்களின் தொடர்பு பற்றிய பொதுமைக் கருத்துக்களாகும்.

c) உலகில் உள்ளனவற்றைப் பற்றி மட்டுமின்றி கற்பனைப் பொருட்கள் பற்றி பொதுமைக் கருத்துகளையும் நம்மால் தோற்றுவிக்க இயலும். உ–ம் : சொர்க்கம், நரகம், வான் வீதி, போன்றவை.

பொதுமைக் கருத்துக்கள் மேற்கண்டவாறு படிப்படியாக விரிந்து எளிய நிலையிலிருந்து சிக்கலான மேல்நிலைக்குச் செல்பவையாக அமைகின்றன.

## 5. செயல்களின் தொகுப்பு அல்லது ஸ்கீமா (Schema)

**செயல்பாடு : 3**

தொடக்கப் பள்ளியில் பயிலும் ஒரு குழந்தையைக் குற்றாலத்திற்கு அழைத்துச் சென்று, குற்றால அருவியில் பல முறை குளிக்க வைத்து, அருவிச் சாரல் உடலில் பட்டுச் செல்லும் இன்பத்தை அனுபவிக்க வைத்தால் அக்குழந்தை அவ்வின்பத்தை நுகரும்.

அதுவே குற்றால அருவியில் குளிக்கும் இன்பத்தைப் பல முறை அனுபவித்த வயதுவந்த ஒருவரிடம் 'குற்றால அருவியில் குளிக்கச் செல்லலாமா?' என்று கூறும் போதே அவ்வின்பத்தை நுகரும் அனுபத்தை அவர் பெறுகிறார்.

சிறுவர்களுக்குக் கிரிக்கெட் விளையாட்டைத் தானே விளையாடினால் தான் இன்பம் ஏற்படும். ஆனால் வயது வந்தவர்களுக்கு அதே விளையாட்டைத் தொலைக்காட்சி வழியே பார்த்தாலே இன்பம் கிடைக்கும். இது போன்று உனக்குக் கிடைத்த அனுபவம் ஏதேனும் இரண்டினைத் தொகுத்து அவ்வின்பம் எதனால் உனக்கு ஏற்பட்டது? அதன் காரணிகள் என்ன? என்பதை விவாதித்து அறிக்கையாகத் தொகுக்கவும்.


மனிதனிடம் இயல்பாகவே இரு அடிப்படைப் போக்குகள் இருக்கின்றன. அவை ஒருங்கமைத்தல் (Organisation), இணங்குதல் (Adaptation) என்பனவாம். இவ்விரு

போக்குகளுக்கு இடையே சமநிலைப்படுத்தும் (Equilibrium) செயல்முறை உதவுகிறது. ஒருங்கமைத்தல், இணங்குதல் ஆகியன சேர்ந்து பெறப்படும் அனுபவங்களைப் பிரித்து உணர்ந்தும், தொகுத்து உணர்ந்தும் அறிவினைப் பெற இவை குழந்தைக்கு உதவுகின்றன. இணங்குதலில், பொருத்துதல் (Accomodation) தன்வயப்படுத்துதல் (Assimilation) ஆகியன காணப்படுகின்றன. குழந்தை வளர்ச்சியடைய, சூழ்நிலையினின்றும் அக்குழந்தை பெறும் அனுபவங்கள் எவ்வாறு ஒருங்கிணைக்கப்படுகின்றன, எவ்வாறு இணக்கம் பெறுகின்றன, என்பவை அக்குழந்தையின் அப்போதைய வளர்ச்சி நிலையைப் பொறுத்தது. ஆனால் எந்த நேரத்திலும் அறிதல் வளர்ச்சியின் அடிப்படை, ஒருங்கமைத்தலும் இணங்குதலுமாகும். இவற்றை 'மாறாச் செயல் கூறுகள்' (Functional invariants) என்று குறிப்பிடலாம்.

( – பியாஜே)

எடுத்துக்காட்டாக பிறந்த குழந்தைக்குத் தாய்ப்பால் மட்டுமே உணவாக அளிக்கப்படுகிறது. ஏனெனில் அதன் உடலில் உணவுச் செரிமான அமைப்பு பாலை மட்டும் கிரகித்துக் கொள்ளும் (Assimilation) தன்மை படைத்தது, சில மாதங்களுக்குப் பிறகு, சிறிது சிறிதாகக் கூழ், மசித்த காய்கறிகள் போன்ற திட உணவுப் பொருட்கள் குழந்தைக்குக் கொடுக்கப்படும் போது, சம நிலை பிறழ்வு ஏற்பட்டு, வயிற்றுப் போக்கு ஏற்படக் கூடும். ஆனால் சில நாட்களிலேயே இது நின்று திட உணவுப் பொருட்களையும் செரிக்கும் வகையில் அதன் உணவுச் செரிமான அமைப்பு மாற்றமடைகிறது. இதே போன்று குழந்தையின் அறிதிறன் கட்டமைப்பும், தான் எதிர்கொள்ளும் சிக்கலான கருத்துக்களையும் தன் வயப்படுத்திக் கொள்ளும் வகையில் மாற்றமடைந்து கொண்டே இருக்கும். இவ்வாறு 'அறிதிறன் கட்டமைப்பு' மாற்றமடைவதாலேயே குழந்தையின் அறிவு வளர்ச்சி ஏற்படுகிறது. எனவே அறிதிறன் வளர்ச்சி என்பது அறிந்திருக்கும் பொருட்களின் அளவு அல்லது எண்ணிக்கைப் பெருக்கம் மட்டுமல்ல, ஆராய்ந்து அறியும் முறையிலேயும் பெருத்த மாற்றங்களைப் பெறுவதும் ஆகும்.

**அறிதிறன் கட்டமைப்பு**




உதாரணமாக பார்த்தல், பற்றுதல் என்னும் இரண்டு உடல் திறன்களைப் பெற்றபின், அவற்றை முறையாக இணைத்து, தான் பார்த்த பொருளைப் பொறுக்கி எடுத்தல் (pick out) என்ற உயர் செய்திறனைப் பெறுதல்.

ஒரு பொருளைப் பற்றி அறிய நம் உடல் வழியாகவோ அல்லது மனம் வழியாகவோ அதைக் கையாள வேண்டும். இவ்வகைச் செயல்களின் தொகுப்பு **'ஸ்கீமா'** என்றழைக்கப்படுகிறது. அறிதிறன் வளர்ச்சியடைய 'ஸ்கீமா' உடலியக்கச் சார்பு நிலையிலிருந்து மனவியக்கச் சார்பு நிலை அல்லது கருத்தியல் நிலைக்கு (Abstraction) மெல்ல மெல்ல மாறுகிறது. 'ஸ்கீமா' உருப் பெறும் தன்மைக்கு ஏற்ப குழந்தையின் அறிதிறன் வளர்ச்சி நிலைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

1. புலன் இயக்க நிலை (0 முதல் 2 வயது வரை)
2. செயலுக்கு முற்பட்ட நிலை (2 முதல் 7 வயது வரை)

3. புலனீடான செயல் நிலை அல்லது பருப்பொருள் நிலை (7 முதல் 11 வயது வரை)

4. கருத்தியல் நிலை (11 வயதுக்கு மேல்)

குறிப்பு : செயல்பாடு 3–ன் விவாதத்திற்குப் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளைக் கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வேறுபாடு உள்ளதா? விவாதித்து அறியவும்.

## 6. வெளியுலக உண்மைத் தன்மைகளைப் பற்றிய மனக் கருத்துருவாக்கம்

குமரப்பருவத் தொடக்க நிலையில் கருத்தியல் நிலை எழும். இந்நிலையில் நேரே எதிரில் இல்லாதவை பற்றியும் புலன் தொடர்பற்றவை (Abstractness) பற்றியும் குழந்தையால் சிந்திக்க முடியும். உடனடியாக இப்போதைய நிலையைக் காட்டிலும் எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய நிலைமைகள் (Possibilities) கற்பனை நிலைமைகள் போன்றவை பற்றியும் சிந்திக்க இயலும். உணவு உண்பதற்குப் பதில் உடலுக்குத் தேவையான சத்துக்களை மாத்திரைகளாக உட்கொண்டு மனிதன் வாழ முடியுமா என்று கேட்டால் இந்நிலையிலுள்ள குழந்தை காரண காரியத்தோடு பதில் சொல்லும்.

தொடக்க நிலையில் பொருட்களை அவற்றுடன் இணைந்த செயல்களைச் செய்து அப்பொருட்கள் பற்றிச் சிந்திக்கும் செயல்படு நிலையில் (enactive) இருக்கும் குழந்தை அடுத்த உயர்நிலையில் பொருளினைப் பற்றிய சாயல்களைப் பயன்படுத்திச் சிந்திக்கும் உருவக நிலைக்கு (iconic) உயர்கிறது.

அடுத்த இறுதி நிலையில் குழந்தை குறியீடுகளைத் தனது சிந்தனையில் பயன்படுத்தும் குறியீட்டு நிலைக்கு (symbolic) உயர்கிறது. இந்நிலையில் தான் பொதுமைக் கருத்துக்கள் அதன் சிந்தனையில் நன்கு பயன்படத் தொடங்கும். வெளியுலக உண்மைத் தன்மைகளைப் பற்றிய தன் மனக் கருத்துருவாக்கத்தை குழந்தை உருவாக்கும்.

உதாரணமாக இயற்கைப் பேரழிவான சுனாமியின் போது கடல் நீர் வெகுவாக உள்வாங்கிப் பின்பேரலைகளாக வெளிப்பட்டு கடற்கரையைத் தாண்டி வந்து பலத்த உயிர்ச்சேதத்தையும் பொருட்சேதத்தையும் உருவாக்கியது. இதனை அறிந்திருக்கும் குழந்தை கடற்கரையில் விளையாடும் போது சிறிது கடல் நீர் உள்வாங்கிச் சென்றாலும் இது 'சுனாமியோ' என்று அச்சம் கொள்கிறது.

## 7. ஒப்பார் குழு, தகவல் தொடர்புச் சாதனங்கள், சமூகத் தொடர்புகள் ஆகியவற்றின் தொடர்பால் தன் கருத்தை இணைத்தல்

தன் வயதொத்த ஒப்பார் குழுவின் செயல்பாடுகள், செய்தித்தாள்கள், தொலைக்காட்சி, இணையதளம், செல்போன் மற்றும் செய்தி அனுப்புதல் (sms) மற்றும் சமூகத் தொடர்புகள் ஆகியன ஒருவனின் கருத்துருவாக்கத்தில் பல விளைவுகளை ஏற்படுத்துகின்றன. தான் உருவாக்கிய கருத்துக்களை அவற்றோடு தொடர்புபடுத்திப் பார்க்கிறான்.

உதாரணமாகப் பள்ளி இறுதி வகுப்பு படிக்கும் மாணவன் அடுத்து தான் எக்கல்லூரியில் என்ன படிக்கலாம் என்பதைத் தேர்ந்தெடுக்கும் போது தன் ஒப்பார் குழுவின் கருத்துக்களைத் தன் கருத்துக்களோடு இணைத்துப் பார்த்துத் தேர்வு செய்கிறான். தகவல் தொடர்புச் சாதனங்களில் வரும் கருத்துக்களும், சமூகத்தில் உள்ள பொதுக்கருத்துக்களும் கூட ஒருவனுடைய கருத்துருவாக்கத்தைப் பாதிக்கின்றன என்பதையும் அறியவும்.

## 8. பொதுமைக் கருத்துப்படங்கள் (Concept Mapping)

தொடர்புள்ள பல கூற்றுகளைக் (Statements) கொண்டு, இவற்றில் காணப்படும் பொதுமைக் கருத்துகளின் இணைப்பினை விளக்க, பொதுமைக் கருத்துப்படங்கள் உதவுகின்றன. பல்வேறு பொதுக் கருத்துகள் ஒன்றுடன் ஒன்று எவ்வாறு தொடர்புடையன, இவற்றுள் எவை எவற்றுள் அடங்கும் போன்றவற்றைப் பொதுமைக் கருத்துப்படங்கள் சுட்டிக் காட்டுகின்றன. பொதுமைக் கருத்துப்படங்கள் தயாரித்தலில், இக்கருத்துகள், அவற்றின் பரப்பு மற்றும் பொதுமைப் பண்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஒன்றின் கீழ் ஒன்றாக (Hierarchial order) அமைக்கப்பட வேண்டும். மிகப்பரந்த பொருளுள்ள கருத்து, படத்தின் மேல் பகுதியிலும், மற்றவை அடுத்தடுத்த கீழ்ப்பகுதியிலும் இடம் பெற வேண்டும். மிகக் குறுகிய பொருளுள்ள பொதுமைக் கருத்து படத்தின் அடியில் இடம் பெறும். பல்வேறு பொதுமைக் கருத்துகளின் நேர் தொடர்புகளும் (linkage), குறுக்குத் தொடர்புகளும் (cross linkages) படத்தில் குறிக்கப்படும், தொடர்பினைக் குறிப்பதற்குத் தேவைப்படும் சொற்களைச் சேர்த்து எழுதிக் கொள்ளலாம்.

## 9. பொதுமைக் கருத்துப் படங்களின் கல்விப் பயன்கள்

1. ஒரு பாடத்தில் எந்த பொதுமைக் கருத்துக்கள் மாணவர்களுக்குத் தெரிந்துள்ளன என்று அறிந்து அதன் அடிப்படையில் தொடங்கி ஒவ்வொரு கருத்தாக புதிய பாடக்கருத்துக்களை இணைக்கலாம்.
2. குறிப்பிட்ட ஒரு பாடப் பகுதியில் அடங்கியுள்ள பொதுக் கருத்துகளின் இணைப்புப் படம், அக்கருத்துகளை நன்கு புரிந்து கொண்டு, கற்றலை பயனுள்ளதாக்க உதவுகிறது. ஒவ்வொரு கருத்தும், தெளிவும், திட்டமும் பெற்று மாணாக்கனது அறிவில் நிலைத்து நிற்கும்.
3. ஆசிரியர் தாம் கற்பிக்கப் போகும் பாடப்பகுதியில் அடங்கியுள்ள முக்கிய பொதுக் கருத்துக்களைத் தொடர்புபடுத்திப் படமாக வரைதல், அப்பாடப் பகுதியில் மாணவர்கள் கற்க வேண்டிய அடிப்படைக் கருத்துகளைக் கீழ்க் கோடிட்டுக் காட்டுவதுடன், அவற்றைத் தொடர்புபடுத்தும் முறையினையும் தெளிவாக்கும்.
4. பாடம் முடிவடைந்த நிலையில் கற்றவற்றை வரிசைப்படுத்தி பாடச்சுருக்கம் தயாரிக்கவும் இப்படம் உதவும்.
5. இது போன்ற படங்களை மாணவர்களே தயாரிக்கும்போது அவர்கள் முன்பு அறிந்திருந்த கருத்துக்களுடன் தற்போது கற்ற செய்திகளையும் இணைத்து எவ்வாறு அறிந்துள்ளனர் என்பதை மதிப்பீடு செய்யவும் இயலும்.
6. ஒரு பாடத்தினை முழுமையாகக் கற்க இப்படங்கள் மாணவனுக்குத் துணை செய்யும். மற்றும் பாடத்திட்டத்தினைத் தயாரிப்பதிலும் இவை உதவும்.

## 10. தொகுப்புரை

பல பொருட்களில் காணப்படும் ஒற்றுமைகளை மட்டும் ஒன்றுபடுத்தி அதை மொழியில் ஒரு சொல்லால் குறித்தல் என்பது பொதுமைக் கருத்து எழுதுதலில் அடிப்படையாகும். பொதுமைக் கருத்தைப் பயன்படுத்திச் சிந்தித்தல், புலன்காட்சி வழியே சிந்தித்தலை விட உயர்நிலைப்பட்டது என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. பொதுமைக் கருத்துக்கள் படிப்படியாக விரிந்து, எளிய நிலையிலிருந்து சிக்கலான மேல்நிலைக்குச் செல்பவையாக அமைகின்றன. எனவே பொதுமைக்

கருத்துக்களை அறிந்து உருவாக்குவதன் மூலம் குழந்தையின் அனுபவம் பெருகுகிறது. அனுபவம் பெருகப் பெருக குழந்தையின் சிந்தித்தல் நிலையிலும் மாறுதல்களை ஏற்படுத்துகிறது. இதன் வாயிலாக குழந்தையின் அறிவாற்றலும் பெருகுகிறது.

**செயல்பாடு : 4**

வகுப்பறையில் மாணவ ஆசிரியர்களை, ஆசிரியர்கள் உற்று நோக்க வேண்டும். அவர்கள் தங்களது சொந்த வாழ்க்கையில் பெற்ற அனுபவங்களை, வகுப்பில் பாடங்களைக் கற்றபின் எவ்வாறு ஒப்பிடுகிறார்கள் என்பதை சில உதாரணங்களோடு விளக்கவும். உதாரணமாக பொதுமைக் கருத்து உருவாக்குவதில் அவர்கள் எவ்வாறு தங்களது வாழ்க்கை அனுபவங்களை ஒப்பிட்டார்கள் என்பதை அறியவும்.

பொதுமைக் கருத்துப் படத்திற்கும் (Concept Mapping), மன வரை படத்திற்கும் (Mind Mapping) உள்ள வேறுபாட்டையும், விளக்கத்தினையும் எடுத்துச் சொல்லவும்.

பொதுமைக் கருத்துப்படம் தான் தற்போது கற்ற கருத்துக்கள், ஏற்கனவே கற்றல் மற்றும் பெற்ற அனுபவங்களிலிருந்து உருவாகிய கருத்துக்கள் ஆகியன இணைந்து, ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி, அவற்றினுள் உருவாகும் பொதுமைக் கருத்துக்களின் அடிப்படையில் எழுவதாகும்.

ஆனால் மன வரைபடம் என்பது ஒரு குறிப்பிட்ட பாடப் பகுதியினைக் கற்றபின், அப்பகுதியை முறைமைப்படுத்தி அதிலுள்ள தொடர்புக் கருத்துகளின் அடிப்படையில் எழுவதாகும். எடுத்துக்காட்டாக பேருந்து நிலையம் என்று சொன்னால் அதனோடு தொடர்புடைய பயணிகள், பயணச் சீட்டு, பேருந்து ஓட்டுநர், நடத்துனர், பேருந்து நிறுத்தம், பயணகாலத்திட்டம், இருக்கைகள் போன்ற கருத்துக்கள் மட்டுமே இதில் இடம் பெறும். ஒரே பார்வையில் அப்பாடத்தைப் பற்றிய முழு பரிமாணமும் விளங்கும்.

ஒரு குறிப்பிட்ட பொதுமைக் கருத்தை எடுத்துக் கொண்டு அதை எவ்வாறு மாணவ ஆசிரியர்கள் உருவாக்கினார்கள்? என்றும் அதற்கான பொதுமைக் கருத்துப்படம் (Concept Mapping) ஒன்று வரைந்தும், வேறொரு தலைப்பில் மன வரைபடம் (Mind Mapping) ஒன்று வரைந்தும் அவற்றை வகுப்பில் விவாதித்த பின்னர் உளவியல் பாடத்திட்ட ஏட்டில் சேர்க்கவும்.

# அலகு - 10

## கற்றலுக்கு உதவும் காரணிகள்

**முன்னோக்கு**

முதல் வகுப்பில் படிக்கும் குழந்தை ஆசிரியர் எழுதுவதைப் பார்க்கிறது. ஆசிரியர் கூறுவதைக் கேட்கிறது. ஆசிரியர் குழந்தையின் கையைப் பிடித்து எவ்வாறு எழுத வேண்டும் என்று கற்றுக் கொடுக்கும் போது குழந்தை அதனைப் பின்பற்றுகிறது. முதலில் 'அ' என்று ஆசிரியர் எழுதுவதை குழந்தை தலை கீழாக எழுதுகிறது. பின்பு ஆசிரியர் குறையை நிவர்த்தி செய்வதற்காக குழந்தையின் கையைப் பிடித்து எழுத பழகுவதற்கு கற்றுக் கொடுக்கும் போது குழந்தை பயிற்சியின் மூலமாக அதை பெறுகிறது. வகுப்பில் சக மாணவர்கள் எவ்வாறு செய்கிறார்கள் என்பதையும் குழந்தை உற்று நோக்குகிறது. ஆசிரியர் கற்றக் கொடுத்ததை திரும்பத் திரும்ப தனியாக எழுதிப் பார்க்கும் போது அதுவே வழக்கமாகி விடுகிறது. வீட்டில் பெற்றோர்களும் எழுதுவதை கற்றுக் கொடுக்கும் போது இன்னும் எழுதுதல் திறன் மேம்பாடு அடைகிறது.

இச்செயல்பாட்டில் குழந்தை கற்றலுக்கான காரணிகள் எவையென நினைக்கிறீர்கள்? இது குறித்து இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக. இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

**விளக்கம்**

மேற்குறிப்பிட்ட செயல்பாட்டில் பார்த்தல், கேட்டல், தொடு உணர்ச்சி ஆகிய திறன்கள் மட்டுமல்லாது, ஆசிரியர், சகமாணவர்கள், பெற்றோர்கள், சமுதாயம் என அனைத்துக் காரணிகளும் குழந்தையின் கற்றலில் முக்கிய பங்கு பெறுகின்றன.

### 1. தனிப்பட்ட காரணிகள்

**செயல்பாடு**

விளையாட்டில் ஒரு வெற்றி வீரனின் உணர்வு கீழிறங்கி இருக்கும் போதெல்லாம் ஒரு நல்ல வீரனுக்கு எதிராக அவனை ஒரு போதும் பயிற்சியாளர் விளையாடவிடமாட்டார். ஏனென்றால் இன்னொரு முறை அவன் தோல்வியைத் தழுவி விட்டால் அவனது தற்கருத்து இன்னும் கீழிறங்கிப் போய்விடும். அவனுக்குத் தன்னம்பிக்கையை மீண்டும் கொண்டுவர பயிற்சியாளர் ஒரு பலவீனமான எதிரியிடம் விளையாட விடுவார். அந்த வெற்றி அவனது தற்கருத்தை உயர்த்தி விடுகிறது. அடுத்து சிறிது வலுவான எதிரியிடம் மோதவிடுவார்கள். அந்த வெற்றி அவனது தற்கருத்தை மேலும் வளர்த்துவிடும். சவாலை சந்திக்க வெற்றி வீரன் தயாராகும் நாள் வரை இப்படியே நடக்கும்.

குழந்தையின் தன்னம்பிக்கை வளர்வதற்கான காரணிகள் எவை? இதுபற்றி இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக. இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

**விளக்கம்**

மேற்கூறிய செயல்பாட்டில் ஒவ்வொரு வெற்றியின் போதும் தற்கருத்து உயருகிறது. அடுத்த முறை வெற்றி பெறுவது சுலபமாகிறது. இந்த காரணத்திற்காக எந்த ஒரு தலைவரும் (பெற்றோரோ, ஆசிரியரோ அல்லது மேற்பார்வையாளரோ) சுலபமான பயிற்சிகளைத்தான் குழந்தைகளுக்கு ஆரம்பத்தில் கொடுப்பர். மேலும் ஒரு குழந்தை பெற்றோர்களாலும், ஆசிரியர்களாலும் அது அடையும் வெற்றி தோல்விகளுக்காக மட்டுமின்றி அது குழந்தை என்பதை மட்டும் கருத்தில் கொண்டு அதற்கு ஏற்ற பயிற்சியினை அளித்தால் அது அக்குழந்தையிடம் தன்னம்பிக்கை மிகுந்து நல்ல தற்கருத்து எழ வழிவகுக்கும். இவற்றையெல்லாம் ஆராயும் போது ஒரு குழந்தையின் கற்றலில் அது மேற்கொள்ளும் பயிற்சி மற்றும் அக்குழந்தையின் தன்னம்பிக்கை ஆகியவை முக்கிய பங்கு வகிக்கிறது.

உடன்பாட்டு நிலைப்பட்ட ஆக்க நிலையிலான தற்கருத்தினைக் கொண்டுள்ள மாணவர்கள் கல்வி முன்னேற்றத்தில் சிறந்து விளங்குவதோடு வாழ்க்கையிலும் நல்ல பொருத்தப்பாட்டினைப் பெற்று வெற்றியுடன் திகழ்வார்கள். எதிர்மறை நிலையிலான தற்கருத்து தன்னம்பிக்கையைத் தகர்த்துப் பொருத்தப்பாடின்மையைத் தோற்றுவிக்கும். ஒரு குழந்தையின் மனத்தில் தன்னைப் பற்றிய சிறந்த உடன்பாட்டு முறைப்பட்ட தற்கருத்தினைத் தோற்றுவித்தலில் ஆசிரியர்களுக்கும், சமுதாயத்திற்கும் பங்கும், பொறுப்பும் உள்ளது.

ஒரு குழந்தையின் கற்றலின் தனிப்பட்ட காரணிகளில் தற்கருத்து, பெற்றோர் மனப்பான்மை, ஆசிரியர் மனப்பான்மை, அக்குழந்தையின் தனிப்பட்ட ஆர்வம், நாட்டம், திறமை, உடல் நலம் ஆகியயை அனைத்தும் முக்கியத்துவம் பெற்று காணப்படுகிறது. சிறு குழந்தை குடும்பத்தில் வளரும் போது தனது பெற்றோர்களுடன் ஒன்றுதல் மூலம் தனது பண்புகளை உணர்கிறது; பள்ளியில் சேர்ந்தவுடன் ஆசிரியர்களது செல்வாக்குடன் பிற வகுப்புத் தோழர்களது செல்வாக்கும் ஒரு மாணவனின் வளர்ச்சியில் முக்கிய பங்கினைப் பெறுகிறது. தனது நடத்தையை ஒப்பிட்டு நோக்க அப்போது குழந்தைக்குத் தன் குடும்பத்தைக் காட்டிலும் பரந்த ஒரு குழுவின் செல்வாக்கு செயற்படுகிறது. இத்தகைய ஒப்பார் குழுவின் பங்கினால் தன்னைப் பற்றிய உண்மைக் கருத்தினை அடைவது குழந்தைக்குச் சாத்தியமாகிறது.

உடல்–புலன் குறைபாடுகளுள்ள குழந்தைகளில் பேச்சுக் குறைபாடு, காது கோளாமை, பார்வைக் குறைபாடுகள், உடல் ஊனம், உடல் நலம் மிகக் குன்றிக் காணப்படல் போன்றன யாவும் அடங்கும். ஒவ்வொருவகைக் குழந்தையின் கற்றலிலும் தனிப்பட்ட பிரச்சினைகள் காணப்படும். இக்குறைபாடுகள் பெரும்பாலும் மரபு நிலைப்பட்டவையாகவோ அல்லது தாயின் வயிற்றில் குழந்தை வளரும் போது ஏற்பட்ட சூழ்நிலைக் கோளாறுகளினாலோ எழுபவைகளாகும். புலன் குறைபாடுகளுடைய குழந்தைகளுக்குக் கல்விப் புகட்டத் தனிப்பட்ட பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், தனிப்பள்ளிகளும் தேவை. இவ்வகைப் பள்ளிகளில் சில நம் நாட்டில் நன்கு இயங்கி வருகின்றன. இவ்வகை குறைபாடுள்ள குழந்தைகள் தற்போது சிறப்பியல்பு குழந்தைகள் என அழைக்கப்பட்டு வருகின்றனர்.

ஓரளவு புலன் குறைபாடுள்ள குழந்தைகளை மற்ற குழந்தைகள் பயிலும் பள்ளிகளில் சேர்த்து ஒன்றாக கற்பதற்கு வாய்ப்புகள் அளிக்கலாம். ஆசிரியர்கள் புலன் குறைபாடுள்ள குழந்தைகளிடம் இரக்கத் தன்மை காட்டுவதை அக்குழந்தைகள் விரும்புவதில்லை. மற்ற குழந்தைகளை ஆசிரியர் எவ்வாறு நடத்துகிறாரோ அது போன்றே தங்களையும் வழிநடத்த வேண்டும் என புலன் குறைபாடுள்ள குழந்தைகள் விரும்புகின்றனர். எனவே ஆசிரியர்கள் புலன் குறைபாடுள்ள குழந்தைகளை அவர்கள் மனம் புண்படாதவாறு கையாள வேண்டும்.

**குறிப்பு:** இப்பகுதியின் முன்பு கொடுக்கப்பட்டு இருக்கும் கருத்துக்களில் இருந்தும் அதற்கு பின்பு கொடுக்கப்படடு இருக்கும் கருத்துக்களில் இருந்தும் மாணவ ஆசிரியர்கள் கற்றலுக்கான தனிப்பட்ட காரணிகளைப் பற்றி என்ன அறிந்து கொண்டார்கள்? கற்றலுக்கான தனிப்பட்ட காரணிகள் பற்றி இதற்கு முன்பு தெரிந்திருந்த அறிவிற்கும் இப்பாடப் பகுதியை படித்து முடித்த பிறகு உள்ளவற்றிற்கும் ஏதேனும் முன்னேற்றம் தெரிகிறதா? ஆராயுங்கள்.

## ௨. உளம் சார்ந்த காரணிகள்

### செயல்பாடு

“எட்டு வயது சிறுவன் பட்டம் விட்டுக் கொண்டிருந்தான். அருகில் நின்றிருந்த தந்தையிடம், “பட்டத்தை எது உயரமாகப் பறக்கச் செய்கிறது? “என்று கேட்டான். “கயிறு” என்று தந்தை பதிலளித்தார். “அப்பா” இந்தக் கயிறு தானே இந்தப் பட்டத்தைக் கீழ் நோக்கி இழுக்கிறது.” என்று சிறுவன் சொன்னான். தந்தையோ தனது மகனிடம் அந்த கயிற்றை அறுத்தபடியே அங்கே என்ன நடக்கிறது என்று பார்க்கச் சொன்னார். அந்த பட்டத்திற்கு என்னலாயிற்று என்று ஊகியுங்கள் பார்க்கலாம்? எந்த செயலை செய்யும் போதும் கட்டுப்பாடுடன் செயல்படவேண்டும்? ஏன்?

### விளக்கம்

பறந்து கொண்டிருந்த பட்டம், கயிறு அறுபட்டவுடன் கீழே விழுந்தது. சில சமயங்களில் எந்த விஷயங்கள் நம்மைக் கீழிறக்குகின்றன என்று நினைக்கிறோமோ, அவையே நாம் பறக்க உதவுகின்றன. இதுவே கட்டுப்பாடு என்பதாகும்.

எட்டாம் வயது ஆர்வமிக்க வயது என்று உளவியல் அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த வயதில் எல்லாவற்யையும் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற ஆர்வத்தின் காரணமாக குழந்தைகள் வீட்டில் பெற்றோர்களிடமும், பள்ளிகளில் ஆசிரியர்களிடமும் ஏதேனும் வினாக்கள் கேட்டுக் கொண்டே இருக்கும். உதாரணமாக, சாலையில் தந்தையுடன் செல்லும் போது போகிற வழியில் ஒரு பெரிய நீர் தேக்க தொட்டியை பார்த்தால் அது என்ன என்று கேட்க ஆரம்பித்து விடும். ஏனென்றால் குழந்தை அப்போதுதான் அந்த பெரிய நீர் தேக்கத் தொட்டியை முதன் முதலில் பார்க்கிறது. இந்த சமயத்தில் ஆசிரியர்களும், பெற்றோர்களும் குழந்தைகள் கேட்கிற வினாக்களுக்கு பொறுமையாக பதிலளிக்க வேண்டும். தங்களுக்கு பதில் தெரியாமல் போனாலும் அது என்ன என்று கேட்டு கூறுகிறேன் என தெரிவிக்க வேண்டும். அதற்கு மாறாக ஆசிரியர்களும், பெற்றோர்களும் குழந்தைகள் வினாக்கள் கேட்கும் போது அவர்களை கோபமாக திட்டி உட்கார வைத்து விட்டால் அக்குழந்தைகளுடைய கற்றல் பாதிக்கப்படும். அது மட்டுமில்லாமல் அக்குழந்தைகளுடைய மனநிலையும் பாதிக்கப்படும்.

எனவே குழந்தைகள் கேட்கும் வினாக்களுக்கு பொறுமையாக பதில் அளித்து அக்குழந்தைகளுடைய சந்தேகத்தை களைவது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களது கடமையாகும். கற்றலுக்கான உளவியல் காரணிகளாக வகுப்பறைச் சூழல், அன்பும், பரிவும் உள்ள ஆசிரியர்கள், எளிமையான கற்றல் ஆகியவற்றைக் கூறலாம் வகுப்பறைச் சூழல் மகிழ்ச்சிகரமானதாக இருக்க வேண்டும். மாணவர்கள் ஆர்வமுடன் கற்பதற்கு ஏற்றவாறு வகுப்பறைச் சூழல் அமைய வேண்டும். ஆசிரியர்கள், மாணவர்களிடம் அன்பையும், பரிவையும் காட்ட வேண்டும். அதே சமயத்தில் மாணவர்களை கட்டுப்பாடுடன் வைத்திருக்க வேண்டும். கற்றலை மாணவர்கள் சுமையாக கருதாமல் எளிமையான கற்றலுக்கு ஆசிரியர்கள் வழிவகை செய்திடல் வேண்டும். எளிமையான கருத்துக்களை மாணவர்களுக்கு கூறி பின்பு அதிலிருந்து கடின பகுதிக்கு ஆசிரியர்கள் செல்லுதல் வேண்டும். அது போன்று மாணவர்களுக்கு ஆசிரியர்கள் சுலபமான பயிற்சிகளை அளித்து அதன் பின்பு கடினமான பயிற்சிகளை வயதிற்கு ஏற்றாற் போல் அளிக்கலாம்.

# 3. சமூகக் காரணிகள்

**செயல்பாடு**

ஒரு குழந்தை தனது மாதாந்திர தேர்ச்சி அறிக்கையில் நான்கு படங்களில் **60** மதிப்பெண்களுக்கு மேல் பெற்று முதல் தரத்திலும் ஒரு பாடத்தில் **50** மதிப்பெண்கள் பெற்று இரண்டாம் தரத்திலும் இருக்கிறது. என்று வைத்துக் கொள்வோம். வழக்கமாக அதன் பெற்றோர்கள் கேட்கும் முதல் கேள்வியே, ஏன் ஒரு பாடத்தில் மட்டும் **50** மதிப்பெண்கள் பெற்றிருக்கிறாய் என்பதே ஆகும்.

குழந்தை உண்மையில் எதை எதிர்பார்க்கிறது என்றால் நான்கு பாடங்களில் தான் பெற்ற மதிப்பெண்களுக்கு உரிய பாராட்டும் ஊக்கமும் கிடைக்க வேண்டும் என்பது தான். பெற்றோர்கள், குழந்தையானது நான்கு பாடங்களில் வாங்கிய முதல் தர மதிப்பெண்களை பாராட்டிவிட்டு பிறகு தாங்கள் குழந்தையிடம் எல்லா பாடங்களிலும் முதல் தரம் வாங்க வேண்டும் என்கிற தங்களது எதிர்ப்பார்புகளைத் தெரிவிக்கலாம். தேவைப்பட்டால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைக்கு வழிகாட்டி உதவலாம். குழந்தை தன் கற்றலை மேம்படுத்துவதற்கு ஆசிரியர்களிடமும், பெற்றோர்களிடமும் இருந்து எவற்றையெல்லாம் எதிர்பார்க்கிறது**?** ஏன்**?**

**விளக்கம்**

மேற்கூறிய செயல்பாட்டில் நான்கு பாடங்களில், குழந்தை பெற்ற சாதனையை பாராட்டாமல் அது ஒரு பாடத்தில் பெற்றிருந்த **50** மதிப்பெண்களை குறித்து குறை கூறினால் அது அக்குழந்தையின் கற்றலில் பின்னடைவை ஏற்படுத்திவிடும். எனவே ஆசிரியர்களும், பெற்றோர்களும், சமுதாயமும் குழந்தைகள் மேற்கொள்ளும் நல்ல முயற்சிகளுக்கு உரிய பாராட்டும், ஊக்கமும் அளிக்கப்படுதல் வேண்டும். மேலும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் குழந்தைகளின் செயல்பாட்டிற்கு எதிர்மறை ஊக்கிகளை (குறை கூறுதல், தண்டனை போன்றவை) தவிர்த்து நேர்மறை ஊக்கிகளையே (பாராட்டுதல், பரிசு) பயன்படுத்த வேண்டும்.

கற்றலுக்கான சமூகக் காரணிகளாக பள்ளி, குடும்பம், சமூதாயம் ஆகியவற்றைக் கூறலாம். பள்ளி என்கிற சமூகத்தில் ஆசிரியர்கள், சகமாணவர்கள் (ஒப்பார் குழு) ஆகியோர் அடங்குவர். ஆசிரியர் ஒரு முன் மாதிரியாக செயல்பட்டு கற்றலுக்கான வாய்ப்புக்களை ஒரு குழந்தைக்கு ஏற்படுத்தித் தருதல் வேண்டும். குழந்தையுடன் பயிலும் சகமாணவர்களும் அக்குழந்தையின் நடத்தை மாற்றத்தில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

அடுத்து குடும்பத்தை எடுத்துக் கொண்டால் பெற்றோர்கள், சகோதரர், சகோதரிகள் மற்றும் கூட்டுக் குடும்பமாக இருந்தால் உறவினர்கள் ஆகியோர் குடும்ப உறுப்பினர்களாக உள்ளனர். தற்போது பெரும்பாலும் தனிக் குடும்பமாக இருப்பதால் பெரியவர்களின் வழிகாட்டுதல் குழந்தைக்கு கிடைப்பதில்லை. கூட்டுக் குடும்பத்தில் முன்பெல்லாம் தாத்தா, பாட்டி ஆகியோர் குழந்தைக்கு கதைகள் கூறி நல்ல அறிவுரைகள் வழங்கி வந்தனர். குழந்தைகளுக்கு ஏதேனும் உடல் நலம் பாதிக்கப்பட்டால் தாத்தா, பாட்டி ஆகியோர் மருத்துவரிடம் காண்பித்து தகுந்த சிகிச்சை அளித்து நன்கு கவனித்து வந்தனர். தாய், தந்தை இருவரும் வேலைக்கு சென்று வருகிற தனிக் குடும்பத்தில் குழந்தை பள்ளி முடிந்து வந்ததும் தாய், தந்தை இருவரின் வருகையையும் எதிர்பார்த்து காத்திருக்க வேண்டிய சூழ்நிலை உள்ளது. இதனால் குழந்தைகள் மனநிலை பாதிக்கப்படுகிறது. இதனால் குழந்தையின் கற்றலிலும் பின்னடைவு ஏற்படுகிறது.

சமுதாயம் என்று பார்க்கும் போது, தன்னுடைய வீடு இருக்கும் அமைவிடம் மிகவும் நன்றாக இருக்க வேண்டும். அண்டை அயலாருடன் பகைத்துக் கொள்ளாமல் நல்ல உறவினை வைத்துக்கொள்ள வேண்டும். ஊர்ப்பெரியவர்கள் முன் மாதிரிகளாக செயல்பட்டு குழந்தைகளை வழி நடத்திச் செல்ல வேண்டும். ஏனெனில் குழந்தையின் கற்றல் பள்ளிக்கு வெளியேயும் நடைபெறுகிறது. ஊரில் திருவிழாக்கள், இலக்கியச் சொற்பொழிவுகள் ஆகியவற்றை ஊர் பெரியவர்கள் நடத்தி ஊர் மக்களை நல்வழிப்படுத்த வேண்டும்.

## 4. மனவெழுச்சிக்காரணிகள்

**செயல்பாடு (1)**

ஒரு மாணவன் வகுப்பில் ஆசிரியரிடம் பாடத்தில் சந்தேகம் கேட்கிறான். உடனேயே ஆசிரியர் அம்மாணவனின் சந்தேகத்தை போக்குபவரா? அல்லது அம்மாணவனுக்கு ஏற்பட்ட சந்தேகத்தை களையாமல் அவனை அதட்டி உட்கார வைப்பவரா? ஆசிரியர் எவ்வாறு செயல்படுகிறார்? சிந்தியுங்கள்.

**செயல்பாடு (2)**

ஆசிரியர் கேட்கும் வினாக்களுக்கு ஒரு மாணவன் மற்ற மாணவர்களை முந்திக் கொண்டு அவனாகவே ஆர்வத்துடன் பதில் கூறுகிறான். அதற்கு ஆசிரியர் அம்மாணவனை திட்டுகிறாரா? அல்லது அம்மாணவனிடம் ஒவ்வொருவராக பதில் கூறுங்கள் என்று கூறுகிறாரா? ஆராயுங்கள்.

**செயல்பாடு (3)**

ஆசிரியர் ஒரு மாணவனை குறிப்பிட்டு அவனிடம் ஒரு வினா கேட்கிறார். அதற்கு அம்மாணவன் சரியாக பதில் கூறத் தெரியாமல் அரை குறையாக பதில் கூறுகிறான். அதற்கு ஆசிரியர் அம்மாணவனிடம், "நீ ஒரு முட்டாள்," "நீ எதையும் எப்போதும் சரியாக சொன்னதில்லை "என திட்டுவாரா? அல்லது அம்மாணவனிடம் பரவாயில்லை; முயற்சி செய்; என கூறுவாரா? சிந்தித்து பாருங்கள்.

**விளக்கம்**

மேற்குறிப்பிட்ட மூன்று நிகழ்ச்சிகளிலும் ஆசிரியர் மாணவர்களை திட்டினால் அது அம்மாணவனிடம் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திவிடும். மாறாக ஆசிரியர் அம்மாணவனை ஊக்கப்படுத்தினால் அது அம்மாணவனுடைய கற்றலை மேம்பாடு அடையச் செய்யும். எனவே ஆசிரியர்கள் மாணவர்களின் மனநிலை பாதிக்காதவாறு கற்பிக்க வேண்டும்.

கற்றலுக்கான மனவெழுச்சி காரணிகளாக ஆசிரியர், மாணவர்களிடையே உள்ள நல்லுறவு, பெற்றோர் தங்கள் குழந்தைகளிடம் காட்டும் அன்பு, பரிவு, பாசம், பாதுகாப்பு உணர்வோடு இருத்தல், கவலையில்லாமல் இருத்தல், பயமற்ற சூழலை உருவாக்குதல், சினத்தை தவிர்த்தல் ஆகியற்றை குறிப்பிடலாம்.

குழந்தையின் கற்றலை மேம்படுத்தும் நேர்மறை மனவெழுச்சிகளான அன்பு, பரிவு, பாசம், மகிழ்ச்சியான சூழல் போன்றவை குழந்தைகளுக்கு கிடைத்திட ஆசிரியர்கள் உதவிட வேண்டும். எதிர்மறை மனவெழுச்சிகளான பயம், சினம், பொறாமை, கவலை போன்றவை தவிர்க்கப்படுதல் வேண்டும்.

பயத்தை எடுத்துக் கொண்டால், தேர்வினை குறித்து சிறிதளவேனும் பயம் இருந்தால் தான் குழந்தைகள் தேர்விற்காக நன்றாக படித்து நல்ல மதிப்பெண்களை பெற முடியும். ஆபத்தானவற்றை உணர்ந்து நீங்கு விளைவிக்கக் கூடிய சூழ்நிலைகளை தவிர்ப்பதற்கு பயம் உதவுகிறது. தேவையில்லாத பயம் கற்றலின் வளர்ச்சியை பாதிக்கிறது. உதாரணமாக, "என்னால் இத்தனை

பாடல்களையும் படிக்க முடியுமா'' என்கிற ஒரு மாணவனின் பயத்தை கூறலாம். எனவே, எத்தகைய மனவெழுச்சிகள் குழந்தைகளுக்கு ஏற்றவை, தேவையானவை அல்லது எந்த அளவுக்கு தேவையானவை என்பதையும், எந்த சூழ்நிலையில் எந்த மனவெழுச்சியை வெளிப்படுத்துதல் வேண்டும் என்பதையும் ஆசிரியர்கள் குழந்தைகளுக்கு உணர்த்துதல் வேண்டும். ஒரு விருந்தில் அறுசுவை உணவு பரிமாறப்படுவதைப் போல் மனவெழுச்சிகள் ஒவ்வொன்றும் ஏற்ற விகிதாசாரத்தில் தேவையான அளவு பயன்படுத்தப்பட்டால் மாணவனின் கற்றல் மட்டுமின்றி அவனுடைய வாழ்க்கையும் சிறப்பானதாக அமையும். வாழ்க்கையில் மாணவன் பல அனுபவங்களை கற்கிறான்.

## 5. பள்ளி சார்ந்த காரணிகள்

**செயல்பாடு (1)**

``இதுதான் நான் படித்த பள்ளி'' என்று ஒரு மாணவர் சுட்டிக் காட்டினால், அந்தப் பள்ளியின் கட்டிடத்தை பார்ப்பவர், ``இந்தப் பள்ளியில் படிக்க உனக்கு வாய்ப்பு கிடைத்திருக்கே'' என்று வியக்க வேண்டும். ``இந்தப் பள்ளியிலா நீ படித்தாய்'' என்று அவர் சலிப்படையக் கூடாது. பள்ளியின் தரத்தைப் பற்றி முதல் பார்வையில் நன்மதிப்பை ஏற்படுத்துவது பள்ளியின் கட்டிடங்கள்தான். அகத்தின் அழகு முகத்தில் தெரிவது போல பள்ளியின் அமைப்பு பாடத்தின் தன்மையைச் சுட்டிக்காட்டும். குழந்தை தான் படித்து வரும் பள்ளியை குறித்து என்ன நினைக்கிறது? ஏன்? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

சாதாரண நிலையில் தொடங்கப்பட்ட பள்ளியாக இருந்தாலும் அதன் தரம் சிறப்பாக இருந்தால் நிறைய மாணவர்கள் தொடர்ந்து வருவார்கள். அதன் மூலம் அந்தப் பள்ளிக்கு கிடைக்கும் பெருமையே புதிய புதிய கட்டிடங்களுக்கு வழிவகுக்கும்.

பள்ளி வளாகம் என்பது பேருந்து நிலையம், சந்தை, வணிக அங்காடி போன்ற நெரிசல் மிகுந்த பகுதிகளில் இருக்கக் கூடாது. அப்போதுதான் வெளியே உள்ள சலசலப்பு பள்ளி வளாகத்திற்குள் வராமல் இருக்கும். ஆசிரியர்களால் நன்றாகப் பாடம் நடத்த முடியும். மாணவர்களும் அவற்றைக் கூர்ந்து கவனிக்க முடியும்.

கற்றலுக்கான பள்ளி சார்ந்த காரணிகளாக வகுப்பறை சூழல் பள்ளியின் சுற்றுப்புறம், பள்ளி நிர்வாகம், விளையாட்டு, இலக்கிய நிகழ்ச்சிகள், ஆகியவற்றை குறிப்பிடலாம்.

### வகுப்பறை சூழல்

**செயல்பாடு (2)**

எதிர்கால சமுதாயத்தை திறம்பட உருவாக்குபவை வகுப்பறைகள் ஆகும். ஒவ்வொரு வகுப்பறையும் மாணவர்கள் நன்கு அமர்ந்து, ஆசிரியரையும் கரும்பலகையையும் தெளிவாக கவனிக்கும் விதத்தில் இருக்க வேண்டும். மாணவர்கள் உட்காருவதற்கான இருக்கையும், எழுதுவதற்கான மேசையும் நெருக்கடியின்றி அமைக்கப்பட்டிருத்தல் வேண்டும். மாணவர்கள் தங்கள் புத்தகப் பைகளை அருகிலேயே வைத்துக் கொள்ளும்படி மேசையிலேயே இடவசதி செய்து தருதல் அவசியம்.

குழந்தை தான் கற்கும் வகுப்பறை எவ்வாறு இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறது? ஏன்? சிந்தித்து பாருங்கள்.

**விளக்கம்**

“ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறையின் நான்கு சுவர்களுக்குள் நிர்ணயிக்கப்படுகிறது.” (டாக்டர் கோத்தாரி) என்கிற கூற்றுக்கு இணங்க வகுப்பறையின் முக்கியத்துவம் இன்று உணரப்பட்டு இருக்கிறது. முன்வரிசையில் உள்ள மாணவர்கள் பின் வரிசையில் உள்ளவர்களை மறைக்காதவாறு ஒவ்வொரு வரிசையும் சற்று உயரமாக அமைக்கப்பட்டிருந்தால் மாணவர்கள் தெளிவாக பாடம் கற்பர். ஆசிரியரிடம் ஒரு தகவலை சொல்வதற்கோ, அல்லது ஆசிரியரின் உத்தரவுப்படி கரும்பலகையில் எழுதுவதற்கோ ஒரு மாணவர் சென்றால், அவர் மேசையில் இடித்துக் கொள்ளாதபடி இடைவெளி இருக்க வேண்டும். தாராளமான இடவசதியுடன் மாணவர்கள் அமரும் போது தான் நெருக்கடி, புழுக்கம் இவை இல்லாமல், உடலும் மனமும் சோர்வடையாமல் அவர்கள் பாடங்களைக் கற்பர்.

**பள்ளியின் சுற்றுபுறம்**

**செயல்பாடு (3)**

“சுற்றுப்புறச் சூழல் விழிப்புணர்வு குறித்த பகுதிகள் பள்ளிப் பாடத்திலேயே இடம் பெறும் போது, பள்ளியிலும் சுற்றுப்புறச் சூழ்நிலை மேம்படுத்துதல் அவசியமாகும். பள்ளி வளாகத்தை தூய்மையாக வைத்திருத்தல், பசுமையை உண்டாக்கும் செடிகளையும், மரங்களையும் வளர்த்தல், வகுப்பறை கழிப்பறை உள்ளிட்ட பகுதிகளை சுத்தமாக வைத்திருத்தல் இவையனைத்துமே சுற்றுப்புறச் சூழல் குறித்த விழிப்புணர்வுகள் தான்.” பள்ளி சுற்றுப் புறத்தை மேம்படுத்த என்ன செய்யலாம்? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

பாடமாக சொல்லிக் கொடுப்பதைவிட, பள்ளி வளாகத்திலேயே சுற்றுச் சூழலை மேம்படுத்துதல் பணியினை மாணவர்கள் மேற்கொண்டால் அது மாணவர்களிடம் சுற்றுச்சூழல் மீது உள்ள அக்குறையை அதிகரிக்கச் செய்யும்.

**பள்ளி நிர்வாகம்**

**செயல்பாடு (4)**

ஒரு வகுப்பில் படிக்கும் 40 மாணவர்களில் எல்லோருமே படிப்பில் முதலிடம் பிடித்துவிட முடியாது. ஆனால் ஒவ்வொருவரிடமும் ஒரு திறன் இருக்கும். அதை வெளிக் கொண்டு வருவதே பள்ளி நிர்வாகத்தின் திறமையாகும்.

பள்ளி நிர்வாகம் எதை நோக்கி செயல்பட வேண்டும்? ஏன்?

**விளக்கம்**

பள்ளியில் நடைபெற்ற கலைநிகழ்ச்சி ஒன்றில் அந்த மாணவன் ஏதோ பாட வந்திருக்கிறான் என்று மட்டும் நினைத்திருந்தால் அவனது திறமை வெளியே தெரிந்திருக்காது. அவனிடம் ஆடும் திறமையும் இருக்கிறது என்பதை அவனது வகுப்பாசிரியர் கண்டறிந்திருந்ததால் தான் அவனால் நன்றாக ஆட முடிந்தது. தங்களிடம் படிக்கும் மாணவர்களிடம் என்ன திறமை இருக்கிறது என்பதை ஆசிரியர்கள் கண்டறிந்து அம்மாணவர்களை ஊக்குவிக்க வேண்டும்.

**விளையாட்டு**

**செயல்பாடு (5)**

உடற் கல்வியும் விளையாட்டும் ஒவ்வொரு மாணவனுக்கும் கற்றுத்தரப்பட வேண்டும். பாடப்பிரிவுகள் தொடர்பான அட்டவணையில் விளையாட்டுக்கான நேரமும் இருக்கும். ஆனால் தேர்வு

நெருங்கி வரும் நாட்கள், மழைக்காலங்கள், சிறப்பு கூட்டங்கள் ஆகியவற்றின் போது இந்த விளையாட்டு வகுப்புகள் தான் மாறுதல் செய்யப்படுகின்றன. இந்தப் பழக்கத்தை பள்ளி நிர்வாகங்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். ஏனெனில் ஆரோக்கியமான கல்வியுடன் நெருங்கிய தொடர்புடையது விளையாட்டு.

உடற்கல்வியும், விளையாட்டும் மாணவர்களுக்கு அளிக்கப்படுவதின் முக்கியத்துவம் என்ன? ஏன்? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

நன்றாக ஓடியாடி விளையாடும் பிள்ளைகள் எப்போதம் சுறுசுறுப்பாக இருக்கும். பாடங்கள் நடத்தப்படும் போது நன்றாக கவனிப்பதுடன், வீட்டிற்கு சென்று படிக்கும் போதும் அசதியின்றி படிக்கும், உடனுக்குடன் வலுவூட்டும் வகையில் ஒவ்வொரு மாணவனுக்கும் விளையாட்டு வகுப்புகளில் பயிற்சி அளிக்க வேண்டும்.

விளையாட்டில் மிகச் சிறப்பாக உள்ள மாணவர்களை பிற பள்ளிகளுடனான போட்டிகளில் ஈடுபடுத்துவதுடன் மற்ற மாணவர்களை பள்ளி அளவிலான போட்டிகளில் ஈடுபடச் செய்ய வேண்டும். விளையாட்டு வீரர்களாக மின்னும் இளைஞர்கள் வாழ்க்கையில் எதையும் எதிர்கொள்ளும் தன்னம்பிக்கை பெற்றிருப்பதால் அவர்களுக்குத் தலைமைப் பண்பு என்பது தானாகவே உருவாகிறது.

## இலக்கிய நிகழ்ச்சிகள்

**செயல்பாடு (6)**

பள்ளியில் நடைபெற்ற இலக்கிய மன்ற விழாவில் மாணவர்களுக்கு பேச வாய்ப்புகள் அளிக்கப்பட்டது. அதில் ஒரு சிறுவன் ஆற்றிய சொற்பொழிவு அதனைப் பார்த்துக் கொண்டிருந்த மாணவர்களை மட்டுமின்றி ஆசிரியர்களையும் கவர்ந்தது. அதன் பின்பு பள்ளியில் நடைறெும் ஒவ்வொரு இலக்கிய நிகழ்ச்சியிலும் அந்த மாணவன் கலந்து கொண்டான். பேசுவதற்கான கருத்துகளைத் தேடி எடுக்க அவன் நிறைய புத்தகங்கள் படிக்க வேண்டி இருந்தது. அதனால் அவனிடம் படிக்கும் பழக்கம் வளர்ந்தது. விதவிதமான நூல்களைப் படிக்கப் படிக்க அவனுக்கு எழுதுவதில் ஆர்வம் வந்தது. கவிதை, கட்டுரை என நிறைய எழுதத் தொடங்கினான். படிக்கிற காலத்திலேயே பத்திரிகைகளுக்கு கவிதை எழுதுவான். அவற்றில் ஒன்றிரண்டு வெளியாகும். இப்படி ஒவ்வொரு கட்டமாக தன் இலக்கியத் திறமையை வளர்த்துக் கொண்டதால் இன்று அந்த மாணவன் வளர்ந்து எழுத்தாளராக இருக்கிறார்.

இலக்கிய நிகழ்ச்சிகளில் குழந்தைகளை பங்கேற்கச் செய்ய வேண்டும்? ஏன்? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சியில் ஒரு மாணவன் தனக்கு இலக்கியத்தின் மீது இருந்த ஆர்வத்தினால் அவன் நிறைய புத்தகங்களை படித்து தனது திறமையை வளர்த்து கொண்டதால் அவன் ஒரு சிறந்த எழுத்தாளராக முடிந்தது. வகுப்பில் ஆசிரியரின் செயல்பாடுகளில் ஏதேனும் ஒன்று அவனை தூண்டியிருக்க வேண்டும்.

இதுவரை குறிப்பிடப்பட்ட பள்ளி சார்ந்த காரணிகளை வலுப்படுத்தப்படுவதுடன் பள்ளிகளில் நடைபெறும் செயல்பாடுகளில் மற்றும் நிகழ்ச்சிகளில் மாணவர்கள் பங்கேற்க அவர்களக்கு வாய்ப்புகள் அளிக்கப்படுதல் வேண்டும். பெற்றோர் ஆசிரியர் ஒருங்கிணைப்பு மிகவும் அவசியமானது. பள்ளியில் நடைபெறம் பெற்றோர் ஆசிரியர் கழக நட்டத்தின் மூலமாக மாணவர்களின் படிப்பு, ஆர்வம், தேர்ச்சி விகிதம், நடத்தை ஆகியவற்றை கலந்தாலோசிக்கலாம்.

# 6. கற்றல் வகை

**செயல்பாடு (1)**

மிதிவண்டி (சைக்கிள்) பழுதுபார்க்கும் கடையில் வேலை பார்க்கும் சிறுவனிடம் மருத்துவக் கல்லூரியில் பணிபுரியும் மனவியல் பேராசிரியர் ஒருவர் ஒரு ஆய்வினை மேற்கொள்கிறார். அச்சிறுவன் படிப்பை மேற்கொண்டு தொடர முடியாமல் ஆரம்பக் கல்வி நிலையிலேயே படிப்பை நிறுத்தியவன். ஆராய்ச்சியாளர் அவனிடம் ஒன்று முதல் பத்து வரை உள்ள எண்களை எழுத கூறுகிறார். ஆனால் அவனால் எண்களை எழுத முடியவில்லை. அதற்கு பதிலாக பூஜ்யம், பூஜ்யமாக போடுகிறான். ஆனால் அச்சிறுவன் மிதிவண்டி பழுதுபார்க்கும் தொழிலில் சிறந்து விளங்குகிறான்.

இது எதனால் ஏற்படுகிறது? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

மேற்கூறிய மாணவனின் கற்றலில் இயக்கத்திறன் அதிக அளவில் காணப்படுகிறது. அவனுடைய கற்றலில் பார்த்தல், கேட்டலைவிட இயக்கத்திறன் மிகுந்து காணப்படுகிறது. எனவே தான் அவன் மிதிவண்டி பழுது பார்த்தல் தொழிலில் சிறந்து விளங்குகிறான். இவ்வகை கற்றலை இயக்கத்திறன் சார்ந்த கற்றல் எனக் கூறலாம். பெரும்பான்மையோரிடம் மற்ற திறன்களைவிட பார்த்தல் திறன் கற்றலில் அதிக பங்கு வகிப்பதாக கூறப்படுகிறது.

**செயல் (2)**

பள்ளியில் ஆசிரியர் ஒரு வகுப்பில் நுழைந்து அங்குள்ள மாணவர்களை உற்று நோக்கினால் அவர்களிடையே பல வேற்றுமைகள் இருப்பதை காணமுடிகிறது. இது எதனால் ஏற்படுகிறது? சிந்தித்துப் பாருங்கள்.

**விளக்கம்**

மேற்குறிப்பிட்ட செயல்பாட்டில், மாணவர்களிடையே காணப்படும் வேற்றுமைகள் புறத்தோற்றத்தைப் மட்டுமல்ல; பிற எல்லாப் பண்புகளிலுமே இத்தகைய வேற்றுமைகளைக் காணலாம். ஒரே வயதான மாணாக்கர்களும் வளர்ச்சி வீதத்திலும், முதிர்ச்சி நிலையிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றனர். இவ்வேற்றுமைகள் மாணாக்கர்களது உடல் நலம், உடலியக்கத் திறன்கள், உடற்சக்தி போன்றவற்றிலும் பிரதிபலிப்பனவாகும். இவற்றுடன் பிற மனத்திறன்கள், மனவெழுச்சிகள், சமூகப் பண்புகள், பிற பண்புகள் போன்றவற்றில் காணப்படும் தனியாள் வேற்றுமைகளையும் இணைந்து ஒவ்வொரு மாணாக்கனும் ஒரு தனிப்பட்ட ஆளுமையைப் பெற்றவனாகத் திகழ்கிறான். இவர்களுடைய கற்றல் வகையில் தனியாள் வேற்றுமைகள் உள்ளன.

கற்றல் வகை என்பது ஒரு தனிப்பட்ட நபரின் கற்றலுக்கான முறை ஆகும். இதன்படி சிலர் ஒரு தனிப்பட்ட தூண்டலுக்கேற்ற துலங்களைப் பெறுபவராக இருப்பர் கற்றல் வகை என்பதை கற்றலில் ஈடுபடும் முறை என குறிப்பிடலாம். உதாராணமாக, சில மாணவர்களுக்கு பாடப் பொருள் அறிவைவிட செய்முறை வகுப்பில் அதிக ஆற்றலுடன் காணப்படுபவர். சிலர் பாடப்பொருள், செய்முறை ஆகிய இரண்டிலுமே சிறந்து விளங்குவர். இது எதனால்? சிந்தியுங்கள்.

உதாரணமாக, சிறுவர்கள் ஒருவருக்கொருவர் பொது ஆற்றலிலும், சிறப்பு ஆற்றல்களிலும், செய்திறன்களிலும் கற்றலில் ஈடுபடும் முறை, அவாக்கள், விருப்பங்கள், மனப்போக்குகள், மனவெழுச்சி, மனப்பான்மை ஆகியவை போன்ற யாவற்றிலும் வேறுபட்டுக் காணப்படுகின்றனர். இச்சிறுவர்களது திறனுக்கேற்ற கற்றல் வகையை தேர்ந்தெடுப்பது மிகவும் அவசியம் ஆகும். கற்றல் வகை எனப்படுவது தற்போது அதிகமாக பேசப்படுகிறது. இதன்படி ஆசிரியர் மாணவர்களின்

கற்றல் வகைகளை மதிப்பீடு செய்து ஒவ்வொரு மாணவனின் கற்றல் வகைக்கு ஏற்றவாறு வகுப்பறை கற்பித்தல் முறைகளை அமைத்தல் வேண்டும். இதுவரை 80க்கும் மேற்பட்ட கற்றல் வகை மாதிரிகள் உள்ளன. இவையனைத்தும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நான்கு அடிப்படை கற்றல் வகைகளில் அடங்கும்.

- **செவிப்புலன் வழியே கற்றல்:** இம் முறை மூலமாக பிறர் பேசுகிற வார்த்தைகளை கேட்டறிய முடிகிறது.
- **இயக்கத்திறன் வழியே கற்றல்**: இம்முறையில் செய்து பார்த்தல் மற்றும் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளுதல் மூலமாக கற்றல் நடைபெறுகிறது.
- **பார்வைத் திறன் வழியே கற்றல்:** இம்முறையில் பிம்பங்களை பதியவைத்தல், பிறர் செய்து காண்பித்தவை பார்த்தல், உடல் அசைவு மொழியினை உற்று நோக்குதல் போன்றவற்றின் மூலமாக கற்றல் நடைபெறுகிறது.
- **தொடு உணர்வு வழியே கற்றல்:** இம்முறையில் குறிப்பினை எழுதுவது, படங்களை வரைவது போன்றவற்றின் மூலமாக கற்றல் நடைபெறுகிறது.

ஒருவரின் கற்றலில் மேற்குறிப்பிட்ட நான்கு அடிப்படை கற்றல் வகைகளில் ஏதேனும் ஒன்று அல்லது ஏதேனும் இரண்டு கற்றல் வகைகள் இணைந்தோ அல்லது அனைத்து கற்றல் வகைகளும் இணைந்தோ செயல்படக் கூடும்.

## 7. கற்பித்தல் வழிமுறைகள்

**செயல்பாடு (1)**

நல்ல சுட்டெரிக்கும் வெய்யிலில் கூட நல்ல சக்தி வாய்ந்த ஒரு லென்சை ஒரு தாளின் மேல் அசைத்துக் கொண்டே இருந்தால், அந்தத் தாளில் தீ பற்றவே பற்றாது. ஆனால் அதை ஒரே இடத்தில் மையப்படுத்தி பிடித்துக் கொண்டிருந்தால், அந்தத் தாள் தீப்பற்றிக் கொள்ளும். இதுவே ஒருமுகப்படுத்துவதாகும். குழந்தை கற்கும் போது அவர்களுடைய சிந்தனையை ஆசிரியர் ஒருமுகப்படுத்த வேண்டும்.? ஏன்? சிந்தித்துப் பாருங்கள்.

**விளக்கம்**

வகுப்பறை கற்பித்தலின் போது ஆசிரியர் மாணவர்களின் எண்ணங்களை சிதறவிடாமல் அவர்களின் மனதை ஒருமுகப்படுத்தப்படுதல் வேண்டும். சாதாரண நிலையில் ஒரு மனிதனின் மனதில் பல எண்ணங்கள் அலை மோதும். அவற்றை கட்டுப்படுத்தி ஒரே எண்ணமாக மாணவர்கள் மனம் முழுவதும் கற்றலில் நிலைத்திருக்கச் செய்தல் வேண்டும். இதற்கு ஆசிரியர் என்ன செய்ய வேண்டும்! ஆசிரியர் வகுப்பறையை மகிழ்ச்சிகரமாகவும் கட்டுப்பாடுடனும் வைத்திருக்க வேண்டும்? ஆசிரியர் கற்பித்தலின் போது மாணவர்களிடம் ஆர்வத்தை ஏற்படுத்த வேண்டும். எந்த கற்பித்தல் முறை தான் கற்பிக்க இருக்கும் பாடத்திற்கு பொருத்தமாக இருக்கும் என்பதை முன்கூட்டியே தீர்மானித்து வகுப்பறையில் செயல்படுத்த வேண்டும். செய்து காண்பித்தல் முறை, குறைதீர் கற்பித்தல் முறை, விளையாட்டு வழி கற்பித்தல் முறை, கணினியை பயன்படுத்தி கற்பித்தல் முறை, இது போன்ற கற்பித்தல் முறைகளில் ஏதேனும் ஒன்றை ஆசிரியர் தேர்ந்தெடுக்கலாம். மாணவர்களுக்கு பாடம் கற்பிப்பதற்கு வகுப்பறைக்கு வருவதற்கு முன்பே ஆசிரியர் ஒரு பாடத்திட்டத்தை தயார் செய்து கொண்டு எந்த கற்பித்தல் முறையை பின்பற்றப் போகிறார் என்பதை முடிவு செய்திட வேண்டும்.

பொதுவாக கற்பித்தல் வழிமுறைகளில் இரண்டு பிரிவுகள் உள்ளது. ஒன்று பகுத்தறிதல் முறை மற்றொன்று தொகுத்தறிதல் முறை.

எந்த ஒரு பாடப் பொருளைக் கற்கும் போதும் அதில் அடங்கியுள்ள பொதுக்கருத்துக்களை நன்கு அறிதல் இன்றியாமையாததாகும். பொதுக் கருத்துக்களை பகுத்தறியும் போது அதில் பல்வேறு தனிப்பட்ட கருத்துக்கள் கிடைக்கும். பொதுவான ஒரு கருத்திலிருந்து பகுத்தாய்ந்து இறுதியில் ஒரு தனிப்பட்ட கருத்தினை தேர்ந்தெடுப்பது பகுத்தறிதல் எனலாம்.

பல்வேறு விவரங்களை திரட்டி அதிலிருந்து ஒரு பொதுவான கருத்துக்கு வருவது தொகுத்தறிதல் எனலாம். எடுத்துக்காட்டாக, பின்வருவனவற்றை குறிப்பிடலாம்.

**செயல்பாடு (2)**

விலங்கு என்கிற சொல் பொதுவாக நான்கு கால்கள் உள்ள அனைத்து உயிரினங்களைக் குறிக்கும். விலங்கினுடைய பொதுவான பண்புகளை கூறிவிட்டு அதிலிருந்து 'ஆடு' என்கிற சொல்லுக்கு வரும் போது ஆட்டினுடைய தனிப்பட்ட பண்புகளைக் குறிப்பிடுவோம். இம்முறை பகுத்தறிதல் எனப்படும்.

இதையே தொகுத்தறிதல் முறைக்கு பின்வருமாறு குறிப்பிடலாம். ஆட்டினுடைய தனிப்பட்ட பண்புகளைக் கூறிவிட்டு அதிலிருந்து 'விலங்கு' என்கிற சொல்லு வரும் போது விலங்கினுடய பொதுவான பண்புகளைக் குறிப்பிடுவோம் இம்முறை தொகுத்தறிதல் எனப்படும்.

**விளக்கம்**

விலங்கு என்கிற பொதுவான சொல்லில் இருந்து 'ஆடு' என்கிற தனிப்பட்ட உயிரினத்திற்கு வரும் போது ஆட்டினுடைய தனிப்பட்ட பண்புகளை விளக்குகிறோம். இவ்வகை கற்பித்தல் முறை பகுத்தறிதல் முறை என்கிறோம். இதே போன்று ஆட்டினுடைய தனிப்பட்ட பண்புகளை கூறிவிட்டு அதிலிருந்து பொதுவான விலங்கிலிருந்து வருவது தொகுத்தறிதல் முறை என்கிறோம்.

நாம் தினந்தோறும் வாழ்க்கையில் தோன்றும் பிரச்சினைகள் பற்றிச் சிந்திக்கும் போது பல்வேறு கருத்துக்களைத் தொகுத்தறிந்து ஒரு முடிவுக்கு வருகிறோம்.

## 8. ஊடகம்

**செயல்பாடு**

மாணவன் பள்ளியில் இருந்து மாலை வீட்டுக்கு வந்ததும் நேராக தொலைக்காட்சி பெட்டியின் முன்பு போய் அமர்ந்துவிடுகிறான் அல்லது கணினி முன்பு போய் அமர்ந்து விடுகிறான். குழந்தைகளை ஊடகம் அதிகம் ஈர்க்கிறது? ஏன்? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

மாணவனின் கற்றல் பள்ளிக்கு வெளியேயும் நடைபெறுகிறது. எனவே செய்தித்தாள்கள், வானொலி, தொலைக்காட்சி, கணிணி ஆகியவை மாணவனின் கற்றலில் முக்கியத்துவம் பெறுகிறது. ஊடகங்கள் மாணவர்களின் ஒழுக்கநெறி தவறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி தருவதாக உள்ளது. எனவே பெற்றோர்கள் குழந்தைகள் வீட்டிற்கு வந்ததும் அவர்களுக்கு உரிய செயல்பாடுகளை வரையறுத்து கூறவேண்டும். அவர்கள் ஒழுக்கநெறி தவறாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது பெற்றோர்களின் பொறுப்பாகும். நல்ல கருத்துக்களை ஊடகங்களின் மூலமாக பெறுவதற்கு உரிய வாய்ப்புக்களை பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு ஏற்படுத்தித் தரலாம்.

பள்ளியில் கல்வி தொடர்பான செய்திகள், நிகழ்ச்சிகள் தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்படும் போது மாணவர்கள் கண்டுகளிக்க ஆசிரியர்கள் வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரலாம். பள்ளியில் மாணவர்களக்கு கணிணி பயிற்சியை அளிக்கலாம். பாடப் பகுதிகளை தேவையான போது கணினி மூலமாகவும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கற்பிக்கலாம். உதாரணமாக, ஆரம்பக்கல்வி நிலையில் அறிவியல் பாடங்களில் காணப்படும் செய்முறை பகுதிகளை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு கணிணி மூலம் கற்பிக்கலாம்.

## 9. தொழில் நுட்பவியல்

### செயல்பாடு

இன்றைய காலகட்டத்தில் சிறுவர்கள் கணினியின் மீது அதிக ஆர்வம் உடையவர்களாக இருக்கிறார்கள். முந்தைய தலைமுறையில் தாங்கள் குழந்தைப் பருவத்தில் விளையாடிய விளையாட்டுகளை எல்லாம் இப்போது அதிகமாக பார்க்க முடிவதில்லை. கணினியிலேயே இப்போது சிறுவர்கள் "வீடியோ கேம்" பார்க்கின்றனர். குழந்தை கற்றலில் தொழில் நுட்பவியலின் முக்கியத்துவம் என்ன? சிந்தியுங்கள்.

### விளக்கம்

மாணவர்களின் கற்றலில் தொழில் நுட்பம் முக்கிய பங்கு வகிக்கிறது. இன்று 'கல்வித் தொழில் நுட்பவியல்' வளர்ச்சி பெற்று, திறம்படக் கற்பித்தலுக்கான பல உத்திகளையும் கற்பித்தல் துணைப் பொருட்களையும் ஆசிரியருக்கு உருவாக்கி தந்து உதவியுள்ளது. வரைபடங்கள், விளக்கப்படங்கள் போன்ற கற்பித்தல் பொருள்கள் வலுவுள்ளவைகளாக விளங்குகின்றன. இவற்றை திரைகளில் காட்டத் தொழில் நுட்பக் கருவிகள் தேவைப்படும்.

நழுவங்கள், திரைப்படத் துண்டுகள், நாடாப் பதிவுக் கருவிகள், திரைப்படங்கள், வானொலி, தொலைக் காட்சிக் கருவிகள் போன்றவை தற்போது அதிகமாக பயன்படுத்தப்பட்டு வருகிறது. இன்று 'இன்சாட்–1 ' என்கிற விண்கோளின் உதவிகொண்டு தொலைக்காட்சி கல்வி பரவலுக்குப் பெருமளவில் பயன்படுத்தப்படுகிறது. இன்று நம் நாட்டில் கணினி, கற்பித்தலில் முக்கிய பங்கு கொள்ளத் தொடங்கியுள்ளன. பள்ளிகளில் தற்போது மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் கணினி பயிற்சி அளிக்கப்படுகின்றது. இப்பயிற்சி ஆசிரியரின் கற்பித்தலுக்கு துணை செய்கிறது.

பாடப்பொருள் உருவாக்குவதிலும் இவற்றை நல்ல முறையில் பயன்படுத்துவதிலும் ஆசிரியரின் பங்கும், பொறுப்பும் மிக முக்கியமானவை ஆகும்.

## 10. கற்பித்தல் கற்றல் செயல்பாடு

### செயல்பாடு

ஒரு வகுப்பறையில் மூன்று வகை மாணவர்களை ஆசிரியர் கையாள வேண்டியது உள்ளது. சராசரி நிலையில் உள்ள மாணவர்கள், சராசரிக்கு மேல் உள்ள மீத்திறன் நிலை மாணவர்கள், சராசரிக்கு கீழே உள்ள பின் தங்கிய மாணவர்கள் ஆகியோருடையே கற்றலில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. கற்பித்தல் கற்றல் செயல்பாட்டில் ஆசிரியர் எல்லா மாணவர்களையும் எவ்வாறு ஒருங்கிணைத்து செயல்பட முடியும்? இற குறித்து இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக. இதனை வகுப்பில் விவாதித்தப் பின்னர் ஆசிரியர் இப்பாடத்தைத் தொடரலாம்.

**விளக்கம்**

ஒரு பாடம் பொருளின் கடினப் பகுதியை ஆசிரியர் விளக்கத்துடன் ஒரு முறை கூறும் போது மீத்திறன் நிலை மாணவன் புரிந்து கொள்கிறான். சராசரி நிலையில் உள்ள மாணவனுக்கு ஆசிரியர் இரண்டு தடவை கூற வேண்டியது இருக்கிறது. அதையே ஆசிரியர் பின்தங்கிய மாணவனக்கு மூன்று தடவை கூற வேண்டியது இருக்கிறது. எனவே, ஆசிரியர் தற்போது சராசரி நிலையில் உள்ள மாணவனை மனதில் வைத்து தான் பாடத்தை கற்பிக்க வேண்டியது இருக்கிறது. பாடப் பொருளின் கடின பகுதியை ஆசிரியர் ஒரு தடவை கூறும் போது மற்ற இருவகை மாணவர்களுக்கு புரிவதில்லை. அதையே மூன்று தடவை கூறினால் மீத்திற மாணவன் சலிப்படைகிறான்.

மீத்திற மாணவர்களுக்கு என தனியாக வகுப்பறையும், பின்தங்கிய மாணவர்களுக்கு என தனியாக வகுப்பறையும் அமைத்து செயல்படுத்தினால் பின்தங்கிய மாணவர்களுக்கு வகுப்பில் பின்பற்றுவதற்கு முன்மாதிரியாக மீத்திற மாணவன் இல்லாமல் போய் விடுகிறான். மீத்திற மாணவர்களுக்க என தனியாக ஒரு வகுப்பறை அமைத்து கொடுத்தால் அவர்கள் மேன்மேலும் கற்றலில் அடைவினை பெறமுடியும். ஆனால் பின்தங்கிய மாணவர்களை கருத்தில் கொள்ளும் போது கற்றலில் எல்லா நிலை மாணவர்களையும் ஒருங்கிணைத்து கற்பிக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஆசிரியருக்கு உள்ளது.

மனித வேற்றுமைகள் பற்றிய ஒரு தனிப்பிரிவு இன்று உளவியலில் தோன்றியுள்ளது. இப்பிரிவு மனிதனில் காணப்படும் பல வேற்றுமைகளின் இயல்பு பரப்பு, காரணங்கள் முதலியவற்றைப் ஆராய்ந்தறியப் பயன்படுகிறது. தனியாள் வேற்றுமைகள் மாணவர்களிடமும் காணப்படுகிறது. திறன் அடிப்படையில் வெவ்வேறு மாணவர்களிடையே காணப்படும் வேறுபாடுகளை தனி நபர் திறன்கள் வேறுபாடு என கூறலாம்.

**செயல்பாடு**

ஒவ்வொரு மாணவனிடமும் மிகுந்து காணப்படும் திறன்களை வெளிக் கொணரும் வகையில் கற்பித்தல் முறை அமைய வேண்டும். அ;வவாறு எனில், ஒரு வகுப்பில் பயிலும் 50 மாணவர்களுக்கும் ஏற்றாற்போல் அவரவர் திறன்களுக்கேற்றவாறு ஒரு ஆசிரியர் பல்வேறு கற்பித்தல் முறைகளை அமைத்து கொடுக்க முடியுமா? சிந்தியுங்கள்.

**விளக்கம்**

ஒரு ஆசிரியர் அனைத்து மாணவர்களுக்கும் ஏற்ற ஒரு பொதுவான கற்பித்தல் முறையை செயல்படுத்திவிட்டு அதில் அனைத்து மாணவர்களுக்கும் தங்களுடைய திறமைகளை வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்களை அளிக்கலாம்.

**குறிப்பு**

இப்பாடப் பகுதியில் முன்பு கொடுக்கப்பட்ட செயல்பாடுகளின் விவாதத்திற்கும் பின்னர் மாணவ ஆசிரியர் பெற்ற அறிவுக்கும், இப்பாடப் பொருளை கற்றறிந்த பின்னர் பெற்ற அறிவுக்கும் ஏதேனும் வித்தியாசம் உள்ளதா? விவாதித்து அறியவும்.

# 11. ஆசிரியர் பண்பு நலன்கள்

## செயல்பாடு (1)

முற்காலத்தில் ஆசிரியர்கள் வேஷ்டி, சட்டை அணிந்து, தலையில் தலைப்பாகையுடனும் கையில் பிரம்புடனும் காணப்பட்டனர். புறத்தோற்றத்திற்கு அக்காலத்தில் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு இருந்தது. தற்போது ஆசிரியரின் உடையில் முன்பு இருந்த நிலை மாறி உள்ளது. ஆசிரியர்கள் ஒழுக்க நெறியுடன் இருந்து மாணவர்களை வழி நடத்த வேண்டும் என்கிற மனப்பான்மை மட்டும் மாறாமல் எக்காலத்திலும் ஒரே மாதிரி இருந்து வருகிறது. ஏன்? சிந்தித்துப் பாருங்கள்.

## விளக்கம்

பிற துறைகளை சார்ந்தவர்கள் தவறு செய்தால் சமூதாயத்தில் அதிகமாக பேசப்படுவதில்லை. ஆனால் ஆசிரியர் ஒரு சிறிய தவறு செய்தாலும் அது சமுதாயத்தில் அதிகமாக பேசப்படுகிறது. ஏனெனில் ஆசிரியர்கள் முன்மாதிரியாக திகழ வேண்டும் என சமூகம் எதிர்ப்பார்க்கிறது. கணித பாடத்தில் ஆசிரியர் ஒரு வழிமுறையை கற்று கொடுத்து இருப்பார். வீட்டிற்கு வந்ததும் பெற்றோர்கள் வேறொரு முறையில் கணக்கினை கற்றுக் கொடுக்கும் போது உடனேயே குழந்தைகள் பெற்றோர்களிடம், “தங்களுடைய ஆசிரியர் கூறியது தான் சரி, நீ கூறுவது தவறு” எனக் கூறுகின்றனர். இது எதைக் காட்டுகிறது?

மாணவர்கள், ஆசிரியர்கள் மீது வைத்திருக்கும் அசைக்க முடியாத நம்பிக்கையை காட்டுகிறது. அந்த நம்பிக்கையை வீண் போகாமல் ஆசிரியர் மாணவர்களை சிறந்த முறையில் வழிகாட்டுதல் வேண்டும்.

## செயல்பாடு (2)

ஒரு ஆசிரியர் தன் வகுப்பு மாணவர்கள் தங்கள் சட்டையில் உள்ள பொத்தான்களில் கழுத்துப் பொத்தானைத் தவிர அனைத்துப் பொத்தான்களையும் போட்டிருக்க வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருப்பார். சில மாணவர்கள் நெஞ்சுக்கு நேரே இருக்கும் பொத்தானை போடாமல் அலட்சயமாகவிட்டிருப்பார்கள். அப்படிப்பட்டவர்களை அருகில் அழைத்து அவர்களது நெஞ்சில் ஒரு தட்டு தட்டுவார். மாணவர்கள் ஒழுங்காக பொத்தான் போடுவார்கள். பொத்தான் அறுந்திருந்தால் அவரே ஊக்கு ஒன்றைக் கொடுப்பார். அடுத்த முறை நுழையும் போதே அனைத்து மாணவர்களின் கைகளும் தங்கள் சட்டையில் நெஞ்சுப் பகுதியில் உள்ள பொத்தானை தடவிப் பார்த்துக் கொள்வர். சட்டைப் பொத்தான்களை அலட்சியமாகத் திறந்து போட்டிருக்கக் கூடாது என்பதை ஒரு பழக்கமாகவே கொண்டிருந்தார். ஆசிரியர் மாணவர்களிடம் ஒழுக்கத்தை வலியுறுத்துவது ஏன்? சிந்தியுங்கள்.

## விளக்கம்

மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சிகளில் அவரிடம் படித்த ஒரு மாணவர் பிற்காலத்தில் சிறந்த எழுத்தாளராக பிரபலமானார். ஒரு முறை சொந்த ஊருக்கு வந்த போது அந்த ஆசிரியரைப் பார்க்க வந்தார். தனது பழைய ஆசிரியரைப் பார்த்ததும் அவரது கை தானாக தனது சட்டைப் பொத்தானை தொட்டது. ‘தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்’ என்பதை ஆசிரியர்கள் உணர்ந்திருப்பார்கள். எனவே நற்பண்புகளில் மாணவர்களுக்கு அவர்கள் முன்னோடியாக செயல்பட வேண்டும்.

பள்ளியில் பொறுத்தவரை மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் தேர்ச்சி இருக்கிறது. ஆசிரியர்களுக்கு அத்தகைய தேர்ச்சி இல்லை என்றாலும் அவர்களும் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். அவர்கள் பள்ளியில் சேரும் போது பெற்றிருக்கும் கல்வித் தகுதியை

விட கூடுதலான கல்வித் தகுதிகளை அவர்கள் தொடர்ந்து பெறுவதற்கு பள்ளி நிர்வாகம் ஆவன செய்ய வேண்டும். மேலும் ஆசிரியர்களை பல கருத்தரங்குகளிலும், பயிற்சி பட்டறைகளிலும் பங்கேற்கச் செய்ய வேண்டும். இவையனைத்தும் அவர்களை பட்டை தீட்டிக் கொள்ள உதவியாக இருக்கும். ஆசிரியர் என்கிற விளக்கின் மூலமே மாணவர்களின் அறியாமை இருள் விலகி அறிவொளி பாய்கிறது. அதன் ஒளி விளக்கில் எப்போதும் எண்ணெய் இருக்கும்படியும் அதன் சுடர் அதிக பிரகாசத்துடன் இருக்கும்படியும் பார்த்துக் கொள்ளும் பொறுப்பு பள்ளி நிர்வாகத்துக்கு இருக்கிறது.

**குறிப்பு**

இப்பகுதியின் முன்பு கொடுக்கப்பட்ட செயல்பாடுகளில் இருந்தும் அதற்கு பின்பு கொடுக்கப்பட்டு இருக்கும் கருத்துக்களில் இருந்தும் மாணவர்கள் கற்றலைப் பற்றி என்ன அறிந்து கொண்டார்கள்? கற்றலைப் பற்றி முன்பு இருந்த அறிவிற்கும் இப்பாடப் பகுதியை படித்த பிறகு உள்ளவற்றிற்கும் முன்னேற்றம் தெரிகிறதா! ஆராயுங்கள்.

## 12. தொகுப்புரை

குழந்தையின் கற்றலில் பங்கு கொள்ளும் காரணிகளாக, தனிப்பட்ட காரணிகள், உளவியல் காரணிகள், சமூகக் காரணிகள், பள்ளி சார்ந்த காரணிகள் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

பள்ளி என்று பார்க்கும் போது குழந்தையுடன் ஆசிரியர், சக மாணவர்கள், பள்ளி நிர்வாகம், ஆகியவற்றிற்க இடையே உள்ள தொடர்பை குறிப்பிடலாம். குடும்பம் என்று நோக்கும்போது பெற்றோர் மற்றுமுள்ள குடும்ப உறுப்பினர்களுடன் குழந்தையின் தொடர்பை ஆராயலாம். சமுதாயம் என்று பார்க்கும் போது குழந்தையுடன் குழந்தையின் வயது ஒத்த நண்பர்கள், குழந்தையின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள கடும்பத்தின் உறுப்பினர்கள், ஊர் பெரியவர்கள், குழந்தையின் உறவினர்கள், மற்றுமுள்ள ஊர் மக்கள் ஆகியோரை குறிப்பிடலாம். ஒட்டு மொத்தமாக பார்க்கும் போது இவையனைத்தும் குழந்தையிடம் வைத்திருக்கும் தொடர்பு அக்குழந்தையின் கற்றலில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. மேற்கூறிய காரணிகள் அக்குழந்தைக்கு சரியாக அமையவில்லை. என்றால் அக்காரணிகளில் அக்குழந்தையின் கற்றல் பாதிக்கப்படலாம். ஒவ்வொரு குழந்தைக்கும் ஏற்ற கற்றல் வகையை தேர்ந்தெடுத்து அதற்கேற்ப ஆசிரியர் கற்பித்தல் முறைகளை அமைத்துக் கொள்ளலாம். ஆசிரியர் கற்பித்தல் முறையினை தேர்ந்தெடுக்கும் போது எந்த கற்பித்தல் முறை தான் கற்பிக்க இருக்கும் பாடத்திற்கு பொருத்தமானதாக இருக்கும் என சிந்தித்து செயல்பட வேண்டும். பொதுவாக கற்றலில், பகுத்தறிதல், தொகுத்தறிகள் என இரண்டு முறைகள் உள்ளன. எந்த ஒரு பாடப் பொருளை கற்கும் போது அதில் அடங்கியுள்ள பொதுக் கருத்துக்களை மாணவர்கள் அறியும்படி செய்தல் ஆசிரியரின் பணியாகும். பொதுவான ஒரு கருத்திலிருந்து பகுத்தாய்ந்து இறுதியில் தனிப்பட்ட கருத்தினை தேர்ந்தெடுப்பது பகத்தறிதல் எனலாம்.

பல்வேறு விவரங்களை (தனிப்பட்ட கருத்துக்களை) தொகுத்து அதிலிருந்து ஒரு பொதுவான கருத்துக்கு வருவது தொகுத்தறிதல் எனலாம் ஆசிரியர் இதற்கான வாய்ப்புகளை மாணவர்களுக்கு ஏற்படுத்தித் தருதல் வேண்டும்.

மாணவனின் கற்றலில் பள்ளியிலும் பள்ளிக்கு வெளியேயும் ஊடகங்கள் முக்கிய பங்கு வகிக்கிறது. பள்ளியில் ஆசிரியரும் பள்ளியிலிருந்து வீட்டிற்கு சென்றதும் பெற்றோரும், மாணவனை கணினி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களை கையாளம் போது ஒழுக்க நெறி தவறாமல்

இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும். ஒழுக்கம் மாணவனை நல்ல செய்திகளை கற்க துணை செய்யும்.

இக்காலத்தில் தொழில் நுட்பவியல் நன்கு வளர்ச்சியடைந்துள்ளது. கணினி இல்லாத துறையே இல்லை என்று கூறும் அளவுக்கு நம் நாடு முன்னேற்றம் அடைந்துள்ளது. எனவே பள்ளியில் தொழில் நுட்ப கருவிகளை கையாள்கிற பயிற்சியினை ஆசிரியர்கள் மாணவர்களுக்கு அளிக்கலாம். மேலும் மாணவர்களுக்கு கணினி பயிற்சியினையும் பள்ளியில் அளிக்கலாம்.

ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்களிடையே கற்றலில் தனியாள் வேற்றுமைகள் உள்ளன. சராசரி நிலையில் உள்ள மாணவர்கள், சராசரிக்கு மேல் உள்ள மீத்திற மாணவர்கள் மாணவர்கள் மற்றும் சராசரிக்கு கீழ் உள்ள பின்தங்கிய மாணவர்கள் ஆகிய மூன்று வகை மாணவர்களை ஒருங்கே இணைத்து கற்பிப்பது என்பது ஆசிரியருக்கு கடினமான செயல் ஆகும். மாணவர்கள் அனைவரையும் ஒருங்கே இணைத்து கற்பிப்பதற்கான வழிமுறைகள ஆசிரியர் மேற்கொள்ள வேண்டும். ஆசிரியர் மாணவர்களுக்கு கற்பிக்கும் போது அவர்களுடைய தனித்திறனை வெளிக் கொணருமாறு கற்பிக்க வேண்டும். பள்ளியிலும் பள்ளிக்கு வெளியே நடைபெறும் நிகழ்ச்சிகளலும் மாணவர்களுடைய தனித்திறன் வெளிக் கொணர்வதற்கு ஏற்ற வாய்ப்புக்களை ஆசிரியர்கள், மாணவர்களுக்கு அளிக்க வேண்டும்.

ஆசிரியர்களுடைய பண்புகள் என்று குறிப்பிடும் போது ஒழுக்க நெறி மிகவும் முக்கியமானது ஆகும். ஒருவன் எவ்வளவு கற்றிருந்தும் அவனிடம் ஒழுக்கம் இல்லை எனில் அதனால் சமுதாயத்திற்கு எந்த பலனும் இல்லை. மாறாக சமுதாயத்திற்கு தீங்குதான் விளையும். எனவே ஆசிரியர்கள் தானும் ஒழுக்க நெறியுடன் இருந்து மாணவர்களையும் ஒழுக்க நெறியை பின்பற்றச் செய்ய வேண்டும். இதைத்தான் சமுதாயம் எதிர்பார்க்கிறது. மேலும் ஆசிரியர்கள் பணியிம் சேரும் போது இருந்த கல்வி தகுதிகளோடு நின்று விடாமல் தங்களுடைய கல்வி தகுதியை உயர்த்திக் கொள்ள வேண்டும். மாறி வரும் காலச் சூழலுக்கு ஏற்றவாறு ஆசிரியர்கள் தங்களது கல்வித் தகுதியை உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். பணியில் சேரும் போது கணினி பற்றிய அறிவு எதுவும் இல்லாமல் இருந்திருப்பீர்கள். ஆனால் தற்போது கணினி பயிற்சியின் முக்கியத்துவம் அனைத்து தரப்பினராலும் உணரப்பட்டு இருக்கிறது. எனவே ஆசிரியர்கள் கணினி பயிற்சியினை பெற்றுக் கொள்ள வேண்டும். மேலும் ஆசிரியர்கள் கருத்தரங்குகளிலும். கல்வி பட்டறைகளிலும் கலந்து கொண்டு தங்களுடைய திறமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும். இதன் மூலம் மாணவர்களுக்கு சிறந்த கற்பித்தலை ஆசிரியர்கள் அளிக்க முடியும்.

# அலகு 11

## அறிவை உருவாக்குவதற்காகக் கற்பித்தல்

### முன்னுரை

கற்போர் ஏற்கெனவே தெரிந்து வைத்துள்ள கருத்துக்களோடு புதிய கருத்துக்களை இணைத்து தங்கள் சொந்த அறிவைக் உருவாக்குகிறார்கள். இந்த அனுபவத்தைப் பெற அவர்களுக்கு அளிக்கப்படும் பொருள்கள் மற்றும் செயல்பாடுகள் உதவுகின்றன. உதாரணத்திற்கு போக்குவரத்து முறைகள் பற்றித் தெரிந்துகொள்ள போக்குவரத்துப் பற்றிய பாடம், படங்கள், காட்சிகள் ஆகியவற்றோடு விவாதங்களும் இணைந்தால் இளம் கற்போர் போக்குவரத்து முறை பற்றிய அறிவை உருவாக்கிக் கொள்ள முடியும். ஆரம்ப நிலைக் கற்றலில் (மனத்தளவில் தயாராதல்) சாலை போக்குவரத்துமுறை குறித்த கருத்துக்கள் இடம் பெறலாம். மிகவும் பின்தங்கியக் கிராமச்சூழலில் இருந்துவரும் மாணவனின் சிந்தனை மாட்டு வண்டியைப் பற்றியதாகவும் இருக்கலாம். வெளிப்புறயதார்த்தத்தில் உள்ளவற்றை (போக்குவரத்து முறைகள்) மனத்தளவில் ஏற்றிக்கொள்ள (கருத்து) ஒரு குறிப்பிட்ட செயல்முறைத் தொகுப்பு (அனுபவங்கள்) உதவும். கற்போர் கற்றலில் முன்னேற்றம் காட்ட கருத்தை வடிவமைத்தலும், மறுவடிவமைத்தலும் அவசியம்.

எடுத்துக்காட்டக, தங்களைச் சுற்றியுள்ள சாலைப் போக்குவரத்து முறை பற்றிய கருத்தை வடிவமைப்பது, செயல்முறைகளின் மூலம் விமானப் போக்குவரத்து, கப்பல் போக்குவரத்துக் குறித்த கருத்தை மறுவடிவமைப்பு செய்துகொள்ள உதவும். கற்போரைத் தொடர்புடைய செயல்பாடுகளின் வழி கற்க வைப்பது போக்குவரத்து முறைகளை மனித வாழ்வோடும், பொருளாதாரத்தோடும் இணைத்துப் பார்க்கும், காரண காரிய அறிவை சிந்தனையளவில் உருவாக்கம் செய்ய வழிவகுக்கும். இருப்பினும் அறிவை உருவாக்கும் வழிமுறையில் சமூக நோக்கும், குழுச்சூழலில் சிக்கலான பணியை நிறைவேற்றுவதற்கான அறிவும் தேவைப்படுகிறது. இந்தச் சூழலில் இணைந்து கற்பது, பல்வேறு கருத்துப் பரிமாற்றங்களுக்கும், அனுபவப் பகிர்வுக்கும், பொருளுணர்தலுக்கும், வெளி எதார்த்தங்களின் மூலம் மனக்கருத்தை மாற்றிக் கொள்வதற்கும் வாய்ப்புக்களை அளிக்கின்றன. ஒவ்வொரு கற்போரும் தன்னளவிலும், சமூக அளவிலும் பொருளுணர்ந்து கற்பதே அறிவைக் கற்பதாக அமைகிறது.

## 1. அறிவை உருவாக்குவது என்பதன் பொருளே கற்பதுதான்

### (Constructing knowledge is learning)

அறிவை உருவாக்குவோர் எல்லோரும் கற்பதற்கான வழிவகைகளை முன்வைக்க வேண்டும். அறிவை உருவாக்க, குழந்தைகள் பங்கேற்பு நடவடிக்கைகளில், ஆசிரியர் சொந்த விருப்பத்துடன் கூடுதல் பங்களிப்புச் செய்வதின் மூலம், குழந்தைகளின் புரிதிறனை உயர்த்த முடியும். குழந்தைகளின் அறிவு, கற்றல் வழிமுறைகளில் ஈடுபடும்பொழுது உருவாக்கப்படுகிறது. குழந்தைகளைக் கேள்வி கேட்க அனுமதிப்பதும், அவர்களின் சொந்த வார்த்தைகளிலேயே பதில் கூற ஊக்கப்படுத்துவதும் அவர்கள் பள்ளியில் என்ன கற்கிறார்கள் என்பதை அவர்கள் வாழும் வெளி உலகோடு

தொடர்புபடுத்த உதவும். அவர்கள் மனப்பாடம் செய்து சரியான விடையைக் கூறுவதைவிட இது மிகவும் அவசியமாகும். இது மிகச்சிறு நடவடிக்கையாக இருந்தாலும் அவர்களின் புரிதலை உயர்த்த மிகவும் முக்கியமான நடவடிக்கையாகும். புத்திசாலித்தனமாக நினைப்பதைக் கூறவைப்பது போதனா முறையில் ஒரு நல்ல கருவியாகும் என்பது தெளிவாகிறது.

## 2. புதிய அறிவை உருவாக்குவதற்கான இடம்

**(Zone of Proximal Development)**

குழந்தைகளுக்கு அடிக்கடி சந்தேகம் வருவதுண்டு. இதற்கு அவர்கள் பார்க்கும் ஊடகங்கள் ஒரு காரணம். ஆனால், அவர்களால் ஆசிரியர் பாராட்டுமளவிற்கு வினாக்களை எழுப்ப இயலாது. நீ எதைத் தெரிந்திருக்கிறாயோ அதற்கும் பிறரது உதவியோடு நீ எதைத் தெரிந்துகொள்ள முடியுமோ அதற்கும் இடைப்பட்ட பகுதிதான் புதிய அறிவை உருவாக்குவதற்கான இடமாகும். இப்படிப்பட்ட அறிவு, பள்ளிக்கு வெளியே சமூகத்திலோ அல்லது வீட்டிலோ பெற்றத் திறன் மூலம் வெளிப்படலாம். எல்லாவகை அறிவுகளும், திறன்களும் மதிக்கப்பட வேண்டும். கேள்வி கேட்க, விசாரிக்க, விவாதிக்க, பதில்கூற, ஒரு முடிவுக்கு வர அல்லது ஒரு புதிய கோட்பாட்டை உருவாக்கப் பள்ளிகள் வாய்ப்புகளை அளிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட வயதில் உள்ள குழந்தைகளுக்குச் சவாலாக இருப்பவை வேறு ஒரு குறிப்பிட்ட வயதையுடைய குழந்தைகளுக்கு எளிதாகத் தோன்றும்.

## 3. கலந்துரையாடலின் மதிப்பு

**(Learners construct knowledge for themselves)**

நம்மைச் சுற்றியுள்ள, சுற்றுச்சூழல், இயற்கை, பொருள்கள் மற்றும் மக்களுடன் செயல்படுவதின் மூலமும், மொழியின் மூலமும் உறவாடும் பொழுதும் கற்றல் நடைபெறுகிறது. தன்னோடும், ஒத்த வயதினரோடும், பெரியவர்களோடும் மொழியைப் பயன்படுத்தி – வாசித்தல், கருத்து வெளியிடல் அல்லது கேட்டல், கவனித்தல், கலந்துரையாடல் ஆகிய முக்கியச் செயல்பாடுகளின் வழி கற்போர் எந்தச் சூழ்நிலையில் கற்றல் நிகழ்கிறதோ அதற்கு நேரடியாகப் பொருளுணர்த்தும் முக்கியத்துவம் இருக்கிறது.

### அ. ஆசிரியரின் பங்கு

இந்தச் சூழலில் ஆசிரியர், கற்போரை ஊக்குவிப்பவராகவும், கருத்தை வெளியிட, பகுத்தறிய, விளக்கமளிக்க உதவுபவராகவும் இருந்து அறிவை உருவாக்கும் பணியில் துணைபுரிகிறார்.

### ஆ. வினாக்களை உருவாக்குதல்

விடை '6' என்றால் வினா என்னவாக இருக்கும். இதோ சில 'விடைகள்'

1. நான்கோடு ஒன்று சேர்த்தால் என்ன வரும்?
2. முப்பத்தி இரண்டு இருந்து இருபத்தி ஏழைக்கழித்தால் என்ன வரும்?
3. உனக்கு எத்தனை மிட்டாய்கள் வேண்டும்?
4. நான் என் பாட்டி வீட்டிற்கு திங்கள்கிழமை சென்றேன். வெள்ளிக்கிழமை திரும்பினேன். அப்படியானால் நான் அங்கு எத்தனை நாட்கள் தங்கினேன்.
5. அ, ஆ, இ ஆகிய மூவரும் வந்தனர். அவர்களோடு ஈ, உ, ஊ, எ ஆகியோர் சேர்ந்துகொண்டனர். அதில் 'அ'வும் 'ஊ'வும் பிரிந்து சென்றனர். அதில் 'ஊ' திரும்பி வந்தான். பின்னர் 'ஆ' சென்றுவிட்டான். இறுதியில் உள்ளோர் எத்தனை பேர்? அதேபோல் 'சிவப்பு' என்பது விடையானால் வினா என்னவாக இருக்கும்?

6. அந்தப் பூவின் நிறம் என்ன?

7. நீ கடிதம் போட்ட பெட்டியின் நிறம் என்ன?

8. போக்குவரத்துச் சந்திப்பில் அவன் எந்த நிற விளக்கைப் பார்த்ததும் நின்றான்?

## 4. கற்றல் ஒரு சமூக செயல்பாடாகும்

**(Learning/ a social activity)**

நமது பள்ளிகளில் பெரும்பாலான கற்றல் தனிநபர் சார்ந்தே உள்ளது. (இருந்தபோதிலும் ஒவ்வொருவருக்குமான கற்றலாக ஆக்கப்படவில்லை.) ஆசிரியர் அறிவைத் தருபவராகக் கருதப்படுகிறார். இக்கருத்து ஆசிரியர் செய்திகளை அளிப்பவர் மற்றும் குழந்தைகள் கற்பதற்கான அனுபவங்களை அளிப்பதற்காக ஏற்பாடு செய்பவர் என்ற செயல்பாட்டோடு குழப்பப்படுகிறது. குழந்தைகள் ஆசிரியர்களோடும், சம வயதினரோடும், மூத்தவர்களோடும் கலந்துரையாடுவது கற்றல் வாய்ப்புக்களைச் செழுமையுறச் செய்கிறது. பள்ளி பலவிதமான சமூகப் பொருளாதாரப் பின்னனியுடைய மாணவர்களைச் சேர்க்கும்போது, அவர்களிடையே நடைபெறும் கலந்துரையாடல் மூலம், கற்றல் மேலும் செழுமையடைகிறது.

தொடக்கப் பள்ளிகளில் சில ஆண்டுகளாக, குழுவாக வேலை செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. நடுநிலை மற்றும் உயர்நிலைப் பள்ளிகளில் செயல்திட்டங்கள் அல்லது செயல்பாட்டு நடவடிக்கைகள் மூலம் குழுவாகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பளிக்கலாம். இதுபோன்ற குழுவாகக் கற்றலையும் மதிப்பிட வழிமுறைகள் உள்ளன. பல வயதினர் கலந்துள்ள குழுவில் பணியாற்றும்போது சமூக மதிப்புகளைக் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்புகள் உள்ளன. குழுக்கற்றலில் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் தன்மை கிடைப்பதுடன் கலை மற்றும் கைத்தொழிலையும் கற்றுக்கொள்ள முடியும். கலைத்திட்டத்தை வலுவாகத் திட்டமிடுவதின் மூலம் பலதர நிலைகளில் உள்ள பள்ளிகளில் பல வயது குழுவினருக்கும் ஒரே மாதிரியான செயல்பாடுகளை அளிப்பதற்கு வாய்ப்புள்ள வலுவான கலைத் திட்டத்தையும் போதனா முறையையும் உருவாக்க முடியும்.

## 5. கற்றல் அனுபவத்தை வடிவமைத்தல்

கற்றல் தன்மை மீதும், அதன்மீது கற்பவருக்குமுள்ள மதிப்பின் மீதும் கற்றல் பணியின் தரம் செல்வாக்கு செலுத்துகிறது. இயந்திரத்தனமாக அல்லது மீண்டும் மீண்டும் செய்யப்படும் பணிகளான பாடநூலில் இருந்து குறிப்பிடுவது, கேள்விகள் எழுப்ப வாய்ப்பளிக்காமல் திருத்துவதற்கு ஆசிரியரை முழுமையாகச் சார்ந்திருப்பது, மாணவர்கள் கீழ்படிய வேண்டும் என எதிர்பார்ப்பது ஆகியவை மிக எளிதான ஆனால், மிகச்சிக்கலான செயல்களாகும்.

## 6. கற்றுக்கொண்டவற்றின் மெய்ப்பொருள் காண்பதுதான் உண்மையான அறிவு (Learning to learn) கற்க கற்றுக் கொள்ளுங்கள்

வகுப்பறையில் குழந்தைகள் சுதந்திரமாகவும் சுயமாகவும் கற்கவும் தொடர்ந்து கற்றலில் ஈடுபடவும் ஊக்குவிக்கவேண்டும். குழந்தைகள் கற்றவற்றை மேலும் மேலும் சிந்தித்து முன்னேற ஆசிரியர்கள் உதவவேண்டும். குழந்தைகள் ஆசிரியர் மற்றும் பிற குழந்தைகளுடன் கற்றவற்றைப் பற்றி உரையாடவும் ஐயங்களைத் தெளிவுபடுத்திக் கொள்ளவும் வகுப்பறைக் கற்றல் உதவவேண்டும்.

குழந்தைகளுக்கு பாடக் கருத்துகளுக்குதவும் அனுபவங்களை தந்து அவர்களின் விவாதித்தறியும் துணிவினை மேம்படுத்தவேண்டும். குழந்தைகள் தாங்களாகவே எளிதில்

பதிலளிக்கக்கூடிய வினாக்களை ஆசிரியர்கள் கேட்கவேண்டும். குழந்தைகள் சுயமாகச் சிந்திக்கவும் விடையளிக்கவும் போதிய அவகாசங்கள் அளிக்கவேண்டும்.

எடுத்துக்காட்டாக பறவையின் பறக்கும் தன்மைக்கு இறக்கைகள் பயன்படுவதைக் கற்ற மனிதன் தானும் இறக்கைகள் போன்ற தகவமைப்புகளைக் கட்டிக்கொண்டு பறக்க முயன்று தோல்வியுற்றான். மேலும் பறவையின் இறக்கைகளுக்குள் மறைந்துள்ள தன்மையினை கற்று அதன் ஒவ்வொரு இறக்கையும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது என்றும் ஒன்று பறப்பதற்கும் மற்றொன்று மேலும் கீழும் இறங்குவதற்கும் பயன்படுகிறது என்பதை அறிந்தான். உடனே விமானம் ஒன்று தயாரித்து அதற்கு இருபுறமும் இறக்கைகள் அமைத்தான். ஒவ்வொரு இறக்கைக்கும் மேலும் கீழும் மடியுமாறு இயங்கக்கூடிய தகடுகளைப் பொருத்தி வெற்றிகரமாக வானில் பறக்க வைத்துக் காட்டினான்.

அவனது கற்றல் அதனுடன் நின்றுவிடவில்லை. மேலும் கற்க தொடங்கிய மனிதன் காற்று வெற்றிடத்தில் அதிவேகத்தில் புகும் தன்மையுடையது என்பதைக் கற்றான். இதை ஆகாயவிமானத்தில் பயன்படுத்தி அதிவேக ஜெட் விமானத்தை கண்டுபிடித்தான். அத்துடன் அவன் கற்றல் நின்றுவிடவில்லை. அணுவிசையையின் தன்மையைக் கற்றான். இதனை ஆகாயவிமானத்தில் பயன்படுத்தி அதிக சக்தி வாய்ந்த வெற்றிடத்தை கன நேரத்தில் உருவாக்கி மின்னல் வேகத்தில் பறக்கும் அணுவிசையில் இயங்கும் ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தான். இத்துடன் இந்த கற்றல் முடிந்துவிடுவதில்லை. கற்றவற்றை மேலும் மேலும் கற்க புதுமைகள் உருவாகிக்கொண்டே செல்கிறது. கற்றலுக்கு முடிவேயில்லை என்பதுதான் உண்மை.

மனிதன் சில கேள்விகளை மனப்பாடம் செய்து தேர்வெழுதி வெற்றிபெற்றால் போதும் என்று நினைத்திருந்தால் ஆகாய விமானம் என்ற ஒன்று கண்டுபிடிக்க முடியாமல் போயிருக்கும். ஒவ்வொரு புதிய கண்டுபிடிப்பும் பழைய கண்டுபிடிப்பினுள் பொதிந்துள்ள மேலும் பல உண்மைகளை கற்றதினால் விளைந்ததாகும். ஆசிரியர்களே! பள்ளி மாணாக்கர்களை கற்றவற்றை மேலும் கற்க உதவுங்கள். இன்றையக் குழந்தைகள் தாவரங்களினுள் பொதிந்துள்ள தன்மைகளை அறிந்து சூரிய ஒளியிலிருந்து தாவரங்களைப் போன்று காய்கள் கனிகள் தயாரிக்கும் தகவுகளையுடைய இயந்திரங்களை கண்டுபிடிக்க வாய்ப்புள்ளது.

## 7. கற்பிக்கப்படும் பாடத்தைவிட கற்போரின் மீது கவனம் செலுத்துதல்

கற்பிக்கப்படும் பாடம் முழுமையாக கற்போரை சென்று அடைய வேண்டுமாயின் அவர்கள் மீது தங்கள் கவனத்தை செலுத்துவது ஆசிரியரின் தலையாய கடமையாகும். இதற்கு ஆசிாயரின் நெகிழ்வுத்தன்மையும், படைப்பாற்றலும் இன்றியமையாததாகிறது. ஆசிரியர்கள் மாணவர்களிடமிருந்து வெளிப்படும் பலவிதமான பதில்களை பொறுமையுடன் ஏற்று மதிப்பளிக்க வேண்டும். ஒரே விதமான பதில்கள் மனப்பாடத்தின் பிரதிபலிப்பாகும். பலவிதமான புரிதல்கள் புரிதலின் பிரதிபலிப்பாகும். அளிக்கப்ட்ட பதிலின்மீது பல வினாக்களை எழுப்பி ஊக்குவிப்பதும் கற்றல் முறையில் ஒரு சிறந்த வாழிமுறையாகும்.

கற்பிக்கப்படும் பாடத்தை விட கற்போரின் மீது கவனம் செலுத்தும் செயல்பாடுகள் ஒவ்வொரு குழந்தைகள் மீதும் தனிக்கவனம் செலுத்த ஆசிரியருக்கு வாய்ப்பளிக்கிறது. மேலும், குழந்தைகளின் விருப்ப வேறுபாடுகளுக்கேற்பவும் மாற்றுப் பணிகளைத் தெரிவு செய்ய உதவுகிறது. இதில் மூத்த

மாணவர்கள் வழிகாட்டுவதற்கு இடம் இருப்பதால் வகுப்பறை நடவடிக்கை எளிதாகும். குழந்தைகளின் சிறப்புத்தேவைகளுக்கும், ஆசிரியர் கவனம் செலுத்த முடியும்.

அனுபவம் பெறும் செயல்பாடுகளை உற்றுநோக்குதல்.

உதாரணத்திற்கு இயற்கைச் சூழலில் விதை முளைக்கும் படிநிலைகள், பால் சேகரிப்பு, பதப்படுத்துதலில் உள்ள படிநிலைகள், பால் பொருள் தயாரிப்பு வகைகள் போன்றவை.

சுற்றி நடப்பவற்றை ஒரு குறு நாடகமாக உருவாக்கி நடித்துக் காட்டக் கூறல்.

பால் வேறுபாடு, குடும்பத்தில் நடக்கும் நிகழ்ச்சிகள் குறித்து மாணவர்களிடையே விவாதிக்கத் தூண்டுதல்.

உருளை, சகடை போன்றவற்றைப் பயன்படுத்தி கனமான பொருட்களை எப்படி நகர்த்துவது என முயற்சிக்கக் கூறலாம்.

அனுபவப் பயிற்சிக்குப் பின் விவாதக் கூட்டங்களுக்கு ஆசிரியர் ஏற்பாடு செய்ய வேண்டும். அதில் அனுபவங்களை எழுதுவது, படமாக வரைவது அனுபவங்களை பகிர்ந்து கொள்வது போன்ற பயிற்சிகளும் இடம்பெற வேண்டும். இப்பயிற்சியில் எழும் வினாக்கள், அவற்றிற்கான விடைகளையும் ஆசிரியர் மாணவர்களோடு இணைந்து உருவாக்கலாம்.

பெற்ற அனுபவங்களை ஆசிரியர் பாடத்தோடு தொடர்புபடுத்தி, துணை நூல்களையும் குறிப்பிட்டு அனுபவங்களை மேலும் ஆழப்படுத்தலாம்.

அனுபவம் பெறும் நடவடிக்கைகள் மூலம் பெற்ற அனுபவங்கள் பின்னர் பள்ளி வாழ்வில் எந்த நிலைக்கும் பயனுடையதாகவே அமையும். நாட்கள் செல்லச் செல்ல பெற்ற அனுபவத்தில் உள்ள கடினத் தன்மை மேலும் தெளிவாகும். அனுபவங்களைப் பெற மொழி ஒரு திறவுகோலாகும். எனவே, அனுபவங்களின் தன்மைக்கும் மொழித்திறன் வளர்ச்சியின் நிலைக்கும் முறையான ஒருங்கிணைப்பு இருக்க வேண்டும்.

ஒவ்வொரு குழந்தையும் கற்றுக்கொள்வதற்கு இன்னும் போதுமான கவனம் ஆசிரியர்களால் செலுத்தப்பட வேண்டும். சிறந்த மாணவன் அல்லது பிரச்சினைக்கு உரியவன் மட்டுமே கவனிக்கப்படுகிறார்கள். ஆசிரியர்கள் ஒவ்வொரு மாணவனையும் தனித்தனியாகக் கவனிக்கும் கவனிப்பால் எல்லாக் குழந்தைகளும் பயன்பெற முடியும்.

ஒரு பாடம் அல்லது ஒரு அலகை வகுப்பறைக்குத் திட்டமிடும்போது, சிறப்புத் தேவைகள் உள்ளன குழந்தைகள், கற்பதில் சிரமம் உள்ளக் குழந்தைகள் ஆகியோருக்கு செயல்பாடுகள் நடந்து கொண்டிருக்கும்போது எவ்வாறு உதவலாம் என்பதையும் ஆசிரியர் திட்டமிட வேண்டும். குழந்தைகளால் எது முடியும் என்பதை அறிந்து அதற்கேற்ப உதவும் செயல்பாடுகள் உருவாக்கப்பட வேண்டும்.

பாடங்களை எவ்வாறு திட்டமிட வேண்டும் என ஆசிரியர்கள் புரிந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆசிரியர்கள் எதைச் சொன்னார்களோ அதைத் திருப்பிச் சொல்பவர்களாக மாணவர்கள் இல்லாமல் எதைக் கற்றுக் கொண்டார்களோ அதைச் செயல்படுத்திப் பார்ப்பவர்களாகவும் சவால்களைப் பற்றிச் சிந்திப்பவர்களாகவும் மாறும் வகையில் ஆசிரியர்கள் பாடங்களைத் திட்டமிட வேண்டும். ஆசிரியர்கள் முதலில் செயல்பாட்டுக் கல்விக்கான பண்பாட்டை வகுப்பறைகளில் உருவாக்க வேண்டும். பின்னர் அதற்கான இடம், பொருள்களைப் பயன்படுத்துவது குறித்த விதிகளை உருவாக்கலாம்.

பல வகுப்புகள், பல தரம் அல்லது பல வயதுடைய குழந்தைகள் குழுவாக்கப்பட்டுள்ள வகுப்பறையில், ஒவ்வொருவருக்கும், சிறு குழுவிற்கும், மொத்தக் குழுவினருக்குமான கற்பித்தல் வெற்றிபெற வேண்டுமெனில் பொருத்தமான கற்பிக்கும் பொருட்கள் மற்றும் கருத்துக்களுடன் திட்டமிட வேண்டும். பல வகுப்புகளுக்கான ஒரே பாடநூல் அடிப்படையில் உருவாக்கப்பட்ட பாடதிட்டத்திற்குப் பதிலாக, கற்போரின் தரத்திற்கேற்ப பயிற்சியளிக்கும் முறையை ஆசிரியர்கள் முன்கூட்டியே திட்டமிட வேண்டும்.

ஆசிரியர்களின் வகுப்பறை நடைமுறைகள், அவர்கள் பயன்படுத்தும் பொருள்கள், மதிப்பீடு செய்வதற்குப் பயன்படுத்தும் நுட்பங்கள் ஆகியவை ஒவ்வொன்றும் உள்ளார்ந்த நிறைவு பெற்றதாகவும் இருக்க வேண்டும்.

## 8. அறிதலும், புரிதலும்

'சிறுவர்களுக்கு எதைப் போதிக்க வேண்டும்?' என்று கேள்வி, 'கல்வியின் மதிப்புமிக்க நோக்கங்கள் யாவை?' எனும் ஆழமான கேள்வியிலிருந்து வருகிறது. கல்வியின் நோக்கம் ஒன்றல்ல; அதற்குச் சுருக்கமாகவும், சமநிலையோடும் கூடிய ஒரு தொகுப்பான நோக்கங்கள் அதற்கு உண்டு. இந்தப் பகுதி அறிவின் தன்மை மற்றும் புரிதலின் வடிவம் குறித்தும் கலைத்திட்டத் தேர்வு மற்றும் உள்ளடக்க அணுகுமுறை ஆகியவற்றைத் தேவையான கூறுகள் குறித்தும் விவரிக்கின்றன.

அறிவைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் அனுபவங்கள் மொழி மூலம் கிடைக்கின்றன. இந்த அனுபவங்கள் நாம் வாழும் உலகை புரிந்துகொள்ள உதவுகின்றன. மனித இனம் வளர்ச்சிப் போக்கில் காலங்காலமாக அறிவுச் செல்வங்களை உருவாக்கிக் கொண்டே வருகின்றது. சிந்திக்கும் வழிமுறைகள், மனவுணர்வுகள், பொருள்களை உருவாக்குதல் போன்ற அனுபவத் தொகுப்புகள் அறிவை மேலும் கட்டுவதற்கு உதவுகின்றன. ஒவ்வொரு குழந்தையும் பழைய அனுபவங்களிலிருந்து தனக்கென ஓர் அறிவை மறு உருவாக்கம் செய்துகொள்ள வேண்டும். அதனால்தான் கற்றலில் பங்கேற்பும், வேலையும் முக்கியத்துவம் பெறுகிறது. பெறப்பட்ட அறிவை உற்பத்திப் பொருளாக மட்டும் பார்க்காமல், அது எப்படி உற்பத்தி செய்யப்பட்டது. அதற்கான அமைப்பு எவ்வாறு உள்ளது. யார் அதை எளிதில் அணுகிப் பெற முடியும். அது எதற்காகப் பயன்படுகிறது என்பது போன்ற கோட்பாடுகளும் விரிந்த நிலையில் அறிவைப் பெறுவதில் அடங்கியுள்ளது. கற்போர் என்ன கற்றோம் என்பதைப் புரிந்துகொண்டு அறிவை மறு உருவாக்கம் செய்வதற்கு கலைத்திட்டத்தில் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

அறிவு என்பது செய்து முடிக்கப்பட்ட பொருளாகவும், குழந்தைகளின் மூளைக்கு மாற்ற வேண்டிய பொருளாகவும், மற்றொரு வகையில் புரிந்துகொள்ளப்படுகிறது. இந்த முறையில் கற்போர் பெறுபவராகக் கருதப்படுகிறார். ஆனால், முன்னர் சொன்ன முறையில் கற்போர் உலகோடு உறவாடி, உணர்ந்து, பிரதிபலித்து, செயல்பட்டு, பங்குபெறுகிறார்.

### 1. பேசும் படம்

ஒரு குடும்பத்தில் உள்ள பல்வேறு உறுப்பினர்கள் வித்தியாசமான வேலைகளைச் செய்து கொண்டிருக்குமாறு உள்ள ஒரு படத்தை வகுப்பில் காட்டுங்கள். வித்தியாசம் எவ்வாறு இருக்க வேண்டுமென்றால் அதில் அப்பா சமைக்க வேண்டும். அம்மா புதிய மின் விளக்கைப் பொருத்திக் கொண்டும், மகள் பள்ளியிலிருந்து சைக்கிளில் வந்துகொண்டும், மகன் மாட்டில் பால் கறப்பது போலவும், தங்கை மாமரத்தில் ஏறிக்கொண்டும், பாட்டி வீட்டுக் கணக்குகளை பார்த்துக் கொண்டும் இருப்பதுபோல் அப்படம் இருக்க வேண்டும்.

குழந்தைகளிடம் அப்படத்தைப் பற்றிப் பேசக் கூறுங்கள். என்ன வேலைகளை அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள்?

அதில் யாரும் எந்த வேலையையாவது செய்யக் கூடாது என நினைக்கிறார்களா? ஏன்?

உழைப்பின் மதிப்பு, பால் சமத்துவம் குறித்த விவாதங்களில் ஈடுபடுத்துங்கள்.

ஒவ்வொருவரும் சுயசார்போடு முழுமையாக இருக்க வேண்டிய அவசியத்தை உணர்த்துங்கள்.

நல்ல வேலை, மோசமான வேலை, சாதி அடிப்படையிலான வேலை, மதிப்புக் கூட்டப்பட்ட வேலை போன்ற படங்களை உருவாக்கி விவாதிக்கலாம்.

கலைத்திட்டம் என்பது தெரிவு செய்யப்பட்ட கல்வி நோக்கங்களை அடைவதற்கான வழிமுறைகளாகும். மனிதத் திறமைகள் மிகவும் விரிந்து பரந்தவை. கல்வி மூலம் திறமைகள் அனைத்தையும் வளர்ச்சி பெறச் செய்ய இயலாது. எனவே, தேவையான, போதுமான, நமது குறிக்கோள்களுடன் தொடர்புடையவைகளில் மட்டும் கவனம் செலுத்த வேண்டும். மேலும், வளர்வதற்கு வாய்ப்பளிக்கும் வளங்கள் குறித்த போதனா முறை அறிவு நமக்கு மிக மிக அவசியம்.

## 2. அடிப்படைத் திறமைகள்

குழந்தைகளின் அடிப்படைத் திறமைகளே, புரிந்துகொள்ளுதலுக்கும், மதிப்புகள் மற்றும் திறன்களின் வளர்ச்சிக்கும் அடிப்படையாக உள்ளன.

### அ. மொழி

மொழி மற்றும் பிற வெளிப்பாடுகள் பொருள் உணர்த்தவும் மற்றவர்களுடன் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும் உதவுகின்றன. குழந்தைகளின் மொழி வளர்ச்சி புரிதலுக்கான வளர்ச்சியோடு இணைந்தது. வாய்மொழி மட்டுமல்லாது, எழுத்துக்கள், எழுத்துக்கள் அற்ற மொழி, மொழிக் குறியீடுகள், பார்வையற்றோருக்கான (பிரைல்) எழுத்துக்கள், நிகழ்த்துக் கலைகள் ஆகியவையும் பொருள் உணர்த்தவும், கருத்து வெளிப்பாட்டிற்கும் பயன்படுகின்றன.

### ஆ. உறவுகளை உருவாக்குவதும், நிலைநிறுத்துவதும்

சமூக உலகோடும், இயற்கை உலகோடும் தன் உணர்வோடும், மதிப்புக்களோடும் உறவுகளை உருவாக்கி அதை நிலை பெறச் செய்ய வேண்டும். இது வாழ்வைப் பொருள் உள்ளதாக்கும். நன்னெறிகளுக்கும், நல்லொழுக்கங்களுக்கும் இதுவே அடிப்படை.

### இ. பணியாற்றுவதற்கும், செயல்படுத்துவதற்குமான திறமைகள்

இது சிந்தனைக்கும், தன் விருப்பத்திற்கும் ஏற்ப உடல் அசைவுகளை ஒருங்கிணைப்பது குறித்த திறமையாகும். கருவிகள் மற்றும் தொழில்நுட்பங்களைக் கையாண்டு பொருள்களை ஒருங்கிணைத்தல், அனுபவங்களை ஒருங்கிணைத்தல், கருத்தை வெளிபடுத்துதல், விரிவாக்குதல், குறிக்கோளை அடையத் தூண்டுதல் ஆகியவைகளும் அடங்கும்.

## 3. வாய்மொழி இலக்கியங்கள் மற்றும் கைத்தொழில் மரபுகள்

வாய்மொழி இலக்கியங்களும், மரபு சார்ந்த கைத்தொழில்களும் தனித்தன்மையுடைய அறிவுச் சொத்துக்களாகும். வித்தியாசமான, அபூர்வமான இந்த அறிவுச் சொத்துக்கள் நமது சமூகத்தில் பெண்கள் உட்பட பல்வேறு குழுக்களாலும், சிறு சமூகங்களாலும், பழங்குடியினராலும், ஒதுக்கப்பட்டவர்களாலும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றை எல்லாக் குழந்தைகளுக்குமான

கலைத்திட்டத்தில் சேர்ப்பதன் மூலம் புரிதலுக்கான சாளரத்தை திறந்துவிடலாம்; கருத்துகளை விதைக்கலாம். குழந்தைகள் அத்திறமைகளையும், திறன்களையும் பெறுவதின் மூலம் தாம் சொந்த வாழ்வையும், சமூகத்தையும் உயர்த்த முடியும். கற்றவர்களுக்கு வாய்ப்பளிக்கும் பள்ளி, வாய்மொழி இலக்கியங்களைத் தொடர்ந்து புறக்கணிக்க இயலாது. எல்லா வகையான உள்ளூர் இலக்கியங்களும் பாதுகாக்கப்படவேண்டும்.

தச்சுத்தொழில் போன்ற கைத்தொழிலில் பலவிதத் திறமைகள் அடங்கியுள்ளன. மரங்களைத் தெரிவு செய்தல், செய்ய வேண்டிய பொருளின் வடிவத்தை கற்பனை செய்து பார்த்தல், ஆரம்பத்திலிருந்து முடிவு வரை பணி ஒழுங்கைக் கற்பனை வளத்தோடு திட்டமிடல், உருவாக்கும் கருவிகளைத் தெரிவு செய்தல், பயன்படுத்தும் பொருளின் தரத்தைப் புரிந்துகொள்ளுதல் போன்ற பல அறிவு நுட்பங்கள் உள்ளன. பொருளின் விலை, கிடைக்கும் இடங்கள் ஆகியவையும் தெரிந்திருக்க வேண்டும். கைவினை கலைத்திறனுடையவர்களின் கற்பனை வளம் மகத்தானது.

கபடி போன்ற விளையாட்டை விளையாடுவதற்குக்கூட, உடல் திறன், தாக்கு பிடிக்கும் தன்மை, விளையாட்டு விதிகளைப் பற்றிய அறிவு, உடல் வலு, தனது சொந்தத் திறமை பற்றிய அறிவு, திட்டமிடும் திறன், குழுவை ஒருங்கிணைக்கும் பண்பு, அடுத்த குழுவை அணுகும் முறை, வெற்றி பெறுவதற்கான தந்திரங்கள் ஆகியவை தெரிந்திருக்க வேண்டும்.

### 4. வழக்கில் உள்ள அறிவு

காலங்காலமாக வரிசையாக நடைபெற்று வரும் மனித நடவடிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் ஆகியவையே சமூக வாழ்க்கையையும், பண்பாட்டையும் தொடர்ந்து நிலைத்திருக்கச் செய்கின்றன. நெசவு, தச்சு, மண்பாண்டம் செய்தல் போன்ற கைத்தொழில்களும், வேளாண்மை, வியாபாரம் போன்ற தொழில்களும், நிகழ்த்து கலைகள், பார்க்கும் கலைகள் போன்ற மனித செயல்பாடுகள் அறிவின் மதிப்புமிக்க வடிவங்களாகும். அறிவின் இந்த வடிவங்கள் செயல்முறைத் தன்மை கொண்டவை. இவை குறித்து வாய்விட்டுச் சொல்லப்படுவதில்லை; அல்லது ஒரு பகுதி மட்டும் பேசப்படுகிறது.

இத்தொழில்களில் ஈடுபடும் பலர் தங்கள் திறமைகளை வளர்த்துக் கொள்கின்றனர். இதில் பல திறமைகள் உள்ளடங்கியுள்ளன. கற்பனை வளம், அழகுணர்ச்சி, பயன்பாடு, நினைத்துப் பார்த்தல், பொருள்களோடு பணியாற்றும் திறன், சொந்தத் திறமைகள், கூட்டாகப் பணியாற்றுதல், தொடர்ந்து செயலாற்றும் மனப்பாங்கு, கட்டுப்பாடு ஆகியவையும் அடங்கும், பார்வையாளர் முன் நிகழ்த்த வேண்டிய நாடகமாய் இருந்தாலும், உற்பத்திப் பொருளாக இருந்தாலும் இதுதான் உண்மை.

இந்த நடவடிக்கைகளைத் திறமைகளாக விவரிப்பது உண்மையான ஈடுபாட்டையோ, போதிய புரிதலையோ உருவாக்காது. ஏற்றுக்கொள்ளப்பட்ட பிற கல்வித்துறைகளைப் போல் கைத்தொழிலும், வணிகத்திலும் ஈடுபட்டுவரும் சிறந்த வல்லுனர் உள்ளனர். இந்த அறிவும் அடுத்த தலைமுறையினருக்கு அளிக்கவேண்டும். எனவே, இவை ஒவ்வொன்றும் செயல்முறை அறிவைத் தரும் கல்வித்துறைகளாக மாறவேண்டும். இந்திய பாரம்பரியத்தின் இத்தகைய வடிவங்கள் விரிவானவை, வேறுபட்டவை, மதிப்புமிக்கவை. இத்தகைய உற்பத்தித் திறன்கள் பொருளாதாரத்தின் மதிப்பிடமுடியாத பகுதியாக மாற வேண்டும்.

செயல்முறைத் துறைகளான இவற்றைப் புரிந்துகொள்ள கூடுதல் கலந்துரையாடல்களும், ஆய்வும் தேவை, பாரம்பரியத் தொழில்களை எவ்வாறு கற்றுக்கொள்கிறார்கள். எவ்வாறு செயல்படுத்துகிறார்கள், கற்றலை எவ்வாறு முறைப்படுத்துகிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள

வேண்டும். இத்தொழில்களின் மூலம், பிற பாடங்களையும் கற்கும் வாய்ப்பு உள்ளதால் இவற்றின் கலைத்திட்ட முக்கியத்துவத்தையும் தெரிந்துகொள்ள வேண்டிய தேவை உள்ளது. மனித அறிவின் இந்த முக்கியப் பகுதி பள்ளிக் கலைத்திட்டத்தில் போதிய அளவில் இடம் பெற வேண்டும்.

## 9. புரிதலின் வடிவங்கள்

அனைத்து கருத்துக்களின் வகையாலும், அதன் பொருளாலும் ஒரு செய்தியைத் தீர்மானிப்பதையும், அதனைச் சீர்தூக்கிப் பார்ப்பதையும் அடிப்படையாகக் கொண்டு அறிவு வகைப்படுத்தப்படுகிறது. அறிவின் ஒவ்வொரு கூறும் விமர்சனப் பாங்கினையும், படைப்பாற்றலையும், எதையும் அலசி ஆராயும் தன்மையினையும் கொண்டதாகும்.

கணிதம், கோட்பாடுகள், எண்கள், வர்க்கமூலம், தொகைக்கணிதம் மற்றும் சமன்பாடுகள் போன்ற உறுப்புக்களைக் கொண்டது. இதில் சீர்தூக்கிப் பார்க்கும் முறைகளும், படிப்படியான விளக்கமுறைகளும் வடிவமைக்கப்படுகிறது. மதிப்பீட்டு முறையானது கணிதத்தில் அனுபவத்தால் அறியக்கூடியது அல்ல. மேலும் சோதனைகளையோ அல்லது உலக நடவகைக்கைகளை ஆழ்ந்து நோக்கியோ அமைந்தது அல்ல. ஆனால், விளக்கங்களையும், கட்டமைப்போடு கூடிய தேற்றங்களையும் உடையது.

இயற்கை அறிவியல் கணிதத்தைப் போலவே தனக்கென்ற கோட்பாடுகளைக் கொண்டு இயற்கை உலகை விளக்க முற்படுகிறது. அறிவியல் கோட்பாடுகள் அணுவிசை பற்றியோ, காந்த விசை பற்றியோ, செல்களைப் பற்றியோ, நரம்புகள் பற்றியோ அமைகிறது. அறிவியல் பூர்வமான ஆய்வானது கூர்ந்து கவனித்தலையும், கோட்பாடுகளையும், முன் வரைவுகளையும் மதிப்பீடு செய்யும் ஆய்வுகளையும் அடிப்படையாகக் கொண்டது. அதன் கூறுகள் உபகரணங்கள் மற்றும் சில கட்டுபாடுகளுக்கு உள்ளடக்கியும் காணப்படுகிறது. மாதிரிபடுத்துதலோ, தரப்படுத்துதலோ கணிதத்தை உள்ளடக்கிக் காணப்பட்டாலும் அவை கணிதத்தைப்போல் துல்லியமானது அல்ல. உண்மை நிலைக்கு உள்ள உறவை வர்ணிப்பது போல அது உள்ளது. சமூக அறிவியல் மற்றும் கலைப் பாடங்களுக்கென்று தனியாக கோட்பாடுகள், கொள்கைகள் உண்டு. உதாரணமாக, குழு, பண்பாடு, நவீனமாதல், சுய அடையாளம், அரசியல் போன்றவையாகும். சமூக அறிவியல், சமூக உலகத்தைப் பற்றிய எதிர்பார்புகளை வெளியிடுதல், அதனை விளக்குதல், சமூகத்தை விளக்குதல் ஆகியவற்றைச் செய்கிறது. சமூக அறிவியல் கருதுகோள் மானிட சமூக வாழ்க்கையையும், அதன் மீதான உற்று நோக்கல்களையும் அதன் மீதான மதிப்பீட்டையும் வெளிப்படுத்துகிறது.

அறிவு உருவாக்கத்தில், இயற்கை மற்றும் சமூக அறிவியல் ஒரே மாதிரியாக செயல்படுகிறது. இரண்டும் கலைத்திட்ட வடிவாக்கத்தில் பெரும் பங்கு வகிக்கிறது. வரலாறு சமூக அறிவியல், கணிதம் மற்றும் அறிவியலிலிருந்து வேறுபட்டது. வரலாறு என்பது தனிநபர் செயல்பாடுகளைக் கூறுவது. மனித செயல்பாடுகளுக்கு தரும் முக்கியத்துவமானது அதன் பின்னணியில் உள்ள கோட்பாடுகளுக்கும் கிடைக்கிறது. வரலாற்று உண்மைகள் வர்ணனையில் இருந்து பிரிக்க முடியாத எழுதப்பட்ட உண்மைகள் ஆகும்.

கலையும், அழகியலும், ஒழுங்கு, நல்லிணக்கம், வெளிப்பாடு, சமன்செய்தல் போன்ற பல பொதுவான வார்த்தைகளைக் கொண்டு உள்ளது. ஆனால், அவை பயன்பாட்டிலும் உணர்விலும் புதிய அனுபவங்களைத் தருகின்றது. கலையை உண்மையினை அடிப்படையாகக் கொண்டு அளவிடமுடியாது. தனி மனித மதிப்பீட்டுக்கு உள்ளானாலும், மக்களின் கலைப்பூர்வமான கற்பனை மற்றும் படைப்பாற்றலை வளர்த்து, நல்லது கெட்டது அறிய உதவுகின்றது.

நீதி நூல், மனித மதிப்பீடு, சட்டங்கள், கோட்பாடுகள், நடத்தைகள் ஆகியவற்றை உள்ளடக்கியது. தேர்வுக்கும், செயலுக்கும் இடையேயான உறவு, புரிதலின் வடிவங்கள் அல்லது படிநிலைகள் ஆகியவற்றை நீதி நூல்கள் கூறுகின்றன. அது ஒருவரின் செயல்பாட்டில் எது நல்லது, கெட்டது என அறிய உதவுவது ஆகும். மேலும், நீதியானது காரணங்கள், தனிநபர் சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றை உள்ளடக்கிய கோட்பாடுகளைக் கொண்டது.

தத்துவம் பகுத்தாய்ந்து உண்மை அறிதலையும் மதிப்பீடு செய்தலையும் மனித வாழ்க்கையின் அடிப்படையினை அறிந்துகொள்ளவும் உதவுகிறது. ஆனால், அதுவே எல்லாவற்றுக்கும் மேலாக உயரிய சிந்தனையைத் தருகின்றது.

மனித வரலாற்றின் போக்கானது மனித இன வளர்ச்சியை அடிப்படையாக அமைத்துக் கொண்டுள்ளது. ஆனால், மனிதப் பண்பாட்டினை மையமாகக் கொண்டது. கற்பனையும் விமர்சன சிந்தனையும் புரிதல் மற்றும் காரண காரிய அறிவை அடிப்படையாகக் கொண்டவை.

ஒவ்வொரு அறிவும், கோட்பாடுகளையும், புதிய வார்த்தைகளையும், முறைகளையும், விளக்கங்களையும் கொண்டது. ஒவ்வொன்றும் உலகை வெளிக்காட்டும் கண்ணாடி போன்றது. அது உலகத்தைப் புரிந்து கொள்ளவும் அதனோடு செயல்படவும் உதவுகின்றது. இவ்வாறு செய்யும் பகுதியில் மேம்பாடு அடைகின்றது. இவை அதன் வடிவத்திலும், அதன் வெளியீடுகளிலும் மாற்றங்கள் அடைந்துள்ளது. உற்று நோக்குதல், செய்முறை செய்தல், பிரச்சனைகளை ஆய்தல் ஆகியவற்றை உள்ளடக்கியும், படைப்பாற்றலையும், திறனோடு சேர்ந்த அறிவையும், அனைத்தினையும் அறிந்து இருக்கவேண்டும்.

திறன்கள், நடைமுறைகள், புரிதிறன்கள் ஆகியவற்றைப் பள்ளிக் கலைத்திட்டத்தின் மூலம் வளர்த்தெடுக்க விரும்புகிறோம். இத்திறன்களில் சில வரலாறு, கணிதம், இயற்கை அறிவியல், காட்சிக் கலைகள் எனப் பாடங்களாக உள்ளன. நீதி போன்ற மற்ற பாடங்கள் தனியே இல்லாமல் மற்ற பாடங்களுடன் கலந்துள்ளன. இவற்றைக் கற்பிக்க அடிப்படையான மொழித்திறமை தேவைப்படுகிறது. மேலும், இந்தப் பகுதிகளுக்கு திட்டங்கள், களப்பணிகள் மேற்கொள்ளுதல், திட்டத்தில் ஈடுபடுதல், நூலகங்கள், ஆய்வுக்கூடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்துதல் ஆகிய வாய்ப்புகள் தேவைப்படுகின்றன.

அறிவினைப் பெறும் இந்த அணுகுமுறை உண்மைகளை நோக்கி நகரவும், அவற்றினைப் புரிந்துகொண்டு செயல்படவும் உதவுகின்றன. இந்தியாவில், நாம் பாடம் அடிப்படையிலான கலைத்திட்டம் அமைத்துள்ளோம். இது தேர்வோடு கூடிய பாடப்புத்தகங்கள் வழியாக அறிவினைத் தருவதாக அமைகின்றது. இந்த முறையானது நம் கல்வி அமைப்பில் பெரும் பிரச்சனைகளைத் தருகின்றது. முதலாவதாக தேர்வு அடிப்படையிலான பாடபுத்தகங்கள், கல்வி சார்ந்த, சாராத கலைத்திட்டம் என பகுக்க ஏதுவாகின்றது. இது ஆசிரியர்களுக்கு எதில் கவனம் செலுத்துவது என்ற பிரச்சனையைத் தருகிறது. படைப்பாற்றலையும், மாணவர்களை வளமுடையவர்களாக்கும் பகுதியை நீக்கியும் குழு மனப்பாங்கினையும், நன்னறிவையும் வளர்க்கும் பகுதிகளைத் தவிர்த்தும் கலைத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

இரண்டாவதாக, பாடங்கள் இறுக்கமாக அமைந்துள்ளன. ஆகவே உள் கட்டமைப்போடு ஒட்டி இருப்பதற்குப் பதில் தொடர்பற்று அமைந்து உள்ளன. உலக அறிவுக்கும், பள்ளியில் பெற்ற அறிவிக்கும் வேறுபாடுகளை உருவாக்குவதாகப் பாடங்கள் அமைந்துள்ளன.

மூன்றாவதாக, குழந்தைகள் ஏற்கனவே பெற்ற அறிவின் அடிப்படையில் புதமைகளுடன் சொந்த திறனுடன் அறிவைக் கட்ட வாய்ப்பளிப்பதில்லை. புரிதலும், பிரச்சனைகளைத் தீர்க்கவும்,

தெரிந்துகொள்வதைவிட பாடபுத்தகத்தில் இருந்து செய்திகளை மட்டும் அறியும் விதமாக அமைந்துள்ளது. நினைவில் வைக்க இயலாத அளவிற்கு அதிகமான மனப்பாடச் செய்திகளையும் உள்ளடக்கியுள்ளது.

நான்காவதாக, புதிய பாடங்களை உள்ளடக்கியதாக உள்ளது. புதிய பாடங்கள் சமூகத் தேவையின் அடிப்படையில் அவசியம்தான். ஆனால், அவற்றிற்காக புதிய பாடபுத்தகங்களும், தேர்வு முறைகளையும் காண வேண்டியுள்ளது. எனவே, அவை தேவையாக இருந்தால் நடப்பு பாடங்களில் அவற்றை இணைக்கலாம். கலைத்திட்ட வடிவமைப்பில் பாடங்களின் அளவு அதிகமாகவும், தேவையற்ற பாடங்களை உள்ளடக்கியும் காணப்படுகின்றது.

## 10. அறிவைத் தெரிவு செய்தல்

அறிவின் வரம்பு மேன்மேலும் விரிவடைந்து வருவதால் கலைத்திட்டத்தில் எவ்வெவற்றைச் சேர்க்க வேண்டும் என்பதைத் தெரிவு செய்வதும் அவசியமாகிறது.

### அ. தொடர்பு

பிற்கால வாழ்க்கைக்குப் பயனுடையதாக இருக்கும் என்ற தவறான புரிதலுடன் பொருத்தமில்லாதவற்றைத் தெரிவு செய்யக் கூடாது. குழந்தைகளின் தற்போதைய அறிவுவைக் கட்டுவதற்கு உதவாதச் செய்திகள் எதிர்காலத்திற்காகக் கற்பதற்குப் பங்களிப்புச் செய்யும் என எதிர்பார்க்க முடியாது.

### ஆ. ஆர்வம்

ஆர்வம் ஒரு பயனுள்ள வழி. ஆனால், கார்டூன் படம், விளையாட்டு போன்றவற்றில் குழந்தைகள் ஆர்வம் காட்டுவார்கள் எனக் குறைத்து மதிப்பிடக்கூடாது. மாறாக அவர்கள் ஈடுபடும் பணியில் ஆர்வமுடன் பங்கேற்கச் செய்வதாகவும், அவர்களை முழு ஈடுபாட்டுடன் அப்பணியைச் செய்யத் தூண்டுவதாகவும் இருக்க வேண்டும்.

### இ. பொருள்

பொருள் மிக முக்கியமானது. குழந்தைகள் ஈடுபடும் செயல்பாடு அல்லது பெறும் அறிவு பொருடையதாகவும் பாடத்திட்டத்தில் சேர்க்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

நாளுக்கு நாள் குழந்தைகள் பள்ளிக்குத் தங்களைச் சுற்றியுள்ள உலக அனுபவங்களை பள்ளிக்கு கொண்டு வருகின்றனர். அவை, அவர்கள் மரத்தில் ஏறியது, பழங்கள் சாப்பிட்டது, அவர்கள் பறவைகளைக் கண்டு களித்தது என பலவாகும். எல்லாக் குழந்தைகளும் இயற்கையோடும், இரவு, பகல், காலநிலை, நீர் என அனைத்தோடும் வாழ்கின்றனர். அவர்கள் முதலாம் வகுப்பில் நுழைந்தபோது மொழி அறிவு பெற்றவர்கள் ஆவர். நாம் கல்வி கற்பிக்கும்போது அவர்களின் அனுபவத்தைச் சொல்லச் செய்யவேண்டும். அவர்களை அச்ச உலகத்திலிருந்து இயற்கை சூழலுக்கு கொண்டு வரவேண்டும். இன்று கணினி வழி கற்றல் என்ற நிலையில் அவர்கள் கணினி திரையினை மட்டுமே பார்க்கும்படி நேர்ந்து விடுகின்றது.

ஆசிரியர் உயிருள்ளவை, உயிர் இல்லாதவை என்ற பாடத்தை நடத்துவதற்கு முன் மாணவர்களை வயலுக்கு அழைத்துச் சென்று விட்டு வந்தபின் 10 உயிருள்ளவை, 10 உயிரற்றவைகளைக் கூறுமாறு ஒவ்வொரு மாணவரையும் கேட்டால், ஆச்சரியப்படத்தக்க விடை கிடைக்கும். தமிழகத்தில் உள்ள மகாபலிபுர மணவன் சிப்பி, சிற்பம், மீன் என எழுதியிருப்பான். அதுபோல சதிஸ்கரில் உள்ள தண்டகார்னியாவிற்கு அருகே உள்ள காட்டில் உள்ள குழந்தைகள்

தேன்கூடும், காடு, வலை போன்றவற்றை எழுதியிருப்பார்கள். இவை பாடப்புத்தகத்தில் வெறும் படங்களாக அல்லது வார்த்தைகளாக மட்டும் உள்ளன.

நீர் மாசுபாடு பற்றிய பாடம் இருந்தால் மாணவர்களை நீரைச் சோதனை செய்யச் சொல்லலாம். இந்தச் சோதனைகள் மூலம் சுத்தமான குடிநீர் கிடைக்காவிட்டால் அது உடல்நலத்தை எவ்வாறு பாதிக்கும் என்பன போன்ற பிரச்சனைகளையும் தெளிவுபடுத்தலாம். நிலவு பற்றிய பாடம் இருந்தால் ஆசிரியரால் பகல் வேளையில் நிலவைக் காட்ட இயலாது அல்லவா**?** பறவைகளின் பெயரை மட்டும் கற்பித்தால் அவர்கள் எல்லோருக்கும் அது புதியதாகவே இருக்கும். எட்டாம் வகுப்பு குழந்தை தன் பாடபுத்தகத்தில் உள்ள ஒளிச்சேர்க்கையினை நிஜ உலகத்தோடு இணைத்துப் பார்க்க இயலவில்லை. அவர்களால் பச்சையம் இல்லாத இலைகள் எப்படி தங்கள் உணவை தயாரிக்கின்றன என்று தெரிந்துகொள்ள முடியவில்லை. தன் சுற்றுச்சூழலைப் புரிந்துகொள்ள வைப்பதுடன் அதைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் அளிக்கிறது.

இவ்வாறு தன்னைச் சுற்றியுள்ள இடங்களில் உள்ள இயற்கைப் பொருள்களே, கற்கும் பொருள்களுக்கான வளமாக அமைகின்றது. சுற்றியுள்ள பொருட்கள் இன்றியமையாதது எது எனக் காட்டும் வகுப்பறைப் பாடத்தில் எதைச் சேர்க்க வேண்டும். எதைச் சேர்க்கக்கூடாது என்பதையும் திட்டமிட வேண்டும். குறிப்பாக சமூக அறிவியல் மற்றும் மொழிப்பாடங்களில் அரசியல் அமைப்புச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மதிப்பீடுகளும் சேர்க்கப்பட வேண்டும். பாடத்திட்டத்தில் எது பயனுள்ளது என்பதை ஆசிரியரின் முயற்சி வெளிக்கொணரும். இதற்கு உள்ளூரில் உள்ளதை மட்டுமே பேச வேண்டும் என்பதல்ல. கேரளாவில் வாழும் குழந்தையின் பழக்க வழக்கங்களும், இராஜஸ்தான் பாலைவனங்களில் வாழும் குழந்தைகளின் பழக்க வழக்கங்களும் ஒன்றல்ல. ஆனால், அப்பழக்க வழக்கங்களை ஒருவருக்கு ஒருவர் அறிமுகம் செய்தால் உலக அறிவை அதிகம் பெறுவர். அதிக வெப்பம் உள்ள பகுதியில் வாழ்பவர்கள் குறைந்த ஆடை அணிவதற்குப் பதில் ஏன் அதிக ஆடை அணிகிறார்கள் என்பதை அறிந்து வியப்படைவார்கள். அவர்கள் வெளிச்சூழலில் உள்ள வாழ்க்கையைத் தங்களின் வாழ்க்கைச் சூழலோடு ஒப்பிட்டுப் பார்த்து தெரிந்துகொள்கின்றனர்.

# அலகு 12

## கற்றலும் அறிவும்

செய்முறை

1) குழந்தை கற்றலுக்கான காரணிகள் யாவை? இது குறித்து இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக.

2) குழந்தையின் தன்னம்பிக்கை வளர்வதற்கான காரணிகள் எவை? இதுபற்றி இரண்டு பக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக.

3) கற்பித்தல் கற்றல் செயல்பாட்டில் ஆசிரியர் எல்லா மாணவர்களையும் எவ்வாறு ஒருங்கிணைத்து செயல்பட முடியும்? இது குறித்து இரண்டுபக்க அளவிலான ஒரு குறிப்பு எழுதுக.

## 1. செயல் திறன்மிக்க கற்போர்

நமது நாட்டின் முன்னேற்ற இலக்குகள் அடையப் பெறுவதற்கு இன்றியமையாத சமூக, பொருளாதார பண்பாட்டு மாற்றங்களை தோற்றுவிக்கும் வலுமிக்க கருவியாக கல்வி விளங்க வேண்டும்.

–கோத்தாரி கல்விக் குழு.

ஆசிரியரை மையமாகக் கொண்ட பழைய கல்வி அமைப்பில் மாணவர்களின் இயல்பு, ஆர்வம் வளர்ச்சித் தேவைகள் பெரும்பாலும் புறக்கணிக்கப்பட்டன. மாணவர்கள் செயலற்ற (Passive) நிலையில் ஆசிரியர் கூறும் வாழ்க்கை பயனற்ற, கவர்ச்சியற்ற விபரங்களை மனப்பாடம் செய்யும் நிலைமையே காணப்பட்டது.

ஆனால் தற்கால கல்வி அமைப்பு மாணவரை மையமாக கொண்டுள்ளது. மாணவர்களின் ஆர்வங்கள், விருப்பங்கள், மனப்போக்குகள் உணர்வுகளோடு தொடர்புடையதாகத் திகழ்கிறது. பாடப் பொருளறிவைப் பெறுதல், ஆசிரியர்களின் விளக்கத்தை செயலற்ற நிலையில் கேட்டல், மனப்பாடம் செய்தல் தேர்வுக்காக படித்தல் போன்ற செயல்பாடுகளை முற்றிலும் புறக்கணித்துள்ளது. நவீன கற்றல் – கற்பித்தல் முறையில் மாணவர்களின் விருப்பங்கள், தேவைகள், உரிமைகள் மற்றும் நலன்களுக்கு முக்கியத்துவம் தரப்படுகின்றது. மாணவர்களின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் சமூக சகிப்புத் தன்மைக்கும் ஏற்ற கற்றல் அனுபவங்கள் உள்ளடக்கியுள்ளது. வழங்கப்படும் பல்வகைப்பட்ட கற்றல் அனுபவங்களும், பள்ளிக்கு வெளியே உள்ள வாழ்க்கையோடு தொடர்பு உடையதாகவும் உள்ளது.

நாளைய தேவைகளை சந்திக்க உதவுவதாகவும் புதிய சூழல்களை படைப்பாற்றல் திறனுடன் எதிர் கொள்ளவும் சமூக மதிப்புகளை உயர்த்திக் கொள்ளவும் சமூக உணர்வுடனும், அக்கறையுடனும் செயலாற்றவும் தனது ஆற்றல்களை உச்சகட்ட அளவிற்கு வளர்த்துக் கொள்ளவும், உலகைப் பற்றிய கண்ணோட்டத்தை உருவாக்கிக் கொள்ளவும் வகுப்பறையில் தீவிரமாக பங்கேற்று திறமைகளை வளர்த்துக் கொள்ளவும் தற்கால கல்வி அமைப்பு உதவுகிறது.

மாணவர்களுக்கு வழிகாட்டுவதாக, பயனுள்ளதாக வடிவமைக்கப்பட்டு வகுப்பறையில் செயல்படுத்தப்படுகின்றது. எனவே மாணவர்கள் தாங்களாகவே ஆர்வத்துடன் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளில் பங்கேற்று சூழ்நிலையில் உயர்நிலைப்பட்ட பொருத்தப்பாட்டினைப் பெற்று (superior adjustments to the environment) ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியை பெறுகின்றார்கள்.

சுதந்திரமாக சிந்தித்து ஆக்கபூர்வமாக செயல்படும் திறமை படைத்த மாணவர்கள், தங்களின் ஆக்கத்திறனையும், கற்பனை சக்தியையும் (Creativity and imagination) வளர்க்கும் கேள்விகள் விடுகதைகள், பழமொழிகள், கலந்துரையாடல் பங்கேற்பு நாடகம், கல்வி விளையாட்டுக்கள், போட்டிகள், நாடகங்கள் போன்ற செயல்பாடுகளில் ஆர்வத்துடன் பங்கேற்று, பயன்பெறுவார்கள். ஒரு பிரச்சினையை தீர்க்க பல்வேறு மாற்று வழிகளை சிந்திப்பார்கள்; கேள்வி கேட்க, விசாரிக்க விவாதிக்க, பதிலளிக்க, கருத்துப் பரிமாற்றம் செய்ய, அனுபவங்களைப் பகிர்ந்து கொள்ள, சக மாணவர் உதவியுடன் கற்க விரும்புவார்கள்; பாட நூல்களோடு நின்றுவிடாமல், வீட்டிலிருந்தும் சமூகத்திலிருந்தும், சொந்த அனுபவங்கள் மூலமும் கற்றுக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடுவார்கள். குழந்தையின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கும், சமூக சகிப்புத் தன்மைக்கும், வித்தியாசமான கண்ணோட்டத்திற்கும், படைப்பாற்றல் திறன் வளர்ச்சிக்கும் அளிக்கப்படும் கற்றல் அனுபவங்களில் அனைத்துக் கற்போர்களும் தீவிரமாகப் பங்கேற்று, செயல்திறமுள்ள கற்போராக மாற உதவுவது ஆசிரியரின் கடமையாகும்.

## ௨. ஆக்கத்திறன்

சிந்திக்க

வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களை செய்வதில்லை ஆனால் தாங்கள் செய்வதை வித்தியாசமாகச் செய்கிறார்கள் தனி மனித வெற்றியிலும், தொழில் வெற்றிகளிலும் மாறுபட்ட கோணத்தில் சிந்தித்து செயலாற்றுவது மாபெரும் வெற்றிகளைத் தந்துள்ளது என்பதை நாமறிவோம்.

உலகில் கண்டுபிடிக்கப்பட்ட அனைத்துக் கண்டு பிடிப்புகளும் தினமும் நாம் கண்டு வரும் மாற்றங்களும் வளர்ச்சிகளும, (எ.கா பென்சிலின் மருந்து, செல்போன், கணினி, தாகூரின் கீதாஞ்சலி, ஓவியங்கள்) புதிய கோணத்தில் சிந்தித்து செயலாற்றிய மனிதர்களின் முயற்சியாலே ஏற்பட்டுள்ளது. சிந்திக்கும் திறனை முழுமையாகப் பயன்படுத்தியவர்கள் சாதனையாளர்களாகத் திகழ்கின்றார்கள்.

வித்தியாசமான முறையில் சிந்தித்து, புதிய கண்ணோட்டத்தில் பிரச்சனைகளை அணுகி, புதிய தீர்வுகளைகாணும் ஆற்றலை, மாணவர்களிடம் வளர்ப்பது கல்வியின் குறிக்கோளாக தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் திறந்த மனத்துடன் (openmind) முழு ஈடுபாடுடன் செயலாற்றி, பொருத்தமான கற்றல் அனுபவங்களை வழங்குவதன் மூலம், மாணவர்களின் ஆக்கத்திறனை, பேணி பாதுகாத்து வளர்த்திட இயலும் என கல்வியாளர்கள் கருதுகின்றார்கள்.

கீழ்க்காணும் சம்பவங்களை உற்றுநோக்கி காணப்படும் பொதுப் பண்புகளை பட்டியலிடுக:–

1. ஆர்க்கிமிடீஸ் என்ற விஞ்ஞானி, நீர் நிரம்பிய குளியல் தொட்டியில் குளிப்பதற்காக இறங்கும் போது தண்ணீர் வெளியேறியது இச்சம்பவத்தினை தன்னுடைய பிரச்சனையோடு தொடர்புபடுத்தி வித்தியாசமாக சிந்தித்தார் இதன் காரணமாக ஆர்கிமிடீஸ் கோட்பாடு உலகிற்கு அறிமுகமாயிற்று
2. ஆப்பிள் மரத்திலிருந்து பழம் உதிர்ந்து விழுவது இயல்பான ஒன்றாகும். ஆனால் நியூட்டன் என்ற விஞ்ஞானி இச்சம்பவத்தை புதிய கோணத்தில் சிந்தித்துப் பார்த்தார் இதன் காரணமாக நியூட்டன் புவிஈர்ப்பு விசை உலகிற்கு கிடைத்தது.

## இரண்டு சம்பவங்களில் காணப்படும் பொதுப்பண்புகள்

ஆர்கிமிடீஸ் மற்றும் ஐன்ஸ்டீன் ஆகியவர்கள் ஒரு சூழலில் தொடர்பில்லாத கருவிகளை புதிய கோணத்தில் இணைத்துப் பார்த்து, புதுத்தொடர்புகளை உருவாக்கி, புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கியுள்ளார்கள். ஆம், இத்தகைய ஆற்றலே ஆக்கத்திறன் எனப்படும். விவரங்களுக்கிடையே இதுவரை கண்டறியாத தொடர்புகளை கண்டறிந்து இவற்றைப் புதிய முறைகளில் பயன்படுத்த உதவும் திறன் ஆக்கத்திறன் (Creativity) எனப்படுகின்றது. ஆக்கத்திறனின் விளைவாக உருவான ஒரு புதிய பொருளோ அல்லது பயனோ புதுமைப் பண்புடையதாக (Novelty) பிறப்பில் உணரக்கூடியதாக பயனுள்ளதாக (usefulness) இருக்கும். இவ்வாறு மேற்கொள்வதற்கும் ஆக்கத்திறன் தேவைப்படுகின்றது. அனைத்துப் பிரச்சினைகளையும், புதிய கண்ணோட்டத்தில் வித்தியாசமாக சிந்தித்து புதிய அணுகுமுறைகள் மூலம் புதிய தீர்வுகள் காண தேவைப்படும் ஆற்றலாக ஆக்கத் திறன் விளங்குகின்றது.

## மனித குலத்தின் முக்கிய ஆற்றலாக விளங்கும் ஆக்கத்திறனின் பண்புகள்

பிரச்சனைகளைப் பற்றிய நுண்ணுணர்வு (Sensitivity)

தடையின்றி துரிதமாகச் சிந்தித்தல் (Immediate and effecitve thinking)

சிந்தனையில் நெகிழ்ச்சி (Flexibility)

தனித்தன்மை (Individuality)

அகக்காட்சி தாவல் (Indutive leap)

விடாமுயற்சி (Persistance)

புதிய தொடர்புகளைக் காண விழைதல் (seeking new relationship)

## அறிந்து கொள்ளுங்கள்

சில வருடங்களுக்கு முன்பு ஷாம்பூவை (Shampoo) பாட்டிலில் அடைத்து விற்கும் போது விலை உயர்வின் காரணமாக நடுத்தர மக்கள் மற்றும் ஏழைகள் பயன்படுத்த இயலவில்லை. எனவே வியாபாரம் மிகவும் மந்தமாக இருந்தது. இப்பிரச்சனைக்கு தீர்வுகாண வித்தியாசமாகச் சிந்தித்ததன் விளைவாக சிறிய பிளாஸ்டிக் உறையில் (sachet) குறைந்த விலையில் அறிமுகம் செய்ததால் அனைவரும் பயன்படுத்த முடிந்தது. வியாபாரமும் செழிப்படைந்தது இச்செயல்பாட்டில் மேலே கண்ட பண்புகள் அடங்கியிருப்பதை அறிந்து கொள்ளுங்கள். சுதந்திரத்திற்கு முன்பு சாதாரண மக்களுக்கு கல்வி எட்டாக்கனியாக இருந்தது. இப்பிரச்சினைக்குத் தீர்வு காண வித்தியாசமாகச் சிந்தித்ததன் விளைவாகவே 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வி பெறும் வாய்ப்பு ஏற்பட்டது. இதைப்போல இன்று நாம் அனுபவிக்கும் அனைத்து வசதிகளும் நலத்திட்டங்களும், ஆக்கச் சிந்தனையுடைய மனிதர்களால் தான் உருவாகியுள்ளது.

## ஆக்கத்திறன் வளர்ச்சிக்கான செயல்பாடுகள்

## ஆசிரியர் – மாணவர் இணைந்து செயல்படுதல்

மாணவர்கள் பாதுகாப்பு உணர்வுடன் (Feeling of security) கருத்துக்களைச் சுதந்திர உணர்வுடன் வெளியிடும் வாய்ப்புக்களை உருவாக்கி ஆர்வத்துடன் பங்கேற்க ஊக்குவிக்க வேண்டும். மேலும் மாணவர்களின் வழக்கத்திற்கு அப்பாற்பட்ட புதுமையான கேள்விகள், சந்தேகங்கள், பிரச்சனைகள் குறித்த புதுமையான கருத்துக்களையும், தீர்வுகளையும் ஆசிரியர்கள் திறந்த மனதுடன் (open mind) வரவேற்று மாணவர்களின் முயற்சிகளைப் பாராட்ட வேண்டும்.

மாணவர்களிடம் உடன்பாட்டு தற்கருத்தையும் (Positive self concept) தன்னம்பிக்கையையும், கற்பனைத் திறனையும், பிரச்சனைகளைப் பல்வேறு கோணங்களில் சிந்தித்து புதிய தீர்வுகளைக் காணும் ஆற்றலையும் வளர்க்க வேண்டும். மாணவர்களிடம் காணப்படும் மனஅழுத்தப் பிரச்சனைகள் மாணவர்களின் மனவெழுச்சி முதிர்ச்சியையும், சமநிலையையும் (emotional maturity and balance) பாதித்து, அவர்களின் சிந்திக்கும் திறமையை செயலிழக்கச் செய்து விடும். ஆகவே, அன்பான அணுகுமுறை, ஆரோக்கியமான உறவுகளால் மாணவர்களிடம் காணப்படும் மன அழுத்தப் பிரச்சனைகளைப் போக்க வேண்டும்.

உளப் பாதுகாப்பும், சுதந்திர உணர்வும் (psychological safety and freedom) கொண்ட இதமான இனிமையான ஆரோக்கிய வகுப்பறைச் சூழலை உருவாக்கிட வேண்டும்.

- மாணவர்களிடம் விரி சிந்தனை (Divergent thinking) வளர்ச்சி நிலையைத் தோற்றுவிக்க வேண்டும் நினைவாற்றலைச் சோதிக்கும் வினாக்களுக்குப் பதிலாக, தேர்வில் சிந்தைனையைத் தூண்டும் வகையில் வினாக்களை அமைக்க வேண்டும்.

(எ.கா) மின்சாரத்தைக் கண்டுபிடித்தவர் யார்? எனக் கேள்வி கேட்பதற்குப் பதிலாக, மின்சாரம் கண்டு பிடிக்கப்படாமலிருந்தால், உலகம் எவ்வாறு இருக்கும் எனக் கேட்டு, மாணவர்களைச் சிந்திக்கச் செய்ய வேண்டும்.

- தன்னுடைய கருத்துடன் முரண்படவோ, உடன்படவோ மாணவர்களுக்குச் சுதந்திரம் அளித்து ஊக்கப்படுத்த வேண்டும். கிளர்ச்சிமிக்க அனுபவங்களை மாணவர்கள் பெற ஏற்பாடு செய்ய வேண்டும்.
- நூலகமும், ஆய்வகமும் அதிக அளவில் பயன்படுத்தும் வண்ணம் கற்றல் – கற்பித்தலை அமைத்திட வேண்டும்.
- மாணவர்கள் தொடுக்கும் புதுமையான வினாக்களை மதித்து, மாணவர்களின் கற்பனைக் கருத்துக்களை வரவேற்று விவாதிக்கவேண்டும்.
- மாணவர்களின் கருத்துவளம் (Fluency) மாறுபட்ட கருத்துத்திறன் (Flexibility) படைப்பாற்றல், மற்றும் விரிவாக்கும் திறனை (Elaboration) வளர்க்கும் போட்டிகள் கலைநிகழ்ச்சிகள், நாடகம், பட்டிமன்றம், கருத்தரங்கம் பேன்ற செயல்பாடுகளை ஏற்பாடு செய்ய வேண்டும்.
- மாணவர்களின் பன்முகச் சிந்தனையை வளர்க்கும் நோக்குடன், கற்பித்தல் முறைகளை அமைத்துக் கொள்ள வேண்டும் புதுமைப்பயன்கள் சோதனைகள் (Unusual uses Test), ஆக்கபூர்வமான சிக்கல் தீர்வு முறை, சிந்தனை வீச்சு முறை ஆகியவற்றை பயன்படுத்த வேண்டும்.
- (Brain - Storming) அடிக்கடி பயன்படுத்தி மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு உதவிட வேண்டும்.

## ஆக்கச்சிந்தனைச் சோதனையின் வகைகள்

ஆக்கச்சிந்தனைச் சோதனைகளை இரண்டு வழிகளில் செய்யலாம் அவை

1. மொழியுடைச் சோதனைகள் (verbal tests)
2. மொழியில்லாச் சோதனைகள் (non - verbal tests)

1. மொழியுடைச் சோதனைகள்

இதில் பல துணைச் சோதனைகள் உள்ளன. இங்கே சில சோதனைகளும் அதிலுள்ள மாதிரிகளும் தரப்பட்டுள்ளன.

| | சோதனையின் பெயர் | மாதிரிக் கேள்வி |
|---|---|---|
| 1. | சான்றுகள் (instances) | வட்டமான எல்லாப் பொருள்களையும் எழுது. |
| 2. | மாற்றுப்பயன் (alternate uses) | செங்கலின் பிற பயன்களை எழுது. |
| 3. | படைப்பாற்றல் (Creativity) | பறக்கக்கூடிய, சிறகு முளைத்த கழுதை பற்றி ஒரு சுவையான கதை எழுது. |
| 4. | செம்மைப்படுத்துதல் | ஒரு சைக்கிளை இன்னும் எவ்வகையில் செம்மைப்படுத்த முடியும் என்பதைக் (improvements) கூறு. |
| 5. | நிகழ்வுகள் | வானத்தில் நிலா எப்போதுமே இல்லாமல் போனால் என்ன நிகழும் |

2. மொழியில்லாச் சோதனைகள்

இச்சோதனையில் ஒரு கோடு, முக்கோணம், வட்டம், சதுரம் போன்ற வரைபடங்கள் தரப்படும். மாணவர்கள் அவற்றை ஒரு சுவையான, பொருளுள்ள சித்திரமாக மாற்றி வரைதல் வேண்டும். இதற்கு உருவம் வரைதல் சோதனை (figure completion test) எனப் பெயர். மொழியுடைச் சோதனைகள் மற்றும் மொழியில்லாச் சோதனைகளையும் அடிக்கடி வகுப்பறையில் பயன்படுத்தி மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

## 3. குழந்தையின் குரல், அனுபவம்

ஒரு நாட்டின் நலமும், வளமும் அந்நாட்டின் வாழும் குழந்தைகளின் நலத்தைப் பொறுத்தே அமைகின்றது. குழந்தையின் உடலியல் தேவைகளும் (physical needs) உளத் தேவைகளும் (psychological needs) பூர்த்தியாகும் சூழ்நிலையில் மட்டுமே, குழந்தைகள் கற்றுக் கொள்கிறார்கள்.

செயல்பாடு

மாணவர்களுக்கு பாதுகாப்பு உணர்வினையும், மனநிறைவினையும் தரும் சூழல் குறித்து கலந்துரையாடல் செய்ய வேண்டும். மாணவர் மையக் கற்பித்தல் முறை, மாணவர்களின் அனுபவத்திற்கும், குரலுக்கும், உளத் தேவைகளுக்கும், தீவிரப் பங்கேற்புக்கும் முன்னுரிமை அளிக்கின்றது. எனவே மாணவர்களின் விருப்பங்கள், ஆர்வங்கள், மற்றும் தேவைகளைப் புரிந்து கொண்டு, பொருத்தமான பயனுள்ள அனுபவங்களை அளிப்பதன் மூலம், மாணவர்களின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவிட இயலும்,

மாணவர்களின் குரல்

1. அன்பும் பரிவும் கொண்ட ஆசிரியர்
2. புத்தகச்சுமை, தேர்வுபயம், மதிப்பெண்கள் குறித்த அச்சமின்மை
3. உடல் ரீதியான, உணர்வு ரீதியான பாதுகாப்பு
4. சொந்த வேகத்திலும், விருப்பத்திலும் துணிவோடும் கல்வி பயிலும் வாய்ப்பு;

5. சகமாணவர்களுடன் கலந்துரையாடி, நட்புணர்வோடு பழகி, இணைந்து கற்றல்
6. பாரபட்சமில்லாத, நிர்ப்பந்தங்களற்ற மகிழ்ச்சியான, பாதுகாப்பான வகுப்பறைச் சூழல்;
7. திறமைகளை வளர்த்துக் கொள்ள சமவாய்ப்பு
8. பாடத்தொடர்புடைய இணைச் செயல்களில் பங்கேற்கும் வாய்ப்பு
9. சுதந்திரமான கருத்துப் பரிமாற்றம்.

ஆனால் நடைமுறையில் காணப்படும் பல்வேறு கசப்பான அனுபவங்களும், உண்மைகளும், மாணவர்களின் விருப்பத்திற்கும் நலத்திற்கும் எதிராக, முரணாக உள்ளது. (எ–கா)

- தேர்வுக்குப்பின் மறந்து போகக் கூடிய நினைவாற்றலை மட்டும் வலியுறுத்தும் ஏதேச்சாதிகார ஆசிரியர்; அதிகமான கட்டுப்பாடு;
- சாதி, மத, மொழி, பொருளாதார, கலாச்சார வேறுபாடுகள் காரணமாக கல்வியில் சமத்துவமும், சமவாய்ப்புக்களும் மறுக்கப்படும் சூழல்;
- குறிப்பிட்ட மாணவரை, குறிப்பிட்ட குழுவினரை கல்வி கற்க இயலாதவர்கள் என முத்திரை குத்துதல்;
- மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள, சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட, விவாதிக்க. கலந்துரையாட கேள்விகள் கேட்டு விளக்கம் பெற அனுமதிக்கப்படாமலிருத்தல்.
- உடல் ரீதியான, உணர்வுரீதியான தீங்குகள் இத்தகைய கசப்பான அனுபவங்கள் காரணமாக, மாணவர்கள் பயஉணர்வோடும், பொருள் உணராமலும் கல்வி பயிலும் அவலமான நிலை ஏற்பட்டுள்ளது.

## 4. பள்ளி அறிவோடு, குழந்தை அனுபவத்தை இணைத்தல்

குழந்தைகள் எச்சூழலில் அவர்கள் மதிக்கப்படுவதாக உணர்கின்றார்களோ, அச்சூழலில் மட்டுமே அவர்கள் கற்றுக் கொள்கின்றார்கள். குழந்தைகளின் நலன்கள் பாதுகாக்கப்பட்டு, மேம்படுத்தப்படுவதே, மாணவர் மையக் கல்வியின் இலக்காக அமைந்துள்ளது. எனவே மாணவர்களுக்கு உடல் ரீதியான, உணர்வுரீதியான பாதுகாப்பை வழங்கி, 'பள்ளியே ஒரு வீடு' என்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். தங்களது சொந்த அனுபவங்களோடு தொடர்புடைய பல்வேறு செயல்பாடுகளை பள்ளியில் வழங்க வேண்டும். தங்கள் வீடு, சமூகம், மொழி, பண்பாடு குறித்து கேள்விகள் கேட்டு, விளக்கம் பெற வேண்டும். உள்ளூர் கருத்தாளர்கள் மூலம், வாய்மொழி இலக்கியம், கைத்தொழில்கள் போன்றவைகளை கற்பிக்க வேண்டும். குழு வேலைகளில், கலை நிகழ்ச்சிகளில், சமூகச் செயல்பாடுகளில் ஒத்துழைப்பு உணர்வோடு பங்கேற்று செயல்பட, மாணவர்களுக்கு உதவ வேண்டும். குழந்தைகளின் அறிவுவளர்ச்சி நல்ல முறையில் அமைவதற்கும் அதில் பயனுடைய மாற்றங்களும் திருப்பங்களும் தோன்றுவதற்கும் உரிய அடிப்படை பயிற்சிகளை அளிப்பது நமது கடமையாகும்.

## 5. கற்கும் உரிமை

"இருப்பதில் சிறந்தவற்றை குழந்தைகளுக்கு வழங்க மனித இனம் கடன்பட்டுள்ளது" – என ஐ.நா.சபை, 1959 நவம்பர் 20–ல் பிரகடனப்படுத்தியுள்ளது. உயிருடன் வாழ, ஆரோக்கியமான உடல், மனவளர்ச்சி பெற, பாதுகாப்புடன் வாழ, தன் எண்ணங்களை வெளிப்படுத்தக் கூடிய கருத்து சுதந்திரமுள்ள

சூழலில் வாழ என்று பலவகையான உரிமைகள் குழந்தைகளுக்காக உலக அளவில் வரையறுக்கப்பட்டுள்ளது.

குழந்தை உரிமைகள் மீதான ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கை கூறும் நான்கு விதமான உரிமைகளை அறிந்து கொள்வோம்.

1. வாழும் உரிமை
2. பாதுகாப்பு உரிமை
3. வளர்ச்சி உரிமை
4. பங்கேற்கும் உரிமை

குழந்தையின் வளர்ச்சி உரிமை என்பது, "குழந்தையின் ஆரோக்கியமான உடல் வளர்ச்சி, ஆளுமை வளர்ச்சி, கல்வி வளர்ச்சி, விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு வசதி போன்றவைகளைக் குறிக்கின்றது."

குருகுலக் கல்வி முறையில், அரச குலத்தைச் சார்ந்தவர்களுக்கும், மேல் குலத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் கல்வி பயின்றார்கள். தீண்டத்தகாதவர்கள் என்று கருதப்பட்டவர்களுக்கும், சாதாரண மக்களுக்கும் கல்வி பயிலும் உரிமை மறுக்கப்பட்டது.

1950 ஜனவரி 26–ல் நமது இந்தியா 14 வயதுக்குட்பட்ட அனைவருக்கும் கட்டாய ஆரம்பக் கல்வி அளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

1986–ல் 14–வயதிற்குட்பட்ட அனைத்துக் குந்தைகளுக்கும் இலவச கட்டாயக் கல்வி அளிக்க வேண்டும் என்பதை 'அடிப்படையாகக் கொண்டு தேசியக் கல்விக் கொள்கை – 1986' கொண்டுவரப்பட்டது. 'அனைவருக்கும் ஆரம்பக் கல்வி' (Universalisation of elementary education) என்ற திட்டத்தின் படி

- 5+ வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளையும் பள்ளியில் சேர்த்தல். (Universal Enrolment)
- பள்ளியில் சேர்க்கப்பட்ட ஒவ்வொரு மாணவனும் தொடர்ந்து படித்து நடுநிலை (அ) உயர்நிலைக் கல்வியை நிறைவு செய்தல்.
- இடை நிறுத்தமற்ற (drop out) மாணவர்களை உருவாக்குதல்.
- தேக்கமில்லாத கல்வி முறையை ஏற்படுத்துதல் (No stagnation) போன்ற கொள்கைகள் அறிமுகப்படுத்தப்பட்டன. நாடு முழுவதிலும், இத்திட்டம் தீவிரமாக செயல்படுத்தப்பட்டதின் விளைவாக, அனைத்துக் குழந்தைகளும் வயது, சாதி, மத, இன, மொழி, பொருளாதார, கலாச்சார வேறுபாடுகளின்றி கல்வி கற்கும் உரிமையைப் பெற்றுள்ளார்கள்.

மேலும் 2002–ல் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்பட்ட 93 வது அரசியல் சட்டதிருத்தத்தின் படி, 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளுக்கும் இலவசக் கட்டாயக் கல்வியும், கல்வியில் சமத்துவமும் சமவாய்ப்புகளும் அளிக்கப்பட்டுள்ளது. எனவே அனைத்துக் குழந்தைகளும் கற்றலில் பங்கேற்று, கற்கும் உரிமை ஏற்பட்டுள்ளது. மேலும் தன்னம்பிக்கையை வளர்த்து, ஒட்டு மொத்த வளர்ச்சியைப் பெறும் வாய்ப்புகளும் சமமாக வழங்கப்படுகின்றது. குழந்தைகள் உரிமைப் பிரகடனத்தின் படி, பங்கேற்பதில் உரிமை, சங்கம் அல்லது குழுமம் சேர்வதற்கு உரிமை மற்றும் தகவல் பெறும் உரிமை ஆகிய மூன்று முக்கிய உரிமைகள் ஒவ்வொரு குழந்தைக்கும் உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்தியா குழந்தைகள் உரிமைப் பிரகடனத்தில் கையெழுத்திட்டுள்ளது. இந்தியாவில் அனைத்துக் குழந்தைகளின் நலன் பாதுகாக்கப்பட்டு, மேம்படுத்தப்படுகின்றது.

## 6. கற்றலுக்கு ஏற்ற உடல் மற்றும் உளப் பாதுகாப்பு

"உலகில் இரண்டு புனிதமான இடங்கள் உள்ளன. ஒன்று தாயின் கருவறை, மற்றொன்று ஆசிரியரின் வகுப்பறை" என்பது ஆன்றோர் மொழியாகும். ஒரு குழந்தை தாயின் கருவறையில் உடல், உயிர் வளர்ச்சியையும், ஆசிரியரின் வகுப்பறையில் அறிவு, ஆற்றல் மற்றும் வாழ்வியல் திறன்களையும் பெறுகின்றது. சராசரியாக ஆசிரியர்களும், மாணவர்களும் தினமும் 6 மணி நேரம் – ஆண்டில் 1000 மணிநேரம் நேரடியாக சந்தித்துக் கொள்கின்றனர். "பள்ளியே ஒரு வீடு" என்ற சந்தோசமான, பாதுகாப்பு உணர்வினை தரும் பள்ளி அமைவிடமும், அழகான, வசதியான வகுப்பறைகளும், மனநிறைவைத் தரும் கற்றல் அனுபவங்களை வழங்கும் மகிழ்ச்சியான வகுப்பறை சூழலும், அன்பும் பரிவும் கெண்ட ஆசிரியர்களும் ஒத்துழைப்பு உணர்வுடன் பழகும் மாணவர்களும் ஒரு மாணவனின் கற்றல் அடைவை, பொருத்தப் பாட்டினை ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சியினை தீர்மானிக்கும் காரணிகளாக விளங்குகின்றன. மாணவர்களின் உணர்வுச் சமநிலையை கற்றல் அடைவுகள் ஆசியர்களின் வகுப்பறை மேலாண்மை மற்றும், செயல் திறன் போன்றவை பள்ளியின் அமைவிடம், வசதிகள், வளங்கள், உறவு போன்ற காரணிகளால் நிர்ணயம் செய்யப்படுகின்றது. ஆகவே சீரான கற்றலுக்கு உதவும் பாதுகாப்பான உடல் மற்றும் உளத் (physiological and emotional security) தேவைகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

செயல்பாடு

- வகுப்பில் கீழ்க்காணும் தலைப்புக்களில் கலந்துரையாடுக.
- பள்ளி அமைவிடம் எவ்வாறு இருக்க வேண்டும் ?
- பள்ளியில் இருக்க வேண்டிய வசதிகள், வளங்கள் யாவை?
- எத்தகைய உறவுச் சூழல் பள்ளியில் நிலவ வேண்டும்?
- கற்றலுக்கேற்ற உடல் பாதுகாப்புத் தேவைகள் யாவை?

ஆரோக்கியமான மனதும் **(Sound mind)** ஆரோக்கியமான உடலும் **(Sound body)** மாணவர்களின் அடிப்படைத் தேவைகளாக விளங்குகின்றன. உடல் பாதுகாப்புத் தேவைகள் போதிய அளவில் நிறைவு பெற்ற குழந்தைகள் மட்டுமே கற்றலில் தொடர்ந்து ஈடுபட முடியும். கீழ்க்காணும் வசதிகளும், வளங்களும், மாணவர்களிடம் சிறந்த கற்றல் அடைவினைப் பெற உதவுகின்றன.

- பாதுகாக்கப்பட்ட குடிநீர்
- தூய்மையான கழிப்பறை
- அழகான, விசாலமான, பாதுகாப்பான பள்ளி அமைவிடம்
- எல்லாப் பருவகாலங்களுக்கும் ஏற்ற வகையில் அமைந்துள்ள வகுப்பறைகள்
- சுத்தமான, பாதுகாப்பான சுற்றுப்புறங்கள்.
- பாதுகாப்பான விளையாட்டு மைதானம்
- மருத்துவச் சேவைகள்
- உயரம் குறைந்த மாணவர்களுக்கேற்ற இருக்கை வசதி
- நல்ல காற்று வசதி, போதுமான வெளிச்சம், மற்றும் இருக்கை வசதிகள் கொண்ட வகுப்பறை
- முதலுதவிப் பெட்டிகள் மற்றும் தீயணைப்புக் கருவிகள்.
- ஒய்வறைகள்.

### கற்றலுக்கேற்ற உளப்பாதுகாப்புச் சூழல்

"ஆசிரியர் தனிப்பட்ட மாணவனுக்கு கற்பிக்க வேண்டுமே தவிர, முழுமையான வகுப்பிற்கல்ல" என்கிறார் ஒரு கல்வியாளர். மாணவனின் ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு மாணவர் மையக் கற்பித்தல் முறையில் முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளது. மாணவனின் உரிமைகளும்; மதிப்புக்களும் பாதுகாக்கப்பட்டு, தன் மதிப்பு உயரத்தக்க செயல்களில் ஈடுபடும் வாய்ப்புக்களை அளிக்கும் மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலில் தான், மாணவர்கள் சிறப்பாக கல்வி கற்க இயலும்.

#### செயல்பாடு 1

பள்ளியில் மாணவர்களுக்கு மனநிறைவினைத் தரும் விஷயங்கள் குறித்து கலந்துரையாடுக.

#### செயல்பாடு 2

சிறப்பாக கல்வி கற்க உதவும் காரணிகளை மாணவர்களை விவரிக்கச் செய்தல்.

#### மாணவர்களிடம் உணர்வுச் சமநிலையை உருவாக்கி சிறப்பாக கற்பதற்கு உதவும் காரணிகள்

- சாதி, மத, மொழி, பொருளாதார, கலாச்சார பாராபட்சமின்றி, அனைவருக்கும் சமவாய்ப்புக்கள்;
- மாணவர்கள் தங்கள் அனுபவங்களை பகிர்ந்து கொள்ள, சந்தேகங்களை தீர்த்துக் கொள்ள சுதந்திரமாக கேள்வி கேட்கும் வாய்ப்புக்கள்;
- மாணவர்களின் மதிப்பு மற்றும் உரிமைகளைப் பாதுகாத்து சமத்துவம், சமூகநீதி மற்றும் பல்வேறு சமூகநிலைமைக்கு மதிப்பு கொடுக்கின்ற பொது இடமாக விளங்கும் பள்ளி;
- மனப்பாடம் செய்யும் முறையினை ஒதுக்கிவிட்டு, மாணவர்களின் படைப்பாற்றலை வளர்க்கும் தன்னம்பிக்கையைப் பெருக்கும் செயல்பாடுகள்
- உடல் ரீதியான, உணர்வு ரீதியான தண்டனைகள் இல்லாதிருத்தல்;
- சகமாணவர்களுடன் கருத்துக்களை பகிர்ந்து கொள்ள, கலந்துரையாட, கல்வி கற்கும் வாய்ப்புக்கள்.
- மாணவர்களிடம் சிறப்பான, பயனுள்ள, ஆக்க பூர்வமான கற்றலைத் துரிதப்படுத்துவதற்கு உதவிடும் ஆசிரியர்கள்

மாணவர்களின் கீழ்க்காணும் உளத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

- காப்புணர்ச்சியும், சுதந்திர உணர்வும் பெற்று தன்னம்பிக்கையுடன் கற்க மாணவர்களை ஊக்குவித்தல்;
- குழந்தைகளின் வளர்ச்சி நல்ல முறையில் அமைவதற்கும் பயனுள்ள மாற்றங்களும், திருப்பங்களும் ஏற்பட உதவும் நடைமுறைப் பயனுள்ள கற்றல் அனுபவங்களை அளித்தல்.
- கற்றலை எளிமையாக்கி, மாணவர்களின் அறிவாற்றல் ஆக்கத்திறன் மற்றும் வாழ்வியல் திறன்களை வளர்க்கும் செயல்பாடுகளை ஏற்பாடு செய்தல்.
- மாணவர்களின் பண்புகளை, பருவ வளர்ச்சியினை தனியாள் வேற்றுமைகளை, அறிவு வளர்ச்சியினை கற்றல் ஆர்வங்களை, கற்றல் குறைபாடுகளை, தெளிவாகப் புரிந்து கொண்டு, பொருத்தமான கற்பித்தல் முறைகளையும் ஆலோசனைகளையும் வழங்குதல்.

- மாணவர்களுக்கு உடல் ரீதியான, உளரீதியான தீங்குகள் பிறரால் ஏற்படாமல் தடுத்தல்;
- தூய்மையான எளிய உடை, இன்முகத்துடன் அனைவரிடமும் பழகுதல், இன்சொல் பேசுதல், பதட்டமின்மை, வழிகாட்டுதல், இணைந்து செயலாற்றுதல், நல்ல முன்மாதிரியாகத் திகழ்தல் மாணவர்கள் தாங்களாகவே ஆர்வத்துடன் தீவிரமாக கற்றலில் பங்கேற்க ஊக்கப்படுத்துதல் போன்ற பண்புகளை பெற்றிருத்தல்.
- சக ஆசிரியர்களுடன், சமூகத்துடன் பெற்றோர்களுடன் ஆரோக்கிய உறவினை வளர்த்தல்.

"கல்வியில் சமத்துவம் என்பது அனைவருக்கும் சமவாய்ப்பு தருவது மட்டுமல்ல; சேரும் படிப்புகளில் அனைவரும் வெற்றி பெறுவதற்குரிய சூழ்நிலையை உருவாக்கி, சமவாய்ப்புகளை அனைவரும் பயன்படுத்த வாய்ப்பு அளிக்க வேண்டும்" – தேசியக் கல்விக் கொள்கை 1986.

அனைத்து மாணவர்களும் கற்றலில் வெற்றி பெறுவதற்கு ஏற்ற நிர்பந்தங்களற்ற சுதந்திரமான மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழலைப் பற்றி அறிந்து கொள்ளலாம்.

- இன்றைய நடைமுறைகளுக்குப் பொருந்துவதாகவும், நாளைய தேவைக்கு ஈடு கொடுக்கும் வகையில் உள்ள கற்றல் அனுபவங்கள்.
- திறமை அடிப்படையில் கற்றலில் வெற்றி பெற உதவிடும் பொருத்தமான சவால்கள், படைப்பாற்றல் செயல்பாடுகள்.
- பால், இனம், சாதி, மத பொருளாதார பாராபட்சமற்ற சமூகச் சூழல்.
- பிற மாணவர்களுடன் கலந்துரையாடி, நட்புணர்வோடு பழகி, பாடத்திறன்களை வளர்க்கும் சுதந்திரம்.
- கலை நிகழ்ச்சிகள், விழாக்கள், போட்டிகளில் பங்கேற்க சமவாய்ப்புகள்.
- கருத்துக்களை சுதந்திர உணர்வுடன் வெளியிடும் வாய்ப்புகள்
- உடல் ரீதியாக, உளரீதியாக ஆசிரியர்களாலும் பிற மாணவர்களாலும் காயப்படாமலிருத்தல்.
- சிறப்பான வழிகாட்டலும் ஆலோசனையும் பெறும் வசதிகள்
- போட்டி மனப்பான்மை இல்லாமல், கூட்டுறவு மனப்பான்மையுடன் செயல்படும் சகமாணவர்கள்
- சமுதாய வளங்களை பள்ளியின் நலனுக்கும், மாணவர்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படுத்தும் வாய்ப்புக்கள்.

## 7. பொதுமைக் கருத்து வளர்ச்சி

மாணவர் மையக் கற்பித்தல் முறையில் மாணவர்களிடம் தெளிவான, அதிகமான, கருத்துருவாக்கம் (concept development) ஏற்படச் செய்வது, கற்பித்தலின் முக்கிய நோக்கமாக வலியுறுத்தப்படுகின்றது. கருத்துருவாக்கம் பல பொருட்களைப் பற்றி ஒரே சமயத்தில் நினைக்கும் வாய்ப்பை அளிக்கின்றது. சுற்றுப்புற சூழலில் உள்ள பொருட்களை அல்லது மனிதர்களின் அடிப்படை வேறுபாடுகளை வகைப்படுத்தி அறிந்து செயல்பட உதவுகின்றது. புறப்பொருள் பற்றிய சிந்தனையை ஒழுங்குபடுத்துகின்றது. புறச் சூழலை தெளிவாகப் புரிந்து கொள்ளும் ஆற்றலை வளர்க்கின்றது. கருத்தியல் சிந்தனை (Abstract thinking) ஏற்பட உதவுகின்றது. தொடக்கநிலை வகுப்புகளில் மாணவர்களிடம் சரியாக கருத்துருவாக்கம் அமையாது போனால் உயர் வகுப்பில் கருத்துருவாக்கம் ஏற்படுவது சிரமமாகி கற்றலில் பின்னடைவு ஏற்படும். எனவே ஆக்கபூர்வமான பயனுள்ள கற்றல் அனுபவங்கள் மூலம் மாணவர்களிடம் தெளிவான கருத்துருவாக்கம்

ஏற்பட உதவுவது ஆசிரியரின் கடமையாகும். தெளிவற்ற, முக்கியமற்ற பண்புகளைக் கொண்ட மாணவர்கள் பள்ளிக்கு வரும்போது பல பொதுமைக் கருத்துக்களைப் பெற்றுள்ளார்கள். ஆகவே தெளிவான உண்மையான பொதுக்கருத்துக்களை பெற்று சிந்தனையில் நன்கு பயன்படுத்த பயிற்சி அளிக்கப்பட வேண்டும். தொடக்க நிலையில் மாணவன் பொருள்களுடன் இணைந்த செயல்களைச் செய்து அப்பொருளைப் பற்றி சிந்திக்கும் வாய்ப்பினை அளிக்க வேண்டும். இது செயல்படும் நிலை (enactive) எனப்படும். அடுத்து உயர்நிலையில் பொருளினைப் பற்றிய சாயல்களைப் பயன்படுத்தி (iconic) பயிற்சி தரவேண்டும். அடுத்து குறியீடுகளை சிந்தனையில் பயன்படுத்த பயிற்சி தரவேண்டும். இந்நிலை குறியீட்டுநிலை (symbolic) எனப்படும் தொடக்கப்பள்ளி அளவில் குழந்தைகள் தாமாகவே எல்லாவற்றையும் செய்து நேரடி அனுபவங்கள் மூலமும் இடை நிலைப் பள்ளி அளவில் படங்கள் மாதிரிகள் மூலமும், உயர்நிலை பள்ளி அளவில் அதிகமாக குறியீடுகளை பயன்படுத்தியும் கருத்துருவாக்கத்தை ஏற்படுத்த முடியும் என புரூனர் கூறுகிறார். காட்சிப் பொருட்கள் சார்ந்த பொதுமைக் கருத்துக்கள் எழுந்த பின்னரே, கருத்துப் பொருள்கள் சார்ந்த (Abstract concepts) பொதுமைக் கருத்துக்களை ஏற்படுத்த பயிற்சி அளிக்க வேண்டும்.

கருத்துருவாக்கம் பிறப்பிலேயே ஒருவரிடம் தோன்றுவதில்லை அனுபவத்தாலும், கல்வியாலும் கருத்துருவாக்கம் ஏற்படுகின்றது; வளர்கின்றது. எனவே பொதுமைக் கருத்தை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தும்போது மாணவர்களின் அனுபவத்திற்கு உட்பட்ட எடுத்துக் காட்டுக்களைப் பயன்படுத்தி விளக்க வேண்டும். சிக்கலான (complex) நுட்பமான கருத்துக்களை விளக்க நிறைய எடுத்துக் காட்டுகளைத் தரவேண்டும்.

உடன்பாட்டு எடுத்துக்காட்டுக்களுடன் பொதுமைக் கருத்தை விளக்குவதன் மூலம் மாணவர்கள் பொதுமைக் கருத்தை நன்றாக புரிந்து கொண்டு பயன்படுத்த முடியும்.

வினா – விடை முறை மற்றும் தொகுத்தறி முறை (Inductive method) மூலம் தொடர்புள்ள அனுபவங்களை மாணவர்கள் தாங்களாகவே ஒப்பு நோக்கி பொது பண்புகளை கண்டறிய பயிற்சி அளிக்க வேண்டும். பாடம் கற்பித்து முடிந்த பின் பாடத்தின் முக்கியக் கருத்துக்களை பட்டியலிட்டுக் காட்ட வேண்டும். பொதுமைக் கருத்து கற்பிக்கப்பட்ட பின், அதைத் தெளிவான மொழி வழியே வரையறை (Define) செய்ய மாணவர்களுக்கு பயிற்சி அளிக்க வேண்டும்.

### கருத்துருவாக்கம் தொடர்ந்த செயல்பாடு

பொதுமைக் கருத்து வளர்ச்சி என்பது ஆழமாகவும் செழுமையாகவும் அர்த்தங்களின் புதிய அடுக்குகளை அடையும் தொடர்ந்த செயல்பாடாகும். இயற்கை மற்றும் சமூகத்தைப் பற்றியும் தங்களைப் பற்றியும் தங்களுக்கும் பிறருக்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் உள்ள பொது கருத்தின் அடிப்படையில் மாணவர்கள் தங்கள் கோட்பாடுகளை வளர்த்துக் கொள்கின்றார்கள் காரியங்கள் ஏன் நடக்கின்றன என்பது பற்றியும் நடத்தைக்கும் மொழிகளுக்குமான அடிப்படைகளைப் பற்றியும் பொதுமைக் கருத்தோடு இணைந்தே விளக்கங்களைப் பெறுகின்றனர். மாணவர்கள் தொடர்ந்து பொதுமைக் கருத்து வளர்ச்சியை பெறுவதன் மூலம் தாங்களாகவே தங்களின் மொழி வளர்ச்சி, உள்ள வளர்ச்சி கோட்பாடு மற்றும் காரணகாரியங்களை அறியும், ஆற்றல் கற்றவற்றை முறைபடுத்திக் கொள்ளுதல் போன்ற செயல்பாடுகளில் சிறப்பான முன்னேற்றம் பெறுகின்றனர்.

## 8. எல்லாக் குழந்தைகளாலும் கல்வி கற்க இயலும்

குருகுல கல்வி முறையில் உயர் குடும்பத்தைச் சார்ந்த குழந்தைகளுக்கு மட்டுமே கல்வி பெறும் வாய்ப்பு அளிக்கப்பட்டது. காலப்போக்கில் கல்வி பெறும் வாய்ப்புக்கள் பரவலாக்கப்பட்டது. எனினும் உயர் அறிவாண்மை பெற்ற குழந்தைகள் மட்டுமே கல்வி கற்றுக் கொள்ள முடியும் என்ற தவறான கருத்து மக்களிடம் நிலவியது. ஆகையால், பாராபட்சமின்றி கல்வி பெறும் வாய்ப்புக்கள் அனைவருக்கும் கிடைக்காத சூழல் நிலவியது. தவறான கருத்துக்கள், குறுகிய மனப்பான்மை, சமூக கட்டுப்பாடுகள், போன்ற காரணிகளால், அனைத்துக் குழந்தைகளும் கல்வியறிவு பெற இயலவில்லை. மேலும் ஆசிரியரை மையமாகக் கொண்ட பழைய கல்வி முறையில், பாடப் பொருளறிவிற்கே முக்கியத்துவம் அளிக்கப்பட்டது; மாணவர்களின் ஆர்வம், விருப்பம் மற்றும் வளர்ச்சித் தேவைகள் முற்றிலும் புறக்கணிக்கப்பட்டன; கவர்ச்சியற்ற பயனற்ற பாடப்பொருள், கடுமையான உடல், உளத் தண்டனைகள், ஆசிரியரின் ஏதோச் சதிகார மனப்பான்மை, தேர்வு பயம், மீத்திறன் மாணவர்களுக்கே முன்னுரிமை போன்றவைகளால் பள்ளியில் முழுமையான கல்வியறிவைப் பெற இயலவில்லை.

ஆனால் தற்போது, சாதி, மத, இன, மொழி, பொருளாதார கலச்சார வேறுபாடின்றி அனைத்துக் குழந்தைகளும் கல்வி கற்க இயலும் என்ற உண்மையை உலகம் அறிந்துள்ளது. எனவே தற்கால கல்விமுறை, மாணவரின் ஆர்வங்கள், விருப்பங்கள் மனப்போக்குகள், உணர்ச்சிகளோடு தொடர்புடையதாகவும், தனியாள் வேற்றுமைகளுக்கும், திறமைகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பதாகவும், மாணவர்கள் ஒருங்கிணைந்த ஆளுமை வளர்ச்சி பெற உதவும் வகையிலும் அமைந்துள்ளது. அரசியல் சாசன சட்டமும், 14 வயதுக்குட்பட்ட அனைத்துக் குழந்தைகளும் இலவச கட்டாயக் கல்வி பெறுவதை அடிப்படை உரிமையாக அறிவித்துள்ளது.

ஆகவே, பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் சிறுபான்மையினர், மலைவாழ்மக்கள், ஊனமுற்றோர் சிறப்பியல்புக் குழந்தைகள், எய்ட்ஸ் போன்ற நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகள் உள்ளிட்ட அனைத்துக்குழந்தைகளும் கல்வி கற்கும் முயற்சியில் தொடர்ந்து ஈடுபட்டு, சிறந்த கல்வி அடைவினைப் பெறுகின்றார்கள்.

## 9. கற்றலுக்கு உதவும் முக்கிய காரணிகள்

கற்றல் என்பது செயலுறு நிலை (Active process) ஆகும். பாடக் கருத்துக்களைச் சிறப்பாகக் கற்பிக்கும் ஆற்றலும் பிரச்சனைக்குத் தீர்வு காணும் (counsellor type) திறனும், கற்பனையும் சிந்தனையும் (Inspirational type) உடைய நவீன ஆசிரியர்கள், மாணவர்கள் திறம்படக் கற்க உதவும் காரணிகளை முழுமையாகப் பயன்படுத்தி, மாணவர்கள் சிறப்பான கல்வி அடைவினைப் பெற உதவுகின்றார்கள். கற்றலைத் தீர்மானிக்கும் பல்வேறு முக்கிய காரணிகளைப் பற்றி அறிந்து கொள்வோம்.

1. மாணவர்கள் தாங்களாகவே ஆர்வத்துடன் கற்றலில் ஈடுபட ஊக்குவிக்கப்படுதல்;
2. கற்கப்பட வேண்டிய செயல்களும், கருத்துக்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாக, பொருத்தமானதாக இருத்தல்;
3. சுதந்திரமாகக் கற்கும் வாய்ப்புகள்;
4. கற்றலில் வெற்றி பெறும் வாய்ப்புகள்;
5. கற்றல் வெற்றிகளைப் பற்றிய உடனடிப் பின்னறிவு (feed back);
6. அன்பும், பரிவும், மகிழ்ச்சியும் நிரம்பிய வகுப்பறைச் சூழல்;

7. ஆக்கத் திறனையும், சிந்தனைத் திறனையும் வளர்க்கப் பொருத்தமான வழிகாட்டல்கள்;
8. கருத்துக்களைத் தெளிவாக அறிமுகப்படுத்தி, அவற்றை மாணவர்களின் முன்னறிவோடு இணைத்துக் கற்பித்தல்;
9. கற்றவற்றைத் தெளிவுபடுத்த உதவும் காட்சி, கேள்விப் பொருள் (Audio - visual Aids);
10. இரு முனைப்பட்ட (Reciprocal) கருத்துப் பரிமாற்றம் (Communication);
12. மாணவர்களின் கற்றல் முறைக்கேற்ப (learning style) பொருத்தமான முறையில் கற்பித்தல் செயல்பாடுகள்.

## 10. பல்வேறு வழிகளில் கற்றல்

கல்வி என்பதற்கு 'வளர்தல்' 'வெளிக்கொணர்தல்' 'உள்ளதை சிறக்கச் செய்தல்' 'செயல்படாது அடங்கியிருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்துதல்' என்பனவற்றை வெளிப்படுத்துகின்றது. கற்பித்தல் என்பது யாருக்கு கற்பிக்கின்றோமோ, அவருக்கு முறையாகச் சென்று சேர வேண்டும் என்பதை அனைத்துக் கல்வியாளர்களும் வலியுறுத்தி வருகின்றார்கள். மாணவர்கள் திறம்பட கற்றுக்கொள்ள, அறிமுகப்படுத்தப்படும் புதிய கற்றல் அனுபவங்களைத் தெளிவாக புரிந்துகொண்டு, பொருளுணர்ந்து கற்க, ஆசிரியர் ஒவ்வொரு மாணவனின் தனிப்பட்ட கற்றல் நடையினையும், கற்றல் பாணியையும் அறிந்திருக்க வேண்டும்.

செயல்பாடு –1

மாணவர்களிடம் காணப்படும் பல்வேறு கற்றல் பண்புகளைக் குறித்து விவாதிக்க வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் தனது கற்றல் நடையிலும் பாணியிலும், பிற மாணவர்களிடமிருந்து ஒரு சிறிதளவேனும் மாறுபடுகின்றார். பொதுமைக் கருத்துக்கள், பொதுவிதிகள் ஆகியவற்றைக் கற்பதிலும் பிற பாடப்பொருட்களைக் கற்பதிலும் மாணவர்களிடம் தனியாள் வேற்றுமைகள் காணப்படுகின்றன. இவ்வேற்றுமைகள் கற்றல் பாணி எனப்படும் புதுக்கருத்துக்களை ஒரு மாணவர் எளிதிலும் வேகமாகவும் கற்கின்றார். எம்முறையைப் பயன்படுத்திக் கற்கின்றார் என்பன அம்மாணவரின் கற்றல் பாணியில் அடங்கும். மாணர்கள் பல்வேறு திறன்களை முழுமையாகப் பெற்று சிறப்பான கல்வி அடைவுகளைப் பெற, மாணவரின் கற்கும் முறையைப் புரிந்துகொண்டு பொருத்தமான கற்றல் அனுபவங்களை ஆசிரியர் வழங்க வேண்டும்.

கற்றல் பாணியைப் பொறுத்து மாணவர்களை கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1. பார்வைத்திறன் மூலம் கற்போர்
2. செவிப்புலன் மூலம் கற்போர்
3. தொடு உணர்ச்சி மூலம் கற்போர்
4. இயக்கத்திறன் மூலம் கற்போர்

சில மாணவர்கள் வரிசை முறையில் கற்போராகக் காணப்படுகிறார்கள். இத்தகைய கற்போர்கள் கருத்துக்களை வரிசையாகக் கற்பார்கள். முதல் படியில் கற்றல் முழுமையாகாமல், அடுத்த படியினைக் கற்பதற்கு முன்னேறமாட்டார்கள். சில மாணவர்கள் பாடப்பொருளை ஒட்டுமொத்தமாக கவனித்து கற்போராவார்கள். பாடத்தின் மொத்தப் பரப்பினைக் கற்கும்போது, இடையே இருப்பதை இத்தகையோர் பொருட்படுத்தமாட்டார்கள். சிலரது கற்றல் பாணியில், போதிய ஆய்வின்றி உடனடியாகக் கற்றல் செயலில் வேகமாக ஈடுபடும் பண்பு காணப்படும். இத்தகையோர்

போதிய சிந்தனையின்றி புதிய கருத்துக்களை உருவாக்க முற்படுவர். பிரச்சினைகளை செவிகளால் கேட்டவுடன், ஆராயாமல் உடனடியாக அப்பிரச்சினைக்கு ஏதோ ஒரு பதிலை அளிப்பர். இது ஒருவகை கற்றல் பாணி எனப்படும். இதற்கு நேர்மாறான கற்றல் பாணியில், மாணவர்கள் மிக மெதுவாகப் பிரச்சினைகளை ஆராய்ந்து விவரங்களை சீர்தூக்கிப் பார்த்து இறுதியில் விடையளிப்பார்கள்.

அனுபவங்கள் மூலம் கற்றல், செய்து பார்த்துக்கற்றல், சோதனை செய்து கற்றல், படித்தல், தனித்து அல்லது பிறரோடு விவாதித்தல், விசாரித்தல், கவனித்தல், சிந்தித்தல் போன்ற செயல்களின் மூலம் மாணவர்கள் கற்றுக்கொள்கின்றார்கள். மாணவர்களின் கற்றல் பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் நடைபெறுகின்றது.

ஆகவே மாணவர்களின் கற்றல் பாணிக்கேற்ப பொருத்தமான கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டும்.

## 11. கற்றலுக்கேற்ற அறிவு வளர்ச்சி ஆயத்தநிலை

ஒரு குழந்தை எந்தச் செயலில் ஈடுபட வேண்டு மென்றாலும் அதற்கு ஆயத்த நிலை (Readiness) அவசியமாகும். முதிர்ச்சியும் (Maturity) பயிற்சியும் (Training) ஒரு குழந்தையின் ஆயத்த நிலையை நிர்ணயிக்கின்றது. ஆயத்த நிலையே, குழந்தைக்கு கற்பிப்பதற்கேற்ற (Teachable moment) ஏற்படுத்துகிறது. ஆயத்த நிலை, 'பழுத்த நிலை' (Ripening) எனப்படுகிறது. இப்பழுத்த நிலையே ஒரு குறிப்பிட்ட காரியத்தை தொடங்க ஏற்ற தருணமாகும். படிக்க ஏற்ற தருணத்தை சுட்டிக்காட்டுவது, படிக்கும் ஆயத்த நிலையாகும். (Reading Readiness) எழுத ஆரம்பிக்க ஏற்ற தருணத்தை சுட்டிக் காட்டுவது 'எழுதும் ஆயத்தநிலை' யாகும் (Writing readness) எண்ணுவதற்கு ஏற்ற ஆயத்தநிலையில் (Arithmatic Readiness) மாணவன் எண்களை அறிவதற்கு ஆயத்தமாக இருப்பதைக் குறிக்கின்றது. அதைப் போல கற்றலுக்கான அறிவு வளர்ச்சி ஆயத்த நிலை (Cognitive readiness for learning) யைப் பற்றி அறிந்து கொள்வோம்.

கற்றலுக்கேற்ற அறிவு வளர்ச்சிக்கான ஆயத்த நிலையை உடல், மன முதிர்ச்சியும் (Marturity) ஊக்குவித்தலும் (Motivation) நிர்ணயம் செய்கின்றன. மாணவர்களிடம் போதிய உடல், மன முதிர்ச்சியின்றி கற்பிப்பது பயனளிக்காது. முதிர்ச்சி இருப்பினும், ஊக்குவித்தலின்றியும் கற்றல் சிறப்பாக அமையாது. கற்கப்பட வேண்டிய செயல்களும் கருத்துகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புடையதாகவும், பொருத்தமானதாகவும் இருந்தால், இவை எளிதில் கற்கப்படும் என்பதை நாமறிவோம். கற்கப்பட வேண்டிய பொருள் மாணவரின் மனநிலைக்கு ஏற்றதாக எளிதில் பொருளுணரக்கூடியதாக தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாக, ஆர்வம், திறமைக்கு பொருத்தமானதாக இருந்தால், மாணவர்கள் கற்பதற்கான ஆயத்தநிலையில் இருப்பார்கள்.

கவர்ச்சியான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி கற்பிப்பது ஆயத்த நிலையை உருவாக்கும். உடல் நலக் குறைபாடு, கவலை, தீவிர மனவெழுச்சி, சிக்கல்கள், பசி போன்றவை கற்றலுக்கேற்ற ஆயத்த நிலையை சீர்குலைக்கும்.

அறிவு வளர்ச்சி என்பது பல்வேறு மனத்திறன்களது வளர்ச்சியையும், இதனுடன் இணைந்து எழும் பொருளறிவு வளர்ச்சியையும் குறிக்கின்றது.

புலன் காட்சித் திறன், நினைவாற்றல், கற்பனைத் திறன் பொதுமைக் கருத்துகளை உருவாக்கும் திறன், ஆய்வுத்திறன் போன்ற மனத்திறன்களும், மொழித் திறனும், அறிவு வளர்ச்சிக்கு உதவுகின்றன. அறிவு வளர்ச்சி விரைவாக நடைபெற குடும்பமும், பள்ளியும் பல்வேறு வாய்ப்புக்களையும், பயிற்சிகளையும், தூண்டுதல்களையும் அளிக்க வேண்டும்.

- பல்வகை நேர் அனுபவங்கள், புலன்காட்சி
- அனுபவங்களை பெறும் வாய்ப்புக்களை உருவாக்குதல்.
- கற்பித்தலில் பெருமளவில் காட்சிப் பொருள்களைப் பயன்படுத்துதல்.
- பங்கேற்றுக் கற்க ஊக்குவித்தல்
- மொழித்திறன் வளர்ச்சியடைய உதவுதல்
- கற்பனைத் திறன், சாயல்திறன், பொதுமைக் கருத்து உருவாக்கும் திறன், ஆய்வுத்திறன் வளர பயிற்சியும், வாய்ப்புகளும் தருதல்.
- ஏன்? எப்படி? எதனால்? எதற்காக? என்பது போன்ற பல்வேறு கேள்விகளை மாணவர்கள் கேட்க தூண்டப்பட்டு போதிய விளக்கமளித்தல்.
- அன்பும், பரிவும், மகிழ்ச்சியும் நிலவிய வகுப்பறைச் சுழல் போன்ற காரணிகள் கற்றலுக்கேற்ற ஆயத்த நிலையை உருவாக்குகின்றது.

## 12. பள்ளியிலும், வெளியிலும் கற்றல்

கற்றல் என்பது வாழ்க்கை முழுவதும் நடைபெறும் தொடர் நிகழ்வாகும். குழந்தையின் கல்வி நிலையில் முதல் எட்டு ஆண்டுகள்தான், குழந்தையின் சிந்திக்கும் அறிவை, எதையும் காரணத்துடன் தெரிந்து கொள்ளும் திறமையை, பிற்கால வாழ்விற்குத் தேவைப்படும் அணுகுமுறை, ஆற்றல்களை வளர்த்துக்கொள்வதற்கு உகந்த காலமாகும். பள்ளியிலும், பள்ளிக்கு வெளியேயும் உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி, மொழிவளர்ச்சி, அறிவு வளர்ச்சி பெறுதல், பிறரோடு ஒருங்கிணைந்து செயல்படுதல், காரண காரிய அறிவுடன் சிந்தித்தல், தன்னைப் பற்றியும், உலகைப் பற்றியும், புரிந்து கொள்ளுதல் போன்ற திறன்கள் வளர அளிக்கப்படும் கற்றல் அனுபவங்கள் குழந்தையின் ஆர்வம், தேவைக்கேற்பவும், படைப்பாற்றல் திறனை வளர்க்கவும், உலகை உண்மையாக புரிந்து கொள்ளவும் உதவ வேண்டும். உடல் ரீதியான, உணர்வு ரீதியான சமூக ரீதியான பாதுகாப்பினை மாணவர்களுக்கு அளிக்க வேண்டும். கற்றல் பாடங்களோடு நின்றுவிடாமல் வீட்டிலிருந்தும், சமூகத்திலிருந்தும் நூலகத்திலிருந்தும் சொந்த அனுபவங்கள் மூலம் கற்றுக் கொள்ளும் வகையில் அமைய வேண்டும்.

பிற மனிதர்களுடனும், இயற்கையுடனும், சமாதானமாக வாழவும், நீதி, நேர்மை, ஒழுக்கம் ஆகிய பண்புகள் வளரவும் வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும். காரண – காரிய அறிவுடன் சிந்திக்க, ஆக்கத்திறனை வளர்த்துக்கொள்ள, தீர்வு காணும் ஆற்றலையும் வளர்க்க உதவும் அனுபவங்களை வழங்க வேண்டும். மனித நேயத்தையும், சகிப்புத் தன்மையையும் உருவாக்கும், சமூக மதிப்புகளை உயர்த்தும் செயல்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்த வேண்டும்.

அடிப்படை அறிவையும், மொழி ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்கான செயல்பாடுகளை வகுப்பறையில் பெருமளவு வழங்க வேண்டும். மொழிப்பாடத்தையும், கணிதப் பாடத்தையும் தொடக்க நிலையில் தெளிவாக சொல்லித்தர வேண்டும். கலைகள் மற்றும் கைத்தொழில் பற்றிய கல்வி மூலம் மாணவர்களின் புதுவிதமான புனித உணர்வினையும், அதே நேரத்தில் எதிர்காலத்தில் வேலைபார்க்கத் தேவையான திறமைகளையும் வளர்த்துக்கொள்ள உதவ வேண்டும். சுற்றுச்சூழல், உலக அறிவு, நடைமுறை வாழ்விற்குத் தேவையான திறமைகள் வளர்த்தல் போன்ற திறன்களைப் பெற போதுமான அனுபவகங்களை அளிக்க வேண்டும். விளையாட்டுக்கள் மூலம் உடல்திறனை வளர்க்க வேண்டும். கலைநிகழ்ச்சிகளில்

பங்குபெறுதல், வெளியிடங்களுக்குப் பயணித்தல், பங்கு பெறுதல், சமூக உணர்வுள்ள மனிதனாக வளர்த்தல், பிறரின் உணர்வுகளை மதித்தல், பொறுப்புடன் முன்னின்று நடத்துதல் ஆகியவற்றுக்கான சூழலை உருவாக்கி பயிற்சி அளிக்க வேண்டும். தன்னை உணர்ந்து, படிப்பதற்கான ஆர்வத்தை பெற, சமூகத்துடன் இணைந்து வாழ, சமூக பண்புகளை விருப்பத்துடன் பின்பற்றி, மன அழுத்தங்களை எதிர்கொள்ள, சிறந்த குடிமகனாகத் திகழ ஒவ்வொரு மாணவனுக்கும் ஆசிரியர் வழிகாட்டி உதவ வேண்டும்.

### பள்ளிக்கு வெளியே கற்றல்

எல்லா குழந்தைகளும் கற்கும் ஆற்றலைப் பெற்றுள்ளார்கள்; கற்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள். பள்ளியில், பயனுள்ள பல்வேறு கற்றல் அனுபவங்கள் அளிக்கப்படுகின்றன. வகுப்பறைக் கற்றல் அனுபவங்களோடு மட்டும் ஒருவரின் கற்றல் முழுமை பெறுவதில்லை. ஏனெனில் கற்றல் என்பது வாழ்க்கை முழுவதும் நடைபெறும் தொடர் நிகழ்வாகும்.

### பள்ளிக்கு வெளியே கற்றல் அனுபவங்களைப் பெறும் இடங்கள்

- வீடு
- சமூகம்
- ஒப்பார் குழு
- ஊடகங்கள்
- நூல் நிலையங்கள்
- தகவல் தொடர்பு சாதனங்கள்
- சமூக குழுக்கள்
- சொந்த அனுபவங்கள்
- அரசுசாரா அமைப்புக்கள்
- வெளியிடங்களுக்கு பயணம்

### செயல்பாடு

ஒவ்வொரு மாணவனும், பள்ளிக்கு வெளியே பெற்ற ஏதாவது ஒரு கற்றல் அனுபவத்தை விவரிக்கச் செய்ய வேண்டும் (எ–கா) பயண அனுபவம்

பள்ளிக்குள் கற்றல் என்பது குறிப்பிட்ட பாடப் பொருளை ஆசிரியர் உதவியுடன் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்க வேண்டும்.

அதிக பாடச்சுமை, பயனற்ற பாடப்பொருள். தேர்வு பயம், தண்டனைகள், வீட்டுப் பாடம் மனப்பாடம் செய்தல் போன்ற பணிகளும் உண்டு. ஆனால் வகுப்பறைக்கு வெளியே நடைபெறும் கற்றல், மாணவனின் விருப்பத்தோடும், ஆர்வத்தோடும், நிர்ப்பந்தங்கள் கட்டுப்பாடுகளின்றி நடைபெறுகின்றது. எனவே ஆசிரியர், மாணவன் ஒட்டுமொத்த வளர்ச்சி பெறுவதற்கு பள்ளிக்குள்ளேயும், பள்ளிக்கு வெளியேயும் சிறந்த கற்றல் அனுபவங்களைப் பெற வழிகாட்ட வேண்டும்.

## 13. அறிதலும் புரிதலும்

குழந்தையின் உடல்திறனும், மொழி அறிவும் திறமைகளும் பகுத்து பொதுமைப்படுத்தும் அறிவும் பள்ளிக்கு வருவதற்கு முன்பே தொடங்கிவிடுகின்றது. வகுப்பறைக் கற்றல் என்பது தகவல்களை

நினைவில் வைத்துக் கொண்டு மீண்டும் வெளிக் கூறுவதைவிட, கற்பவற்றை முழுமையாக பொருளுணர்ந்து தெளிவாகக் கற்று, தேவையான இடத்தில் பொருந்திப் பயன்படுத்தும் வகையில் அறிவுத்திறன் பெறுவதைக் குறிக்கின்றது. அறிவுத்திறன் என்பது "செயல்பாடுகள் மூலமும் மொழியின் மூலமும் தன்னையும் உலகையும் புரிந்து கொள்ளும் ஆற்றலை" உள்ளடக்கியதாகும். சிந்தித்தல் மொழியைப் பயன்படுத்துதல். செயல் ஆற்றுதல் ஆகியவை ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்தவையாகும். இத்திறன்கள் அனைத்தும் தனித்தும். ஊடகங்களின் வழியேயும் சிறு குழந்தைப் பருவத்திலிருந்தே வளரத் தொடங்கி விடுகின்றன. தொடக்கத்தில் குழந்தைகள் அங்கும் இங்குமாக பெறும் தங்கள் அனுபவங்கள் மூலமும் மட்டுமே காரணகாரிய அறிவைப் பெறுகின்றார்கள். இதன் மூலமே குழந்தைகளின் மொழித்திறனும், பிறரோடு இணைந்து பணியாற்றும் திறனும் சிக்கலானவற்றையும் புரிந்து கொண்டு செயலாற்றும் திறனும் வளர்கின்றது. அறிவை உருவாக்கும் குழந்தைகளின் நடவடிக்கைகளில் ஆசிரியர் சொந்த விருப்பத்தின் பேரில் கூடுதல் பங்களிப்புச் செய்வதன் மூலம் குழந்தைகளின் புரிதிறனை உயர்த்த முடியும். ஒவ்வொரு கற்போரும் தன்னளவிலும், சமூக அளவிலும் பொருளுணர்ந்து கற்பதன் மூலம் அறிவு வளர்ச்சி பெறுகின்றனர். அறிவு, கற்றல் வழிமுறைகளில் ஈடுபடும் போது உருவாக்கப்படுகின்றது.

கேள்வி கேட்க, விசாரிக்க, விவாதிக்க, பதில் கூற ஒரு முடிவுக்கு வர அல்லது புதிய கோட்பாட்டினை உருவாக்க மாணவர்களுக்கு வாய்ப்பளிப்பதன் மூலம் அறிவுத்திறனை வளர்க்க இயலும். அறிவைப் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும் அனுபவங்கள் மொழி மூலம் கிடைக்கின்றன ஏற்கனவே தெரிந்து வைத்துள்ள கருத்துக்களோடு புதிய கருத்துக்களையும் இணைத்து அறிவை வளர்த்துக் கொள்ள அனுபவங்கள் உதவுகின்றன. எடுத்துக்காட்டாக, போக்குவரத்து முறைகளைப் பற்றி மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக, போக்குவரத்து பாடம், படங்கள், காட்சிகள் ஆகியவற்றுடன் வகுப்பறையில் விவாதங்களை மேற்கொள்வதன் மூலம், போக்குவரத்து முறைகள் குறித்த, தெளிவான அறிவை மாணவர்களிடம் உருவாக்கலாம். மாணவர்களின் உணர்வுகள் மற்றும் அனுபவங்களை உறுதிபடுத்தும் இடமாகவும், மதிப்பிடும் இடமாகவும் வகுப்பறைகள் விளங்க வேண்டும். நெசவு, தச்சு, மண்பாண்டம் செய்தல் போன்ற கைத்தொழில்களும், வேளாண்மை வியாபாரம் போன்ற தொழில்களும், பார்க்கும் கலைகள் போன்ற மனித செயல்பாடுகள் அறிவின் மதிப்புமிக்க வடிவங்களாகும். இத்தொழிலில் ஈடுபடுவதன் மூலம் கற்பனைவளம், அழகுணர்ச்சி, பொருள்களோடு பணியாற்றும் திறன், கூட்டாகப் பணியாற்றதல், தொடர்ந்து செயலாற்றும் மனப்பாங்கு, கட்டுப்பாடு போன்ற திறமைகளை வளர்த்துக் கொள்ளலாம். இத்தொழில்கள் குறித்த செயல் அறிவைத் தரும் அனுபவங்கள் மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். பொருள் புரியும்படி ஆழமாக சிந்திக்கத் தூண்டுதல் சிக்கலைத் தீர்க்கப் பல்வேறு வழிகளில் சிந்திக்க ஊக்குவித்தல் புதிய கற்றல் அனுபவங்களுடன் தொடர்புக்கு முந்திய அறிவோடு இணைத்துக் கற்பித்தல், திறமைக்கேற்று வெற்றி பெறும் பொருத்தமான சவால்களையும், கற்றல் அனுபவங்களையும் அமைத்துத் தருதல், உள்ளூர் பாரம்பரிய அறிவைப் பயன்படுத்த தூண்டுதல் போன்ற செயல்பாடுகளின் மூலம் மாணவர்களின் அறிதல் திறனை ஆசிரியர் மேம்படுத்த முடியும். உற்றுநோக்கல், செய்முறை செய்தல், பிரச்சனைகளை ஆய்தல், படைப்பாற்றல் திறன் வளர்த்தல் போன்ற செயல்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் மாணவர்களின் அறிவுத்திறன் வளர்ச்சியடைகின்றது. குழந்தைகளின் புரிந்து கொள்ளும் திறன் வளர்ச்சிக்கு அடிப்படை அறிவுச் சொத்தாகத் திகழும். வாய்மொழி இலக்கியத்தை கற்பிப்பதன் மூலம், புரிதலுக்கான சாளரத்தைத் திறந்துவிட இயலும். பிறரோடு கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள, உறவாடப் பயன்படும் மொழித் திறனை வளர்த்துக் கொள்வதுடன் சொந்த வார்த்தைகளில் விடைகூற, கருத்துக்களை வெளியிட

வாய்ப்பளிப்பதன் மூலம் புரிதல் உணர்வு வளரும். சமூக உலகோடும், இயற்கை உலகோடும், தன்னோடும் மாணவன் உயர்ந்த உணர்வோடும் மதிப்போடும் உறவுகளை உருவாக்கி நிலைநிறுத்த புரிதல் உணர்வு தேவைப்படுகின்றது. மாணவர் மையக் கற்பித்தல் முறையில், மாணவர்கள் கற்கும் பொருளைத் தெளிவாகப் புரிந்து விளங்க தன்னையும் புற உலகையும் புரிந்துகொண்டு, சூழ்நிலையில் விழிப்புடன் செயலாற்றும் திறன் உடையவர்களாக ஆசிரியர்கள் உதவ வேண்டும்.

## 14. அறிவை மறு உருவாக்கம் செய்தல்

அறிவுத்திறன் என்பது, செயல்பாடுகள் மூலமும், மொழியின் மூலமும், தன்னையும், உலகையும் புரிந்து கொள்ளும் ஆற்றலை உள்ளடக்கியுள்ளது. கற்போர்கள் ஏற்கெனவே தெரிந்து வைத்துள்ள கருத்துக்களோடு, புதிய கருத்துக்களையும் இணைத்து சொந்த அறிவை வளர்த்துக் கொள்கின்றார்கள். பாடநூல்களோடு நின்றுவிடாமல், வீட்டில் சமூகத்திலும் நூலகத்திலும், சொந்த அனுபவங்களின் மூலம் தங்களின் அறிவை மறு உருவாக்கம் செய்து கொள்கின்றார்கள். அறிவை மறு உருவாக்கம் செய்ய உதவிடும் திறன்களையும், புரிதிறன்களையும், நடைமுறைகளையும் ஆசிரியர்கள், மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தி, பின்பற்ற வழிகாட்ட வேண்டும்.

மறு உருவாக்கத்திற்கு அனுபவம், மொழித் திறமை, சக மனிதர்களோடும், இயற்கையோடும் கலந்துரையாடும் ஆற்றல் ஆகியவை அடிப்படையாக அமைந்துள்ளன. அறிவை மறுஉருவாக்கம் செய்ய உதவும் சில காரணிகளைத் தெரிந்து கொள்வோம்.

1) மாணவர்கள் பல்வேறு ஆற்றல்களையும், பண்புகளையும், புரிதிறன்களையும், நடைமுறைகளையும் வளர்த்துக் கொள்வதற்கு மொழித் திறமை அடிப்படையாக அமைகின்றது. கதைகள், பாடல்கள், துணுக்குகள், கலை, சொல் விளையாட்டுகள் போன்றவற்றில் மொழியறிவிற்கான வளம் உள்ளது. இந்த அரிய வளத்தை மாணவர்கள் பெற பல்வேறு கற்றல் அனுபவங்களை வழங்க வேண்டும்.

2) பள்ளியில் பெறும் அறிவுக்கும், உலக அறிவுக்கும் தொடர்பு இருக்கும் வகையில் கற்றல் அனுபவங்கள் அமைய வேண்டும்.

3) கற்றவற்றை செயல்படுத்திப் பார்ப்பவர்களாக, சவால்களைப் பற்றி சிந்திப்பவர்களாக மாணவர்களை மாற்றி, உலகோடு உறவாடி பிரதிபலித்து, செயல்பட்டு, பங்கேற்று அறிவை வளர்த்துக் கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும். ஏற்கனவே பெற்றுள்ள அறிவின் அடிப்படையில் புதுமைகளுடன் சொந்தத் திறனுடன் அறிவை உருவாக்க, மறு உருவாக்கம் செய்ய வாய்ப்புக்கள் அளிக்கப்பட வேண்டும்.

4) பாடப் புத்தகத்திலிருந்து செய்திகளை புரியாமல் மனப்பாடம் செய்வதை விட, பொருளுணர்ந்து படிக்க, ஏற்படும் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்க்க, புதிய விஷயங்களை அறிந்து கொள்ள உதவ வேண்டும்.

5) சுற்றுச் சூழலில் உள்ள பொருட்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தி, சுற்றுச் சூழலை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் ஏற்படுத்த வேண்டும். இயற்கை மற்றும் சமூகச் சூழலில் கலந்துரையாடுவது, சூழலைப் புரிந்து கொள்வது, சமூகத் தொடர்புகளில் மகிழ்ச்சியடைதல் போன்றவை மாணவர்களின் சமூக உறவை மேம்படுத்தி, அனுபவங்களை வளப்படுத்தி அறிவை மறுஉருவாக்கம் செய்ய உதவுகின்றது.

## 15. தேசிய கலைத்திட்டம் 2005 கல்விப் பிரகடனம்

தேசீய கலைத்திட்டம் 2005, மாணவர்களின் சிறப்பான கற்றலுக்கு உதவும் கீழ்க்காணும் வழிகாட்டுதலை வெளியிட்டு உள்ளது.

எல்லாக் குழந்தைகளுமே கற்கும் முயற்சியை மேற்கொள்கின்றனர். கற்றுக் கொள்ளும் ஆற்றலையும் பெற்றுள்ளனர்.

கற்றலின் கூறுகளாகப் பொருள் உணர்தல், சிந்தித்தல், வெளிப்படுத்தல், செயலாற்றுதல் ஆகிய ஆற்றல்களை வளர்த்துக்கொள்ளுதல் ஆகியவை உள்ளன.

குழந்தைகள் வேறுபட்ட வழிகளில் கற்றுக்கொற்கிறார்கள். தங்கள் அனுபவங்களின் மூலம் கற்றல், செய்து பார்த்துக் கற்றல், சோதனை செய்து கற்றல், படித்தல், தனித்து அல்லது மற்றவர்களோடு விவாதித்தல், விசாரித்தல், கவனித்தல், சிந்தித்தல், பேச்சில் அல்லது எழுத்தில் வெளிப்படுத்துவதில் ஆகிய செயல்களின் மூலமும் கற்றல் நடைபெறுகிறது.

குழந்தைகள் அறிந்துகொள்ளும் திறனைப் பெறுவதற்கு முன் நடைபெறும் கற்பித்தலில் உள்ள உண்மைகளைப் பின்னாளில் குழந்தைகள் நினைவு கூர்ந்து பார்க்கலாம்; ஆனால், தன்னைச் சுற்றியுள்ள உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகளோடு அவர்களால் பொருந்திப் பார்க்க இயலாது; புரிந்துகொள்ளவும் இயலாது.

பள்ளிக்கு உள்ளேயும், பள்ளிக்கு வெளியேயும் கற்றல் நிகழ்கிறது. இரு செயல்துறைகள் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளும் பொழுது கற்றல் செழுமைப்படுகிறது. வாய்விட்டுச் சொல்ல இயலாத அழகுணர்ச்சி குறித்த முழுமையான கற்றலுக்கு கலையும் வேலையும் வாய்ப்புகளை அளிக்கின்றன. நேரடி அனுபவத்தின் மூலம், பெற்ற கல்வி வாழ்வோடு ஒருங்கிணைக்கிறது. குறிப்பாக ஒழுக்கங்கள், விழுமியங்கள் குறித்து மொழிமூலம் பெற்ற கல்விக்கு நேரடி அனுபவங்கள் அவசியமாகின்றன.

தேர்வுக்குப்பின் மறந்து போகத்தக்க வகையில் நினைவாற்றலை வலியுறுத்தும் கற்றலைவிட கற்போர் கற்ற கோட்பாடுகளைக் கடைப்பிடிக்கும் வகையில், ஆழ்ந்த புரிதலோடு உள்ள கல்வியே மேலானது. குறைபாடுடைய குழந்தைகளுக்குக் கற்றுக்கொள்ள கூடுதல் நேரம் தேவைப்படும். அத்துடன் கற்றல் ஆர்வமூட்டக்கூடியதாகவும் பலவித சவால்களைச் சந்திக்கும் திறனைத் தரக்கூடியதாகவும் அமைய வேண்டும். இயந்திரத்தனமாக திருப்பித் திருப்பிச் செய்யப்படும் கற்றல் முறை குழந்தைகளைச் சோர்வடையச் செய்வதுடன் குறைந்த கற்பிக்கும் திறன் கொண்டதாகவும் இருக்கும்.

ஊடகத்துடன் அல்லது ஊடகமின்றி கற்றல் நடைபெறலாம். ஊடகமின்றி நடைபெறும் கற்றலில், வேலையோடு கூடிய போதனை முறை, சமூகத் தொடர்பையும், உறவையும் குறிப்பாக யாருக்கு நல்ல திறமைகள் உள்ளதோ அவர்களின் தொடர்பையும் ஏற்படுத்தித் தருகிறது.

### தொகுப்புரை

செயல்திறனுள்ள கற்போர்கள், தாங்களாகவே ஆர்வத்துடன் கற்றலில் பங்கேற்று, திறமைகளை உச்சகட்ட அளவிற்கு வளர்த்துக்கொண்டு, சூழ்நிலையில் உயர்நிலைப்பட்ட பொருத்தப்பாட்டுடன் திகழ்கின்றார்கள். பொருள் புரியும்படி ஆழமாக சிந்திக்க, சிக்கலைத் தீர்க்க பல்வேறு தீர்வுகளைக் காண, படைப்பாற்றல் திறனை வளர்த்துக்கொள்ள, உள்ளார்ந்த முறையில் உலகைப் புரிந்துகொண்டு பிறருடன் இணக்கமாக வாழ உதவும் கற்றல் அனுபவங்களை அளிப்பதன் மூலம், அனைத்து மாணவர்களும் செயல்திறனுள்ள கற்போர்களாக மாற உதவமுடியும்.

வித்தியாசமான முறையில் சிந்திக்க, புதிய கண்ணோட்டத்துடன் பிரச்சினைகளை அணுகி, புதிய தீர்வுகள் காண்பதற்கு தேவைப்படும் ஆற்றலாக ஆக்கத்திறன் விளங்குகின்றது. பல்வேறு புதுமைப் பயன்கள் சோதனை ஆக்கப்பூர்வமான சிக்கல் தீர்வுமுறை, சிந்தனை வீச்சு முறை, மொழியுடைச் சோதனைகள் மற்றும் மொழியில்லாச் சோதனைகள் போன்ற உத்திகளைப் பயன்படுத்தி மாணவர்களின் ஆக்கத்திறன் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

மாணவர்கள் எச்சூழலில் தாங்கள் மதிக்கப்படுவதாக உணர்கின்றார்களோ, அச்சூழலில் மட்டுமே கற்றுக் கொள்கின்றார்கள். எனவே மாணவர்களின் ஆர்வம், விருப்பு, மனப்பான்மை, உளத் தேவைகள் மற்றும் சமூகத் தேவைகளுக்கு வகுப்பறையில் முன்னுரிமை அளிக்க வேண்டும். மாணவர்கள் தங்களுடைய அனுபவங்களைப் பகிர்ந்துகொள்ள, சுதந்திரமாக கருத்துக்களை வெளியிட, அச்சங்களிலிருந்து விடுபட்டு தன்னம்பிக்கையுடனும் படைப்பாற்றலுடனும் செயல்பட ஊக்குவிக்கப்பட வேண்டும். ஏற்றுக்கொள்ளப்படுதல், அன்பு காட்டுதல், பாதுகாப்பு உணர்வு பெறுதல் போன்றவைகளை மாணவர்களுக்கு முழுமையாக ஆசிரியர் வழங்க வேண்டும். அடிப்படைத் தேவைகளை ஏற்கெனவே மாணவர்கள் பெற்றுள்ள அறிவோடு, புதிய கருத்துக்களை இணைத்து சமூக வளர்ச்சியும் சமூக முதிர்ச்சியும் பெற உதவ வேண்டும்.

இந்திய அரசியலமைப்புச் சட்டம், 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளும் இலவச கட்டாயக் கல்வி பெறுவதை, குழந்தைகளின் அடிப்படை உரிமையாக அறிவித்துள்ளது. எனவே சாதி, மத, இன, மொழி, பொருளாதார, கலாச்சார பாராபட்சம் இன்றி அனைத்து குழந்தைகளுக்கும் 1 முதல் 8ஆம் வகுப்புவரை இலவச கட்டாயக் கல்வியும், கல்வியில் சமத்துவமும் சமவாய்ப்புக்களும் அளிக்கப்படுகின்றது.

மாணவர்களின் சிறப்பான அறிவு வளர்ச்சி, மனவெழுச்சி வளர்ச்சி, சமூக வளர்ச்சி, மொழி வளர்ச்சி, கல்வி வளர்ச்சி ஆகியவற்றிற்கு மாணவர்களின் உடலியல் தேவைகளும் உளவியல் தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அதிகபட்ச ஆரோக்கியம், உடல் பாதுகாப்பு வழங்கும் பாதுகாப்பான அழகான பள்ளி அமைவிடமும், மகிழ்ச்சியான வகுப்பறை சூழலும், அன்பும், பரிவும் கொண்ட ஆசிரியர்களும் மாணவர்கள் எளிதாக விரைவாக கல்வி கற்க உதவிட முடியும்.

ஒரே மாதிரியான அடிப்படை பண்புகளை பொருட்கள், நிகழ்ச்சிகள், மக்கள் கருத்துகள் ஆகியவற்றை ஓர் இனவகையாக சேர்த்துப் பார்த்தல், கருத்துரு எனப்படும். மாணவர்களிடம் கருத்துரு தோன்றுவதற்கும் வளர்ப்பதற்கும் தொடர்ந்து பயிற்சி அளிப்பதன் மூலம் கற்றல் – கற்பித்தல் செயல்பாடுகளை எளிதாகவும் அர்த்தமுள்ளதாகவும் பயனுள்ளதாகவும் விளங்கச் செய்யலாம்.

பழைய கல்வி முறையில் அறிவாற்றல் குறித்த தவறான கருத்துக்கள், சமூக கட்டுப்பாடுகள் ஆதிக்க மனப்பான்மை போன்றவைகளின் காரணமாக அனைத்து குழந்தைகளும் கல்வி கற்க அனுமதிக்கப்படவில்லை. ஆனால் எல்லாக் குழந்தைகளிடமும் கற்கும் ஆற்றல் இயல்பாக அமைந்துள்ளது. அறிவாற்றல் சாதி, மத, மொழி, பொருளாதார, கலாச்சார வேறுபாடுகள் இல்லாமல் அனைத்து குழந்தைகளும் கல்வி கற்க இயலும்.

ஊக்குவித்தல், கற்றல் முயற்சிகளில் வெற்றி, காட்சிப்பொருட்கள், வலுப்படுத்தல் விளைவு பற்றிய உடனடி அறிவு, மகிழ்ச்சியான வகுப்பறைச் சூழல், அறிவுரைகள், முன்னறிவுடன் இணைத்துக் கற்பித்தல், சுதந்திரமாக செயல்படும் வாய்ப்பு போன்ற காரணிகள் ஒரு மாணவனின் கற்றலிலை நிர்ணயம் செய்கின்றன.

கற்றல் என்பது செயலுறு நிலையாகவும் வாழ்க்கை முழுவதும் தொடர்ந்து நடைபெறும் செயலாகவும் விளங்குகின்றது. மாணவர்கள் தங்களுக்கு உரித்தான பல்வேறு பண்புகளில் கற்றுக் கொள்கின்றார்கள். மாணவர்களின் கற்றல் பாணிக்கேற்ப, பொருத்தமான கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி மாணவர்கள் கற்றலில் வெற்றி பெற உதவ வேண்டும்.

ஒரு குழந்தை எந்தச் செயலில் ஈடுபட வேண்டுமென்றாலும் அதற்கு ஆயத்தநிலை அவசியமாகும். குழந்தையின் உடல் வளர்ச்சியும் மன முதிர்ச்சியும் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் ஊக்குவித்தலும் குழந்தையிடம் கற்றலுக்கேற்ப ஆயத்தநிலையை உருவாக்குகின்றன. கற்க வேண்டிய பாடப்பொருள் மாணவரின் மனநிலைக்கு ஏற்றதாக, எளிதில் பொருளுணரக்கூடியதாக சேவைகளை நிறைவு செய்வதாக ஆர்வமூட்டுவதாக இருப்பது மாணவர்களிடம் அறிவு வளர்ச்சிக்கான ஆயத்தநிலையை தோற்றுவிக்கும்.

ஒரு மாணவன் தன்னுடைய வகுப்பறைக் கற்றலோடு நின்றுவிடாமல் வீட்டிலிருந்தும் சமூகத்திலிருக்கும், நூலகத்திலிருந்தும் ஊடகங்கள் மூலமாகவும் கற்றுக்கொள்ள ஊக்குவிக்கப்பட வேண்டும். வகுப்பறைக் கற்றலும் வகுப்பறைக்கு வெளியே பெறப்படும். கற்றலும் மாணவர்களிடம் மனித நேயத்தை சகிப்புதன்மையை, ஒத்துழைப்பு உணர்வை, பிறருடன் இயற்கையுடன் இணைந்து வாழ உதவிடுவதாக அமைய வேண்டும்.

மாணவர்களின் படைப்பாற்றல் திறனை வளர்க்கும் வகையிலும், உள்ளார்ந்த முறையிலும் உலகை உண்மையாக புரிந்து கொளளலாம். பிற மனிதர்களோடு சுமூகமாக தொடர்பு கொள்ளும் வகையிலும் கற்றல் அனுபவங்களை வடிவமைக்க வேண்டும். உலகைப் பற்றிய புரிதலோடும், அறிவோடும் பிறர் நலன் மீதும், அவர்களின் உணர்வுகள் மீதும் அறிவார்ந்த அக்கறை கொள்ளுதல் போன்ற மதிப்புக்களை மாணவர்களிடம் ஏற்படுத்த வேண்டும்.

கற்றல் பணி, பாடநூல்களோடு மட்டும் நின்றுவிடாமல், வீட்டிலிருந்தும், சமூகத்திலிருந்தும் நூலகத்திலிருந்தும் சொந்த அனுபவங்களிலிருந்தும் அறிவைப் பெற உதவிடுவதாக அமைய வேண்டும். ஆசிரியர் கற்போரை ஊக்குவிப்பவராக கருத்தை வெளியிட, விளக்கமளிக்க உதவுபவராக இருந்து அறிவை வளர்த்துக்கொள்ள, மறுஉருவாக்கம் செய்ய உதவவேண்டும்.

எல்லாக் குழந்தைகளும் கற்கும் ஆற்றலைப் பெற்றுள்ளார்கள். பள்ளிக்கு உள்ளேயும் வெளியேயும் கற்றல் நடைபெறுகின்றது. தேர்வுக்குப்பின் மறந்து போகத்தக்க வகையில் நினைவாற்றலை வலியுறுத்தும் கற்றலைவிட பொருளுணர்ந்து கற்க மாணவர்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும் என தேசிய கலைத்திட்டம் 2005 தனது அறிக்கையில் வலியுறுத்துகின்றது.

[illegible]

[illegible]

| Unit | [illegible] | | | [illegible] | | | [illegible] | | | | | | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | |
| 1. | 1(2) | | | 1(4) | | | | 1(10) | | 6 | 10 | 0 | 16 |
| 2. | | 1(2) | 1(2) | | 1(4) | | | | | 0 | 6 | 2 | 8 |
| 3. | | | 1(2) | | | 1(4) | 1(10) | | | 10 | 0 | 6 | 16 |
| 4. | 1(2) | 1(2) | | | 1(4) | | | | | 2 | 6 | 0 | 8 |
| 5. | | | 1(2) | | | 1(4) | | | | 0 | 0 | 6 | 6 |
| 6. | | 1(2) | | | 1(4) | | | | 1(10) | 0 | 6 | 10 | 16 |
| 7. | | | 1(2) | | 1(4) | | | | | 0 | 4 | 2 | 6 |
| 8. | | 1(2) | | 1(4) | | | | | 1(10) | 4 | 2 | 10 | 16 |
| 9. | | | 1(2) | | | 1(4) | | | | 0 | 0 | 6 | 6 |
| 10. | | 1(2) | | | | 1(4) | | 1(10) | | 0 | 12 | 4 | 16 |
| 11. | 1(2) | | 1(2) | | 1(4) | | | | | 2 | 4 | 2 | 8 |
| 12. | | 1(2) | | | | 1(4) | | 1(10) | | 0 | 12 | 4 | 16 |
| Total | 6 | 12 | 12 | 8 | 20 | 20 | 10 | 30 | 20 | 24 | 62 | 52 | 138 |
| | | 30 | | | 48 | | | 60 | | | 138 | | |
| Students have to answer | 15 x 2 = 30 | | | 10 x 4 = 40 | | | 3 x 10 = 30 | | | | 100 | | |



www.gfort.in G-Fort Academy www.gfort.in
www.gfort.in www.gfort.in

# மாதிரி வினாத்தாள் 1

## பகுதி – 1

எல்லா வினாவிற்கும் விடையளி (100 வார்த்தைகளில்) 15x2=30

1. உடல் வளர்ச்சியை பாதிக்கும் அடிப்படைக் காரணிகள் யாவை?
2. சினத்தினால் ஏற்படும் தீமைகள் நான்கினை குறிப்பிடு.
3. பொறாமைக் குணத்தை களைவதற்கான வழிமுறைகள் யாவை?
4. நினைவினை மேம்படுத்தும் உத்திகள் நான்கினை கூறு?
5. சமூக வளர்ச்சி என்பதனை வரையறு.
6. மனவெழுச்சி முதிர்ச்சியடைதல் என்பது யாது?
7. ஒழுக்கத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர் எவ்வாறு முன் மாதிரியாகத் திகழ வேண்டும்?
8. குமரப் பருவத்தில் தோன்றும் பிரச்சனைகள் ஐந்தினைக் கூறு.
9. வாழக் கற்றல் என்றால் என்ன?
10. பிரச்சனை தீர்த்தல் எவ்வாறு ஓர் உயர்வகைக் கற்றலாகும் என்பதை உன்னுடைய சொந்த அனுவத்தில் இருந்து குறிப்பிடு.
11. பொதுமைக் கருத்துப் படங்களை எவ்வாறு பயன்படுத்துவாய்?
12. கற்றலுக்கேற்ற வகுப்பறை சூழல் எவ்வாறு இருக்க வேண்டும்?
13. புதிய அறிவை உருவாக்குவதற்கான இடம் – வரையறு.
14. கற்றல் எவ்வாறு ஒரு சமூக செயல்பாடாகும்?
15. கற்கும் உரிமைகள் நான்கினை குறிப்பிடு.

## பகுதி – 2

எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். (200 வார்த்தைகளில்) 10x4=40

1. குழந்தைகளின் அறிதல் திறன் வளர்ச்சியில் குடும்பச் சூழலின் தாக்கங்கள் யாவை?
2. தன்னையறிதலின் முக்கியத்துவங்கள் யாவை?
3. குழந்தைகளின் கவனத்தை கவர்வதற்கான வழிகளைக் குறிப்பிடுக.
4. ஒப்பார்க் குழுவினைக் கொண்டு கற்றலை எவ்வாறு மேம்படுத்தலாம்?
5. குழந்தைகளிடம் ஒழுக்கப் பயிற்சியினை நடைமுறைப் படுத்தும் வழிமுறைகளை குறிப்பிடுக.
6. குமரப்பருவத்தில் மனவெழுச்சி வளர்ச்சி எவ்வாறு இருக்கும்?
7. இடைவினையாற்றல் மூலம் கற்றல் எவ்வாறு ஏற்படுகிறது?
8. தார்ண்டைக்கின் கற்றல் விதிகளைக் குறிப்பிடுக.
9. பொதுமைக் கருத்தைக் குழந்தைகள் மனதில் எவ்வாறு உருவாக்குவாய் என குறிப்பிடு.
10. நீங்கள் ஆசிரியர் தொழிலை மேற்கொள்ளும் போது உங்களின் எந்தப் பண்புகள் சமுதாயத்தில் பாராட்டப்படும்?
11. கற்றுக் கொண்டவற்றின் மெய்ப்பொருளை காண்பதுதான் உண்மையான அறிவு என்பதை விளக்குக.
12. ஆக்கத்திறன் வளர்ச்சிக்காக நீவீர் தரும் இரு செயல்பாடுகளை குறிப்பிடுக.

பகுதி – 3

விடையை 500 வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை வடிவில் தருக. 3 x 10 =30

1. மனநலமும் உடல் நலமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது என்பதற்கு காரணங்களை கூறுக. இவ்விரண்டையும் எவ்வாறு குழந்தைகளிடம் வளர்ப்பாய்?

(அல்லது)

மனவெழுச்சி வளர்ச்சியில் தகவல் தொடர்பு ஊடகங்களின் தாக்கத்தை விவரி.

2 ஏதேனும் ஐந்து வகை கற்றலை எடுத்துக் காட்டுகளுடன் தருக.

(அல்லது)

கற்றலுக்கு உதவும் காரணிகளை விவரி.

1. குழந்தைகளிடையே நல்லொழுக்கத்தை வளர்க்க என்ன செயல்பாடுகளைத் தருவாய்?

(அல்லது)

அறிதலும் புரிதலும் எவ்வாறு கற்றலுக்கு அவசியமாகிறது விளக்குக.

வினாத்தாள் வடிவமைப்பு - 2

மதிப்பெண் அடிப்படை

| Unit | குறுவினா | | | சிறு வினா | | | பெருவினா | | | | | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | K | U | A/S | |
| 1. | 1(2) | 1(2) | | | 1(4) | | | | | 2 | 6 | 0 | 8 |
| 2. | | | 1(2) | | | 1(4) | | 1(10) | | 0 | 10 | 6 | 16 |
| 3. | | 1(2) | | 1(4) | | | | | | 4 | 2 | 0 | 6 |
| 4. | 1(2) | | 1(2) | | | 1(4) | | | 1(10) | 2 | 0 | 16 | 18 |
| 5. | | 1(2) | | | 1(4) | | | 1(10) | | 0 | 16 | 0 | 6 |
| 6. | | | 1(2) | | | 1(4) | | | | 0 | 0 | 6 | 6 |
| 7. | | 1(2) | | 1(4) | | | 1(10) | | | 0 | 2 | 0 | 16 |
| 8. | | | 1(2) | | 1(4) | | | | | 14 | 4 | 2 | 6 |
| 9. | | 1(2) | | | 1(4) | | | | 1(10) | 0 | 6 | 10 | 16 |
| 10. | | | 1(2) | | | 1(4) | | | | 0 | 0 | 6 | 6 |
| 11. | | 1(2) | 1(2) | | | 1(4) | | | | 0 | 2 | 6 | 8 |
| 12. | 1(2) | | | | 1(4) | | | 1(10) | | 2 | 14 | 0 | 16 |
| Total | 6 | 12 | 12 | 8 | 20 | 20 | 10 | 30 | 20 | 24 | 62 | 52 | 138 |
| (Including Choice) | | 30 | | | 48 | | | 60 | | | 138 | | |
| Students have to answer | 15 x 2 | 30 | | 10 x 4 | 40 | | 3 x 10 | 30 | | | 100 | | |

## மாதிரி வினாத்தாள் – 2

### பகுதி – 1

எல்லா வினாக்களுக்கும் விடையளி. (100 வார்த்தைகளில்) 15x2=30

1. உடல் வளர்ச்சியைப் பாதிக்கும் அடிப்படைக் காரணிகள் இரண்டினைக் கூறுக.
2. சார்பெண்ணங்கள் என்றால் என்ன?
3. பயத்தைக் குறைப்பதற்கான வழிமுறைகள் யாவை?
4. நுண்ணறிவு என்பது யாது?
5. சமூக ஏற்புள்ள நடத்தைகள் யாவை?
6. சிறுவர்களின் மனவெழுச்சி வளர்ச்சிக்கு உதவும் தகவல் தொடர்பு ஊடகங்களைக் கூறுக.
7. ஒழுக்க வளர்ச்சியை குழந்தைகளிடையே வளர்க்க உதவும் செயல்பாடுகள் இரண்டினை தருக.
8. குமரப் பருவத்தினர் நெறி பிறழ்வு நடத்தைகளை ஈடுபடாமல் தடுக்க உதவும் உத்திகள் இரண்டினைக் கூறுக.
9. சமுதாயத்தில் பிறரை புரிந்துகொள்ளும் முறைகளுக்கு எடுத்துக்காட்டு தருக.
10. வாய் மொழிகற்றல் எந்த திறன்களை வளர்க்க பயன்படுகிறது?
11. பொதுமைக் கருத்துப் படங்கள் என்றால் என்ன?
12. குழந்தையின் தன்னம்பிக்கை வளர்வதற்கான காரணிகள் யாவை?
13. கலந்துரையாடலின் மதிப்பு யாது?
14. அறிவை மறு உருவாக்கம் செய்தல் என்றால் என்ன?
15. ஆக்கத்திறனின் பண்புகள் யாவை?

### பகுதி – 2

எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். (200 வார்த்தைகளில்) 10 x 4=40

1. அடையாளம் கண்டு கொள்ளுதலும், வகைப்பாடு செய்தலுக்குமான தர்க்க சிந்தனைகளைக் கூறுக.
2. உடன்பாட்டுத் தற்கருத்தை வளர்க்க உதவும் செயல்பாடுகளைத் தருக.
3. ஐந்து முதல் எட்டு வயது வரை உள்ள குழந்தைகளின் உடற்பண்புகள் யாவை?
4. யாருடனும் பழகாமல் தனித்திருக்கும் குழந்தைகளின் சமூக வளர்ச்சியினை எவ்வாறு மேம்படுத்துவாய்?
5. குழந்தைகளிடம் நேர்மையை வளர்ப்பதற்கான செயல்பாடுகள் இரண்டினைத் தருக.
6. குமரப் பருவத்தினர் மனவெழுச்சி வளர்ச்சி பெற உதவும் உத்திகளைக் கூறுக.
7. குழந்தையின் கற்கும் திறனை எவ்வாறெல்லாம் மேம்படுத்தலாம்?
8. ஆக்க நிலையுறுத்தி கற்றலை சோதனையுடன் கூறுக.
9. வெளியுலக உண்மைத் தன்மைகளை பற்றிய மன கருத்துருவாக்கத்தை விளக்குக.
10. கற்றலுக்கு உதவும் சமூகக் காரணிகள் யாவை?
11. கற்பிக்கப்பட்ட பாடத்தை விட கற்போரின் மீது ஏன் கவனத்தை செலுத்த வேண்டும்?
12. மாணவர்களிடம் உணர்வுச் சமநிலையை உருவாக்கிச் சிறப்பாகக் கற்பிப்பதற்கு உதவும் காரணிகள் யாவை?

## பகுதி – 3

விடையை **500** வார்த்தைகளுக்கு மிகாமல் கட்டுரை வடிவில் தருக. 3 x 10 = 30

1. (அ) இன்பம் தரும் மற்றும் துன்பம் தரும் மனவெழுச்சிகளைப் பற்றி விவரி.

(அல்லது)

(ஆ) சினத்தின் வகைகளைக் கூறி, உடனடி சினம் ஏற்படுவதற்கான காரணங்களைத் தருக.

2. (அ) மொழிக்கற்றலை மேம்படுத்தும் ஐந்து செயல்பாடுகளை விளக்குக.

(அல்லது)

(ஆ) பொதுமைக் கருத்து உருவாவதற்கான காரணிகளை விவரி.

3. (அ) லட்சியம் மற்றும் நேர்மையை வளர்க்க உதவும் செயல்பாடுகளைத் தருக.

(அல்லது)

(ஆ) பள்ளியிலும் வெளியிலும் கற்றல் நடைபெறுகிறது என்பதைத் தகுந்த உதாரணங்களுடன் விளக்குக.

-------

## வினாத்தாள் திட்டவரைவு – 2

### முதலாம் ஆண்டு

**உச்ச மதிப்பெண்கள்: 100**

| பாட அலகு | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்துதல் | | | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | |
| அலகு I ஊக்குவித்தல் | 2(1) | | | | 4(1) | 10(1) | 2(1) | 4(1) | | 22 |
| அலகு II கற்றலை மேம்படுத்தும் முறைகள் | 2(1) | 4(1) | | 2(1) | 4(1) | | 2(1) | | 10(1) | 24 |
| அலகு III கற்றல் செயல்களை அமைத்தல் | 2(1) | 4(1) | | 2(1) | 4(1) | | | | 10(1) | 22 |
| அலகு IV தகவல் பரிமாற்றத்திற்கு கற்றல் | 2(1) | 4(1) | | 2(2) | | 10(1) | | 4(1) | | 24 |
| அலகு V கற்றலும் சிந்தித்தலும் | 2(1) | 4(1) | | 2(1) | 4(1) | | | | 10(1) | 22 |
| அலகு VI கற்றல் பாங்கு | 2(1) | | | 2(1) | 4(1) | | 2(1) | 4(1) | 10(1) | 24 |
| **மதிப்பெண்** | **12(6)** | **16(4)** | | **12(6)** | **20(5)** | **20(2)** | **6(3)** | **12(3)** | **40(4)** | |
| | **28** | | | **52** | | | **58** | | | **138** |

## இணைப்பு – 1

### வினாத்தாள் திட்டவரைவு – 1

### முதலாம் ஆண்டு

**உச்ச மதிப்பெண்கள்: 100**

| பாட அலகு | அறிதல் | | | புரிதல் | | | பயன்படுத்துதல் | | | மதிப்பெண் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | சி.வினா | கு.வினா | க.வினா | |
| அலகு I<br>ஊக்குவித்தல் | 2(1) | 4(1) | | 2(1) | 4(1) | | | | 10(1) | 22 |
| அலகு II<br>கற்றலை மேம்படுத்தும் முறைகள் | 2(1) | | | 2(2 | | 10(1) | | 4(2) | | 24 |
| அலகு III<br>கற்றல் செயல்களை அமைத்தல் | 2(1) | 4(1) | | 2(1) | 4(1) | | | | 10(1) | 22 |
| அலகு IV<br>தகவல் பரிமாற்றத்திற்கு கற்றல் | 2(2) | 4(1) | | 2(1) | 4(1) | | | | 10(1) | 24 |
| அலகு V<br>கற்றலும் சிந்தித்தலும் | 2(1) | | | 2(2) | | 10(1) | | 4(2) | | 24 |
| அலகு VI<br>கற்றல் பாங்கு | 2(1) | | | 2(1) | 4(1) | | | 4(1) | 10(1) | 22 |
| **மதிப்பெண்** | **14(7)** | **12(3)** | | **16(8)** | **16(4)** | **20(2)** | | **20(5)** | **40(4)** | **138** |
| | **26** | | | **52** | | | **60** | | | **138** |

# இயக்ககத்திலிருந்து...

**எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய்**
**நுண்பொருள் காண்ப தறிவு.**

மாணவர்களின் திறமைகளை வளப்படுத்துவதும், சுய கட்டுப்பாட்டை வளர்ப்பதும் சிறந்த கருத்துகளைக் கேட்டுணரச் செய்வதும், எதையும் கற்றுக்கொள்வதில் முனைப்பை ஏற்படுத்துவதுமெனக் கல்வியின் பரிமாணங்கள் பலவாகும். இக்கல்வியைக் 'கலைத்திட்டம்' (Curriculum) எனும் முறையான ஒழுங்கமைப்புடன் அளித்தலே கல்வி நிறுவனங்களின் தலையாய பணியாகும்.

கலைத்திட்டம் காலத்திற்குக் காலம், இடத்திற்கு இடம், சூழலுக்குச் சூழல், தேவைக்கேற்ப, கற்பவர்க்கேற்ப மாற்றி வரையறுக்கப்படுகிறது. தேசிய ஆசிரியர் ஆராய்ச்சி பயிற்சிக் குழுமம், தற்போதைய கல்வி அமைப்பிற்கெனத் "தேசியக் கலைத்திட்டம் 2005" (NCF 2005) – ஐ வடிவமைத்துள்ளது.

1. பள்ளிக்கு வெளியில் பெற்ற கற்றல் அனுபவ அறிவைப் பள்ளி அறிவோடு தொடர்புபடுத்துதல்.
2. மனப்பாடம் செய்வதைத் தவிர்த்து பொருள் புரிந்து கற்பதை உறுதிப்படுத்துதல்.
3. பாடநூல்களுக்கு அப்பாற்பட்டும் படித்தல் மற்றும் செய்தி திரட்டுதல்.
4. தேர்வு முறைகளை மேலும் நெகிழ்வாக்கி கற்றலை வகுப்பறைச் செயல்பாடுகளுடன் ஒருங்கிணைத்தல்.
5. நாட்டின் மக்களாட்சி முறை மற்றும் நாகரிக பண்பாட்டுக் கூறுகளைக் கல்வியோடு இணைத்தல்.

முதலியன இதனுடைய வழிகாட்டும் கோட்பாடுகளாகும். இதன் அடிப்படையில், அரசாணை (நிலை) எண். 82, பள்ளிக் கல்வித்துறை (யு1), நாள் 05.04.2007–ன் படி ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பிற்கான கலைத்திட்டமும் பாடத்திட்டமும் தயாரிக்கப்பட்டுள்ளன. 2008– 2009 ஆம் கல்வியாண்டு முதல் நடைமுறையில் உள்ள இப்புதிய கலைத்திட்டத்தின் மூலம் மாணவ ஆசிரியர்கள் கீழ்க்காணும் திறன்களைப் பெறுவர்.

- தொடர்ந்து அறிவைப் பெருக்கும் திறன்.
- அறிந்தவற்றைச் செயல்படுத்தும் திறன் பெறுதல்.
- தன் திறமைகளை அறிந்து அவற்றிற்கு ஏற்ப வாழும் திறன்; பிறரோடு ஒருமித்து வாழும் திறன்.
- அனைத்துப் பாடப்பகுதிகளிலும் உயர்ந்த கற்றல் அடைவு பெறும் திறன்.
- ஆக்கப்பூர்வமான (படைப்பாற்றல்) செயல்பாடுகளில் ஈடுபடும் திறன்.
- ஆய்வு மனப்பான்மை, புதிய கண்டுபிடிப்புகள் ஆகியவற்றில் செயல்திறனை மேம்படுத்தித் தொலைநோக்குப் பார்வையில் சிந்திக்கும் திறன்.

மேலும் இக்கலைத்திட்டம் கீழ்க்காணும் நோக்கங்களையும் கொண்டுள்ளது.

- மாணவ ஆசிரியர்களின் பணித்திறனை மேம்படுத்தி, அவர்களின் முழு ஆளுமையை வெளிக்கொணர்தல்.
- மாணவ ஆசிரியர்களிடம் நன்னெறி, நாட்டு ஒருமைப்பாடு, மனித நேயப் பண்புகளை வளர்த்தல்.
- வளரிளம் பருவக் கல்வி, உடல்நலக் கல்வி, வாழ்க்கைத்திறன் கல்வி, மக்கள் தொகைக் கல்வி, சுற்றுச்சூழல் கல்வி, அமைதிக் கல்வி, சாலைப் பாதுகாப்புக் கல்வி, அமைதிக் கல்வி போன்றவற்றிற்கு முக்கியத்துவம் அளித்தல்.

மேற்கண்ட நோக்கங்களில் அடைவு பெற, இரண்டாண்டு ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பிற்கு எட்டு பாடங்கள் மற்றும் ஒன்பது செய்முறைப் பயிற்சிகள் (Practicum) உருவாக்கப்பட்டுள்ளன.

| வ. எண் | முதலாமாண்டுப் பாடங்கள் | இரண்டாமாண்டுப் பாடங்கள் |
|---|---|---|
| 1. | கற்கும் குழந்தை (Learning Child) | இந்தியக் கல்வி முறை (Indian Education System) |
| 2. | கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும் (Facilitating and Enhancing Learning) | கற்றலை எளிதாக்குதலும் மேம்படுத்துதலும் (Facilitating and Enhancing Learning) |
| 3. | தமிழ்மொழி கற்பித்தல்<br>மலையாள மொழி கற்பித்தல்<br>தெலுங்கு மொழி கற்பித்தல்<br>உருது மொழி கற்பித்தல்<br>மழலையர் பராமரிப்பு மற்றும் கல்வி (Early Childhood Care and Education) | தமிழ்மொழி கற்பித்தல்<br>மலையாள மொழி கற்பித்தல்<br>தெலுங்கு மொழி கற்பித்தல்<br>உருது மொழி கற்பித்தல்<br>மழலையர் பராமரிப்பு மற்றும் கல்வி (Early Childhood Care and Education) |
| 4. | ஆங்கில மொழி கற்பித்தல் (Teaching of English) | ஆங்கில மொழி கற்பித்தல் (Teaching of English) |
| 5. | கணிதம் கற்பித்தல் (Teaching of Mathematics) | கணிதம் கற்பித்தல் (Teaching of Mathematics) |
| 6. | அறிவியல் கற்பித்தல் (Teaching of Science) | அறிவியல் கற்பித்தல் (Teaching of Science) |
| 7. | சமூக அறிவியல் கற்பித்தல் (Teaching of Social Science) | சமூக அறிவியல் கற்பித்தல் (Teaching of Social Science) |

| வ. எண். | முதலாமாண்டு செய்முறை பயிற்சிகள் | இரண்டாமாண்டு செய்முறை பயிற்சிகள் |
|---|---|---|
| 1. | குழந்தையை உற்றுநோக்கல் மற்றும் தனிமாணாக்கர் ஆய்வு | செயல் திட்டங்கள் |
| 2. | பள்ளிப் பார்வை | கலைக் கல்வி மற்றும் பணியனுபவம் |
| 3. | கதை கூறுதல் | கணினிக் கல்வியியல் |
| 4. | உடற்கல்வி, உடல்நலக்கல்வி மற்றும் யோகக்கலை | உடற்கல்வி, உடல்நலக்கல்வி மற்றும் யோகாக்கலை |
| 5. | சுயவளர்ச்சிப் பணிமனை | சுயவளர்ச்சிப் பணிமனை |
| 6. | கற்றல் கற்பித்தல் பொருள்கள் | கற்றல் கற்பித்தல் பொருள்கள் |

சென்னைப் பல்கலைக்கழக முன்னாள் கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் பி.எஸ். பாலசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில், கோவை பாரதியார் பல்கலைக்கழக முன்னாள் தொலைவழிக் கல்வி இயக்குநர் முனைவர் எஸ். சுவாமிநாதபிள்ளை, கொடைக்கானல் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் எஸ். இலட்சுமி, சென்னைக் கல்வியியல் மேம்பாட்டு நிறுவனத்தின் முன்னாள் பேராசிரியர் வி. கணபதி, திண்டுக்கல் காந்திகிராம கிராமியப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் முனைவர் ஜி. பங்கஜம், பாண்டிச்சேரி விநாயகா மிஷன் பல்கலைக்கழகக் கல்வியியல் துறைத் தலைவர் முனைவர் கே. சுப்பம்மாள், சென்னைப் பல்கலைக்கழகத் தற்போதைய கல்வியியல் துறைத்தலைவர் முனைவர் டி.குமரன், சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகக் கல்வியியல் பேராசிரியர் முனைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆகிய குழுத் தலைவர்கள் பல அமர்வுகளில் கலந்துரையாடி, நூல்கள் பல ஆய்ந்தும் தேர்ந்தும் கருத்துகளைப் பகுத்தும் தொகுத்தும் எளிமைப்படுத்தி வளநூல்களை உருவாக்க வழிகாட்டியுள்ளனர்.

ஒவ்வொரு வளநூல் குழுவும், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம், மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், கல்வியியல் கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள், வட்டார வள மையங்கள், பள்ளிகள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சார்ந்த கல்வியாளர்களை மேலாய்வாளர்களாகவும் ஒருங்கிணைப்பாளர்களாகவும் நூலாசிரியர்களாகவும் கொண்டுள்ளது. மேலும், திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழக ஆசிரியக் கல்வியியல் கல்லூரியின் முதல்வர் முனைவர் கி.கே. லில்லி, சென்னை ஆதர்ஷ் கல்வி நிறுவனங்களின் கல்வியியல் ஆலோசகர் முனைவர் என். லலிதா, கிருஷ்ணகிரி முன்னாள் மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர் திரு.கே. நாராயணப்பிள்ளை, சென்னைப் பல்கலைக்கழக உருதுமொழி துறைத்தலைவர் முனைவர் எஸ். சையத் சஜித் ஹுசைன் ஆகியோரைக் குழுத்தலைவர்களாகக் கொண்டு சிறுபான்மைப் பாடங்களுக்கும் வளநூல்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக முன்னாள் ஆட்சிமன்ற உறுப்பினர் முனைவர் ஏ.எம். மூர்த்தி, கிருஷ்ணமூர்த்தி அறக்கட்டளையின் The School அமைப்பைச் சார்ந்த திருமதி. சுமத்ரா கௌதமா, ஆ. கௌதமா, தன்னார்வக் கல்வியாளர்களான ஆமுக்தா மால்யதா மஹோபாத்ரா மற்றும் முனைவர் பாலாஜி சம்பத் (எய்ட்– இந்தியா), வேதாத்ரி மகரிஷி மனவளக் கலை மன்றத்தின் உதவிப் பேராசிரியர் திரு.என். அருளானந்தம், புதுவை பண்பாடு மற்றும் மொழியியல் நிறுவன முதுநிலை விரிவுரையாளர் முனைவர் த. பரசுராமன் ஆகிய கல்வியாளர்களும் வளநூல்கள் உருவாக்கத்திற்குப் பங்களித்துள்ளனர்.

கற்பித்தல் என்னும் ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து தானேகற்றல் என்னும் மாணவர் மையக் கல்விக்கு மாறியுள்ள இன்றைய தொடக்கக் கல்வி முறை, செயல்கள் வழிக் கற்றலையே அடிப்படையாகக் கொண்டுள்ளது. இப்புதிய வளநூல்களின் ஒவ்வொரு இயலும் செயல்களைக் கொண்டு தொடங்கி மாணவர்கள் தாமாகவே கருத்தை அறிந்துகொள்வதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன. மாணவ ஆசிரியர்கள், நூலகங்களைப் பயன்படுத்துதல், பள்ளி மாணவர்களிடம் கற்றல் திறனை மேம்படுத்தத் தமது வகுப்பறைக் கற்பித்தலை வலுப்படுத்துதல், உற்றுநோக்கும் திறன், வகுப்பறை மேலாண்மை, பாடப்பொருளறிவு, துணைக் கருவிகள் மற்றும் கற்றல் பொருள்களைப் பயன்படுத்தும் திறன், தலைமைப்பண்பு, குழந்தை உளவியலை அறிந்திருத்தல் ஆகிய அனைத்துத் திறன்களையும் அடைய வளநூல்கள் வழிகாட்டும். இவ்வளநூல்களைக் கற்பதன் மூலம் பணிஈடுபாடும் (Commitment) விரிந்த அறிவும் பரந்த ஆற்றலும் (Competence) பொறுப்புணர்வுடன் மாணவர் மனங்கொள்ளத்தக்க வகையில் கருத்துகளை எடுத்துரைக்கும் மாண்பும் (Communication) உடைய நல்லாசிரியர்கள் உருவாவர்.

வளநூல் (Source Book) என்பது கற்பதற்கான வளங்கள், ஆதாரங்கள் முதலியன எங்கெங்கே உள்ளன என்பதைக் காட்டும் வழிகாட்டியே. அதிலிருந்து கற்றலை விரிவுபடுத்தித் தேவையான செய்திகளை ஆங்காங்கே திரட்டி மாணவர்களது அறிதல், புரிதல், பயன்படுத்துதல், பகுத்தல், தொகுத்தல், மதிப்பிடல் திறன்களை மேம்படுத்துவதும் தரமான ஆசிரியக் கல்வி பெற வழிவகுப்பதும் வழிகாட்டுவதும் ஆசிரியக் கல்வியாளர்களின் கடமையாகும். புதிய வளநூல்களில் கூறப்பட்டுள்ள கருத்துகளை முழுமையாக உள்வாங்கி, முறையாகப் படித்துப் பயனடைவது அனைத்து மாணவ ஆசிரியர்களின் பொறுப்பாகும்.

வளநூல்களைச் செம்மையாக உருவாக்க உதவிய அனைத்துக் கல்வியாளர்களுக்கும் கற்பிக்கவிருக்கும் ஆசிரியக் கல்வியாளர்களுக்கும் கற்கவுள்ள மாணவ ஆசிரியர்களுக்கும் எமது உளமார்ந்த பாராட்டுகள்!

**இயக்குநர்,**

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி பயிற்சி இயக்ககம்,

சென்னை – **600 006.**